JL.
R673m211,N12
N12·2
160956

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் மாதாந்தரத்
தமிழ்ப்பத்திரிகை.

---

## இரண்டாவது தொகுதி,


பத்திராசிரியர்:

சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம்

**பூவை - கலியாணசுந்தரமுதலியார்**

( ம ண வ ழ கு )



சென்னை:

மெய்கண்டான் அச்சுக்கூடம்

1913

160950

JL
R673 m'211,N12
N1212

# சித்தாந்தம் இரண்டாவது தொகுதியின் உள்ளுறை.

அதர்வசிகோபநிஷத். மணவழகு .... .... 37
அறுவகைச்சமயம். நாகை. வி. கோபாலகிருஷ்ணன் 216, 241, 266, .300
அன்பு. V. P. காந்திமதிநாதபிள்ளை B.A., .... 248,273
ஆணவமலம். சபாரத்தினமுதலியார் .... 185,197,230
ஊழ். கி. குப்புச்சாமிமுதலியார் .... .... 41
கடவுளினருள்விசிட்டம். வ. மு. இரத்திநேசுவர ஐயர் 279
காயத்திரிமகாமந்திரம். விஸ்வகர்மன் .... .... 313
சமாச்சாரங்கள். பத்திராதிபர் .... .... 19,53, 85, 118, 190, 221, 255, 280, 317
சப்ததாதுக்களின் விபரம். காஞ்சி. நாகலிங்கமுதலியார் 356
சபாக்கிரந்தம். மணவழகு .... .... 18
சித்தாந்தபரிபாஷை. மணவழகு .... 1,33,69,97,161,193,257, 275, 289, 321.
சிவஞானபோதம். துடிசைகிழார். அ. சிதம்பரனார் .... 113, 173,205,237,261,293,359.
சிவஞானபோதம். ஸ்ரீகாசிவாசி. செந்திநாதையர் .... 297
சிவபூசையென்றும் சீரியவின்பமே. வ. மு. இரத்திநேசுவரஐயர் 181
சிருட்டிமயக்க நிவாரணம். C. M. அரங்கசுவாமிநாயகர் .... 84 111,165,209,248
ஜீவகாருண்யவொழுக்கம். காஞ்சி-நாகலிங்க முதலியார் F.M,T.S. 46, 76
சிவார்ச்சனை. ஹர. சண்முகமுதலியார் .... .... 82
ஸ்ரீபர்வதம். J. M. நல்லசாமி பிள்ளை B.A, B.L., 50, 74, 99
ஸ்ரீமிருகேந்திரம். C. M. அரங்கசுவாமிநாயகர் .... 307
சிவாநுபூதி. பொ. முத்தையாபிள்ளை .... .... 4

"ஆதி முதலொழிய வல்லா தனவெண்ணி
நீதி வழுவா நிலைமையவான்—பாதே
யறமார் பொருளின்பம் வீடென் றிவற்றின்
றிறமாமோ வெண்ணிறந்தார் செப்பு."

"எழுத்தறியத்தீரு மிழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பானாகு—மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்."

எனுமிவற்றானறிக. அர்த்தநூலுணர்ச்சியில்வழி, சத்த நூலொரு சாத்திரமா முடிவுறாதெத்துணையாயினு பயனையாதாக லின் சத்தநூலினும் அர்த்தநூலே மிகச்சிறந்ததெனக. இதனை,

"பண்ணிலார்க்கில்லாத பாட்டின்பயன்போலுங்
கண்ணிலார்க்கில்லாக் கவின்போலு—மெண்ணிலா
வஞ்சொலளவை யறியாதவர்க்கில்லை
செஞ்சொலளவிற் சிறப்பு."

என்றதனாற் காண்க. கணிதமென்பது பொருள்களை யளந் தறிதற் கருவியாய்த் தருக்கத்துடன் சிறிதே வேற்றுமையாய் உய்த்துணருங்கா லொன்றேயாய் முடிதலின் எண்ணென்பதற்குக் கணிதமெனவு மொருசாரார் கூறியது மீண்டைக் காவதோ ரிழுக்கில்லை. இங்ஙனமாயினு மேற் காட்டிய திருவாக்குகளில் எண்ணென்பதற்குக் கணிதமென்றே கோடல் பொருந்தாது. அங்ஙனஞ் சாதிப்பார் கூற்றுப் பிரமாண மல்ல வென்பான்.

காண்ட லனுமானங் கதையருத்தா பத்தியிவை
யீண்டுரைத்த வெண்ணெனவே யெண்.

என்றார் பரமத திமிர பானுவாசிரியர். தருக்க மெனினும், அளவை யெனினும் ஏரணமெனினும், நியாயமெனினு மொக்கும். தருக்கம் தருக்கித்துத் தெரிக்கப்பட்டன. அவை திரவிய முதலிய பதார்த்தங்கள். இலக்கணமுந் தருக்கமுங் கல்லாது ஞான சாத்திர முதலிய வற்றைக் கற்க முயலல் அந்தகன் கோலின்றி வழிநடக்கப் பிரயத்தனப் படுவது போலும். ஆதலாலிவ்விரு நூல்களும் யாவரானும் பயிலக் கற்கத்தகுவனவே. ஆகலினு லன்



ரே தருக்கநூற்பயன் அடியில் வருமாறு செந்நாப் போதகர் செப்பினைத்தனர்.

அளவின்க ணின்றொழுக லாற்றார் களவின்கட்
கன்றிய காத லவர்.
களவென்னுங் காரறி வாண்மை யளவென்று
மாற்றல் புரிந்தார்க ணில்.
அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு.
அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர்.

எந்நூலமைப்பிற்கு மேதுவாக நிற்குந் தருக்கநூல் தமிழ் மொழியிற் சிலவே யன்றிப் பலவில்லை யாகலானும், அன்னவு மெளிதிற் பயன் படுவன வல்லவாகலானும், யாவருஞ் சுலபமாகத்தேறச் சித்தாந்த பரிபாஷை என்னுந் தருக்கசோபானம் ஆகிய இச் சிறியநூல் செய்ய நேர்ந்தது. இதிலாங்காங்குக் காணப்படும் வடமொழிச் சங்கேத பதங்கட்குத் தமிழ்மொழியானும் ஆங்கிலேய மொழியானும் பிரதி பதங்களும் பலகாட்டப்பட்டுள்ளன.

அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய முழுமுதற் கடவுளைப் பிரதி பாதிக்கும் சுத்தாத்துவித சித்தாந்த வைதிக நூல்கட்கு முரணுகா வண்ணம் வெளிவந்த பிரமாணநூல் சகலாகம பண்டிதர் திருவாய் மலர்ந்தருளிய திராவிடோப நிடதமாகிய சிவஞான சித்தியாரிலுள்ள அளவையும், ஸ்ரீ சிவாக்கிர யோகிகள் இயற்றிய சைவபரிபாஷையு மன்றி வேறு பிரசித்தமாகக் காண்பது அரிது. இவற்றையடுத்து மூன்றாவதாகப் பிரமாண பிரமேயத்துடன் எழுந்த நூலிது வென்னலாம்.

"இராக மறியா ரிசைப்பயன் றானறியார்
தராதர மறியார் சற்கா ரியமறியார்
ஓரா ரளவை யொருபயனுந் தாமறியார்
ஆராய்ந் தளவை யறிந்துகொள் வீரே."

மணவழகு.

# சுவாநுபூதி.

சுவாநுபூதி என்பது சுவ + அநுபூதி என்னுமிரு மொழிகள் சேர்ந்த ஒரு தொடர் மொழி. இவற்றுள் சுவ என்பதற்குத் தன் என்பதும் அநுபூதி என்பதற்கு அநுபோகம் என்பதும் பொருளாம். ஆகவே சுவாநுபூதி என்பதற்குத் தன் அநுபோகம் என்பது பதப்பொருளாம். இப்பொருளை வகுத்தும் விரித்துமாராய்வதே இவ்வுபந்நியாசத்தின் கருத்து.

## வகை.

இனி தன் என்பது யாது? தன் தன்மையாது? அநுபவமென்பது யாது? அநுபவம் நிகழ்வதெதன்பொருட்டு? அநுபவத்திற்குரிய பொருள்யாது? அநுபவகாலத்தில் அநுபவிப்பானும் அநுபவிக்கப் படும் பொருளு மெவ்வாறிருக்கும்? அநுபவ நிகழுமுறை எவ்வாறு? சுவாநுபூதி என்னுஞ் சொல்லுக்குப் பொருளாய் சிறந்த அநுபவம் யாது? என எட்டு வகையாய் இவ்விஷயத்தை வகுத்துக் கொள்கின்றேன்.

## விரி.

1. தன்னென்பது யாது:—உடல் தோறும் நான் என்னுஞ் சொற்குப் பொருளாய் இந்திரிய அந்தக் கரணங்களின் வேறாயுள்ள உயிராம்.

2. தன் தன்மையாது:—அறிவுடையதாய், அறிவித்தாலன்றி அறியமாட்டாதாய், அறிவிக்க அறியுங்காலும் ஒன்றனையறியுங்காற் பிறிதொன்றனை யறிய மாட்டாதாய், அறியப்படும் பொருளில் வியாபகமுள்ளதாய், யாதானுமொன்றை பற்றியன்றித் தனித்து நிற்கமாட்டாதாய் விளங்குவது.

3. அநுபவமென்பது யாது:—ஒரு பொருளை யறிந்து அறிந்த அப்பொருளி லழுந்துவதே அநுபவம். அழுந்துவதாவது பிறிதொன்றனை யறியாது முன்னறிந்த தொன்றனையே மேலு மேலு மறிதல்.



4. அநுபவம் நிகழ்வதெதன் பொருட்டு:—உயிர்களெல்லாம் இன்பமே விரும்புதலின் அவ்வின்பங் காரணமாய் அநுபவம் நிகழும்.

5. அநுபவத்திற்குரிய பொருள் யாது:—அது உலகப் பொருளும் கடவுட்பொருளு மென இருவகைப் படும்.

6. அநுபவ காலத்தி லநுபவிப்பானும் பொருளு மெவ்வாறிருக்கும்:—பிரிப்பின்றிக் கலந்திருக்கும்.

7. அநுபவம் நிகழு முறைமை யெவ்வாறு:—இன்பத்தையே பெற விரும்பும் உயிர் தன்னைச் சித்துப் பொருளாயறியாது தேகமே யென யெண்ணி தேக சம்பந்தமான உலகப்பொருளை அநுபவிக்க விரும்புகின்றது. விரும்புங்கால் யாதானு மொன்றைப் பற்றி யன்றித் தனித்து நிற்கமாட்டாத உயிர் இந்திரிய அந்தக் கரணங்களைப் பற்றி நிற்கின்றது. நின்று உண்ணப்படும் பொருளை நாவிந்திரியத்தாலும், கேட்கப் படும் பொருளை காதிந்திரியத்தாலும், பார்க்கப்படும் பொருளை கண்ணிந்திரியத்தாலும், மணக்கப்படும் பொருளை மூக்கிந் திரியத்தாலும் பரிசிக்கப்படும் பொருளைத் துவக்கிந்திரியத்தாலும், நினைக்கப்படும் பொருளை மனத்தாலு மறிந்து அநுபவிக்கும்.

அநுபவிக்குங்கால் மூலப்பகுதியின் சாத்விதகுணதத்துவ சம்பந்தமாக அநுபவிக்கப் படும் பொருள்களினிடத்தின்பமுண்டாகும். முக்குணமு மாறி மாறி நிகழுமாகலின் அவ்வின்பமும் நிலைபேறின்றி மாறுதலையடையும். இன்பம் பொருளினிடத்துண் டென்னலாகாதோ வெனின்? ஆகாது. என்னை? ஒரு பொரு ளொருவனுக் கின்பமாகவும் பிறி தொருவனுக்குத் துன்பமாகவுங் காணப்படுதலானும் ஒருவனுக்கே ஒரு பொருளொருகாலத் தின்பமாகவும் பிறி தொருகாலத்துத் துன்பமாகவுங் காணப்படுதலானு மென்க. உதாரணமாக சுகஜீவியா யிருக்கின்ற ஒருவன் விரும்புகிற பால்பிற நோயாளியாலுந் தனக்கு நோய் வந்த காலத்தும் வெறுக்கப் படுகிறது போலும்.

ஆகவே இன்பமுந் துன்பமு மோகமும் முறையே தன்னிடத்துண்டாம் சாத்வித குணத்தினாலும் இராசத குணத்தினாலுந் தாமத குணத்தினாலு முண்டாவதே யன்றி பொருளினிட

த்தில்லை யாதலறிக. ஆயினுங் குணம், இன்ப, துன்ப, மோக மாய்ப் பரிணமிப்பதற்குப் பொருளின்றி யமையாது வேண்டப் படும்.

இவ்வாறு உலகப் பொருளின் வழியா யுண்டா மின்பம் நிலை பேறிலதாய்க் காணப்படவே, இவ்வுலக இன்பத்தை வெறுத்து நிலை பேறுண்டாய இன்பத்தை நாடும். நாடவே, அவ்வின்ப மிது வென அறியு மாற்றலின்றி அதனை யறிவிப்பா னொரு குருவைத் தேடும்; தேடவே, வேண்டுவார் வேண்டுவதே ஈந்தருளும் பரமகருணா நிதியாகிய சிவபெருமான் குருவடிவமா யெழுந்தருளி வருவர். வரவே, உயிர் தன் குறையை விண்ணப்பிக்கும். விண்ணப்பிக்கவே, இது காறுமுலகப் பொருளையே பற்றி நின்ற உயிர்க்குகடவுள் அப்பொருளிற் றிருமேனி கொண்டெழுந்தருளியிருக்கும் சிவலிங்காதி மூர்த்திகளைத் தரிசித்துத் துதிக்கும் படி உபதேசிப்பர். அவ்வுபதேசத்தி னுறைத்து நிற்குங்கால் மூர்த்திகளினிடமா யழுந்தி ஒரு வித இன்பத்தை அநுபவிக்கும்.

இவ்வநுபவமுந் தரிசிக்குங் காலன்றி நிகழாமையின் அமைதிபெறாமல் மேலும் குருவை வினவும். வினவவே, புறத்துத் தரிசித்த மூர்த்தியை உடம் பினகத்து ஒரு குறியில் மனத்தாற் பாவித்து வணங்கும்படி உபதேசிப்பர். அவ்வாறு வணங்கி அம்மூர்த்திகளி லழுந்தி ஒருவித இன்பத்தை அநுபவிக்கும்.

அவ்வின்ப மநுபவிக்குங் கால் வடிவமின்றிய இறைவனை வடிவிற் காண்ட லிழுக்கா மென வெண்ணி மேலுங் குருவை வினவும். வினவவே, யோக மார்க்கத்தை யுபதேசித்து அருளுவர். அவ்வழி யொழுகுதலால் நாத கீதங்கள் கேட்கப்படுதலுஞ் சோதி முதலிய காணப்படுதலு முண்டாம்.

இவ்வநுபவமு மிறைவனுடைய அகண்டாகார சச்சிதானந்த வியாபக விலக்கணத்திற்கு மாறுபட்டு கண்டமாயும், அருவமாயுங் காணப்படுதலின் அதனு மமைதிபெறாமல் மேலுங் குருவை வினவும். வினவவே, இந்திரிய அந்தக் கரணங்களின் விருத்தி உலகப்பொருளிற் செல்லாத நிலையைப் பெற்று மடங்கியிருப்பதை யறிந்து, தான் என்னு முயிர்ப் பொருளி னுள்ளீ



டாய் இறைவனை யுணரும் ஞானமார்க்கத்தை உபதேசித்தருளுவர். அருளவே, அம்மார்க்கத்தி னுறைத்து நிற்றலால் அறிவுக் கறிவாய் அநந்நியமாய் நிற்குஞ் சிற்சொரூபமாகிய சிவபரம் பொருளை யறிந்து அதிற் கலந்து பேரின்பத்தை அநுபவிக்கும்.

இவ்வநுபவத்தில் அநுபவிக்கப்படும் சிற்பொருள் பூரணமாயிருப்பதால் இதன் மேற் பிறிதொன்றை நாடுவதற்கு வேறு பொருளு மின்றாம். இந்திரிய அந்தக்கரணங்கள் தன் வசயாய் மடங்கி யடங்கி விட்டபடியால் நாடுமுளமு மின்றாம்.

துணைவயின்றி பொருளை அறிய மாட்டாத வுயிர் கருவிகள் மடங்கி யடங்கிய காலத்துப் பரம்பொருளை யெவ்வாறறிய முடியு மெனின் கருவிகளா லறியப்படுவ தழிபொருளே யாகலானும், அழியாத பரம்பொருள் கருவிகளா லறியப்படாத தொன்றாதலானும், கண்விடயங்களை அதனின் வேறாய சூரியனொளி கொண்டறியினும் சூரியனை யறிவதற்கு வேறு ஒளி வேண்டாதவ்வொளியையே துணையாகக்கொண்டறிவது போல, அப்பரம் பொருளை யதன் திருவருளைத் துணையாகக்கொண்டு அறிதல் கூடுமென்க.

இக்கருத்துப் பற்றியே "நின்னருட்கண்ணால் நோக்காதாரல்லாதாரே" எனவும் "அவனருளே கண்ணாகக் காணினல்லால்" எனவும் "அவனருளாலே யவன்றாள் வணங்கி" எனவு மிவ்வாறே பிறவிடத்தும் அநுபவமுடைய தேசிகர்களருளிச் செய்வாராயினர்.

இன்பமெல்லாம் பொருளினிடத்தின் றெனவுந் தன்னிடத்துளதாகி சாத்விக குணத்தா லுண்டெனவும் மேற் கூறியதனோடு முரணாது பொருள் கொள்ளுங்கால் சிவபரம் பொருளை அறிந்தின்புறுதற்குங் குணம் வேண்டப்பட்டு கருவி யடங்கி மடங்கிய தென்றது பொருந்தாதாம். பொருந்து மெனின், பொருளினிடத் தின்பமில்லை யென்ற திழுக்காம். ஆதலின் விடுக்கு மாறென்னை யெனின் சாத்விக குணத்தா லின்பமுண்டாவது கருவிகளா லுணரப்படும் உலகப் பொருளினிடத் தேயாம். அப்பொருள் தோன்றி யழியு மநித்த முடைமையால் அதனிடத்தின்ப மின்று. தோன்றி யழியாத நித்தப் பொருளை யறிவதற்கு "பாவையுஞ் சூனியஞ் சத்

சுழுத்தியில்'' கருவிகட்கு முனைந்து நிற்கு மாற்றலின்றும், கருவிகளு மின்றி அநுபவிப்பானையுந் தன்னுளடக்கி நிற்ப தொரு பெரும் பொருளாதலானும் நித்தமாதலானும் அச்சிவபரம் பொருள் இன்பமேயாம். இதுபற்றியே ஸ்ரீ மணிவாசகப் பெருமான் "ஈறிலாப்பதங்கள் யாவையுங் கடந்த வின்பமே" என்றருளிச் செய்வாராயினர். சார்ந்ததன் வண்ணமா யழுந்தி நிற்குந் தன்மையுடைய வுயிர்க்கு அவ்வின்பப் பொருளைச் சார்ந்து அதுவாயழுந்தி நிற்றலே யின்பமாம். இவ்வின்பம் உயிர்க்குச் சார்ந்த குணத்தானுண்டா மின்பம் போலநித்த மாகாது நித்தமாதலிற் பேரின்பமாம். இதுவே கருவிகளின்றியுந் தன்னதாகவு மநுபவிக்கப்படுதலின் சுவாநுபூதி என்னப்படும்.

இல்லது தோன்றா தென்னுஞ் சற்காரியவாதப்படி கருவிகள் நீங்கியபொழுது தன்னிடத் துண்டாமின்பமே பரம் பொருளைச் சார்ந்த பொழுது வெளிப்பட்டுத் தோன்றிற் றென்னலாகாதோ வெனின்? ஆகாது. என்னை. துன்பந்தரும் பொருளையு மின்பந்தரும் பொருளையுஞ் சார்ந்தது வதுவாய் அழுந்தி நிற்றலே உயிரின் றன்மை யாதலினென்க.

சிவபரம் பொருள் அநுபவப் பொருளாயின் அநுபவ அறிவு அநுபவிக்கும் பொருள், அநுபவிக்கப்படும் பொருள் ஆகிய மூன்றும் வேண்டப் பட்டு, படவே ஏனை யழிபொருளொடொப்ப அநித்தமும் பேதமுமாதலால் இவ்வேறு பாடுகளொன்று மின்றி யிருத்தலே சுவாநுபூதி யெனின், இது பாடாணவாதமாம். அன்றியு மறிய வேண்டிய ஆன்மாவினால் அறியப்படாதயின் சூனியவாதமுமாம். ஆதலின் பாடாணவாத முதலியன வல்லாத தாய் அநுபவிக்கப்படும் பொருள், அநுபவம், அநுபவிப்பானாகிய மூன்றும் வேண்டப்பட்டு, படினும் விடயத்தைப் போலந்நியமாய் நின்றநுபவிப்பதே சுவாநுபூதியாம். இந்நிலையினையே அத்துவித மென்றனர் பெரியோர்.—

ஆன்மா அருளோடு கூடி நின்று அந்நியமில்லாமலே சிவானந்தத்தை யநுபவிப்பது எதுபோலு மெனின்? சூரியப்பிரபையோடு கூடி நின்று கண் சூரியனை யறியுமாறு போலென்க. அநுபவிப்ப தென்ற போது அந்நியமின்மை யெவ்வாறு கூடு மெனின்? சுழு



த்தியிற் சுகமாய்த் தூங்கினே னென்று சாக்கிரத்திற் சொல்லுகையாலாண்டு சுகத்தை யறிவதற்குத் தானுங்கருவியு முளவாம். இலவேல் சாக்கிரத்திற் சொல்ல இயையில்லை. இருப்பினும் வேறு நிற்பது மன்று. இவ்வாறு அறியப்படும் பொருளாகிய சிவம், ஞான சொரூபியாய் ஆன்மாவினறிவைத் தன்னுளடங்கச் செய்தலினால் ஒன்றாகியும், பொருட்டன்மையால் ஆன்மாவிற்கு வேறாகியும், கிருபையினால் ஆன்மாவைத் தனக்கு வடிவமாகக் கோடலினுடனாயும் நிற்றலால் நிட்டையிலான்மாவிற்குச் சிவானந்தாநுபவங் கூடும். கூடினும் வேறு நிற்பது மன்று. பிறர்க்கறிவிப்பது மின்றாம்.

இன்றேல் அறிவானும், அறிவும், அநுபவமு முண்டென்ற தெவ்வாறு பெறுது மெனின், நிட்டையினின்றும் நீங்கிய காலத்து மாணாக்கருக் கறிவுறுத்தலாற் பெறுது மென்க.

இச்சுவாநுபூதி நிலை நோக்கியே "நினையுமா நினையே," "விரும்புமா விரும்பே," "தொடருமா தொடரே," "நுகருமா நுகரே," "அறிவாயறிகின்றான் றானே" என ஆசிரியர்களருளிச் செய்வார்களாயினர்.

அநுபவிக்கப் படுவதென்னவே ஏனையபோல சிவானந்தமும் அநித்தமாகாதோ வெனின் ஏனையபோல வேறு நில்லாமையாலும், பெற்றவொன்றி லமைதிபெறுது மீளுதல்போல மீளுதலின்மையாலும், பிறிதொன்றை விரும்புவதுபோல் விரும்புவதற்கு வேறு பொருளில்லாமையாலுமாகாதென்க. இதனை "ஏகமாய் நின்றே யிணையடிக ளொன்றுமாரப் போகமாய்த் தான் விளைந்த பொற்பினான்," என்னுஞ் சிவஞான போதச் சுருதியானு முணர்க.

வேறற நிற்கு மிந்நிலையி லநுபவமென்ப தொன்றுண்டென்ற லெவ்வாறு கூடுமெனின் அறிந்த பொருளிடத் தழுந்துதலே அநுபவமென்னுஞ் சொற்குப் பொருளாதலானும், உயிர் சிவபரம் பொருளை யறிந்து அதுவா யழுந்தி நிற்றலானும் கூடுமென்க. இதனை "சிவாநுபவம் சுவாநுபூதிகமாம்" என்னுஞ் சிவஞான சித்தித் திருவாக்கானு முணர்க.

இவ்வாறு சுவாநுபூதி யெய்திய வுயிர் சிவனோடொற்றுமைப்பட்டு நிற்றலில் சிவசம மெனப்பட்டு சிவபெருமான் செய்தருளும் பஞ்ச கிருத்தியங்களைச் செய்யுமோ வெனின்? செய்யாது. என்னை? முத்தியடைந்த ஒவ்வொரு உயிரும் அவ்வாறு செய்யுமெனப்பட்டு அநேகேஸ்வரவாதமாய் முடியுமாதலானும், அவ்வாதம் சர்வஞ்ஞத்வாதி இலக்கணங்களோடு முரணுமாதலானும், ஒன்றனைச் சார்ந்ததுவாய் நிற்குங்கால் பிறிதொன்றனையுஞ் சார்ந்ததுவாய் நிற்றலுயிர்க்கின்மையின், சூரியனைச் சார்ந்ததுவாய் நின்ற கண் சூரிய னொளியாய் நிற்பதன்றி சூரியன் போல பிறர்க்குப் பொருளை விளக்காததுபோல சிவபரம் பொருளைச் சார்ந்த வுயிர் அதுவாய் நிற்றலேயன்றி அது செய்யும் பஞ்ச கிருத்தியத்தைச் சார்ந்து நிற்றல் கூடாதாதலானு மென்க. இது பற்றியே "உயிர் தானுஞ் சிவாநுபவமொன்றினுக்கே யுரித்து" என்றருளிச் செய்தார் சித்தியாரில் ஸ்ரீ அருணந்தி சிவாச்சாரியரும்.

அகமுகத்தி லிந்நிலையை யடைந்த வுயிர்க்குப் பிராரத்தகதேகமுள்ள வளவும் அத்தேக சம்பந்தமான அநுபவத்தின் பொருட்டுலகப் பொருளையு மொரோவழி நோக்கவரும். வரினுங் கடலிற் சேர்ந்த நீர் பின்னு மவ்வுவர் நீராய் மீளுவது போல சிவாநந்தமாகவே உலகப்பொருளை யநுபவிக்கும். இம்மீட்சியும் வினையுள்ளளவும் இடையிடையே தோன்றி வினைமுடிவி லின்றாம். மீளுங்காலத்தும் பிராரத்த வினைதாக்குதலு மேல்வினையேறுதலுமின்றாம். இதுபற்றியே 'எத்தநுவில் நின்றும் இறைபணியார்க்கில்லை வினை, முற்செய்வினையுந்தருவான் முன்" என சிவஞான போதத்தினும் "வருஞ் செயல்களுண்டேல், முந்தனுடைச் செயலென்று முடித்தொழுக வினைகண் மூளாவங் காளாகிமீளானன்றே" எனச் சித்தியாரிலும் "இருள் சேரிருவினையுஞ் சேராவிறைவன், பொருள் சேர்புகழ்புரிந்தார் மாட்டு" எனத் திருக்குறளினு மாசிரியர்களருளிச் செய்வார்களாயினர்.

8. சிறந்த அநுபவம் யாது:—சிவாநுபவமே வினையபோல மீளுதலின்மையிற் சிறந்ததாம்.



இதனைப் பெறுதற்குரிமையுடைய வுயிர்க்கு வருமப்பிறவிகளுள் மானிடப் பிறவியே இவ்வநுபவம் பெறுவதற்குச் சிறந்த துணையாம். ஆதலின் பெறுதற்கரிய மானிடப் பிறவியை யெய்திய ஒவ்வொருவரும் சிவாநுபவ மென்னுஞ் சுவாநுபூதியைப் பெறுவதற்கு இறைவன் றிருவருள் துணை புரிவதாக.

---

## முடிவுரை.

சுவாநுபூதி யென்னுஞ்சொல் தன்னநுபூதி யென்னும் பொருளைத் தருமென்பதூஉம் இப்பொருளை எட்டுவகையாய்ப் பிரித்துக்கொள்ளப் படுமென்பதூஉம் தன்னென்பது நானென்னுஞ் சொல்லிற்குப் பொருளாகிய வுயிரென்பதூஉம் தன்றன்மை அறிவித்தா லறிதல் முதலியன வென்பதூஉம் அநுபவமென்பது அறிந்த பொருளிடத்தழுந்துதலென்பதூஉம் அநுபவம் நிகழ்வது இன்பத்தின் பொருட்டென்பதூஉம் அநுபவத்திற்குரிய பொருள் உலகமுங் கடவுளுமென இருவகைப்படுமென்பதூஉம் அநுபவ காலத்தில் அநுபவிப்பானும் பொருளும் வேறற நிற்குமென்பதூஉம் அநுபவம் நிகழும் முறைமையில் உயிர் தன்னைத் தேகமென வெண்ணி உலகப்பொருள்களை அநுபவிக்குமென்பதூஉம் அநுபவிக்குங்கால் தன்னிடத்துண்டாம் சாத்துவித இராசத தாமதகுணத்தால் முறையே இன்பமுந்துன்பமும் மோகமும் உண்டாமென்பதூஉம் இவ்வின்பம் நிலைபேறிலை யெனக்கண்டு நிலையுடைய இன்பத்தை நாடுமென்பதூஉம் நாடிக்குருவைத்தேடு மென்பதூஉம் சிவபெருமானே குருவாயெழுந்தருளிவருவ ரென்பதூஉம் வந்து சரியை கிரியை யோகம் ஞானங்களை முறையே உபதேசிப்ப ரென்பதூஉம் அவ்வுபதேசங்கள் ஒவ்வொன்றினும் ஒவ்வொருவித அநுபவம் நிகழுமென்பதூஉம் அவற்றுள் ஞானத்தினால் சிவபெருமானோடு இரண்டறக் கலந்து பேரின்பத்தை யநுபவிக்கு மநுபவத்தில் உயிருக்குக் கருவிகளின்றென்பதூஉம் அவனருளாலே அவனைக் காணு மென்பதூஉம் ஏனையுலகப் பொருள்கள்போல அசித்தாகாமையின் சிவம் இன்பப் பொருளாமென்பதூஉம் இவ்வநு

பவித்தில் அனுபவம், அனுபவ அறிவு, அனுபவிப்பான் ஆகிய மூன்றும் உலகப்பொருளிற் போல வேறு நில்லாது அன்னியமாய் நிற்கு மென்பதூஉம் இதுவே சுவானு பூதியென்பதூஉம் இவ்வனு பூதியுடைய உயிர் சிவானுபவத்திற்குமட்டும் உரியதேயன்றி சிவன் செய்யும் பஞ்சகிருத்தியத்தை செய்ய இயலாதென்பதூஉம் பிராரத்தவயத்தால் இவ்வனுபவ மெய்திய உயிர் உலகத்து மீளுங்கால் சிவானந்தமாகவே மீளுமென்பதூஉம் மீளினும் முன்வினை தாக்குதலும் மேல்வினை ஏறுதலும் இன்றென்பதூஉம் இச்சிவானுபவமே சுவானுபூதி யென்னுஞ் சொல்லுக்குரிய பொருளாய் சிறந்தனுபவமாகு மென்பதூஉம் மானுடப்பிறவி யெய்திய ஒவ்வொருவரும் இதனைப்பெறுதற்குரியா ரென்பதூஉம் அவ்வாறு பெறும் வண்ணம் இறைவன் திருவருள் துணை நிற்பதாக என்பதூஉம் பிறவுமாம்.

பொ. முத்தய்ய பிள்ளை.

திருவாவடுதுறை யாதீனத்துச்

சைவப் பிரசாகரர்.

---

## காஞ்சிபுரத்திற் கூடிய ஏழாவது வருட சைவசித்தாந்த மகாசமாஜக் கூட்டத்தின் சபாக்கிரந்தம்.

---

1912௵ டிசம்பர்௴ 26௳ ஸ்ரீமத். T. பொன்னம்பலம் பிள்ளையவர்கள் M.R.A.S. (Retired Excise Commissioner, Travancore) சைவசித்தாந்த மகாசமாஜத்திற்கு அக்கிராசனராக வீற்றிருக்க விசைந்து காஞ்சிபுரத்திற்கு வியாழக்கிழமை மாலை ஐந்தரைமணிக்கு வந்து சேர்ந்தனர். செங்கற்பட்டில் ரயில்வே ஸ்டேஷனில் சைவசமயாபி விருத்தி சங்கத்தினர் அவரை வரவேற்றுப் புட்பமாலைசூட்டி வந்தனோபசார பத்திரிகை வாசித்தனர். காஞ்சிபுரம் வந்தவுடன் அவ்வூர் உபசாரணைச் சங்கத்தலைவரும், ஸ்ரீ ஏகாம்பரேஸர் ஆலய தருமகர்த்தரும், ஜமீன்தாருமாகிய ஸ்ரீமத். கா. மு. சுப்பராய முதலியாரவர்களும், காரியதரிசிகளாகிய ஸ்ரீமத். பி. செ. முருகேச முதலியாரவர்கள், ஸ்ரீமத். கே. பொன்னுசாமி முதலியாரவர்கள் முதலிய பலரும், பல தேயத்தினின்றும் வந்திருந்த வித்துவான்களும், உள்ளூராருமாகிய பெருங்கூட்டத்தினர் ரயில்வேஸ்டேஷனில் எதிர்கொண்டு புட்பமாலைதரித்து நல்வரவு பத்திரம் படித்து, சிறிதுநேரம் தேவாரமோதியபின் ஏழரைமணிக்கு மத்தாப்பு வாணவேடிக்கையுடன் வாத்தியமுழங்க யானை, குடை, கொடி முதலிய முன்செல்ல மிகுந்த ஆடம்பரத்துடன் "சைவசித்தாந்த மகாசமாஜம் வருக" எனவும், "சைவசமயே சமயம்" எனவும், "இராஜாங்கத்திலமர்ந்தது வைதிகசைவம்" எனவும், "சைவசமயத்தின்மேற் சமயமில்லை" எனவும், "மந்திரமாவதுநீறு" எனவும், "அன்பும் சிவமும் ஒன்று" எனவும், "அன்னம்பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்" எனவும் வழிதோறும் பெரிய வெழுத்துக்களில் சித்திரித்து வளைவுகள் நாட்டப்பட்டிருந்த வீதிகளின்வழியே அக்கிராசனரை அழைத்துக் கொண்டுபோய் ஸ்ரீமத். J. M. நல்லசாமி பிள்ளையவர்களுடன் ராய்பகதூர் தருமரத்தினகரம் A. நாராயணசாமி முதலியாரவர்கள் பாலிகா பாடசாலையில் வீற்றி

ருக்கச் செய்தனர். வாலண்டியர்கள் அவ்விடத்திலிருந்துகொண்டு வேண்டிய சௌகரியங்களை யெல்லாம் செய்துகொண்டிருந்தனர்.

27உ காலையில் சமாஜத்தினர் பலர் ஸ்ரீஏகாம்பரேசுரர் ஆலயத்தில் உஷத்கால தரிசனஞ்செய்து கவர்னர் ஜெனரல் அவர்கட்குத் தேகம் சுகமாம்படி யொரு அர்ச்சனை செய்தனர். அவ்வமயம், ஸ்ரீமந். மாங்காடு. சுப்பராய முதலியாரவர்கள் யாவருக்கும் சிவதரிசனஞ் செய்வித்துப் பிரசாதம் கொடுப்பித் துபசரித்தனர். பின்னர் திருக்கைலாய பரம்பரை மெய்கண்டசந்தான ஞானபீடத்தி லெழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ. ஞானப்பிரகாச தேசிக சுவாமிகளைத்தரிசித்து ஆசிர்வாதம்பெற்றுத் திரும்பினர். பகல் 12-மணிக்கு ஸ்ரீமந். வடிவேலு முதலியாரவர்களால் மிக அலங்காரஞ் செய்வித்திருந்த காரொரேஷன் டர்பார் ஹாலில் சமாஜம் கூடியது. அக்கிராசனர் தலைமை வகித்தபின் இவருடன்வந்த ஸ்ரீவைகுண்டம் சுப்பிரமணிய ஓதுவார் தேவார பாராயணஞ் செய்தனர். ஏறக்குறைய இரண்டாயிரசனம் நெருங்கியிருந்தது. சமாஜத்தின் பல தேய வங்கத்தினரும் கூடியிருந்தார்கள். உபசாரணைச் சங்கத் தலைவராகிய ஸ்ரீமந். சுப்பராய முதலியாரவர்கள் வந்தனோபசாரப் பத்திரிகை வாசித்தனர். பின் சமாஜ காரியதரிசி ஸ்ரீமந். ச. சச்சிதாநந்த பிள்ளையவர்களால் அக்கிராசனர் வருகையைப்பற்றி மணப்பூர்வமான நல்வருகை உபசாரப்பத்திரம் வாசித்தபின் வருடாந்தர அறிக்கை படிக்கப்பட்டது. இதில் இவ்வருடம் 454-லிலிருந்து 996-அங்கத்தினராயினரெனவும், மகாசமாஜத்தின் மாதாந்தரப் பத்திரிகையாகச் சித்தாந்தசரபம் அஷ்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலியாரவர்களால் "சித்தாந்தம்" என்னும் பத்திரிகை நடத்தப்பட்டு வருகிறதெனவும், கௌரவ பிரசாரகர்கள் பலவிடங்களிற்சென்று வீதிப்பிரசங்கம் செய்துவருகின்றனரெனவும், இவ்வருடத்தில் திருவாவடுதுறையாதீன சைவப்பிரசாரகர் ஸ்ரீமந். பொ. முத்தய்யபிள்ளையவர்கள் சமாஜசம்பந்தமாக 52-பிரசங்கம் செய்தனரெனவும், அங்ஙனமே ஸ்ரீமந். திருவாரூர். தியாகராஜ ஞானியார் பல பிரசங்கம் செய்தனரெனவும், பத்துவகையான துண்டுப் பத்திரிகைகள் அச்சிட்டு இலவசமாய்க் கொடுக்கப்பட்டதெனவும், செங்கற்பட்டு, திருக்கோவலூர், வேலூர் முதலிய விட



ங்களிலுள்ள கிளைச்சபையினர் ஊக்கமாய் வேலைசெய்து வருகின்றனரெனவும் படிக்கக்கேட்டு யாவரும் சந்தோஷித்தனர். பின்னர் காஞ்சிபுரத்துப் பாலிகா பாடசாலையில் ஸ்ரீமதி. பர்வதவர்த்தனியம்மாளாற் பழக்குவித்த பெண்குழந்தைகள் இனிய குரலோசையுடன்பாடிய தேவாரத்தைக்கேட்டு யாருமுளம்பூரித்தனர்.

அக்கிராசனரெழுந்து முக்கால்மணிநேரம் தமிழருமை முதலியவற்றைப்பற்றி நீண்டதொருபிரசங்கம் பிரசங்கித்தபின்பு, உடனே 2000-ஜனங்கள் கூடிய சமாஜத்தினர் தங்கள் அனுதாபத்தினைக்காட்டிக் கவர்னர் ஜெனரலவர்கள் இறைவனருளால் தேகசுகமாக வாழும்படி தந்தி கொடுத்தனர். தற்காலம் சென்னைக்கு மிக உதாரத்துவம் பொருந்திய கவர்னரவர்கள் வந்திருப்பதைப்பற்றிச் சந்தோஷ தீர்மானஞ்செய்து முடிந்தபின் வித்துவசிகாமணிகள் மகோபந்நியாசஞ்செய்ய ஆரம்பித்தனர்.

மதுரை பிரம்மஸ்ரீ. கலியாணசுந்தர பட்டரவர்கள் "சிவஞானம்" என்னும் விஷயமாகப் பற்பல ஆகமப் பிரமாணங்களுடன் பகர்ந்தனர். தூத்துக்குடி, ஸ்ரீமந். பொ. முத்தய்ய பிள்ளையவர்கள் "சுவானுபூதி" விஷயமாக வெல்லார் மனத்திலும் பதியும்படி விவரமாக விவகரித்தனர். சிறிதுநேரம் இளைப்பாறியபின், குழித்தலை, பிரம்மஸ்ரீ. அரங்கசாமி ஐயரவர்கள் ஆங்கிலத்தில் "சம்சார சக்கரம்" எனும் விஷயமாக பலபல உபநிடதப் பிரமாணங்களுடன் விரிவாகப் படித்தனர். காஞ்சி. ஸ்ரீமந். கா. ஆலாலசுந்தரம் பிள்ளையவர்கள் "சமயம்" என்னும் விஷயமாக உலகிலுள்ள எல்லாச் சமயங்களும் சோபானமெனவும், சைவசமயமே சமயமெனும் சமயம் முடிவான சமயமெனவுஞ் சாற்றினர். நாகை. ஸ்ரீமந். மெய்கண்ட பிள்ளை அவர்கள் "முயற்சி" விஷயமாக யாவற்றிற்கும் இன்றியமையாதிருப்பது முயற்சியேயென முடித்தனர். கருவூர். ஸ்ரீமந். அப்பாவு பிள்ளையவர்கள் "மந்திரம்" விஷயமாகப் பஞ்சாட்சரத்தைப் பற்றி யாகமங்களிற் கூறும் விவரமனைத்தையும் விளக்கினர். சேலம். ஸ்ரீமந். ஹர. சண்முக முதலியாரவர்கள் "ஹரஹர மஹாதேவ" விஷயமாக இறைவன் மகிமையை நன்கெடுத்து இயம்பினர்.

28உ திருமுறைப்பாராயண முடிந்தபின்னர், காஞ்சி. பிரம்மஸ்ரீ. வெங்கட்டராம ஐயரவர்கள் "அறுபத்துமூவர் மகிமை" விஷய

மாக ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகள் சௌந்தரியலகரியினும், சிவா
னந்தலகரியினும் நாயன்மார்களைப் பற்றி வியந்து பாராட்டியுள்ளா
ராகலின், பிராமணரனைவரும் நாயன்மார்களை வழிபடவேண்டுமெ
னவும், இறந்துபோன பிராமண சந்நியாசிக்குப்பின் வேதபாராய
ணஞ் சொல்லத் துணியும் பிராமணர் நாயன்மாருக்குப் பின் பாரா
யணஞ்செய்யப் பின்வாங்குவது கொடுமை கொடுமையெனவுங்
கழறினர். திருநெல்வேலி. ஸ்ரீமந். S. பால்வண்ண முதலியாரவர்
கள் "மலபரிபாகம்" விஷயமாகப் பஞ்சமலங்களின் றன்மையைக்
கூறி ஆணவமலத்தின் நீக்கமொடுங்குதற் கேதுவை யறைந்தனர்.
திருவாரூர். ஸ்ரீமந். T. S. தியாகராய ஞானியாரவர்கள் சந்தான
தர்மம் விஷயமாக ஆகமரீதியாய் ஒழுங்குபெற வெடுத்து இசைத்
தனர். பொன்னேரி. ஸ்ரீமந். E. N. தணிகாசல முதலியாரவர்கள்
"அப்பர் செய்யுட்டிறம்" விஷயமாக ஆங்கிலத்தில் அப்பர்சுவாமி
கள் தேவாரத்தினையே யாதாரமாகக்கொண்டு அதிலுள்ள நவரச
வலங்காரத்தினையும் நவின்றனர். திருமயிலை. ஸ்ரீமந். அரங்கசாமி
நாயகரவர்கள் "மிருகேந்திரம்" விஷயமாக ஆகமங்களைப் பற்றிப்
புறச்சமயிகட் குண்டாகும் ஆசங்கைகட்கெல்லாம் பிரமாணங்கூ
றிச் சமாதானம் சாற்றினர். சிறிதுநேர மிளைப்பாறியபின், சிகந்
திராபாத் ஸ்ரீமதி. ஆண்டாளம்மாள் "அத்வைத முத்திலக்ஷணம்"
விஷயமாகப் பற்பல வகையாகக்கூறும் அத்வைத பொருளனைத்
தையுமறுத்து அளவற்ற உபநிடதப் பிரமாணங்களால் சுத்தாத்து
விதமே அத்துவிதமான நிலையை நாட்டினர். பூவாளூர். ஸ்ரீமந். தெ.
பெரியசாமி பிள்ளையவர்கள் "வேதமும் ஆகமமும்" விஷயமாகவேத
ம்பொதுவென்றும் ஆகமம் சிறப்பென்றும் சாத்திரப் பிரமாணங்க
ளைக்கொண்டு சாற்றினர். சென்னை ஸ்ரீமந். குப்புசாமி முதலியா
ரவர்கள் "ஊழ்" விஷயமாக ஊழின் வலிமையையும் அதுநடத்து
முறைமையையும் அதன்காரணமும் நுணுக்கமாயறைந்தனர். திருக்
கோவலூர். ஸ்ரீமந். M. R. குமாரசாமி முதலியாரவர்கள் "வேண்
டுவது" விஷயமாக எத்தகையினர்கட்கு மின்றியமையாது வேண்
டுவது அன்பேயென முடித்தனர். சென்னை புரொபசர். ஸ்ரீமந்.
வி. முத்துக்குமாரசாமி முதலியாரவர்கள் B.A, "கர்மமும் மறுபிற
ப்பும்" விஷயமாக ஆங்கிலத்தில் யாவரு முண்மைதெரிந்து பிரத்தி



யக்ஷமாக வுணரும்படி விரிவாயுரைத்தனர். திருவோத்தூர்
சைவஸ்ரீ. ம. தி. பாநுகவி சுவாமிகள் "தமிழ்வேதம்" விஷயமாக
வடமொழி வேதங்களிலுள்ள அரிய உண்மையனைத்தினையும் தமிழ்
மறையிலெடுத்துக் காட்டி நிரூபித்தனர்.

29உ திருமுறைப்பாராயண முடிந்தவுடன் விருதுபட்டி
மறைத்திருவன், சிவஞானயோகிகள் "பஞ்சகிருத்தியநித்தியம்"
விஷயமாக இறைவனைந்தொழில் அநுதிநித்தியமென வாதரித்
துப்பேசினர். அம்பாசமுத்திரம் ஸ்ரீமந். V. P. காந்திமதி
நாதப்பிள்ளையவர்கள் B.A., "தாயுமானவரும் அவரது அத்வைத
மும்" விஷயமாகத் தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டிற்
கூறித்த அத்வைதம் சுத்தாத்துவிதமேயென வெடுத்துக்காட்டி
விளக்கினர். சிறிதுநேரம் இளைப்பாறியபின், காஞ்சி. ஸ்ரீமந்.
முத்துராமலிங்க சுவாமிகள் "மௌனம்" விஷயமாக இந்திரியம
வுணம் அந்தக்கரண மவுனமுதலியவற்றைக் காட்டினும் மகா மவுன
மே சிறந்ததெனவும், அதனையே ஞானவரம்பென்றும் மௌனமே
கலி யென்றும் புகழப்பட்டதென்றும், அதுதான் அற்றல் கெடல்
என்ற பொருளைத்தந்து சிவத்துடன் கலப்பதற்கு ஆதாரமாகு
மென்றும் சாத்திரமூலமாகவே சாற்றினர். சென்னை ஸ்ரீமந். திரு.
வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் "அப்பர்கொள்கை" விஷய
மாகக் கிறிஸ்தவரொருவரைச் சந்தித்த சைவர் அப்பர் சுவாமிகள்
தேவாரத்தினின்றே இறைவன் தன்மையையெடுத்து விளக்கி அவ
ரைச் சைவராகத்திருத்தியதனைச் சம்பாஷணைமூலமாகப் பகர்ந்த
னர். வாலாஜாநகர் ஸ்ரீமந். கமலநாத முதலியாரவர்கள் "ஞானம்"
விஷயமாக அனேகமான நூல்களிலிருந்து பற்பல செய்யுட்களைக்
காட்டி ஞானமே பிரதான மென்றனர். காஞ்சி ஸ்ரீமந். நாகலிங்க
முதலியாரவர்கள், F. M. T. S. "மெய்கண்டசாத்திரமாண்மியம்"
விஷயமாக முத்திக்குச் சாதனங்களாயுள்ள எவ்வகையான ஆதா
ரங்களும் விளக்கமாக மெய்கண்ட சாத்திரத்திலேயே இருப்
பதெனச் சாற்றினர். சென்னை ஸ்ரீமந். இ. ஆதிமூல முதலி
யாரவர்கள் "சமயபோதனை" விஷயமாக இக்காலத்தில் சமயபோ
தனை யத்தியாவசியமெனவும், அதனாலுண்டாகும் நன்மைகள் பல
வுளவெனவும், அதனாலேயே சமயம் விருத்தியாமெனவு மிகவூக்க

த்துடன் விளக்கினர். பின்னர், ஸ்ரீமக். ச. சச்சிதானந்தம் பிள்ளை, B. A., அவர்கள் "சைவ சமயத்தின் காலநிலை" என்பதைப் பற்றி விளக்கமாக அரிய இனிய பிரசங்கஞ் செய்தனர். சென்னை ஸ்ரீமக் J. M. நல்லசாமிபிள்ளை B.A., B.L., அவர்கள் "திருவாசகத்தின் இருதயசுலோகம்" விஷயமாக "இன்றெனக்கருளியிருள்கடிந்து" என்ற தொடக்கத்துத் திருச்செய்யுளில் பதிபசுபாச லட்சணம், பந்தமுத்தி லட்சணம், அத்துவித முத்திலட்சணம் எடுத்துக் காட்டினர். சென்னைச் சித்தாந்தசரபம் அஷ்டாவதானம் பூவை-கலியாணசுந்தரமுதலியாரவர்கள் "முடிவுநூல்" விஷயமாக உலகில் ஏகதேச உண்மையினைக்கூறும் எல்லா நூல்கட்கும் சமஷ்டி உண்மையைக்கூறுவதே முடிவுநூலெனவும், அது சிவஞானபோத மெனவும், அதுவே எக்காலத்தும் இறைவன் திருக்கரத்திலிருப்பதெனவுமியம்பினர். கடைசியாய் அக்கிராசனர் உபந்நியாஸங்களை வியந்துபாராட்டி முடிவுரை முடிந்தபின்னர் ஸ்ரீமக். J. M. நல்லசுவாமி பிள்ளை B.A., B.L., அவர்கள் முறையே யாவருக்கும் வந்தனமளித்தனர். இம்மூன்று நாட்களிலும் உபந்நியாஸங்களின் இடையிடையே ஸ்ரீவைகுண்டம் சுப்பிரமணிய ஓதுவார், பிரசங்காமிருதம் பாஆர். வேலுதேசிகர், தேவாரம். சம்பந்த முதலியார். ஸ்ரீமதி. பார்வதிவர்த்தனி அம்மாள் பாடசாலைப் பெண்கள் முதலியவர்கள் திருமுறைகளை ஓதினர்கள்.

மணவழகு.

---

## சமாசாரங்கள்.

---

1912-ம் வருடம் டிசம்பர்மீ 28உ கூடிய மகாஜனசபையில் நடந்த தீர்மானங்கள்:—

1. ஸ்ரீமான். எஸ். பால்வண்ணமுதலியார் அவர்களால் 1912ம் வருடத்திற்காக நிர்வாக சபையாரால் வெளிப்படுத்திய அறிக்கையை (Report) ஏற்றுக் கொண்டதாக இருக்கவேண்டும் என்று கூறிய அபிப்பிராயத்தை ஸ்ரீமான். என். சிவஞான முதலியார் அவர்கள் அநுவதித்தலும் அவ்வாறே அங்கீகரிக்கப்பட்டது.

2. ஸ்ரீமான். வி. பி. காந்திமதிநாதப்பிள்ளை B. A. அவர்களால், அங்கத்தவர்கள் கொடுக்கவேண்டிய சந்தாத்தொகைகளை "சித்தாந்தம்" என்னும் பத்திரிகையை வருடமுதலி லிருந்து மூன்றுமாதவரையில், வி. பி. மூலமாய் அனுப்பிப்பெறுதல் வேண்டும் என்றும், அவ்வாறு வி. பி. யில் சென்ற பத்திரிகையைவாங்கிக் கொள்ளாது திருப்பிவிடுவார்களாயின் அவர்களுக்கு ஓர் அறிக்கை யனுப்பிய பிறகு அவர்களுடைய பெயரை நீக்கிவிடப்படும் என்றும், அவ்வாறு நீக்கப்பட்ட அங்கத்தவர்கள் மறுபடியும் அங்கத்தவர்களாக இருக்க வேண்டின் அவர்கள் கொடுக்க வேண்டிய பாக்கி சந்தாத்தொகையைக் கொடுக்கும் வரையில் சேர்க்கப்படாம லிருக்கவேண்டும் என்றும் கூறிய அபிப்பிராயத்தை மறைத்திருவன் விருதை சிவஞானயோகிகள் அநுவதித்தலும் அவ்விதமே அங்கீகரிக்கப்பட்டது.

3. ஸ்ரீமான். தியாகராய ஞானியார் அவர்கள், சமாஜத்தின் கணக்குகள் வருடந்தோறும் நவம்பர் 30உக்குள் முடிவுசெய்ய வேண்டும் என்று கூறியதை ஸ்ரீமான் வி. பி. காந்திமதிநாதப்பிள்ளையவர்கள் B. A. அநுவதித்தலும் அங்கீகரிக்கப்பட்டது.

4. கணக்குகளை, நிர்வாகசபையில் சேராத அங்கத்தவர் ஒருவர் பரிசோதித்தல் வேண்டும் என்றும், அவ்விதம் ஏற்பட

வேண்டிய கணிதபரிசோதகரை மகாசபையார் நியமித்தல் வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மறுதினம் 29வ நடந்ததீர்மானங்கள்:—

5. ஸ்ரீமான். ச. சச்சிதாநந்தம்பிள்ளை, B. A. அவர்களால் காரியத்துரந்தரர்கள் (Directors) முப்பதாக இருக்கவேண்டும் என்று கூறியதை, ஸ்ரீமான் தியாகராயஞானியார் அநுவதித்து அப்படியே முடிவுசெய்த பின்னர் பின்காட்டியவர்களை நியமனம் செய்யப்பட்டது.

இம்மகாசமாஜத்தின் நிர்வாக சபையினர்:—

சபைத்தலைவர்.

ஸ்ரீமான். T. பொன்னம்பலம்பிள்ளை அவர்கள், M. R. A. S, சிவசைலம்.

உதவி சபைத்தலைவர்.

,, J. M. நல்லசாமிபிள்ளை அவர்கள், B. A. B. L., சென்னை.
,, ஏகாம்பரசெட்டியார் அவர்கள், வேலூர்.

காரியதரிசிகள்.

,, கி. குப்புச்சாமி முதலியார் அவர்கள், சென்னை.
,, அப்பாதுரை முதலியார் அவர்கள், வேலூர்.

பொக்கிஷதாரர்.

,, I. ஆதிமூல முதலியார் அவர்கள், சென்னை.

கணிதபரிசோதகர்

,, சோமசுந்தரம் பிள்ளை அவர்கள், சென்னை.

அத்தியக்ஷர்கள்

,, S. கணபதிபிள்ளை அவர்கள், திருவனந்தபுரம்.
,, S. பால்வண்ணமுதலியார் அவர்கள், திருநெல்வேலி.
மறைத்திருவன் V. சிவஞானயோகிகள், விருதுபட்டி.
ஸ்ரீமான். சுவாமிநாதபிள்ளை அவர்கள், திருச்சிராப்பள்ளி.
,, S. சிவகுருநாதசெட்டியார் அவர்கள், கும்பகோணம்.
,, சித்தாந்தசரபம்-அஷ்டாவதானம் பூவை. கலியாணசுந்தர முதலியார் அவர்கள், சென்னை.
,, C. ஏகாம்பரமுதலியார் அவர்கள், சிகந்திராபாத்.
,, M. முனிசாமிமுதலியார் அவர்கள், சென்னை.



ஸ்ரீமான். T. V. கலியாணசுந்தர முதலியார் அவர்கள், சென்னை.
,, பொ. முத்தய்யபிள்ளை அவர்கள், தூத்துக்குடி.
,, W. T. கோவிந்தராஜமுதலியார் அவர்கள், சென்னை.
,, ஹர. சண்முகமுதலியார் அவர்கள், சேலம்.
,, கா. மு. சுப்பராயமுதலியார் அவர்கள், காஞ்சிபுரம்.
,, பசவலிங்கப்பா அவர்கள், பெங்களூர்.
பிரமஸ்ரீ. கலியாணசுந்தரபட்டர் அவர்கள், மதுரை.
,, வெங்கடராம அய்யர் அவர்கள், காஞ்சிபுரம்.
ஸ்ரீமான். வேலுசாமி தேவர் அவர்கள், இராமநாதபுரம்.
,, M. சுவாமிநாதம்பிள்ளை அவர்கள், நாகப்பட்டினம்.
,, M. R. N. இராமநாதம் செட்டியார் அவர்கள், தேவகோட்டை.
,, தியாகராஜஞானியார் அவர்கள், திருவாரூர்.
,, ம. திருநாவுக்கரசுமுதலியார் அவர்கள், சென்னை.
,, K. நாகலிங்கமுதலியார் அவர்கள், சென்னை.
,, S. மெய்கண்டபிள்ளை அவர்கள், நாகப்பட்டினம்.
,, K. U. பொன்னுசாமிமுதலியார் அவர்கள், உத்திரமேரூர்.
,, பெரியசாமிபிள்ளை அவர்கள், உறையூர்.
,, S. சச்சிதாநந்தம்பிள்ளை அவர்கள், B. A., சென்னை.
,, P. இராஜவேலுமுதலியார் அவர்கள், வேலூர்.
,, M. R. குமாரசாமிபிள்ளை அவர்கள், திருக்கோவலூர்.
,, C. ஏகாம்பரமுதலியார் அவர்கள், செங்கற்பட்டு.

8. கீழ்க்குறித்த கனவான்கள் கௌரவ உபசியாசகராக இருக்க விரும்பியதை வந்தனத்துடன் ஒத்துக்கொள்ளப்பட்டது.

பிரமஸ்ரீ. சோமசுந்தர குருக்கள் அவர்கள்.
,, வெங்கடராமய்யர் அவர்கள், காஞ்சி.
ஸ்ரீமான். முத்தய்யபிள்ளை அவர்கள், தூத்துக்குடி.
,, தியாகராஜஞானியார் அவர்கள், திருவாரூர்.
,, குமாரசுவாமிபிள்ளையவர்கள், திருக்கோவலூர்.
,, பொன்னுசாமி முதலியார் அவர்கள், உத்திரமேரூர்.

ஸ்ரீமான். பி. செ. முருகேசமுதலியார் அவர்கள், காஞ்சி.
,, திரு. வி. கலியாணசுந்தரமுதலியார் அவர்கள், சென்னை.
,, எஸ். சீனிவாசப்பிள்ளை அவர்கள், சென்னை.
,, வி. முத்துகுமாரசாமி முதலியார் அவர்கள், B.A.,
மறைத்திருவன் விருதை சிவஞானயோகிகள்.

9. 1912ம் வருடம் இச்சமாஜத்திற்காக வேலைசெய்த கவுரவப் பிரசங்கிகளுக்கெல்லாம் அவர்கள் செய்தவேலைகளுக்காக சமாஜத்தார் வந்தனஞ்செய்யும்படித் தீர்மானிக்கப்பட்டது.

10. ஸ்ரீமான் இராஜரத்னவேலு முதலியார் அவர்கள், அடுத்த 1913ம் வருடம் நடக்கவேண்டிய மகாசமாஜக் கூட்டத்தை வேலூரில் நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்ட உபசாரப்படி மறுவருடக்கூட்டத்தை வேலூரில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

11. நாகை. ஸ்ரீமான் மெய்கண்டப்பிள்ளையவர்கள் இச்சமாஜத்திற்கு, சமாஜத்தைச் சேர்ந்தவர்களும் மற்றையரும் அவரவர் வீடுகளில் நடத்தும் கலியாணமுதலிய சுபகாரியங்களில் உபகாரதனம் கொடுக்கப்படின் நலமாகும் என்று பிரேரிபிக்க அவ்வாறு கூடும் என்று தீர்மானிக்கப்பட்டது.

12. வித்வான் ஸ்ரீமான் விச்சூர் முத்துக்குமாரசுவாமி முதலியார்B.A., அவர்கள் மதசம்பந்தமான சபைகள் இந்தியாவிலிருப்பது மாத்திரம் அல்லாமல், கீழ்நாடுகளாகிய பர்மா, சிங்கப்பூர் முதலிய இடங்களிலும், இலங்கைமுதலிய தீவுகளிலும், மற்றைய இடங்களிலும் ஏற்படுத்தவேண்டும் என்று பிரேரிபிக்க அவ்வாறே தீர்மானிக்கப்பட்டது.

---

1912ஆம் டிசம்பர்மீ 30உ மாலை 3-மணிக்கு காஞ்சிபுரம் முனிசிபாலிட்டி செயர்மென் ஸ்ரீமந். M. T. சாமிநாத முதலியாரவர்கள் ஸ்ரீமந். அருணசல முதலியாரவர்கள் விருப்பத்தின்படி, இவ்விருவரும் தர்மகர்த்தாக்களாயுள்ள கச்சபாலேஸ்வரர் ஆலயத்தில் ஆலய வழிபாட்டினைப் பற்றி விருதை. மறைத்திருவன். சிவஞான



யோகிகளும், விபூதி மகிமையினைப்பற்றி ஸ்ரீமந். பொ. முத்தைய பிள்ளை அவர்களும், உருத்திராக்க மகிமையினைப் பற்றி சிதம்பரம். ஸ்ரீமந். க. தில்லைநாயக முதலியார் அவர்களும், பஞ்சாட்சரத்தினைப் பற்றி சைவஸ்ரீ. ம. தி. பானுகவி சுவாமிகளும் நீண்ட மகோபந்நியாசங்கள் செய்தனர். காஞ்சி மகாநாடு முதலிய இடங்களில் வித்தியா விஷயமாக மிக்க ஊக்கங்கொண்டு உழைத்துவரும் காஞ்சி - நாகலிங்க முதலியார் அவர்களுக்கு விருதுப்பட்டி மறைத்திருவன் சிவஞானயோகிகள் பிரேரேபனையின்படி சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் அக்கிராசனராக வீற்றிருந்த ஸ்ரீமான். தி. பொன்னம்பலம் பிள்ளை அவர்கள் முதலியோர் முன்பாக ஷெ சபையாரகளால் "காஞ்சி மகா நாட்டு வித்தியா பிரசாரகர்" என்னும் பட்டம் ஒன்று கொடுக்க காஞ்சிபுரம் முனிசிபல் கவுன்சிலர் ஸ்ரீமான். அப்பாய் நாயுடு அவர்கள் முதலிய மகாஜனசபையாரால் கர கோஷத்துடன் ஆமோதிக்கப் பெற்றது.

அடுத்தநாள் ஏகாம்பரேஸர் ஆலயத்தில் பிரமஸ்ரீ. மதுரை. கலியாணசுந்தர பட்டரவர்கள் ஒரு பிரசங்கமும், புரொபசர். ஸ்ரீமந். வி. முத்துக்குமாரசுவாமி முதலியாரவர்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் சிற்சில பாடசாலைகளில் இரண்டொரு பிரசங்கங்களும் நடத்தினர்.

---

கமலாலனி:—இப்பத்திரிகை நமது சைவசித்தாந்த மகாசமாஜ கௌரவ உபந்நியாசகராகிய திருவாரூர். T. S. தியாகராஜஞானியாரவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. இதனையிவர் மிகுந்த ஊக்கத்துடன் நடத்திவருகின்றனர். இதில் பலபிரபல வித்துவசிகாமணிகள் அரிய பெரியவிஷயங்களை யெழுதிவருகிறார்கள். அவ்விஷயமனைத்தும் பெரும்பாலும் வைதிகசைவ சித்தாந்தமாகவே காணப்படுகின்றன. அப்பத்திரிகைக்கு இது இரண்டாவது வருடமாகிறது. இதற்கு வருடசந்தா 1—8—0 ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சைவரனைவரும் இதனையாதரித்துப் பத்திரிகாசிரியருக்கு மிகுந்த ஊக்கத்தை விளைவிக்கச்செய்வது இன்றியமையாதகடனாகும். இப்பத்திரிகை நாளுக்குநாள் விரு

த்தியாகித் தமிழ்நாடனைத்தும் பரவும்படி நமது திருவாரூர் தியாகராஜப் பெருமான் திருவருள் புரிவாராக.

---

திருவாவடுதுறை ஆதீன சைவப்பிரசாரகர் பொ. முத்தைய பிள்ளை அவர்களின் பிரசங்கங்கள்.—கார்த்திகைமீ 17உ கோவில்பட்டி பக்திவிளைகழகத்தில் அடியார்பக்தி. 18உ கோவில்பட்டி பக்திவிளைகழகத்தில். "அறஞ்செயவிரும்பு" 19உ கோவில்பட்டி பக்திவிளைகழகத்தில் "ஜீவா கடமை" மார்கழிமீ 6உ சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் "மோனமென்பது ஞானவரம்பு" 7உ சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் "சிவனுக்குள்ளே சிவமணம்பூத்தது" 15உ காஞ்சி கச்சியப்பர் கோயிலில் "விபூதியின் பெருமை."

---

சைவசித்தாந்த மகாசமாஜ கௌரவப்பிரசாரகர்களில் ஒருவராகிய மறைத்திருவன். விருதை சிவஞானயோகிகள் செய்த பிரசங்கங்கள்.—1913௵ ஜனவரிமீ சனிக்கிழமை 4உ சென்னை சூளை எ. ஜி. எம் பிரைமரி பாடசாலையில் கடவுள் வழிபாடு. 5உ சென்னைச் சிவனடியார் திருக்கூட்ட மண்டபத்தில் தமிழ் வேதம்.

---

பண்டிதர். வி. முத்துக்குமாரசாமி முதலியார் அவர்கள் செய்த பிரசங்கங்கள். 30 12 12: திருவிளையாடல் மண்சுமந்தபடலம்.

31 12 12: ஏகாம்பரேஸ்வரர் ஆலயம் அன்று:

1 1 13: மாமண்டூர். திருவிளையாடல்: வேதத்துக்குப் பொருளருளிச்செய்த படலம்.

1 1 13: சிவதண்டிகை வேதத்துக்குப் பொருளருளிச் செய்த படலம்:

3 1 13: சித்தனக்காவூர்:—வளையல் விற்றபடலம்.

4 1 13: காவித்தண்டலம் சைவசித்தாந்தசபை. வாதவூரடிகட்கு உபதேசித்த படலம்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி உ.] 1913-௵ பிப்பிரவரிமீ [பகுதி உ.

## சித்தாந்தபரிபாஷை
என்னும்
## தருக்கசோபானம்.

---

தெய்வவணக்கம்.

**பதின்சீர்வண்ணவிருத்தம்.**

வரநதி மதிக்குலஞ் சடைக்கணே வதிதர மழுத்தடங் கரத்திலே
மகிழ்வொடு பிடித்திடுஞ் சிவத்தைநே ராகவே
பிரணவ வுருக்கொடங் குதித்துமே லுலகுறை கணத்தருந் துதிக்கவே
பெறுகய முகத்தனின் பதத்தைநா ளோதியே
திரளுள வருட்பெரும் புலத்தினோர் தமதுயர் நலற்புதம் பலிக்கவே
திகழ்தரு புகழ்ச்சிநன் களித்துமீ தாகவே
தரணியின் மதிப்பரின் றொலித்துவாழ் பலமொழி களுக்குளுஞ்சிறக்குமோர்
தமிழினி லியற்றினன் றருக்கசோ பானமே.

## பிரமாணம்.

---

பிரமாணம்-அளவை.

Proof.

பிரமாணமென்பது சம்சயம், விபரியயம், ஸ்மிருதி இம்மூன்றினுக்கும் வேறாயுள்ள ஆன்மசிற்சத்தி.

சம்சயம்—ஐயம் - Doubt - தோன்றினதொருபொருளைக் குற்றிக்கொல்லோ மகன்கொல்லோ [illegible]ட்டுறக் கருதுவது.

விபரியயம்—திரிவு—Mistake—தோன்றின பழுதையை மயக்கத்தால் பாம்பென் றச்சமுறுதல்.

ஸ்மிருதி—முன்னினைவு - Thought - முன்கண்டவாதனைபற்றித் தோற்றுவதாகிய நினைவுணர்வு காமுகனுக்குக் காமினியுருவு வெளியாதி.

ஆசங்கை.

பிரத்தியட்சம், அனுமானம், ஆகமமூன்றும் பிரமாணமாகாதோ?

சமாதானம்.

இம்மூன்றுஞ் சிற்சத்திக் கபிவியஞ்சகமாகையால்* உபகார லட்சணையாக அவைகள் பிரமாணமெனக் கூறப்பட்டன.

நையாயிகர்மதம்.

பிரமையினாலே † வியாபிக்கப்பட்ட பிரமையின் சாதனமாவது ஆசிரயமாவது பிரமாணம்.

மறுப்பு.

சாதனங்களெல்லாம் பிரமேய‡ மாதலின் பிரமாணமாகாது. பிரமாணமென்னில் தீபாதிகளும் பிரமாணமாக வேண்டிவரும். கண்முதலான இந்திரியங்கள் தத்தம் விஷயங்களைவிட வேறு விஷயங்களைக் கிரகிக்க மாட்டா. ஆகலின் எவற்றையுங் கிரகிப்பது எதுவோ அதுவே பிரமாணம்.

ஷையார் ஆசங்கை.

அங்ஙனமாயின் எல்லாவற்றையு மறிகிறது புத்தியாகையாலதுவே பிரமாண மாகாதோ?

சமாதானம்.

புத்தி பிரகிருதி சம்பந்தமாகையால் இந்திரியங்கட்கும் அதற்கும் பேதமில்லை. அன்றியும் சுகதுக்க வேதுவைக்கொண்டறியப்படும் பிரமேயமாம்.

ஷையார் ஆசங்கை.

அந்தக்கரணங்களும், புறவிந்திரியங்களும், விஷயங்களும், பிரமாதாவும் ஆகியநாலுமுண்டானால் ஒன்றையறிதலும், இவை

* அபிவியஞ்சகம் விளக்குவது. † பிரமை - உண்மையனுபவஞானம்.
‡ பிரமேயம்-பிரமாணத்தா லறியப்படுவது.



களி லொன்றில்லாவிடில் ஒன்றையறியா திருத்தலுமாக விருத்தலின் இப்பிரமா சாமக்கிரியையே பிரமாணமாகாதோ?

சமாதானம்.

அங்ஙனமாகில் பிரமாணம், பிரமேயம், பிரமாதா,* பிரமிதி† என்னும் விவகார மில்லாமற்போம். யாதொன்று யாதொன்றைக்காட்டினு மதிகம் அது அதற்குப் பின்னமென்கிற வியாப்தியு மில்லையாம். ஒன்றினாலே யொன்றறிகிறதென்பது மில்லையாம்.

ஷையார் ஆசங்கை.

உமது சித்தாந்தத்தில் ஆன்மா ஞானசொரூப னாகையால் ஒன்றே பிரமாதாவாகவும், பிரமேயமாகவு மாகாதோ.

சமாதானம்.

ஆன்ம சிற்சத்தியானது வித்தை ராக முதலானவையாலே கலந்து விஷயங்கட்கு எதிர்முகமானபோது பிரமாணமாம். கலவாது ஆன்மாவை முன்னிட்டசத்தி பிரமாதாவாம்.

பிரபாகரன்மதம்.

அனுபூதியே பிரமாணம். அவ்வனுபூதியானது ஸ்மிருதிக்கு வேறானது. ஸ்மிருதியாவது முன்னனுபவத்தாலுண்டான ஞானம்.

மறுப்பு.

ஸ்மிருதியை முன்னிட்டு வந்த வேதத்தின் வாக்கியார்த்த ஞானத்தைச் சுவயமாகப் பிரமாணமெனச்சாதித்து, இப்போது ஸ்மிருதி நீங்கலான அனுபூதியைப் பிரமாணமெனின் முன்பின் விரோதம்.

பாட்டர்மதம்.

அநதிகதார்த்தகந்தருவே பிரமாணமாம். அதாவது ஒருசாலுமறியாத வஸ்துவை யறிவிக்கிறது.

மறுப்பு.

ஒருகால் கண்ட கடத்தை இது கடம் இது கடமென்றொழுங்காக வருகிற ஞானங்களிலே யிரண்டாவது முதலாக விருக்

* பிரமாதா-அறிகிறவன். † பிரமிதி-மெய்யறிவு.

கிற ஞானங்கட்குப் பிராமாணிய * மில்லையாம். அன்றியும் தைவாதீனமான அர்த்த சம்வாதத்தை உடைத்தாயிருக்கிற தோஷத்தையுடைய இந்திரியங்கட்கும், பித்தர் விகடர் வாக்கியங்கட்கும் பிராமாணியம் வந்துவிடும்.

பௌத்தர் மதம்.

அவிசம்வாத விஞ்ஞானம் பிரமாணம். அதாவது அருத்த முஞ் செய்கையுங் கூடியிருப்பது.

மறுப்பு.

யாதொரு பதார்த்த தரிசனத்தினாலே ஞானமானது பாதிக்கப்படாம லிருக்குமோ அது அர்த்த கிரியாஸ்திதி. ஆற்றில் வெள்ள மழைபெய்துண்டானது என்றபோது வெள்ளமுண்டு அவ்விடத்து மழையின்மையான் அர்த்தமுண்டு கிரியையில்லை. இது அவ்வியாப்தி. பிரமாணமல்லவெனும் ஸ்மிருதிஞானத்தும் சவிகற்ப ஞானத்தும் அர்த்தக்கிரியா காரியத்துவம் சித்திக்கையால் அதிவியாப்தி. ஆகலின் அதூஉ கூடாது.

பிரமாணவகை.

பிரதியட்சம், அநுமானம், ஆகமம் என மூவகைத்து.

## பிரத்தியட்சம் - காண்டல்.

### Perception. †

பிரத்தியடசமாவது இந்திரியவிடய சம்பந்தத்தானேதோன்றும் ஞானம். பாகிய பிரத்தியட்சத்தில் இந்திரிய மனசை யோகமும் ஆந்தரப் பிரத்தியட்சத்தில் ஆன்ம சையோகமும் வியாபாரங்கள். சட்சு, துவக்கு, மனமிவை திரவியங்களைக் கிரகிப்பன. கிராணம், இரசனம், சிரவணமிவைக் குணமுதலியவற்றைக் கிரகிப்பன.

இப்பிரத்தியட்சம் நிருவிகற்பம், சவிகற்பமென விரண்டு வகை.

மணவழகு.

---

* பிராமாணியம் உண்மையனுபவ ஞானத்தின் றன்மை.

† What is cognizable by any of our senses.

# அதர்வசிரோபநிஷத்.

ஓம். பின்னர், அதர்வணமுனிவரை நோக்கிப் பிப்பலாதர் சந்ததியாரான ஆங்கிரசரும், சனத்குமாரரும் வினவினர். ஓ பிரபுவே! தியானமென்ப தென்ன? தியானிப்பதற்கு முதல்பிரயத்தனம் யாது? அத் தியானமெது? தியானிப்பவர்யார்? யாரை தியானிப்பது.

2. அவர்கட்கு அதர்வணமுனிவர் விடைபகருகின்றார். ஓம் என்னு மட்சரமேமுதலாக தியானித்தற்கேது.

3. இவ்வட்சரமே பரபிரம்மம். இவ்வட்சரத்தின் நான்குபாகங்களினின்றும் நான்குவேதங்களும் ஆயின. (ஆகலின்) அட்சரம் நான்குபாகங்களையடக்கிக் கொண்டிருக்கின்றன. இதுவே பரபிரம்மம்.

4. இதன்முதன் மாத்திரை பூலோகத்தைக் குறிக்கின்றது. அகரமானது இருக்குவேதத்தின் மந்திரங்கள், பிரமா, (அஷ்ட) வசுக்கள், காயத்திரி சந்தம், காருகபத்தியம்.

5. இரண்டாவது மாத்திரை புவர்லோகத்தைக் குறிக்கிறது. உகரமானது எஜுர்வேத மந்திரம், விஷ்ணு, (ஏகாதச) உருத்திரர், திருஷ்டிட்பு சந்தம், தட்சணாக்கினி.

6. மூன்றாவது மாத்திரை சுவர்லோகத்தைக் குறிக்கிறது. மகாரம் சாமவேதத்தின் மந்திரம், உருத்திரன், (பன்னிரு) ஆதித்தியர், ஜகதீசந்தம், ஆகவனீயம்.

7. பிரணவத்தின் அந்தமாகிய நான்காவது *அர்த்தமாத்திரை சோமலோகத்தைக் குறிக்கிறது. அதர்வமந்திரம், சம்வர்த்தகம், (சப்த) மருத்துக்கள், விராட், † ஏகருஷி.

8. இவைகள் ஜோதிசொரூபமெனச் சொல்லப்படுகின்றன.

---

* அர்த்தமாத்திரை சர்வஞகிய சிவபெருமானென்பது கோபத பிராமணத்திலும் காண்க.

† ஏகருஷி சிவபெருமானே யென்பது, சுவேதாசுவதரம் - 4-12-ற் காண்க.

9. முதலாவது சிவப்பும், சிறிது மஞ்சளும் கலந்தநிறம். இது பிரதமபிரமதேவனைக் குறிக்கின்றது.

10. இரண்டாவது மின்னல் கலந்த நீலநிறமுடையது. இது விஷ்ணு தேவனைக் குறிக்கின்றது.

11. மூன்றாவது மங்களமும் மற்றநிறமுங்கலந்த வெண்மை நிறம். இது உருத்திர தேவனைக் குறிக்கின்றது.

12. கடைசியாயுள்ள நான்காவதான அர்த்தமாத்திரை எல்லாப்பிரகாசமும் கலந்தநிறம். இது † புருஷோத்தமனைக் குறிக்கின்றது.

13. இந்தப் பிரகாரம் ஓங்காரமானது நான்கு அட்சரங்களாய், நான்கு பாதங்களாய், நான்கு சிரங்களாய், நான்கு மாத்திரைகளாய், ஸ்தூலமாய், ஒன்று, இரண்டு, மூன்றுமாத்திரையுச்சரிப்பாயுள்ளது.

14. ஓம், ஓம், ஓம் எனவொவ்வொன்றினையும் ஒன்று இரண்டு மூன்று மாத்திரைகளாக முறையே உச்சரிக்கவேண்டியது.

15. நான்காவது பரம்சாந்தமான * ஆத்மா.

16. பிரணவத்தினை மூன்றாவது மாத்திரையா லுச்சரிக்கின் உடனே ஆன்மவிளக்கத்திற் செலுத்துகிறது.

17. ஒருதர முச்சரித்தலினாலேயே மேனோக்கச் செய்யும் ஓங்காரமெனப் பெயர்பெற்றது.

18. எல்லாப் பிராணிகளையும் இது லயப்படுத்தலின் பிரளயமெனச்சொல்லப் படுகிறது.

19. எல்லாப் பிராணிகளையும் பரமாத்துமாவினிடத்துச் செலுத்துகையால் பிரணவமெனச் சொல்லப் படுகிறது.

20. எல்லாத் தேவர்கட்கும் வேதங்கட்கும் உற்பத்திஸ்தானமானபடியால் இது நான்காகவகுக்கப் பட்டிருக்கிறது.

* புருஷோத்தம சப்தம், சிவபெருமானைக் குறிக்குமென்பது தைத்திரீயம் ஆரணியகம்—10—24—42-ற் காண்க.

† ஈண்டு ஆத்துமாவென்பது பரமாத்மாவை.



21. பிரணவமானது எல்லாத்தேவர்களுடன் எல்லாவற்றையும் நிர்மாணமாகக் குறிப்பிக்கப் பட்டிருக்கிறதெனத் தெரிந்து கொள்ள வேண்டியது.

22. சர்வ பயங்களையும், சர்வதுன்பங்களையுங் கடக்கச்செய்வதால் இது தாரமெனப்பட்டது. (தாரம்— கடத்தல்.)

23. எல்லாத் தேவரும் இதில் வியாப்பியமாகலின். விஷ்ணுவெனப்பட்டது.

24. எல்லாவற்றையும் விசிரிம்பிக்கச் செய்தலின் அது பிரமம்.

25. தேகத்தினுள்ளே தியானிக்கப்படுவதாய எல்லாவற்றிற்கும் தீபம்போலப் பிரகாசித்தலின் காந்தியெனச் சொல்லப் படுகிறது.

26. உண்மையான பிரணவமானது சர்வபிரகாசித்தினும் மிகுந்த பிரகாசமாய்த் தேகத்தினிடத்தே அடிக்கடி பிரகாசிக்கிறது. அது மின்னலைப்போல எப்பக்கத்தும் எவற்றினும் ஊடுருவிப்பாய்கிறது. அது சமஸ்தலோகங்களிலும் ப்ரவியிருக்கிறது. அது எல்லாவற்றையும் சூழ்ந்திருத்தலின் சர்வவியாபகஞன மகாதேவனேயாம்.

27. பிரணவத்தின் முதன்மாத்திரை சாக்கிரம், இரண்டாவது மாத்திரை சொப்பனம், மூன்றாவது மாத்திரை சுழுத்தி, நான்காவது மாத்திரை * துரியம் (சதுர்த்தம்.)

28. எல்லாப்பாகங்களினு மடங்கிய மாத்திரைகளை முற்றும் கடத்தலாகிய இயற்கை விளக்கமுடையான் பிரமமேயாவன். இம்மந்திரம் பூர்ணவிளக்கத்தை விளக்குதலின் தியானத்திற்கு முதற்சோபானமாகவிருக்கிறது.

29. காரணத்தொழில்களை விடுகைக்கும், வேண்டுவன எல்லாவற்றிற்கும் ஆதாரமாயிருத்தலின் பிரமம் நான்காவது பதார்த்தமாயிருக்கிறது.

30. அங்கிலைமையான தியானம் விஷ்ணுவென்று அழைக்கப்படுகிறது. அதில் மனதின் எல்லாக் கரணங்களும் அடக்கப் படுகிறது.

* இக்கருத்துப் பரப்பிரமோபநிடதத்தும் காண்க.

31. தியேயனுவான் உருத்திரன், மனத்தின் காணங்களுடன் பிராணனைக் காக்கின்றனன்.

32. பிராணனையும், மனத்தோடு காணங்களையும் நிலைநிறுத்தி நாதாந்தத்தின் முடிவிலிருக்கிற ஈசானனொருவனே தியானிக்கத்தக்கவன்.

33. பிரமன், விஷ்ணு, உருத்திரன், இந்திரன் யாவரும் படைக்கப்படுகின்றனர். இந்திரியங்களெல்லாம் பூதங்களுடனே படைக்கப்படுகின்றன. ஆகலின் அவர்களும் அவைகளும் காரணமில்லை, தியாதாவாகிய அவர்களாலே தியானிக்கப்படும் தியேயனெனும் சருவைச்சுவரிய சம்பன்னனும், சருவேச்சுவரனும் சம்பு சப்தவாச்சியார்த்தனும் பரமாகாசமத்தியத்தி லிருப்பவனுமான சிவனே காரணன்.

34. ஒரு நிமிஷதியானத்தால் நூறு எழுபத்து நான்குயாகத்தின் பலனும், ஓங்காரத்தின் முழுபலனுஞ் சித்திக்கும்.

35. சர்வதியானங்கட்கும், யோகங்கட்கும், ஞானத்திற்கும் பலனையறிவார் ஓங்காரம் அல்லது மகத்தான ஈசானரே.

36. சிவபெருமானொருவனே தியானிக்கத் தகுந்தவன், சிவனே எல்லாநன்மைகளையுங் கொடுக்கத் தகுந்தவன், மற்றெல்லாவற்றையும் விடவேண்டும், இந்த அதர்வசி கோபநிடதத்தின் கருத்தே எல்லாவுபநிடதங்களிலு முள்ளது.

37. இந்த உபநிடதத்தை யாராயும் துவிஜன் முத்தியையடைகிறான். மறுபடியும் கருப்பவாசமுறான், கருப்பவாசமுறான். ஓம் சாந்தி.

மணவழகு.

## ஊழ்.

ஊழ், இதுபால், முறை, உண்மை, தெய்வம், நியதி எனப் பல பொருள்படும்—இது

"விந்துவின்மாயையாகி மாயையினவ்வியத்தம்
வந்திடும் விந்துத்தன்பால் வைகரியாதிமாயை
முந்திடுமராகமாதி முக்குணமாதிமூலந்
தந்திடுஞ்சிவனவன்றன் சன்னிதிதன்னிலன்றே."

என்றபடி, காலதத்துவத்திற்குப் பின்தோன்றிய நியதிப் பொருள். இந்நியதி ஓர் ஆன்மாசெய்த நல்வினை தீவினைகளாகிய இருவினைகளின் பயன்களைச்செய்த அவ்வான்மாவையே சென்றடையச்செய்து அவ்வப்பயன்களை அருட்சத்தியின் ஆணையின் வழிமுறையே ஊட்டுவிப்பதோர் சடப்பொருளாகும். அவ்வாறு பயன்களை ஊழ்ஊட்டுவிக்குங்காலத்து அதுசெய்த ஆன்மாவையே தேடிச்செல்லும் என்பதும், தேடிச்செல்வதுடன் செய்த வினையின் பயன்கள் குறைபாமலும், மிகாமலும், முறைபிறழ்ந்து வாராமலும் இருக்கும் என்பதை,

"பல்லாவுளுய்த்து விடினுங்குழக்கன்று
வல்லதாந்தாய் நாடிக்கோடலை
தொல்லைப்பழவினையு மன்னதகைத்தே
தற்செய்தகிழவனை நாடிக்கொளற்கு."
"சிறுகாபெருகா முறைபிறழ்ந்து வாரா
உறுகாலத்தூற்றுகா வாமிடத்தேயாகும்
சிறுகாலைப்பட்ட பொறியுமதனால்
இழுகாலத் தென்னைபரிவு."

என்னும் பிறமதத்தவர்கள் செய்யுள்களே நிலை நிறுத்தும். ஆயின் இதனை ஒருசாரார்

"ஊழிற்பெருவலியாவுள மற்றொன்று
சூழினுந்தான் முந்துறும்."

என்னும் பெருநாவலர் வாக்கைமேற்கொண்டு, ஊழேயாவற்றிற்கும் முதலாகும், இறைவன் என்பதும் அவன் ஆணையின்வழி ஊழ், வினையின் பயன்களை ஊட்டுவிப்பதென்பதும் வேண்டுவதில்லை யென்பர்—அன்றியும் அவர்,

"வாழ்பாணொன்மறை நெறிஞானமதனாலென்
கேள்விகளாலென் கிளர்மனுவாலென் கிளையாலென்
வேள்விகளாலென் விண்ணவராலென் வினையெல்லாம்
ஊழ்வினை தானே தருதலினூழே யிறையென்றான்.''

என்றபடி இறைவன் மாத்திரமன்று. வேதநீதியாலாவது யாது, ஞானாதியோகநெறிகளாலாவது யாது, கேள்விகளாலாவது யாது விஞ்ஞானாதி நீதிகளாலாவது யாது, வேதாந்தாதிகளாலாவது யாது, தந்தைதாய் தமர்தாரம் மகவு எனும் சுற்றத்தாராலாவது யாது, தீர்த்தயாத்திரை முதலியவற்றாலாவது யாது, எல்லாம் வினைக்கீடாகையால் எல்லாவரவும் போக்கும் வினையின் பயனேயாகும் என்பர்,

இவையன்றியும், உலகோர் தமக்கொன்று நிகழுங்காலத்து என்விதி, என்கன்மம், என்றுகூறலாலும், நன்மை தீமையாவற்றிற்குங் காரணமாயிருத்தலாலும், ஒன்று நாம் எண்ண அது மற்றொன்றாய் முடிதலாலும், கன்மமே பிரமம் என்பர்—மேலும்—

"வினைப்பயனை வெல்வதற்கு வேதமுதலாம்
அனைத்தாய நூலகத்துமில்லை—நினைப்பதெனக்
கண்ணுறுவதல்லாற் கவலைபடேல் நெஞ்சமே
விண்ணுறு வார்க்கில்லைவிதி.''

என்றுபெரியார் கூறியிருத்தலால், ஊழேகர்த்தா, ஊழே சஞ்சித, ஆகாமிய, பிராரத்தமாய் விரிந்து அநந்தபோகங்களைத் தந்து, போக்கியப் பொருள்களாய் நின்று, பின்தான் பக்குவப்பட்டுத் தன்னில்லயமாவதே முத்தியென்பர்—இவ்வூழ்வாதிகளின் கொள்கை யிவ்வாறு இருக்க, மற்றொருசாரார் ஊழே எல்லாமாயின்

"முயற்சி திருவினையாக்கும், முயற்றின்மை
இன்மை புகுத்திவிடும்.''



"தெய்வத்தானாகாதெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலிதரும்.''

என்ற புத்திபோதிப்பிற் கென்செய்வது. முயற்சி ஒன்றினாலேயே எதையும் பெறுதல்கூடும், ஊழ் என்பது ஒன்றுவேண்டாவென்பர். ஏனெனில் எச்சமயத்துந் தோன்றிய பெரியோரும் தாம்கொண்ட கொள்கை நிறைவேறும் வண்ணம் முயற்சியாதிருந்ததில்லை. ஊழே எல்லாம் என்று இருந்திருப்பரேல், அருமகள் கூந்தலை யரிந்தும், அன்புடைமனைவியை யீந்தும், தந்தையைத் தடிந்தும், மைந்தனைக் கொன்றும், தலைதனையோதியும், வயிற்றினைக்குத்தியும், முழங்கையைத்தேய்த்தும், ஊட்டியையரிந்தும், கண்ணினையிடந்தும் நின்றதென்னை என்பர். இவ்விருவாதிகளும் ஊழின் உண்மை கண்டிற்றிலர் ஆவர். எவ்வாறு எனின்விவகரிப்பாம்.

ஊழ் என்பதோர் சடப்பொருள். இது இறைவன்பரிக்கிரகசத்தியாகிற அசுத்தமாயையின் பின்தோன்றிய நியதியேயன்றிவேறன்று. அன்றியும் ஊழ் என்பதின் பொருள் அளவை யென்பதேயாகும். அளவையாகிய இச்சடப்பொருள் எவ்வாறு இறைவனாகும். ஆனால் இவ்வூழ் உண்டென்பதற்கு ஊழின்காரியத்தை நோக்கிக் காரணம் நித்தியம் எனக்கொள்ளப்படுதலால், மானதப்பிரத்தியட்சமும், புகையைக்கண்டு நெருப்பை அநுமித்தல்போல இதன்செய்கைகளைக் காணலால் அநுமானமும், நூல்கள் எல்லாம் ஊழ் என்பதொன்றுண்டு என்றுணர்த்தலால் ஆகமப்பிரமாணமும் ஆகமூன்று பிரமாணங்களும் கூறுதல் அமையும். மேலும்,

உருவப்பொருளும், அருவப்பொளும் நித்தியம் அல்லவாயினும், இவ்வூழிற்குக் காரணமாய அசுத்தமாயை இறைவனது சத்தியாகிய குண்டலியிடத்து லயித்திருத்தலால் நித்தியமும் ஆகும். பிரமாணங்களுக் குட்பட்டலும் நித்தியமானதும் ஆக ஊழ் இருக்கினும் ஊழ்வாதிகள் கூறுதல்போல் எதையும் தானே செய்ய இவ்வூழாலாகாது. என்னை? காலாதிகள் சிருட்டி, திதி, சங்காரமாகிய முத்தொழில்களை எவ்வாறு செய்கின்றனவோ அவ்வாறு சடப்பொருளாகிய ஊழும்செய்யும் எனின், அறியாது

கூறினாய்; சடமாகிய காலமும் இறைவனது சத்தி சங்கற்பித்த வழி மாயையினிடமாக முத்தொழில்களுக்குள் காலவேற்றுமை செய்யமுடியும். அது எவ்வாறு எனின் ஒருவன் உட்கொண்ட உண்பன தின்பனவாகிய உணவாதிகளும், பேதியாதி ஔஷதங்களும், உயிரோடு கூடிய உடலுக்கே புஷ்டியும், நோய் நீக்கமும் செய்யவல்லவேயன்றி உயிர்நீங்கிய உடலுக்கு ஆகாராதி புஷ்டியையும் ஔஷதாதி நோய் நீக்கத்தையும் செய்யல் ஆகாதுபோல். அவ்விதமே சடமாகிய இவ்வூழும், மாயையின் வழிநின்று, நிமித்தகாரணனாகிய இறைவனது, அருட்சத்தியின் ஆணையின்படி உயிர்களுக்குப் போகத்தைப் புசிப்பிக்கும். ஆனால் நீர் மேற்கூறிய உவமை ஜடப்பொருளுடன் உயிர்ப்பொருள்நின்று இயக்குவதொன்றாகும். ஊழோ சடப்பொருள், மாயையும்சடம். இருசடமும் ஒன்றாய்ச்சேர்ந்து எவ்வாறு ஒன்றைச்செய்யும் எனின், இரும்பின் முன்னே காந்தத்தை ஒருவன் காட்டப்புகின், எவ்வாறு இரும்பாகியசடமும் காந்தமாகிய சடமும், காட்டுவோனது சத்தியால் ஒன்றுபடுமோ, அதுபோல் ஊழாகியசடமும், மாயையாகிய சடமும், இறைவனது ஆணையால் ஒன்றுபட்டுக் காரியத்தைச்செய்யும். ஆதலால்முடிந்தபொருளாகக் கூறுவதென்னெனின் ஊழேமுதற்பொருள் என்பார்மதம் நிலைபெறாது, இறைவன் அருட்சத்தியின் ஆணையால், ஊழ் ஆன்மாக்களுக்கு இருவினையின் பயன்களைப் புசிப்பிக்கும் ஓர் நியதியே என்பதாம்.

"தெய்வத்தானாகாதெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலிதரும்."

என்ற திருக்குறளாலேயே தெய்வத்தாலாவது யாவும் என்றும் முயற்சியாலாவது சிறுபான்மையும் என்றும் தெய்வத்தை நம்புதலும், முயற்சிசெய்தலும் இரண்டும் பாழ்படாமையின் தெய்வம் நோக்கியிராது முயற்சியும்செய்யவேண்டும் என்பதும் பெற்றாம் எனெனின், சிற்றறிவுடையோராய நாம் நமக்கு எது வருவது என்று அறியோம். ஆதலாலும், முன்பிறப்பில் செய்த வினையின் பயன் இது என்று அறியாமையாலும் சின்னாட்பல்பிணிச் சிற்றறிவுடையோராய் நாம்



"அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டி"

"பற்றித் தொடரும் இருவினைப் புண்ணியபாவமுமே"

என்றபடி முயற்சியும் ஊழும் பெரிதும் சம்பந்தம் உடையவை. சம்பந்தம் உடையவை யாயினும்,

"என்செயலால் ஆவது யாதொன்றும் இல்லை இனிச்சிவமே உன்செயலே யென்று உணரப்பெற்றேன்."

"அவனன்றி ஓரணுவும் அசையாது" என்றபடி எல்லாம் அவன் செயலின் வண்ணம் நடக்கும் என்று துணிந்து, உலக அறிவும் நூலறிவுமாகிய இவற்றைத்தக்கோர் பாலுணர்ந்து அவர்சொல்லியவழி அறம்பொருள் இன்பமாய இம்மையின்பயனையும், அதனால் விளையும் மறுமையின் பயனையும் அடையப்பெரிதும் முயற்சிசெய்யும் ஊழினை அடைய, எல்லாம் வல்லவனாய், இறைமைக்குணங்கள் யாவும் உடைய இறைவனாய், பழவினைக் கயிற்றில் பல்லுயிர்ப்பாவை அழகுறநடிக்கத் திருநடம்புரிவோனாய் உள்ளபசுபதியை முக்காலும்தொழுது, அவனடியார் ஓதிய தேவார திருவாசகங்களை ஓதி உணர்ந்து, பஞ்சாக்கரத்தையே மனனஞ்செய்து, பூதி உருத்திராக்கங்களையே பேணியணிந்து ஒழுகுவோமாகவும்.

கிஷ்ணாம்பேட்டை-குப்புச்சாமி.

# ஜீவகாருண்யவொழுக்கம்.

உலகத்தில் உயர் பிறப்பாகிய மனிதப் பிறப்பை பெற்றுக் கொண்டவர்கள் இந்தப் பிறப்பினால் அடையத்தக்க தலைப்பட்ட ஆன்ம இன்பசுகத்தைக் காலமுள்ள பொழுதே விரைந்து அறிந்து அடையவேண்டும். அந்தத்தலைப்பட்ட ஆன்மவின்பவாழ்வு எத்தனைவகையென்றறியவேண்டில், இம்மையின்ப வாழ்வு, மறுமையின்பவாழ்வு, பேரின்பவாழ்வு எனமூன்றுவகையென்று அறிய வேண்டியது.

அவற்றுள் சிறியதேக கரணங்களைப்பெற்றுச் சிறியமுயற்சியால் சிறிய விடயங்களைச் சில நாள் அனுபவிக்கப்படுகின்ற இன்பத்தை இம்மையின்பவாழ்வு என்றறிய வேண்டும். இம்மையின்பலாபமாவது மனிதப்பிறப்பில் தேகத்திலும் கரணங்களிலும் புவனத்திலும் போகங்களிலும் குறைவின்றி நல்லறிவுடையவர்களாய், பசி, பிணி, கொலை, முதலியதடைகளில்லாமல் உறவினர் சிநேகர் அயலார் முதலியருந்தழுவ சந்ததி விளங்கத்தக்க சற்குணமுள்ள மனைவியோடு விடயங்களைச் சில நாள் அனுபவிக்கின்றதை இம்மையின்பலாபமென்றறிய வேண்டும்.

மறுமையின்பமாவது யாதெனில், உயர் பிறப்பில் பெரிய தேககரணங்களைப் பெரியமுயற்சியால் பெரிய விஷயங்களைப் பல நாள் அனுபவிக்கின்ற இன்பத்தை மறுமையின்ப வாழ்வு என்றறிய வேண்டும். மறுமையின்பலாபம எதுவென்னில் உயர் பிறப்பைப்பெற்று இம்மையின்ப லாபத்தைக் குறிக்கப்பட்ட நற்குணங்களெல்லாம் பொருந்த உயர் நிலையில் சுத்தவிடயங்களைப் பல நாளனுபவிக்கின்ற இன்பலாபத்தை மறுமையின்ப லாபமென்றறிய வேண்டும். மறுமையின்ப லாபத்தை யடைந்தவர் பெருமை யாதென்றறிய வேண்டில், அன்பு தயை முதலிய சுபகுணங்களைப் பெற்றுச் சுத்தவிடைய யின்பங்களை எண்ணியபடி தடைபடாமல் முயன்று பல நாளனுபவித்துப் புகழ்பட வாழ்தலென்றறிய வேண்டும்.



பேரின்பமாவது எல்லாத் தேசங்களையும் எல்லாக் கரணங்களையும் எல்லாப்புவனங்களையும் எல்லாப் போகங்களையும் தமது பூரணவியற்கை விளக்கமாகிய அருட்சத்தியின் சந்நிதிவிசேடத்தால் தோன்றிவிளங்க விளக்கஞ் செய்விக்கின்ற பூரணவியல் இயற்கை யுண்மை வடிவினராகிய கடவுளின் பூரணவியற்கை இன்பத்தைப் பெற்று எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் தடைபடாமல் அனுபவிக்கப் படுகின்ற ஒப்பற்ற அந்தப்பெரிய இன்பத்தைப் பேரின்ப வாழ்வென்றறிய வேண்டும். பேரின்ப லாபம்யாதெனின் யாவுந்தாமாய் விளங்குவதே.

இம்மை இன்பத்தை யடைந்தவர் பெருமை யெது வென்றறியவேண்டில், அன்பு, தயை, ஒழுக்கம் அடக்கம், பெருமை, வாய்மை, தூய்மை, முதலிய சுபகுணங்களைப் பெற்று விடயவின்பங்களை வருந்தி முயன்று அனுபவித்துப் புகழ்ப்பட வாழ்தலென்றறிய வேண்டும்.

பேரின்பலாபத்தை யடைந்தவர் பெருமை யெதுவென்றறியவேண்டில், தோல், நரம்பு, என்பு, தசை, இரத்தம், சுக்கிலம், முதலிய அசுத்தபூத காரியங்களும் அவற்றின் காரணங்களாகிய அசுத்த பிரகிருதி அணுக்களுமாகிய தேகத்தை மாற்றி மாற்று இவ்வளவு என்றறியப்படாத உயர்ந்த பொன்னாகிய சுத்தபூதகாரிய தேகத்தையும் பொன்வடிவாகத் தோற்றுதல் மாத்திரமேயன்றி ஆகாயம்போல் பரிசிக்கப்படாத சுத்தபூத காரண தேகத்தையும் தோன்றப்படுதலுமின்றி ஆகாயம்போல விளங்குகின்ற ஞான தேகத்தையும் பெற்றவர்களாயிருப்பார்கள். உள்ளே மண்ணினது திண்மையால் தறிக்கப்படார்கள். புறத்தே மண் கல் முதலிய வற்றால் எறியினும் அவை அவர்வடிவில் தாக்குவனவல்ல. உள்ளே நீரினது தண்மையால் குளிரப்படார்கள். புறத்தே நீரிலழுத்தினும் அவர் வடிவம் அழுந்தாது. உள்ளே நெருப்பினது வெம்மையால் சுடப்படார்கள். புறத்தே நெருப்பிற் சுடினும் அவர் தேகத்தில் சூடும் வடிவும் தோன்றுவனவல்ல.

உள்ளே காற்றினது ஊக்கத்தால் அசைக்கப் படார்கள். புறத்தே காற்று அவர் வடிவைப் பரிசித்தசைக்கமாட்டாது. உள்ளே ஆகாயத்தினது கலப்பினால் அந்தரிக்கப்படார்கள். புறத்தே ஆகாயம் அவர் தேகத்தை அந்தரிக்கமாட்டாது. ஆதாரத்திலன்றி நிராதாரத்திலும் அவர் தேகம் உலாவும், அவரது கண்கள் முதலிய கரணேந்திரியங்களும் வாக்குமுதலிய கர்மேந்திரியங்களும் பார்த்தல்முதலிய விஷயங்களையும் பேசுதல் முதலிய விஷயங்களையும் பற்றுவனவல்ல.

தயையினால் விஷயங்களைப் பற்றவேண்டில் சுவர், மலைமுதலிய தடைகளும் அவர்கண்களை மறைப்பனவல்ல. அண்டபிண்டங்களில் அகம்புறமுதலிய எவ்விடத்துமுள்ள விடயங்களை அவர் கண்கள் இருந்தவிடத்திருந்தே கண்டறியும். அண்டபிண்டங்க ளெவ்விடத்திருந்து பேசினும் அவர் செவிகள் இருந்தவிடத்திருந்தே கேட்டறியும். எவ்விடத்திலிருக்கின்ற ரசங்களையும் அவர் நா இருந்த விடத்திருந்தே சுவைத்தறியும். எவ்விடத்திருக்கின்ற பரிசங்களையும் அவர்மெய் இருந்தவிடத்திருந்தே பரிசித்தறியும். எவ்விடத்திருந்தே முகந்தறியும். எவ்விடத்திலிருக்கின்றவர்களுக்கும் அவரதுகைகள் இருந்தவிடத்திருந்தே கொடுத்தல் கூடும், எவ்விடத்திலும் அவரது கால்கள் இருந்த விடத்திருந்தே நடத்தல் கூடும். அவரதுவாக்கு எவ்விடத்தி லிருக்கின்ற எவ்வெவர்களோடும் இருந்தவிடத்திருந்தே பேசுதல்கூடும். மற்ற இந்திரியங்கள் இருந்தவிடத்திருந்தே எவ்விடத்தும் ஆனந்தித்தல் கூடும். அவரது மனமுதலான கரணங்கள் எப்படிப்பட்ட விஷயங்களையும் பற்றுவனவல்ல. தயவினால் பற்றத்தொடங்கில் எல்லாவுயிர்களினது எல்லாச் சங்கற்ப விகற்பங்களையும் ஒரு நிமிடத்தில் ஒருங்கே நினைத்து விசாரித்து நிச்சயித்துக்கொள்ளும். அவரறிவு ஒன்றையும் சுட்டியறியாது தயவினால் சுட்டியறியத் தொடங்கில் எல்லா அண்டங்களையும் எல்லாவுயிர்களையும் எல்லாப் பண்புகளையும் எல்லாவனுபவங்களையும் எல்லாப் பயன்களையும் ஒருங்கே ஒரு நிமிடத்தில் சுட்டியறியும். அவர்கள் நிர்க்குணத்தராவார்கள். அல்லது சாத்துவிக தாமச இராசத முதலிய முக்குணங்களாலும் உள்ளே விகா



ரப்படார்கள். புறத்தே அவரது குணங்கள் கரணங்களைப் பற்றுவனவல்ல. உள்ளே பிரகிருதியினால் மூடப்படார்கள். புறத்தே அவரது பிரகிருதிகுணங்களைப் பற்றுவனவல்ல. உள்ளே காலதத்துவத்தால் வேற்றுமைப்படார்கள். புறத்தேகாலத்தால் அவரது திருமேனி தடைபடாது. உள்ளே நியதி அளவால் அளக்கப்படார்கள். புறத்தே நியதியால் அவரது திருமேனியரைபடாது. அன்றிக்காலம் வித்தை, ராகம், புருடன்முதலிய மற்றை தத்துவங்களும் தத்துவகாரியங்களும் அவர்களுக்கில்லை. மாயையால் பேதப்படார்கள். சுத்தமகாமாயைக் கடந்து அதன்மேலறிவுருவாக விளங்குவார்கள். ஆகாரம், நித்திரை, மைதுனம், பயம் என்பவைகளால் தடைபடார்கள். அவர்கள் தேகத்திற்குச் சாயை, வியர்வை, அழுக்கு, நரை, திரை, மூப்பு இறப்பு, முதலியகுற்றங்கள் உண்டாவனவல்ல. பனி, மழை, இடி, வெயில்முதலியவற்றாலும், தேவர் முனிவர் மனிதர், நரகர், மிருகம், பறவை, ஊர்வன, தாபரம், என்பவைகளாலும் எவ்விடத்தும் எக்காலத்தும் அவர் தேகம் வாதிக்கப்படாது. வாள், கத்தி முதலிய கருவிகளாலும் கண்டிக்கப்படாது. எல்லா அண்டங்களும் அணுக்கள்போலச் சிறிதாகத்தோற்றிலும் எல்லா அணுக்களும் அண்டங்கள் போலப் பெரிதாகத் தோற்றிலும் அவர்தேகத்திற்கு உரித்து. இறந்தோரை யெழுப்புதல் வாற்த்தீபரை வாலிபராக்கல் முதலிய கருமசித்திகளும் யோகசித்திகளும் ஞானசித்திகளும் அவர் சந்நிதியில் விளங்கும்.

இது வடலூர் இராமலிங்கஸ்வாமிகள் எழுதிவைத்திருந்த குறிப்பினுட் கண்டது.

(இன்னும் வரும்.)

காஞ்சி—நாகலிங்க முதலியார். F.M.T.S.,

---

# ஸ்ரீ பர்வதம்.

"Ruskin (ரஸ்கின்) எனும் பெரியோர் எனக்குச் சொல்லியிருக்கிறார், ஆல்ப்ஸ் (the Alps) என்னும் மலையுச்சியை அடைந்தபோதெல்லாம் அவர் தோத்திரம் பண்ணுவதாக. அந்த உன்னத காட்சிகளில் சந்தடியில்லாத ஒரு மூலையிலுட்கார்ந்து முழங்காலிட்டுத் துதிப்பர். கடவுளை அவரது சிருஷ்டிப் பொருளாகிய ஆல்ப்ஸ்மலையைப் புகழ்ந்து அவரைத் துதிப்பர்."

ஓங்கிவிளங்கா நின்ற கடவுளுக்கு மிக உயரமான மலைச்சிகரங்களிலும் வெகு கம்பீரமான குன்றுகளின் மேலும் வழிபாட்டிற்காக கோயில்கள் கட்டுவதான நம்மவருள் பரவியிருக்கும் கோட்பாட்டை மேற்குறித்த அரியவாக்கியம் தெளிவாக விளக்குகிறது. இக்குன்றுகள் எவ்வளவு அணுக ஒண்ணாதவையாயும் ஏறுவதற்கு கஷ்டமாயும் இருக்கின்றனவோ அவ்வளவு மகிமை அதிகமுள்ளதாக ஜனங்கள் கொண்டாடுகிறார்கள். இந்த யாத்திரைகளில் அதிக மெய்வருத்தம், உழைப்பு, பொறுமை, பணச்செலவு முதலியன உண்டாகக் காண்கின்றோம். வைராக்கிய மிகுந்த பக்தி இவர்களைத் தூண்டாவிடின் இக்குணங்கள் வெளித்தோன்றாது. பூமியின் கம்பீரமான காட்சிகளும் மனதை வசீகரிக்கும். இத்தகைய குன்றுகளை அடைகிறபோது காணப்படும் உயர்ச்சியும், மனப்பற்றுவீக்கமும், புனிதமும் அழகும், பயமும் சொல்ல முடியாது. ஆயினும் வித்வான்கள் இமாலயம், பிளாங்க்மலையில் (Mount Blanc) காணப்படும் சூரியோதய சூரியாஸ்தமனங்களைப் பற்றி வர்ணித்துள்ளார்கள். அத்தகைய காட்சிகளைக் கண்ணுறும் பொழுது ஒவ்வொருவரும் உள்ளன்பினாலே

"சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற்பணை முலை மடந்தை
பாதியே, பரனே பால்கொள் வெண்ணீற்றாய்
பங்கயத் தயனுமாலறியா—நீதியே
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே"

என்று கதற வேண்டியதே.



சிவலிங்கமானது அதன் உற்பத்தியில் உள்ளபடியே மலைச்சிகரமேயாகும். ஜியூஸ் (Jews) ரோமதேசத்தார் ஆகிய இவர்களுள்ளும் மலைச்சிரங்களில் கடவுளைவழி படும்வழக்க முள்ளது. மோஸஸ் என்பவருக்கு இடியும் மின்னலும் கூடிய மேகங்களோடு கடவுள் மலைச்சிரங்களின் மீது அக்கினி உருவமாகத் தோன்றினர். இது கிரீசன் கபர்டின் என்று கூறப்படும் சிவபெருமானின் உண்மை லக்ஷணமே. இந்தியாவிலுள்ள உன்னதசிகரங்களில் தொன்று தொட்டு சிவபெருமானையும் பார்வதிதேவியாரையும் இமயமலை, விந்தகிரி, மேற்குத் தொடர்ச்சிமலை நடுத் தொடர்ச்சிமலை, கிழக்குத் தொடர்ச்சிமலை மைநாக முதலியவைகளில் பூஜித்துவந்தார்கள். இவைகளெல்லாவற்றுள்ளும் கைலையங்கிரி மிகப் புண்ணியகிரி. அப்பர்சுவாமிகளும் கைலையங்கிரியை பூமியின் மீது காணாது போய்விட்டாரெனின், இக்கைலையங்கிரி மண்ணுருவமானதல்ல என்றும், மனிதன் தன் உயர்ந்த நிலைக்குரிய புத்தி விசேடம், ஒழுக்க விசேடம், ஆன்ம விசேடம் அடைந்து இவன் பெருமையைக் காட்டும் அகங்காரத்தை ஒழித்தபிறகு, என்ஞான்றும் நிலைதலான தெளிவும், அழகும், ஆனந்தமும் கூடிய பேரின்ப வீட்டைச் சத்தியமாய் அடைவன் என்றும் துணியலாம். ஆயினும் சிலர் இப்பேரின்ப வீட்டை இக்குன்று அச்சிகரம் அம்மலை என்றும் குறிப்பாக யாழ்ப்பாணத்துள்ள மைனாகமலையையும், திரசிரபுரத்துள்ள பாறையையும், காளத்திமலையையும், ஸ்ரீ பர்வதத்தையும், இமயமலையையும் காட்டுகிறார்கள். இதன்கருத்து வருமாறு. திடீரென மனிதன் பரமசாம்ராஜ்ஜியத்தை அடையமுடியாது. தான் கொஞ்சம் கொஞ்சமாய் ஏறவேண்டும்; படிப்படியாய் உணரவேண்டும்; ஒவ்வொருபடியையும் அந்த நிலையில் யாவையினும் விசேடமுள்ளதாக மதிக்கவேண்டும். இதுவரையும் அடைந்தபடி நிலைகளைக் கண்டிக்காமலும், இவைகள் எல்லாவற்றுள்ளும் உயர்ந்தோங்கும் ராஜபடியை அடையும் வரையும் மேன்மேல் அடையவேண்டியபடிகளாகிய (சாதனங்களை) சதாநோக்கியே செல்லவேண்டும்.

இக்குன்று ஆலயங்களுள் ஸ்ரீசைலம், ஸ்ரீபர்வதம், ஸ்ரீ மல்லிகார்ச்சுனம், மஹாநந்தி என்று வழங்கும் குன்றே மிகச்சிறக்

தது. இதன் அருமையை, பர்வதம் எனும் சிறப்பாக அமைந்தபெயரே புலப்படுத்தும். அதன் பெருந்தோற்றத்தாலிப் பெயர் எய்தியது. மற்றமலைகளுக்கு வேறு வேறு பெயர்கள் உண்டு தென்னாட்டிலுள்ள குன்றுகளைவிட இதை அடைவதற்கு பெரும் பிரயாசை உண்டு. மிகக் கம்பீரமான காட்சிகளையும் காட்டுகிறது. இம்மஹாசந்நிதானத்தை கட்டுவதிலும் அணிபெறச் செய்வதிலும் பூர்வீகராஜக்களும் ஜனங்களும் தங்கள் கஷ்டத்தையும் பொருளையும் செலுத்தினார்கள். அவர்கள் சந்ததியார்கள் இச்சிறந்த ஆலயம் இலமாய்ப்போவதை தற்காலம் கவனிக்கிறதில்லை. சாதரணமாய் தென் நாட்டார்க்கு சைவசமயாசாரியர்களாவது ஆள்வார்களாவதுசென்ற ஆலயங்களேமகிமையுள்ளனவாம். ஸ்ரீசைலம் அப்பர் சுந்தரர், சம்பந்தர் ஆகிய மூவராலும் தேவாரத்தில் பாடப்பெற்றது. இந்த ஸ்தலம் ஸ்ரீ பருப்பதம் என்று அழைக்கப்படும் அவர்கள் பாசுரங்களில். ஸ்ரீ பர்வதம் என்பது ஸ்ரீ பருப்பதம் என்று தமிழ்ல் வழங்கியது. இந்த ஸ்தலத்திற்கு ஆண்டு சுற்றுப்பக்கங்களில் இன்னும் ஸ்ரீ சைலம் மல்லிகார்ச்சுனம் என்பதைவிட இப்பெயரே வழங்குகிறது.

(இன்னும் வரும்.)

J. M. N.

---

## இலிங்கம். (Symbolism).

"கிரியைகளில் மிகவும் முக்கியமாய் நாம் அறியவேண்டியதாயுள்ளது அவைகள் உணர்த்தும் உட்பொருளேயாம்". (விகி-சீனர் கிரியா சாஸ்திரம்).

"இலிங்கம் உண்மையை பகிர்முகப்படுத்தி விளக்குவதற் குபாயம். செவியினால் உணர்த்தப்படும் ஞானத்தைவிட கட்புலனால் உணர்த்தப்படும் ஞானம் மிகவும் வலிமையுடையது". (பிஷப் வெல்டன்).

"இலிங்கம் பொருளை விளக்கவந்த ஒரு குறியாம். முழுவதையும், ஒரு பகுப்பினாலாவது, உன்னதமானதை, தாழ்ந்ததினாலாவது விளக்கத்தகும்". (கோல்ரிட்ஜ் கவி).

## சமாசாரங்கள்.

---

### மாத்தளை விவேகானந்த சபை.

இப்பெயருடன், இலங்கைமாதீவின் மத்தியபுரியாகிய கண்டிமாநகரைச் சார்ந்த மாத்தளை என்னும் இடத்தில் இந்துசமயாபிமான சிலர்கள் பலர்சேர்ந்து ஒருசபை ஸ்தாபித்து நடாத்திவருகின்றார்கள்.

இச்சபைக்கு யாழ்ப்பாணம் வித்துவசிரோமணி ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப் புலவரவர்கள் மாணாக்கரும், தமிழ்ப்பண்டிதருமாகிய பிரமஸ்ரீ. வ. மு. இரத்திநேசுவ ரய்யரவர்கள் பிரசாரகராக நியமிக்கப்பட்டுப் பிரசங்கஞ் செய்துவருகின்றார்கள்.

இலக்கண இலக்கிய பாடங்களையும், சமயசாஸ்திரங்களையும் கற்பிக்கும்படி வகுப்புகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. பெரிய புராண படனமும் வாரமொருமுறை நடக்கின்றது.

சைவசமய விர்த்திக்கான அருஞ்செயல்களைச் செய்துவரும் ஸ்ரீமாந். இராசநாயகம்பிள்ளை, முதலியார் ஸ்ரீமாந். கா. அரியநாயகம்பிள்ளை, (நியாய துரந்தரர்) ஸ்ரீமாந். பொ. செல்லையபிள்ளை முநிசிப்பாலிட்டி 2-வது) முதலிய பிரபுக்களும், சபையும் நீடூழி வாழ்க. சபையினங்கத்தோரும் செழித்து வாழ்வடைக. சுபம்.

---

சென்னை இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபை:—இச்சபையின் 8-வது ஆண்டின் நிறைவுவிழா ஷை பேட்டை பெரியபாளையத்தம்மன் கோயில் மஹாமண்டபத்தில் 1913ஞ ஜனவரிமீ 12உ ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது. எல்லாச் சாதியாரும் எல்லாச் சமயத்தாரும் சபையாரால் வரவழைக்கப்பட்டனர். ஸ்ரீமான். J. M. நல்லசாமிபிள்ளை அவர்கள் B.A.B.L., அக்கிராசனராக வீற்றிருந்தனர். சைவசித்தாந்த மஹாசமாஜத்தின் காரியதரிசி ஸ்ரீமான். கி. குப்புச்சாமி முதலியார் அவர்கள் "நாயன்மார் பெருமை" என்னும் விஷயத்தை யாவரும் இன்புறும்படி ஆன்றோர் அடியவர்களை வியந்து போற்றிய பிரமாணங்களைக் காட்டி இனிது விளக்கினர். ஸ்ரீமான். சித்தாந்தசரபம் அஷ்

டாவதானம் பூவை. கலியாணசுந்தரமுதலியார் அவர்கள் "பகவத்கீதை" சைவசித்தாந்திகளுக் குரியதென்றும், பதி பசு பாசம் என்னும் முப்பொருளுண்மை அதனிடத்துக் காணப்படுகிறதென்றும், வாமதேவர் இந்திரன் முதலியோர் சிவோகம்பாவனையில் எல்லாம் யானே என்று மொழிந்ததுபோல் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியும் யானே எல்லாமாயினேன் என்று கூறியருளினரென்றும் பலவித நியாயங்களைக்காட்டி யாவருக்கும் உள்ளத்திற்பதியும்படி இனிது விளக்கினர். சென்னைச் சிவனடியார் திருக்கூட்டக் காரியதரிசி ஸ்ரீமான். இ. ஆதிமூலமுதலியார் அடியவர்களுடைய அன்பின் பெருமையையும், எல்லாச்சாதியாரிடத்தும் சமயவிஷயத்தில் அபேதமாயிருத்தல் வேண்டுமென்பதையும், அங்ஙனம் இல்லாமலிருத்தலினால் தான் சைவசமயம் நாளுக்கு நாள்குன்றி வருகிறதென்பதையும், சமயக்கல்வி நம்முடைய சிறுவர் சிறுமியர்களுக்குப் போதிக்கவேண்டியது அவசியகமென்பதையும, தற்காலத்தில் வீதிகளிலுள்ள திண்ணைப்பள்ளிக் கூடங்களில் உபாத்திமார்கள் பிள்ளைகளுக்குத் தமிழ்மறையோதுவித்தலுடன் இயன்றமட்டும் சமயபோதனை செய்யவேண்டுமென்பதையும் தான் சமயத்துக்காக உழைத்துவரும் அன்பைக்காட்டி உபந்நியசித்தனர். முடிவில் அக்கிராசனர் அவர்கள் உபந்நியாசகர்கள் மொழிந்த விஷயங்களைத்தழுவி, பகவத்கீதையைப்பற்றிச் சிலமேதாவிகள் சொல்லும் அபிப்பிராயங்களையெல்லாம் விவரமாக விளக்கி நீண்டதோர் அரிய இனிய பிரசங்கஞ்செய்தனர். அன்று பேசிய ஒவ்வொருவரும் சைவசமயக்குறைபாடுகளையெல்லாம் நீக்க இப்போது நடைபெற்று வரும் சைவசித்தாந்த மஹாசமாஜத்தால் கூடுமென்றும், ஆனால் அதில் எல்லாரும் அங்கத்தவர்களாய்ச் சேர்ந்து ஆதரித்தல் அவசியமென்றும் கேட்போருளத்திற் பதியும்படி உரைத்தனர்.

---

1913 ௵ ஜனவரி ௴ 26உ ஞாயிற்றுக்கிழமை சென்னைத் திருவல்லிக்கேணி சிவனடியார் திருக்கூட்டத்தினர், தமது மூன்றாவது வருடத்திய நிறைவினைத் திருவேட்டுநாதர் ஆலயத்தில் நடத்தினர். அன்று ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் அக்கிராசனத்தின்கீழ் ஸ்ரீமான். ஜெ. எம். நல்லசாமிபிள்ளை



யவர்கள் "அத்வைதம்" என்னும் விஷயமும் ஸ்ரீமான். ச. சச்சிதானந்தம்பிள்ளையவர்கள் B.A., அன்பு என்னும் விஷயமும், சித்தாந்த சரபம் அஷ்டாவதானம் பூவை. கலியாணசுந்தரமுதலியார் அவர்கள், "பகவத்கீதை" என்னும் விஷயமும் உபந்நியாசித்தார்கள். அக்கிராசனர். மேற்கூறிய மூன்று உபந்நியாசங்களையும நன்றாக விளக்கியதோடு பகவத்கீதை வங்காளத்தில் உள்ள சிலர்க்கு ஒப்பேயில்லையென்றும், அவ்வாறு ஒப்புக் கொள்ளினும் ஸ்ரீ கிருஷ்ணபகவான் தமது சிவதீக்கையுடன் கூறிய அக்கீதை சிவபரத்துவத்தைப் போதிப்பதாகும் என்றும் கூறிமுடித்தனர்.

---

1913ம் வருடம் ஜனவரி ௴ 30உ சென்னைத் திருநீலகண்டபுரத்தினர், தாம் வழக்கமாகச் செய்துவரும் திருநீலகண்ட நாயனார் திருநட்சத்திரத்தினை திருமயிலைக் கபாலீச்சுரர் திருவாலயத்தில் நடத்தினர். அது சம்பந்தமாக வன்னியசத்திரத்தில் அன்று மாலை ஸ்ரீமத் சுவாமி வேதாசலம் அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் தூத்துக்குடி ஸ்ரீமான். வித்வான் சிவகுருநாதபிள்ளை, "சிவஅருட்கோலமகிமை என்னும் விஷயத்தினை சித்தாந்த சாத்திரத்தை மேற்கொண்டு அமைதியுடன் உபந்நியாசித்தனர். பின்னர் அக்கிராசனர் சுவாமி வேதாசலம் அவர்கள் திருநீலகண்ட நாயனார் சரித்திர உள்ளுரையை விரித்துக்கூறுவதாக எடுத்துக்கொண்டு திருநீலகண்ட நாயனார் சரிதத்தை ஆங்காங்கு விளக்கிவந்ததுடன். "நீலகண்டம்" என்னும் விஷயத்தை நம்பெரியோர் பாற்கடல் கடைந்துவந்த விஷத்தினை தேவ அசுரர்கள் தாங்கமுடியாமையால் சிவபெருமான் அதை உழுந்தளவாக்கித் திருவமுதுசெய்து தங்கண்டத்தில் இருத்தினர் என்று கூறினும், உண்மை நோக்கின், பாற்கடல் என்பது தேகம் என்றும், தேவ அசுரர்கள் இருத்திய ஆமை மூலக்கிழங்கென்றும், மந்தரமலை சுழுமுனையென்றும் மேல் நிறுத்திய சந்திரன் சந்திரகலையென்றும், ஓங்காரமே வாசுகி யென்றும் அதிற்பிறந்த விஷமே ஆணவமலம் என்றும், உண்டதாகிய விஷம் ஆணவமலமே யென்றும், சிவபெருமான் உத்திரவன்றியில் செய்ததால் விஷம் உண்டானதென்பது பத்தியில்லாது செய்த காரியம் என்றும்" கூறினர்.

சித்தாந்த சைவர்கள் இதனை யறிய வேண்டியே இவ்விடயத்தை இங்கெழுதலானேன்.

இங்ஙனம்,

கி. குப்புச்சாமி, காரியதரிசி.

## புத்தகவரவு.

திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை:—இந்நூல் எழுகரைநாட்டு நம்
பியென விருதுநாமம்பூண்ட சதாசிவபண்டிதரியற்றியது. இந்நூலைத்திரு
ச்செங்கோட்டு விவேக திவாகரன் பத்திராதிபரான அஷ்டாவதானம் முத்
துசாமி கோனாரவர்கள் பார்வையிட்டு, ஆனரெரிமேஜிஸ்ரேட் கொக்கரா
யன் பேட்டை மிட்டாஜமின்தார் ஸ்ரீமாந். N. தண்டிகை வேலகவுண்
டர் அவர்கள். பொருளுதவியால் அச்சிட்டனர். இது ஷை. திவ்வியதலத்
தில்.பண்டைய காலமுதல்பற்பல தருமவான்களால் இன்னின்ன திருப்ப
ணிகள் செய்யப்பெற்றன வென்பதைச் செய்யுள் ரூபமாகவமைத்துப்பாடப்
பெற்றுள்ளது. இதனால் பலராஜாக்களின் துரைத்தனகால முதலிய தெ
ரிந்து கொள்ள வேதுவாக விருக்கிறது. தற்காலத்திலிது வேண்டிய சிற
ந்த நூலேயாம். இதன் விலை அணு 8.

---

குருநாத சுவாமிகிள்ளைவிடுதூது:—இந்நூல் யாழ்ப்பாணத்துக் காங்
கேயன்றுறையைச்சார்ந்த கண்ணிட்வளை குருநாத சுவாமியின்மீது பாடி
யது. இஃதியற்றினோர் சிவராத்திரி புராணம், ஏகாதசிபுராணமுதலியவிய
ற்றியுள்ள வரகவிப்புலமை சுன்னாகம் வரதராஜபண்டிதர். உடுவிற்பதி உபா
த்தியாயர் வ. மு. இரத்தினேசுவர ஐயரால் பரிசோதித்து அச்சிடப்பட்டுள்
ளது. இது சொன்னயம் பொருணயம் தொடைநயம் அமைந்துள்ள கலி
வெண்பாவாலாகியது.

---

சங்கீதசத்சம்பிரதாய தீபிகை:—இதில் முதற்பதும்ம் இரண்டாவது
இதழ்வரப்பெற்றோம். இது சென்னை இந்துசங்கீத பாடசாலைத்தலைமை
உபாத்தியாயர் சேட்டலூர்—வி—அரங்கசாமி ஐயங்கார் M.S.V.M.S., அவ
ர்களால் வெளிப்படுத்தப்பட்டுவருகிறது. இதில் சங்கீதசாகரசாரித்ய சர்
வார்த்த சாரசங்க்ரங்களுமடங்கியுள்ளது. அதாவது தியாக அய்யரவர்கள்
பல்லவிதுரைசாமி அய்யரவர்கள், தீட்சிதரவர்கள், சாமாசாஸ்திரிகள், சுப்
பராமசாஸ்திரிகள், பட்டணம் சுப்ரமண்ய அய்யரவர்கள், சதாசிவராவ்,
கெர்ப்புரி, தர்மபுரிமுதலான பெரியோர்களின் க்ருதிகள் பதவுரையுடனும்
டாயம், ப்ரயந்தம் சூளாதிகளுடள்பட 800ம், தானவர்ணம் சவுக்கவர்ணம்
முதலியன 100ம் ஸ்வரஜாதிகள் கர்ணாடிக சுலோகங்கள் அஷ்டபதிகள்,
தேவாரம், திருவாசகம், திருவட்பா, தாயுமானவர், ராகமாலிகை, தில்
லானா, பதம், ஜாவளி, இந்துஸ்தானி, பார்சி, முதலிய சாகித்தியங்களுக்
கும் பஞ்சதசமங்களுடன் பிறருதவியில்லாமலே அதிக சுலபமாகத் தெரி
ந்துகொள்ளும்படி பதிப்பித்து மாதம்மாதம் பிரசுரமாக்கிவருகிறது. இதில்
வர்த்தமானங்களுமெழுதப்பட்டு வருகிறது. வருஷசந்தா ரூபா. 3—0—0.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ௨.] 1913-ஞு மார்ச்சுமீ [பகுதி ௧.

## பஞ்சபிரம்மோபநிஷத்.

ஓம் பின்னர், அணுதிதொட்டு நிலையாக நிற்பது எது வெ
னப்பகவானை நோக்கிப் பிப்பலாதமுனிவர் கேட்டனர்.

2. சத்யோஜாதம், பகவானே அஃதென்ன? அகோரம்,
பகவானே அஃதென்ன? வாமதேவம், பகவானே அவையென்ன
தத்புருஷம், பகவானே இவையென்ன? எல்லாவித்தைகட்கும்
தேசிகனுகிய ஈசானம்.

3. அவர்பூதபவுஷியங்கட்கும் ஈசானனுயிருக்கிறார்.

4. எல்லா இரகசியங்கட்கும், எல்லாதேவர்கட்கும் அவை
களின் எவ்வகையான நிறங்கட்கும், பாகுபாடுகட்கும், முயற்
சிகட்கும் பிரபுவாகிய மகேச்சுரரே கதி.

5. மகாதேவருக்கும், மகாருத்திரருக்கும் நமஸ்காரம்.

6. ஓ சகலனே! உலகில் எவ்வகையான இரகசியங்கட்கும்
இரகசியமானவற்றை என்னிடம் கேள்.

7. சத்யோஜாதம், இது விரும்புகின்ற எல்லாவற்றையும்
அது கொடுக்கிறது. அது பூமி, பூஷா (சூரியன்), இலட்சுமி,
பிரமா, திரிவிருத்ஸ்வர (சப்தம்), இருக்குவேதம், காருகபத்
யம், ஏழு சுரமுள்ள மந்திரங்கள், பீதநிறம், கிரியாசக்தி இவை
களைக்குறிக்கிறது.

8. அகோரம், அது எல்லாப்பாவங்களின் திரள்களையும்
அழிக்கிறது, அது துன்பங்களையெல்லாம் சாந்தப்படுத்துகி
றது, எல்லாசெல்வங்களையுங் கொடுக்கிறது, அது ஜலம், சந்தி

ரன், கௌரி, எஜுர்வேதம், மேகநிறம், சாந்தரேஸ்வரம், தட்சணாக்னி, ஐம்பது அசைகளுடன் கூடிய மந்திரங்கள், இரட்சிப்பு, இச்சாசத்தி இவைகளைக்குறிக்கிறது.

9. வாமதேவம், அது பெருஞானத்தைக் கொடுக்கிறது. அக்னி, வித்யாகலை, சாமவேதம், எட்டுக்கானங்களையுடைய சுரம், தீரஸ்வரம், ஆகவனீயம், அறிவு, விஞ்ஞானம், முயற்சி இருள் கலந்த வெண்மைநிறம் இவைகளைக்குறிக்கிறது. அவர் ஜோதி கோடி சூரியர்களுக்குச் சமமாகவிருக்கிறது, முழுசைதன்னியராய் மூவகைநிலைமைக்கும் தலைவராக விருக்கிறார், மனிதர்கட்கு எல்லாசெய்கைகளின் பலன்களைத் தக்கவாறு கொடுக்கிறார். மூவகை சைதன்னியங்களாய் விளங்குகிறார், அவர்கட்கு எல்லாபாக்கியத்தையு மளிக்கிறார். அவர் மந்திரம் எட்டசைகளுடன் கூடியது. (இதயமாகிய) எட்டிதழ் தாமரைமத்தியில் விளங்குகிறார்.

10. தத்புருஷம், அவர் காற்றினையும், பஞ்சாக்கினியையுமுடையவரா யிருக்கிறார். மந்திரங்களின் சத்திகளை நடத்துகிறார், அவர் ஐம்பது அட்சரங்களையும் அவற்றின் சுரங்களையும், அதர்வவேதத்தையும் உடையவராயிருக்கிறார், கோடிஞானங்கட்குத் தலைவராகவிருக்கிறார், அவர்மேனி எல்லாவுலகுமாம், அவரது நிறம் விரும்புகிற கோரிக்கைகளை முடிக்கிறசிகப்பு, எல்லாவகையான நோய்கட்கும் சர்வரோக அவுஷதமாக விருக்கிறார், சிருஷ்டிதிதிசம்மாரமுதலியவைகட்குக் காரணமாகவிருக்கிறார், சர்வசத்திமானாகவிருக்கிறார், மூவகைசைதன்ய நிலைகட்கு மேற்பட்டிருக்கிறார், அவர்காலாவது (சதுர்த்தம்), சத்தாய், சைதன்னியராய், கருணையாகவே யிருக்கிறார், பிரமன் விஷ்ணு முதலியவர்களால் வணங்கப்படுகிறார், எல்லாருக்கும் பரமபிதா.

11. ஈசானம் பரமாதிகாரியெனவும், எல்லா அறிவினுக்கும் சாட்சியெனவும் தெரிந்துகொள்ள வேண்டியது, அவர் ஆகாயம், அவதரிப்பவரல்லர், ஓங்காரசுரத்தால் துதிக்கப்படுபவர், சாந்தாதீதர், அகாரத்திலேயும், இதரசுரங்களிலேயு மாதிக்கமுடைய தேவமூர்த்தி, அவர்மேனி ஆகாயமே, பஞ்சகிருத்தியங்கட்குங் காரணர், பஞ்சபிரமங்களின் பெரிய உருவத்திலு



ள்ள ஐந்துகாரியங்கட்குக் காரணராகவிருந்து அவற்றின் மேற்பட்டுமிருக்கிறார், அவரிடத்துள்ள மாயையால் எல்லா அவதாரங்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டு அவர்மாத்திர மிருக்கிறார், பஞ்சபிரமங்களில் ஊடுருவிப்பாய்ந்த அவர்சொந்த ஜோதியால் எப்போதும் பிரகாசிக்கிறார். ஒரு ஆதாரமின்றி முக்காலத்திலும் அவரே விளங்குகின்றார்.

12. மகாதேவராயும், உலககுருவாயும், காரணங்கட்கெல்லாம் காரணமாகவுள்ள சம்புவின் மாயையால் கலக்குண்டு எல்லாத்தேவர்களும் அவருண்மையைத் தெரிந்துகொள்ளுவதில்லை.

13. அவர் ஆகிருதி ஒருவர் முன்னில்லாது, உயர்வுக்கெல்லாமுயர்வானவர், உலகத்திற்கும், புருஷனுக்கும் ஆதாரமாயிருக்கிறார், அவரிடத்தில் உலகமுண்டாகிறது, அவரிடத்தில் உலகம் ஒடுங்குகிறது, பிரமம், சாந்தர், அவர் பரமோட்சவிட்டினர், அந்தப் பிரம்மம் நானே.

14. சத்தியோஜாதமும், மற்றவையும் மகாபஞ்சபிரம்மமென அறியவேண்டியது, இது ஒரு பிரமத்தின் பகுதிகள். ஒன்றேயைந்தெனத்தெரிந்து கொண்டவர் ஈசானத்தையடைகிறார், பஞ்சபிரமங்களினுருவமாக விருக்கிற எல்லாவற்றிலும் நானே இருக்கிறேனெனவறிகிற வறிஞன் பிரமத்தையடைந்து நித்தியனாயிருக்கிறான், அவன் மலத்தினின்றும் விடுபடுகிறான், இதற்குச் சந்தேகமில்லை.

15. சம்பு பஞ்சாட்சர சொரூபியாக விருக்கிறார், அவர் பரபிரம்மம், நகாரமுதல்யகாரயீறாயுள்ளது பஞ்சாட்சரமெனத் தெரிந்துகொண்டு ஜெபிக்கவேண்டியது.

16. பஞ்சபிரமங்களின் இயற்கை பஞ்சாட்சரமென ஒருவன் உலகத்தையனுபவிக்க வேண்டியது.

17. பக்தியுடன் பஞ்சபிரமத்தைத் தியானிக்கிறவன் பஞ்சபிரம்ம நிலையையடைந்து பஞ்சபிரம்மமாக விளங்குகிறான்.

18. இந்தப் பிரகாரம் மகாதேவர் மகானாகியகாலவனைப் பார்த்துக்கூறி அவனையாசீர்வதித்து மறைந்தனர்.

19. ஓ சகலா! முன்னம் கேட்கப்படாதனவும், நினைக்கப்படாதனவும் தெரிந்தன, ஓ கவுதமா! பூமியின் ஒரு பாகத்தை

மாத்திரம் அறிவதினாலேயே அது காரியம், அதுகாரணத்திற்கு அன்னியமல்ல, ஒருலோகத்தாலாகிய ஆபரணத்தைப் பார்த்ததினாலேயே மற்றைய லோகங்களாக்கப்பட்ட ஆபரணங்கள் காரியமெனத்தெரிகிறது, ஒரு இரும்பினாற் செய்யப்பட்ட மற்றையகருவிகள் காரியமெனத்தெரிகிறது, ஆகலின் காரணத்திலிருந்து அதன் சுபாவம் வேறாயிருத்தலினாலேயாம். அவ்வாறே காரணம் காரியத்தினின்றும் வேறல்ல, காரியமானது அதன் காரணரூபத்தில் எப்போதும் நிலைபேறுடையதாகிறது, காரணகாரியம் வேறென்பது உண்மையாகவேதவறு, காரணமொன்றே, அதினின்றுமவன் வேறானவனுமல்ல, காரணகாரியங்கட்கு உட்பட்டவனுமல்ல, வேற்றுமையுடைய காரணத்தைக்கண்டு பிடிப்பது கூடாமையாலே வேறென்பதுதவறு, ஆகையினால் காரணமொன்றே அது நித்தியம் இரண்டாவதில்லை, இரண்டாவதல்லாத காரணமேசைதன்னியம்.

20. ஓ முனிவனே! தாமரைபோன்ற ஒருசிறுவீடு (தேகமாகிய) பிரமபட்டினத்திற் காணப்படுகிறது, அதன்மத்தியில் தகராகாஸமிருக்கிறது, அது சத்து சித்து ஆனந்தம், அவர் முத்திவிரும்புவார் யாவராலும் தேடப்பட்டவர், யாதொருவித்தியாசமின்றி அவர் இருதயகுகையில் வசித்தலினால் சிவன் சம்சாரத்தினின்றும் விடுவிக்கிற இருதயனெனப்படுவன். இங்ஙனம் உபநிஷத்முடிந்தது.

மணவழகு.

---

## இலிங்கம். (Symbolism.)

"மனிதன் இலிங்கத்தின் மூலமாகத்தான், தெரியாமலோ வாழ்கின்றான் உழைக்கின்றான் ஜீவிக்கின்றான். (ஒரு ஜாதியாரின்) எந்தக் காலம் உயர்ந்ததென்றால், எந்தக்காலம் இலிங்கப் பொருளை உயர்ந்ததாக எண்ணிமதிக்கின்றார்களோ, அந்தக்காலமே." கார்லீல் மகான்.

"இன்றுள்ள இலிங்கம் நேற்றுள்ள உறுதியான கொள்கையைப் போற்றுகின்றது. எறக்குறைய பூர்வீகமாயுள்ள காலத்தில், எதோ ஒரு ஒழுக்கத்துக்குக் காரணமாயிருந்ததோ அது இதுவரையும் வைக்கியுள்ளது." இட்னீ ஹார்ட் லண்ட்.

சித்தாந்தபரிபாஷை

என்னும்

# தருக்கசோபானம்.

---

நிருவிகற்பம்-Indefinite.

எழுவாய்க்காட்சி.*

பெயர் முதலியவற்றாற் பகுத்தறிதலின்றி இஃதொன்று தோன்றுகின்றதெனப் பொருளுண்மை மாத்திரையே யறியும் ஞானசத்தி.

சவிகற்பம்-Definite.†

வேற்றுமைக்காட்சி.

பெயர், சாதி, குணம், தொழில், நிறமுதலிய வைந்தும் பொருடோறு முண்மையின் அவ்வைந்தும் அப்பொருட்களுள்ளவாறினிது விளங்கவுணரும் ஞானசத்தி.

இப்பிரத்தியட்சம் இந்திரியக்காட்சி, மானதக்காட்சி, வேதனைக்காட்சி, யோகக்காட்சி, சிக்காட்சியென வைந்து,

இந்திரியக்காட்சி-Sense perception.

வாயிற்காட்சி.

ஆன்மாவினின்றும் விடயங்களைநோக்கியோடு மறிவாகிய சிற்சத்தி கண்முதலிய பொறிகளையும், அவற்றிற்குத் துணையாய் வலிசெய்து உடனிற்குந் தேயுமுதலிய பூதங்களையும், அப்பூதங்கட்கு முதற்காரணமாய் அவற்றை நீங்குதலின்றி யுடனாய் உருவ முதலிய தன்மாத்திரைகளை யதிட்டித்துக்கொண்டு ஐயந்திரிபின்றியுருவமுதலிய வைம்புலன்களை யறியு மறிவேயாம்.

இவ்விந்திரிய விடயசம்பந்தம் விஷய பேதத்தினால் சையோகம், சையுத்தசமவாயம், சையுத்தசமவேதசமவாயம், சம

---

* காட்சி-தொழிற்பெயர், காண் (பகுதி) சி (விகுதி) ணகரம் டகரமாதல் வலித்தல். இஃதறியாதார் காட்சியைக் காக்ஷியென வடவெழுத்தானெழுதுப † ஆங்கிலேயர்கூறும் Perception, Conception Judgment மூன்று மிதனுளடங்கும்.

வாயம், சமவேதசமவாயம், விசேடண விசேடியபாவம் என வாறும்.*

சையோகம்-Conjunction.

கடதரிசனத்தில் கண்ணிற்குங்குடத்திற்கு முண்டான சம்பந்தம்.†

சையுத்தசமவாயம்.

Intimate union with that which is in conjunction.

கண்ணிற்குங்குடவுருவத்தன்மைக்குமுண்டானசம்பந்தம்.

சையுத்த சமவேத சமவாயம்.

Intimate union with what is intimately united with that which is in conjunction.

கண்ணிற்குங் குடவுருவத்தன்மைக்கு முண்டான சம்பந்தம்.

சமவாயம்-Intimate union.

செவிக்குஞ் சத்தத்திற்கு முண்டான சம்பந்தம்.

சமவேதசமவாயம்:

Intimate union with that which is intimately united.

செவிக்குஞ் சத்தத்தன்மைக்கு முண்டான சம்பந்தம்.

விசேடண விசேடிய பாவம்.

The union which arises from the relation between the thing qualified & the thing that qualifies.

கண்ணுடனே கூடின பூமியிற் கடத்தின்பாவத்தையறிகிற சம்பந்தம்.

மானதக்காட்சி-Mental perception.

உள்ளக்காட்சி:

ஞானேந்திரியமானது சத்தாதி விடயங்களைப் பொருந்தி ஐயந்திரிபறச் சவிகற்பமாயறிந்த வனுபவத்தை மனதிலனுசந்தானஞ் செய்தல்.

மணவழகு.

---

* இவ்வாறும் சித்தாந்தத்திற்கு உடன்பாடன்றுயினும், பிறர்மதம்பற்றிப் பொதுவகையாற் கூறியதேயாம்.

† சம்யந்தமெனினும் சையோகமெனினுமொக்கும். சம் என்னுஞ் சொல் சையெனத் திரிந்தது.

# ஸ்ரீ பர்வதம்.

(முன் தொடர்பு தொகுதி 2, பகுதி 3, பக்கம் 52:)

இனி இத்தலயாத்திரையைப் பற்றி கூறுதும். எம். எஸ். எம். ஆர் ரெயிலில் சென்னையிலிருந்து புறப்பட்டு நந்தியால் அடைந்து அங்கிருந்து 28 மைலிலுள்ள ஆத்மகூர் என்னும் ஊருக்கு வண்டியிற் செல்லவேண்டும். சாலை வெகுதூரம் கேவலமாயிருக்கும். வண்டிக்காரர்கள் பெரியசாலையை இதற்காக பத்து மைல்தூரம் விட்டு விட்டு நாட்டுவழிகளில் ஓட்டுவார்கள். ஆத்மகூர் ஒரு சிறியஊர். டிப்டிதாசில்தார், போலீஸ் இன்ஸ்பெக்டர் ஆபீசுகளும், லோகல் பண்டு ஆஸ்பத்திரியும் அதில் உண்டு. இங்கிருந்து நாகலூடி என்னும் மலையடிவாரம் வரையில் 12-மைல் உள்ளது. இச்சாலையும் வெகு கேவலமானது. நாகலூடியில் இயற்கையமைப்பு வெகு சுகமாயிருக்கிறது. அடர்ந்ததோப்புகள் சூழ்ந்துள்ளன. ரிஷபத்தின்வாயிலிருந்து ஜலம் விழுகின்ற அழகானதும் குளிர்ச்சியுள்ளதும் ஆன ஒரு அருவி உள்ளது இங்கே சிவபெருமானுக்கும் வீரபத்திரேஸ்வரர்க்கும் ஒருசிறிய ஆலயம் உண்டு. நாகலூடியிலிருந்து மலை ஏறவேண்டும். இரண்டு மூன்று மைலுக்குச் செங்குத்தாயிருக்கிறது. இவ்வளவு தூரத்திற்கும் கட்டியுள்ளபடிகளாலே இக்கஷ்டம் நேரிடுகிறது. இரண்டு மூன்று குன்றுகளைக்கடந்த பிறகு வழிசுமாராக இருக்கும். பெத்த செருவுக்குப்போனதும் சுற்றிலும் குன்றுகளால் சூழப்பட்ட ஒரு பெரிய பள்ளத்தாக்கு இருக்கிறது. பெத்த செருவில் அன்றையதினம் தங்கலாம். அதன் தூரம் சுமார் 16 மைல். அழகியகுளம் ஒன்றிங்கே உள்ளது. உயர்ந்து வளரும் மூங்கில் சூழ்ந்துள்ளதால் இது வெகு அழகாகயிருக்கிறது. குளத்தில் அழகான வெண்டாமரையும் அல்லியும் பாசியும் உள்ளன. இவைகளின் வாசனையால் ஜலம் ருசியாய் உள்ளது.

மறுநாட்காலை பிரயாணம் ஆரம்பிக்கலாம். கொஞ்சதூரம் சென்ற பிறகு வழி கஷ்டமில்லாதபோதிலும் அநேகசிறு குன்

றுகளைத்தாண்ட வேண்டியிருத்தலால் கரடுமுரடாயிருக்கிறது. பீமனிகொல்லம் என்னும் இடம் சமீபத்தபோது ஒரு ஆழமான பள்ளம்சுற்றிலுமுள்ள குன்றுகளினின்றும்ஸ்ரீபர்வதத்தைப் பிரிக்கின்றது. இதில் இறங்குவதும் பிறகு ஏறுவதும் கஷ்டமாக இருக்கின்றது. மேலிருந்து உள்ளே நோக்கினாலும் காட்சி அழகாயுள்ளது. இப்பாறைகளை இப்பள்ளம் வெகு ஆழமாக்குகிறது பாறைகளின் பக்கங்கள் செங்குத்தாயும் நேராகவும் கருமையாயும் இருத்தலால் கோட்டைச்சுவரை ஒத்தன. பள்ளத்தின் நடுப்பாகம் பலகை வடிவாயுள்ளது. மணலல்ல. சிறுகற்களுமல்ல. பீமனிகொல்லம் என்னும் இந்த அடிவாரத்திலிருந்து கைலையங்கிரியெனும் மலையை ஏற ஆரம்பம். ஏற ஏற அணியணியாய்க் குன்றுகள் தோன்றுகின்றன. தூரத்தேயுள்ள முடிகளும் அவை மீதுள்ள மரங்களும் கோயில் விமானத்தையும் அதன் கலசங்களையும் ஒத்தன. ஆவுடையார் மீதுள்ள சிவலிங்கம்போன்ற அரியகாட்சியும் ஓரிடத்தே தோன்றும். அஃது பரமேஸ்வரன் பெரிய சிகரம் ஒன்றும் பார்வதியெனும் சிறு சிகரமும் மத்தியிலுள்ளது. அதன் முன்பாக மேஜைவடிவான ஒருபாறை யுள்ளது. இக்காட்சியை நம்சிற்பி ஓர்படம்பிடித்துச் சிவபார்வதி என்று பேரிட்டால் சிவலிங்கரூபமாய் விளங்கும் இதுபோன்ற காட்சி இதற்கு உற்பத்திபோலும் பிறகு மேல் மேல் ஏற வேண்டியது. உழைப்பும் வருத்தமும் அதிகமாகத்தோன்றும், கடைசியாய் கைலாயவாயற்படி யெனும் "கைலாச வாக்கிலி" என்னும் உச்சியை அடையலாம். இதுவரையும் நடந்த இளைப்பை இங்கே வீசும் சுகமானகாற்று ஆற்றும். ஓய்வும் இன்பமும் ஆன உணர்ச்சி உண்டாகிறது. இவ்வுலகத்தில் நாமனுபவிக்கும் இன்பத்தில் அதனை அனுபவித்தற்கு உண்டாகும் கஷ்டமில்லாவிடின் பாதிஇன்பம் உண்மையாய் இலதாகும். கைலாசவாயிற்படியிலிருந்து செல்லுவோமாயின் ஆலயத்தின் தோற்றம் ஒரு சிறிது புலப்படும். ஆலயம் கைலையங்கிரியின் ஒரு பள்ளத்திலமைந்துள்ளது. கிருஷ்ணாநதியாலும் பெரிய பள்ளபூமிகளாலும் கைலையங்கிரி எல்லாப்பக்கத்திலும் சூழப்பெற்றுள்ளதினாலும் அது பீமனிகொல்லத் தண்டை அருவி கிருஷ்ணாநதியிற் சேரு



கிறபடியாலும் வருகிறபடியாலும் செங்குத்தாயும் அணுக ஒண்ணாததாயும் உள்ளது. அதன் ஸ்தானமும் மத்தியிலுள்ளது. அங்கிருந்து அப்புறம் ஊருக்குவர 30, 40 மைல் செல்லும்.

ஆலயம் மாத்திரம் கருங்கல் மதிலாற் சூழ்ந்துள்ளது. மதிலின் நீளம் 1500 அடி, அகலம் மதில் 1000 அடி, உயரம் 21 அடி, கனம் 4 அடி. மதில்களின் வெளிப்புறமுழுதும் தெய்வம், மனிதர் மிருகம் இவைகளின் உருவங்கள் அமைந்துள்ளன. நானாவித வேட்டைகளும், குதிரைகளும், யானைகளும் புராணதிருவோலக்கமும் பலவிதமான நிலையோடு தவஞ்செய்யும் ரிஷிகளும் பயங்கரமான மிருகங்களும், நகர்வனவும், மல்ல யுத்தக்காரர்களும் மதில்களிற் காணப்படுகின்றன. இதனால் இவ்வுருவமைத்த ஜாதியார்கள் போர்த்தொழில் புரிவோராயும் ஆண்மைத்தனம் உடையவராயும் காணப்படுகிறார்கள். மூன்று கோபுரங்கள் உள்ளன. அவைகளுள் உயர்ந்ததை தென்னிந்தியாவிலுள்ள மிக உயர்ந்த கோபுரத்தோடு ஒப்பிடலாம்.

உள்ளே சென்றுழி மூன்றுபாகமாகப்பிரிந்துள்ளது. பக்கங்களில் கணக்கிலாத மண்டபங்களும் விக்கிரகங்களில்லாமலும் ஜீரணதிசையிலும் உள்ள சிறு கோயில்களும் உள்ளன. மேலேஸ்தூபிகள் விளங்க அநேக கிணறுகள் உண்டு. அவையே வரும் பிரயாணிகளுக்கு ஜலாதாரம். பெரும்பாலும் உலர்ந்தும் கொஞ்சம் ஜலமுடையதுமாய் இருக்கின்றன. நடுவிலேயுள்ளது மல்லிகேஸ்வராலயம். அது விலையுயர்ந்த கட்டிடம் உடையது. தென்னிந்தியாவிலுள்ள வேறு எந்த ஸ்தலத்தைப்பார்க்கிலும் இதன் முக்கிய விமானம் சிகரம் முதல் அடிவரையில் தங்கத்தகட்டால் அமைந்தது. விமானத்திற்கு எதிரிலுள்ள மண்டப மேல்நிலையில் நந்தி, தக்ஷிணாமூர்த்தி விக்கிரகங்கள் பொன்மயமாய் விளங்குகின்றன. பண்டைக் காலத்தில் இவ்விக்கிரகங்களுக்குள்ளே அளவற்ற திரவியம் இருந்ததென்றும் ரோஹில்லா என்னும் கொள்ளைக்காரர்கள் இவ்வாலயத்தைக் கொள்ளையிட்டபோது இப்போதுள்ள விக்கிரகங்களைப் பின்னமாக்கினரென்றும் கூறுகின்றார்கள். இவ்வாலயக்கட்டிடம் தென்தேசத்துள்ள சோழர்பாண்டியர் கட்டிடமாதிரிபோலில்லை. ஆயினும் இவைகளுக்கும் கடலோரத்தி

ருக்கும் மஹாமலைபுரம் (மஹாபலிபுரம் எனத் திரிந்தது) கோயில் கட்டிடத்திற்கும் அற்புதமான ஒற்றுமை உண்டு. மஹாமலைபுரத்தில் வழங்கும் சரித்திரத்தால் ஸ்ரீ சைலத்திலிருந்து பூஜாரிகள் அங்கே கொண்டுவரப் பட்டார்களென்று தெரிகிறது. இதனால் ஸ்ரீ சைல கோயிலின் புராதனம் ஏற்படுகின்றது. கட்டிடம் சாளுக்யமாதிரியுள்ளது. காஞ்சிபுரம் பழைய கைலாசநாதர் ஆலயமும், மஹாபலிபுரம் ஆலயங்களும் சாளுக்யராஜவம்சத்தாரால் தாங்கள் இவ்வூர்களை ஆண்ட காலத்திற் கட்டப்பட்டது. எல்லோரா (Ellora) என்னும் கைலாயகிரியிலுள்ள ஓரேபாறையிலிருந்து உண்டாக்கப்பட்ட கோயிலுமவர்கள் கட்டியதே. இப் பழையசந்ததியாகிய ராஜாக்களுடைய மதவைராக்கியமும் பக்தியும் எழுத ஏட்டிலடங்காவாயினும் தற்கால இதிகாச மாணவர் இவர்களைப்பற்றி ஒரு சிறிதும் உணர்ந்திலர்.

ஸ்ரீ பார்வதிகோயில் தற்காலம் சிறியதாய் உள்ளது. பழைய விக்கிரகத்தைக் கொள்ளையடித்தார்களென்றும் அல்லது பின்னப்படுத்தினார்களென்றும் தற்காலஸ்தானம் வேறொன்றும் காணப்படுகின்றது. முக்கியமான அம்மன் கோயிலில் பிரம்மரம்பா எனும்தேவி இருக்கிறது. அத்தேவிக்கு சித்திரை மாதத்தில் பெரிய உற்சவம் நடக்கிறது. அதில் ஆடுமாடுகளையும் பலி கொடுக்கிறார்கள். உண்மையில் இது காளியேயாகும். மற்றைய கோயில்கள் திறந்திருக்கும் போதும் இரவில் இதை கொஞ்சநேரம் கழித்து மூடிவிடுகிறார்கள். இக்கோயில் தனித்து உள்ளது. ஆகவே கோயில் புஷ்பகிரி மடத்தார் வசம்வந்த பிறகு இவ்விக்கிரகம் பிரதிஷ்டை செய்திருக்கவேண்டும். ஸ்ரீ பார்வதிவிக்கிரகம் காணமற்போய் விட்டபோது அதற்குப்பதிலாக கோயிலுக்கு வெளியேயிருந்த இதை ஒருவேளை பிரதிஷ்டை பண்ணியிருக்கலாம், எங்ஙனமாயினும் இக்கோயிலின் முக்கியமான வழிபாட்டோடு இந்த பிரம்மரம்பா என்பதையும் வழிபடுதலைச் சேர்த்தல் கூடாது. ஸ்ரீ காஞ்சியில் காணப்படுவதுபோலவே, இவ்வம்மன் கோயில் பூஜாரிகள் ஸ்மார்த்தர்கள். சுவாமி கோயில் பூஜாரிகள் குருக்களாயுள்ளவர்கள். அத்திமரம் ஸ்தலவிருக்ஷம்; அது வெகுகாலங் கண்டது. உயர்ந்த கோபுரத்தினும்



உயர்ந்திருக்கிறது. அதன் அடிவாரம் சுற்று 56 அடிக்குமேல் உள்ளது. அதனிழலில் யோகிகளும் சன்னியாசிகளும் தங்குகிறார்கள். இதுபோல பழையமரம் வேறெங்கும் காணுதற்கரியது. இவ்வாலயத்திலும் இந்தப்பக்கங்களிலுள்ள மற்ற ஆலயங்களிலும் சுதந்தரம் உண்டு. அதாவது ஒவ்வொரு நற்சாதி இந்தியனும் தானே ஆலயபூஜை செய்யலாம். தற்காலம் வடதேசத்திலிருப்பது போல் இவ்வழக்கம் ஒருகாலத்தில் தென் தேசத்திலுமுள்ளது. நம்முடைய கைகளால் எவ்வளவு நேரமாயினும் இஷ்டம்போல் பூஜை அபிஷேகம் அர்ச்சனை, தேவார திருவாசக பாராயணத்துடன் செய்யலாம். இம்மாதிரியான பூஜைகளில் ஆன்மவிசேடம் அடைய அவாவுதற்குமுன் தன்னைமறந்தவராய் தெளிவுபிறந்து சித்த சமாதானங்கொண்டு பயபத்தியோடுங் கூடிய மனமும் யாக்கையும் உடையராக வேண்டும், நல்லமலைத் தொடர்ச்சியை யூடுருவிச் செல்லும் கிருஷ்ணாநதி இங்கு சென்று ஸ்நானஞ்செய்தல் மிகப்புண்ணியமென்று கொள்கிறார்கள். மிகவும் செங்குத்து. ஆழ்ந்து இறங்கவேண்டும். அடிவாரத்தில் சுத்தநீல நிறமாயும் தெளிவாயும் உள்ளது பாதாளகங்கை அல்லது நீலகங்கை என்னும் கிருஷ்ணை. இங்குள்ள இயற்கை காட்சி சலவைக்குன்றுகளண்டை ஓடும் நருமதை நதியின் காட்சியைப் போன்றது. பெத்த செருவுக்கும் கைலையங்கிரிக்கும் 15 மைல் தூரம். கைலையங்கிரிக்கும் பாதாளகங்கைக்கும் 5 மைல் உள்ளது.

(இன்னும் வரும்.)

J. M. N.

# ஜீவகாருண்யவொழுக்கம்.

(முன் தொடர்பு தொகுதி 2, பகுதி 2, பக்கம் 49: )

சிருஷ்டித்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அனுக்கிரகித்தல் என்கிற கிருத்தியங்களும் அவர் நினைத்தமாத்திரத்தில் நடக்கும். பஞ்சகர்த்தாக்களும் அவர் கடைக்கண்பார்வையால் தங்கள் தங்கள் தொழில் நடத்துவார்கள். அவர்கள் அறிவு கடவுளறிவாக இருக்கும். அவர்கள் செய்கை கடவுள் செய்கையாக இருக்கும். அவர்கள் அனுபவம் கடவுள் அனுபவமாயிருக்கும். சர்வசத்தியுடையவர்களாய் எக்காலத்தும் அழிவில்லாதவர்களாய், ஆணவம், மாயை, கர்மம் என்னும் மும்மலங்களும் அம்மலவாதனைகளும் இல்லாதவர்களாய் பேரருள் வண்ணமுடையவர்களாய் விளங்குவார்கள். சடமாகிய ஒரு துரும்பும் அவரது திருநோக்கத்தால் உயிர்பெறும் பஞ்சகிருத்தியங்களும் செய்யும். அவரது பெருமை வேதாந்த, சித்தாந்த, கலாந்த போதாந்த, நாதாந்த, யோகாந்தம் என்கின்ற ஆறந்தங்களிலும் விளங்கும். அவற்றைக்கடந்தும் விளங்குமென்று அறியவேண்டும். இவைபேரின்பத்தை யடைந்தவர்கள் பெருமை யென்று அறிய வேண்டும்.

இம்மூவகை யின்பலாப வாழ்வையும் எதனால் பெறக்கூடுமென்றறிய வேண்டில், கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருளின் ஏகதேசத்தைக் கொண்டும் அருட்பூரணத்தைக் கொண்டும் அடையக்கூடுமென்றறிய வேண்டும். மூவகை யின்பங்களில் அருளின் ஏகதேசத்தைக் கொண்டு அடையத்தக்கவை யெவை. அருட்பூரணத்தைக் கொண்டு அடையத்தக்கவையாது என்றறிய வேண்டில், இம்மையின்பலாபம், மறுமையின்பலாபம் என்கின்ற இரண்டையும் அருளின் ஏகதேசத்தைக் கொண்டு அடையக் கூடுமென்றும் பேரின்பலாபமென்கின்ற ஒன்றையும் அருட்பூரணத்தைக் கொண்டு அடையக்கூடு மென்றும் அறிய வேண்டும். கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருள் எந்த



வண்ணம் உடையது என்றறிய வேண்டில், சொல்லுவார் சொல்லும் வண்ணங்களும் நினைப்பார் நினைக்கும் வண்ணங்களும் அறிவார் அறியும் வண்ணங்களும் அனுபவிப்பார் அனுபவிக்கும் வண்ணங்களும் ஆகிய சர்வசத்தி வண்ணங்களும் தனது ஏகதேசவண்ணங்களாக விளங்க விளக்கி விளங்குகின்ற பூரணவிளக்க வண்ணத்தையுடையது என்று அறியவேண்டும். அந்த அருள் எவ்விடத்து விளங்குகின்றதென்றறியவேண்டில் நோக்குவார் நோக்குமிடம் நோக்கப்படுமிடம், கேட்பார் கேட்குமிடம் கேட்கப்படுமிடம், சுவைப்பார் சுவைக்குமிடம் சுவைக்கப்படுமிடம், முகருவார் முகருமிடம் முகரப்படுமிடம், பொருந்துவார் பொருந்துமிடம் பொருந்தப்படுமிடம், பேசுவார் பேசுமிடம் பேசப்படுமிடம், செய்வார் செய்யுமிடம் செய்யப்படுமிடம், நடப்பார் நடக்குமிடம் நடக்கப்படுமிடம், விடுவார் விடுமிடம் விடப்படுமிடம், நினைப்பார் நினைக்குமிடம் நினைக்கப்படுமிடம், விசாரிப்பார் விசாரிக்குமிடம் விசாரிக்கப்படுமிடம், துணிவார் துணியுமிடம் துணியப்படுமிடம், தூண்டுவார் தூண்டுமிடம் தூண்டப்படுமிடம், அறிவார் அறியுமிடம் அறியப்படுமிடம், அனுபவிப்பார் அனுபவிக்குமிடம் அனுபவிக்கப்படுமிடம் முதலிய எவ்விடங்களிலும் எக்காலத்தும் விளங்குகின்றதென்று அறியவேண்டும். அந்த அருளை எதனாற் பெறக்கூடுமென்றறிய வேண்டில் ஜீவகாருண்ய ஒழுக்கத்தினாற் பெறக்கூடுமென்றறிய வேண்டும்.

ஜீவகாருண்ய ஒழுக்கத்தினால் அருளை பெறக்கூடுமென்பது எப்படியென்றறிய வேண்டில் அருள் என்பது கடவுளுடைய இயற்கை விளக்கம் அல்லது கடவுள் தயவு. ஜீவகாருண்யமென்பது ஆன்மாக்களின் இயற்கைவிளக்கம் அல்லது ஆன்மாக்கள் தயவு. இதனால் ஒருமைக் காரணமாகிய சிறிய விளக்கத்தைக் கொண்டு பெரிய விளக்கத்தைப்பெறுதலும் சிறிய தயவைக் கொண்டு பெரியதயவைப் பெறுதலும் கூடும். சிறு நெருப்பைக் கொண்டு பெருநெருப்பைப் பெறுதல்போல வென்றறியவேண்டும். இதனால் ஜீவகாருண்ய ஒழுக்கமே சன்மார்க்கமென்றறியப்படும். ஜீவகாருண்யம் விளங்கும்போது அறிவும் அன்பும் உடனாக விளங்கும். அதனால் உபகாரசத்தி விளங்கும். அந்த

வுபகாரசத்தியால் எல்லாநன்மைகளும் தோன்றும். ஜீவகாருண்யம் மறையும்போது அறிவும் அன்பும் உடனாகநின்று மறையும். அதனால் உபகாரசத்தி மறையும். உபகாரசத்திமறையவே எல்லாத்தீமைகளுந் தோன்றும். ஆகலின் புண்ணியமென்பது ஜீவகாருண்யமொன்றே யென்றும், பாவமென்பது ஜீவகாருண்யமில்லாமையொன்றே யென்றும் அறியவேண்டும். அன்றி ஜீவகாருண்ய ஒழுக்கத்தினால் வரும் விளக்கமே கடவுள் விளக்கமென்றும் அதனால் வரும் இன்பமே கடவுள் இன்பமென்றும் இவ்விளக்கத்தையும் இன்பத்தையும் பல் காலறிந்து அடைந்து அனுபவித்து நிறைவுபெற்ற சத்திய ஞானிகளே மேற்குறித்த பேரின்பலாபத்தைப் பெற்றவர்களென்றும் அவர்களே கடவுளை அறிவாலறிந்து கடவுள் மயமானவர்களென்றும் சத்தியமாக அறியவேண்டும்.

ஜீவகாருண்ய ஒழுக்கத்தின் இலக்கணம் என்னவென்று அறியவேண்டில் ஜீவர்களுக்கு ஜீவர்கள் விஷயத்தில் பொதுவாக உண்டாகின்ற ஆன்மவுருக்கத்தைக் கொண்டு கடவுள் வழிபாடு செய்து வாழ்தல் என்றறியவேண்டும். ஜீவர்கள் விஷயமாக உண்டாகின்ற ஆன்ம உருக்கத்தைக் கொண்டு கடவுள்வழிபாடு செய்வது எப்படியென்றறியவேண்டில் ஜீவர்களுக்கு ஜீவர்கள் விஷயமாக ஆன்மவுருக்கம் காருண்யம் உண்டாக உண்டாக அந்த ஆன்மாவின் உள்ளிருக்கின்ற கடவுள் விளக்கமாகிய அருள் வெளிப்பட்டுப் பூரணமாகவிளங்கும். அத்திருவருள் விளங்கவே கடவுள் இன்பம் அனுபவமாகிப் பூரணமாகும். ஆன்ம உருக்கம் உண்டாக உண்டாக ஆன்மாவின் உள்ளிருக்கின்ற கடவுள் விளக்கமாகிய அருள் வெளிப்படுவது எப்படியென்றறிய வேண்டில் தயிருக்கும் கட்டைக்கும் கடைதலால் நெகிட்சி உண்டாக உண்டாக அதன் உள்ளிருக்கின்ற வெண்ணெயும் நெருப்பும் வெளிப்படுவதுபோல வெளிப்படுமென்றறியவேண்டும். திருவருள் விளங்குவதினால் கடவுள் இன்பம் அனுபவமாகிப் பூரணமாவது எப்படியென்றறிய வேண்டில் வெண்ணெயும் நெருப்பும் வெளிப்படவே அவற்றின் உண்மைத் தன்மை அனுபவமாகிப் பூரணமாவதுபோல கடவுள் இன்பம்பூரணமாகுமென்றறியவேண்டும்.



ஜீவர்களுக்கு ஜீவர்கள் விஷயமாக ஆன்ம உருக்கம் எப்போது வெளிப்படு மென்றறிய வேண்டில் பசி, கொலை, பிணி, ஆபத்து தாகம், பயம், இன்மை, இச்சை இவைகளால் ஜீவர்கள் துக்கத்தை அனுபவிக்கக் கண்டபோதும் கேட்டபோதும் அறிந்தபோதும் ஆன்மவுருக்கம் உண்டாகு மென்றறியவேண்டும். பசி என்பது ஆகாரம் பெறுமையினால் வயிற்றினுட் பற்றிநின்று தேகத்தின் அகத்தும் புறத்தும் உள்ள கருவிகரணங்களின் தன்மைகளைச்சுடுதல் செய்து அறிவைமெலிவித்து ஆன்மாவை வெளிப்படுத்து விப்பதற்கு முதற்காரணமாகிய விகற்பமாயாகாரியப்பிண்டப்பகுதி. நெருப்பு கொலை என்பது தேகத்தின் அகத்தும் புறத்துமுள்ள கருவிகரணங்களைப் பலவேறு கருவிகரணப் புடைப்பெயர்ச்சிகளால் பதைப்புண்டாகக் கலகஞ்செய்து அறிவை மெலிவித்து ஆன்மாவை வெளிப்படுத்து வித்தற்கு நிமித்தமாகிய விகற்பபூதகாரிய கொடுந்தொழில். பிணியென்பது வாத பித்த சிலேத்ம விகற்பங்களால் மாறுபட்டு, தேகத்தினகத்தும் புறத்தும் உள்ள கருவி கரணங்களை நலிவுசெய்து அறிவைமெலிவித்து ஆன்மாவை வெளிப்படுத்துவித்தற்கு நிமித்தமாக நிறை விகற்ப மாயாகாரியப் பிண்டப்பகுதி வேற்றுமைவிளைவு.

ஆபத்து என்பது அகங்காரத்தாலும் மறதியாலும் கரும வேறுபாட்டாலும் தேகபோக அனுபவங்களைத் தடுக்கின்ற விக்கினங்கள். பயமென்பது தேகமுதலிய கருவிகளுக்கு நட்டஞ் செய்வதாகிய விடயங்கள் நேரிட்டபோது காரணங்களுக்கும் அறிவுக்கும் உண்டாகின்ற நடுக்கம். இன்மையென்பது கல்வி, செல்வம் முதலிய கருவிகளைத் தற்சுதந்தரத்திற் பெறுமை. இச்சையென்பது அடையக்கருதிய விடயங்களில் அருமைக்குறித்து அவற்றை மென்மேலும் கருதச்செய்கின்ற சித்தவிருத்தி என்றறியவேண்டும்.

இவற்றுள் பசி, கொலை, என்பவை இம்மை இன்பம் மறுமை இன்பம், பேரின்பம் என்கிற மூன்றையும் தடுத்தலால் முதற்பட்ட தடையென்றும், பிணி, பயம், ஆபத்து இன்மை என்பவை இம்மை மறுமை இன்பங்களைச் சிறிது தடுத்தலால் இடைபட்டனவென்று அறியவேண்டும்.

ஜீவகாருண்யத்தின் வல்லபம் யாதென்றறியவேண்டில் பிறவுயிர்களிடத்து பசி, கொலை முதலியவற்றுள் எதனாற் காருண்யந்தோன்றியதோ அதனால் அவ்வுயிர் வருந்தாதபடி அதை நீக்குதற்கு முயல்விப்பது அதன் வல்லபமென்றறியவேண்டும். ஜீவகாருண்யத்தின்பிரயோஜனம் யாதென்றறியவேண்டில் உயிர்களுக்கு இன்பம் உண்டுபண்ணுவது அதன் பிரயோசனம் என்றறியவேண்டும். இந்த ஜீவகாருண்யத்தின் சொரூப சுபாவ வியாபக முதலியவைகளை மூன்றாவதுபிரிவுள் கண்டுகொள்க.

ஜீவகாருண்யமாகிய ஆன்ம உருக்கம் உண்டாவதற்கு உரிமையெதுவென்றறியவேண்டில் ஜீவர்களெல்லாம் ஒருதன்மையாகிய கடவுளியற்கை உண்மை ஏகதேசங்களாகி கடவுளருட்சத்தியால் பூதகாரிய தேகங்களில் வருவிக்கப்பட்டபடியால் இச்சீவர்களெல்லாம் ஒருரிமையினத்தவர்களேயாகும். சகோதரருள் ஒருவர் ஒரு ஆபத்தால் துக்கப்படுவதைக் கண்டபோதும் கேட்டபோதும் அறிந்தபோதும் அவர் தேகம் தமது சகோதரதேகமென்றும் தெரிந்துக்கொண்ட மற்றொருசகோதரர்களுக்கு உருக்கமுண்டாவது தேகவுரிமையாலென்று அறிவதுபோல, ஒரு ஜீவன் ஒரு ஆபத்தால் துக்கப்படுவதைக் கண்டபோதும் கேட்டபோதும் அறிந்தபோதும் அந்த ஜீவனைத் தமது ஆன்ம இனமென்று தெரிந்துகொண்ட மற்றொரு ஜீவனுக்கு உருக்கமுண்டாவது ஆன்மவுரிமையென்றறிய வேண்டும்.

ஜீவர்கள் துக்கப்படுவதைக் கண்டபோதும் சிலர் ஜீவகாருண்யமில்லாமல் கடினசித்தர்களா யிருக்கின்றார்களே, இவர்களுக்கு ஆன்ம உரிமையில்லாமற் போவது யென்னென்றறிய வேண்டில் துக்கப்படுகின்றார்களென்றும் அறியத்தக்க ஆன்ம அறிவு என்கின்ற கண்ணானது அஞ்ஞான காசத்தால் மிகவும் ஒளிமழுங்கினபடியாலும் அவைகளுக்கு உபகாரமாகக் கொண்ட மனமுதலான உபநயனங்களாகிய கண்ணாடிகளும் பிரகாசப் பிரதிபலித மில்லாமல் தடிப்புள்ளவைகளாக இருந்தபடியாலும் கண்டறியக் கூடாமையாயிற்று. ஆனால் ஆன்ம உரிமை இருந்தும் ஜீவகாருண்ய மில்லாமல் இருந்ததென்றறியவேண்டும். ஆனால் இந்த ஆன்ம உருக்கம் என்கின்ற ஜீவகாருண்யத்திற்கு ஆற்றலெவ்விடத்து உண்டாகு



மென்றறிய வேண்டில், பசி, கொலை, பிணி, முதலியதடைகளில் எந்தத்தடைப்பற்றி ஜீவகாருண்யந்தோன்றியதோ அந்தத் தடையைநிவர்த்தி செய்கின்ற விடத்துதான் ஜீவகாருண்யத்திற்கு ஆற்ற லிருந்ததென்றறிய வேண்டும். இதனால் ஜீவர்களுக்குப் பசி, கொலை, பிணி, முதலியவற்றால் வருந்துன்பங்களெல்லாம், மனம், கண், முதலிய கரணேந்திரிய அநுபவங்களே யல்லது ஆன்ம அநுபவங்களல்ல. ஆகலில் ஜீவகாருண்யத்தால் விசேஷபிரயோசன மில்லையே யென்பார்க்கு உத்தரம் யாதென்றறிய வேண்டில் இந்தத் தேகத்தில் ஆன்மாவும் அறிவுக்கறிவாயிருக்கிற கடவுள் விளக்கமுந் தவிர, காணம் இந்திரியம் முதலிய மற்றதத்துவங்களெல்லாம் மூடமாகிய கருவிகளேயல்லது அறிவாகிய ஆன்மாக்களல்ல. ஆகலில் சுகதுக்கங்களை அறிவாகிய ஆன்மாக்கள் அநுபவிக்குமேயல்லது மூடமாகிய தத்துவங்கள் அநுபவிக்க அறியாது. மனமுதலான காணங்களும் கண்முதலிய இந்திரியங்களும் ஜீவர் வாழ்க்கைக்குக் கடவுள் அருளால் கட்டிக் கொடுக்கப்பட்ட சிறிய வீட்டின் கருவிகளாகும். இன்பதுன்பங்களை வீட்டிலிருக்கின்றவன் அநுபவிப்பானல்லது வீட்டின் கருவிகளாகிய மண், கல், மரம், கால், தீ, நீர் முதலியவைகளநுபவிக்க அறியமாட்டா.

இது வடலூர் இராமலிங்கஸ்வாமிகள் எழுதிவைத்திருந்த குறிப்பினுட் கண்டது.

(இன்னும் வரும்.)

காஞ்சி—நாகலிங்க முதலியார்: F.M.T.S.,

---

தொகுதி 2-ல் 48-பக்கத்தில் 18-வது வரியில் "எவ்விடத்திருந்தே மூகர்ந்தறியும்" என்பது "எவ்விடத்திருக்கின்ற கந்தங்களையும் அவர்மூக்கு இருந்தவிடத்திருந்தே முகர்ந்தறியும்" எனக் கூட்டிக்கொள்க.

# சிவார்ச்சனை.

1. மாயாவாதி:—'சிவார்ச்சனை' என்பது என்ன? விவரமாய்த் தெரிவிக்க வேண்டும், ஐயா.

சித்தாந்தி:—பரசிவனை யர்ச்சித்தலே முடிந்த பூசை. 'வியந்தேத்தி' னால்தான் பரசிவன் சிவானந்தங் கொடுத்தருள்வான். வியத்தலாவது, அவனுடைய பஞ்சக் கிருத்தியோபகார திருவருட் சோபானக்கிரமத் தீட்சையைக் குருமுகத்தா லுணர்ந்து, அப் பஞ்சக்கிருத்தியம் 'எரியுருவனாகிய' எம்பிரானாற்றான் முடியுமென்ற அகச்சமய வேதாகமக் கருத்தையுட்கொண்டு,

"சிவனொடொக்குந் தெய்வந்தேடினுமில்லை
அவனொடொப்பாரிங்கி யாவருமில்லை." என்ற

'தமிழ்மறைக்' கூற்றை யுன்னி யுன்னித் 'தாமார்க்குங்குடியல்லாத் தன்மை' யனாகிய ஹரசிவனாரின்றிருவடி ஞானம் பூண்டு, சிவானந்தக்கண்ணீர் பெருகிப் 'பொங்கித்ததும்பி' வழியும் புனலினைக் குறியாகத் திருமஞ்சனமாட்டி, 'பஞ்சக்கிருத்தியன்' என்ற கருத்துள்ள 'இலிங்கம்' * என்னுந் திருநாமம் பூண்டு, அருவ நிலையிலிருந்து தாம் உருவநிலையடையும் பிரதமை ரூபமாகிய பிண்டரூபமதைச் சிருட்டித்துத்தந்த திருக்கருணைவடிவமாகிய பிண்டரூபங் கொண்டு, விளங்கும் நஞ்சிவலிங்கப் பெருமானை வியந்து புகழ்தலேயாம். அதனாலுண்டாகும் உவகையே புனலாட்டலாகும்; அதாவது, சிவலிங்கத்துக்கு அபிஷேகஞ் செய்தலாகுங் கண்டீர்.

2. மா:—கற்பூரதீபம் காட்டுவது என்ன?

சி:—மேற்கூறிய பஞ்சக்கிருத்தியோபகாரஞ் செய்யவல்லவனாகிய அக்கினிகாரியப் பெருமைவாய்ந்த முக்கட்கடவுளை, யுள்ளபடியுணர்ந்து அனுபவித்தலே உள்ளுணர்வாகிய ஞானதீபம். அந்தச் சிவஞான வொளியை யனுபவித்தற்கறி குறியாகவே கற்பூரதீபம் காட்டுவது.

* சித்தாந்தத் தேன்பார்க்க.



3. மா:—திருவமுது காட்டுவது யாதுக்கு, ஐயா?

சி:—முற்கூறிய எம்பிரான்றன் றிருக்கருணையை முன்னிட்டு நாம் எம்பிரானுடைய சிருட்டிகளாகிய சகல ஜீவராசிகளிடத்திலும் அன்புபாராட்டி வதைசெய்யாது சுகம் பாராட்டுவது, அவைகளுக்குண்டாகுங் கொடும்பசி நீக்க அமுதூட்டிச் சுகமுண்டாக்குஞ் சற்குணமென்ற அன்பாகும். அவ்வன்பு பூண்டநாம் எம்பிரானுக்குரிய அன்பராவோம். அவ்வகையன்பு மேற்கொண்டு சிவபோதை கொள்ளலே அன்பு காட்டுவது. அதாவது, திருவமுது காட்டலெனும் பூசை. அமுதூட்டி வளர்த்தலெனும் எம்பிரான்றன்றிருக்கருணையையுங் காட்டிநிற்கும்.

5. மா:—இந்த விதமாய்ப்பூசை செய்தவர்களுண்டா?

சி:—நமது ஸ்ரீ சேக்கிழார் நாயனார் பாடிய பெரியபுராணத்திலுள்ள திருத்தொண்டர்களி லொருவராகிய 'வாயிலார் நாயனாரே' சான்று. அந்நாயனார் புரிந்த மௌனபூசையாவது:

"வாயிலார் வாய்பேசா மௌனமனக் கோயிலைத்
தாயிழையாட் பங்கன்று ளர்ச்சித்தார்—நேயமாய்
உள்ளுணர்வாந் தீபம் உவகைப்புன லாட்டல்
தெள்ளமுதவன் பமைத்தே."

—திருத்தொண்டர் திருநாம வெண்பா.

இவ்வகைப் பூசையோடு மேற்கூறிய புறப்பூசையை நம்புறக்கருவிகரணச்சேட்டை யுள்ளளவும் நாம்செய்து நிற்றலே நம்கடமை. "என்கடன்பணி செய்து கிடப்பதே" என்ற சுருதிப்படியாம். (நான் சமாஜத்திற் சேர்ந்து தேறினேன் என்னை ஏன் சேர்த்துக்கொள்ளக் கூடாதெனல் சுருதி சம்மதமன்று. அவ்வினை தற்போதக்குறியாகும். போதங்கெட்டாற் புனிதந்தானே கிட்டும்.)

ஹரா. ஷண்முக முதலியார்,
சைவ சித்தாந்தி, சேலம்.

## சிருட்டியில் மயக்க நிவாரணம்.

பிரபஞ்ச சிருட்டியிற் சிலருக்கு மயக்கவுணர்ச்சியுளதாகத் தெரியவருகின்றது. சீவசிருட்டிவேறு ஈசுரசிருட்டிவேறு எனச் சிருட்டியை இருவகைப்படுத்திப் பேசுகின்றனர். எமதன்பரொருவரெழுதிய கடிதத்தில் தனக்கும் ஏகான்மவாதியாரொருவர்க்கும் நடந்த சம்பாஷணையில், ஏகான்மவாதியார், ஈசுரசிருட்டி வேறு சீவசிருட்டிவேறு, எனச்சிருட்டியை இருவேறுபகுத்து, காமக்குரோதலோபமோக மதமாச்சரியங்கள் சீவசிருட்டி என்றும், தாவரசங்கமங்கள் ஈசுரசிருட்டி என்றுஞ் சொன்னதாக வரைந்துள்ளார். சீவசிருட்டியுள தென்பதற்கு.

"இந்தச் சீவனால் அறுபகையை யெலாமிவன் செயலல்லாமல், அந்தத் தேவனால் வருமென்ற மூடர்களேதோ கதியடைவார்கள்............"
என்னுங் கைவல்லிய நூல் வாக்கியம் மேற்கோளாகக் காட்டப்பட்டதாகத் தெரிகின்றது. அறுபகை—காமக்குரோதாதிகள். ஏகான்மவாதியாரது இக்கொள்கையை மறுத்து, வினைக்கீடாகச் செய்யுஞ்செயல்களெல்லாம் பரமன் கட்டளையின் படிச்செய்வதாம், என்று அன்பர்பதிலுரைத்ததாகவும் வரைந்தனர். அன்பர்கொள்கைக்கு—

"அவனன்றியோரணுவு மசையாது."

என்னும் தாயுமானவர்வாக்குப் பிரமாணமாக வுதகரிக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது. இவ்விருவர் கொள்கைகளுஞ் சரியா? எனவிசாரித்தல் அவசிய மெனக்காணலால், ஈண்டிதனை யெழுதப்புகுந்தாமென்க.

தாவரசங்கமங்கள் ஈசுரசிருட்டி என்றது ஆஸ்திகரெல்லோர்க்கும் ஒப்பமுடிந்த வுண்மையாம். ஆனால், காமாதிகள் சீவசிருட்டியா? என்பதையும், ஈசுரனைப்போல சீவனுக்கும் சிருட்டி சுதந்தரமுண்டா? என்பதையும முன்னர் அறியவேண்டுவது ஆவசியகம். தொண்ணூற்றாறுதத்துவ வரிசைக்கிரம நிகழ்ந்துமிடத்தில், காமக்குரோதாதி குணங்கள் "ஆகாயத்தின் கூறு" என்று



சித்தாந்த நூல்களிற் காணப்படுகின்றன. ஆகாயதத்துவம் ஈசுரசிருட்டி, அதனால், அதன் கூறுயுள்ள காமக்குரோதாதிகளும் ஈசுரசிருட்டியாக வேண்டுமே யொழிய சீவசிருட்டி எனல் எங்ஙனம் பொருந்தும்? ஆகாயதத்துவம் என்ன பிரயோசனத்தின்பொருட்டு சிருட்டிக்கப்பட்டதோ, அதுபோலவே, காமக் குரோதாதிகளாகிய அதன் கூறுகளும் ஏதோ பிரயோசனங் கருதி சிருட்டிக்கப்பட்டனவாம் என்று கொள்ளுவதே நியாயமாகும். கூறுகுணம்—அமிசம் ஆம். காமாதிகளின் பிரயோசனம் பின்னால் விளக்கப்படும். அது நிற்க.

(இன்னும் வரும்.)

C. M. அரங்கசுவாமி நாயகர்.

## சமாசாரங்கள்.

சென்னை ஸ்ரீ அருணாசலேச்சுரர் ஆலயம்—சென்னைச் சிவனடியார்த் திருக்கூட்டம், சென்னை மெய்கண்டசந்தான சபை முதலியவைகட்குத் தலைவரும், சைவசித்தாந்த மகாசமாஜத்தின் முக்கிய அங்கத்தினருள் ஒருவரும், "சித்தாந்தம்" பத்திரிகாசிரியருமாகிய சித்தாந்தசரபம் அஷ்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலியாரவர்களைச் சென்னைத் தேவஸ்தானங் கமிட்டியாரால் ஷை ஆலயத்திற்குத் தருமகர்த்தாராக நியமித்ததினிமித்தம் முதலியாரவர்களின் மாணாக்கர் பலர் ஒருங்குசேர்ந்து ஷை ஆலயத்தில் நிகழும் 1913ஆ மார்ச்சுமீ 9உ ஆதிவாரம் ஸ்ரீ உண்ணாமுலை சமேத ஸ்ரீ அருணாசலேச்சுரர் முதலிய பஞ்சமூர்த்திகட்கு மகாபிஷேகமும், மாகேச்சுர பூசையும் மகா விமரிசையாக நடத்திவைத்தனர். அன்று மாலை ஷை ஆலயத்தில் ஸ்ரீமத். சுவாமி வேதாசலம் அவர்க

ளும் ஸ்ரீமத் ஜே. யம். நல்லசாமிபிள்ளை B.A., B.L., அவர்களும் "ஆலயவழிபாடு" என்னும் விஷயமாக மகோபந்யாசம் செய்தார்கள். முதலியாரவர்கள் மாணாக்கர் செந்தமிழ் ரத்னாகரம்-வல்லை - சண்முகசுந்தர முதலியாரவர்கள் சபாவந்தனமளித்த பின்பு, ஷோடசோபசார அலங்கார தீபாராதனை நிறைவேறியது.

***

நீதிநெறித்தாலாட்டு—இந்நூலியற்றியவர் ஸ்ரீவில்லிபுத்தூர், பண்டிதர். மு. பொ. ஈசுரமூர்த்திப்பிள்ளையவர்கள். இந்நூலானது தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் திருக்குறளினடங்கிய நூற்றுமுப்பத்து மூன்று அதிகாரத்திற்கும் ஒரு அதிகாரத்திற்கு ஒரு கண்ணியாக நூற்றுமுப்பத்துமூன்று கண்ணிகளாகச் செய்யப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு அதிகாரத்திலும் முக்கிய கருத்து ஒன்று இத்தாலாட்டில் வைக்கப்பட்டுள்ளது. இந்நூலுடன் பொதுவாகப் பாடியுள்ள திருமணவாழ்த்தும் சேர்க்கப்பட்டுள்ளது.

***

தர்மகர்த்தா—இஃதியற்றியவர் மாயவரம்பிளீடர் ம-ா-ா-ஸ்ரீ A. நடேசம்பிள்ளையவர்கள். இது முதற்பாகம். இதில் தர்மங்கள் சம்பந்தமான எல்லாச் சட்டங்களும் விரிவான வியாக்கியானங்களுடன் எழுதப்பட்டிருப்பது மன்றிச் சிவில் புரொஸீஜர் கோடு 92-வது செக்ஷனில் சொல்லப்படும் பொதுதர்ம ஏற்பாடுகள் சம்பந்தமாக ஆதிமுதல் இதுவரையில் இவ்விந்தியா எல்லா ஐகோர்ட்டுகளிலும் பிரீவி கவுன்சிலிலும் ஏற்பட்ட சகல தீர்மானங்களும் மிகத்தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது.

***

சைவசித்தாந்த மகாசமாஜத்தின் கௌரவப் பிரசாரகர்களில் ஒருவராய மறைத்திருவன் விருதை - சிவஞானயோகிகள் செய்த உபந்யாசங்கள்:—12-1-13-ல் செங்கற்பட்டு சைவாபிவிர்த்தி சபையில் மாலை 6-மணிமுதல் "சிவபக்தி." 14-1-13-ல் சிதம்பரம் ஆறுமுகநாவலர் சபையில் பகல் 2-மணிமுதல் 3-30 மணிவரையில் "சைவசித்தாந்தம்."

## சைவசித்தாந்த மகாசமாஜம்.

இச்சமாஜம் உலகத்து எப்பாகத்துள்ள சைவரும் அங்கத்தவர்களாக இருக்க இடந்தந்து நடைபெறுவதொன்றாகும். இவ்விதப் பெரியதோர் சமாஜத்தில் சைவர் யாவரும் (வறிஞர்முதல் தனிகர் வரையில்) அங்கத்தவராக இருக்கவேண்டும் என்னும் கருத்துப்பற்றியே வருடமுற்றிற்கும் நியமித்துள்ள சந்தா ரூபா ஒன்றேயாம். இவ்வாறு ரூபா ஒன்றை ஒவ்வொரு சந்தாதாரிடமும் பெற்று, அப்பொருளால், பத்திரிகை ஒன்று பிரசுரித்துச் சைவர் பலர்க்கும் (அங்கத்தவர்களுக்கு) அனுப்பி, சைவத்தின் தன்மையை யறியும்படிச் செய்தல் தகுதியென சமாஜத்தின் நிர்வாகசபையார் எண்ணியபடி கடந்த வருடமுதல், "சித்தாந்தம்" என்னும் பத்திரிகையை வெளியிட்டு அனுப்புகின்றார்கள். அவ்வாறு அனுப்புவதில் அங்கத்தவர்கள் தபாற்கூலி தருதல்வேண்டும் ஆதலால் அதற்கு அணா நான்கும், வருடச்சந்தா ரூபா ஒன்றும் சேர்த்து ஆகரூபா ஒன்று அணாநான்கிற்கு வருடமுதலில் மூன்று மாதங்களுக்குள் சஞ்சிகைகளை வி. பி. தபாலில் அனுப்பிப் பொருளைப்பெறும்படி முயற்சிசெய்யப்படுகிறது. அன்றியும் பத்திரிகை தமிழில் வெளிவருவதால் தமிழறியாத சைவரும், அங்கத்தவர்களாகமாத்திரம் இருந்து ரூபா ஒன்று தருதல்கூடும். இவை அறியாத சைவர் பலர் தமக்குப் பத்திரிகை வாசிக்கப் பொழுதில்லையென்றும், பத்திரிகை முற்றும் வந்தபிறகே பொருள் தருதல் கூடும் என்றும், பத்திரிகை தமிழில் இருப்பதால் வாசிப்பதற்கில்லையென்றும் கூறி, தாம் அங்கத்தவர்களாக இருக்கமுடியாதென்கின்றார்கள். இனி இவ்வுண்மையை இப்பத்திரிகையை வாங்கி வாசிக்கும் அங்கத்தவர்களே அறிதல்கூடும் ஆதலால் மற்றையர்க்கு இச்சமாஜத்தின் அங்கத்தவர்களும் அத்தியட்சர்களும், கௌரவ உபந்யாசகர்களும் தமது பிரசங்கமழையால் அறிவிப்பார்கள் என்று விரும்புகிறேன். மேலும் சமாஜம் அங்கத்தவர்க

ளிடமிருந்து பெறும்பொருளைத் துண்டுப் பத்திரிகைகளையும், பத்திரிகைகளையும், பிரசுரிப்பதிலும், உபந்நியாசகர்கள் வந்த காலத்தே அவர்து உபந்நியாசங்களைத் தெரிவிக்க அச்சிடும்விளம்பரத் துண்டுகளிலும் செலவழித்து வருகின்றார்கள். இத்தகைய செய்கைகள் வருடமுற்றும் நிறைவேறுதற்கு அங்கத்தவர்கள் கொடுக்கும்பொருளே காரணமாக உள்ளது. ஆதலால் சற்றேறக் குறைய 1500 அங்கத்தவர்கள் இருந்தாலன்றி வருடமுற்றும் இப்போது செய்துவருவதுபோல் செய்துவருதற்குப் பொருள் முட்டுப்படுமோவென மிகுதியும் அஞ்சுகின்ற எனது அச்சத்தைத் தீர்க்கும்படி ஒவ்வொர் அங்கத்தவரும் பெருமுயற்சி கொண்டு நூற்றுக் கணக்காகிய அங்கத்தவர்களைச் சேர்ப்பார்கள் என்று அவர்கள் பொன்னடிகளை வாழ்த்துகின்றேன்.

இங்ஙனம்.

கி. குப்புச்சாமி,

காரியதரிசி,

கிருஷ்ணம்பேட்டை,

திருவல்லிக்கேணி போஸ்ட்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி உ.] 1913-ஞு ஏப்ரல்மீ [பகுதி ச.

## சித்தாந்தபரிபாஷை
## என்னும்
## தருக்கசோபானம்.

தன்வேதனைக்காட்சி * நுகர்ச்சிக்காட்சி.

விடயங்களாகிய சுகதுக்கங்களை வித்தியாதத்துவமானது ஆன்மஞானத்தினிடத்திற் செலுத்த நான்சுகி நான் துக்கி யென்பது முதலாகிற ஞானம்.

யோகக்காட்சி-தவக்காட்சி.†

இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானங்களுடன்கூடிய சமாதியிலிந்திரியங்கள் சேவியாதபடியிருந்து தேசங்களையும், செல்கால வருகாலங்களின் தன்மைகளையும் அன்னிய தேயங்களிலுண்டான வியாபாரங்களையும் இருந்தவிடமிருந் தெல்லாவற்றையு மறியத்தக்க வறிவு.

சித்காட்சி-உயிர்க்காட்சி.

மலபந்த மில்லாத சிற்சத்தியோ டான்மாவிற்கு நித்தியசம்பந்தமிருப்பதனா லதனாலுண்டாகிய ஆன்ம பிரத்தியட்சஞானம்.

பிரத்தியட்சப்போலி-Fallacy of the Perception.

கண்டுணராமை-சிலபொருளைக் கண்டவற்றின் பெயரறியாதிருத்தல்.

---

* தன்வேதனைக்காட்சி யானதக்காட்சியி லடங்கு மென்பாருமுளர்.

† தவம் தவு என்னும் வினையடியாகப்பிறந்து உலகவின்பங்களை கெடுப்பது எனப் பொருள்படுதலால் இது தமிழ்ச்சொல்லேயாம். இவ்வுண்மையறியார் வடமொழி யென்பர்.

உணர்ந்ததையுணர்தல்-முன்பு குளிர்வந்துற்றகாலத்து நெருப்பு மருந்தென் றறிந்தவன் பின்பதற்கிது மருந்தென்றுணர்தல்.

நினைப்பு குழவிப்பருவத்தே தாய்தந்தையரை யிழந்தோன் காரணங்கருதாது நினக்கின்னார் தாய்தந்தையரென்று பிறர் சொல்ல வதனைக் கருதிக்கோடல்.

பிரத்தியட்ச முடிந்தது.

---

## அனுமானம்—கருதல்.

### Inference.

உரைத்தவற்றைப் பிரமாணமாகக்கொண்டு உரையாத (மறைந்த) பொருளை யறியும் ஞானம். இதன்வகை சுவார்த்தானுமானம், பரார்த்தானுமானம், பூர்வானுமானம், அனுமானுனுமானம், ஆகமானுமானம் எனஐந்தாம்.

சுவார்த்தானுமானம்-For ones ownself.

தன்பொருட்டுக்கருதல்.

மூன்றேதுக்களி னொன்றுடைய பொருளைப் பக்கமூன்றினும் வைத்து ஒருவனுணரு முணர்ச்சி.

ஏதுக்களாவன இயல்பு, காரியம், அனுபலத்தி. *

இயல்பு - Coexistence - மா முதலிய சொற்கள் மாமுதலிய பொருளையுணர்த்துதற்கண் வேறுகாரணமின்றி அச்சொற்களினியல்பானுளதாகிய வாற்றல்.

காரியம் - Succession - புகைமுதலிய காரியங்கள் நெருப்பு முதலிய தத்தங் காரணங்களை யுணர்த்துதற்கண் அவை பொருந்துதல்.

அனுபலத்தி—Non-existence-குளிரில்லாமை முதலிய காரியபாவங்கள். பனியில்லாமை முதலிய காரணாபாவங்களை யுணர்த்துதல். பக்கமாவன-பக்கம், சபக்கம், விபக்கம் என மூன்றும்.

மணவழகு.

---

* இம்மூன்று முறையே- தர்மாதர்மி யனுமானம், காரியகாரணானுமானம், காரணகாரியானுமானம் எனவும்படும்.

## ஸ்ரீ பர்வதம்.

(முன் தொடர்பு தொகுதி 2, பகுதி 3, பக்கம் 75:)

பெரும்பாலும் மலையில் மூங்கில்களும் பலவிதவிலையுயர்ந்த மரங்களும் அடர்ந்துள்ளன. இக்குன்றுகளிலும் காடுநெருங்கிய இடங்களிலும் சொந்தமாய் வசிக்கும் செஞ்சுகள் (ஏனாதிபர்கள்) என்னும் ஜாதியர் இக்காட்டின் விளைபொருள்களை அனுபவிக்கிறார்கள். ஸ்ரீ சைலத்திற்குப் போகும்வழியில் இந்தச் செஞ்சுகள் ஜாதியார் ‘கூடங்கள்’ எனும் மூன்றிடங்களில் வசிக்கிறார்கள். நாகலுடிக்கருகில் ஒன்று. பெத்த செருவுக்கருகே ஒன்று. ஸ்ரீ சைலத்திற் கருகே ஒன்று. இந்த வழியாய்ச் செல்லும் யாத்திரை வாசிகளிடமிருந்து ஒருதலைக்கு ஒரு அணாவீதம் வரிவாங்குகிறார்கள். இவ்வனாந்தரத்தில் யாத்திரைவாசிகளையும் அவர்கள் சொத்துக்களையும் காப்பதற்காக இவ்வரி என்று சொல்லுகிறார்கள். அவர்கள் யோக்கியதையைப்பற்றிப் போலீஸ் இன்ஸ்பெக்டரே மெச்சுகிறார். கீழ்நாட்டிலுள்ள ஏனைய வாசிகளுக்கும் இக்குன்றுவாசிகளுக்கும் அதிக வித்தியாசமில்லை. லங்கோடு தவிர இவர்கள் வேறு உடுக்கிறதில்லை. பெரியதோர் துணியை மேலே தோள்மேல்வாரிப் போட்டுக்கொள்கிறார்கள். கொண்டமுடிச்சு என்கிற மாதிரியாய் ஒருவிதமாக மயிர்முடி போடுகிறார்கள். மதுரை முதலான இடங்களில் இவ்வித உடுப்பு பழைய சித்திரங்களிற் காணலாம்.

இவர்கள் ஒருவாற்றானும் நாகரீகமிலாத பூர்வீகராகார். பழமை நாகரீகமுடைய ஜாதியராய் இருத்தல் வேண்டும். இக்குன்றுகளிலேயே வசித்து வந்தபழக்கத்தால் நாகரீகம் குறைவடைந்தார்கள். ஸ்ரீகள் சுமாரான உடுப்பு உடையவர்கள். குறிஞ்சி நாட்டார்களாதலின் அவர்கள் வழக்கமாயுள்ளது காந்தர்வ விவாகம். ஆடவரும் பெண்களும் திரிந்துகொண்டிருக்கும்போது ஒருவருக்கொருவர் பழக்கமுடையராய்த் தாங்களே மணம் ஒன்றுபடுகிறார்கள். இவர்கள் கலந்து சின்னாட்கழித்துத் தெரிந்தபோது சிலரை வரவழைத்து விருந்துசெய்து கலியாணத்தைத் தெரிவிக்கிறார்கள்.

குறிஞ்சிப்பாட்டில் இதைக்காணலாம். சுற்றிலுமுள்ள தேச இயற்கை சௌகரியமாயிருத்தலாலும் ஜனங்களும் மிகக்குறைவாயிருத்தலாலும் போக்குவரவுக்குரிய சுதந்தரம் அதிகமாயுள்ளதாலும் இம்மாதிரியான ஜாதியாருள் இவ்வித கலியாணமே நேர்தல் சகஜம். நம்முடைய கவிவாணர்களும் நியாயவாதிகளும் இந்த இந்தமாதிரி கலியாணம் இந்த இந்தத் திணைக்குரியது என்று கொள்கிறார்கள். நண்பர் ஸ்ரீ. தி. வீரபத்திரமுதலியாரும் ஏனோ நம்புலவர்கள் மருதநிலத்தில் தாசிகளையும் வேசையர்களையும் மாக்களாக்குகின்ற கட்டாயம் என்று ஆச்சரியப்படுகிறார். ஆயினும் கட்டாயம் என்பது இல்லை. அவர்கள் அபிப்பிராயத்தின்படியும் மருதநிலம் நெல்வயல் நிறைந்துளதாகலின் செல்வமும் ஆடம்பரமும் உண்டாகும், கூடவே நாகரீகமும் பரத்தையர்ப்புணர்தலும் வரும். ஆதலால் நாகரீகமுள்ள நகரங்களைப்பற்றிக் கூறும்போதெல்லாம் இக்காமக்கிழத்தியர் சிறப்பும் உடன் கூறுவதுமரபாக்கொண்டார் ஆயினும் திணைமயக்கம் என்பதற்கும் வேண்டிய அளவு இடங்கொடுக்கிறார்கள்.

மஹாநந்தி என்னும் ஸ்தலத்தில் மகிமையுள்ள தீர்த்தமும் கோயிலும் உண்டு. ஸ்ரீ சைலத்திருந்து திம்பிவரும் யாத்திரைவாசிகள் இதன் வழிபாய்ப்போகின்றார்கள். நந்தியாலிலிருந்து இது சுமார் 9 மைலுள்ளது.

முக்கியமான விசேஷம் யாதெனில் இத்தீர்த்தத்திலிருந்து சதா ஊற்றுசுரந்து இரண்டுபெரிய கால் வழியாக ஓடுகிறது. ஜலம் கொஞ்சம் உஷ்ணமுள்ளபோதிலும் வெகு சுத்தமாயும் தெளிவாயும் உள்ளது. சுத்தப்பளிங்குபோல் இதனிடத்தில் சூரியகிரணம் பிரதிபிம்பிக்கிறது. தீர்த்தத்தின் அடியில் நீந்தும்போது வானவில்லின் வர்ணங்களைக் காணலாம். 5 அடிசுற்றிலும் ஆழமுள்ளது. ஸ்நானம் பண்ண ஆரம்பித்தால் வெளியே ஏறப்பிரியம் வராது. அடியிலே ஒரு ஊசி இருந்தாலும் தெரியும். ஜலத்தை எவ்வளவு அசுத்தமாக்கினாலும் க்ஷணப்பொழுதில் தெளிந்துவிடும். ஜலத்திலும் அடியிலும் அணுவளவும் அழுக்கில்லை. ஜலத்தில் விழும் இலை முதலியவை அடித்துக்கொண்டு போகப்படுகின்றன. காண்பவர்களும் இதன் காரணம் உணர்ந்திலர். ஜலத்தின் நிலைக்



குச்சரியாய் கண்ணைவைத்துப்பார்ப்போமாயின் ஜலத்தின்மேல் கொப்பளிக்கும் காற்று தோன்றுகின்றது. இது அழுந்திக்கிடக்கும் வாயுநீரோடு வெளிப்படுவதே பெரியகுமிழிகளும் கிளம்புகின்றன. ஊற்றின் வேகமும் இந்தக் காற்றும் சேர்ந்து இலை, அழுக்கு முதலியவைகளை நீக்கிவிடுகின்றது. கால்வாய் வழியாய்க் கொண்டுபோய் விடுகிறது. இவ்வூற்று ஜலம் எவ்வளவோ நிலங்களுக்கு எஞ்ஞான்றும் சாகுபடிக்கு உபயோகமாகிறது. இங்கே நம்புலவர்கள் வர்ணிக்கும் வழக்கத்திற்கு ஒரு உதாரணம். காடும் மலையும் நாடும் சேர்ந்துள்ள காட்சியே திணைமயக்கம். குறிஞ்சியும் முல்லையும் மருதமும் ஒரே இடத்துக் கலந்துள்ளது. இதனாற்றான் இவ்விடம் மிகமனோரம்மியமாயிருக்கிறது.

குறிப்பு—ஸ்ரீமான். J. M. நல்லசுவாமி பிள்ளை B.A. B.L. அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டதை மொழிபெயர்க்கப்பட்டது.

மோ. கந்தசாமி முதலியார்.

---

## ஜீவகாருண்யவொழுக்கம்.

(முன் தொடர்பு தொகுதி 2, பகுதி 3, பக்கம் 81:)

அன்றியும் காசத்தால் ஒளிமழுங்கப்பட்டு உபநயனங்களாகிய கண்ணாடியால் பார்க்கின்ற கண்கள் துன்பவிஷயங்களைக் கண்டபோது அக்கண்கள் நீர் சொறியுமேயல்லது கண்ணாடி நீர்சொறியாது. ஆகலில் ஆன்மதிருஷ்டிக்கு உபநயனங்களாகவிருக்கிற மனமுதலிய கருவிகள் சுகதுக்கங்களை அனுபவிக்க அறியாவென்றறியவேண்டும். ஒருஜீவனுக்குச் சுகம் நேரிட்டபோது மனம் மகிழ்கின்றது. துக்கம் நேரிட்டபோது மனந்தளர்கின்றது. என்றால் சுகதுக்கங்களையும் மனம் அனுபவிப்பதாக அறியப்படாதோ என்பவர்க்கு உத்தரம் யாதென்றறிய வேண்டில் பளிங்கு வீட்டினுள் இருக்கின்ற வீட்டுத்தலைவனுடைய தேகவிளக்கமும் தேகச்சோர்வும் அந்தவீட்டிற் பிரதிபலித்துப்புறத்தில் தோன்றுவது போலவும் கண்களின் மலர்ச்சியுஞ் சோர்வும் அக்கண்களிலிட்ட உபநயனங்களின் பிரதிபலித்துப்புறத்தில் தோன்றுவதுபோல்வும் சுக

160950

துக்கங்களால் ஆன்மாவுக்கு உண்டாகின்ற மகிழ்ச்சியும் தளர்ச்சியும் மனம் கண் முதலிய கரணேந்திரியங்களிற் பிரதிபலித்துப் புறத்தில் தோற்றுகின்றது.

அன்றியும் ஒரு வீட்டினுள் வைத்ததீபமானது மிகுந்த விளக்கமுள்ளதாக விளங்குகின்றபோது அந்தவீடும் அந்த வீட்டின் கருவிகளும் மிகவும் விளக்கமுள்ளதாக விளங்குகின்றன. அந்தத்தீபம் விளக்கம் குறையும்போது வீடும் வீட்டினுள்ளவைகளும் விளக்கம் குறைகின்றன. ஆகலில் சுகதுக்கங்கள் மனத்துக்கு அநுபவமல்லவென்றும் ஆன்மாவுக்கே அநுபவமென்றும் அநுபவத்திற்கு கரணேந்திரியங்கள் ஆன்மாவுக்கு உபகாரகருவிகளே பிரமாணிப்பதே உத்தமமென்றறிய வேண்டும்.

கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவர்களில் அநேகர், பசி கொலை, பிணி முதலியவற்றால் மிகவுந்துன்பப்படுவது எதனாலென்றறியவேண்டில் முன்தேகத்தில் ஜீவகாருண்ய ஒழுக்கத்தை விரும்பாமல் விட்டுக் கட்டின அறிவுள்ளவர்களாகித் துன்மார்க்கத்தில் நடந்த ஜீவர்களாதலால் கடவுள் விதித்த அருளாக்கினைப்படி பசி, கொலை, பிணி முதலியவற்றால் மிகவுந் துக்கப்படுகின்றார்களென்றறியவேண்டும்.

முன்தேகம் உண்டென்பது எப்படியென்றறியவேண்டில் ஒரு வீட்டில் குடிக்கூலிக் கொடுத்துக் குடியிருக்க வந்த ஒரு சமுசாரி அதற்கு முன்னும் வேறொரு வீட்டில் குடிக்கூலிக் கொடுத்துக் குடித்தனம் செய்திருந்தானென்றும் வீடில்லாமல் குடித்தனம் செய்யமாட்டானென்றும் பின்வந்த வீட்டினும் கலகம் நேரிட்டால் திரும்பவேறொரு வீட்டில் குடிபோவானென்றும் தனக்கென்று சுதந்தரமாக ஓர் வீடுகட்டிக்கொண்டால் முன்போல் குடிக்கூலிக் கொடுத்துக் குடிபோவதை விடுவானென்றும் அறிவதுபோல இந்தத்தேகத்தில் ஆகாரக்கூலிகொடுத்துக் குடியிருந்த ஜீவன் இதற்கு முன்னும் வேறொருதேகத்தில் அந்தக்கூலி கொடுத்து ஜீவித்திருந்ததென்றும் தேகமில்லாமல் ஜீவித்திருக்கமாட்டாதென்றும் இந்தத்தேகத்திலும் கலகம் நேரிட்டால் இன்னம் வேறொரு தேகத்திற் குடிபோகுமென்றும் தனக்கென்று சுதந்தரமாக நித்தியமாகிய



அருட்தேகத்தைப் பெற்றுக்கொண்டால் பின்புவேறொரு தேகத்தில் குடிபோக மாட்டாதென்றும் அறிய வேண்டும்.

சிலர் முன்தேகம் எடுத்தும் பின்தேகம் எடுப்பதும் இல்லை. இப்பொழுது எடுத்ததேகம் அழிந்தால் தேகியும் அழிந்துவிடுவானென்றும் சிலர் முத்தியடைவானென்றும் சிலர் பாவபுண்ணியங்களை எக்காலத்தும் அநுபவிப்பானென்றும் சிலர் தேகம் இல்லாமல் தேகம் அழிந்தவிதத்திருப்பானென்றும் பலவாறுவாதிப்பது எதனாலென்றறிய வேண்டில், அவரவர்களும் தேகமே ஆன்மாவென்றும் போகமே முத்தியென்றும் கொள்ளப்பட்டவர்களாதலால் மூடமாகிய தேகத்தில் அறிவாகிய ஆன்மாவொருவன் உண்டென்றும் அவனுக்குப் பந்தமுத்தி உண்டென்றும் முத்தியடைகின்ற பரியந்தம் பந்தவிகற்பத்தால் வேறு வேறு தேகம் எடுப்பானென்றும் பிரத்யட்ச அநுபவமான பிரமாணங்களால் உண்மையை அறிந்துகொள்ளப் பாடாதவர்களென்றும் அவர்கள் கொள்கைக்குப் பிரமாணமும் யுத்தியும் அநுபவமும் இல்லையென்று அறிய வேண்டும்.

ஜீவர்கள் தங்கள் சுதந்தரத்தாலே தேகபோகங்களை யடைகின்றார்களென்றால் தங்கள் இச்சைக்கடுத்த தேகங்களையும் போகங்களையும் அடையவேண்டும். அப்படியின்றிச் சிலர் இச்சைக்கடுத்த பழுதற்ற அங்கமுள்ளவர்களாகவும் சுகங்களையநுபவிக்கின்றவர்களாகவும் சிலர் இச்சைக்கு அடாத பழுதுள்ள அங்கமுள்ளவர்களாகவும் துக்கங்களை அநுபவிக்கின்றவர்களாகவும் இருக்கின்றார்கள். ஆகலில் ஜீவர்கள் தேகபோகங்களைத் தங்களிச்சையால் அடைந்தவர்களல்லவென்றும்; அப்படியடைவது இயற்கை என்றால் இயற்கை என்பது எக்காலத்தும் வேறுபடாமல் ஒருதன்மையாக இருத்தல் வேண்டுமென்றும்; அப்படி ஒரு தன்மையாக இராமல் பலவேறு வகைபடுதலால் இயற்கையல்லவென்றும்; கடவுள் இச்சையென்றால் கடவுள் கருணையும் நீதியும் உடையவராதலில் எல்லாச் சீவர்களுக்கும் ஒரு தன்மையாகச் சுக அநுபவங்களையே அடைவிக்கவேண்டும், அப்படிபடைவிக்காமையால் கடவுளிச்சையல்லவென்றும்; கடவுளருளால் சிருஷ்டித்த முதல் சிருஷ்டியில் நடந்து இயற்கை அநுபவிக்கும்படி விதித்த விதிகளைப்

பழகாமையால் முயற்சி தவறினபடியால் அந்த அநாதிமல வாசனையின் முயற்சி பேதங்களால் பின் பல பல தேகபோகங்கள் இரண்டாவது சிருஷ்டியில் நேரிட்டதென்றும் பிரமாணித்தறிய வேண்டும்.

எடுத்துக்கொண்ட தேகம் தவறினால் வேறு தேகம் எடுப்பதில்லையென்றால் முதல் சிருஷ்டித்தொடங்கி இது வரையில் அழிந்ததேகங்களுக்கு அளவில்லை; அப்படியே ஆன்மாக்களுக்கும் அளவில்லை. ஆகவே இனி ஆன்மாக்கள் தேகங்களை எடுக்காமலிருக்க வேண்டும். அப்படியில்லை தேகங்களை எடுத்துக்கொண்டேயிருக்கிறார்கள் ஆயின் ஆன்மாக்களை நூதனமாகச் செய்து அது வருவதற்கு நூதன நூதனமாகத் தேகங்களை வருவிப்பதென்றால் நூதன நூதனமாகத் தேகமாத்திரம் செய்யக்கூடும். தேகத்திலிருக்கிற ஆன்மாவை நூதன நூதனமாகச் செய்யப்படாது. ஆன்மா எக்காலத்தும் உள்ளதாய் விளங்கப்பட்டது. அது தோன்றுதலும் அழிதலுமில்லை. அதை ஆக்கவும் அழிக்கவும்படாது. ஆன்மாக்களும் குடத்தைப்போல் செய்யப்படுவதானால் சுகதுக்கங்களை அனுபவிக்கவழியாது புண்ணிய பாவங்களை அடையமாட்டாது. குடம் அழிவதுபோல் அழிந்துபோய்விடும். அழியுமானால் பந்தமுத்திகளுமில்லை. புண்ணிய பாவங்களுமில்லை. ஆதலால் குடம் உடைகின்றபோது குடத்தினுள் இருந்த காற்றும் ஆகாயமும் உடையாமலிருந்தது சிறுவர்களுக்கும் தெரியும். ஆகலில் தேகம் அழியும்போது தேகத்தினுள் இருக்கின்ற ஆன்ம விளக்கமும் கடவுள் விளக்கமும் அழியாதென்றும், ஆன்மாக்கள் முயற்சி பேதத்தால் தேகபோக பேதங்களையடைவது உண்மையென்றும் புத்தியால் அறியவேண்டும்.

ஒரு தாய்தந்தைகளுக்கு ஒரு காலத்தில் இரட்டைப் பிள்ளை பிறக்கின்றது. அவற்றுள் ஒரு பிள்ளை சிவந்தது. ஒரு பிள்ளை கறுத்தது. ஒரு பிள்ளை அங்கப்பழுதுள்ளது. ஒரு பிள்ளை அங்கப்பழுதில்லாதது. ஒரு பிள்ளைபால் குடிக்கின்றது. ஒரு பிள்ளை பால்குடிக்கில் சத்தம் பண்ணுகின்றது. ஒரு பிள்ளை வியாதியுள்ளது. ஒரு பிள்ளை வியாதியில்லாதது. ஒரு பிள்ளை இரண்டுவயதில் பேசுகின்றது. ஒரு பிள்ளை பேசத்தெரியாமலிருக்கின்றது.



இந்த இரட்டைப்பிள்ளைகளுக்கு இந்த பேதம் எவ்விடத்தில் யாதொரு ஏதுக்களுமில்லாமல் வந்ததை யூன்றி விசாரிக்கில் முன்பிறப்பில் எடுத்ததேகத்தின் கர்மமாகிய முயற்சி பேதங்களென்றும் இந்த இரட்டைப்பிள்ளைக்கு மூன்று வயதில் விளையாடும்போது தனித்தனி தாய் தந்தைகள் கொடுத்த தின் பண்டங்களை வைத்துத் தின்ற தருணத்தில் இவ்விரண்டு பிள்ளைகளும் தவிர வேறுபிள்ளையொன்று வந்தால் அதைக்கண்டு இவ்விருவரில் ஒரு பிள்ளை தன்கையிலிருக்கின்ற தின்பண்டத்தைக்கொடுக்கின்றது. மற்றொருபிள்ளை கொடுக்கப்படாதென்று தடுக்கின்றது. ஒரு பிள்ளை புத்தகத்தை எடுத்துச் சிறுவர் படிக்கின்றதுபோல் படிக்கின்றது. மற்றொருபிள்ளை புத்தகத்தைப் பிடுங்கி யெறிந்து படிக்கப்படாதென்று அடிக்கின்றது. ஒரு பிள்ளை பயப்படுகின்றது மற்றொருபிள்ளை பயப்படாமலிருக்கின்றது. இப்படியே இந்தப் பிள்ளைகளுக்கு தயை, அன்பு, அறிவு, செய்கை முதலியவைகள் தாய் தந்தையர்கள் கற்பிக்காத காலத்திற்றானே உள்ளதாகவும் இல்லாததாகவும் எப்படி வந்ததென்று விசாரிக்கத் தொடங்கில், இந்த இரண்டு பிள்ளைகளுக்கும் முன்பிறப்பில் எடுத்த தேகத்திலிருந்த வாசனை இந்தப் பிறப்பில் இந்தத் தேகத்தில் கற்பியாமல் வந்ததென்றும் அனுபவத்தால் கருதியறிய வேண்டும். இப்படியறிந்தால் ஜீவர்களுக்கு முன்னும் பின்னும்தேகமுண்டென்பது நன்றாகத் தெரியும். இப்படியறியமாட்டாமையால் பிறப்பில்லை என்கிறார்களென்றறிய வேண்டும்.

அன்றி யிந்தத் தூலதேகம் அழியாமலிருக்கின்ற போதே சொற்பனத்தில் ஆன்மா வேறு வேறு தேகமெடுத்துப் பல பல விசித்திரங்களை யனுபவிக்கின்றதானால் இந்தத் தேகம் நீங்கும்போது வேறுதேக மெடுத்து வாசனைக்கடுத்த அனுபவங்களை அனுபவிக்குமென்பதைச் சொல்ல வேண்டுவதில்லை.

அன்றி, சித்தி விசேஷத்தால் இந்தத் தேகத்திலிருந்த ஒருவன் இந்ததேகத்தை விட்டு வேறு தேகத்திற்குப் பிரவேசிக்கின்றான் என்றால் இந்த தேகம் அழியும்போது இதிலிருந்த ஆன்மா கன்மபேதத்தால் வேறுதேகத்தில் பிரவேசிக்குமென்பதைச் சொல்ல வேண்டுவதில்லை.

அன்றி ஒரு பட்சியானது காலவேற்றுமையாலும் குணவேற்றுமையாலும் முன்முட்டை யென்கின்ற ஒருதேகத்திலிருந்து பின்பு குஞ்சு என்கின்ற மற்றொரு தேகத்தினால் வருகிறதானால் ஆன்மாக்கள் கர்மபேதத்தால் இந்தத் தேகத்திலிருந்து வேறு தேகத்தில் வருமென்பது சொல்லவேண்டுவதில்லை.

அன்றி ஒரு குளவியால் ஒரு கிருமி புழு வென்கிற தேகத்திலிருந்து குளவியென்கிற தேகத்தில் வருமானால் கருமத்தினால் ஒரு ஆன்மா ஒரு தேகத்திலிருந்து மற்றொரு தேகத்தில் வருமென்பதைச் சொல்ல வேண்டுவதில்லை.

அன்றி ஒரு ஆன்மா ஒரு பிறப்பிற்றானே சிசுதேகத்திலிருந்து பாலதேகத்திலும் பாலதேகத்திலிருந்து வாலீபதேகத்திலும் வாலீபதேகத்திலிருந்து வார்த்தீபதேகத்திலும் வருமானால் அந்த ஆன்மா கன்மபேதத்தால் வேறு பிண்ட தேகத்தில் வருமென்பதைச் சொல்லவேண்டுவதில்லை.

அன்றி மந்திர தந்திரபேதத்தால் ஒரு பிறப்பிற்றானே பெண் தேகத்திலிருந்து ஆண்தேகத்திலும் ஆண்தேகத்திலிருந்து பெண் தேகத்திலும் ஆன்மாக்கள் வருமானால் கர்மபேதத்தால் வேறு தேகம் எடுக்கும் என்பது சொல்ல வேண்டுவதில்லை.

இது வடலூர் இராமலிங்கஸ்வாமிகள் எழுதிவைத்திருந்த குறிப்பினுட் கண்டது.

(இன்னும் வரும்)

காஞ்சி:—நாகலிங்க முதலியார். F.M.T.S.

## தாயான சருக்கம்.

பல வளங்களும் நிறைந்த பரதகண்டத்திற்குத் திலகம் போன்ற சோழநாட்டின் கண், அளகைத்தலைவனாகிய குபேரனும் விரும்பிப் பட்டினத் தடிகளாகத் தோன்றிய தவமுடையதும், மணம்புரி மனைவியைச் சிவனடியாராகவந்த சிவபெருமானுக் கீந்து, தம்மை எதிர்த்த உறவினர் யாரையும் தடிந்து இறைவன் திருவடிப்போதே தஞ்சம் என்றடைந்த இயற்பகை நாயனார் அவதரிக்கும் ஏற்றத்தை யுடையதுமாகிய காவிரிப்பூம் பட்டினத்தில், முல்லை மாலையைத்தரித்த வணிகர்குலத்து, அழ



கெலாம் நிறைந்து பெரும் பொருள் பெற்ற அரதனகுத்தன் என்பான் ஒருவன் இருந்தான். இவன் இடம் பொருள் ஏவலாகிய பல செல்வங்கள் பெற்றிருந்தும்.

"பெறும வற்றுளியாமறிவதில்லை
யறிவறிந்தமக்கட் பேறல்லபிற"

என்றும் பெருநாவலர் வாக்கின் வண்ணம், புத்திரச் செல்வம் ஒன்றைப் பெறாது வருந்துவானாகி எல்லாச் செல்வங்களையும் தரும் இறைவனாகிய சிவபெருமானைத் தியானித்துப் பலவித அறங்களையும் செய்வான் ஆயினான். இமையவர் முதலோர் எங் குடிமுதலேயெனப் பலமுறையேத்தும் இமையவர்த்தனியின் நாயகனாகிய எம்பெருமானை எண்ணி எண்ணரியதவங்கள் செய்தும், ஆண்மகவைப்பெறும் நற்றவம் ஒன்றை முன்செய்திராத இவ் வரதநகுத்தன் பெண்மகவு ஒன்றைப் பெற்றான். இவ்வணம் தனக்கு அரியதோர் தவத்தால் கிடைத்த தன்பெண்ணினை மிகப்போற்றிவளர்த்து, அப்பெண் நாயகனை அடையக் கூடிய மணப்பருவத்தை யடைந்ததை அறிந்த அரதநகுத்தன் தன்னருமகளைத் தன்குலத்திற்கும் வளத்திற்கும் தக்கவன் ஒருவனித்திரிசிராமலையி லிருந்த தநகுத்தன் என்பானுக்குமணம் பேசி, தன் இல்லத்தில்வதுவையை மகிழ்ச்சியுடன் முடித்தான். மணம்புரிந்த மணாளனாகிய தநகுத்தன் மதனும் இரதியும்போல் இளமைப்பருவத்தே துய்க்கவேண்டிய இன்பம்யாவும் இனிமை பெறத்துய்த்துச் சிலபகல் அங்கிருந்தபின்னர், தன்னூர்செல்லும் விருப்பமுடையனாகி, அதைத்தனது மாதுலனாகிய அரதநகுத்தனுக்கறிவித்தலும், அவனும்தனது மகளுக்குக் கொடுக்க வேண்டிய மகட்கொடையாவும் ஈந்து, பிரிவாற்றாது வருந்தும் மனைவியைத்தேற்றி, மருகனையும் மகளையும் திரிசிராமலைக்கனுப்பினான்.

பின்னர் தாய் தந்தையை விட்டுப் பிரிந்த தன்னாயகியின்துயரத்தைத்தனது இனியசொற்களால் மாற்றி எவரும் விரும்பும் வளம் பொருந்திய தனது நகரமாகிய திரிசிராமலைக்குத் தநகுத்தனுந்தன் மனைவியுடன் சென்று அடைந்தான். தன் வீடுசேர்ந்த தநகுத்தன் இல்லறத்தை நல்லறமாக நடத்திவருங்காலத்து

இளமை செல்வம் தேகம் முதலியவையாவும் நீரில் குமிழியைப் போலும், அந்நீரில் தோன்றும் அலைகளைப்போலவும், எழுத்தைப்போலவும் என்று அறிந்தவனாதலால், தன்மனைவியுடன் உயிர்க்குறுதியைத்தரும் ஒண்பெருஞ் சுடராகிய திரிசிராமலைத் தலைவன் எழுந்தருளியிருக்கும் திருவாலயத்திற்கு வெள்ளிக்கிழமை தோறும் சென்று வணங்கவேண்டும் என்று கூறலும் அவளும் அவ்வாறே செய்து வருவாள் ஆயினள். இவ்வாறு இருவரும் ஒழுக்கந்தவறாது உலகோர் விரும்பும் இல்லறத்தை நடத்திவரும் நாளில் காவிரிப்பூம்பட்டினத்தினின்றும் அரதநகுத்தன் அரவாபரணன் திருவடியடைந்தனன் என்றும் ஓலையைக்கண்டு தந்தையையிழந்தமங்கை தன்னுயிர் நீங்கப்பெறுபவள்போல் பதைபதைத்துக் கண்களினின்றும் ஊற்றுநீர்போல் ஜலம் தோன்றி மார்பெலாம் வழிந்து ஓடத் தன் தாயை நினைத்து "என்னை ஈன்றெடுத்து என்னுயிர்தன்னுயிராகப் பாதுகாத்த என் அன்னையே, உடலும் உயிரும்போல் விட்டுப்பிரியாது உன்னுடன் வாழ்ந்த உன் கணவனைப்பிரிந்து நீ எவ்வாறு உயிர் தரித்துள்ளாய், ஆணை விட்டுப்பிரிந்த அன்றில் ஆயினையோ அழகெலாம் திரண்ட உன்மேனி பாதாயிற்றோ, அன்னாய், அன்னாய்," என்று அலறி அழுதனள். தீயில்விழுந்த புழுப்போலவும் வேடுவன் அம்பேறப்பெற்ற மான்போலவும் வருகின்ற தன் மனைவியைக் கண்ணுற்ற தநகுத்தன் பல நீதிமொழிகளாகிய வசனங்களால் அவளைத் தேற்றி, பழமைபோல் இல்லறம் நடத்தும் நாளில், கடலிடைக்கவுத்துவ மணிதோன்றியதுபோல் காரிகைவயற்றுக் கருப்பந்தோன்றியது.

இவ்விதம் கருக்கொண்ட மங்கையினிடத்துக் கருக்குறிகளெல்லாம் தோன்றி "முத்தணிகொங்கை முகங்கள் கறுத்தாள் பொய்த்துகில் கொண்டுபுளிப்புமுவந்தாள்" என்றபடி முலைக்கண்கள் கருநிறங்கொண்ட சூதுக்காய்போல் கறுத்து, பசலை பூத்துப்பகலுறக்கங் கொண்டு புளித்தவைகளையே உண்ணும் விருப்பினளாய் நின்றதை யறிந்த தநகுத்தன் காவிரிப்பூம் பட்டினத்தில் வசிக்கும் அவள் தாய்க்கு அதை அறிவித்தான். இதனையறிந்த தாய் மிகுதியும் மகிழ்வெய்திக் காவிரிப்பூம்பட்டினத்



தைவிட்டு, திரிசிராமலையில்வசிக்கும் தன்புதல்வியைப் பார்க்கும் வண்ணம் புறப்படலும் கார்காலத்து மேகமானது வருஷித்து ஊழி வெள்ளம்போல் காவிரி இருகரையும் வெள்ளம்புரண்டுவந்தது வெள்ளம் நீங்கும் வரையும் தாய் வருதற்கில்லாது தாமதித்தலும், அரதநவதியாகிய மகள் இதனையறியாளாய், பிறந்தகம் செய்யும் பொருள் யாவுங்கொண்டு நம் தாய் இன்று வருவாள் நாளை வருவாள் என்று தோழியர் துணைபெற்றுவாழ்ந்திருந்தனள். நம் தாய் வருவாளானால் "அவள் எதிரே சென்று அவளைமார்புடனணைத்து மகிழ்வோம், விசையுடன் நடந்து வந்தகால்களைப்பிடிப்போம், பூரணச்சந்திரன்போன்ற முகத்தில் அரும்பும் வேயர்வையைத் துடைப்போம்" என்று பல வெண்ணி ஆவலுடன் தாய் வருகையை நோக்கி அரதநவதியிருக்குங் காலத்தில், எல்லாம் வல்லானாய், உயிர்கள் தோறும் நீக்கமற நிறைந்துள்ளானாய், நாரிபாகனாய், கடைமிடற்றண்ணலாய், கருணையங்கடலாய், சந்திரசேகரனாய், ஆயிரம்பேருளானாய், திரிசிராமலையில் எழுந்தருளிய சிவபெருமான் கூனிய முதுகில் நரைத்த கூந்தலானது அசைய, கையில் ஓர் தண்டத்தைக்கொண்டு நெற்றியில் வியர்வைதுளிக்க, நடக்குந்தொறும் இளைப்பின் மிகுதியால் நின்று நின்று நடந்து பெருமூச்செறிந்து தன்கையில் தாங்கிய கோலின் மீது தன்கூனிய உடல் எலாம் ஒடுக்கிப் புனிதமாகிய பலவித பண்டங்களும், எண்ணெய்க் கலங்களும் விலை மதிப்பேறப்பெற்ற ஆபரணங்களும் விலையில்லாத பட்டுகளும் ஆகிய இவைகளை இரண்டு பெண்கள் மீது சுமப்பித்து மாலும் அயனும் வணங்குதற்கரிய மான்மதநாதன் மண்ணிடை நடந்துவந்தான். இவ்விதம் தனக்கோர் தாயிலியாகிய தனிமுதல் தாயாகி வருவதைக் கண்ட அரதநவதி, துணுக்கென்றெழுந்து, தொழுதெதிர்சென்று, அன்னையின் இரண்டு பாதங்களிலும் விழுதலும், யார்க்கும் அன்னையாகும் அன்னை தன்மகளை இரண்டு கரங்களாலும் தழீஇக் கொண்டு உச்சி முகத்தையும் அணைத்து மோந்து காந்தள்போன்ற கரங்களை மேலிருத்தி அன்பின் மிகுதியால் கண்களினின்றும் நீரரும்பத் தன்னுடன் தழுதழுத்த வார்த்தைகள் பேசும் தன் மகளுடனிருந்தாள் பிறகு தாயுடன் எண்ணரிய பொருள்களைக் கொணர்ந்த

மங்கையரிருவர்களும் உண்ணுதற் கியைந்த அமுதம்போன்றஉண வளித்து உபசரித்துமகளும் இருந்தகாலத்து ஓர்நாள் மகள் கருப் பநோயுற்று பூரணச்சந்திரன் போன்ற குழந்தை ஒன்றைப் பெற வும் அதைத் தாயாகவந்த பெருமான் மருந்தொடுகட்டிய எண் ணெய் முதலியவை வார்த்துத் வழுதினங்கள் கழிந்த பிறகுதொட் டிலிட்டு முருகவேள் எனும்படி வளர்த்து வருவாளாயினள்.

எறும்பு முதல் யானையீறாகி ஆன்மாக்களையும் இந்திரன் முத லாய தேவரையும் இருந்த இடமிருந்து காக்கும் இறைவன் இவ் வாறு இருத்தலும் மழை நீங்கி ஆற்றில் வெள்ளங்குறைந்தது. அரதநவதியை மெய்யாகவே பயந்த அன்னையும் அங்குவந்து சேர் ந்தாள்.

இவ்வாறு அரதனவதியின் தாய்வருதலைக் கண்ணுற்ற மருமக னாகிய தநகுத்தன் ஓருருவைத் தாங்கி யிங்குக் காணப்படும் இருவ ரில் யாவர் உண்மைத்தாய் என்றுநினைக்குமுன் தாயும் வந்துசேர்ந்த னள். இவ்விதம் வந்து நின்றுளாய தாய் முன்னரே தாய்போல் எழு ந்தருளியிருக்கும் இறைவன் முன் உட்காருதலும் அரதநவதியான வள் இவ்விருவரில் நம்மைப்பெற்ற தாய் எவள் எனச் சந்தேகித்து நிற்றலும் இச்சைத்திருமேனி தாங்கிநின்ற அமலன் தனது திரு வுருக்கரந்தருளினன். இத்திருவிளையாடலைக் கண்ணுற்ற இந்தி ரன் முதலானோர் மலர்மழை சொரிந்து பலவாறு துதித்தனர். அரதநவதியும், தநகுத்தனும் பின்னர் நெடுங்காலம் தாயானசெல் வத்தின் திருவடியை வணங்கி அவன் திருவடி நீழலைபடைந்தனர். அவன் திருவடியை யடைந்தார் விரும்புவதை விரும்பிய அளவா கச் செய்யவல்லவன் இவனேயன்றி வேறுயாவர்தாம் வல்லவராவர். சுபம்.

தாயான சருக்கம் முற்றிற்று.

கிஷ்ணம்பேட்டை—குப்புச்சாமி.

---

## சிருட்டியில் மயக்க நிவாரணம்.

(முன் தொடர்பு தொகுதி 2, பகுதி 3, பக்கம் 85.)

சீவனுக்குத் தனக்கெனெ எந்தத் தத்துவ தாத்துவிகங்களை யாவது, அவற்றின் குணவியல்புகளை யாவது சிருட்டிக்குஞ் சக்தி அல்லது, சுதந்தரம் உளதா? என்று விசாரிக்கு மிடத்து அற்பமில்லை யென்றே சாத்திரப் பிரமாணத்தினாலும், அநுப வப் பிரமாணத்தினாலும் நன்குவிளங்குகின்றது. அருணூலாகிய திவ்வியாகமங்களில் இது நன்குபரிஷ்கரிக்கப் பட்டிருக்கின்றது. என்னை? ஸ்ரீமத் பௌஷ்கராகமத்தில், ஞானபாதம் உபதேசித்த ருளல் வேண்டும் என்று மகருஷிகள், ஸ்ரீபரமேசுரரைப் பிரார்த் திக்க, பரமேசுரர் ஞானபாதம் உபதேசிக்கத் தொடங்கி, முத லில் பதிஇலக்கணங் கூறுமிடத்தில் கீழ்வருஞ் சங்கோத்தரங் கள் நிகழ்ந்தன.

சுலோகம்.

ஈசுரர்: "அசேதனம் ஜகத்விப்ராஸ் சேதனப்ரோணம் விநா
ப்ரவ்ருத்தௌவாநிவ்ருத்தௌவா நஸ்வதந்த்ரம் ரதாதிவத்"
"யோத்ரப்ரவ்ருத்தகஸ்ஸக்த: ஸபதி: பரிபட்யதே"

பொருள்:—ஓ பிராமணோத்தமர்களே! பிரபஞ்சம் அசே தனம் (சடம்) சேதனனுடைய பிரேரணமில்லாமல் பிரவிருத்தி யாவது நிவிருத்தியாவது (தோற்ற ஒடுக்கங்கள்) அடையுஞ்சு வதந்தாமில்லாதது. ரதத்தைப்போல. (ஆதலால்), பிரவிருத்த கசக்தராயிருப்பவர் எவரோ அவர் பதிஎன்று சொல்லப்படுகி றார். என்பதாம்.

ருஷிகள்: "ஏவம்சேத்சேதனாஸ்ஸந்தி
புருஷாஸ்ஸர்வஸம்மதா:
தேஷாமேவாஸ்துகர்த்ருதவம்
கிமன்யேனவதேஸ்வரா"

பொருள்:—அப்படியானால், ஸர்வமதஸ்தராலுஞ் சம்மதிக் கப்பட்ட புருஷர் (ஆன்மாக்கள்) என்னுஞ் சேதனர் இருக்கின்

றனர். பிரோணகர்த்துருத்துவம் அவர்க்கிருக்கட்டும். அன்னியமாக (கர்த்தா) ஒருவர் என்னத்திற்கு? ஈசுரரே! சொல்லியருளல் வேண்டும். என்பதாம்.

ஈசுரர்: "அஜ்ஞோஜந்துரநீஸோயம்
ஆத்மாயஸ்மாத் த்விஜர்ஷபா:
ஸோபிஸாபேக்ஷயேவஸ்யாத்
ஸ்வரவ்ருத்தொளகடாதிவத்"
"இஷ்யதேஸகதம்கர்த்தா
தஸ்மாத்கர்த்தர்மஹேஸ்வர:"

பொருள்:—(நீங்கள் சொன்ன) இந்த ஆத்மாவானவன் எந்தக் காரணத்தால் அறியாதவனும், சனன மரணசம் சாரத்தொடக்குண்டவனும், அநீசுரனுமாயிருக்கின்றனோ, அந்தக் காரணத்தால், அவனும் தன் இயக்கத்திற்கு அன்னிய சகாயத்தை யபேக்ஷித்தவனுயிருக்கின்றான். கடத்தைப்போல, அப்படிப்பட்ட ஆத்மா (சுவதந்தரமாகக்கிருத்தியஞ் செய்யவல்ல) கர்த்தா என்று எப்படி இச்சிக்கப்படுவான்? ஆதலால், மகேசுரரே சிருட்டிக்குங்கர்த்தா ஆவர், என்பதாம்.

என்று, ஈசுரர் ருஷிகளுக்குப் பதிலுரைத்ததில், ஆன்மாவாகிய சீவன் எந்தத்தத்துவ தாத்துவிகங்களையாவது, அவ்ற்றின் குணவியல்புகளையாவது சுதந்தரமாகச் சிருட்டிக்க அசக்தன் என்று துணிவாயேற்படுகின்றது. இதனால், ஆகாயத்தின் கூறுகிய காமாதிகள் சீவசிருட்டியாகா என்னுமுண்மை நன்கு நாட்டப்பட்டது. அன்றியும், சீவனுக்குத்தனக்கெனச் சிருட்டி சுதந்தரம் உண்டாயிருக்கில் அவன், தனக்குப்பகையா யிருந்து கெடுதிசெய்வனவற்றைச் சிருட்டித்துக் கொண்டு கெடவிரும்பானென்பதே யுண்மை.

(இன்னும் வரும்.)

C. M. அரங்கசுவாமி நாயகர்.

---

# சிவஞானபோத முதனூல் விளக்கம்.

## அத்தியாயம் I.

### தமிழ்ச்சிவஞான போதம் முதனூல் என்பது.

* ஆதி சைவப் பரம்பரையில் வந்த அச்சுதன் களப்பாளர் என்னும் கோத்திரப் பெயர் பூண்ட ஓர் வேளாளகுலதிலகராகிய சிவானுபூதிச் செல்வர் தவப்பயனால் வந்த பொய் கண்டகன்ற மெய் கண்ட சிவாசாரியரால் சொல்லப்பட்ட (repeated by, not originated from) 12 சூத்திரங்களும் தமிழே.

---

* சைவர்களில் அநேக பேதங்கள் உள- அவர்களில்:— அநாதி சைவர், பரமசிவம்; ஆதிசைவர் = பரம்பரைச் சைவர். உலகந் தோன்றி மனித சிருட்டி ஏற்பட்ட நாள் முதல் மதுமாமிச போசனமின்றி, கொல்லாமை, பொய்யாமை முதலிய விரதங்களைப் பூண்டு சிவபெருமானாலும், சிவபெருமான் வழி வந்தவர்களாலும் (= உபதேசபரம்பரை) தீக்ஷிக்கப்பட்டு, கந்தழி யென்னும் இலிங்கவழிபாட்டினையுடையவராதலால் பரம்பரைச் சைவர் (= ஆதிகாலந் தொட்டுச் சைவர்) ஆதிசைவர் எனப்படுவர்.

யாகாதி கிருத்தியங்களினாலும் மதுமாமிசம் சாப்பிடக்கூடாது என்பது தமிழருடைய கொள்கை (அதாவது பரம்பரைச் சைவர் = ஆதிசைவருடைய கொள்கை)

"அவிசொரிந்தாயிரம் வேட்டலினொன்றன்
உயிர்செகுத்துண்ணாமை நன்று."
"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லாவுயிருந் தொழும்."

ஆதிசைவப்பிரிவு ஆரியர்களுக்குள் இல்லை. பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்னும் நான்கு ஜாதிப்பகுப்புக்களே உண்டு. அந்நான்கு ஜாதிகளுள்ளும் ஸ்மார்த்தம், வைணவம், மாத்வம் என்னும் பிரிவுகள் உண்டு. இவை இத்தென்னாட்டிற்கு வந்த பிற்பாடு ஆரியர்களுக்குள் ஏற்படுத்தப்பட்டவை என்பதை யாவரும் அறிவார்கள்.

தமிழர்கள் ஆரியப்பிரிவுகளில் ஒன்றிலும் சம்பந்தப்படாதவர்கள் என்பதை ஒவ்வொருவரும் கவனத்தில் வைக்கவேண்டும்.

அப்பன்னிரண்டு சூத்திரங்களும் சிவஞான போதம் எனப் பெயர் பெறும்.

மெய்கண்டார் என்பவர் தாம்பரஞ் சோதி முனிவரிடம் இருந்து முறையாகத் தெரிந்துகொண்ட சிவஞான போதப் பன்னிரண்டு சூத்திரங்களையும் அப்படியே (without any addition, subtraction or alteration) உலகோர் உய்யும் பொருட்டு வழி வழி முறையை அநுசரித்துத் தம்மாணாக்கர்களுக்கும் கற்பித்தார்.

மேற் சொன்ன சிவஞானபோதப் பன்னிரண்டு சூத்திரங்களும் சிவபெருமான் தக்ஷிணாமூர்த்தமாய் கல்லாலின் கீழிருந்து சனகர் முதலிய நால்வருக்கும் சொன்னவைகளே தவிர வேறன்று ஆகையால், சிவஞான போதம் முதனூலே.

"வினையினீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூலாகும்."

மெய்கண்ட சிவாசாரியார் தாம் பரஞ்சோதி முனிவரிடம் இப்போது தமிழில் இருக்கின்ற பன்னிரண்டு சூத்திரங்களையும் தெரிந்து கொண்டு, அவைகளின் பொருணுட்பங்கள் தெளிவுறாமையால், தாம் வழிபடு கடவுளாகிய பொல்லாப்பிள்ளையாரை நோக்கித் தவங்கிடந்து, தெளிவுறுத்துமாறு வேண்ட, அப்பொல்லாப் பிள்ளையார் கருணை மீக்கூர்ந்து, தமது அடியார் ஆகிய மெய்கண்ட

மேலும், சிவபெருமானால் தீக்ஷிக்கப்பட்டவர் யாரோ அவர் ஆதிசைவரெனக் காமிகம் கூறுகிறதாக எனது குருசுவாமிகளாகிய ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் கூறுகிறார்.

ஆரியர் இந்நாட்டிற்கு வருவதற்குப் பன்னூறாயிரம் வருடங்கட்கு முன்னரே சிவபெருமானால் தீக்ஷிக்கப்பட்ட தமிழர்களாகிய ஜனகர், சனத்குமாரர், சநாதனர், சனந்தனர் என்னும் நால்வரும் நான்கு மடங்களைத் தாபித்துத் தமிழர்களுக்கு உபதேசித்து வந்ததாக ஞானப்பிரகாசரால் சொல்லப்பட்ட 'சைவபூஷணம்' என்னும் கிரந்தம் தெரிவிக்கிறது.

ஆகையால், தமிழர்களில் பரம்பரைச் சைவர் சிவபெருமானாலும், சிவபெருமான் உபதேசபரம்பரையில் வந்த அடியவர்களாலும் தீக்ஷிக்கப்பட்டவர்களாதலின் ஆதிசைவரே எனக்கூற யாதொருதடையுமில்லை. பரம்பரைச்சைவர், ஆதிசைவர் ஒரு பொருட்கிளவிகள். சைவபேத வரலாற்றினை யான் எழுதிய "சைவபேதவிளக்கம்" என்னும் நூலில் காணலாம்.



முனி தெளிவுறும் வண்ணம் அச்சிவஞானபோதத்துக்கு 39 சூர்ணிக்கொத்துக்களைச் செய்து கொடுத்துச் சந்தேக நிவிர்த்திசெய்தார். அப்பன்னிரண்டு சூத்திரங்களையும், 39 சூர்ணிக்கொத்துக்களையும் தாம் மிக ஆழ்ந்து, சிந்தித்து மாணாக்கர்களுக்கு இன்னும் நன்றாய்த் தெரியும் வண்ணம் ஏது திருட்டாந்தங்களுடன் வசனரூபமாகவும் பாரூபமாகவும் மொழிப்புரைசெய்தார். அவ்வசனமும் 82 வெண்பாக்களுமே எம்மெய்கண்ட நாதரால் செய்யப்பட்டவை இது,

"எந்தை சனற்குமாரனேத்தித் தொழ வியல்பாய்
நந்தியுரைத்தருளு ஞானநூல்—சிந்தைசெய்து
தானுரைத்தான் மெய்கண்டான் தாரணியோர்தாமுணர
ஏதுதிருட்டாந்தத் தாலின்று."

என்னும் செய்யுளால் அறியக்கிடக்கின்றது.

(இ-ள்.) எந்தை = எம் தந்தையாகிய
சனற்குமாரன் = சனற்குமார தேவர்
ஏத்தி.......... = தோத்திரம் செய்து
தொழ.......... = (ஞானத்தை அறிவுறுத்து மாறு நந்தியெம்பெருமானை) வணங்க
இயல்பாய்...... = இயல்பாகவே (யாதொரு பிரயாசையுமின்றித்தாம் ஸ்ரீகண்ட பரமசிவத்திடத்துக் கேட்ட வண்ணம்)
நந்தி............ = நந்தியெம்பெருமான்
உரைத்தருளும் = சொன்ன
ஞானநூல்...... = சிவஞான போத நூலையும்
சிந்தைசெய்து... = (பொல்லாப்பிள்ளையார் செய்து கொடுத்த 39 சூர்ணிக்கொத்துக்களையும்) சிந்தித்து.
இன்று.......... = இக்காலத்தில்
தாரணியோர் தாமுணர = (யான்பெற்ற வின்பம் பெறுகவிவ் வையகம் என்னும் மொழிக்கிணங்க) பூலோகத்திலுள்ளார்(சுவர்க்கமுதலிய அண்டத்திலுள்ளார் அல்லா

என்றபடி) தெரிந்துகொள்ளும்வண்ணம்.

ஏது திருட்டாந்தத்தால் = ஏது திருட்டாந்தங்களுடன்
மெய்கண்டான் = மெய்கண்ட சிவாசாரியர்
தானுரைத்தான் = தாமாக (உரையும் செய்யுளுமாகப் பொழிப்புரையை) உரைத்தார்.

சிற் சிலர் மேற் கூறிய பாட்டிற்கு வேறு விதமான உரைகூறி ஏது திருட்டாந்தங்களுடன் மெய்கண்டார் செய்தது "சிவஞான போதமே தான்" என்று கூறுநிற்பர். அது சற்றும் பொருந்தாது ஏனென்றால், "நந்தியுரைத்தருளு ஞானநூல் சிந்தை செய்து தானுரைத்தான் மெய்கண்டான்" என்று கூறினதை உற்றுநோக்குமிடத்து மெய்கண்டாருக்கு முன்னேயே "சிவஞான போத" நூல் உண்டென்று புலனாகின்றது. "நூல்" என்றதால் அச்சிவஞான போதம் தமிழென்றே யெண்ணக் கிடக்கின்றது. ஆகவே மெய்கண்டார் செய்தது வேறு என்றுந் தெரிகிறது. அவர் எப்படிச் செய்தாரென்றால் ஏது திருட்டாந்தங்களுடன் செய்தார் என்றும் தெரிகிறது. ஆகையால் "சிவஞானபோதம்" வேறு, மெய்கண்டார் செய்தது வேறு என்று அறியக்கிடக்கின்றது.

நந்தியுரைத்தது வடமொழிச் சிவஞானபோதம், மெய்கண்டார் உரைத்தது அதன் பொழிப்பாகிய தென்மொழிச் சிவஞான போதம் என்று ஏன் கூறலாகாது எனக்கடாவுவார் சிலர். அதற்கு நந்தியுரைத்தது தென்மொழிச் சிவஞானபோதமே என அடியில் காட்டப்படும் காரணத்தால் மெய்கண்டார் சிந்தித்தது தென்மொழிச் சிவஞானபோதமே தவிர வேறன்று.

மேலும், நந்தியுரைத்தருளும் ஞானநூல் என்று சொல்லியிருக்கிறபடியினாலே நந்தியெம்பெருமான் சொல்லும்போதே அச் சிவஞானபோதம் புத்தகரூபமாய் இருந்ததென்று தெளிவாய் ஏற்படுகிறது. அதல்லாமலும், திருவிளையாடல் 57-வது வலைவீசின படலத்தில் சிவபெருமான் பார்வதிக்கு உபதேசிக்கும்போது கையில் சிவஞானபோதப் புத்தகம் வைத்துக் கொண்டிருந்ததென்றும், அதை வடிவேற் செங்கைப்புனிதன் ஒல்லெனப்



பறித்து வல்லே திரைபுக வெறிந்தானென்றும் கூறப்பட்டிருக்கிறது.

அதன்றியும், சிவபெருமான் வாதவூரடிகளுக்கு உபதேசித்த காலத்தில் கையில் "புத்தகத்தெழுதிய சிவஞான மெய்ப் போதங் கைத்தலத்தில்" வைத்திருந்ததாகவும் கூறப்பட்டிருக்கிறது.

ஆகையால், எப்போது சிவஞானபோதம் புத்தகரூபமாய் இருந்ததோ அப்போதே அது தமிழ்தான் என்று திண்ணமாய்ச் சொல்லலாம். எப்படியென்றால், ஆரியத்துக்கு அக்காலத்தில் எழுத்துக்கள் கிடையா என்பது தேற்றம். ஆரியத்துக்குக் கொஞ்சகாலத்துக்கு முன்தான் எழுத்துக்கள் ஏற்படுத்தப்பட்டன என்பதை யாவரும் அறிவர். ஆகையால் ஆரியபாடைக்கு எழுத்துக்கள் ஏற்படாத காலத்தில் ஒருநூல் புத்தகரூபமாய் இருந்ததென்றால் அது தமிழ்தான் என்று உறுதியாய்க் கூறுவதில் யாதொரு தடையும் இல்லை.

புத்தகம் என்பது புஸ்தகம் என்னும் வடமொழியின் சிதைவு எனத் தப்பாகக் கருதியிருக்கிறார்கள் சிலர். ஆரியத்தில் எழுத்தில்லாமல் புஸ்தகம் என்ற வார்த்தையுண்டாகுமா? ஆகையால், மேலே கூறியது (அதாவது புத்தகம்) வடமொழிப்பதம் என்பது) விந்தையினும் விந்தை எனக் கூறுநிற்பர் சிலர். அதனுண்மை இதனடியில் பகருதும்:—

புஸ்தகம் என்பது புத்தகம் என்னும் பதத்தின் திரிபேயொழியப் புத்தகம் என்பது புஸ்தகத்தின் திரிபல்ல.

புத்தகம் என்றால் மயிலிறகு என்று அர்த்தம்.

ஆதிகாலத்தில் தமிழர்கள் குறிஞ்சிநாட்டில் வசித்தவர்களாதலாலும், குறிஞ்சிக்கருப்பொருள் மயிலாதலாலும் பலநிற வண்ணங்களைக் குழைத்து மயிலிறகால் மூங்கில் பட்டைகளில் எழுதிக் கொண்டிருந்தார்கள்.

புத்தகத்தால் (மயிலிறகால்) எழுதியதற்குப் புத்தகம் என்னும் பெயருண்டாயிற்று.

(இன்னும் வரும்.)

திடிசைகிழார் அ. சிதம்பரனார்.

## சமாசாரங்கள்.

பூவாளூர் சைவசித்தாந்த சங்கம்.—இச்சங்கத்தின் மூன்றாவது வருஷக் கொண்டாட்டத்தில் 1913ஞு மார்ச்சுமீ 12உ சிவாலய சேவையும், மெய்கண்டதேவர் திருப்பவனியும் நடந்தேறியது. அடுத்தநாள் சித்தாந்தசரபம் அஷ்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலியாரவர்கள் அக்கிராசனத்தின்கீழ் குளித்தலை பிரம்மஸ்ரீ அரங்கசாமி ஐயரவர்கள் "வேதசிவாகம உண்மையும்", தூத்துக்குடி ஸ்ரீமான். பொ. முத்தைய பிள்ளையவர்கள் "இருவினையொப்பு மலபரிபாகமும்", ஸ்ரீமான் கொச்சியம் சிவப்பிரகாச சுவாமிகள்" ஆன்மாவு முத்தியும்", திரிசிரபுரம் செந்தமிழ்ச் செல்வம் பத்திராதிபர் அமிர்தம் சுந்தரநாதம் பிள்ளை அவர்கள் "கண்ணப்ப நாயனார் புராணமும்", மறுநாள் அக்கிராசனாதிபதியவர்கள் "வேதாந்த சித்தாந்த சமரசநன்னிலையும்", காஞ்சி ஸ்ரீமான் நாகலிங்க முதலியாரவர்கள் "சந்தான குரவர் மகிமையும்", நல்லிபாளையம் ஸ்ரீமான் வீரமாகேசர் குமாரவீரையரவர்கள் "ஜீவகாருண்ணியமும்", திருச்சி எஸ். பி. ஜி. காலேஜ் தமிழ்த்தலைமை பண்டிதர் ஸ்ரீமான். ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் "கல்வியும் அதன்பயனும்", பெருவளநல்லூர் வீரமாகேசர் சுப்பையரவர்கள் "ஆனாயநாயனார் புராணமும்", கொச்சியம் ஸ்ரீமான் சிவப்பிரகாச சுவாமிகள் "சரியையாதி சதுர்ப்பாதமும்", சங்கத்தின் உபஅக்கிராசனாதிபதி ஸ்ரீமான் தே. பெரியசாமி பிள்ளையவர்கள் "மெய்கண்ட சிவப்பாவமும்", ஸ்ரீமான் திம்மப்பையரவர்கள் "பித்தாபிறைசூடி" திருச்செய்யுளுக் குரையும், தூத்துக்குடி ஸ்ரீமான் பொ. முத்தைய பிள்ளையவர்கள் "மூர்த்தி தலம் தீர்த்தமும்", பிரசங்கித்தனர். இடை இடையே தேவார பாராயணஞ் செய்யப்பட்டது. அக்கிராசனாதிபதி யவர்கட்கு உபசாரணைப்பத்திரச் செய்யுள்கள் பல வித்துவான்கள் படித்தனர். சைவசித்தாந்த மகாசமாஜத்தார் பிரசுரித்த துண்டுபத்திரிகைகள் கொடுக்கப்பட்டன. அக்கிராசனாதிபதி யவர்கள் உருவப்படம் யாவருக்கும் விநியோகிக்கப்பட்டன. இச்சங்கத்தினர் பரமாசாரியராகிய மெய்கண்டதேவர் திருவுருவிக்கிரகம் பிரதிஷ்டை செய்ய முயற்சித்து வருவது மிகச்சிறந்ததோர் பதிபுண்ணியமாம்.



சைவசித்தாந்த மகாசமாஜத்தின் மெம்பர்களில் ஒருவரான ஸ்ரீமான். சிவ. யா. நாராயணசாமி செட்டியார் செய்த பிரசங்கங்கள்.—1913ஞு மார்ச்சுமீ 13உ பட்டுக்கோட்டைத் தமிழ்ச் சங்கத்தின் மீட்டிங்கில் அக்கிராசனம் வகித்து "ஜீவகாருண்யம்" என்னும் விஷயத்தைப்பற்றி ஒரு அரிய பிரசங்கஞ் செய்தார். ஷைமீ 23உ அம்மாப்பேட்டை பால சரஸ்வதி விலாச சபையில் "சைவ சமயம்" என்பதைப்பற்றி உபந்நியாசித்தார்.

***

சென்ற மார்ச்சுமீ 6உ இரவு உத்திரமேரூர் தேவார பக்தஜன மண்டபத்தில் காளத்தி மகத்துவம் என்பதைப் பற்றியும், 7உ காலையில் சுமார் 1000 ஏழைகளுக்கு அலங்கார ஆகாரமும் செய்யப்பட்டது. (1) ஷை காளத்தி மகத்துவமும் (2) 8உ பகல் மதுராந்தகத்தில் வேதாந்த சித்தாந்தம் என்பதைப் பற்றியும், சைவசித்தாந்த மகாசமாஜ கௌரவ உபந்நியாசகரான கா. உ. பொன்னுசாமி முதலியாரால் உபந்நியாசம் செய்யப்பட்டது.

***

யோகசூத்திரம்—இது பகவான் பதஞ்சலிமுனிவ ரருளிச் செய்தது. இந்நூலில் சமாதிபாதம், சாதனபாதம், விபூதிபாதம், கைவல்யபாதம் அடங்கியிருக்கின்றன. யோகத்தை யனுசரிக்க வேண்டியதற்குச் சாதனங்களானவற்றை நன்கு விளக்குகிறது. யோகமும், யோகசாதனங்களும், யோகசித்தியும், யோக கைவல்லியமும் முறையே நான்குபாதங்களினுஞ் சொல்லப்பட்டிருக்கின்றன. சிவாகமங்களிற் குறித்த யோகபாதத்திற்கும் இதற்கும் பெரும்பாலும் வேற்றுமை கண்டிலம். மற்ற சமயத்தவர்கள் கொள்கைகளையும் ஆங்காங்குக் குறிப்பிக்கப்பட் டிருக்கிறது. இதில் சந்தற்பங்களுக் கேற்ப உபநிடதங்களையும், திருவாசகம், திருமந்திரம், திருவாய்மொழி, தேவர் குறள், ஔவைக்குறள் முதலிய பலவிடங்களில் உதகரித்திருப்பது வியக்கற்பாலது. இந்நூல் பெரும்பயனைத் தமிழ் நாட்டிற்குத் தருமென்றெண்ணி, வட மொழியினின்றும் மொழி பெயர்ப்பித்து, அச்சிட்டு வெளிப்படுத்திய மதுரை பிரம்மஞானசபை அக்ராசனாதிபதி

பிரமஸ்ரீ. ப. நாராயண ஐயர் அவர்கள் முயற்சி மிகப்பாராட்டத் தக்கதேயாம். இதன் விலை ரூபா 1.

***

ஞானபாநு.—இது இச்சித்திரை மாதமுதல் மாதபத்திரிகையாக நடைபெற்று வரும். இதில் கல்வி, ஒழுக்கம், தவம், ஞான முதலியவற்றைப் பற்றிக் கௌரவசீலர் பலர் எழுதிவருகின்றனர், இம்மாதபத்திரிகையில் அரிய, பெரிய விஷயங்களிருப்பதுடன் ஈசாவாஸ் யோபநிஷத் மொழி பெயர்க்கப்பட்டு வருகிறது. இது டெம்மி 24-பக்கம் கொண்டது. இப்பத்திரிகாசிரியர் பிரமஸ்ரீ சுப்பிரமணியசிவம் இவர் வேறு இயற்றிய நூல்கள் "ஞானரத்தினம்" விலை அணு 4. "சச்சிதானந்தசிவம்" விலை அணு 12. பகவத்கீதா சங்கிரகம் விலை அணு 2.

***

வேதாந்ததீபிகை.—இத்தீபிகையானது அகோபிலமடத்துச் சிஷ்யசபையின் காரியதரிசியவர்களால் பிரதிமாதம் பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. இதில் மூன்றாவது சம்புடம் இரண்டாவது சஞ்சிகை நமது பார்வைக்கு வந்தது. இதில் வைஷ்ணவ சமைய விஷயங்கள் பலவும், பொதுவிஷயங்கள் சிலவுமாகவுள்ளன. இக்காலத்தில் இத்தகைய தீபிகை அவசியம் வேண்டுவதுதான். இத்தீபிகை தமிழிலெழுதப்பட்டு வரினும், எட்டுப்பதங்கள் கூடிய ஒருவரியில் நாலுபதங்கள் வடமொழிகளாகவே யிருக்கின்றன. தமிழில் சுலபமாகத் தெரிவிக்கத் தகுந்த பதங்களும் அநேகமாக வடமொழிகளாகவே யிருக்கின்றன. ஆதலின் தமிழ்ப் படித்தவர்கட்கு விஷயங்கள் விளங்குவது சாத்தியமாகவில்லை. சிறிது தமிழ் கற்ற வடமொழி வல்லார்க்கே உபயோகமாகு மென்பதிற் றடையில்லை. தமிழில் சுலபமாக விளக்குதற்குக் கூடாத பதங்கட்கு இன்றியமையாது வடமொழிகளை உபயோகித்து மற்றையவற்றைத் தமிழ்நடையி லெழுதிவரின் பத்திரிகாசிரியர் உத்தேசம் நிறைவேறித் தமிழ்நாடு முழுவதும் பரவுமென்பதிற் றடையில்லை. இத்தீபிகையின் வருஷசந்தா ரூபா 1. இப்பத்திரிகாசிரியர் S. வாசுதேவாசாரியார் B.A., L.T.

OFFICE OF THE ...

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி உ.] 1913-ளு மே மீ [பகுதி ரு.

## சித்தாந்தபரிபாஷை என்னும் தருக்கசோபானம்.

பக்கம்—The subject of the conclusion - ஐயுற்றுத்துணியும் பொருளுக்கிடம். அஃதெங்ஙனம்? புகையுடைமையாகிய ஏதுவில் மலைபக்கம்.

சபக்கம்—The subject of the same side-துணிந்த பொருளுக்கிடம். அஃதெங்ஙனம்? அவ்வேதுவில் அடுக்களை.

விபக்கம்-The subject in opposition - துணிந்த பொருளில்லாவிடம். அஃதெங்ஙனம்? ஆண்டு மடு.

இவற்றுள் முன்னைய விரண்டும் பொருளுண்மையைச் சாதிக்கும், பின்னைய வொன்றும் அஃதில்லாமை யென்றற்கிடம்.

பரார்த்தானுமானம்—For the sake of other.

பிறர் பொருட்டுக்கருதல்.

தான் றெரிந்த வொன்றைப் பிறர் தெளியுமா றுரைக்கு மதுவே.

இவ்விரண்டு அநுமிதிகளும் லிங்கபராமரிசமே சாதனமாகலின் இதுவே யனுமான மெனப்படும். லிங்கமென்பது குறி, ஏது வென்கிறபடி, பராமரிசமாவது ஆராய்ச்சி அது முற்கூறியவாறு.

இவ்வநுமானம் கேவலான்வயானுமானம், கேவல வியதிரேகானுமான மென இருவகையாம். இவ்விரண்டும் பிரதிஞ்ஞை, ஏது, உதாரணம், உபநயம், நிகமனமென ஐந்து * உறுப்புக்களாற் பாகு படுத்தி யுரைக்கப்படும்.

பிரதிஞ்ஞை—The propositon—ஒன்றி லொருபொருளைக் காட்டிக் கூறுவது.

ஏது—The reason-அதனை நாட்டுதற்குச் சாதனமாயுள்ளது.

உதாரணம்—The instance—இந்தச் சாதன சாதன சாத்தியங்கள் பொருந்தியிருப்பதா யொத்துக் கொள்ளப்பட்டதை யெடுத்துரைப்பது.

உபநயம்—The application-அப்படிப்பட்ட பொருத்தம் பக்கத்திலிருத்தலை விளக்குவது.

நிகமனம்—The conclusion—முதலி னாட்டி யதனைத்திரப்படுத்தி முடிப்பது.

கேவலான்வயானுமானம்.

That which has reference to union alone.

பிரதிஞ்ஞை அல்லது மேற்கோள்.

இம்மலை தீயுடைத்து

ஏது.

புகை யுடைமையால்.

உதாரணம் அல்லது எடுத்துக்காட்டு.

யாதுயாது புகையுடைத்து அது அது தீயுடைத்து அடுக்களை போல.

உபநயம் அல்லது ஏற்றல்.

இம்மலையும் புகையுடைத்து.

நிகமனம் அல்லது முடிவு.

ஆதலால் இம்மலையுந் தீயுடைத்து.

---

* இவற்றுள் மூன்றே யமையுமென்பது பிறதேயத்துத்தார்க்கிகர் கொள்கை. பின்னிரண்டும் முந்திய மூன்றுள் குறிப்பாகத் தோன்றுதலால் அவற்றை விளக்கும் வாக்கியங்கள் எச்சமாயிருக்கின்றன. எச்சங்கள் தம் மெச்சங்களைக் கொண்டல்லது முடியாவாகலின் பின்னவை யிரண்டும் வேண்டுவனேயாம்.



கேவலவியதிரேகானுமானம்.

The which has refernce to separation alone.

பிரதிஞ்ஞை.

இம்மலை புகை யுடைத்தன்று.

ஏது.

தீயின்மையால்,

உதாரணம்.

எங்கெங்குத்தீயில்லை அங்கங்குப் புகை யில்லை மடுவினைப் போல.

உபநயம்.

இம்மலையுந்தீயுடைத்தன்று.

நிகமனம்

ஆதலா லிம்மலை புகை யுடைத் தன்று.

---

பூர்வானுமானம்—காட்சிவழிக்கருதல்.

பிரதிஞ்ஞை.

இவ்வுலகம் செய்வோனையுடைத்து.

ஏது.

செயப்படுபொருட்குச்செய்வோனை வேண்டுதலின்.

மணவழகு.

---

## சிருட்டியில் மயக்க நிவாரணம்.

(முன் தொடர்பு தொகுதி 2, பகுதி 4, பக்கம் 112:)

சீவனுக்கு சிருட்டிசுதந்தரமில்லை யென்றதற்குக் காரணம், அவனது இச்சாஞானக் கிரியைகள் மலத்தால் தகையப்பட்டிருத்தலினாலாம். கலையாதிகளால் மலஞ்சற்று நீங்கி அவனது இச்சாஞானக்கிரியைகள் நிகழுமென்பதுண்மையே. ஈசுரன் உபகரித்தருள உபகரணங்களை யுபயோகித்துப் பயனருந்தும் நிகழ்ச்சி

மாத்திரம் நிகழுமே யன்றி, தத்துவதாத்துவிகங்களைச் சிருட்டிக்குஞ் சுதந்தர சக்தி நிகழாதென்க. காமக்குரோதாதிகளைப் "பகை" என்றதும் பிழையாம். காமாதிகள் ஆகாயதத்துவத்தின் கூறு என்கையில், அவை ஈசுரசிருட்டியென்றே சொல்லப்படும். ஆகாயாதிதத்துவங்கள் எப்படி சீவனது உபகாரார்த்தமாகச் சிருட்டிக்கப்பட்டனவோ, அப்படியே காமாதிகளும், அவற்றின் எதிர்குணங்களாகிய நிராசையாதிகளும் சீவனது உபகாரத்தின் பொருட்டு ஈசுரனால் சிருட்டிக்கப்பட்ட குணங்களாயிருத்தல்வேண்டுமன்றி, வேறுயிருக்க நியாயமில்லை. உண்மை யிங்ஙனமாயின், காமாதிகளைப்பகை எனல், தெரிந்துரைக்குந் தெளிவுரையா மெனக்காண வில்லை. பகைசெய்து கெடுதிவிளைக்குங் கருவிகரணங்களை, பரமகருணாநிதி எனப்படும் ஈசுரன் சிருட்டித்து உதவுவாரா? அங்ஙனஞ் சிருட்டித்துத்தரில், அதனை உதவி என்னலாமா? எவ்வழியிலேனும் சம்சாரபந்தம் நீங்கி ஆன்மகோடிகள் கதியடையவேண்டும்! என்னும் இரக்கம் அபாரமாவுடைய பரங்கருணைத்தடங்கடலாய் விளங்கும் நம் பரமர், கெடுதி செய்வனவற்றை ஒருபோதும் உதவார் என்பதே திண்ணமென்க. தத்துவதாத்துவிகங்களும் அவற்றின் குணவியல்புகளும் உபகாரரூபங்களா மென்பதற்குச் சில பிரமாணங்கள் வருமாறு:

பௌஷ்கரம். "கலாவித்யாஉங்வயௌபந்தௌ |
கர்த்துரேவோபகாரகௌ" =.

கலை-வித்தை என்னும் பெயர்களையுடைய பந்தங்கள், கர்த்தாவுக்கு(செய்பவனுக்கு-ஆன்மாவுக்கு)உபகாரத்தைச்செய்வனவாம்.

ஷை நியதி "கர்மணேப்யுபகாரகௌ" =

(நியதியாதிகள்) ஆன்மாவின் கர்மத்திற்கு உபகாரங்களாம்.

ஷை "தஸ்மாத்நியதஸ்ஸந்து
பும்ஸாம்போக்யநியாமகம்" =

ஆகையால், நியதியாதிதத்துவங்கள் புமான்களுக்குப் போக்கியத்தை நியமிக்கின்றன. என்பதாம். இங்ஙனமே மற்றெல்லாத் தத்துவங்களையும் உபகாரரூபங்களென்று திவ்வியாகமங்களாறுதியிடுகின்றன. இவ்வுண்மையினையே, "இமையளவுமுபகாரமல்லால் வேறொன்றிற்கா நிர்க்குணக் கடலாய் நின்றவொன்றே!"



என தாயுமானார் சாக்ஷிபகர்ந்து, பதியிலக்கணத்தைமிக அருமையாக விளக்கியுள்ளார். இத்தியாதிநியாயங்களால், ஈசுரனால் உதவப்பட்டுள்ள வஸ்துக்களுள் எதையேனும், இது "பகை" இது ஆகாது என்று சொல்லவுந் தள்ளவும் நமக்கு நியாயமில்லை; அதிகாரமுமில்லை யென்க.

இனி, வாய்திறந்தவர்களாலெல்லாம் ஓயாது நிந்திக்கப்படும் காமக்குரோதாதி அறுகுணங்களும் உபகாரரூபங்களேயாம் என்பதைக்காட்டுவாம். காமம் என்பது ஆசை, விருப்பம் எனப்பொருள்படும். ஓர் வஸ்துவினிடத்தில் ஆசையில்லாவிடில் அதைத்தேடும் முயற்சிமனிதனிடத்திலிராது. இராதாகவே, அவ்வஸ்து அவனுக்குக் கிடையா தொழியும். ஒழியவே, அவ்வஸ்துவினாலடையவேண்டிய பிரயோசனம் அவனுக்கு இல்லாமற்போம். உதாரணம்: பணத்தில் ஆசை அதாவது, விருப்பமும் எழாவிடில் அதைத்தேடு முயற்சி மனிதனிடத்திலிராது. இராதொழியவே பணம் அவனுக்குக் கிட்டாமற்போம். போகவே, பணத்தாலடையவேண்டிய இக, பர, சாதகரூபமாயுள்ள தர்ம்மார்த்த காமமோக்ஷங்களாகிய சகலபுருஷார்த்தபலன்களும் அவனுக்கில்லாதொழியும் அதனால், அவன் சென்மம் ஒன்றுககு முதவாதவிருதா சென்மமாய் முடிந்து விடும். இப்படியே, ஸ்திரீயினிடத்தில் ஒருவனுக்குக் காமம் (விருப்பம்) எழாவிடில், அவன் ஸ்திரீயி னுறவைத்தேடான். தேடானகவே, ஸ்திரீயினாலடையவேண்டிய இன்பமும், இம்மை மறுமைகட்குரிய வாழ்க்கைத்துணை நலங்களாகும் உபகாரங்களும் அவனுக்கில்லாமற்போம். இங்ஙனமே வேறுபொருள்களிடத்தில் வைக்கும் விருப்பங்களின் பயன்களையும் விசாரித்து, அவ்வப்பொருள்களிடத்தும் ஆசையில்லாக் கால், அவ்வவற்றாலடையக் கிடக்கும் உதவி, உபகாரங்களாகிய சகல பிரயோசனங்களையும் இழக்கவரும் உண்மையை யுணர்தல் வேண்டும். இவ்வாறே, குரோதகுணத்தை விசாரிக்கையில், அதுவுமவசியமென்றே யேற்படும். என்னை? குரோதம் என்பது கோபம் அல்லது, வெறுப்பு எனப்பொருள்படும். கோபித்துத்திருத்த வேண்டிய விஷயங்களும் வெறுத்து விலக்கவேண்டிய விஷயங்களும் பல, நம் வாழ்க்கையில் அடிக்கடி நேரிடும் அனுபவத்தை ஒரு

வருமறுக்கார். அவ்வச்சமயங்களில் அவ்வவற்றைக் கோபித்துத் திருத்துதலும், வெறுத்துவிலக்குதலுஞ் செய்யாவிடத்து, அநேக காரியங்கட்கு இடரும் இடைஞ்சலும் நேரிடக்கூடுமுண்மை யாவரும் எளிதிலுணரக் கிடக்கும். இந்த நியாயங்களால், குரோத குணமும் உபகாரமாதல் இனிது விளங்கும். இப்படியே, லோப, மோக, மத, மாச்சரிய குணங்களிடத்தும் விசாரித்து உண்மை காணல்வேண்டும். இங்ஙனம், சிருட்டியில் வந்துள்ள சகல தத்துவ, தாத்துவிகங்களையும் அவற்றின் குணவியல்புகளையும், அவற்றால் விளையும் பிரயோசனங்களையும் நுணுகி விசாரிக்குங்கால், எல்லாம் ஆன்மாக்களின் உதவியின்பொருட்டே உபகாரரூபங்களாயேற்பட்டிருக்கும் அருமை விளங்காமற் போகாது. சிருட்டியில் இம்மியளவும் வீணானதும் விரோதமுமான ஏற்பாடு இல்லையென்பதே நிச்சயம்.

(இன்னும் வரும்.)

C. M. அரங்கசுவாமி நாயகர்.

---

# சிவஞானபோத முதனூல் விளக்கம்.

## அத்தியாயம். I

---

(முன் தொடர்பு தொகுதி 2, பகுதி 4 பக்கம் 117:)

(Vide வாதவூரடிகளுக்கு உபதேசித்தபடலம்) "புத்தகத் தெழுதிய சிவஞான மெய்ப்போதம்" அதாவது புத்தகத்தால் (மயிலிறகால்) எழுதிய சிவஞான மெய்ப்போதம் என்று அர்த்தமாகிறது.

புத்தகம் என்பது மயிலிறகு என்றதற்கு சித்தர்நூலில் காண்க:—

"எட்டுத்திப்பிலி ஈரஞ்சு சீரகம்
கட்டுறுந் தேனில் கலக்கியுண்ணவே
விட்டுப் போகும் விக்கலே விடாதேல்
சுட்டுப் போடு புத்தகம் தன்னையே"



இங்கு புத்தகம் என்பது மயிலிறகு என்று சொல்லினை விளங்குவதைப்பார்க்கலாம்.

ஆகையால் புத்தகம் or புஸ்தகம் என்றபதமே ஆரியத்தில் கிடையாது. ஆரியத்துக்கு எழுத்துக்கள் ஏற்படுத்திக்கொண்ட பிற்பாடு புத்தகம் என்னும் தமிழ்வார்த்தையை புஸ்தகம் என ஆரியத்தில் வழங்கலாயினர்.

ஆகையால், சிவபெருமான் பார்வதிதேவிக்கு உபதேசிக்கும்போது வைத்துக்கொண்டிருந்த சிவஞான போதமும்,

சனகாதி முனிவர்களுக்குக் கல்லாலின் கீழ் உபதேசிக்கும்போது வைத்துக்கொண்டிருந்த சிவஞான போதமும்,

நந்தியெம்பெருமானுக்கு உபதேசிக்கும்போது வைத்துக்கொண்டிருந்த சிவஞான போதமும்,

வாதவூரடிகளுக்கு உபதேசிக்கும்போது வைத்துக்கொண்டிருந்த சிவஞான போதமும் ஒன்றே அது தமிழ்ச்சிவஞானபோதமே, வேறன்று.

சிவஞானபோதப் பன்னிரண்டு சூத்திரங்களையும் பார்க்குமிடத்து அவைகளில் எதுவும் திருட்டாந்தங்களும் தாரணியோர் தாமுணரும்படி அவ்வளவு வெளிப்படையாக இல்லை. என்பது திண்ணம். அப்படித் தாரணியோர் தாமுணரும்படி, வெளிப்படையாக, எது திருட்டாந்தங்களுடன் இருக்கின்றன என்றால், அம்மெய்கண்டாரே பொல்லாப்பிள்ளையாரை அறிவிக்குமாறு வேண்டிக்கொள்ளும் காரணம் சிறிதும் இல்லை. சூர்ணிக்கொத்தும் அவசியம் இன்று. ஆகையால், தாரணியோர் தாமுணரும்படி எது திருட்டாந்தங்களுடன் மெய்கண்டார் செய்தது வசனமும் பாக்களுமான பொழிப்புரையே தவிர சிவஞான போதப் பன்னிரண்டு சூத்திரங்கள் அல்ல என்பது திண்ணம். ஆனால்,

"மயர்வற நந்தி முனிகணத் தளித்த
உயர் சிவஞானபோத முரைத்தோன்"

என்று கூறியிருக்கின்றாரே எனக் கடாவுவார் சிலர். அது, ஒருவன் தான் தன் உபாத்தியாயரிடம் கற்ற "ஆத்திசூடியைத்" தன்மாணாக்கனுக்குத் திருப்பியுரைப்பது போலும்.

மெய்கண்டாரும் தாம் பரஞ்சோதி முனிவரிடம் தெரிந்துகொண்ட 12 சூத்திரங்களையும் தம்மாணாக் கருக்கு உரைத்தார் என்பதே.

ஆகையால், ஸ்ரீகண்ட பரமசிவம் தமிழிலேயே நந்தியெம்பெருமானுக்குச் சிவஞானபோதத்தையருள, அவர் சனற்குமார தேவருக்கு அருள, அப்படியே வழி வழியாகப் பரஞ்சோதி முனிவருக்குக் கிடைக்க, அவர் மெய்கண்டாருக்கு அறிவுறுத்தார்.

ஆகையால், தமிழ்ச் சிவஞான போதப்பன்னிரண்டு சூத்திரங்களும் பரமசிவத்திடத்திருந்து வந்தனவைகளே என்று அறியவும்.

---

## அத்தியாயம். II

### ஐயவினாக்கள்.

(1) மேலே சொன்ன சிவஞானபோதம் என்னும் நூல் (அதாவது தென்முகக் கடவுள் சனகாதிகளுக்கு உரைத்தநூலும் ஸ்ரீகண்டபரம சிவம் நந்தியெம் பெருமானுக்கும, பார்வதி தேவிக்கும், வாதவூரடிகளுக்கும் உரைத்தநூலும்) வடமொழி யென்றும்.

(2) அவ்வடமொழி நூலைச் சிவபெருமான் ஆகமங்கள் கூறும் போது ரௌரவாகமம் பாசவிமோசனப் படத்தில் கூறினரென்றும்,

(3) தமிழில் உள்ள சிவஞானபோதம் அவ்வடமொழிச் சிவஞான போதத்தின் மொழிபெயர்ப்பு நூலென்றும்.

(4) பரஞ்சோதி முனிவர் மெய்கண்டாருக்கு அவ்வடமொழிச் சிவஞான போதத்தையே உபதேசித்தாரென்றும்.

சிலர் கூறுகிற்பர். அவர் கொள்கைகளெல்லாம் வலியற்று எனப்பின் வரும் அத்தியாயங்களில் காட்டுதும்.

(இன்னும் வரும்.)

துடிசைகிழார் அ. சிதம்பரனார்.

---

# தமிழ்மொழியும், சிவநெறியும்.

திருவனந்தபுரம் புத்தன் சந்தையிலுள்ள சைவப்பிரகாச சபைக்கட்டிடத்தில் திருவாங்கூர் பென்ஷன் ஹைகோர்ட் ஜட்ஜ், திவான்பகதூர் மிஸ்டர் **A.** கோவிந்தப்பிள்ளையவர்கள் **B.A, B.L. F. M. U.** அக்கிராசனத்தின்கீழ் சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் கௌரவப் பிரசங்கியாகிய மறைத்திருவன், சுவாமி, விருதை சிவஞானயோகிகள் தமிழ் மொழியும் சிவநெறியும் என்ற விஷயமாய் ஒரு அரிய பிரசங்கமியற்றினர். அதன் சாரம் (தமிழ் மறை வரலாறு); ஆங்கிலநூலாசிரியர் பெரும்பாலார் இந்து மகாசமுத்திரத்தினுண் முழுகி யிருக்கும் பூமியில் (Submerged land) தான் முதற்கண் மக்கட்பகுப்பார் தோன்றிய தென்று, கூறுகின்றனர். அதற்கேற்ப மாக்கள் முதற்கண் ஒலிக்கக்கூடிய இயல் ஒலிகளே தமிழ் மொழியிலிருக்கின்றன. முன்னர் வடக்கில் குமரியாற்றுக்கும் தெற்கெல்லையாகிய பஃறுளியாற்றுக்கும் இடையே கீழ்மேல் நீண்டுகிடந்த 7000 மைல் பரப்புள்ள நிலம் தமிழகம் எனப்பட்டிருந்தது. அதில் தென்பகுதியில் தென்மதுரையிருந்தது. அதில் தலைச்சங்கம் கி. மு. 9990-முதல் 5550-வரையும், இடைச்சங்கம் கி. மு. 5550-முதல் 1850-வரையும். கடைச்சங்கம் கி. மு. 1850-முதல் கி-பி 10-வரையும் இருந்ததாய்க் குறிக்கப்படுகின்றன. கி-பி 90 வரை இருந்ததாய்க் குறிப்பாருமுளர்.

மக்கள் தோன்றிய காலமுதற்கொண்டு வளர்ந்து நிலைபெற்றிருந்த தமிழ் மிகச்சீர்த்தேற்றமடைந்த தலைச் சங்ககாலத்தில் அகத்தியர் தம் பெயரால் ஒரு பேரிலக்கண நூலியற்றினர். அக்கருத்தை "கம்பராமாயணம் அகத்தியப் படலம்" "என்றுமுள தென்றமிழியம்பி யிசைகொண்டான்" என்ற கவி விளக்குகின்றது. ஆகவே இற்றைக்கு 11900 ஆண்டுகட்கு முன்னமே தமிழ் மிகச் சீர்த்தேற்றமடைந்திருந்ததாய்ப் புலப்படுகின்றது. டாக்டர் ஆப்பர்ட் (Dr. Oppert) புரொபசர், இ. எச். சேஸ் (Prof. E. H.

Sayce) முதலிய ஆங்கில சரித்திராசிரியர் சின்ன ஆசியாவில் (Asia Minor) எருதூர் (Ur of Erudu) ஆட்சி, கி. மு. 8000 ஆண்டுகட்கு நெடுநாள் முன்னிருந்ததாயும் பின்னர் சாலடியூர் அல்லது சாலடியரூர் (Ur of Chaladia) ஆட்சியிருந்ததாயும், அதன்பின் அங்காடியர் (Accadians) பாபிலோனியர் (Babilonians) ஆட்சிகள் இருந்ததாயும் கூறுகின்றனர். எருதூர், சாலடியூர் என்ற பெயர்கள் தமிழாயிருத்தலானும், சாலடியர் அக்காடியர் மொழிகளில் தமிழ்ச் சொற்கள் மிகக் கலந்திருப்பதானும், இன்னும் பற்பல ஆதாரவுகளானும் 10000 ஆண்டுகட்கு முன்னரே தமிழ் மொழி மெஸபட்டோமியா என்ற சின்ன ஆசியாவிலும் பரவியிருந்ததாய் உறுதிப்படுகின்றது.

வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரிகள் தமிழ்மொழியின் வரலாற்றில் 8000-ம் ஆண்டுகட்கு முற்பட்ட தமிழ்க் கல்வெட்டைப்பற்றி யெழுதியிருக்கின்றனர். வடமொழி வால்மீக ராமாயணத்தில்சீதையைப் பார்க்க அனுப்பப்பட்ட அநுமாருக்குத் தெற்கிலுள்ள பாண்டியன் ஆண்டிருந்த கவாட புரத்தைப்பற்றிக் கூறப்பட்டிருத்தலானும், அக்காலத்திலிருந்த 'ஜமதக்கினி முனிவருக்கு' பரசுராமர், திரணதூமாக்கினி என்று இருமக்களிருந்தனரென்றும் அவருள் திரணதூமாக்கினி என்ற தொல்காப்பியர் தொல்காப்பியமென்ற இலக்கணநூலியற்றினர் என்றும் பல சரித்திரங்கள் கூறலானும், இடைச்சங்கத்தின் பிற்பகுதியில் தொல்காப்பியர் இருந்தாய்ப்புலப்படுகின்றது. ஜமதக்கினி முனிவர் காலத்தை வேதகாலம் (Vedic Era) என்ற ஆங்கில நூல் 3645-என்றும் வேறு சிலர் 4000-ம் என்றும் கூறுகின்றனர்.

வைவசுவத மனுகாலத்தில் ஒரு பிரளயமுண்டானதாயும் அவர் இட்டதெய்வம் மீன் வடிவாய் வந்து கூறியபடி, கப்பலில் ஏறியிருந்து நீர்ப்பெருக்குக் குறைந்தபின் இறங்கிவைகையாற்றின் கரையில் புது நகர் இயற்றி ஆண்டதாயும், அவன் திராவிட அரசனென்றும், சுக்லயஜுர் வேதத்தில் சதபதப்பிராமணம், அதன் உபப்பிரமணங்களாகிய பாரதம், பாகவதம், லிங்கபுராணம் முதலியவற்றால் வெளிப்படுகின்றது. அது இடைச்சங்கமிருந்த கவாடபுரம் கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த மீனக்கொடியுடைய



மூடத்திருமாறன் கடைச்சங்க மிருந்த மதுரைகண்ட சரித்திரமென்று கருதத்தக்கதாகின்றது. தலைச்சங்க இடைச்சங்கச் செய்திகள் இறையனார் அகப்பொருளுரை சிலப்பதிகாரவுரைகளிற் கூறப்பட்டுள்ளன.

மேற்கூறிப் போந்தவற்றால் 12000 ஆண்டுகளாய் தமிழ்நாடு சீர்த்தேற்ற மடைந்திருந்ததாகத் தீர்மானப்படுகிறது.

தலைச்சங்கத்தில் மக்கட்குறுதி பயக்கும் நூல்களைத் திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளும், குன்றமெரிந்த முருகவேளும், அவர் மாணாக்கராகிய அகத்தியனார், கௌதமனார், வான்மீகனார், மார்க்கண்டனார் முதலிய சங்கப்புலவரும் இயற்றியருளினர். அவை, இருக்கு, எசுர், சாமம்போன்ற தலையாய வோத்துகள் எனத் தொல்காப்பியம் "அறுவகைப்பட்ட பார்ப்பன பக்கமும்" என்ற சூத்திர உரையில் நச்சினார்க்கினியர் கூறியுள்ளார். முதலூழியில் தலைச்சங்கம்இருந்த தென்மதுரை கடல்கொள்ளப்பட்டமையால் இப்பொழுது முதற் சங்கநூல்களிற் சில சூத்திரங்களும் பாக்களும்ஆங்காங்கு உரைகளிற்காணப்படுகின்றன. இடைச்சங்க நூல்களும் பாக்களும் சிற்சில இன்னும் காணப்படுகின்றன. முற்காலத்து ஐந்திணைமாக்களுக்கும் அவ்வத்திணைக்குரிய புத்தேள்களின் வணக்கமும் அனைவர்க்கும் பொதுவாம் சிவ வணக்கமும் இருந்துவந்தது. முற்காலத்திராவிடருள் சாதி வேற்றுமை இருக்கவில்லை. ஆனால் ஒப்பு, அரும்பொருள் வினை, யாழோர் கூட்டம் என மூன்றுவேட்டல்களிருந்தன.

1. ஒப்பு—பெண்கோடற் குலத்தான் வேண்டக்கொடுத்தல்.

2. அரும்பொருள்வினை—தலைவன் வல்லமைதெரிந்து எல்லவருமறியத் தலைவி விரும்பி மாலையிடல். இதுவே சுயம்வரம்.

3. யாழோர் கூட்டம்—தலைவன் தலைவி இருவர் ஒத்தார் தாமே கூடும் கூட்டம். இதுவே காந்தர்வமணம்.

பிராமணாதி நான்கு வருணங்களும் ஆரிட முதலிய மணங்களும் ஆரியர் இந்நாட்டிற்கு வந்த பின்பவராற் கற்பிக்கப்பட்டன. அக்கருத்துகளைக் கபிலரகவல் 'நாற்குலச் சாதி இந்நாட்டினீர்நாட்டினீர்' "தொல்காப்பியம் பொய்யும் பிசியும் புகுந்த பின்றையையர் வகுத்தனர் ஆரிடமென்ப" என்ற மேற்கோள்களுணர்த்தி நிற்

கின்றன. வடமொழி ஆகமங்களில் சைவ மறையோர்க்கு முன்னோராகிய அகத்தியர், கௌதமர், கௌசிகர், காசிபர், பாரத்துவாசர் ஐவர்க்கும் சிவனார் சதாசிவமூர்த்தமாயிருந்து சிவாகமங்களை உரைத்தனர். அவர் உலகுக் குரைத்தனர் என்று கூறப்படுவதையும் முதற் சங்கத்தில் சிவன், அகத்தியர் முதலியர்பால் தமிழ்த் தலையாய வோத்துகள் தோன்றின வென்பதையும் திருமந்திரம் "சதாசிவந் தத்துவ முத்தமிழ்வேதம்" என்று கூறினமையையும், வடமொழியாகமங்கள் பூஜாகாலங்களில் திருவிடகானஞ் செய்யத்தக்கது. விழாக்காலத்தில் திக்குப் பலியில் தமிழ்ப்பண்கள் ஓதத்தக்கன என்று கூறப்படுவதையும் அவ்வாறே இன்றுந் தமிழ்மறைகள் ஓதப்படுவதையும் கருதி நோக்கில் தமிழ்மறைகள் (ஆகமங்கள்) முதற் சங்க காலமுதலிருந்து பண்களோடு ஓதப்பெற்று வந்தனவென்று நன்கு விளங்கும்.

தமிழ்மறை நீண்டகாலமாயுளது. தமிழ்நாட்டில் நுட்பமான மனவிரிவும், தத்துவநூல்களும், சிவஞானமும் என்றுமுள்ளன. சிவக்கடவுள் உலகனைத்துக்கும் பொதுவாந் தெய்வமேயாயினும் அவனை அறியுநெறியும், அவன் வணக்கமும் தமிழகத்தும், ஏனைத் தமிழ்நாட்டினுமே தொன்று தொட்டு உண்மையால் சிவன் "தென்னாடுடையான்" "பாண்டி நாடே பழம்பதியாகவும்" என்று சிறப்பித்துக் கூறப்படுகின்றன. ஆதலால் சிவநெறி என்னப்படும் சுத்தாத்வைத சைவசித்தாந்தம் தமிழ் நாட்டுக்கும் அதில் வழங்கும் தமிழ்மொழிக்குமே தொன்று தொட்டுரியது. இப்போது அது தமிழினின்று ஆங்கிலத்து மொழிபெயர்க்கப்படுவதுபோல் முற்காலத்தில் பிறமொழிகளி லெழுதப்பட்டதன்றி அம்மொழிகளினே தோன்றியதன்று.

இக்கருத்துகளை உமாபதி சிவாசாரியர் திருமுறைகண்ட புராணத்தில் "அருமறையைச் சிச்சிலிப்பண்டருந்தத்தேடுமதுபோலன்றிதுவென்றுமுளதாம்" (இது தமிழ் மறை) கம்பநாட்டாழ்வார் இராமாயணம் அகத்தியப்படலத்தில்,

உழக்கு மறைநாலினு முயர்ந்துலக மோதும்
வழக்கினு மதிக்க வியினும் மரபினாடி



நிழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கட்
டழற்புரை சுடர்க்கடவு டந்ததமிழ் தந்தான்.

என்று தமிழ்மறையின் தொன்மையும் மேன்மையும் வழியுங் கூறப்பட்டன.

திருமந்திரம் அருளுடைமையின் ஞானம் வருதல் 2.
"அவிழுமனமு மெம்மாதியறிவுந்
தமிழ்மண்டலமைந்துந் தத்துவமாமே" திருவாசகம்அகவல்4-165.
"எந்நாட்டவர்க்கு மிறைவா போற்றி" திருவாசகம் அகவல் 4-164.
"தென்னாடுடைய சிவனே போற்றி"—திருவாசகம் அகவல் 2-90.
"தென்பாண்டிநாட்டானே"
"பாண்டிநாடே பழம்பதியாகவும்
பத்திசெய்யடியரைப் பரம்பரத்துய்ப்பவன்"--திருவாசகம் 2-118.
திருவாசகம், திருவம்மானை 8-10:
"தண்ணார் தமிழளிக்குந் தண் பாண்டிநாட்டானை"

என்று எல்லாம் வல்ல பரம்பொருளைச் சிவன் என்ற பெயரால் வணங்கும் சைவநெறி தோன்றிய பழம்பதி பாண்டி நாடென்றும் அதில் நுட்பமான கருத்துகளும் தத்துவ நூல்களும் தேவதேவன் ஞானமும் உளவென்றும் விளக்கப்பட்டது.

சிவன் என்ற சொல்லுக்குத் தமிழ்ப்பகுதி கூறில் வளர் என்ற பகுதி அத்தன்மையைக் குறிக்குங்கால் வளம் என்றும் அதையுடையானைக் குறிக்கும் பொழுது வளன் என்றும் ஆவதுபோல—சிவன் என்ற பகுதி—பொருந்து என்ற பொருளுடைமையால் எங்கும் பொருந்தியிருத்தல் (வியாபித்திருத்தல்) தன்மை சிவம்—எனப்படுகின்றது. எங்கும் பொருந்தியிருப்பான் சர்வ வியாபகனாகிய பரமாத்மா சிவன் என்று கூறப்படுகின்றனன். சுவேதாசுவதரம் 3. 11. "சர்வகதச்சிவஃ" எங்கும் அடைந்துள்ளவன் சிவன். திருவாசகம் அகவல் 3-28. "அனைத்தனைத்தவ் வயினடைந்தோன்."

(இன்னும் வரும்.)

மறைத்திருவன் சுவாமி விருதை சிவஞானயோகிகள்.

# மந்திரம்.

மந்திரம்—இதற்குக் கோவில், குகை, உள்ளம், எண்ணல், வேதம், உபநிடதம், சொல், ஆலோசனை, நாவசையா துச்சரித்தல், அனைத்தையும் அறியுந்தன்மையது, இரகசியமாயுள்ளது, இரகசியமானவற்றைத் தெரிவிக்கும் பான்மையுடையது. நினைப்பவர்களை ஆதரிக்குந் திறமையுடையது, சமுசாரக் கடலினின்றும் கரையேற்று விப்பதெனப் பல பொருள்படுமாயினும், வடிவத்தில் வரையாயும், கோடாயும், சொல்லாயும், சொற்றொடராயும், வாக்காயும், சுலோகமாயும் காணப்படுவதாம்.

இதனை, எவனொருவன் கிரமப்படி சிந்திப்பானோ உச்சரிப்பானோ அவனை, அம்மந்திரமானது, துன்பத்தினின்றுங் காத்துச் சருவாபீட்டங்களுடன் அநுக்கிரகிக்குமெனல், சத்தியஞ் சத்தியஞ் சத்தியம்.

மந் = நினைப்பவன், திரம் = காத்தல் என்ற பொருளாம்.

இது காரியப்பாட்டால், வாசகம், வாச்சியம் என்றிருவகைத்தாம்.

வாசகம்:—வாக்கின் சொரூபமதாம். அதாவது: பல்வகை அக்கரங்களால் ஆக்கப்பட்ட உறுப்புக்களினாலே இயையப் பெற்று, சுருவான்மாக்களும் உச்சரிக்குமாறு, நன்றாய் விளங்கும்படியான நாதாகாரமாயுள்ள வாக்கியம்.

வாச்சியம்:—வாசகத்தின் லக்ஷணை வடிவாமது. அதாவது: வாசகத்தில் அதிட்டான பூதமாகநின்று, சாதகர்களுக்குப் பலன்களை உதவாநின்ற ஓர் ஒப்பற்ற திருவருட்சத்தியாம்.

இவ் வாசக வாச்சிய இரண்டினையும், திருட்டாந்த பூருவமாக நோக்குழி, வாசகம் கரியாகவும், வாச்சியம் அக்கினியாகவும் ஏற்படாநிற்கும்.

அங்ஙனம் ஏற்பட்ட கரியினை, இடைவிடாமல், முறையே ஊதவூத, அக்கினியானது அக்கரியின்கண் மென்மேலு மூண்டு மூண்டு பிரகாசித்தல்போல, ஆன்மாவானவன் வாசகமாகிய



கரியை, அறிவென்னுந் துருத்தியினால் இடைவிடாது முறையே ஊதவூத, வாச்சியமாகிய திருவருட்சத்தி யெனப்படும் அக்கினியானது, அந்த மந்திரமாகிய கரியினிடம் தோன்றி, அநுக்கிரகம் புரியாநிற்கும்.

வாசகலக்ஷணையானது வாச்சியத்தின் ஐக்கியப்பொருளைக் காட்டாநிற்பது. அதாவது, ஒருவர் நினைந்த பொருளைப் பிறருக்குத் தெரிவித்தலும் பிறருக்குத் தெரிவித்ததனைத் தாம் உள்ளுணர்தலுமாம்.

இவ்வாறு, தெரிவித்தலுக்கும், உள்ளுணர்தலுக்கும், முக்கிய ஏது பூதமானது நாதமெனக் குறிக்காநிற்கும்.

இந்நாதம் பரனிடத்தில் உதிக்காநிற்கும். அங்ஙனந்தோன்றிய பரநாதத்தில், விந்துவானது ஜனிக்காநிற்கும். அவ்விந்துவில் அச்சு எனப்படும் உயிரெழுத்துக்களும், அவ்வுயிரெழுத்துக்களுக்கு உடல்போல்வனவாம் அல்லெனப்படும், மெய்யெழுத்துக்களும் பிறக்காநிற்கும்.

இவ்வாறு பிறந்த எழுத்துக்களின் சமூகங்களினாலும், பிராணவாயுவின் உபாதிபேதத்தாலும், சமஸ்தசப்தங்களும், தொனிக்கப்படாநிற்குமெனல் தத்துவஞானிகளது பெருங்கூற்றாம்.

இவ்விதம் விவகரிக்கப்படும் அக்கரங்களாலே, பர அபர சாத்திரங்கள் ஏற்படாநிற்கும். இத்திற சாத்திரங்கட்கு ஏது பூதமாயுள்ள நாதமானது சிவசத்தியினது திருநாமப்பொருளே யாமென்க.

இத்தகைய பொருளானது சப்தஞானங்களையும் அறிந்தநுபவிக்கவல்ல ஆன்மாவாக, சகல பிராணிகளிதயத்திலும், சதா பிரகாசித்துக்கொண் டிலகாநிற்குமென்பர் சிவாநுபூதித் திருவருட் செல்வர்கள்.

இத்தகையநாம மெதுவென்னின், ந-ம-சி-வா-ய என்னும் சிவமூலமந்திர மெனப்படும் ஸ்ரீ சிவபஞ்சாக்கரமாம். ஏனைய மந்திரங்களல்லவெனல் ஸ்பஷ்டம் ஸ்பஷ்டம்.

இச்சிவ பஞ்சாக்ஷரமானது, சிவத்தை யறிந்துகொள்வதற்கு, முக்கிய ஆதாரமாயிருத்தலினால், இதனைச் சிவமூலமந்திரமெனத்

திருமந்திரவியலை நன்குணர்ந்த சிவானுபூதித் திருவருளாளர்கள் செய்யாநிற்பர்.

ஆனால், மந்திரமானது ஜடமாயும் அநித்தமாயுந் திகழ்வதினால், நித்தியசித்து பதார்த்தமாகிய ஆன்மாவை எங்ஙனங் காக்குந் திறமையினைக் கொண்டிராநிற்கும்?

ஷை நாதவிந்துவின் தோற்றத்தாலுண்டாகும் அக்கர சமூகங்களெல்லாம் சிவசத்தி சொரூபமாதலின், அவ்வக்கர ரூபிணியாகிய சிவசத்தியே, அந்தந்த மந்திரங்களை அநுட்டித்துக்கொண்டு நின்று பலன்களையுதவி, அவ்வவ்வான்மாக்களைக் காப்பாற்றி நன்னெறிக்கண் உயக்காநிற்கும்.

மற்றும், சருவாநுக்கிரகையாயும், சருவசப்தார்த்த ரூபிணியாயும், விளங்காநின்ற சிவசத்தியினுக்கு, அன்னிதாக யாதொரு சப்தார்தப் பிரபஞ்சம் இலதாகையால், அவ்வக்கரங்களியாவும் சருவசித்துக்களுக் கெல்லாம் ஓர் திருக்கோயிலாகவும், நிகழ்ந்தோங்கிச் சிறந்தொளிராநிற்கும்.

அங்ஙனமாயின், அத்தகைய மாண்பினையுடைய மந்திரங்கள் யாண்டு கூறப்பட்டுள்ளன?

முழுமுதற் பொருளாகிய கடவுள் சருவான்மாக்களினது அநுக்கிரக ரக்ஷிப்பின் பொருட்டு, பொது சிறப்பென வகுக்கப்பட்டுள்ள, முதனூலென்னும் வேதசிவாகமங்களில் திருவாய்மலர்ந்தருளியுள்ளார். இவ்வேதசிவாகமமிரண்டனுள், சிறப்புநூலாகிய சிவாகமமானது, முற்றிலும்பஞ்சாக்கர வாதிக்கியத்தையே முதன்மையாக்கொண்டு பிரதிபாதிப்பதுபோல், பொது நூலாகிய வேதமும், அப்பஞ்சாக்கர வாதிக்கியத்தையே கொண்டிலகாநிற்குமென்பது நிச்சந்தேகமாம்.

யாங்ஙனம்?

"தாயி" என்னும் பதத்தினால் குருயீடு செய்துள்ள, இருக்கு எசுர் சாமம் என்னு மூன்றனுள், நடுமறையாகிய எசுரானது அம்மூன்றினும் மிகச்சிறந்தது. அங்ஙனஞ் சிறந்த எஜுரானது சம்மிதாகாண்டம் 7 பராயாதகாண்டம் 3. ஆரணியச் சங்கியாகாண்டம் 1. உபநிடதகாண்டம் 1. ஆகதுவாதசகாண்டங்களைக்கொ



ண்டு, 82. பிரஸ்னைகளைப்பெற்றுள்ளதாய், மந்திரமெனவும், பிராமணமெனவும் இரு வேறுவகைப்பட்டு விளங்காநிற்கும்.

இவ்விருவேறுவகையினுள், முதன்மையாகிய மாந்திரமென்னும் சம்மிதா பாகமாகிய 7-காண்டங்களும், ஏனையவற்றுள்ளும் மிகச் சிறந்தனவாம். இவ்வேழனுள், நான்காவதாகிய நடுக்காண்டமே தனிசிறந்தது. இந்நடுக்காண்டம் 7 - சம்மிதைகளாகவும் ஒளிர்தராநிற்கும். இவ்வேழ சம்மிதைகளுள் நடுச்சம்மிதையினுப்பண், ஸ்ரீருத்ராத்தியாய மெனப்படும் சதருத்ரீய மாந்திரமானது வெள்ளிடை மலைபோல் மிளிர்தரலாகு மென்ப, வேதமோதிடும் வேதவேதியர்கள்.

இன்னும், இத்தகைய சதருத்ரீயத்தினுப்பண், நாயகத்தன்மைவாய்ந்து, பிரகாசித்துக்கொண் டிலகாநிற்பது; ந-ம-சி-வா-ய என்னும் ஸ்ரீ சிவபஞ்சாக்கரமா மென்ப.

பின்னும், வேதபுருஷராகிய கடவுளருக்கு ஷை எஜுர்வேதம் சிரசாகவும், அந்த எஜுர்வேத மத்தியிலுள்ள ஸ்ரீருத்ரம் முகமாகவும், அந்த ஸ்ரீருத்ரமத்தியிலுள்ள ஸ்ரீபஞ்சாக்ஷரம் கண்களாகவும், அக்கண்களாகிய ஸ்ரீபஞ்சாக்ஷர மத்தியில், "சிவா" என்னும் துவயாக்ஷரங்களை கண்மணிகளாகவும் துலங்காநிற்கும்.

இவ்வாறு துலங்காநிற்கும் காரணத்தினாலேயே "சிவா" என்னும் பதத்தினால் பஞ்சாக்ஷரமும், பஞ்சாக்ஷரத்தினால், ஸ்ரீருத்ரமும், ஸ்ரீருத்ரத்தினால் நான்காம் காண்டமும், அந்நான்காம் காண்டத்தால் யசுர்வேதமும், அவ்யசுர் வேதத்தால் ஏனையவேதங்களும், ஜொலிக்காநின்றனவென சான்றோர் வியந்துரையாடாநிற்பர்.

மற்றும், வித்தைகளெல்லாவற்றுளும் சுருதிகளை மிகச்சிறந்தனவாம். அவற்றுள்ளும் உருத்திரைகாத சனியே தனிசிறந்தது. அவ்வுருத்ரைகாதசனியிலும், பஞ்சாக்ஷர மேமிக்குச் சிறந்தது. அப்பஞ்சாக்ஷரத்தி னுள்ளும் "சிவா" என்னும் உபயாக்ஷரங்களை மிகச்சிறந்தனவென வேதோப்பிருங்கணமாதி உத்கோஷியாநிற்கும்.

மேலும், வேதோப்பிருங்கண மாதிகளுள், பிரதிபாதிக்காநின்ற முத்திறத் தத்துவங்களுள், இறுதிக்கண்ணின்றது, சிவதத்துவமாகையாலும், அச்சிவ தத்துவத்தினுக்கு மேற்பட்ட பிறிதோர்தத்துவம் வேறிலதாகையாலும், அச்சிவதத்துவப் பதியாம் சிவபரம்பொருளின் மூலமந்திரமாகிய ஸ்ரீசிவபஞ்சாக்ஷரத்தினுக்கு மேற்பட்ட மந்திரங்கள் வேறில்லையாமெனல் சருவசாஸ்திர ஜகத்பிரசித்தமுமாம்.

இன்னும், (1) இப்பஞ்சாக்ஷர மந்திரம், வேதம் நான்மைக்கும் பிரதான வாதிக்கியம் வாய்ந்த உண்மைப் பொருளாகவும் (2) மந்திரநாயகமாகவும் (3) சருவவேதங்களிலும் சத்தியப்பொருளாய் பிரதிபாதிக்கப் படுவதாகவும், (4) சகல கலைஞானங்கட்கும் முக்கியவாதார நாயகமாகவும், (5) சருவத்துக்கும் மூலவித்தையாகவும், (6) சிவமாகவும் (7) சத்தியாகவும் (8) சைவ சூத்திரமாகவும், (9) வைதீக சைவமாகவும் விளங்காநிற்கும்.

மற்றும், சூத்திரமானது, அவரவர் ஞானசத்திக்கேற்ப அளப்பிலாகம அபிப்பிராயங்களை யெல்லாம், தன்னகத் தடக்கிக்கொண்டு, வடிவத்திற் சிறியதாய் நிற்குமாபோல், ஸ்ரீபஞ்சாக்ஷரமானது வேதாகமோபநிடத கலைஞானங்களையெல்லாம் தன்னகத் தடக்கிக்கொண்டு, வாசகவடிவத்திற் சிறியதாய், ஆலவித்தினைபோன்று, சைவ சூத்திரத்தின் பாஷியமாய் அவிர்தருமெனலும் ஒன்றும்.

அன்றியும், எழுத்தினால் வெகு சிறுமையினை யுடையதான இப்பஞ்சாக்ஷரமானது பிரணவ வாச்சியராகிய, சிவபெருமானுக்கு, உயிராயும், உடலாயும், உணர்வாயும், ஒளியாயும், அவரது ஊனநடனம், ஞானநடனம், மோக்கப் பஞ்சகிருத்திய நடனமியாவுக்கும் ஏதுபூதமாகவும் அவிராநிற்பதும் இரண்டாம்.

ஊனநடனம்:—தூலமுறையில், நகாரம் திருவடியாகவும், மகாரம் உந்தியாகவும், சிகாரம் தோள்களாகவும், வகாரம் முகமாகவும், யகாரம் திருமுடியாகவு; சூக்குமமுறையில், சிகாரம் டமருகவத்தமாகவும், வகாரம் வீசுகரமாகவும், யகாரம் அபயாத்தமாகவும், நகாரம் மழுக்கரமாகவும், மகாரம் முயலகனை மிதித்துக்கொண்டிராநின்ற பாதமாகவும், இரக்ஷித்தலை தூக்கிய பாதமாக



வும், ஓங்காரமே திருவாச்சியாகவும், பிரணவத்தை விட்டுச் சதா நீங்காமலிராநிற்கும் பஞ்சாக்கரமே உள்ளொளியாகவும், இருதலை மாணிக்கமே உயிராகவும், பிரணவவாச்சியமே உணர்வாகவுங் கொண்டு, பராசத்தியாகிய மனதில் மலைமகள் காண நடித்து வருவதே.

ஞானநடனம்: — அகார உகாரமாகிய ஜீவர்களிடத்துள்ள மாயையினை அவரது டமருகவத்தத்தால் நீங்குவதும், ஆன்மாக்களிடத்துள்ள கன்மமலத்தினை மழுக்கரத்தால் தீர்ப்பதும், உள்ள மலம் மேலிடாமலிருக்கும்படி ஊன்றிய திருவடியால் அமிழ்த்துவதும், திருவருளை தருவாக நிலவும்படி குஞ்சிதபாதத்தால் நிறுத்துவதும், ஆனந்தக்கடலில் சதா ஆன்மாக்கள் திளைக்கும் வண்ணம் அப்பாதத்தால் அழுத்துவதுமே.

மோக்ஷபஞ்சக் கிருத்தியநடனம்:—எட்டுமிரண்டு முருவாகிய ஆன்மாக்களை அவரவர் கன்ம தாரதம்மியத்துக்குத் தக்கபடி டமருகவத்தத்தால் படைத்தலை சிருஷ்டியாகவும், அபவாத்தத்தால் ரக்ஷித்தலை திதியாகவும், மலங்களைத் தீக்கையே சங்காரமாகவும், பிரபஞ்சம் தோன்றாமலிருக்கும்படி முயலகனை மிதித்துக்கொண்டிராநிற்கும் பாதத்தால், மறைத்துவைப்பதே திரோபவமாகவும், குஞ்சிதபாதத்தால் கடைக்கணித் தருளுவதே அநுக்கிரகமாகவும் உடைத்தாயிருப்பதே.

(இன்னும் வரும்.)

தி. ம. அப்பாவு பிள்ளை.

---

## சமாசாரங்கள்.

---

**கல்கத்தாவில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிவேதாசலம் அவர்கள் புரிந்த உபந்நியாசங்கள்:—**

முன்னே சென்னைக்கிறிஸ்டியன் காலேஜில் போதகாசிரியராய் இருந்த ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்களால் சென்ற பதினைந்து வருஷகாலங்களாகச் சைவ சமயத்திற்கும் அதன்

சித்தாந்தத்திற்கும் செய்யப்பட்டிருந்த நன்மைகள் பிரசித்தமானவை. அவர் சைவசித்தாந்த மகாசமாஜத்தை ஸ்தாபித்ததல்லாமலும் அதற்குப் பிரதமகாரிய தரிசியாராக இருந்து அதன் மிகச் சிறந்த வருஷமகாசபைகளை மிகவுந்திறம்பட நடத்திய அருமைகளும் எல்லார்க்குந் தெரிந்தவைகளேயாகும். தென்னாடெங்கும் அவரால் ஸ்தாபிக்கப்பட்ட சைவசபைகள் பல. இவருடைய சம்பந்தமும் நன்முயற்சியும் இல்லாமல் எந்தச்சிறந்த சைவ சபையின் விசேஷகூட்டமும் நடைபெறுவதில்லை. சைவ சமயத்தின் கொள்கைகளை இக்காலத்திய பௌதிகசாஸ்திர முடிபுகளுக்கு இணங்கவைத்து விளக்கி, எந்த மதத்திற்கும் விரோதமில்லாதவகையில் அதன் சர்வசம்மதக் கருத்துக்களை முதன் முதல் தெளிவாய்க்காட்டவந்தவர் இவர் ஒருவரே என்று சொல்வது மிகை ஆகாது. கேட்டவர் உள்ளங்களைக்கரைந்து உருகச்செய்யும் தம்முடைய தமிழ் ஆங்கில உபந்நியாசங்களின் வாயிலாகச் சுவாமிகள் சாமானியசனங்களுக்கும் நல் எண்ணங்களை எழுப்பி அவர்களைத் திருத்தமான நல்வழியில் நடக்கும்படி செய்து வரும் உபகாரச் செய்கை எல்லாராலும் பெரிதும் பாராட்டப்பட்டு வருகின்றது.

நீண்ட நாளாகத் தென்னாட்டிலுள்ள சைவசபையினர் திறமைவாய்ந்த பிரசாரகர் ஒருவரை வடநாட்டுக்கு அனுப்பி, அங்கே சைவ சமயத்தின் சித்தாந்தங்களை அவரைக்கொண்டு பிரசங்கவாயிலாகப் பரவச்செய்வித்தல் வேண்டுமெனக் கருதியிருந்தனர். அக்கருத்து முற்றுப்பெறுதற்குரிய காலம் ஆண்டவன் திருவருளால் வரலாயிற்று. தூத்துக்குடி மேலூர்ச் சைவ சித்தாந்த சபையினர் சுவாமிகளை வடநாட்டுக்கு அனுப்புதற்குவேண்டும் ஏற்பாடுகள் செய்தற்கு முன்வந்து நின்றனர். தூத்துக்குடிச் சபையார் இங்ஙனம் முன் வந்து நிற்றலை அறிந்த நாகை வெளிப்பாளையம் சைவ சித்தாந்த சபையினர், கல்லிடைக்குறிச்சி சைவசித்தாந்த சபையினர், சென்னை இராயப்பேட்டைச் ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜனசபையினர் புரிசைபாளையம் ஜமீன்தார் அவர்கள் முதலாயினோர், தூத்துக்குடிச் சபையார் கருத்து நிறைவேறுதற்கு வேண்டும் உதவிகள் செய்யமுன் வந்தனர். இவ்விந்தியா தேசத்திற்கே தலைநகராய் விளங்கும் கல்கத்தாவென்னும் காளிகட்டத்திற்குச் சுவாமிகள் நிகழும் 1913௵ ஏப்பிரல்௴ 4 தேதி போய்ச் சேர்ந்தார்கள். முன்னே சென்னைக் கிறிஸ்டியன் காலேஜில் தம்மிடம் கலைபயின்ற மாணவகர் பலர் கல்கத்தா அரசாங்க உத்தியோகங்கள் பலவற்றில் அமர்ந்திருத்தலால், அவர்கள் சுவாமிகளின் வருகையை அறிந்து, அவர்களை எதிர்கொண்டு ஏற்றுக் கல்கத்தாவில் அவர்கள் தங்குதற்கு ஏற்றவசதிகளெல்லாம் அமைத்து வைத்தார்கள்.



சென்ற ஏப்பிரல்௴ 13-தேதியன்று பலர் வேண்டுகோளுக்கு இணங்கிக் கல்கத்தாவிலுள்ள சென்னை ஸோஷல் கிளப் என்னும் இடத்தில் சுவாமிகள் 'திருஞானசம்பந்த சுவாமிகளின் சரித்திர நுணுக்கம்' என்னும் விஷயத்தைப்பற்றி ஓர் அரிய உபந்நியாசம் புரிந்தார்கள். அப்போது ஸ்ரீமான். டி. கே. ஆசாரியார் அவர்கள் பி. ஏ. யல். யல். பி, அக்கிராசனம் வகித்திருந்தார்கள். சுவாமிகளின் உபந்நியாசமுடிவில் அக்கிராசனாதிபதியவர்கள் எழுந்து உபந்நியாசகரின் சொல்லாற்றல் பொருள் ஆற்றல்களை மிகவியந்துபேசினார்கள்.

ஏப்ரல்௴ 16-தேதியன்று சுவாமிகள் 'சாங்கியமும் சைவசித்தாந்தமும்' என்னும் விஷயத்தைப்பற்றிக் கல்கத்தா பிரம்மஞான சங்கமண்டபத்தில் ஓர் இனிய உபந்நியாசம் செய்தார்கள். அப்போது கல்வி, செல்வம், கௌரவம் முதலிய பல வகைகளாலும் உயர்ந்த ஸ்ரீமான் ஹிரேந்திரநாத்டட்டா அவர்கள், எம். ஏ., பி. யல், அக்கிராசனம் வகித்தார்கள். சுவாமிகளின் உபந்நியாசமுடிவில் டட்டா அவர்கள் எழுந்து, உபந்நியாச விஷயத்தின்மேல் தாம் அறிந்த சில அரிய கருத்துக்களை வெளியிட்டுப் பிறகு சுவாமிகளின் உபந்நியாசத்திலுள்ள விசேடங்கள் அனைத்தையும் புகழ்ந்து பாராட்டி, அத்தகைய அரிய பெரிய கருத்துக்களைக் கல்கத்தாவிலுள்ள வங்காளக் கனவான்களுக்கும் பிறர்க்கும் ஆங்கிலத்தில் மிகவும் இனிமையாக எடுத்து உபந்நியசிக்க வந்த உபகாரச்செயலுக்கு வந்தனமுங் கூறினார்கள்.

ஏப்ரல்மீ 27-தேதி யன்று மூன்றாவது உபந்நியாசமாகப் 'பக்தியோகம்' என்னும் விஷயம் சுவாமிகளால் கல்கத்தாவில் சென்னை ஸோஷல் கிளப்பில் உபந்நியசிக்கப்பட்டது. அப்போது ஸ்ரீமான் டி. கே. ஆசாரியார் அவர்கள் பி. ஏ., யல். யல். பி. அக்கிராசனம் ஏற்றார்கள். சுவாமிகளின் இவ்வுபந்நியாசம் மிக உருக்கமாயிருந்தமையால் கேட்டவர் நெஞ்சத்தை இளகச்செய்தது. இவ்வுபந்நியாசம் இரண்டரை மணிநேரம் வரையில் உபந்நியசிக்கப்பட்டும், எல்லாரும் விஷயத்தில் மனம் அழுந்தி நின்றமையால் முடிவுவரையில் அவ்வளவு நேரம் ஆனதைச் சிறிதும் தெரியாமல் இருந்தார்கள். அக்கிராசனாதிபதியவர்கள் இவ்வுபந்நியாச விஷயசம்பந்தமாகச் சில உயர்ந்த கருத்துக்களைச் சுருக்கமாகப் பேசிச் சுவாமிகளின் உபந்நியாசச் சிறப்பை இவ்வளவென்று எடுத்துச்சொல்ல ஏலாதென்று சொல்லி அமர்ந்தார்கள்.

சுவாமிகள் புரிந்த இவ்வுபந்நியாசங்கள் மூன்றும் கல்கத்தா நகரிலுள்ள அறிவுடையோர் பலர்க்குச் சமயவுணர்ச்சியிலுள்ள பற்றுதலை எழச்செய்தன. அதனால் அவர்கள் தம் ஒய்வுநேரங்களை அறிவுக்கும், சாஸ்திர உணர்ச்சிக்கும் பொருத்தமாயுள்ள சைவ சித்தாந்தம், விசிட்டாத்துவிதம் முதலான தத்துவங்களை ஆராய்ச்சி செய்தலிற்பயன் படுத்தவேண்டும் என்றும் அதற்காக ஒருசபை தாபிக்கவேண்டுமென்றுங்கருதினார்கள். அவர்கள் விருப்பத்திற்கு இணங்கிச் சுவாமிகள் தெரிவித்தபடி கல்கத்தா ஆர்ப்புலிலேன் 9/2 எண்ணுள்ள மாளிகையில் ஓர் அந்தரங்கசபை கூடப்பட்டது. அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட வண்ணம் சமரச சன்மார்க்கசபை, என்னும் பெயரால் ஒருசங்கம் நாட்டப்பட்டது. அச்சபையார் விருப்பப்படி சுவாமிகளே அதற்கு நிரந்தரஸ்தாபன அக்கிராசனாதிபதியாக இருக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். பிறகு ஸ்ரீமான் டி. கே. ஆசாரியார் பி. ஏ. யல் யல், பி, அவர்களும், ஸ்ரீமான். எதிராஜலு முதலியாரவர்களும் உபஅக்கிராசனாதிபதிகளாகவும், ஸ்ரீமான். கோவிந்தராஜலுமுதலியார் B.A. ஸ்ரீமான் முருகேசம், ஸ்ரீமான் வி. எஸ். கிருஷ்ணன், எல். எம். எஸ். காரியதரிசிகளாகவும்



தெரிந்து நியமனஞ்செய்யப்பட்டார்கள். செல்வாக்குள்ள கனவான்கள் எல்லாரும் ஏறக்குறைய இச்சபையில் சேர்ந்தார்கள். பெரும்பாலும் இதற்கு அங்கத்தவராயுள்ளவர்கள் கல்கத்தாவில் வசிக்கும் சென்னைப்பக்கத்தவர்களே.

பிறகு ஷை சபையாரால் தீர்மானிக்கப்பட்ட வண்ணம் சமரச சன்மார்க்க சபையின், முதற்கூட்டம் நிகழும் மேமீ 4உ கூடலாயிற்று. அக்கூட்டத்திற்குச் சுவாமிகளே அக்கிராசனாதிபதிகளின் விருப்பப்படி ஸ்ரீமான். டி. கே. ஆசாரியார் அவர்களும், ஸ்ரீமான். எதிராஜலுமுதலியாரவர்களும் பிறரும் சபையின் அவசியத்தையும் நோக்கங்களையும் எடுத்துப்பேசி, சுவாமிகளின் உலகோபகாரமேன்மைச் செயல்களைக்குறித்தும் பாராட்டிப் பேசி அவர்கள் சைவ சித்தாந்தத்திற்கும் மற்ற இந்திய மதங்களுக்கும் செய்துவரும் நன்மைகளை வியந்தார்கள். அதன் பின்னர் அக்கிராசனத்திருந்த சுவாமிகள் 'சைவ சித்தாந்தத்தைப்பற்றிமிக அருமையான ஓர் உபந்நியாசம் புரிந்தார்கள். இவ்வுபந்நியாசங்கேட்டற் கென்று வங்காளிக்கனவான்கள் பலர் நெடுந்தூரங்களிலிருந்து வந்து கேட்டுக்களிப்புற்றுச் சென்றார்கள். அதன் பின் ஸ்ரீமான். டி. கே. ஆசாரியர் அவர்கள் எழுந்து சமரச சன்மார்க்கசபையார்க்காகச் சுவாமிகளுக்கு வந்தனம் கூறி, தாம் சுவாமிகளிடத்துப் பாராட்டும் அன்புக்கும் நேயவுரிமைக்கும் அடையாளமாகச் சிறந்தபூமாலை அணிந்து ஓர் உயர்ந்தவெண்பட்டாடையுஞ் சுவாமிகளுக்குச் சாத்திமகிழ்ந்தார்கள். சுவாமிகளும் அவற்றை அன்புடன் ஏற்று, அப்பட்டாடையை அவர்கள் போனபின் குறியாகத்தாம் என்றும் போற்றிவைப்பதாக உறுதிமொழிபுகன்றார்கள். பிறகு சுவாமிகள் கல்கத்தாவிலுள்ள தம் அன்பர்கள் எல்லா[illegible]த்திலும் உருக்கத்தோடும் பிரியாவிடை பெற்றுக்கொண்டு அக்கூட்டத்தை நன்குநிறைவேறச் செய்தார்கள்.

சுவாமி வேதாசலம் அவர்கள் நிகழும் மேமீ 7-தேதி யன்று கல்கத்தாவினின்றும் புறப்பட்டுக் காசிமகாக்ஷேத்திரத்திற்குச் சென்றார்கள்

சென்னை மெய்கண்ட சந்தானசபை—திருவாவடுதுறை ஆதீன மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகளது ஆதரணையில் விளங்கும் இச்சபையின் பதின்மூன்றாவது வருஷ மஹோற்சவம் 1913ஆம் ஏப்ரல்மீ 20உ. ஆதிவாரம் சபை பிரதிஷ்டை செய்யப்பெற்றுள்ள ஸ்ரீ அருணாசலேஸ்வரர் வசந்தமகா மண்டபத்தில் நிறைவேறியது. அவ்வமயம் ஸ்ரீமான் **J. M.** நல்லசாமி பிள்ளை **B.A., B.L.,** அவர்கள் அக்கிராசனாதிபதியாக வீற்றிருக்க, சித்தாந்தசரபம் அஷ்டாவதானம் பூவை-கலியாணசுந்தர முதலியாரவர்கள் மாணவர்களாகிய ஸ்ரீமத். செந்தமிழ் ரத்நாகரம் வல்லை. சண்முகசுந்தர முதலியாரவர்களும், ஸ்ரீமத். மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்களும் முறையே விபூதிருத்ராட்சம், ஆலய வழிபாடு என்னும் விஷயங்களை உபந்நியாசஞ் செய்தனர். இச்சபையின் உபவக்கிராசனர் வண்ணக்களஞ்சியம் ஸ்ரீமத். காஞ்சி. நாகலிங்க முதலியாரவர்களும், காரியதரிசி ஸ்ரீமத் வா. தி. கோவிந்தராஜ முதலியாரவர்களும் வந்தனோபசார முதலியதந்து பூர்த்தி செய்தனர்.

---

உத்திரமேரூர் சைவசித்தாந்த சபை—இச்சபையினர் 15-4-13-ல் காலை இளையனார் வேலூருக்குச் சென்று தமிழ்வேத பாராயணத்துடன் ஆலயவழிபாடும், 24-4-13-ல் இவ்வூர் ஸ்ரீமத். கி. ஆ. கந்தசாமி முதலியார் விருப்பத்தின்படி சபை காரியதரிசி ஸ்ரீமத். கா. உ. பொன்னுசாமி முதலியாரவர்களால் அரிவாட்டாய நாயனார் புராணப் பிரசங்கமும், 30-4-13-ல் 200 ஏழைகட்கு அன்னதானமும், ஸ்ரீகந்தசுவாமிக்கு மகாபிஷேகமும் திருநாவுக்கரசு சுவாமிகள் சரித்திர உபந்நியாசமும் நடைபெறச்செய்தனர்.

---

1913ஆம் மேமீ 3உ சனிக்கிழமை திரிசிரபுரம் சைவசித்தாந்த சபையில் சமாஜத்தின் உபஅக்கிராசனாதிபதி **J. M.** நல்லசாமி பிள்ளை **B.A. B.L.,** அவர்களால் "அன்பு" என்னும் விஷயம் உபந்நியசிக்கப்பட்டது.

---

OFFICE OF THE REGISTRAR OF ... 5 JUN 1913 MADRAS

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி உ.] 1913-ஆம் ஜூன்மீ [பகுதி ௬.

## சித்தாந்தபரிபாஷை என்னும் தருக்கசோபானம்.

---

உதாரணம்.

குடம்குயவனையுடைத்தாமாறுபோல.

உபநயம்.

உலகமும்குடம்போலச்செயப்படுபொருள்.

நிகமனம்.

ஆதலாலிவ்வுலகஞ் செய்வோனையுடைத்து.

---

அனுமானானுமானம்—கருத்துவழிக்கருதல்.

Double Inference.

ஒருவனுரையாடுந் திறனறிந்தவன் அவனறிவினுண்மையறிதல்.

பிரதிஞ்ஞை.

இவன் கூர்த்த கல்வியறிவுடையன்.

ஏது.

கல்விப்பயத்தனுரையாடுதலின்.

மேற்கோள்.

கற்றுருரையாடல்போல.

உபநயம்.

இவனுரையாடலுங் கல்விநுணுக்க முடையது.

நிகமனம்.

ஆதலாலிவன் கூர்ந்தகல்வியறிவுடையன்.

---

கருதலனுமானம்—உரைவழிக்கருதல்.

வேதாகமங்களுள் சொல்லியதுகொண்டு சொல்லாத பொருளையும் ஒப்புமை பற்றி யூகித்துத் துணிவது.

பிரதிஞ்ஞை.

இருவகையுலகையுமியக்குவதுகடவுள்.

ஏது.

மறை யவ்வாறியக்கும்பொருளை கடவுளென்று கூறுதலின்.

உதாரணம்.

திகிரியுருட்டுவோ னரசனென்பதுபோல.

உபநயம்.

திகிரிபோல்வதுலகம்.

நிகமனம்.

ஆதலாலிவ்விருவகையுலகையுமியக்குபவன்கடவுள்.

---

இவ்வனுமானங்களே யன்றி அடியிற்குறிக்குஞ் சில அனுமானங்களுமுள. வருமாறு:—

கணிதானுமானம்—Demonstration reasoning.

எண்களினாலே தெள்ளிதி னளந்து கணிக்கவரும் பொருள்களின் சம்பந்த சார்புகளைப் பற்றியது.

உ-ம். ஆறின் வர்க்க முப்பத்தாறு.

மூன்றின் வர்க்கத்தை நாலாற்பெருக்கிவருங் குணிதம் ஆறின்வர்க்கத்துக்குச்சமன்.

ஆகவே மூன்றின் வர்க்கத்தை நாலாற் பெருக்கி வருங் குணிதம் முப்பத்தாறு.

---



வேதானுமானம்—Inductive reasoning.

விசேடவிடய கதங்களினால் * சாமானிய பிரமேயத்தை அளிப்பது.

உ-ம். ஒரு காந்தச் சலாகையின் சந்நிதியிலே பற்பல இருப்புச் சின்னங்க ளிருக்கப்படின்மேல், இரும்பெலாங் காந்தத்தா லீர்க்கப்படும்.

---

கதார்த்தானுமானம்—Reasoning on facts.

கதத்தை அளத்தற்பொருட்டுச் செய்யும் அனுமானமாம். கதங்கள் மெய்ம்மையோ பொய்ம்மையோ வென அளக்கும்படி அக்கதங்களை அவற்று ளியைந்த எழிலைக்கண்டவர்களின் சாட்சி மூவகையாம். அவை உரை, அயற்சார்பு, உரையயற்சார்பு என்பன. உரைசாட்சி - வாக்கு மூலமாயும் இலிகித மூலமாயும் வரும். அயற்சார்புசாட்சி - ஒரு சம்பவத்தோடடுத்த துணைக் காரியமேயாம். உரையயற்சார்புசாட்சி - புதிதாய் நிகழ்ந்த ஒரு கதத்திற்கும் அநுபவத்திலே முன்னர்நாங் கண்டறிந்த பின்னொரு கதத்திற்குமுள்ள ஒற்றுமை.

---

துல்லியானுமானம் †—Analogical reasoning.

ஆய்ந்தறிந்த வொருபொருளின் இலட்சணம் அப்பொருட்குத் துல்லியமான பிறிதொரு பொருட்கு முண்டென்று சாதிப்பது.

உ-ம். நீர்மேற்செல்லு மரக்கலத்திற்கும், நிலமீதூரும் இரதத்திற்குமுள்ள சம்பந்த சமானமும், வாயுவி லியங்குதற்குத்த

* கதம் என்பது இயற்கையாயேனும், செயற்கையாயேனும் நிகழ்ந்த சம்பவம்.

† துல்லியம்-சம்பந்தத்தினது சமானம் அல்லது ஒப்பு. துல்லியானுமானம் ஒருவாறு வேதானுமானத்தை நிகர்க்கின்றது. ஆயினும் வேதானுமானம் ஒரு இனத்திற்குரிய தனிப்பொருள் பலவற்றைக்கொண்டு அவற்றினினத்தைப்பற்றிச் சாதிக்கலாம். துல்லியானுமானம் ஒரு இனத்திற்குரிய தனிப்பொருளொன்றைக்கொண்டு அவ்வினத்திற்குரிய பிறிதொரு பொருளையேனு மனுமிக்கலாம்.

கும் பட்சிச்சிறைக்கும், நீரிலேயுலவுதற்குத்தகு மீன்செட்டைக்குமுள்ள சமானமும், ஒரு குயிற்கும் பின்னொரு குயிற்குமுள்ள ஒப்புமையும், ஒரு கிரகத்திற்கும் வேறொரு கிரகத்திற்குமுள்ள சாதிரிசயமுமாம்.

---

தண்டபூபிகானுமானம்—A fortiori reasoning.

ஒன்றன் முடிபினால் அதனினுந் தெள்ளிய பின்னொன்றினையும் அருத்தாபத்தியால் முடிப்பது.

உ-ம். துட்டகண்டகனாகிய ஒரு திருடனை வதைக்கத்தகுமெனின் பெற்றதாயை வன்மமாகக்கொன்ற வன்கண்ணனை வதைக்கவேண்டுமென்பது.

---

அனுமானப்போலி—Fallacy of the Inference.

ஏதுபோலி.

அனுமிதி யுணர்வினுக்குத் தடையா யுண்மை யனுபவவுணர்வினை விடயமாகக் கோடல். இவற்றின்வகை சவ்வியபிசாரம் * விருத்தம், சற்பிரதிபக்கம், அசித்தம், பாதிதம் எனவைந்தாம்.

சவ்வியபிசாரம்—பிறழ்வுடையது.

Going Astray.

ஒரு நியமமின்றிப் பலவிடத் திருப்பது. இவற்றின்வகை சாதாரணம், அசாதாரணம், அனுபவசங்காரி எனமூன்றும்.

சாதாரணம்—பொது.

Too genreal.

சபக்க விபக்கங்களிலிருக்கு மேது. இம்மலைத் தீயுடைத்து. அளவையா லளக்கற்பால தாகலின், என்புழி அளவையால் அளக்கற்பாலதாந் தன்மை தீயில்லா விடமாகிய நீர்த்தடாகத்திலு மிருக்கின்றது.

* இதுவே அநைகாந்திகம்—Discrepant reason.



அசாதாரணம்—சிறப்பு.

Not general enough.

சபக்க விபக்கங்களி லில்லாது பக்கமாத்திரத்திலிருப்பது. சத்தம் நித்தியம் சத்தத்தன்மை யுடைமையான், என்புழிச்சத்தத்தன்மை நித்தம் நித்தப்பொருளெல்லாவற்றினுமின்றிச் சத்தத்தின் மாத்திர மிருக்கின்றது.

அனுபவசங்காரி—முடிவுபெறுமை.

Non exclusive.

அன்னுவய திருட்டாந்தமும் வெதிரேக திருட்டாந்தமுமின்மை. எல்லாப்பொருளும் அநித்தம் அளவையால் அளக்கற்பால தாகலின் என்புழி யீண்டு முழுவதும் பக்கமாயிருத்தலின் திருட்டாந்தமில்லை.

விருத்தம்—மாறுகோள்வது.

Contradiction.

சாத்தியாபாவத்தில் (துணிபொருளில்லாவிடத்து) வியாபித்திருக்குமேது. சத்த நித்தியம் காரியப்பாட்டால், என்புழிக் காரியப்பாடு நித்தியமல்லாவழி பொருளில் வியாபித்திருக்கிறது.

(இன்னும் வரும்.)

மணவழகு.

---

## சிருட்டியில் மயக்க நிவாரணம்.

---

(முன் தொடர்பு தொகுதி 2, பகுதி 5 பக்கம் 134.)

ஆனால், காமாதிகளால் கெடுதிவிளைவதில்லையோ? எனில், அவை துர்விநியோகப்படும் பொழுதுதான் கெடுதிபயப்பனவாகின்றன. நல்லது எனப்படும் வஸ்துவுங்கூட காலபேத, அளவுபேதங்களாலும், ஒழுங்குதவறுதலினாலும் தீங்கு பயக்குமுண்மை பிரதிதினம் நம்மனுவத்தில் வருகின்றன. திட்டாந்

தம்: அன்னம் சீவாதாரவஸ்து வல்லவா? அது இல்லாதிருக்க ஒருவராலும்முடியாதன்றோ? அத்தகைய அன்னமும், பக்குவத்தில் பதந்தப்புமாறாலும், அளவு கடக்குமாறாலும், அகாலவுணவினாலும் விஷமாகி, அசீரணம்—வாந்தி—பேதி முதலியவியாதிகளை யுண்டுபண்ணித்தீங்கினையும், சில சமயங்களில் அபாயத்தையும் வருவிக்கின்றது. அங்ஙனம் வருவித்ததென்றுசொல்லி அன்னத்தை "பகை" என்று சொல்லவுந் தள்ளவும் யாருக்கேனும் முடியுமோ? அதுபோலவே காமக்குரோதாதிகளிடத்தும் உபகாரவியல்புகண்டு முறையுடன் உபயோகித்துப் பயனடைதல் கடனாமன்றி, அவற்றைப் "பகை" என்றும் 'சீவசிருட்டி" என்றுஞ் சொல்லுவது மயக்கந்தரும் வார்த்தைகளாமென்க. அன்றியும், காமாதிகள் நீக்கப்படுவனவன்று. நீக்க முயலினும் அவை நீங்காவாம். ஏனெனில், அவை சீவசிருட்டியாயிராமல், சீவர்களின் உபகாரார்த்தமாக ஈசுரனாலுதவப்பட்டுச் சிருட்டியுள் வந்துள்ள காரணத்தாலென்க. ஈசுர சிருட்டியை ஈசுரன் மாற்றவல்லனே யன்றிச் சீவனாலாகாமை யுணரத்தக்கது. காமக்குரோதாதி குணங்களை இங்ஙனம் ஆதரித்துப்பேசியதனால், "அவற்றை மனம்போனவாறு நிகழவிடுவதிற் குற்றமில்லையோ?" எனில், பெரிதுங்குற்றமுண்டு. அன்னத்தை அளவு கடந்து மனம்போனவாறு உபயோகிக்கில் அது சும்மாவிடுகின்றதா? அதுபோலவே, காமாதிகளையும் மிதமிஞ்சவிடாது அடக்கியாண்டு பயனடையவேண்டுவதே சீவர்களது கடனாம். புத்திதத்துவத்தைக்கொண்டு அடக்கியாளாவிடத்துக் காமாதிகள் அதோகதியிற் கொண்டுபோய்விடு முண்மையை யொருவருமறக்கலாகாது.

பின்னும் நுணுகிவிசாரிக்குங்கால், காமாதிகள் துர்விநியோகப்படநேரிடுவதும், ஒருவன் மனத்தத்துவத்திலமைந்துள்ள பூர்வகன்ம வாசனையினால்வரும் தீயகன்ம வாசனை மேலிட்டுள்ளமனம் தீவினையையே நாடிநிற்றல் இயல்பாம். அத்தகைய மனத்துடன் சேருஞ் சீவனும் தீவினைசெய்கிறவனாகின்றான். இதனால், சீவச்செயல்களுக்குக் கன்மவாசனை முதற்காரணமென்றாகின்றது.



"சீவன்தானாக எதுஞ்செய்தலின்றிக் கன்மவாசனையிருந்தவழி நன்மை தீமைகளைச்செய்கின்றான் என்னில், விதிவிலக்குகளையுணர்ந்து தீமைகளை விலக்கி நன்மைகளையே செய்யவேண்டிய முயற்சியும் பொறுப்பும் சீவன் பால் வேண்டப்படுவதில்லையோ?" என்னில், பெரிதும் வேண்டப்படும். கன்மவாசனையிருந்தவழி மனஞ்சாய்ந்து நின்று சங்கல்பிக்க, சீவன் நன்மை தீமைகளைச் செய்வதுண்மையாயினும், தீமைகளிலெழும் மனச்சாய்வினைத்தடுக்க வேண்டிய முயற்சியும் சீவனது கடனாம். வாசனை என்பது சாய்வு (tendancy) மாத்திரமாய் நிற்கும் நிலையாம். பழக்கவிசேஷத்தால் அந்நிலை எளிதில் மாறுந்தன்மையதாம். பிராரத்தவசத்தால் வரும் மனவெழுச்சியே "ஊழ்" எனப்பட்டுமாறாது வரும். அதனைத்தடுக்க முயலினும் ஊழே வந்து முன்னிற்கும். என்றாலும், புத்திபூர்வகமான சமயங்களிலெல்லாம், தீயசங்கற்பங்களைத் தடுக்குமுயற்சியைச் சீவர்கள் கைவிட நியாயமில்லை. ஊழானது வலிமைபெற்றிருத்தல்போல, முயற்சியும் சமவலிமையுடையதாயிருக்கின்றது. பகுத்துணர்ந்து தீயவற்றை விலக்கும் முயற்சியின்பொருட்டே "புத்தி" எனப்படும் பகுத்தறிகருவி யொன்றுசீவனுக்குதவப்பட்டுள்ளது. அதனைக் கொண்டு மனத்தின் தீயசங்கற்பங்களை மாற்றி அதைநேர்நிறுத்தப் பழகுதல்வேண்டும். இடையறாப் பழக்கத்தால் பூர்வகன்மவாசனை எளிதில்மாறுந்தன்மையதாம் என்பது சாத்திரநிச்சயம். அனுபவத்திலும் பழகி யறியலாம். இங்ஙனஞ்செய்தற் கென்றே புத்திதத்துவம் ஏற்பட்டுளது. புத்திதத்துவமானது ஓர் மரக்கலத்திற்குச் "சுக்கான்" என்னுங்கருவி யெப்படியோ, அப்படி உபயோகப்படுகின்றது. காற்றிலுந்துச் செல்லுமரக்கலம் தப்புவழிகளிற் சென்று நாசமடையாவண்ணம் அதைக்காத்து, சுக்கான் கருவியானது, நேர் வழிச்செலுத்துகின்றது, அதுபோல, வினைக்காற்றிலகப்பட்டுச் செல்லும் மனச்சங்கற்பத்தைத் தடுத்து நல்வழிச் செலுத்துதற் கென்றே சீவனுக்குப் புத்திதத்துவம் உதவப்பட்டதாம். தீயசங்கற்பங்களை விலக்கும் முயற்சிசீவன் பால் வேண்டப்படாதாயின், பகுத்துணர் கருவியாகியபுத்திதத்து

வம் அவனுக்குதவப்பட்டிராது. ஆதலால், புத்திதத்துவத்தை யுபயோகித்து மனச்சங்கற்பத்தை நேர் நிறுத்தாதொழியின், அதற்குச் சீவன் உத்தரவாதியாக வேண்டுவதுஎல்லாப் படியாலும் நியாயமேயாம். நேர் நிறுத்தாக்குற்றத்திற்குத் தண்டனையாகச் சீவன் இக—பரங்களிற் பலன் அனுபவித்துத் தீரவேண்டுவதும் நியாயமா மென்க. சீவன் பாலுள்ள இம் முயற்சியுண்மையை யுணர்த்துவதற்கே நந்தெய்வப்புலவர்,

"ஊழிற்பெருவலி யாவுளமற்றொன்று
சூழினுந்தான் முந்துறும்."

என்று ஊழின் தடைபடாவலிமையை யுணர்த்தவந்தவர், முயற்சியின் அதிகாவசியத்தையும் வற்புறுத்துவான்:

"ஊழையுமுப்பக்கங்காண் பருலேவின்றித்
தாழாதுஞற்றுபவர்."

என்று, மற்றோரிடத்தில் முயற்சியை வலியுறுத்து வாராயினர். இங்கே "ஊழிற் பெருவலி" என்றது பிராரத்தவினையையாம். இன்னபல நியாயங்களால், விதிவிலக்குகளை யுணர்ந்து நடக்க வேண்டப்படுதல் காண்க.

"இந்தச்சீவனால் வருமறுபகையெலா
மிவன் செயலல்லாமல்................"

என்ற கைவல்லிய நூல்வாக்கியத்திற்குச் சித்தாந்த வழியிற் பொருளுரைக்கில் மிகப்பொருத்தமா யிருக்கும். அவ்வாக்கியத்திற்குச் சித்தாந்த வழிப்பொருளாவது, "உபகாரார்த்தமாக வுதவப்பட்ட கரணாதிகளைத்துர்வினியோகப்படுத்திப் "பகை" ரூபமாக்கிக்கொள்வது (புத்திவிசாரமற்ற) இந்தச் சீவனால் வருஞ்செயலே யல்லாமல்" என்று உரைத்தலே சித்தாந்த வழிப்பொருளாம். ஆனால், அந்நூலிற்பயிலுஞ் சாமானிய வறிவுடையோர்க்கு இப்பொருள் உசிதப்படாது. ஏனெனில், காமாதிகள் [illegible] செய்யுந்துர்க்குணங்களாய், சீவனது துர்க்குணத்தானுண்டாக்கிக் கொண்டவையாம் என்னும் "விரிவுரைப்" போதனையில் மயங்குகின்றவர்களாதலினாலென்க.

(இன்னும் வரும்.)

C. M. அரங்கசுவாமி நாயகர்.

# மந்திரம்.

(முன்தொடர்ச்சி தொகுதி-2, பகுதி-5, பக்கம்-147.)

மேலும் முத்திமார்க்கமாகிய 108 மகாவாக்கியங்கட்கும்; அநுக்கிரக சிரேஷ்டமான மகாவாக்கியங்கட்கும்; உபதேசமகாவாக்கியங்கட்கும்; சமாதி வாக்கியங்கட்கும்; விதிவாக்கியங்கட்கும்; ஜீவப்பிரமைக்கிய மகாவாக்கியங்கட்கும்; சுவாநுபூதி சார்தாந்திக மகாவாக்கியங்கட்கும்; சாமவேத சாந்தோக்ய உபநிடதத்தின் முடிவினுக்கும்; ஜீவாத்துமா பரமாத்மாவில் ஐக்கியமென்னும் பொருளைப் பயக்கவல்ல தத்துவமசி மகாவாக்கியத்துக்கும்; மூலவித்தாயிருப்பது மூன்றாம்.

தவிரவும், அந் தத்துவமசி மகாவாக்கியமாக விளங்காநின்ற இப்பஞ்சாக்ஷரமானது; பதிபசுபாசமென்னு முப்பொருளாகவும் பிரகாசியாநிற்குமெனல் நான்காம்.

இன்னும், இங்ஙனம் பிரகாசியாநின்ற ஸ்ரீ சிவபஞ்சாக்ஷரமானது; ஓமென்னும் பிரணவத்தினுக்கு, அகத்துருப்பாயும், ஆவியாயும் ஒளிராநிற்குமெனல் ஐந்தாம்.

ஆனால்; பிரணவம் 32 வகையாம். அம்முப்பத்திரண்டும், ஒளிவடிவு உணர்வடிவு வரிவடிவென்னும் 3 வடிவங்களைப் பெற்றுள்ளது. இம்மூன்றிற வடிவுள் முன்னைய விரண்டும் சாக்ஷாத்கார சுவாநுபூதியில் உய்த்துணரத்தக்கதாம். கடையொன்று மாத்திரம் ஈண்டு விரித்துரைக்கற்பாலதாம்.

பிரணவமென்பதற்குத் துதிக்கப்படுவ தெனப்பொருளாம். அதற்குப் பரியாயநாமங்கள், தாரகம், ஏகாக்ஷரம், ஓங்காரம், ஓமந்திரார்த்தம், மந்திரமூலம், மந்திரநாயகம், வெட்டாதசக்கரம் என பல காணப்படினும், இதுவரிவடிவில், ஓம் என்கிற எழுத்தாமென்பதை உலகம் நன்கறிந்த விஷயமே.

சிவவோமென்கிற எழுத்தானது "பிரதமம் தாரகாதாரம் ஜோதிரூபம் சுவ்ய முச்சரிக்க கிருதயம் குண்டலாகாரம் சதுர்த்தம்

அர்தசந்திரகம் பஞ்சமம் பிந்துசையுக்தம் ஜோதின்மயஷடானனம்" என்கிற மறைஞாயப்படி; தாரகமாகியவுடு, தண்டமெனப்படும் வளைதடி, குண்டலம், பிறை, வட்டம் என்னும் ஐந்துறுப்புக்களையும் பெற்றுள்ளதாம்.

இவ்வைந்துறுப்புக்களைப் பெற்றுள்ள பிரணவத்தில், "தாரகஞ்ச நகாரஞ்ச மகாரோதண்ட முச்யதே, சிகாரோ குண்டலிப்ரோக்தம் அர்தசந்திர வகாரகம், யகாரோ பிந்துருக்யுக்தம் பிரணவம் பஞ்சவர்ணகம்" என்னும் நிகமநியமப்படி, தாரகமாகிய வடிவு நகாரமென்றும், தண்டமாகிய வடிவு மகாரமென்றும், குண்டலமாகிய வடிவு சிகாரமென்றும், பிறையாகிய வடிவு வகாரமென்றும், வட்டமாகிய வடிவு யகாரமென்றும், குறியீடானவற்றை; எழுத்தறியும் பெருமானாரது, எண்ணிணை நன்குணர்ந்த இயல்வல்லோர், இச்சேதும் ஓரியலையென் றெண்ணுகிற்பர். இதற்குச் சான்றும் இருக்காதிகளே.

மேலும்; திருவருட்பயனும், "இறைசத்தி பாசம் எழில்மாயைஆவி உறநிற்கும்ஓங்காரத்துள்" என்றுக்கோவியாநிற்கும்.

இத்தகைய காரணத்தினாலே, பஞ்சாக்ஷரத்தைப் பஞ்சாக்ஷரப் பிரணவமென்றும், பஞ்சாக்ஷர பாஷியமென்றும், சிவலிந்தையென்றும், சிரியோர் வியந்துரை செய்யாநிற்பர்.

இன்னும், இத்துணை மாண்பினைக் கொண்டுள்ள ஸ்ரீபஞ்சாக்கரமானது, நாராயண அட்டாக்ஷர மாதிமந்திரங்கள், பிரணவசகிதமாக நடைபெற்றும், உச்சரிக்கப்பட்டும் பயன்களை உபகரிக்குமாபோலாகாமல்; உயிரெழுத்தானது, உடலெழுத்தினை எத்திறத்தும், தனக்கோருதவி வேண்டாமல், தன்னந்தனியே தனித்து நின்று, பொருளையும் பயனையும் வழங்குமாபோலாகி, ஒஷ பிரணவத்துக்குள் தன்னந்தனியே தனித்து நின்றியங்கி இம்மை மறுமைப் பயன்களை, அருளவல்ல பேராற்றல் உடையவல்லதாம்.

மற்றும்; ஒருவனுக்குச் சிவபஞ்சாக்ஷரமானது, சித்தியாகாமலிருக்குமானால்; எவ்வகைப்பட்ட மந்திரங்களும் பலிதமடையாதென்று, அருமறையாகமங்கள் ஓலமிடுதலினால், பிரணவத்தினுக்குப் பஞ்சாக்ஷரம், உயிரொளியா பொலிருமெனவும் சுவசித்தமாம்.



தவிரவும், பிரணவமும், பஞ்சாக்கரமும் முறையே நெல்லும் அரிசியும்போன்றும் நெல்லினின்று அரிசியானது வேறாகாதது போல் பிரணவத்தினின்றும் பஞ்சாக்கரம் வேறாகாது. நெல்லினது பிரயோசனம் அரிசியாவதுபோல்; பிரணவத்தின் பிரயோசனம் ஸ்ரீசிவபஞ்சாக்ஷரமாம். அரிசியாலுண்டாவது அன்னமாம்போல், பஞ்சாக்ஷரத்தாலுண்டாவது சிவஞானமாம். அன்னத்தாலுண்டாம் பலன், பசியின்மை, திருப்தி, இன்பம் எனப்படுமாபோல்; சிவஞானத்தாலுண்டாவது, மலவிமோசனமும், மோக்ஷானந்தமுமாம்.

ஆகவே; பஞ்சாக்ஷரம் பிரணவமேயாயினும், சாதனாவிஷயத்தில், கண்கூடாகப் பலனை அருளவல்லது ஸ்ரீ சிவபஞ்சாக்கரமே. பிரணவமென்பது எட்டுணையும் இல்லையே இல்லையாம்.

இதனால்; பஞ்சாக்கரம் உயிராகவும், பிரணவம் உடலாகவும் பிரகாசியாநிற்குமெனல் வெள்ளிடைமலைபோல் வெளிப்படையாம். இவ்வுண்மை யறியாதார் பிரணவத்தை உயர்வாகவும், பஞ்சாக்கரத்தைத் தாழ்வாகவும் பிதற்றுகிற்பர்.

ஆனால்; ஏகாக்ஷரிமுதல், ஷோடசாக்ஷரிவரை கூறுகிற்கும், மறைகள் யாவும் பிரணவசகிதமா யுச்சரிப்பதுபோல; பஞ்சாக்ஷரத்தைப் பிரணவசகிதமா யுச்சரிக்கலாகாதோ?

பஞ்சாக்கரத்துடன் பிரணவத்தைச் சேர்ந்தாலும், சேர்க்காவிட்டாலும், அதனாலோருயர்வு தாழ்வு காணப்படாமையினாலும், பஞ்சாக்கரத்துடன் பிரணவத்தைச் சேர்த்தா லஷ்டாக்கரமெனும் மறைஞாயம் புலப்படுகிறதினாலும், பஞ்சாக்கரத்தைப் பிரணவத்துடன் கூட்டி யுச்சரித்தல் எவ்வாற்றானும் பொருந்தவே பொருந்தா.

"நமச்சிவாயவாழ்க"
"நற்றுணையாவது நமச்சிவாயவே"
"சொல்லுநாநமச்சிவாயவே"
"சிவாயநமவென்றுசிந்தி"

என்னுஞ் செய்யுட் டொடர்களில், சிவாநுபூதிச் செல்வத் திருவருளாளர்கள் சிறிதும் பிரணவத்தைச் சேர்த்துத் திருவாய் மலர்ந்தருளினவர்களே அல்லர் அல்லர் இவற்றினும், சான்றுகள் வேறு, வேண்டாவாம்.

இன்னும், அன்பர்காள்; அறிஞர்காள்; அருமறையாளர்காள்; ஆகமத்துறையினர்காள்; இத்தகைய சருவோத் கிருஷ்டங்களைக் கொண்டுள்ள, ஸ்ரீ சிவபஞ்சாக்ஷரத்தின் கண் பிரத்தியக்ஷமாக விளங்காநின்ற 125 வித அற்புதங்களுள். அவற்றை முறையே எடுத்துக் கூறப்போகு முகத்தால், உய்த்துணர்ந்து, நிரதிசயானந் தக்கடலில், சதா திளைத்துய்விர்களாக. ஜன்மசாபல்ய முண்டாவதாக.

(இன்னும் வரும்.)

வடபதி திருப்பருப்பதப் பரம்பரை

கி. மா. அப்பாவு பிள்ளை,

தமிழ்ப்பண்டிதர், கருவூர்.

---

## மெய்கண்ட சிவாசாரியர் நாமாவளி.

மெய்கண்ட மணியே குருமணியே
கைகண்ட சிவனருள் கண்மணியே. (க)
திருவெண்ணெய் நல்லூர் வருதேவே
குருவென வந்தரு ளுயர்கோவே. (உ)
சிவஞான போதஞ் சொன்னவனே
அவஞான நீக்கி யருள்பவனே. (ங)
அத்துவி தப்பொரு ளறைந்தவனே
முத்திக் கொருவழி வரைந்தவனே. (ச)
பதிபசு பாசம் பகர்ந்தவனே
நிதியெனு மருளை நுகர்ந்தவனே. (ரு)

மணவழகு.

---

# சிவஞானபோத முதனூல் விளக்கம்.

## அத்தியாயம். II

(முன் தொடர்ச்சி தொகுதி 2. பகுதி 5, பக்கம் 136.)

## அத்தியாயம். III.

### ஐயவினாக்களின் தெளிவு.

### முதலாவது.

சிவபெருமானிடத்தினின்றும் முதன் முதல் உண்டாயது நாதம், அந்நாதத்தைக் குறிப்பது பிரணவம். பிரணவத்தின் வரிவடிவம் இது "ஓம்", இவ்வடிவம் தமிழுக்கே உரித்து என்பதை யாவரும் அறிவர். இவ்விதமான வடிவம் வேறு எப்பாஷைகளிலும் கிடையாது என்பது முடிபு.

சிவபெருமான் பார்வதிக்கு உபதேசித்ததும், சிவபெருமான் அம்மைக்கு உபதேசிக்குங் காலத்து மடியிலிருந்து கேட்டுக் கொண்டிருந்து பிறகு எம் குழந்தை வடிவேலன் எம்பெருமானுக்கு உபதேசித்ததும், பிறகு நந்தியெம் பெருமான் முதல் பலரும் கற்றுக்கொண்டதும் தமிழாகிய பிரணவமே.

"கொன்றைச்சடையற் கொன்றைத்தெரியக்
கொஞ்சித்தமிழைப் பகர்வோனே." (திருப்புகழ் 22)
என்பதை கவனிக்க.

எல்லாப் * பாஷைகளும், எல்லாப் பாஷைகளிலுமுள்ள வேதாகம கலாபுராணாதி சாஸ்திரங்களும் பிரணவத்தினின்றும் உண்டாயின. என்பது யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்கதே.

பிரணவம் தமிழ்; அதனினின்றும் உண்டாயபாஷை தமிழ். ஆகையால், சிவபெருமான் தமிழுக்குக் கருத்தா என்பது போதருகின்றது.

இனிச் சிவபெருமான் உள்ளிட்ட எல்லாத் தேவர்களும் பேசுவதும், எழுதுவதும், பிறருக்கு உபதேசிப்பதும் தமிழே என்

* பாஷை என்பது சிச்சர் வழக்கு.

பது அடியில் கண்டபாசுரங்களைக் கண்ணுறுவார்க்குத் தோன்றா மல் இராது.

1. "தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானை"

(திருவாசகம்—அம்மானை 10)

2. "அடியார்க் கெளியன் தில்லைச் சிற்றம்பலவன்"

3. "கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத்தும்பி"

4. "மதி மலிபுரிசை மாடக்கூடற்"

5. "முத்தமிழ் அடைவினை * முற்படுகிரிதனில் முற்பட எழுதிய முதல்வோனே"

(திருப்புகழ்)

6. அகஸ்திய புலஸ்திய சனற்குமரர்க்கும் சதுபந்து நவப் புலவர்க்கும் முத்தமிழ்த்திரயத்தை"

7. இன்னும் அநேக மேற்கோள்கள் உள. விரிவஞ்சி விடுத் தாம்.

ஆகையால் தேவ † பாஷை தமிழ் என்பது சித்தாந்தமா யிற்று.

சேக்கிழாரும் "ஞாலமளந்த மேன்மைத் தெய்வத்தமிழ்" என்றார்.

கம்பரும் "தழற்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ் தந்தான்" என்றும்.

"என்றுமுள தென்றமிழியம் பியிசை கொண்டான்"

என்றும் கூறினார்.

ஆகையால், தமிழுக்கு தேவபாஷை என்னும்பெயர் வழக்கில் இருந்ததாகவும் இருக்கிறதாகவும் அறிகிறோம்.

"உயர்மதிக்கூடலினாய்ந்த வொண்டீந்தமிழின்

றுறைவாய் நுழைந்தனையோ?"

என்னும் திருக்கோவையாரை நோக்குமிடத்துத்திரிபுரமெரி த்த விரிசடைக்கடவுள் தாம் பாஷையை உண்டுபண்ணினதுமல்லா மல், சங்கமிருந்து, அத்தமிழ்ப்பாஷையை மற்றத் தமிழருடன்

* முற்படுகிரி = முன்னாலே இலங்கையில் (continent of zumina) இருந்து பிரளயங்களால் அழிந்தொழிந்த மேருகிரி.

† பாஷை = பாஷை. இது சித்தர்வழக்கென்பர் பண்டிதர் சார்க்கி லேய முதலியார்.



ஆராய்ந்து, இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழுக்கு இலக் கணங்களும், ஒத்துக்களும், வரலாற்று நூல்களும் செய்து வை த்ததாக ஏற்படுகின்றது.

பின்னொரு காலத்து, குன்றமெறிந்த குமரவேளும் சங்கமி ருந்து, தமிழை ஆராய்ந்து, தமிழுலகத்துக்கு வேண்டிய நூல்க ளைச் செய்தார் என அறிகிறோம்.

மகேசசூத்திரம், சங்கரம், குமரம், ஐந்திரம் முதலிய தமி ழிலக்கணங்கள் இருந்ததாகக் கேள்விப்படுகிறோம்.

சிவபெருமான் உள்ளிட்ட எல்லாத் தேவர்களும், மற்ற ஆன் மகோடிகளும் பேசி, எழுதி, படித்து, உபதேசித்து வந்தது தமிழ் என் ஒப்புக்கொள்ளுகிறோம்.

சிவபெருமானும், குமரவேளும் சங்கமிருந்து தமிழை ஆரா ய்ச்சி செய்தார்களென்றும் ஒப்புக்கொள்ளுகிறோம்?

ஆனால், சிவபெருமான் வேதாகமங்களைத் தமிழில் செய்ய வில்லை யென்று சொல்வது நியாயமாயிருக்கிறதா? கவனியுங்கள்.

பாஷையை எதற்காக ஏற்படுத்தினாரோ? நூல்கள் இல்லாம லிருக்கக் கருதியோ? சங்கமிருந்து தமிழில் எவைகளை ஆராய்ந் தார்களோ?

தமிழில் வேதாகமங்கள் இல்லையென்றால் தமிழில் ஒரு நூல் களும் இல்லையென்றே சொல்லலாம். ஏனென்றால், வேதத்தினி ன்றுதான் எல்லா நூல்களும் உண்டாயின என்பது ஆன்றோர் கொள்கை. உண்மையும் அதுதான். எல்லா நூல்களுக்கும் மூலம் (வேர்) வேதத்திலிருக்கிறதை யாவரும் அறிவார்கள். வேதம் 'வித்து' என்னும் பகுதி அடியாகப்பிறந்தது. இவையிற்றினை யெ ல்லாம் தமிழர்களே! ஆரியர்களே! சாவதானமாய்க் கவனித்து உண்மையையறிய வேண்டுகின்றேன். ஒருவித எண்ணத்தை மனதில் வைத்துக்கொண்டு ஆராயப்புகின் உண்மை விளங்காது.

"காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்

ஆய்தல் அறிவுடையார் கண்ணதே"

என்னும் எம்குமர குருபரசுவாமிகளது திருவாக்கை உட்க [illegible] நெஞ்சில் பதிக்க [illegible]

ஆகையால் சிவபெருமான் தமிழில் வேதாகமங்கள் செய்ய வில்லையென்று சிலர் நினைப்பதுபோல நினைப்பது அறியாமையே யன்றி வேறல்ல.

"தமிழ்ச் சொலும் வடசொலும் தாணிழற் சேர"

(அச்சிறுபாக்கம் தேவாரம்)

"ஆரியமுந் தமிழும் உடனே சொலிக்
காரிகையார்க்குங் கருணைசெய்தானே."
"தமிழ்ச் சொல் வடசொல் எனுமிவ்விரண்டும்
உணர்த்து மவனை யுணரலு மாமே"

(திருமந்திரம்)

"இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவர்."
"வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை
யுலகமெலாந்தொழு தேத்துங்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகர்."

(காஞ்சிப்புராணம்)

என்னும் செய்யுள்களைக் கண்ணுறுவார் சிவபெருமான் ஏக காலத்தில் இரண்டு பாஷைகளையும் உண்டுபண்ணினார், இரண்டு மொழிகளையும் வழிப்படுத்தார், இரண்டு பாஷைகளையும் இரு வேறு முனிவர்களுக்கு உபதேசித்தார், ஆகையால் இரண்டும் தேவபாஷைகளே, இரண்டும் சமத்துவமுடையனவே, தமிழும் ஆரியமும் ஒன்றிலிருந்து ஒன்று வந்தது அல்ல, ஆரியம் வேறு, தமிழ் வேறு எனக்கூறுநிற்பர்.

இவர்கள் கூறும் வண்ணம் இரண்டு பாஷைகளையும் சிவபெருமான் உண்டாக்கினார் வழிப்படுத்தார், உபதேசித்தார் என்று சொன்னால் இரண்டு பாஷைகளிலும் வேதாகமங்கள் தனித்தனி வேண்டும், மற்ற நூல்களும் தனித்தனி வேண்டும். அன்றித்தமிழில் எழுத்துக்களை மாத்திரம் உண்டு பண்ணினார், நூல்கள் செய்யவில்லை; ஆரியத்தில் எழுத்துக்களும் நூல்களும் செய்தார் எனக்கூறில், அது பொருந்ாது.

(இன்னும் வரும்.)

தஞ்சைகிழார் அ. சிதம்பரனார்.

# தமிழ்மொழியும், சிவநெறியும்.

(முன் தொடர்பு தொகுதி 2, பகுதி 5 பக்கம் 141.)

தலைச்சங்கத்துத் தோன்றிய தலையாயவோத்துகள் தென்
மதுரை கடல்கொள்ளப்பட்ட முதலூழியிலும் எஞ்சியிருந்தன.
இடைச்சங்க மிருந்த கவாடபுரம் கடல்கொள்ளப்பட்ட இரண்
டாவ தூழியிலும் கடலுள் முழுகினமையால் இப்பொழுதுள்ள
தமிழ் மறையாகிய தேவார திருவாசகமும் திருமந்திரமும் அவ
தாரமூர்த்திகள் வாயிலாய் வெளிப்போந்தன. அவற்றுள் தேவா
ரம் திருமுறைகண்ட அபய குலசேகர சோழன் சிதம்பரந் திருமா
ளிகையில் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு பெரும்பகுதி கறையானுண்
டிறந்தமைக்கு வருந்த "இக்காலத்துக்கு வேண்டியனவே எஞ்சி
யிருக்கின்றன" வென்றெழுந்த வானிழல் மொழி இக்காலமனிதர்
கறியற்பாலனவல்லாத பொருளுடையன கறையானுண்ணப்பட்
டனவென் றுணர்த்தி நிற்கின்றன. அதுவே முதற்சங்க காலத்து
த்தோன்றிய தலையாயவோத்துகள் கடல் கொள்ளப்பட்டமைக்குக்
காரணமென் றுணரக் கிடந்தமையோர்க.

வடமொழிமறைபலராற் கவரப்பட்டமையும் விண்டு மச்சாவ
தாரமெடுத்துக் கொணர்ந்தமையும், வேதங்கள் திரயி என்ன
ப்பட்டுப் பின்னர் நான்காயினமையும் (அநந்தாவை வேதா:) "மறை
கள் அளவில" என்னப்பட, இப்பொழுது நான்கே உண்மையை
யும் கற்பங்கள்தோறும் மீண்டு மீண்டு மறைகள் தோன்றுமென்ற
உபநிடதங்களின் கருத்தையும் உற்றுநோக்கில் பிரளயத்தில் தமிழ்
மறை வேறுபட்டமை யியல்பெனத் தோன்றும். திருமந்திரத்தில்
சதாசிவ மூர்த்தமாயிருந்து சிவன் தமிழ்வேதத்தை யுணர்த்தினா
னென்றும் ("சதாசிவந் தத்துவ முத்தமிழ்வேதம்") சிவன் உமை
யார்க் கருளினானென்றும், அதை நான் சொல்கின்றேனென்றும்
(நீலாங்கமேனி நேரிழையாளொடு, மூலாங்கமாக மொழிந்ததிருக்
கூத்தின் சீலாங்கவேதத்தைச் செப்பவந்தேனே) மலரவன், இந்தி
ரன்முதலிய தேவர்களும் தமிழ்மறை பாடிபாடினரென்றும் (திரு.
நா. தே) ('நாவார்ந்தமறைபாடி நட்டமாடி நான்முகனுமிந்திரனு
மாலும்போற்ற') நந்திதேவர் முதலிய சிவகணநாதரும் தமிழ்

மறை கூறியதாயும், திருமூலரோடு நந்திப்புத்தேளிடம் தமிழ் மறை கற்று அருள்பெற்றவுடன் மாணாக்கர் சிவயோகமாமுனி, பதஞ்சலி, புலிக்காலர், முன்னையர் எழுவர் என்றும், திருமூலர் பாற் றமிழ்மறைகற்ற மாணாக்கர் மாலாங்கன், இந்திரன், சோமன், பிரமன் உருத்திரன், காலாங்கி, சஞ்சமலைச்சித்தர் என்ற எழுவர் என்றும், தமிழ் மறையாசிரியரும் வழியும் அதுகற்ற மாணாக்கரும் ஆங்காங்குக் குறிக்கப்படுகின்றனர். மகேந்திரமலையில் சிவனார் ஆகமங்களை அருளிச்செய்தனர் என்று திருவாசகம் அகவல் 2. 9—10. "மன்னுமாமலை மகேந்திரமதனிற் - சொன்னவாகமந் தோற்றுவித் தருளியும்" என்ற சுருதி விளக்குகின்றது. மகேந்திரம் தமிழோங்கி வளர்ந்து வழங்கிய முதற்கழகமிருந்த நாட்டின் கண்ணுளதாதலால் அவண்டோன்றிய ஆகமமும் (சிவனார் அம்மைக்குரைத்த தமிழ் ஆகமத்தை யான் கூறுகின்றேனென்று திருமூலதேவர் குறித்தபடி தமிழென்பதொரு தலை. அம்மலை கவாடபுரத்துக்குத் தெற்கிலுண்மையும், முதலூழியில் தென் மதுரை கடல் கொள்ளப்பட்டமையால் அனுமார் சென்றபொழுது அதன் ஒரு பகுதியும் கடலுண் மூழ்கியிருந்தமையும் வான்மீகராமாயணம கிட்கிந்தாகாண்டத்தில் கூறப்பட்டுளது.

தேவார திருவாசகத் தமிழ்மறையை உரைத்தோர் முருகக் கடவுள் அவதாரமாகிய திருஞானசம்பந்தர், நந்திகேசுரர் அவதாரமாகிய மாணிக்கவாசகர் முதலிய நால்வர். அத்தமிழ் மறையைச் சிவாலயமுனிவர் நாடோறும் ஓதத்திரட்டித்தந்தவர் அகத்தியனார்.

திருமூலநாயனார், சிவனார் அடியார்க் கறிவுறுத்தருளிய சிவாகமங்கள் அளவிறந்தனவென்றும், அவற்றுட் சிறந்தன இருபத்தெண்கோடி நூறாயிரம் என்றும், அவற்றின் பொருளைச் சுருக்கி யான் 3000 திருமந்திரங்களாகக் கூறுகின்றேன் என்றுஞ் சொல்லியிருக்கின்றனர். அவற்றின் சுருக்கம் இருபத்தெட்டாகமங்கள். இப்போதுள்ள காமிகாகமத்தில் முதற்கண் ஒவ்வோராகமத்தின் பாத்தொகை இஃதென்று கூறப்பட்டுள்ளது. அக்கணக்கின்படி அக்காமிகாகமத்திலாவது வேறு ஆகமங்களிலாவது பாக்களிருக்கக் காண்கிலம். ஆதலால் அவை முன்னிருந்த தமிழாகமங்களின் தொகை என்றும் அவை வடமொழியி லெழுதப்பட்டபோது சுருக்கி எழுதப்பட்டனவென்றும் கருதத்தக்கதாகின்றது. வடமொழியாகமங்கள் திக்குப்பலியிலும், நித்திய பூஜாதிகளிலும் தமிழ்ப் பாக்களையும் தமிழ்ப்பண்களையும் ஓதப்பணித்தமையும் வடமொழியாகமங்களில் ஆகமம் முதலிய சொற்களுக்கு ஆ-பசு, க-பதி, ம-பாசம், ஆதலால் பசுபதிபாசங்களை யுணர்த்தும் நூல் ஆகமம் எனப்படும். என்றிவ்வாறு தமிழ்ப் பகுதிப் பொருள்கூறப்பட்லும், இக்கருத்தை நிலைபுறுத்தும். இந்தியாவில் 8000, 10000 வருஷத்துக்கு முந்திய பல சிவாலயங்களிருக்கின்றன. நெடுநாள் முந்தியிருந்து மண்ணுள் மறைந்திருக்கும் சிவாலயங்களுங் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன அவைவடமொழி ஆரியர் இந்நாட்டிற்கு வருவதற்கு முந்திய காலத்திற் கட்டப்பட்டன வென்பது தெளிவு ஆதலால் அப்பொழுது சிவத்தளிகளியற்றல், வழிபடல் முதலியன தமிழாகமங்களின் வழித்தாய்ச் செய்யப்பட்டன வென்பதுந் தெளிவே.



வேதம், ஆகமம், என்பன ஒருபொருட் கிளவிகளாதலால் திருமூலதேவர் முன்னர் "சீலாங்க வேதத்தைச் செப்பவந்தேனே" என்று சொல்லிப் பின்னர் "சிந்தைசெய் தாகமம் செப்பலுற்றேனே" என்று கூறினார்.

மேற்கூறிய கருத்தை.

அண்ணலருளாலருளுஞ்சிவாகமம்
எண்ணிலிருபத்தெண்கோடிநூறாயிரம்
விண்ணவரீசன்விழுப்பமுரைத்தனர்
நண்ணிநின்றப்பொருளேத்துவனானே.

என்ற திருமந்திரம் விளக்கினமை காண்க.

இந்து மகாசமுத்திரத்தில் மூழ்கிய இடத்திற் றோன்றியிருந்து பல்கிப்பெரிய மனிதரிலொரு தொகுதி மெசப்பட்டோமியாவிற் சென்றிருந்து பெருகிப் பல பகுதிகள் வெவ்வேறிடங்களில் செல்ல மற்றொரு பகுதி இலக்கின், கிரீக்கு, எபிரேயம், பகுதிகளாய்ப் பிரிந்துபோக, எஞ்சிய வடமொழியாரியர் மத்திய ஆசியா மேற்குப் பகுதியிலுள்ள துருக்கித் தானத்திற்றங்கி, பின்னர் கைபர்க்கணவாய் வழியாய் இந்தியாவுட் புகுந்தனர். அவர் இந்தியாவுக்கு வந்து 5000-ஆண்டுகளாகின்றனவென்று ஆங்கில ஆசிரி

யர் பலர் கூறுகின்றனர். வேறு சிலர் சில நூற்றாண்டுகளுயர்த்திக் கூறுகின்றனர். மற்றொருவர் 6000-ஆண்டுகளென்று கணக்கிடுகின்றனர். இருக்கு முதலிய மூன்றுவேதங்கள் கி. மு. 3101 முதற்றொடங்கிப் பல இருடிகளால் 2500-ஆண்டுவரை யெழுதப்பட்டனவென வேதகாலம் (The Vedic Era) முதலிய நூல்கள் கூறுகின்றன. புரொபசர் எச். ஜாகோபி (Prof H. Jacob) என்பவர் வேதத்திற் குறிக்கப்படும் கிரஹநிலையை ஆதாரவாய்க்கொண்டு கி. மு. 4500-க்கும் 2501-க்கும் இடையிற் றோன்றியதென்கின்றனர். புரொபசர் பா. க. திலகரும் அவ்வாறே கூறுகின்றனர். தமிழ் அறிவு நூல்களின் கருத்துகளையும் சிவன் கதைகளையும் தமிழர் ஒழுக்க வழக்கங்களையும் ஓர்ந்தவடமொழிவல்ல அறிஞர் வடமொழி வேதம், உபநிடதம், ஆகமம், புராணம், இதிகாசங்களை வரைந்தனர். அன்னவர் மெய்ஞ்ஞானமும் சிவானுபூதியுமுடைய உத்தமராதலின் அவைகளுஞ் சிறந்த பிரமாணங்களேயாயின; பின்னர் தோன்றிய திருஞானசம்பந்தர் முதலிய சமயகுரவர் நால்வரும் வடமொழி வேதம், ஆகமம், தமிழ் மறையாகமங்களாகிய இருபகுதிகளையும் தழுவிய சமரசஞான சித்தாந்திகளாதலால் அவர்கள் சித்தாந்தம், வைதீக சுத்தாத்வைத சைவசித்தாந்த மெனப்படுகின்றது. நாமும் அதைத் தழுவினவர்களாதலால் நமக்கும் வடமொழி தென்மொழி வேதாகமங்கள் அளவைகளாயின. தமிழகத்தில் தொன்றுதொட்டுள்ள முல்லைத்திணைத் தெய்வமாகிய திருமால்மீது ஆழ்வார்களியற்றிய நாலாயிரப் பிரபந்தமாகிய தமிழ்வேதமும் ஸ்ரீவைஷ்ணவப் பிராமணரால் ஓதப்பெற்றுவருகின்றது. தேவாரம் 'அரியலாற்றேவியில்லை யையனையாறனார்க்கே, என்றபடி வைஷ்ணவம் தேவிவிஷயமாமன்றி உண்மையில் வேறுபட்டதன்று. சிவசக்திகளுக்கு வேற்றுமை யின்மையால் பின்னர் மலர்தல் விரிதல் ஆதலால் விண்டு என்பது வின் என்ற பகுதிபடியாய்ப் பிறந்து எங்கும்பரவி (விரிந்து) உள்ளபொருளைக் குறித்து நிற்கின்றது. சிவன் விண்டு என்ற சொற்கள் பொருளானு மொற்றுமையுடைமை காண்க.

(இன்னும் வரும்)

மறைத்திருவன் சுவாமி விருதை சிவஞானயோகிகள்.

## சிவபூசை என்பதுஞ் சீரியவின்பமே.

---

சைவத்திருநெறியிற் கைமுறை யொழுகுமன்பீர்!

இப்பூமுகத்தின் கண்ணே வாழும் பல்வகைச் சீவராசிகளினும் நல்லறிவுற்றவர்கள் யாருடர்களே. இங்ஙனம் அருந்தபமுதிர்ச்சியானே பெருந்தகைமானுடப் பொட்புருப்பெற்றுத்திருந்திய வறிவுடையேமாகிய அடியேங்களை அப்பாசமுயக்கறுத்து உயர்கதியீந்து உம்பருந்தொழவைக்க வேண்டுமென்ற அருட்டிருவுளத்தா னன்றோ! பரமகருணைநிதியாகிய பரமசிவம், சிதாகாச நிரதிசயானந்தஸ்வரூபத்தோடு, உருமேனிகொண்டு, பரம்பு வார் பக்திகண்டு எதிரருள் புரிந்துகாக்கின்றார்.

மந்திர சரீரியாய அப்பதி இங்ஙனமாய்ச் சாந்நித்தியராய் விளங்குதலைபாங்கள் நன்கு சிந்தித்து, முன்னுள வினைகள் எங்களைவிட்டு நீங்கும்படி, மனதினாலே நினைந்தும், வாக்கினாலே ஸ்தோத்திரித்தும், காயத்தினாலே வணங்கியும், உடல் பொருள் ஆவியாகிய மூன்றனையும் அப்பெருமானுக்கே அர்ப்பணஞ் செய்தலாவசியகமல்லவா? ஜாஸ்தியாகப் பணந்தேடவேண்டும், மனோபீஷ்டமான மற்றைய வஸ்துக்கள் எவைகளோ அவைகளைப் பெறுதல் வேண்டும் என்ற இன்னோரன்ன எண்ணங்களால் ஆன்மாவுக்கு யாதும் பிரயோசன முண்டா? எங்கள் சரீரம் மின்னென வொளிர்தல் பிரத்தியக்க மன்றோ! சங்கமப்பொருட்கள் தங்களுட்பெரிதும்! வேற்றுமையுடையனவே! எங்களுக்குப்போல் மற்றைப்பிராணிகளுக்குச் சரீர உறுப்பமைப்புத தானும் வாய்த்திருக்க வில்லையே!

ஆதலின், ஆறுதாரஸ்தானங்களும், தத்துவக்கூட்டங்களும் பாதாதிகேசம் வரையும் பிறங்கிய அற்புதமான இப்பிரணவாகிருதியுருவத்தைப் பெறலருந்தன்மைத் தெனவோராது வியர்த்தமாக்கல் என்ன அறியாமை! சரீரமற்றபொழுது எங்களது முயற்சி சபலமாகுமா? இம்மானுடப் பிறப்பினன்றி மறுபிறவிகளிற் சித்தியடையுமா? இச்சரீரமுள்ள பொழுதன்றோ ஆன்ம

லாபத்தைத் தேடிக்கொள்ளல் வேண்டும்! சரீரமற்றபொழுது ஆன்மாவின் கதியாதாகும்? ஆன்மா அழிவில் பொருளாகவும், அழிவுள்ள தேகத்தைப்பற்றியது வினைத்திறனொழித்து வீடுபேற்றையடையும் பொருட்டன்றோ! அங்ஙனம் பெறுதற்காய வழிபாடு கிஞ்சித்தேனுமின்றி உலகவேட்டைகளைநாடி மயங்குறின் ஆன்மாவின்னிலையாதாகும்? அரிய அன்பர்காள்! சிந்தியுங்கள்!! சிந்தியுங்கள்!!!

"குடம்பைதனித் தொழியப்புட் பறந்தற்றே
யுடம்போ டுயிரிடை நட்பு. (திருவள்: ௩௪ அதி. ௮.)

மேலோர் வாக்குக்களைக் கற்று அல்லது கற்றோர் பாற்கேட்டு இந்நினைவை எந்நினைவினும் முன்னதாய் வைத்து யாவரும் எப்பொழுதும் எங்கும் நடக்க முயறல் முக்கியமேயாம். எமது பிரிய சோதரர்காள்! ஞானம் யோகம் என்று கண்மூடிச் சாலம் புரியவேண்டாம். சரியை கிரியை என்ற பகுப்பிற் கியைந்த திருத்தொண்டுகளையும், இறைவத்தியானத்தையும் பக்தியோடு எத்திறமும் இடையறாது பெருக ஒழுகுவோமேயானால் இறைவன்றனது நிறையருட்டிளைப்பு எங்களுக்குக் கிடைக்கும் இஃது சத்தியம்! சத்தியம்! முக்காலுஞ்சத்தியம்!!!

இவ்வண்ணமாக எங்களை உடைமைப்பொரும் அடிமைப்பொருளுமாக ஆளும்படி பிரார்த்தித்துச்செய்யும் வழிபாட்டானே நாங்கள் சிவத்துவநிலையைத் தப்பாது அடைதற் கருகாவோம். புறப்பூசைக்கு முன்னர் அகப்பூசை என்பர் மேலோர். "உள்ளேவல் செய்வானைக்காந்தன் மிகவுவப்பன், உள்ளே செய் பூசையுவந்து" என்பதுங்காண்க. இன்னும் உத்தரவேதத்தினும்,

காயமே கோயிலாகக் கடிமனமடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணியிலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறைய நீரமையவாட்டிப்
பூசனையீசனார்க்குப் போற்ற விக்காட்டினோமே,,

என்றருளிச் செயப்பெற்றமையைத் தெளிக.

இனிப் புறப்பூசையாவது பூதசுத்தி, ஆன்மசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தி என்ற ஐவகைச் சம்ஸ்காரங்களோடும், நீர், பூ, சந்தனம், அக்ஷதை மணி, தூபம், தீபம், கர்ப்பூராராத்திரிகம் என்றற்றொடக்கத்தன வாகிய வாய்வியோபசார ஆப்பியோபசாரங்களோடும் புறத்தே பூரணவஸ்துவாகிய இறைவரையுத்தேசித்துப் புறக்கரணங்களினாலே அகந்தூய்மையாகச் செய்யும் வழிபாடாகும். இப்பூசை மகத்துவத்தைத் திருமூலநாயனாரும், "யாவர்க்குமாமிறைவர்க் கொருபச்சிலை" என்னுந்தொடருட் குறித்து விளக்கியருளினார்.



அன்றியும், உபமந்நியு மகாமுநிவர் கிருஷ்ணருக்குத் திருவடிதிட்சை செய்த ஞான்று, "துவரைக்கிறையே! யான் கூறுவதைச் செவிமடுக்குதி!" என்று உத்தம உபதேசம் புரிந்தருளினார். அதனையுமீண்டுத் தருகின்றாம். மாதவ! "தேவாதிதேவருடையவடிவமே இச்சராசரமாகும். இவ்வுண்மையைப் பாசமிகுதியினாலே ஆன்மாக்கள் அறிகின்றில; விஸ்வகாரணராகிய சிவபிரானை நீ பூசிப்பாயாக, அப்பூசையானது விருக்ஷத்தின் அடியிலே வார்த்த நீரினாலே அம்மரம் முழுதும் (சாகைகள்யாவும்) தளிர்த்துப் புஷ்பிக்குமாறுபோல அப்பெருமானுக்குச் செய்யப்படும் பூசையினாலே அவர்க்குத் திருமேனியாகவுள்ள உலகம் முழுதும செழிப்படையும்" என்று அருளிச்செய்து கிருஷ்ணரைச் சிவபூசாதுரந்தரராக்கினார். சிவாராதனையினாலே சர்வபயங்களும் நீங்கிச் சர்வாபீஷ்ட சித்திகளும் எய்தலெளிதாகும்.

விக்ரஹந் தேவதேவஸ்ய விஸ்வமேதச்சராசரம்!
ஏதமர்த்தம் நஜாநந்தி பசவ: பாசகௌரவாத்!!
(வாயு: ௯. ௧.)

விருக்ஷஸ்யமூலஸேகேந சாகா: புஷ்யந்திவையதா!
சிவஸ்யபூஜயாதத்துவத் புஷ்யத்யஸ்யவபுர்ஜகத்!!
(வாயு: ௪. ௨௧.)

ஸர்வோபகர்ரண கரணம் ஸர்வாநுக்ரஹணந்ததா!
ஸர்வபயப்ரதாநஞ்ச சிவஸ்யாராதநம்விது:!!
(வாயு: உத். ௰௪. ௩.)

வேரினிற்றெண்ணீர் வார்த்திடத்தருவி கொம்புகள்
மிகத்தழைப்பதுபோல்
தாரணி கொன்றை யண்ணலைப்பூசை செய்திடி
லுலகெலாந்தழைக்கும்
ஏர்பெறவாதலான் மணிவண்ண விறைவனைப்
பூசியென்றுரைத்தான்
பாரொடு விசும்பும் புகழ்ந்தெடுத் தேத்திப்
பணியுமகர்யு வென்பான்.

(வாயு: பஞ். மூர்த்: அ.)

அன்பர்காள்!

இன்னும், இந்திராதி தேவர்களும் சிவபூசாபலத்தாலே சிரும் பேருமடைந்தனர். சிவநிந்தகனாகிய தக்கனும் சிவார்ச்சனை செய்தே இறுதியில் எல்லையில்லாத பல்வகைச் சிறப்புக்களையுமடைந்தான். இத்தகை மகத்துவமுடையது சிவபூசையென்று தமியேமாகிய யாம் சாற்றற்கும் முடியுமா? பல்யுகங்கழியினும் அவ்விறைவன் கருணையான் முடிவுறுமன்றி எமது வல்லபமாகவுள்ள வொன்றன்றேயாம்.

ஆதலின், சுருக்கி விளக்கிப் போந்த இச் சூசனத்தால், எவ்வகைச் சீவர்கட்கும், அவ்வவர் மனோரதம் பற்றிச் செவ்விய திருவருட் செல்வமளிக்கும் நவ்விசேர்கரத்து நம்பனே, யடியேங்களால் நம்பிவழிபடப்படும் பதித்துவமுடையா ரென்றும், அவரை மாதுடராகியாம் அகத்தும் புறத்தும் பூசித்துப் பிறவியாகிய அல்லலைக்களைந்து நல்லருண்முகிழ்ப்பானே சொல்லரும் மோக்ஷசுகாநந்த வாழ்வினைப்பெற முன்னிமுயன்று வழிபடுதலாவசியகமாகுமென்றும் உணர்த்தப்பட்டமை யோர்ந்து; சிவ நிந்தகர்களாகாது சிவ சிந்தித வந்தனுகர்ம விசிட்டர்களாய் வாழ்வேமாக, சுபமஸ்து.

தத் அஸ்து! ஓம் தத்சத்!

இங்ஙனம்,
வ. மு. இரத்திநேசுவர அய்யர்,
தமிழ்ப்பண்டிதர்.
விவேகாநந்தசபை, யாத்தினா, சிலோன்.

# ஆணவமலம்.

காணப்படுவதாகிய இப்பிரபஞ்சம் சித்தும் அசித்தும் என இருதிறத்தால் நிகழும். சித்தெனப்படுவ அறிவுடை உயிர்கள். அசித்தெனப்படுவ அறிவு நிகழ்ச்சியில்லாத சடப்பொருள்கள். அறிவுடைப்பொருள்களாகிய சித்துப் பிரபஞ்சத்தைக் கடவுள் சிருட்டித்தார் எனல் அமையாது என்னை? அவற்றைக் கடவுள் சிருட்டித்ததுண்டாயின்,

1. ஏன் சிருட்டித்தார்?

2. எது கொண்டு சிருட்டித்தார்? என்றும், அவற்றை

3. அஞ்ஞான நிலையிற் சிருட்டித்த காரணம் என்னை?

4. பலபேதப் படச்சிருட்டித்த காரணம் என்னை? என்றும் பலவினாக்கள் நிகழும். இவ்வினாக்களுக்குத் தக்க விடையிறுத்தல் சாலாதாதலின், சித்துப்பிரபஞ்சம் அநாதிதொட்டுள்ளதென்பதே துணிபாகும்.

இத்துணிபைச் சித்துப்பிரபஞ்ச மாத்திரைக்கன்றிச் சடப்பிரபஞ்சத்தளவினும் கொள்ளுந்துணிதல் அமையாது. என்னை? சடப்பிரபஞ்சம் தோன்றி நின்றழிதல் பிரத்தியக்ஷமாகக் காணப்படுதலின். ஆகவே சடப்பிரபஞ்சம் கடவுளாற் சிருட்டிக்கப்பட்டதென்பதே பொருத்தமாகும். அன்றே, இதனைச் சிருட்டிக்க வேண்டிய காரணம் யாது என்பது நாம் எல்லாம் ஆறுதி ஆராயத் தக்கதோர் விஷயமாகும்.

சடப்பிரபஞ்சத்தைக் கடவுள் சிருட்டித்தது யார் பொருட்டு தம்பொருட்டா? பிறர் பொருட்டா? தம்பொருட்டெனின், அவர் விருப்பு வெறுப்புடையார் என்றும், குறைவுடையார் என்றும், விகாரத்துவம் உடையார் என்றும் பெறப்பட்டுக் கடவுள் இலக்கணத்தினின்றிழிவார். ஆதலினச் சிருட்டி பிறர் பொருட்டென்பதே துணிபாகும். இப்பிறராவார் சித்துப்பிரபஞ்சமாகிய உயிர்த்தொகுதிகளேயாம்:—

இனி இவர்கள் பொருட்டுச் சகத்தைச் சிருட்டிக்க வேண்டிய ஆவசியகம் என்னை என்பது நாம் ஆராயத்தக்கது. இச்சகத்தினுள்ள போகங்களை ஆன்மாக்கள் நுகர்ந்து இன்புற்று வாழ்வது காரணமாக இதனைக்கடவுள் சிருட்டித்தார் என்பேமா? என்னும். என்னை, இதன் கண்ணே சுகானுபவம் அருகியும் துக்கானுபவம் பெருகியும் நிகழ்வன வாதலின். அதுமட்டோ? இங்குள்ள சுக போகங்கள் தாமும் விரைவுற்றழிதன் மாலையவாகக் காணப்படுதலின், இவைகளை ஆன்மாக்கட்கோர் உறுதிப்பயன் பயக்குமாறு கடவுள் சிருட்டித்தார் எனல் அமையாது. ஆகவே, இப்பிரபஞ்சம் இதன்கட்காணப்படும் அனுபவங்களின் வேறாகியதோர் பெரும் பிரயோசனத்தை நோக்கியே சிருட்டிக்கப்பட்டதென்பது நன்கு போதரும்.

அந்தப் பிரயோசனந்தான் யாது? நாம் எய்தற்குரிய பிரயோசனங்கள் எவற்றுள்ளும் இறைவனது திருவடி நிழலையடைந்து நித்திய-பேரின்பத்தைச் சுவைத்தல் போலும் பிரயோசனம் பிறிதொன்றில்லை யாதலின், அந்தப்பிரயோசனம் கைவருதற்கோர் சாதனமாகவே இந்தச்செகம் சிருட்டிக்கப் பட்டதெனல் வேண்டும்.

அஃதாயின் அந்தப்பிரயோசனத்தை எமக்கு நேரே அளித்துவிடாது இந்தப்பிர பஞ்சத்தில் உய்த்து உழல் வித்துக் கடைமுறையாக அதனை அளிக்கவேண்டிய காரணம் என்னை என்னோர் வினா நிகழத்தக்கது. அந்தப் பிரயோசனத்தை அனுபவித்தற்கமைந்த பக்குவம் எம்பாட்டில்லாமையே, எம்மை இப்பிரபஞ்சத்திலுய்த்து அப்பக்குவத்தை வருவிக்க வேண்டிய காரணம் என்பது இனிது சித்திக்கும்.

பேரின்ப அனுபவத்துக் கமைந்த தகுதி எம்மிடத்தில்லாதொழிந்தமை யாதுபற்றி என்று உசாவதுண்டேல், எமது அறிவு தொழில்களை மறைத்து நிற்பதோர் அஞ்ஞானாந்தகாரம் எம்மைப்பந்தித்துள்ளதென்பதும், அப்பந்தம் காரணமாகவே நாம் கடவுளைக்கண்டு முத்தியின்பத்தை அனுபவிக்கும் ஆற்றல் இன்றி மயங்குகின்றேம் என்பதும் செவ்விதிற்புலப்படும். இந்த அந்தகாரத்தையே சைவ சித்தாந்த சாத்திரங்கள் "ஆணவ மலம்"



என்று எடுத்துப்பேசும். இந்தமலம் கடவுளின்றும், எமக்கு மயக்கம் மோகம் முதலிய கெடுதிகளைத் தந்து எம்மோடு சகசமாய் விளங்கும். இந்த ஆணவ மலத்தினின்றும் விடுதிபெற்றாலன்றிப் பேரின்பவாழ்வாகிய நித்தியானந்த முத்தி கைவருதல் கூடாதாகலின், இதைக்குறித்து ஆராய்வது பெரிதும் பயனுடைத்தாம்.

## ஆணவ உற்பத்தி.

முதலாவதாக இந்த ஆணவம் எவ்வாறு உண்டாயது என்பது நாம் முக்கியமாக ஆராயத்தக்கது.

ஆணவ மலமாகிய அஞ்ஞான அந்தகாரம் யாதொரு காலவெல்லையில் தோன்றிற்றென்கை சாலாது. நாம் என்றுள்ளேமோ, அது தானும் அன்றே உள்ளதாய், எம்மைப்போல அதுவும் அநாதி நித்தியம் என்றே கொள்ளத்தக்கது. ஆணவ மலம் அநாதியாயுள்ளதெனின், அது சுயம்புவாய்க் கடவுளை நிகர்த்து விடுமன்றோ எனின், ஒரு பொருள் அநாதிக் கண்ணதாதல் மாத்திரையால் கடவுளை நிகர்த்து விடாது. அநாதி லக்கணம் கடவுளுடைய ஈச்சுர குணங்களுள் ஒன்றல்ல. கடவுளிடத்துள்ள யாதொரு குணமும் பிறிதோர்பொருளிடத்துக் காணப்படுதல் கூடாதெனின் இது கடவுளையன்றிப் பொருள் உண்டென்றால், அஃதோர் உண்மைப்பொருள் எனப்பட்டு, உண்மைப்பொருளாகிய கடவுளை நிகர்த்து விடும் என்று வாதிக்கலாமாதலின். கடவுள் சமானரகிதர் என்பது அவரது முக்கிய குணங்கள் அமைந்த பிறிதுபொருள் இன்மைபற்றியேயாம். அவரிடத்தேயமைந்த சாமாந்திய குணங்களும் பின்னொரு பொருளிடத்துக் காணப்படுதல் கூடாதென்று வாதித்தால், அவரையன்றிப் பிறிது பொருள் யாதொன்றும் இருத்தல் கூடாதென்றால் அவர் நிப்பிரயோசனம் உடையார் எனப்பட்டு, அவரது கடவுளிலக்ஷணத்துக்கே பங்கமாய் முடியும்.

அற்றன்று பிரபஞ்சத்திலே காணப்படும் எவ்வெப்பொருளும் கடவுளாற் சிருட்டிக்கப் பட்டதன்றித் தானே சுயம்புவாய் இருந்தல் கூடாது. அங்ஙனம் ஒரு பொருள் உண்டென்றால், அவர் சர்வகாரணர் எனப்படமாட்டார் எனின், கடவுள் சர்வகாரண

ணர் என்பதன் பொருள் காரணம் வேண்டி நிற்கும் காரியங்கள் எவற்றிற்கும் அவரே காரணர் என்பதன்றி காரணம் வேண்டாது அநாதியா யுள்ளவற்றுக்கும் அவர் காரணரென்பதல்ல அங்ஙனமாயின் அவர் தமக்கும் தாம் காரணர் எனப்படல் வேண்டும். இன்னமும் சிருட்டிக்கப்படாது அநாதியாயுள்ள பொருள்கள் தாமும், அவரையே தாரகமாகக் கொண்டுநிற்றலின், அவர் சர்வதாரகராய் அவற்றின் அமைதிக்கெல்லாம் தாமே அநாதி காரணர் என்பதும் சால்புடைத்தாம்.

## தீமையின் மூலம்.

இந்த ஆணவ மலமே தீமைக்கு வித்தாவது. உலகத்திலே தீமை எவ்வாறு உற்பத்தியாயிற்று என்பதை ஆராயுங்கால் கடவுளே அதைத் தோற்றுவித்தார் எனின், நன்மைச் சொரூபியாகிய கடவுள் தீமையைத் தோற்றுவித்தல் எங்ஙனம் என்பதோர் ஆசேஷபம் நிகழும். அன்றியும் அவர் தீமையில் விருப்புடையார் என்பதும் பெறப்பட்டு அவரது திவ்வியகுணத்துக்குப் பங்கமுற்றிடும். இனி அதனைச் சிருட்டித்தார் பிறர் உண்டெனின், அப்பிறராவார் சீவர்களே அன்றிப் பிறரின்மையால், அவர்களிடத்தே சிருட்டிக்க மைந்த ஆற்றல் காணப்படாமையின் அவரும் அதைச் சிருட்டித்தார் என்பது அமையாது. அல்லதூஉம் கடவுளது ஆஞ்ஞையின் கீழ் சீவர்கள் தீமையைச் சிருட்டிக்குமிடத்துக் கடவுள் அதனைப் பார்த்துக் கொண்டு வாளாவிருப்பாரோ எனப் பின்னும் ஆசேஷபம் நிகழும். ஆகவே தீமைகளுக்கெல்லாம் வித்து ஆணவ மலமே என்பதும், இது அநாதியாய் உள்ளதென்பதுமே சித்தாந்தமாகும்.

தீமைக்கு வித்தாகிய இந்த ஆணவ மலத்தைக் கடவுள் சிருட்டித்தார் அல்லர் ஆயினும், நன்மைச்சொரூபியாகிய அவருடைய சந்நிதானத்திலே இது விளங்குமாறு எங்ஙனம் எனின்? கடவுள் நன்மைச்சொரூபி என்பது சத்தியம். நன்மை எனப்படுவதொன்று தீமை இருந்தாலன்றி விஷயமாகாது. கடவுள் நன்மைச்சொரூபி எனப்படுவது தீமை அவரிடத்தின்மை பற்றியேயாம். ஆகவே நன்மையுண்டாகவே தீமையும் உண்டாதல் வேண்டும். அங்ஙனமாயினுமாக கடவுளுடைய சந்நிதானத்திலே தீமை அமைதல் சாலுமோ எனின்



கடவுளுடைய சந்நிதிக்கட் தீமைவிளக்க முறாது. தீமை எனப்படுவது ஒன்று உண்டாயினும் அது சூரிய சந்நிதியின் அந்தகாரங்கள் ஒளி மழுங்கினால் என்ன, கடவுளுடைய சந்நிதியிலே மலினமுற்று மழுங்கிடும். அங்ஙனமாதல் தீமைகள் விளக்கமுறும் இந்தப் பிரபஞ்சத்திலே கடவுளுடைய சந்நிதிப்பிரகாசம் இல்லையாங் கொல்லோ எனின், கடவுளுடைய சந்நிதி எங்கும் சொலித்துக் கொண்டே இருக்கும் அந்தச் சொலிப்பைக் காணும் ஆற்றல் உயிர்களிடத்து இப்பெத்த தசையில் இன்மைபற்றியே, ஆணவத்தின் சேட்டையாகுந் தீமை இங்கே விளக்க முறுவதென்க. இப்பெத்த தசையிலே கடவுளது விபாபகம் விறகிற் றீபோல் எனச்சமயங்கள் கூறுவதும் இதுபற்றியேயாம் என்க. ஆணவமறைப்பு நீங்குமிடத்துக் கடவுளது சந்நிதானம் கடைந்தபோது விறகிற்றோன்றும் தீபோல ஆன்மாக்களிடத்துச் சொலிப்புற்று விளங்குமாம்.

இது கிடக்க நன்மை தீமை என்னும் பேதங்கள் பாபாவமாயைப் பிலன்றி, அதைக்கடந்து விளங்கும் கடவுளது திவ்விய சந்நிதானத்தில் அவை விளக்க முறாவாம். ஆகவே அவரது உண்மைச் சொரூபமாகிய பரத்வ சமுகத்தில் ஆணவத்தின் சேட்டை சிறிதும் கேட்கப்படாதென்க.

(இன்னும் வரும்.)

யாழ்ப்பாணம் சபாரத்தின முதலியார்.

---

## மெய்கண்ட சிவாசாரியர் நாமாவளி.

---

(172-ம் பக்கம் தொடர்ச்சி.)

வேத முண்மை விரித்தவனே
பேத சமயம் பிரித்தவனே. (௬)
தமிழ்மொழி தழைக்க வந்தவனே
அமிழ்தெனு மருளைத் தந்தவனே. (௭)
மோன நிலையை மொழிமுனியே
ஞான வுருவாய் வருகனியே. (௮)
சித்தாந்த சைவ சிகாமணியே
முத்தாந்தத் தெளிவார் முழுமணியே. (௯)
மெய்கண்ட நாத மெனுமணியே
பொய்கண்டார் காணாப் பொன்மணியே. (௧௦)

மறைவழுதி.

## சமாசாரங்கள்.

திரிசிரபுரம் மலைக்கோட்டை தெற்கு வீதியில் ஸ்தாபிக்கப்பட்டு நடைபெற்றுவரும் சைவ சித்தாந்தசபையில் (16-6-1913) திங்கட்கிழமை மாலை 6 மணிக்குச் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் காரியதரிசி ஸ்ரீமான். கி. குப்புச்சாமி முதலியார் அவர்களால் "ஜீவகாருண்யம்" என்னும் விஷயம் உபந்நியசிக்கப்பட்டது.

***

23—5—13-ல் சமாஜத்தின் அத்தியக்ஷர்களில் ஒருவராய ஸ்ரீமான். மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்களால் "பக்தி யோகம்" என்னும் விடயமும், சமாஜத்தின் காரியதரிசி ஸ்ரீமான் கி. குப்புசாமி முதலியார் அவர்களால் "நல்லறம்" என்னும் விடயமும், ஸ்ரீலஸ்ரீ ஆனூர். சிங்காரவேலு முதலியார் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் சென்னை திருமயிலை குமாரதேவர் மடாலயத்தில் உபந்நியசிக்கப்பட்டன.

***

சமாஜத்தின் அத்தியக்ஷரும், கௌரவ உபந்நியாசகருமாகிய ஸ்ரீமான். திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் செய்த உபந்நியாசங்கள்:—24—5—13-ல் சென்னைச் சிந்தாதிரிப்பேட்டை வசந்தமண்டபத்தில் "தாயுமானவர் கொள்கை"

31—5—13-ல் சென்னைத் தங்கசாலைவீதி ஸ்ரீ அருணாசலேஸ்வரர் வசந்தமண்டபத்தில் "சிவஞான முதற்சூத்திர உள்ளக்கிடக்கை" சித்தாந்தசரபம்-அஷ்டாவதானம் பூவை-கலியாண சுந்தர முதலியார் அக்கிராசனர். 7—6—13-ல் சென்னைத் திருவேட்டீஸ்வரன் பேட்டைச் சிவாலயத்தில் "சகளோபாசனை"

***

ஆலந்தூர் சிவனடியார் திருக்கூட்டம்:—இச்சபையின் மூன்றாவது வருடத்திய நிறைவுவிழா 1913ஞு ஜூன்மீ 1உ-முதல் 5உ வரையில் கொண்டாடப்பெற்றது. கடைநாளில் பலசபையார்கள் தமிழ்வேதபாராயணஞ்செய்ய சமயாச்சாரிய சுவாமிகட்கும், திருமுறைகட்கும் திருவீதி மஹோற்சவம் நடந்தேறியது. பிற்பகல் 3-மணிக்குச் சித்தாந்தசரபம்-அஷ்டாவதானம் பூவை-கலியாணசுந்தரமுதலியார் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் சைவ சித்தாந்தமஹாசமாஜத்தின் காரியதரிசி ஸ்ரீமான். கி. குப்புச்சாமி முதலியார் அவர்கள் "ஹர ஹர மஹாதேவா" என்னும் விடயமும், ஷை சமாஜத்தின் அத்தியக்ஷர். திருக்கோவலூர். ஸ்ரீமான். குமாரசாமிபிள்ளை அவர்கள் "சமரசஞானம்" என்னும் விஷயமும், சோளங்கிபுரம். சைவ சித்தாந்த சரபம் சிவ-அருணகிரி முதலியார் அவர்கள் "ஞான பூஜை" என்னும் விஷயமும் உபந்நியசித்தனர்.

***

வேளாங்கண்ணி சைவ சித்தாந்தசபை:—1913ஞு மேமீ 23உ சுக்கிரவாரம் ஏழாவது வருடமகோற்சவம் கொண்டாடப்பட்டது. சித்தாந்தசரபம்-அஷ்டாவதானம்-பூவை-கலியாணசுந்தர முதலியாரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் பற்பல வித்துவசிகாமணிகள் பலபல அரிய பெரிய உபந்நியாசங்கள் மூன்று நாள் செய்தனர். செந்தமிழ்ச் செல்விபத்திராதிபர். K. அருணாசல தேவரவர்கள் மிகுந்த ஊக்கத்துடன் விடாமுயற்சியால் ஏழு வருடகாலங்களாக இச்சபையினை நடத்திவருவது யாவருங்கொண்டாடத்தக்கதாக விருக்கிறது. திருவருளைமுன்னிட்டு இவர் நடத்திவரும் இச்சபையானது மென்மேலும் விருத்தியாம்படி இறைவன் கிருபை பாலிப்பாராக.

***

"சந்திரோதயம் அல்லது அலைகடல் அளித்த அரசி," "கண்ணகி அல்லது காதலிற் சிறந்தகாரிகை," "தனபாலன் அல்லது ஒருபெரிய கோடீசுவரனின் ஆச்சரியமான அநுபவம்," என்னுமூன்று நூல்கள் நம்பார்வைக்கு வந்தன. இவை மூன்றும் நாகை-சி. கோபாலகிருஷ்ண பிள்ளையவர்கள் இயற்றியன. இவர் தமிழும் ஆங்கிலேயமும் நன்குகற்றவர். இவர் எழுதும் செந்தமிழ் நடை வித்துவசிகாமணிகள் யாவராலும் கொண்டாடி வியக்கத்தக்கதாக விருக்கிறது. இந் நூல்கள் ஒருமுறைபடித்தவுடன் திருப்தியடையத்தக்கதன்று. பன்முறைபடிக்க ஆவலைவிளைவிக்கின்றன.

இந்நூல்களின் இன்பசாரமும், ஆஸ்யாசமும், பத்திரசமும், விரசமும் பொலிந்து கிடக்கின்றன. இலௌகிகத்திற்கு பாடுபடாமலும் வைதிகத்திற்கு முரணில்லாமலும் அரிய பெரிய விஷயங்கள் அமைந்துள்ளன. ஆங்காங்குச் சமய உண்மைகளை ஆதரித்துப் பேசுகின்றன. "சந்திரோதயத்தில்" "வேதாந்தமா? சித்தாந்தமா? என்று தலைப்பெயர் தீட்டியெழுதப்பெற்றுள்ள விஷயம்போலி வேதாந்தத்தை மறுத்து உண்மைச் சித்தாந்தத்தையுணர்த்தி வெள்ளிடைமலைபோல வேதாகமங்களின் கருத்தை விளக்குகின்றது. இந்நூல்களைத் தமிழ்மக்கள் ஆதரிக்கக்கடமைப் பட்டவர்களேயாவர்.

***

ஸ்ரீ வேங்கடேச கல்யாணம்:—இது. **T. S.** சோமசுந்தரம் பிள்ளையவர்கள் எழுதியது—திருவேங்கடத்தில் எழுந்தருளியிருக்கும் வெங்கடேசப் பெருமாளினுடைய திவ்விய கல்யாணசரித்திரத்தையும் தலத்தினுடைய பலயுக மகிமைகளையும், பத்மாவதியம்மையின் பூருவவிருத்தாந்தத்தையும், சுலபமான நடையில் நாடகரூபகமாக வைணவர்கள் கொள்கையின்படி எழுதப்பட்டுள்ளது. இந்நூலில் மூன்றாவது அங்கத்தில் ஐந்தாவது காட்சி மிகவியந்து கொண்டாடத்தக்கதாக விருக்கிறது. இதில் சித்தாந்தவுண்மை மிக வியக்கும்படி நன்கு எழுதப்பட்டிருக்கிறது. இதனையாரும் கவனிக்கத்தக்கது. இதன் விலை அணா 10.

---

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 ... 1913
MADRAS

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி உ.] 1913-ஷு ஜூலைமீ. [பகுதி எ

## சித்தாந்தபரிபாஷை
என்னும்
## தருக்கசோபானம்.

---

சற்பிரதிபக்கம்—மறுதலையுடையது.

Equalization.

துணிபொருட்கு மறுதலையாகிய துணிந்த பொருளைச்சாதிக்கும் வேறோரேதுவினை யுடையவேது. சத்தம் நித்தியம் செவிக்குப் புலனாதலின் சத்தத்தன்மை போலும். சத்தம் அநித்தியம் காரியப்பாட்டால் குடம் போலும் என்புழி இரண்டேதுக்களு மொன்றற்கொன்று சாத்தியாபாவத்தைச் சாதிக்குந் தன்மை யிருக்கின்றது.

அசித்தம்—பேறில்லது.

Inconclusiveness.

பராமரிச (ஆராய்ச்சி) பிரதிபந்தக (தடையாய) ஞானவிஷயதருமம். இது ஆசிரயாசித்தம், சொரூபாசித்தம், வியாப்பியதன்மையசித்தம் என மூன்றும்.

ஆசிரயாசித்தம் அல்லது சார்பசித்தம்.

Inconclusiveness the part of the Subject.

யாண்டுப் பக்கம் அசித்தமோ (முடிவுபெறாமை) அது ஆகாயத்தாமரை மணமுடைத்து, தாமரைத்தன்மையால் பொய்

கைத் தாமரைபோலும். என்புழி மணமுடைமைக்கு ஆகாயத்தாமரை சார்பு, அதுவேயில்லை.

சொரூபாசித்தம் அல்லது உருவாசித்தம்.

Inconclusiveness from the nature of the reason.

பக்கத்தின்கண் ஏதுவில்லது. சத்தங் குணம் கண்ணிற்குப் புலனாதலின் என்புழிக் கட்புலனாதல் சத்தத்திற்கின்று. சத்தஞ் செவிக்குப் புலனாதலின்.

வியாப்பியத்தன்மையசித்தம்.

Inconclusiveness from limitation.

உபாதி (செயற்கை)யோடு கூடியவேது. செயற்கையாவது சாத்தியத்தில் வியாபித்து ஏதுவில் வியாபியாதது.

சாத்தியத்தில் வியாபித்தல்—சாத்தியப் பொருளிருக்குமிடத்தின் கண்ணுள்ள முழுதும் அபாவத்திற் கெதிர்மறையாகாமை. யாண்டுப் புகையுண்டு ஆண்டீரவிறகின் கூட்டமுண்டு.

ஏதுவில்வியாபியாமை--ஏதுவிருக்கு மிடத்தின்கண்ணுள்ள முழுது மபாவத்திற்கு எதிர்மறையாதல். யாண்டுத்தீயுண்டு ஆண்டு ஈரவிறகின் கூட்டமின்று. ஒழுகக்காச்சிய விரும்பில் ஈரவிறகின்மையான்.

இச்செயற்கை நான்குவகை. அவையான:—

துணிபொரு ளெல்லாவற்றினும் வியாபிப்பது. ஈர விறகின் கூட்டம்.

பக்க தருமத்தான் வரைந்துகொள்ளப்படுந் துணிபொருளின் வியாபிப்பது. வாயு காட்சிப்பொருள் அளவையா லளக்கற் பால தாகலின், என்புழி யீண்டு புறப்பொரு ளுண்மையான் வரைந்து கொள்ளப்படும் காட்சிப்பொருளின் வியாபிப்பது உப்பூத வுரு வமெனக.

ஏதுவான் வரைந்து கொள்ளப்படுந் துணிபொருளின் வியாபிப் பது. அழிவுபாட்டபாவ நாசமுடைத்து உண்டாக்கற்பாலதாக வின். என்புழி யீண்டு உண்டாக்கற் பாலதாந்தன்மையான் வரைந்து கொள்ளப்படும் நாசமுடைமையின் வியாபிப்பது பா வத்தன்மை.



யாதானு மோர்தருமத்தான் வரைந்து கொள்ளப்படுந் துணிபொருள்வியாபிப்பது. முன்னபாவ நாசமுடைத்து அளவையா லளக்கற் பாலதாகலின். என்புழி யீண்டு உண்டாக்கற்பாலதாந் தன்மையான் வரைந்து கொள்ளப்படும் நாசமுடைமையின் வியாபிப்பது பாவத்தன்மை யெனக்கொள்க.

பாதிதம்—மறுப்புடையது.

Fallacy of obsurdity.

தன்னாற் சாதிக்கப்படும் பொருளின தபாவ மற்றோரளவையாற் றுணிவது. நெருப்பு சூடில்லது திரவியமாதலின் என்புழி சூடின்மை சாத்தியம். அதன்பாவமாகிய் சூடு துவக்கிந்திரிய காட்சியா லறியப்படுதலின்.

அனுமானமுடிந்தது.

---

## ஆகமம்—உரை.

## Testimony.

ஆகமம் (சப்தம்) என்பது ஆப்தவாக்கியம். வாக்கியமென்பது பதங்களின்கூட்டம். பதமாவது * சத்தி ஆற்றலையுடையது, சத்தியாவது இப்பதத்தானே இவ்வர்த்தம் போதிக்கத்தக்கது என்னும் இறைவனது சங்கேதம். பதத்திற்குப்பொருள் கொள்ளும் ஆற்றல் எட்டுவகை. அவையாவன:—

வியவகாரம்—வழக்கம். மூத்தோனொருவன் கடத்தைக் கொணர்க, கடத்தைக் கொடு செல்க, படத்தைக் கொணர்க, படத்தைக்கொடு செல்க எனக் கூறப்பட்டமையைக் கண்டு பக்கத்தினின்ற பாலன் அவ்வாக்கியங்களின் கடம் படம் முதலிய பதங்கட்குக் காரியத்தோ டியைந்த கடம் படம் முதலியவற்றின் சத்திகிரகித்துக்கொள்வது.

விவரணம்—வெளிப்படுத்துவது. ஒருபதத்திற்குச் சமானமாகிய அர்த்தத்தையுடைய பதாந்திரத்தினாலே அதனருத்த

---

* வையாகரணர் வேற்றுமை யுருபுகளையும், வினையீறுகளையும் விபக்தி யெனக்கொண்டு விபக்தியை யீற்றிலுடையது பதமென்பர். அங்ஙனமாயின் இடைநிலை, விகுதி முதலிய பதமாகா.

த்தைக் கூறுதல். அது கடமுளது என்புழிக்கலசமுள தென்பது.

கோசம்—சொற்பொருளுணர்த்து நூல். பதப்பொருளுணர்த்து நூலாகிய நிகண்டு முதலியவற்றாலர்த்தத்தைக் கிரகித்தல்.

சித்தபதம்—நிச்சயிக்கப்பட்டசொல். தேமாந் தருவிற் பிகமிருந்து சிந்தை களிப்பக் கூவியதால் என்புழிப் பிகம் என்னும் அப்பிரசித்தப் பதத்திற்குப் பிரசித்தபதங்களாகிய தேமா, தரு, சிந்தை, கூவியது முதலியவற்றின் சாந்நித்தியத்தினாலே குயிலின்கட் சத்திக்கிரகிக்கப்படுவது.

வியாகர்ணம்—இலக்கணம். கடைநிலை, இடைநிலை, முதனிலை முதலியவற்றின் அர்த்தத்தை உணர்த்திப் பதங்களின் சொரூபமும் அர்த்தமு நிச்சயிப்பது.

ஆத்தவாக்கியம்—உரியோன் வாக்கியம். இது கடம், இது படம் என வவ்வவ் வியத்திகளைக் காட்டிப் பதங்களைக்கூறுதல்.

உபமானம்—ஒப்புமை. கோவினை யொக்கும் கவயம் (காட்டா) என்னும் அதிதேச (மாட்டியுணர்த்தும்) வாக்கியத்துடன்கூடிக்கோவை யொத்த பிண்டத்தைக் கண்டுழிக் கவய பதத்திற்குக் கவயரூப பிண்டத்தில் சத்திகிரகிக்கப்படுவது.

வாக்கியவிசேடம்—ஒரு வாக்கியத்தின்கண் ணுள்ள பதத்தைச் சந்தேகமற நிச்சயத்தற்கு அனுகூலமாவது. சோதிட்டோம யாகத்திற்கு யவத்தினாற் சருவாகின்றது என்னும் வாக்கியத்தின்கண் ணுள்ள யவபதத்தை ஒருசாரார் (ஆரியர்) தீர்க்கசூக விசிஷ்டத்தின் கண்ணும் (நீண்டவாலாகிய விசேஷணத்தோடுங் கூடிய வாற்கோதுமை) மற்றொரு சாரார் (மிலேச்சர்) கங்குவின் (தினை) கண்ணும், பிரயோகித்தலாற் சந்தேக நிகழ்ந்துழி, வசந்த காலத்துச் சருவ சசியங்களின் (எல்லாமாகங்களின்) பத்திரங்களு முதிர்கின்றன. சாலியாகிய யவம் (நெல்) மதர்த்து நிற்கின்றது என்னுஞ் சேட வாக்கியத்தானே தீர்க்கசூக விசிஷ்டத்தின் கண் அதற்குச் சத்தி நிச்சயிக்கப்படுகிறது

(இன்னும் வரும்)

மணவழகு.

---

# ஆணவமலம்.

---

(முன்தொடர்பு தொகுதி-2, பகுதி-6, பக்கம்-185.)

## ஆணவ நிக்கம்.

ஆணவம் அநாதியாயுள்ளதேல், அது நித்தியமாதலும் வேண்டும். அது நித்தியமாயின், அதினின்றும் நீங்கி ஆன்மாக்கள் முத்தி அடைவது எங்ஙனம் எனின், ஆணவ மலம் நித்தியமாயினும் அது கடவுளது திருவருட்சோதியின் முன்னர் அப்பிரகாசமுற்றுத் தன்வலி குன்றிமடியும். கடவுளது திருவருட்சோதி தரிசனமாகவே, ஆணவ மலத்தாற் பிணிப்புண்ட ஆன்மாக்கள், ஒளியைக் கண்ட விடத்து இருளால் எய்திய மிடியினின்றும் நீங்கினுற்றெலன்ன, ஆணவச் சிமிழ்ப்பினின்றும் நீங்குவர். ஆணவத்துக்கு அழிவில்லை யாயினும் அதன் வலி முத்திதசையிலே ஆன்மாக்களைத் தாக்குமாறில்லை என்க. இங்ஙனமாயின் ஆணவமலம் முத்தி தசையினும் கெடுமாறில்லையோ எனின் இல்லை என்க.

> முத்தி தனில் மூன்று முதலுமொழியக் கேள்
> சுத்தவனு போகத்தைத் துய்த்தலனு—மெத்தவே
> இன்பங் கொடுத்த லிறைபந்தை விளைவித்தன்மலம்
> அன்புடனே கண்டுகொளப்பா.

என்பது ஆப்த வாக்கியம். முத்தியின்பத்தை விளைப்பது மலம் என்பது எங்ஙனம் என்பீராயின், அனலின் கண்மேனை குளிர்காய்வானுக்கு அனலாற் பெறுஞ்சுகத்தை விளைப்பது குளிரன்றே? அங்கே குளிரின்வலி அடங்கி நிற்பினும் அஃதுண்மை பற்றியன்றே அனலின் சுகம் அநுபவமாவது. அது போல முத்தியினும் ஆணவமலம் உண்மை பற்றியே அதனைத் தடிந்து நின்றொளிரும் சிவப்பிரணீதத்தை ஆன்மாக்கள் சுவைக்குமாறென்க.

இஃதுண்மையாயினுக, மலம் அநாதியாயுள்ளதாயின் அதன் வலியும் அற்றேயாகி, அதன் வலியும் நித்தியமாதல் வேண்டும், பின்னை அது முத்திக்காலத்தே கெடுமாறு எங்ஙனமெனின்; முத்திக்காலத்தே மலந்தான், அன்றி அதன் குணந்தான்

கெட்டொழிவதில்லை. சூரியசந்நிதியில் தாரககணங்கள் ஒளி மழுங்கினாலென்ன சிவசந்நிதானத்திலே மலத்தின் வலி அப்பிரகாசமற்று மழுங்கிடும். இதனையே மலநீக்கமென்று உபசரிப்பதென்க. இஃதாயின் மலம் மலினமுறுமை அநாதி தொட்டுள்ளதாக, அது முத்திதசையில் மலினமுறும் என்று கோடல் எங்ஙனம் எனின்; அநாதியாயுள்ள தொன்று அழிவுறுதென்பதன்றி, அதன்வலி அப்பிரகாச முறுதற் கமைந்த வதுவைக் கண்டவிடத்தும் மலினமுறுது பிரகாசமுற்றே நிற்கும் என்று கோடல் நியாயநூற்றுணிபாகாது. அநாதியாயுள்ளது அழியாது என்பது "உள்ளது இல்லாதாகாது" என்னும் சத்தியநெறிபற்றியேயாம். உண்மைப்பொருளாகிய பாசமாவது அதன் குணமாவது எக்காலத்தும் அழிவுறுதல் இல்லை. அவற்றது ஆற்றல் சிவசந்நிதானத்திலே ஆன்மாக்களைத் தாக்குமாறில்லை என்பதே சித்தாந்தமாம். ஒளியைக் கண்டவிடத்து இருள்வலி தலையெடாமை சகசமேயாம். சிவானுக்கிரகம் சொலிக்கும்போது ஆணவ இருள் தலையெடாது ஒழிதலும் சகசமேயாம் என்க. ஆணவ மலம் அநாதியாயுள்ளதாயினும் சிவசந்நிதானத்திலே தன்வலிபலியாமையாகிய குணத்தையும் அவ்வநாதி தொட்டேகொண்டுள்ளதாம். அவ்வநாதி குணத்தின் வழி நின்றே. அது சிவசந்நிதானத்தின் கண்ணே தனது ஆற்றல் பலியாது கிடக்கும் என்பதறிக.

### ஆணவம் இன்னும் ஏன் நீங்கிற்றில்லை?

மலம் நீங்கும் இயல்பிற்றாயின், அநாதிதொட்டு இதுகாறும் அளவிறந்த காலம் சென்றிருப்பவும், அது இன்னும் ஏன் நீங்கிற்றில்லை? என்றும், இதுகாறும் நீங்காதது இனி ஒருகாலத்து நீங்கும் என்று காத்திருத்தல் எங்ஙனம்? என்றும் சிலர் ஆசங்கிப்பர். மலத்தினது சத்திகள் அளவிறந்தன வாதலினாலும், அவற்றுள் ஒவ்வொன்றும் அளவிறந்த ஆற்றலுடையதாதலானும், அவ்வொவ்வொன்றன் நீக்கத்துக்கும் அளவிறந்த காலம் வேண்டப்பட்டு, மலம் ஒருங்கே நீங்குதற்கு எம்மாற் கணித்தற்கரிய அளவில் நெடுங்காலம் செல்லும். இக்கால வரையறையை எல்லைப்பட்ட எமது சிற்றறிவால் வரையறுத்தல் சிறி-



தும் ஏலாது. மலம் இன்னும் நீங்காமைபற்றி நாம்சொல்லத்தக்கது மலத்தின்வலி இன்னும் குன்றிற்றில்லை என்பதே. ஆனால் மலம் தனது அளவிற் சிறிதேனும் கூடாதபடி இருந்தபடியே இருக்க, காலம் எப்போதும் கூடிக்கொண்டே வருதலாலும், மலத்தைத் தேயத்தற்குரிய சிவசத்தி எப்போதும் தொழிற்பட்டுக்கொண்டே வருதலாலும், இந்தமலம் ஒருகாலத்தில் நீங்கும் என்று நாம் நன்றாகத் துணிந்து சொல்லத்தக்கது.

அன்றியும் காலமாவதுமாயையின் உண்டாகும் ஓர் தாத்துவிகப்பொருள். இந்தத் தாத்துவிகப்பொருள்கொண்டு இதனுக்குக் காரணமாயுள்ளமாயையையாவது, அதனின்றும் அநந்தமடங்கு வலிகொண்டமைந்துள்ள ஆணவமலத்தையாவது அளக்கத்துணிதல் சிறிதும் கூடாது. அதாவது காலத்தால் மலமாயாகன்மங்களாகிய பாசநீக்கத்தை நிச்சயித்தல் சாலாதென்றபடி. இன்னமும் அநந்த காலம் கழிந்தும் மலம் இன்னும் ஏன் நீங்கிற்றில்லை எனனும் வினா இந்தக் காலத்து மாத்திரம் அல்ல எந்தக் காலத்தும் கேட்கத்தக்கதாம்—என்னை. காலம் அநாதிக்கண்ணதாகலின், அதன் எந்த எல்லையைத் தான் எடுத்து நோக்கினும், அந்த எல்லைக்கு முற்பட அநந்தகாலம் உண்டாமாதலின், அதுவரையும் ஏன் மலம் நீங்கிற்றில்லை என்று எப்போதும் கேட்கலாம். ஆகவே ஒருகாலத்தாவது மலசம்பந்தம் இருத்தல் கூடாது என்றபடியாம். இது ஏன்சொல்லிய வாறுமே எனின் எக்காலத்தாவது அபூரணத்துவமுடையராய் ஆன்மாக்கள் இருத்தல் கூடாது என்றவாறும். அதாவது, எல்லாரும் எப்போதும் கடவுளையொப்ப அநாதிமல முத்தராய் இருத்தல் வேண்டும் என்றபடியாகும். இஃதாயின் கடவுளுடைய சமானரகிதம் சர்வகாருண்ணியத்துவம் முதலிய குணங்களெல்லாம் இழுக்குற்றுக் கடவுளுண்மைக்கும் அநர்த்தம் வந்து சூழுமாதலின், கடவுள் எப்போதுள்ளாரோ அப்போதே மலபந்தராய் ஆன்மாக்களும் உண்டென்பதும், அவர்களுடைய மலநீக்கம் எப்போது சித்திக்கும் என்பது எமது சிற்றறிவுகொண்டு நிச்சயிக்கத்தக்க தன்றென்பதூஉம், எனவே ஆணவமலம் இன்னும் ஏன் நீங்கிற்றில்லை என்னும் வினா எம்மால் வினவத்தக்க தன்றென்பதூஉம் போந்தபடி கண்டுகொள்க.

## ஆணவ மலம் ஒருகாலத்து நீங்கும்.

கடவுள் சர்வகாருண்ணிய ராதலில் எம்மைப் பந்தித்துள்ள இம்மலபந்தம் எப்படியோ ஒருகாலத்து நீங்கும் என்றே நாம் சொல்லத்தக்கது. அற்றன்று; மலம் ஒருகாலத்தும் கடை போக நீங்குவதில்லை. முத்திபிற்புகாதபடி மலபந்தராய் ஆன்மா க்கள் அளவிலே கடவுளுடைய கருணை இல்லை என்றால் கடவுள் பட்சபாதமுடையார் எனப்படுவர். அதுமட்டோ அக்கருணை அவ்வான்மாக்களுடைய மலத்தைப் போக்கும் வலியிலதென்று இக் கடவுளுடைய வரம்பிலாற்றலுக்கும் பங்கம்வந்தெய்தும். அது மாத்திரமோ? அந்த ஆன்மாக்கள் அளவிலே கடவுளு டைய பஞ்சகிருத்தியம் பயன்பட்டில தென்றாய் கடவுளிடத்தே நிர்ப்பிரயோசன தோஷமும் வந்து சூழும்.

நன்று கூறினீர். "பெத்தான்மாவையணுகி நிற்குமாதலால் நாசமும்பின்றாமே" என்பது அருணந்தி சிவத்துடைய திருவா க்காதலின், ஆணவ மலத்தாற் கட்டுண்ட ஆன்மாக்கள் நித்திய மும் உளராவர் என்பதே சித்தாந்த நூற்கருத்து என்பிராயின், இங்ஙனம் கூறுவது யானைகண்ட குருடன் கூற்றை நிகர்க்கு மென்க. அருணந்தி சிவம் திருவாய்மலர்ந்தருளிய திருவாக் கின் உண்மைப்பொருளை உய்த்துணர்வார் இங்ஙனம் கூறத்து ணியார் பாசம் நித்தியமாதல் எங்ஙனம் என்று வினவுவார்க்கு, அது நித்தியமாதலை வெளிப்படையாகக் காட்டும் பொருட்டே அருணந்தி சிவம் இங்ஙனம் கூறியருளினார். அதாவது, ஆன் மாக்கள் முத்தியடைந்த காலத்தும், பாசம் கெடுமாறில்லை; கெ டுவதுண்டேல், அஃது ஒரு பொருளேயாதலின் ஓரிடத்திற் கெ ட்டது பிறிதோரிடத்திற் கெடாதிருக்கமாட்டாது. பெத்தான் மாக்களிடத்திலே அந்தப்பாசங் காணப்படுதலால் முத்தான்மா க்களை அது விட்டு நீங்கினும் தான்கெடுவதில்லை. அதாவது முத்தான்மாக்களிடத்திலே அது விளக்கமுறாது என்பதைக்கா ட்டுமாறே அருணந்தி சிவம் அங்ஙனம் கூறியருளினார். முத் தான்மாக்களிடத்திலே ஆணவ மலம் விளக்க முறாதாயினும் அது கெடுவதில்லை என்னுந் துணிபு பற்றியன்றோ.

(இன்னும் வரும்.)

யாழ்ப்பாணம் சபாரத்தினமுதலியார்.

---

## தமிழ்மொழியும் சிவநெறியும்.

(முன்தொடர்பு தொகுதி 2, பகுதி 6 பக்கம் 18[illegible])

சாந்தோக்கியம் பிரபா 5 கண்டம் 3.

"யதேயம்நப்ராக்த்வத்த புராவித்யா ப்ராஹ்மணாந்கச்சதி

என்ற சுருதி "முன்னர் ஆரியப்பிராமணர் அறியாதிருந்த ஞானத்தைப் பாஞ்சாலநாடாண்டிருந்த தமிழ் அரசனாகிய பிரவாகநசைவலி, கௌதமருக்கு உபதேசித்தன ரென்றுணர்த்தலும், வடமொழி வேதங்களில் தமிழ் முனியாகிய அகத்தியர் சரித்திரம் மிகக்காணப்படலும், அகத்தியர்மனைவி வேதத்திற் சில பகுதிகளுக்கு ஆக்கியாளாயிருத்தலும், பிரளயங்கூறும் வேதம் சதபதப் பிராமணத்திலும் அதற்குப் பிரமாணமாகிய பாரதம், பாசவதம், லிங்கபுராணம், முதலியவற்றிலும் கூறப்படும், மனு திராவிடராஜன் என்னப்படலும், மறுமொழியமிர்தமென்று வேதத்துக்கூறப்படலும் மணலூர்புரம் முதலிய தமிழ்ப்பெயர்கள் வடமொழிப் பாரதமுதலிய நூல்களிற் காணப்படலும், மந்திர பாகங்களில் தமிழ்க்குரிய ளகரங்காணப்படலும் வடவாரியர்க்குச் சொந்தமான எழுத்தின்மையால் அவர் இந்தியாவுக்கு வந்தபின் பியற்றிய நூல்கள் நெடுநாள் எழுதாமறை யெனப்பட்டுப் பின்னர்த் தமிழ்ப்பழைய எழுத்தாகிய வட்ட எழுத்திலிருந்து நகர எழுத்தையும் புதிய எழுத்தாகிய தமிழ் எழுத்திலிருந்து கிரந்த எழுத்தையும் படைத்து அவற்றில் வடமொழி நூல்களை எழுதியிருத்தலும் தமிழ் நூற்றொன்மையையும் மேன்மையையும் நன்குவிளக்கும்.

தமிழ்த் தொன்மையைப் பற்றி இந்திய புத்த சரித்திரம் (Buddhist India) என்ற ஆங்கில நூலாசிரியர் கூறியனவும், வி கோ. சூரியநாராயண சாஸ்திரிகள் தமிழ்மொழி வரலாற்றில் வடமொழிக் கலப்பு என்ற அதிகாரத்தில் பல அரியநுண்பொருள்கள் தென்மொழியினின்று வடமொழிக்கு வந்தமையைப் பற்றிக் கூறியிருத்தலும் இதனை யாதரிக்கும். சுமார் 3000 ஆண்டுகட்கு முன்னர் பாஸ மகாகவியா லியற்றப்பட்டதென்று கூறப்படும் நாட

கங்களுள் முக்கியமான ஸ்வப்ன வாஸவதத்தம் என்பது தமிழரசனாகிய உதயணன் கதையை ஆதாரமாய்க் கொண்டு வத்ஸராஜன் என்ற பெயர்தந் தெழுதப்பட்டுளது. சங்கீத ரத்னாகரத்தில் தமிழ்த் தேவாரப்பண்கள் எடுக்கப்பட்டுள்ளன. தமிழ்ப் பெரிய புராணம் வடமொழியிற் பெயர்க்கப்பட்டுளது. இவை முதலியன அவர் கூற்றுகளுக் குதாரணங்களாம்.

திருமூலர் செப்புஞ் சிவாகமமென்னு மப்பேர்பெற்று, அப்படி நல்கு மருணந்திதான்பெற்று, தப்பிலாமன்றிற் றனிக்கூத்துக் கண்டபின், ஒப்பிலெழுபது கோடியுகமிருந்தேனே'' என்று கூறுகின்றனர். யுகத்தை ஓராண்டாகக் கொள்ளினும் எழுபதுகோடி ஆண்டாகின்றது ஆதலால் சிவநெறி முதற்கண்ணுலகிற் றோன்றியகாலம் வரையறுக்கக் கூடாததாயிருக்கிறது மிகச்சுருங்கிய நற்காலக் கணக்கைவைத்து நோக்கில் மேற்கூறிப் போந்தவற்றால் 12000 ஆண்டுகளுக்கு நெடுநாண் முன்னரே தமிழ் சீர்த்தேற்ற மடைந்திருந்ததென்றும், தலைச்சங்ககாலந் துவக்கிச் சைவ சமய மிருக்கிறதென்றும் சைவசமயத்துக்குப் பாண்டிநாடே பழம்பதியென்றும் இச்சைவம் தமிழினின்றே ஏனைய மொழிகளுக்குச் சென்றதென்றும் விளங்குகின்றது.

முன்னர்ச் சென்னைக் கவர்னராயிருந்த ஸர் கிராண்டப் பிரபு ஒருநாட் பிரசங்கத்தில் தமிழின் தொன்மையின்முன் ஆரியர்களுடைய தொன்மை சற்றுநேரத்திற்குமுன் வந்த ரூட்டர்த்தந்தியொக்கும் என்றதும், சென்னை ஐகோர்ட் ஜட்ஜ் திவான்பகதூர், பிரமஸ்ரீ. சதாசிவையரவர்கள் சென்னை மெய்கண்ட சந்தானசபையிற்செய்த பிரசங்கமும் இக்கருத்தை ஆதரிக்கும்.

சைவசமயக்கருத்து.

நமது இந்திரியங்களுக்கும் அறிவுக்கும் புலப்படும் பொருள்கள், மண், தீ, காற்று, விண், கதிரவன், மதி, ஆவி, என எட்டுப் பொருள்கள். அவற்றில் முன்னேழும் அசேதனமும், ஆவிசேதனமுமாம். எல்லா உலகங்களும் கதிர்மதிகளும் பௌதிகவடிவங்கள், உலகத்துள்ள இயங்கியற்பொருள். நிலையியற் பொருள்களில் வியப்பான அமைப்புகளையும் ஒன்றுக்கொன்று பயன்படு நலத்தையும் உற்று நோக்குவார்க்கு அவற்றை முற்றுமோர்ந்தி யற்று



வானொருவ னுளனென்று தோன்றாமற் போகாது. இது புகை கண்டுழி நெருப்புண்டென உணர்தல்போல அதிவிசித்திரமான உலகப்படைப்பை நோக்குழிப் படைப்பானொருவன் உளனென்று கருதலளவையாற் கொள்ளப்படுகின்றது. ஆங்கில தத்துவ சாஸ்திரியாகிய ஹெர்ப்பர்ட் ஸ்பென்சரும் (Herbert Spencer) அறிவுள்ள மூலகாரண மொன்றுண்மை மெய் என்கின்றனர். கடவுள் எல்லா வல்லமையும் எல்லா அறிவுமுடையர் எங்கும் நிறைந்தவரென்பது கொஞ்சங்குறைய எல்லா ஆத்திகருமொப்பிய வுண்மை. வியாப்பியப் பொருள்களில்லாவிடில் வியாபகனுங் கிடையாது. ஆதலால் சேதனாசேதனப் பிரபஞ்சங்கள் வியாப்பியமும், கடவுள் வியாபகனுமாம்.

எங்கும் நிறைந்தவனாகிய சிவன்பதி அவனை அளவைகளானும் அறிவானும் அறியும் சேதனன் ஆன்மா, அவர், ஆணவம், மாயை, கன்மமென்னும் மும்மலங்களில் 1-2-3 மலங்களுடைமையால் முத்திறப்படுவர். ஆன்மாக்கள் கன்மவேற்றுமையால் பற்பல பிறப்புகளடைந்து சுழலுமெண்ணிறந்தவர். ஆவிகளின் கன்மங்களுக்கேற்பத் தனுகரண புவனபோகங்களா யுதவுவது மாயை அல்லது பாசம். அது சுத்தமாயை அசுத்தமாயை, என்றிருவகைப்படும். மேற்கூறிய கடவுள் ஆவி, மாயை என்ற முப்பொருள்களும் அனாதிநித்யம். கடவுள் எல்லா ஞானமும் எல்லா வல்லமையும் எல்லா நல்ல பண்புகளும் இரக்கமும் உடையன். இயல்பாகவே பாசங்களினீங்கிய இன்பவடிவன். எங்கும் நிறைந்த ஒருவன். ஆன்மாக்கள் சேதனராயினும் செம்பிற் களிம்புபோன்றுள்ள ஆணவமலத்தால் இச்சாஞானக் கிரியாசத்திகள் மறைக்கப்பட்டு இருட்டுவீட்டிற் குருட்டுக்குழவிபோல அநாதி கேவலத்திற் கிடக்கின்றன. அவ்வான்மாக்களுக்கு இறைவன் அவற்றின் இச்சை, கன்மங்களுக்குரிய தனுகரண புவனபோகங்கள் தந்து அதனால் அறிவு முதிர்ந்து பரிபாகமெய்தி வீடுபெற்றுத் தன்னைப் போலப் பேரின்ப நுகர்ந்திருக்கச் செய்கின்றனன். அவனொருவனே சர்வலோகங்களையும் படைத்தளித் தழிப்பவன். உலகில் இல்வழக்கினர் (நாத்திகர்) நான்குபூதங்களின் சேர்க்கையாலும் அவற்றின் மிகுதி குறைவாலும் உலகம் தோற்றம், நிலை, இறுதி,

யடைகின்றன வென்கின்றனர். பிரதான காரணவாதிகள் பிரதான மாகிய மாயையே ஜெகத்காரண மென்கின்றனர். காலவாதிகள் காலமே காரணமென்கின்றனர். சுபாவவாதிகள் இயற்கையே காரணமென்கின்றனர். அவையனைத்துஞ் சடமாகையால் அவற்றுக்கு அறிந்தியற்றுங் காரணத்தன்மை பொருந்தாது. அறிவுள்ள ஜீவான்மாவைக் காரணமென்பதும் தனக்கெனச் சுவாதீனமின்றிச் சுகதுக்கமடைதல் தன் எண்ணத்தாற் பிறப்பிறப்படையாமை; உலகிலொன்றைப் படைத்தல், காத்தல், அழித்தல் வன்மை தனக்கில்லாமை, சிற்றறிவு, சிறுதொழில் சிறுதன்மை யுடைமை முதலியவற்றானும் பிறவற்றானும் பொருந்தாது சர்வ ஆன்ம கோடிகளையும் அறிவுக்கறிவாய் நின்றறிவித்தியக்கும் அந்தரியாமியாகிய ஒருவனே தெய்வம். அவனைப் பற்பல மதத்தரும், மொழியாளரும் வெவ்வேறு பெயராற் கூறுகின்றனர். பகலைச்செய்யும் கதிரவனை வடமொழியார் சூரியனென்றும், ஆங்கிலேயர் சன் (Sun) என்றும், இந்துஸ்தானியார் சூரஜ் என்றும் இலத்தீனர் சோலர் (Solar) என்றும் இன்னும் பல பாடைக்காரர் பலவாறு கூறினும் குறிக்கப்படும் பொருளொன்றே யாவதுபோல எம்மதத்தவர் எப்பெயராற் தெய்வத்தைக் கூறினும் குறிக்கப்படும் தெய்வமொன்றேயாம். ஒரு பொருளின் ஒவ்வொரு பெயரும் அப்பொருளின் இயல்பொன்றையே குறிக்கின்றமைபோலக் கடவுள் ஒவ்வொரு நாமமும் அவன் கல்யாணகுணங்களி லொன்றையே குறிக்கின்றது.

[ரு. வே. 4. 19.] "யஸ்யநாம மஹத்யஸ:"

எவன் பெயர் பெரிய புகழ் (அவன்)

கூர்மபுராணம்.

ஹரஸ்ஸர்வஸ்யஹரணாத்விபுத்வாத்விஷ்ணுருச்யதே

சர்வஜ்ஞச்சர்வவிஜ்ஞாநாதவனோதாமிதிஸ்மிருத:

(இ-ள்.) எல்லாவற்றையும் அழிப்பதால் அரன் என்றும், வியாபிப்பதால் விஷ்ணுவென்றும் எல்லாவற்றையும் அறிவதால் சர்வக்ஞன் என்றும் ஓம்புதலால் ஓம் என்றும் கூறப்படுகின்றன.

(இன்னும் வரும்)

மறைத்திருவன் சுவாமி விருதை. சிவஞானயோகிகள்.

# சிவஞானபோத முதனூல் விளக்கம்.

## அத்தியாயம். III

## ஐயவினாக்களின் தெளிவு.

(முன் தொடர்பு தொகுதி 2, பகுதி 6, பக்கம் 176:)

ஏனெனில், தமிழைச் சிவபெருமான் உண்டு பண்ணினார், வழிப்படுத்தினார், உபதேசித்தார் எனமேற் காட்டிய செய்யுள்களால் ஏற்படுகின்றது. ஆகவே, தமிழில் வேதம், ஆகமம், கலைஞானங்கள், இதிகாசங்கள், புராணங்கள் இவைகளைச் சிவபெருமான் உண்டுபண்ணினார் என்பது சித்தாந்தம்.

என்னை? முன்னர், பிரணவம் உண்டாயிற்று, பிரணவம் தமிழ், அதனினின்றும் உண்டாய *பாழை தமிழ், ஆகையால் முதலில் உண்டான பாழை தமிழ் எனக்கூறிவிட்டுப் பின்னர், ஆரியமுந் தமிழும் எக்காலத்தில் உண்டாயின என்க்கூறினால் முரணுமே தோ எனக்கடாவுவார்க்குச் சிறிது விளக்கிக் காட்டி உண்மையானது நாம் முதலிற் கூறியதே எனக்காட்டுவாம்.

சிவபெருமான் சங்கமிருந்து ஆரியத்தை வழிப்படுத்தியதாக எங்கும் கேட்காததாலும்; பாணினி முனிவர்க்கு 7000 வருடத்துக்கு முந்திய அகத்தியர் முற்பட்டவராதலால் ஏககாலத்தில் வடமொழியையும் தென்மொழியையும் உபதேசித்திருக்கமாட்டார் என்று ஏற்படுவதாலும்;

"தொண்டர் நாதனைத்தூதிடை விடுத்ததும்"

என்னும் பாசுரப்படி தெய்வீகத் தன்மைகள் ஆரியத்தில் நடவாததாலும்; சிவபெருமானால் ஆரியம் சொல்லப்பட்டிருந்தால் "என்றுமுள தென்றமிழைப்" போல் இலக்கணவரம்பு உடைத்தாயிருக்குமாதலாலும்; ஆரியத்திற்கு எப்போது பூர்த்தியான இலக்கணம் ஏற்படவில்லையோ, எப்போது இலக்கணங்கள் மாறி மாறி வருகின்றனவோ, அப்போதே அது முற்றறிவுடைய முதல்வனால் வகுக்கப்படவில்லை யென்னும் கருத்து விளங்குவதாலும்; ஆரியம் சிவபெருமானால் சொல்லப்பட்டது அன்று என்பதே சித்தாந்தம்.

* பாழை என்பது சித்தர் வழக்கு.

மேலும், ஆரியம் எழுத்தில்லாத பாஷை ஆனதாலும்; விக்கிரமாதித்தன் காலத்தில் தான் அதற்கு எழுத்து (நாகரம்) ஏற்பட்டிருப்பதாலும்; எழுத்தில்லாத ஓர் பாஷையில் நூல்கள் எழுதமுடியாததாலும்; பாஷைச் சீர்திருத்தத்திற்கு எழுத்து இன்றியமையாததாய் இருப்பதாலும்; ஆரியபாஷையைச் சிவபெருமான் வழிப்படுத்தினார், உபதேசித்தார் என்று கூறுவது பாஷை ஆராய்ச்சி சிறிதும் இல்லாதவர் கூற்றென்று ஏற்படுகிறது.

ஆரியபாஷையில் எழுத்துக்களையும் நூல்களையும் மாத்திரம் சிவபெருமான் உண்டுபண்ணினார்; வழிப்படுத்தவும் இல்லை, உபதேசிக்கவும் இல்லை எனக்கூறினால் அது பொருந்தாது.

ஒரு வைத்தியன் சரக்குகளின் வகைகளைச் சொன்னால் மாத்திரம் போதாது.

"ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது"

என்கிற பிரகாரம் ஒருவன் மருந்துகளைச் சரியான பதத்திற் செய்ய இயலாது. அச்சரக்குகளைச் சேர்த்து மருந்துசெய்யும் முறையைச் செய்துகாட்டி உபயோகிக்கும் முறையையும் உபயோகித்துக் காட்டினால் மாத்திரம் பிரயோசனப்படும். அதனால் தான் பரம்பரை வைத்தியர்களை உலகத்தார் நாடுவது.

* அதுபோல், சிவபெருமான் எழுத்துக்களையும் நூல்களையும் அளித்தால் மாத்திரம் போதாது.

சிவபெருமான் தமிழை உண்டுபண்ணினார், சங்கமிருந்து வழிப்படுத்தினார், பிறருக்கு உபதேசித்தார். இன்னன காரியங்களைத் தாம் கூடவேயிருந்து பழக்கத்துக்குக் கொண்டுவந்து தமிழர்களுக்குக் கற்றுக்கொடுத்தார். † இப்பாஷையில் அவர் பிர-

* *Vide* "The History of Vedic Hinduism" P. 77. by D. N. Pal, ஆரிய சாஸ்திரங்களால் ஆரியர்களுக்குச் சிவபெருமான் தெய்வம் அல்ல என்று தெரிகிறதால் சிவபெருமானால் ஆரியம் அளிக்கப்பட்டது என்று கூறுவார் மாற்றம் வெற்றுரையாயினமை அறிக.

† அப்போது பிரயாசைப்பட்டவர் இப்போது என் பிரயாசைப்படக் கூடாது என்று கேட்பார் சிலர். உலகத்தை எவ்வக்காலத்தில் எந்நிலைமையில் வைத்திருக்க வேண்டுமோ அந்நிலைமையைச் சிவபெருமான் நன்றாய் அறிந்திருப்பார் என்பதை அவர் ஞாபகத்தில் வைக்கவேண்டும்.



யாசைப்பட்டதைப்போல வேறு ஒரு பாஷையிலும் பிரயாசைப்படவில்லையென்பது தேற்றம். அப்படி அவர் தமிழுடன் ஆரியமுங் கூறியிருந்தால் பாரபக்கமின்றி ஆரியத்திலும் பாடுபட்டிருப்பார். ஆகையால் ஆரியம், பின்பட்ட பாஷை என்பது சொல்லாமலே அமையும்.

ஆனால், சான்றோர் "ஆரியமுந்தமிழுமுடனே சொலி" என்பது போன்ற பாசுரங்களைச் சொல்லியிருக்கிறார்களே என்றால் அது உபசாரத்தால் கூறியதே ஒழிய வேறல்ல.

நாதம் சிவபெருமானால் உண்டானது. எல்லாப்பாஷை எழுத்துக்களும் ஒவ்வொரு நாதத்தைக்குறிக்க எழுந்த எழுத்துக்களே. ஆகையால், எல்லாப்பாஷைகளும் சிவபெருமானால் கொடுக்கப்பட்டவை என உபசாரத்தால் கூறலாம். அதுபற்றித்தான் நம் மூலர்.

"பண்டிதராவார் பதினெட்டுப்பாஷையும்

..................................................................

அண்டமுதலானரன் சொன்னவாறே."

என்றார் திருமந்திரத்தில்

இங்கே, திருமந்திரக்காரர் 18 பாஷைகளும் சிவபெருமானால் சொல்லப்பட்டவை என்றதால், 18 பாஷைகளும் ஏககாலத்தில் கூறப்பட்டவை, 18 பாஷைகளும் வேதபாஷைகள், 18 பாஷைகளும் தனித்தனிப்பாஷைகள், ஒவ்வொருபாஷையிலும் தனிநூல்கள் உண்டு, என்று நியதியின்றிக் கூறவேண்டிவரும். ஆகையால், "ஆரியமுந்தமிழும் உடனே சொலிக் காரிகையார்க்கும் கருணை செய்தானே" எனக்கூறியது உபசாரமே யொழிய வேறன்று.

"ஆரியமுந்தமிழும் உடனேசொலி" என்பதில் ஆரியம்மாத்திரம் உபசாரமாகக் கூறப்பட்டது என்றால் தமிழும் அந்தமாதிரிதான் கூறப்பட்டிருக்க வேண்டும் என்று ஏன் சொல்லக்கூடாது, என்றால், தமிழைச் சிவபெருமான் அளித்து, பேசி, எழுதி, படித்து, உபதேசித்து வந்தமையால் அப்படி உபசாரம் என்று சொல்ல இயலாது. மொழிநூல் வல்லார் எல்லாரும் தமிழ்தான் ஆதிபாஷை எனக்கண்டிருக்கிறபடியால் மற்றப்பாஷைகள் எல்லாம் பிற்பட்டவையானபடியால் உபசாரம் மற்றப்பாஷைகளுக்கே யொழிய

தமிழுக்கு ஆகாது என்பதை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைக்கவேண்டுகின்றேன். ஆகையால் அது கடாவன்றென மறுக்க தமிழ் ஒன்றே சிவபெருமானால் முதன்முதல் அளிக்கப்பட்டது என்றும்; சிவபெருமான் உள்ளிட்ட எல்லாத்தேவர்களும் பேசி, எழுதி, படித்து, உபதேசித்து வந்தது தமிழே என்றும்; சிவபெருமான் தமிழிலேயேதான் ஆதியில் வேதாகமங்கள் உண்டுபண்ணினார் என்றும்; சிவபெருமான் ஆரியத்தையும் தமிழுடன் சொன்னார் என்று ஆன்றோர் கூறுவது உபசாரமே யொழிய உண்மையல்லவென்றும்; சேக்கிழார் முதலாயினோர் தமிழ் மொழியைத் தெய்வமொழி எனக்கூறியவாற்றால் தமிழ்மொழி கடவுள் மொழியென்றும்; * தமிழ்மொழி அநாதியென்றும்; பசுமரத்தாணி போல் நாட்டினும்.

இதுகாறும் கூறியவாற்றால், பிரணவம் தமிழ், அது முதலில் உண்டாயது, அதனினின்றும் தமிழ்ப்பாஷை உண்டாயது பிறகு நாளாவட்டத்தில் மற்றப்பாஷைகள் உண்டாயின. என அறிகிறோம்.

இந்தச் சங்கதிகளையெல்லாம் பாஷை ஆராய்ச்சிக்காரர் எளிதில் உணருவார்கள். ஒவ்வொரு பாஷையினுடைய அமைப்பும், போக்கும், எளிமையும், இனிமையும் அப்பாஷையினுடைய புராதனத்தையும் மாண்பையும் தெரிக்கும்.

(இன்னும் வரும்.)

அடிசைகிழார் அ. சிதம்பரனார்.

---

* தமிழ்மொழி அநாதியேயென்பது:—
"என்றுமுள தென்றமிழ்" எனும் கம்பர்வாக்காலும்;
"பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன்னிருந்தபடியிருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்கும் கவின்மலையாளமுந் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே யொன்றுபலவாயிடினும்
ஆரியம்போ லுலகவழக்கழிந் தொழிந்துசிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயன்மறந்து வாழ்த்துதுமே.
என்னும் மனோன்மணீயத்தாலும் அறியலாம்."

# சிருஷ்டியில் மயக்க நிவாரணம்.

---

(முன்தொடர்பு தொகுதி 2, பகுதி 6, பக்கம் 165).

இனி "வினைக்கீடாகச் சீவர்கள் செய்யுஞ் செயல்களெல்லாம் பரமன் கட்டளையின்படிச் செய்வதாம்" என்னும் அன்பர் கொள்கையையுஞ் சற்று விசாரிப்பாம். சீவர்கள் செய்யுஞ் செயல்கள் யாவும் பரமன் கட்டளையால் நிகழும் என்கையில், உலகின்கண் மனிதகோடிகளால் அகோராத்திரஞ் செய்யப்படும் பொய், கொலை, களவு, கள், காமமாகிய பஞ்சமாபாதகங்களும் பிறவுமெல்லாமும்" "பரமன் கட்டளைகளால்" நிகழ்கின்றன என்றாகி, விதி விலக்குகளுணர்ந்து ஒழுகவேண்டிய ஆவசியகமும் பொறுப்புமில்லையா மென்றேற்படும்! எல்லாம் பரமன் கட்டளையால் நடக்கும்போது விதிவிலக்குகளைக் கவனிக்குஞ்சிரமம் மனிதரே னெடுத்தல்வேண்டும்? எடுக்கினும், பரமன் கட்டளை தடுக்கப்படாதன்றோ? அன்றியும் இக்கட்டளைக் கொள்கையே யுண்மையாகில், விதிவிலக்குகளை விதிக்குஞ் சாத்திரங்கள் வீண் என்று முடிந்து, அது சொன்னவர்மேல் அறியாமைக் குற்றமும் ஏறும். இம்மட்டோ, பிரபஞ்சத்தின்கண், நால்வகையோனி, எழுவகைத்தோற்றம், அசலக்ஷம் சிவபேதங்களுள் அடங்கிய பிரம்மாதிஸ்தம்ப பரியந்தமுள்ள சகல சீவராசிகளுக்கும், ராகத்துவேஷ காமக்குரோதாதிகளை மூட்டி, கொலை களவாதி மகாபாதகங்களையும், மோசம், நாசம், சூது, வாது, வஞ்சனை, துரோகமுதலிய கொடுஞ்செயல்களையுஞ் செய்வித்து, சீவர்கள் பரஸ்பரம் அடித்து மடியச்செய்து கொண்டிருப்பதும் பரமன்வேலை யென்றாகும்! ஒரு சாதியார்மேல் மற்றொரு சாதியாரையேவித் துராகிருத மாயவர்கள் நாடுநகரங்களை யபகரிக்கச் செய்து, பிரமாதயுத்தங்களால் ஒருவரையொருவர் கொன்று மடியச்செய்து கொண்டிருப்பதும் பரமன் தொழிலென்றாகும், ஏனெனில், மேலே தொகுத்த அதீதியக்கிரமக் கொடுஞ்செயல்கள் யாவும் தற்காலம் நடைபெறக் காண்கின்றோம். "கட்டளை"க் கொள்

கையின்படி, அவையனைத்தும் பரமன் கட்டளையினாலேயே நிகழ்தல்வேண்டும். மேலே தொகுத்த கொடுமைகளொடொழியாமல் மண், நீர், அக்கினி, காற்று முதலிய பூதபௌதிகங்களா லுண்டாகும் அனர்த்தங்களும், சமுத்திரத்திலும் பூமியின்கண்ணும் பல்லாற்றால்நேரிடுஞ் சனச்சேதங்களும், ஆகாயகாமிகட்குஞ் சுரங்கவாசிகட்கும் நேரிடு மாபத்துக்களுங்கூட பரமன் கட்டளையினாலேயே நிகழவேண்டுமென்றி வேறில்லையாதலால், பரமன் கட்டளைக் கொள்கையானது, பரமனை இரக்கமற்ற மகாகொடியவர்க்குமேல் குரூரமுள்ள பிராணியாகச் செய்துவிடுகிறது. இது, [illegible] மகாமகிமை தங்கிய பரிசுத்த காருணிய லக்ஷணத்திற்குப் பொருந்தாதோரவமானம் வருவிக்குந் தன்மையாயிருத்தலால், அத்தகைய யதார்த்தம் என்றேற்படினும் அதனை அங்கீகரியோமென்க.

"கற்பனைகடந்தசோதிக் கருணையேயுருவமாகி"
என்றபடி, கருணையே வடிவமாயெழுந்து,
"இமையளவுமுபகாரமல்லால் வேறொன்றியக்கா
நிர்க்குணக்கடலாய் நின்றவொன்றே"

என்றபடி அளவில்லாத கருணையும், இரக்கமும், உபகாரமும், நீதியுமே பரமலக்ஷணமாவுடைய பரமருக்கு, இந்தக் கட்டளைக் கொள்கை எட்டுணையும் ஏலாமை யுணரத்தக்கது.

"பரமன் கட்டளையால் நடவாதாயின், உலகில் நன்மை தீமைகள் வேறெங்ஙனம் நிகழ்கின்றன?" என்னில், கன்மமிருந்தவாறு அவை நிகழுமென்க. கன்மஞ்சடம், அதுதானே தெரிந்து பலனைக் கொடாது. ஆன்மாவோ, அஞ்ஞன், (அறிவிலி) எனப்படலால், தானே தெரிந்து பலனைச் செய்துகொள்ளமாட்டான். இரண்டையுங்கூட்டி முடிக்கக் கர்த்தா ஒருவர் வேண்டும் என்று சரித்திரங்களால் விளங்குகின்றதே, அவரவர் செய்த கன்மங்களின் வழியாகத்தானே கர்த்தாவுங்கூட்டி முடித்தல்வேண்டும்; நல்வினை தீவினையாகிய கன்மங்களைச் செய்வியாமல் அவரெப்படி கூட்டி முடிக்கக்கூடும்? என்னில், உண்மையே. ஆனால் விஷயத்தை யிங்குச் சற்றுகூர்ந்து விசாரித்தல் வேண்டும். சிற்சடப் பிரபஞ்சங்களின் நானாவித இயக்கங்களைக் கர்த்தாவானவர் அவ்



வப்போது தான் நிகழ்வித்துக்கொண் டிருக்கின்றாரென்பதும், அவ்வியக்கங்களின் (செயல்களின்) பலன்களை அச்செயல்கள் நிகழும்போது தான் நூதனமாக உண்டாக்கிக்கொண் டிருக்கின்றாரென்பதும் இல்லை. ஸ்தூல, சூக்ஷ்ம, பரரூபங்களாயுள்ள சகல பிரபஞ்ச தத்துவ தாத்துவிகங்களிடத்தும், கருவிகரணங்களிடத்தும், அததற்குரிய தொழில்களையும், அத்தொழில்களால் விளைய வேண்டிய பிரயோசனங்களையும், சிருஷ்டிகாலத்திலேயே அததனிடத்தில் அமைத்திருக்கும். கன்மங்கட்குப் பலன்களும் சிருஷ்டிகாலத்திலேயே அததனிடத்தில் அமைக்கப்பட்டிருக்கும் அக்காரணத்தால், அததற்குரிய *சமயசந்தர்ப்பங்கள் நேரிடுகையில், அததற்குரிய செயல்களும் பிரயோசனங்களும் (Cause and effect) ஏது, பயன், ரூபங்களாக அததனிடத்திருந்து அப்போதப்போது தாமே இயல்பிலுண்டாகும். கர்த்தா ஒருவர் அப்போதப்போது செய்துகொண் டிருக்கவேண்டிய அவசியமில்லை. திட்டாந்தம்: நெருப்பிருக்கின்றது. அதனிடத்தில் சுடுகையாகிய செயல் அந்நெருப்புண்டான காலத்திலேயே அமைக்கப்பட்டிருக்கின்றது. அதனால் நெருப்பை மிதித்தமாத்திரத்தில் அது தானே சுடக் காண்கின்றோம். மிதித்தபிறகு தான் கர்த்தா ஒருவர்வந்து நெருப்பைச் சுடச்செய்கிறதில்லை. அங்ஙனமே, சலத்தில் விழுந்தவனை விழுந்தபோதுதான் கர்த்தாவந்து அவனை முழுகடிக்கவேண்டியதில்லை. சலந்தானே முழுக்குகின்றது. சீதோஷ்ணங்களும், வாத,பித்த,சிலேஷ்மங்களும்மற்றும்பலவும் அளவுக்கதிகப்படுகையில் அவ்வவற்றின் பயன்கள் (Cause and effect) ஏது, பயன்வழியில் அங்கங்கிருந்து தாமேயுண்டாகின்றன. அங்ஙனமுண்டாகுஞ் சத்தி அததனிடத்தில், சிருஷ்டிகாலத்திருந்தே யமைந்து வரலாலென்க. இங்ஙனமே,பாவ,புண்ணிய, கன்மங்கட்குப் பலன் அததனிடத் தமைந்திருந்து (Cause and effect) ஏது, பயன் ரூபமாக இகத்தும் பரத்தும், எங்ஙனம், யாரால் வரவேண்டுமோ அங்ஙனம், தாமே இயல்பில் வருமென்றறியத்தக்கது.

"பலன்கள் (Cause and effect) ஏது, பயன்ரூபமாகத் தாமே யெங்ஙனம் விளையும்?" என்னில், தத்துவங்கள் ஒன்றையொன்று பிரேரித்துக் காரியப்படுத்தியும் பயன்களை விளைக்கும் இயல்பின

வாம். உதாரணம்: நியதிதத்துவம் ஆன்மாக்களின் கன்மபலன்களை ஏறாமல் குறையாமல் காலதத்துவத்தின் வழியாக அவ்வக் காலங்களில் அவ்வவ்வழிகளில் தவறாமல் வருவிக்கும். இதற்கிவ்வாற்றல் சிவதத்துவப் பிரேரகத்தாலுண்டாகும். இம்முறையொழுங்குகளெல்லாம் சிருட்டிகாலத்திலேயே அதததனிடத்தில் இயற்கையா யமைக்கப்பட்டிருத்தலினால், அவ்வச்சமயங்களில் அதததற்குரிய பயன்கள் அங்கங்கிருந்து ஏது, பயன் (Cause and effect) வழியாகத் தாமே விளையக்காண்கின்றோம்.

"அன்றேயனாதி யமைத்தபடியல்லாதொன்
றின்றேபுதிதா யிசையுமோ."

என்ற பிரமாணமுங் கவனிக்கத்தக்கதாம். இன்ன பல நியாயங்களால், அவ்வச்சமயங்களில் "பரமன்" கட்டளையிட்ட பின்னரே பயன்கள் விளையவேண்டும் என்னுமாவசியகமின்மை உணர்த் துணரத்தக்கது.

உண்மை யிங்ஙனமாயின் "அவனன்றி யோரணுவு மசையாது" சிவன்செயலாலேயாதும் வரும் "ஆட்டுவித்தா லாரொருவராடாதாரே" எனப்போந்த மேலோரது பிரமாணவுரைகட்கும், "சேதனப்ரேரணம் விநாநஸ் ஸ்வதந்த்ரம்" என்ற ஆகமப்பிரமாணத்திற்குங்கதி என்னை? அவற்றின் கருத்துத்தான் என்னை? எனில் சிவசத்தியானது சேதனாசேதனப் பிரபஞ்சங்களில் "திலேதைலமிவஸ் தித்வாபஹிரந் தர்வ்யவஸ்தித" என்னுஞ் சுருதியின்படி, எள்ளிலெண்ணெய்போல் வியாபித்துநின்று, தத்துவ தாத்விகங்களின் சக்திகளையும், ஆன்ம சிற்சத்தியினையும் இயக்கித் தொழிற்படச் செய்துவர, அவை தொழிற்பட்டு மேலே விளக்கியவாறு, தத்தமக்குரிய காரியங்களைச்செய்து பயன்களை விளைத்து வரும். அதனாலிங்ஙனஞ் சொன்னதெனவறிக.

(இன்னும் வரும்)

C. M. அரங்கசுவாமி நாயகர்.

---

# தமிழ்.

(இராமலிங்கசுவாமியெழுதியது.)

தமிழ் என்பது, த்+அ+ம×இ+ழ் என்னும் 5 அலகு நிலையுடையது த், ம், ழ் ஜடசித்கலை. அ, இ, சித்கலை. அ—அகண்டாகாரசித்தை விளக்கும், ஓங்கார பஞ்சாக்கரத்துள் பதிநிலையக்கரமாம். இ=பதியைவிட்டு நீங்காத சித்தைவிளக்கும், வியவகாரத்தால் அனந்தாகார வியஷ்டிபேதங்காட்டும் ஜீவசித்கலையக்கரமாம்.

பதிசிதாத்மகலைகளுக் காதாரமாகி உயிரினுக்கு உடலையொத்துக் குறிக்கப்படும்.

த், ம், ழ், எழுத்துக்களுக்குரை.

த்=ஏழாவது மெய்; ம்=பத்தாவதாகும், ழ்=பதினைந்தாவது இயற்கை யுண்மைச்சிறப்பியலக்கரமாம்;—ஐந்தலகுநிலையும், உபயகலைநிலையும் மூன்றுமெய்நிலையும் அமைந்துள்ளதும் சம்புபக்ஷத்தாரால், அனாதியாய் சுத்தசித்தாந்த ஆரிஷரீதிப்படி கடவுளருளாணையால் கற்பிக்கப்பட்டதும்; எப்பாஷைகளுக்கும் பிதுர்பாஷையென்று ஆன்றோர்களால்கொண்டாடப்பட்டதும்; இனிமையென்று நிருத்தம் சித்திக்கப்பெற்றுள்ளதுமான தமிழ் என்னும் இயற்கையுண்மைச் சிறப்பியல் மொழிக்குச் சுத்தசித்தாந்தபர உரை:—த்+அ, தத்வரூபாதி சிவபோகாந்தமான தசகாரிய இயற்கையுண்மைக்கட்டளை நிலையில்முன் அலகுநிலைப்பொருள் கூறியவிடத்துக்குறித்த ஏழாவது நிலையாகிய த் என்பது சிவரூப இயற்கையுண்மைக்கட்டளையாம்:—

அ=அகண்டாகாரசித்கலாரூப ஓங்காரத்துட்பொருட்பிரதமவிலக்கிய வியக்தியக்கரம்;—பன்னீருயிர் நிலையிற்றலையாய முதலக்கரமாதலில், அதுவே பிரமாதி பரசிவாந்த நவநிலைக்கும் அனாதியாதிகாரணமாயுள்ள வியற்கையுண்மைப் பரிபூரணப்பொருளிலக்காம்;—என்னவே. சிவரூபமாகும். தகராகாசத்தில் சுத்தசிவமாகும் அருட்சோதியினைத்துள்ள பூரணானந்தஸ்வரூப பரபதிவியக்தமாயிற்று:—

ம்+இ=சங்காரப்ராணவமாகிய மகாரம்—முத்தான்மாக்களுக்கு ஒளிவண்ணச் சதானந்தமாயும், பெத்தான்மாக்களுக்கு

இருள் வண்ணமலரூபமாயும் இருந்து, கற்பாந்தப்பிரளயமுடிவின் சிருட்டி திதியாதிகளில் சிதான்மசக்தியாகிய ஜீவனுக்கு அதிகரணமாகவும், முற்குறித்த பத்தாவது நிலயமாகியுமுள்ளதெனப்பொருளாம்;—

இ—பன்னிருயிர் நிலைகளில் மூன்றாம் நிலையுயிராகிய இகாரம் திரிகலா ஆன்மவருக்கத்தில், அபரமாகிய சகலாகலரையும், பரமாகிய பிரளயாகலரையும், கீழ்ப்படுத்தி, அவ்விருகூட்டத்தாருக்கும் மேற்பட்டுநின்ற சுத்தவிஞ்ஞானகலராகிய சிதாத்மாக்களைச்சுட்டுகின்றதாம்.

என்னவே, ஆதார ஆதேயக்கூட்டுறவால் என்றுந்தோன்றி விளங்கும் சிதான்மவருக்கங்கள், பரபதிலக்ஷியமாகிய பூரணானந்தத்திற்கு அநுபவிகளாக வுரியவர்களெனக் குறிக்கொள்ளல் வேண்டும்.

ழ்—இந்தச்சிறப்பியலக்கரம் பதினெண்மெய்களில் பக்ஷமுடிவில் எண்குறிப்பில் நின்று சிவயோகபூமியாகிய பரதகண்டத்தில் பௌராணிக தத்துவத்தாற் குறிக்கப்பட்ட ஐம்பத்தாறு தேசங்களுள் சுதேசந்தவிர மற்ற ஐம்பத்தைந்து தேசபாஷைகளிலுமில்லாததாயும், பதினெண் ணிலமாகக்குறிக்கப்பட்ட செந்தமிழ், கொடுந்தமிழ் எனும் இருமைக்கும் ஒற்றுமையுரிமையாயும், முத்துறைத்தமிழுக்குள் முதன்மைத்துறையானதும்; இருக்கு, யஜுர், சாமமென்னும் சமஸ்கிருத வேதத்திரயப்பொருள் அநுபவத்தை யெளிதில் கற்றுணர்ந்து தெளிந்து அநுபவிக்கிறதற்குப் பரமேசுரனது திருவருளைப் பஞ்சாக்ஷரமுத்தொழிற் காரியமான பஞ்சதசாக்ஷரியால் பிரத்தியக்ஷாநுபவம் சித்திக்கச்செய்யும் நிலயமானதும்;—

ஸ்ரீ மணிவாசகர், சம்பந்தர், நாவரையர், சுந்தரர், திருமூலர் முதலிய மகாபுருஷர்களால் சாத்திர தோத்திரங்களாக அருளிச்செய்யப்பட்டிருக்கும் திருவாசகம், தேவாரம், திருமந்திரம், என்னும் பரமார்த்தரகசியங்களையுடையதும்,—பலநாள் நைஷ்டிக அதிகரணம் பூண்டு போதகாசாரியர் சந்நிதியில் தாழ்ந்து சகபாடிகளோடு சூழ்ந்து சுரஒலிபேதங்களைத் தேர்ந்து உழைப்பெடுத்தோதினும் பாடமாவதற்கு அருமையாயும்



பாடமானாலும் பாஷியம், வியாக்கியானம், டீக்கா, டீக்கா; டிப்பணி முதலிய உரைகோள் கருவிகளைப் பொருள்கொள்ளத் தேடவேண்டியதாயும், அவ்வவைகளையும் தேடிக்கைவரினும், அக்கருவிகளால் போதகம் பெறவேண்டியதற்கு பாஷியக்காரர்கள், வியாக்கியானகர்த்தர்கள், டீக்காவல்லபர்கள், டீக்காசூசகர்கள் முதலியபோதக உபபோதகாசிரியர்கள் கிட்டுவது அருமையில் அருமையாயும் இருக்கிற ஆரியம், மகாராட்டிரம், ஆந்திரம் என்ற பற்பலபாஷைகளைப்போலாகாமல் பெரும்பாலும் கற்பதற்கு எண்ணளவு சுருக்கமாயும், ஒலியிலேசாயும், கூட்டமென்னுஞ் சந்தி அதிசுலபமாயும், எழுதவும், கவிசெய்யவும் மிகநேர்மையாயும், அக்ஷர ஆரவாரம் சொல்லாடம்பரம்முதலிய வெண்மை யலங்காரமின்றி எப்பாஷையின் சந்தங்களையும் தன் பாஷையுள்ளடக்கி ஆளுகையால் ஆண்டன்மையைப் பொருந்தியதான தற்பாஷைக்கே அமைவுற்ற ழ், ற், ன், என்னும் முடிந்த அடிசிறப்பியலக்கரங்களில் முடிநிலை இன்பாநுபவசுத்தமோனநிஷ்டத்தைச்சுட்டறச் சுட்டும் இயற்கையுண்மைத்தனித்தலைமைப் பெருமைச் சிறப்பியலொலியாம்.

உரைகூறிப்போந்த சுத்த சித்தாந்த ஆரிடரீதிமுப்பதவுரைப்பொழிப்பு பருளியற்கைமல இருளைப்பரியாக சக்தியால் அருளொளியாக்கி, அதற்குள்ளீடான சிதாத்ம சிற்கலாசக்தியென்னும் சுத்த ஆன்மாவை, சராசரகடவுள அருட்பெருஞ்சோதி யென்னுஞ் சுத்த சிவானந்த பூரணத்தைச் சுத்தமோன நிலையால் அநுபவிக்கும் இயற்கை யுண்மையே 'தமிழ்' என்னுஞ் சொற்பொருள் சுட்டினவாறு காண்க.

இதன் கருத்து யாதெனில், தமிழ்ப்பாஷையே அதிசுலபமாக சுத்த சிவாநுபூதியைக்கொடுக்கும் என்பதாம்.

சித்தாந்த தீபிகை.

---

# அறுவகைச் சமயம். *

"அறுவகைச்சமயத்தோர்க்கு மவ்வவர்பொருளாய்வேறாங்
குறியதுவுடைத்தாய்வேதாகமங்களின் குறியிறந்தங்கு
அறிவினுள் அருளானமன்னி யம்மையோடப்பனாகிச்
செறிவொழியாதுநின்ற சிவனடிசென்னிவைப்பாம்."

இன்று உபந்நியசிக்க எடுத்துக்கொண்ட விஷயம் அறுவகைச் சமயம் என்பது. "அறுவகைச் சமயம்" என்பதைப்பற்றிக் கூறுவதற்கு முன்னர், "சமயம் என்பது யாது?" "அதனாற் பெறப்படும் பொருள் என்னை?" என்று ஆராயவேண்டுவது இன்றியமையாததாகின்றது.

"சமயம்" என்னும் சொல் "காலம்" அல்லது 'பொழுது' என்னும் பொருளை உணர்த்துகின்ற ஒரு மொழியாகும், மனிதன் பஞ்சேந்திரியங்களின் வழியாய ஒவ்வோர் காலத்தில் ஓரோர் பொருளை அறிகின்றான் என்பதும், அங்ஙனம், அவன் அறியும்போதும் ஒரு இந்திரியத்தின் வழியாய் ஒரு பொருளை அறியும் அதேசமயத்தில் மற்றை இந்திரியங்களின் வழியாய் மற்றைப் பொருள்களை அறிய முடியாதவனாகின்றான் என்பதும் எல்லோருக்கும் ஒப்புமுடிந்த ஒரு உண்மையாகும். ஆகவே, ஆன்மா மெய்யினாற் பரிசித்தறியும் சமயமும், வாயினாற் சுவைத்தறியும் சமயமும், கண்ணினாற் கண்டறியும் சமயமும், மூக்கினால் முகர்ந்தறியும் சமயமும், செவியினாற் கேட்டறியும் சமயமும் எனச் சமயங்கள் பலதிறப்படுகின்றனவன்றே? இன்னும் இனிய சங்கீதத்தைக் கேட்கும்போது எதிரிலுள்ள ஒரு அழகிய காட்சியைப் பார்க்கவும், அழகிய ஒரு காட்சியைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருக்கும்போது இனிய ஓசையைக் கேட்கவும் மனிதன் சக்தியற்றவனாயிருக்கின்றான் என்னும் பிரத்தி-

* இவ்விஷயம் வேளாங்கண்ணி சைவ சித்தாந்த சபையின் ஏழாம் வருஷமகோற்சவத்தின் முதல் நாளன்று நாகை - ஸி. கோபாலகிருஷ்ணனால் செய்யப்பட்ட உபந்நியாசமாகும்.



யட்ச அனுபவமானது, ஜீவான்மாவின் அறிவு ஒரு இந்திரியத்தின் வழியாய் ஒரு பொருளை அறியும்போது, அதேசமயத்தில் வேறொரு இந்திரியத்தின் வழியாய் வேறொருபொருளை அறியும் ஆற்றலுடையதாயில்லை என்னும் உண்மையை இனிது புலப்படுத்துகிறது. இங்ஙனம் ஆன்மா ஓரோர் அவசரத்தில் ஓரோர் இந்திரியத்தின் வழியாய் ஓரோர் பொருளை அறியும் சமயமெல்லாம் "சமயம்" என்னும் பெயர்பொருத்தற்கு உரியவேனும்,

"பிறத்தலும் மூத்தலும் பிணிபட்டிரங்கலும்
இறத்தலுமுடைய நிலைமையைக் கொள்கல
மக்கள் யாக்கை................................."

என்னும் ஆன்றோர் திருவாக்கின்படி, இச்சரீரம் ஒரு கணத்தே தோன்றி மறுகணத்தே அழியும் நிலையின்மை உடையதாதலாலும், சரீரம் நிலையற்றது எனவே சரீரத்தின் அவயவங்களான பஞ்சேந்திரியங்களும் அவற்றின் வாயிலாய் அறியப்படும் பஞ்சேந்திரிய அறிவுகளும் நிலையற்றன வென்பது தானே போதருகின்றதாதலாலும், ஆன்மா பகிர்முகப்பட்டு இந்திரியங்களின் வழியாய்ப் புறப்பொருள்களை அறியும் அவசரத்தினைச் "சமயம்" என்று வழங்காது, எக்காலத்தும் எவ்விடத்தும் மக்களுக்கு இயல்பாகவே எழும் தத்துவஆராய்ச்சியை,—அதாவது "இவ்வுலகம் எவ்விதம் தோன்றிற்று? இவ்வுலகத்திற்கும் மக்களுக்கும் என்னசம்பந்தம்? ஆன்மா என்பதுயாது? கடவுள் என்பதுயாது?" என்னும் இவைபோன்ற பல ஆசங்கைகளை எழுப்பி, இவைகளுக்குத்தகுந்த காரணங்களைக் கண்டுபிடிப்பதில் ஆன்ம அறிவு ஊன்றிநிற்கும் அவசரத்தினையே, "சமயம்" என்று நம்முடைய முன்னோர்கள் வழங்கலானார்கள், அதாவது, ஆன்ம அறிவு பஞ்சேந்திரியங்களின் வழியாய்ப் பகிர்முகப்பட்டுச் செல்லாமல், மனமொருங்கு அந்தர்முகப்பட்டு.

"நானார்? என்னுள்ளமார்? ஞானங்களார்? என்னையாரறிவார்
வானோர் பிரான் என்னை ஆண்டிலனேல் மதிமயங்கி
ஊனார் உடைதலையில் உண்பலிதேர் அம்பலவன்
தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ."

என்று அருளிய ஸ்ரீமத் மணிவாசகப் பெருமானைப்போல் தத்துவவிசாரணைசெய்யும் அவசரமே "சமயம்" எனப்படும்.

இங்ஙனம் மக்கள் தத்துவவிசாரணை செய்யத்தொடங்கிய ஆதிகாலம் முதல் இன்றுவரையில் இவ்வுலகத்தில் தோன்றிய சமயங்கள் பலவாம்; மறைந்தொழிந்த சமயங்களும் பலவாம். மக்கள் தத்துவவிசாரணை செய்யத்தொடங்கித் தம்மறிவிற்கெட்டியமட்டிற்சென்று கண்டவுண்மைகளே "சமயம்" எனப்பெயர் பெறுபவாயின என்று முன்னரே விளக்கினுமாயினும், மக்களின் அறிவும் செயலும் ஆராய்ச்சியும் பல திறப்பட்டிருத்தலால், இவர்களுடைய ஆராய்ச்சி உண்மைகளும் பலவகைப்பட்டு, அதனால் இவர்களால் நிலைநாட்டப்பட்ட சமயங்களும் பலவாய் விரிந்தன.

இனி, இங்ஙனம் விரிந்த சமயங்கள் எண்ணிறந்தனவாயினும், நம்முடைய ஆன்றோர்கள் இவற்றையெல்லாம் புறப்புறச்சமயம், புறச்சமயம், அகப்புறச்சமயம், அகச்சமயம் என்னும் நான்கு தொகுதியுள் அடக்கினார்கள் என்னும் உண்மையும், இவற்றுள் ஒவ்வொரு தொகுதியும் முறையே ஆறாறு பகுதியை உடையதென்னும் உண்மையும், "அறுவகைச் சமயத்தார்க்கும் அவ்வவர்பொருளாய்" என்னும் மேலைத் திருவாக்கால் இனிது புலப்படும்.

இங்ஙனம் பகுக்கப்பட்ட இருபத்துநான்கு சமயங்களைப் பற்றியும் இங்கு விரித்துக்கூறப்புகின், இவ்விஷயம் வரம்பிறந்தோடுமாகலின், இவற்றின் பெயர்களை மாத்திரம் கூறிவிட்டு, இவற்றுள் முக்கியமான அருசமயங்களைப்பற்றி மாத்திரம் சிறிது விரித்துக்கூறுகின்றோம்.

புறப்புறச் சமயங்களாவன:—(1) உலோகாயதம் (2) * மாத்தியமிகம் (3) யோகாசாரம் (4) சௌத்திராந்திகம் (5) வைபாடிகம் (6) ஆருகதம்

புறச் சமயங்களாவன:—(1) தருக்கம் (2) மீமாஞ்சை (3) ஏகான்மவாதம் (4) சாங்கியம் (5) யோகம் (6) பாஞ்சராத்திரம்.

* (2) (3) (4) (5) இந்நான்கும் பௌத்தமதத்தின் பிரிவுகள் என்றும், இந்நான்கு சமயங்களும் ஒன்றுசேர்ந்து "பௌத்தம்" என வழங்கப்படுமென்றும் அறிக.



அகப்புறச் சமயங்களாவன:—(1) பாசுபதம் (2) மாவிரதம் (3) காபாலம் (4) வாமம் (5) வைரவம் (6) அவிக்கவாதசமயம்

அகச்சமயங்களாவன:—(1) பாடாணவாதம் (2) பேதவாதம் (3) சிவசமவாதம் (4) சிவசங்கிராந்தவாதம் (5) ஈசுரவவிகாரவாதம் (6) சிவாத்துவிதசைவம்

இங்ஙனம் பகுக்கப்பட்ட இருபத்துநான்கு சமயங்களுள் சித்தாந்த சைவம் காணப்படாமையால் அது இச்சமயங்களுக்கெல்லாம் மேற்பட்டதாய், இவற்றுள் காணப்படும் கொள்கைகளுள் இயைந்தவற்றைத் தழுவியும் இயையாதவற்றை மறுத்தும் விளங்குவதாய், இச்சமயங்களிற் கூறப்படாத வேறு உண்மைகளை வலியுறுத்துவதாய், எல்லாச்சமயங்களும் தன்கண் அடங்கிக்கிடப்பத்தான் அவற்றுள் அடங்காது விரிந்து திகழும் இயல்புடையதாய்த் துலங்குகின்றதென்பது இனிது புலப்படும்: இவ்வுண்மை மேலைத்திருவாக்கில் காணப்படும் "வேதாகமங்களின் குறியிறந்தங்கு" என்றற்றொடக்கத்து வாக்கியத்தாலும் நன்கு தெளியப்படும்.

மேலைத்திருவாக்கில், "அறுவகைச் சமயத்தார்க்கும் அவ்வவர் பொருளாய்" என்னும் சொற்றொடர் புறப்புறம், புறம், அகப்புறம் ஆகிய முத்தொகுதியுள் அடங்கிய பதினெட்டு சமயங்களை நோக்கி எழுந்ததென்றும், "வேறுங்குறியதுவுடைத்தாய்" என்னும் சொற்றொடர் அகச்சமயத்தின் பிரிவான ஆறு சமயங்களைக்குறித்தெழுந்ததென்றும், எஞ்சிய வாக்கியத்தொடர்கள் சித்தாந்தசைவத்தைக்குறித்து எழுந்தனவென்றும் உய்த்துணர்ந்து கொள்ளல்வேண்டும்.

இத்துணையும் முன்னுரையாகக் கூறினுமாதலால், இனி முக்கியமாக நாம் அறிந்துகொள்ளவேண்டிய ஆறு சமயங்களைப் பற்றிச் சிறிது விரித்துக் கூறுவாம்:

இக்காலத்தில் நம் இந்தியதேசத்திலும், மேனாட்டிலும் அறிவுடையோரால் பிரபலமாய்ப் பயிலப்பட்டுவரும் தத்துவ சாத்திரங்கள் ஆறாகும். அவையாவன:—(1) உலோகாயதம் (2) பௌத்தம் (3) சாங்கியம் (4) நையாயிகம் (5) வைசேஷிகம் (6) மீமாம்சம். இந்த ஆறுவகையான தத்துவசாஸ்திரங்க

களும் நம் இந்தியாதேசத்திலேயே பல்லாயிரவருடங்களுக்குமுன் தோன்றின. இவைகள் பண்டைக்காலத்து இந்திய நன்மக்கள் தத்துவவிசாரணைசெய்யத்தொடங்கிய சமயத்தில் தோன்றினவாதலால், இவைகளை "அறுவகைச் சமயம்" என்று இங்கு வழங்குதல் இழுக்காகாது. இன்றை உபந்நியாசத்தில்யாம் கூறுதற்கு எடுத்துக்கொண்ட சமயங்கள் இவைகளேயாகும்.

## உலகாயதம் (Materialism)

உலகாயதமதத்தை ஸ்தாபித்தவரும், அம்மதக்கொள்கைகளைப் பரப்பியவரும் பிரகஸ்பதி என்னும் பெயருடையவராவார். இந்த உலகாயதமதம் புறப்புறச் சமயத்தின்பாற்படும். உலகாயதமதத்தினர்க்குக் காண்டல் அளவை ஒன்றே பிரமாணமாகும். கட்புலனுக்குத்தோன்றும் நிலம், நீர், நெருப்பு இம்மூன்றனையும் பரிசவுணர்ச்சிக்குப் புலப்படும் காற்றினையும் மாத்திரமே இவர்கள் தத்துவங்களாக அங்கீகரிப்பார்கள். "இந்த நான்கும் நித்தப்பொருள்கள்; இந்த நான்கு பூதங்களின் கூட்டுறவே உடம்பு; சுண்ணாம்பையும் பாக்கையும் வெற்றிலையையும் ஒன்றுசேர்த்தவழி செந்நிறம் உண்டாதல்போல, இந்த நான்கு பூதங்களும் ஒன்று சேருங்கால் ஒரு உணர்வு உண்டாகிறது. இந்த உணர்வு சரீரம் வளரவளர வளரும்; சரீரம் தேயத்தேயக் குறையும். இவ்வுலகத்தில் பெண்டுபிள்ளைகளோடு சுகமாய் வாழ்வதே மோட்ச இன்பம்; இவ்வுலகத்தில் வறுமையாலும் நோயாலும் பிறதுன்பங்களாலும் வருந்துவதே நரகத்துன்பம். உடம்புக்கு வேறாய் ஆன்மா ஒன்று உண்டென்பதும், இவ்வுலகத்தைத் தவிர வேறுச் சுவர்க்க நிரயங்கள் உண்டென்பதும், முற்பிறவிபிற்பிறவி உண்டென்பதும், நல்வினை தீவினை உண்டென்பதும் பொய்யான போலிக்கொள்கைகளாகும்" என்று கூறுவது உலகாயதமதத்தின் போதனையாகும்.

(இன்னும் வரும்.)

கடகை—ஸி. கோபாலகிருஷ்ணன்.

---

## சமாசாரங்கள்.

1913௵ மேமீ 3௳ சனிக்கிழமைமாலை திரிசிரபுரம் சைவசித்தாந்த சமாஜத்தின் உபஅக்கிராசனாதிபதி ஸ்ரீமான். தெ. எம். நல்லசுவாமி பிள்ளை பி.ஏ. பி.எல். அவர்களால் சபை அடிக்கடி கூடவேண்டிய அவசியத்தையும், சபை அடியார்களின் கடமையையும் அன்பின் பயனையும் மிகத்தெளிவாக எடுத்து உபந்நியசித்தார்கள்.

அவ்வமையத்து அங்கு எழுந்தருளியிருந்த ஸ்ரீதிருக்கைலாயபரம்பரை தருமபுரவாதீன அடியார் குழாத்தினிலொருவரும் திரிசிரபுரம் மௌனமடம் விசாரணைக் கர்த்தருமாகிய ஸ்ரீலஸ்ரீ சொக்கலிங்க தம்பிரான் சுவாமிகளவர்களால் ஸ்ரீமான் பிள்ளையவர்கள் சைவர்பால் வைத்திருக்கும் கருணைத்திறத்தையும் அவர்கள் எடுத்துவரும் நன்முயற்சியையும் வியந்துகூறிய அகவற்பா.

பொன்னிமாநதிசூழ் நிலவரைப்பில்
தந்திகரில்லாத் தலைபரசெய்திய
தந்திரமியாவுந் தந்திடுமூலன்
மந்திரம்பூத்த மாநிலமாக்க
வந்திடுஞான சம்பந்தப்பெருமான்
தந்தையாரியற்றச் சாருமியாகந்
தனக்குப்பொருளைச் சாலக்கொடுத்து
மிப்புகழ்படைத்தே விளங்குந்துறைசை
மாப்பெருந்தலத்து வாழுந்தியாகர்
கன்னூறதன்மறைத்த புண்ணியமூர்த்தி
மாசிலாமணித் தேசிகராகித்
தன்னாளிகாந்த தயாநிதிக்கடவுள்
குருமணிக்கோலங் காட்டியகொள்கையின்

வந்திடுங்குரவர் சந்ததிதன்னுள்
வருவேலப்ப மாப்பெருங்குரவன்
தன்னடியார்களுட் டலைமைவாய்ந்த
மாதவச்சிவ ஞானயாமுனிவன்
தேசிகன் திருவடித் தியானபோதத்தால்
தெய்வஞ்சிவமே சேர்ந்திடுசமயஞ்
சைவமேயென்னச் சாற்றுசித்தாந்த
சாத்திரமாகுமீ ரேழனுட்பன்னிரு
சூத்திரத்தால்மெய்ச் சுடர்விடுபோதந்
தனக்கொருசிற்றுரை தகவினிற்சாற்றியும்
பொன்னைப்பொதிந்த கிழியேபோலப்
பேசுதமடங்குப் போதந்தனக்கே
திராவிடமாந்தர் பராவிடுஞ்சீர்சால்
திராவிடமாபா டியமொன்றருளியும்
மூன்றுளீந்தன னென்பமற்றதனொடு
மூவரருளிய தேவாரத்தமிழ்
மறையினில்முன்னாள் வன்மீகமூடி
லைமாய்ப்போயின சிலபலபதிகம்
விலாசமகன்ற விரிகடற்புடவியில்
சிலாசாசனங்கள் சிதர்ந்தும்போயின

ஆதலின்

அழகுறுங்கைக்கொண் டாள்வதுகருதியும்
பரசுரும்யோதம் பரவவேண்டியும்
நாரணன்றந்த நவநீதம்புரை
மோனமுயர்சிவ ஞானபோதத்தையும்
சித்தியாரென்னுஞ் சிறந்திடு நூலையுந்
திருவருள்விளக்கும் திருவருட்பயனையும்
இருபாவிருபஃ தென்னு நூலையும்
அருளுந்தொழுந்த திருவுந்தியாரையும்
பத்தியாயோர்க்கு பயன்பெறத்திரட்டியாங்
கிலமாயிருப்பிற் கிலமுறுமெனநினைந்
தாசபாண்டயினி லாக்கியாவரும்



பரசக்கொடுத்தன னவனுமெனிலோ
பழமையார்தமிழ்நூல் பல்காற்பயிறலைக்
கிழமையாய்க்கொண்டு கிளரறிவாளன்
சைவசித்தாந்த சாஸ்திரபிரசங்கம்
கைவரச்செய்கை கடனெனப்பூண்ட
ஆன்றவவைக்கக் கிராசனம்பூணடோன்
ஊருணிநீர்நிறைந் ததுபோலியார்க்கும்
பேருபகாரம் பிறங்கிடுசீலன்
தென்கைலாய மென்னுஞ்சிரகிரி
பன்னுறுசிந்தி நன்னகர்வாசன்
நீறுதரித்தே நிலவிடுமெய்யன்
பாலலோசனன்பாற் பத்திமிக்குடையோன்
நல்லோ ரகத்துநண்பன்
நல்லசாமியெனு நாவலனே.

***

குசாவதி அல்லது ஒருவஞ்சகவநிதை:—இக்கதையின் சாரமாவது, குசாவதியென்பவள் நவீன நாகரீக நடிப்பால், காலத்திற்கேற்ற கோலம்பூண்டு, உலகினை வஞ்சித்து, பொய்புஞ்சூதும் பேசி, ஆடவரனேகரை யேமாற்றி, பற்பல்வகையில் பணம் அபாரம் சம்பாதித்து, இராஜாங்கச் சிறைச்சாலையிலும் சிக்காதபடி ஆயுள்பரியந்தம் வாழ்ந்து, பின்னொருநாள் பூர்வபுண்ணியத்தால் சற்குரு ஒருவரைச் சந்தித்து அவரது சற்போதனையால் மனந்திரும்பி, அவரடைக்கலம் புகுந்து தனது துற்குணமனைத்தும் நற்குணமாக மாற, தன் திரவியமனைத்தையும் உயர்தரக் கல்விச்சாலைக்கும், பிரசவ ஆஸ்பத்திரிக்கும் உதவி மனவொடுக்கத்தால் இறைவனருளை நாடிவாழ்ந்த கதையாகும். அச்சுப்பதிப்பிலும், காகிதத்திலும், கட்டடத்திலும் இந்நூலைப்போலும் இதுகாறும் ஒரு தமிழ்க்கதைநூல் வெளிவந்ததில்லை. இந்நூல் சீமையிலச்சிட்டதோவெனச் சந்தேகிக்க இடம் தருகிறது. ஏழுபாரம் கொண்ட இந்நூலின் விலை அணா 12. இஃதியற்றினோர் "ஞானகாந்தி" "மதிமாலினி" முதலிய நூற்களியற்றிய சே. இராஜு செட்டியாரவர்கள் எம். பி. பி. ஐ.

மெய்கண்டசாத்திர மூலமுமுரையும்:—சுத்தாத்துவித வைதிக சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்குமடங்கிய இம்மெய்கண்ட சாத்திரத்தில் 80-பக்க மடங்கிய 10-பாரங்கள் முதற்சஞ்சிகையாக வெளிவந்திருக்கிறது. முதற்பதிப்பு சில வருடங்கட்கு முந்தியே செலவாகிவிட்டதாலும், இப்போது பலவைதிக சைவர்கள் விரும்புவதாலும், புத்தகமுழுது முடித்து வெளியிடின், ரூபா 6. கொடுத்து வாங்குவது சிலருக்கு இயலாதாகையினாலும், மாதாந்தர சஞ்சிகையாக வெளிப்படுத்தி வருகிறதாகத் தெரியவருகிறது. ஒவ்வொரு சஞ்சிகையின் விலை வி. பி. யுள்பட அணா 8. பனிரண்டு சஞ்சிகையில் முடிவுபெறும். முதற்பதிப்பைக்காட்டிலும் இரண்டாம்பதிப்பில் பல அரிய விஷய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இதனை வெளியிட்டுவருவார் வண்ணக்களஞ்சியம். காஞ்சி-நாகலிங்க முதலியாரவர்கள்.

***

ஆசார சீர்திருத்தம்:—சென்னையிலுள்ள பெண்மணிகள் சிலர் உலகோபகாரமாகத் தங்கள் சகோதரிகள் நாளுக்குநாள் தமிழில் விருத்தியடைந்து நாகரிகமுற்று நல்வழியிலொழுகி ஆன்றோர் ஆசாரம் கைபெற்று வாழும்படி அடிக்கடி சில துண்டுப் பத்திரிகைகளை யச்சிட்டுத் தமிழ்நாடு முழுவதும் பரவச்செய்து வருகின்றனர். இதுகாறும் "ஆசார சீர்திருத்த முறையும் நோக்கங்களும்", "பெண்களுக்குக் கல்வி அவசியமா", "பாலிகை வயதின் மூத்தவர்க்கு மணஞ்செய்தலைத் தடுத்தல்", "பாத்திரமறிந்து பிச்சையிடு", "தமிழ்மொழியும் நம்கடமையும்", "பால்ய விவாகத்தின் பாவங்கள்", "இல்லறமல்லது நல்லறமன்று", "முப்பத்திரண்டு அறங்கள்", "ஒற்றுமை", "குழந்தைகளைப் பேணுதல்", பால்ய பெண்களுக்கோர் கடிதம்", "பெண்கல்வி" என்ற 12-பத்திரிகைகள் வெளிவந்திருக்கின்றன. இவை வேண்டுவோர் "ஆசார சீர்திருத்தம் பத்திராதிபர் வேப்பேரி சென்னை" என்று எழுதி ½-அணா தபால்முத்திரை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி உ.] 1913-ஆம் ஆகஸ்ட்டு [பகுதி அ.

## சித்தாந்தபரிபாஷை என்னும் தருக்கசோபானம்.

சத்தத்தின்கண் இலக்கணையுள்ளது. சக்கிய சம்பந்தமிலக்கணை. சக்கிய மெனின் ஆற்றலா லுணர்த்தப்பட்ட பொருள். அவை யிரண்டுவகை.

கோளணி—குணசம்பந்தி. சிங்கமாணாக்கன். ஈண்டுச் சிங்கத்திற்கே சிங்கசாதிரிசிய விசிட்டத்தின்கண் இலக்கணை.

சுத்தை—இது மூவகைத்து அவையாவன:—

விட்டவிலக்கணை-மொழிக்கியன்ற பொருளைவிட்டுக் குறிக்கப்படும் பொருட் கிடனாய்ப் பிறிதொன்றை விளக்குவது. உ-ம் கங்கைக்கண் இடைச்சேரி.

விடாவிலக்கணை-கருவியின் பெயரே கருத்தாவைக்காட்டி நிற்பது. உ-ம். குதிரையா லவ்வூர்க் கொள்ளையிடப்பட்டது.

விட்டுவிடாவிலக்கணை—சொற்பொருளின் ஏகதேசத்தைவிட்டு ஏகதேசத்திற்குக் கொண்டு கூட்டுள்ளது. அதாவது முன் பார்த்த பொருளையே வேறிடத்திற்பார்த்து 'அதுதானிது' என்னுமிடத்துச் சென்ற காலத்திலும் வேறிடத்திலுமுள்ள அது வென்னும் பொருளும், நிகழ்காலத்திலும் சமீபத்திலுமுள்ள பொருளும் இதுவென்னும் பதத்தின் பொருளுமாம்.

ஆகாங்ஷை—Mutual correspondence அவாய்நிலை. ஒரு பதந்தன்னை முடிப்பதோடு பதமில்லாதவழி முடிவுபெறாது நிற்றல். உ-ம். பசு, குதிரை, புருடன், யானை.

யோக்கியதை—Compatablity—தகுதி. ஒரு பதார்த்தத்தில்மற்றொரு பதார்த்தத்தின் சம்பந்தமின்மை. உ-ம். வன்னியால் நனைக்கின்றான்.

சந்நிதி - Juxtaposition- அண்மை, ஆவைக்கொணா என்றல் முதலியன ஒரு தொடராகக் கூறாது யாமத்திற் கொன்றொன்றாகக் கூறுவது.

வாக்கியமாவது வைதிகம், இலௌகிகமென விருவகை.

வைதிகம் - Divine - இறைவனாற் சொல்லப்பட்டது. முழுதும் பிரமாணம்.

இது மூன்றுவகை, அவையாவன:—

மந்திரகலை - உபாசனா காண்டம்பற்றி மனுதிகளடக்கித் தெய்வம் வழிபடும் வாய்மை.

தந்திரகலை—கருமகாண்டம்பற்றிப் பின்னொடுமுன் மாறாகோளின்றி யனுஷ்டித்தல்.

உபதேசகலை—ஞானகாண்டம்பற்றித் தனக்கு முதலு முடிவுமில்லாத இறைவன் தன்னின் வேறல்லாத எண்குணமுடையனாதல் முதலிய தன்மைகளைத் தானுணருமாறும் பிறர்க்குணர்த்துமாறுந்தெரிவது.

இலௌகிகம்—Human - ஆப்தவாக்கிய மாத்திரம் பிரமாணம். மற்றது பிரமாண மன்று.

ஆகம முடிந்தது.

---

இப்பிரமாணங்கட்கு மேலும் நையாயிகர் உபமானம், அருத்தாபத்தி, அனுபலத்தி யுண்டென்பர். அவையாவன:—

## உபமானம் * ஒப்பு.

### Analogy.

இருபொருளின் றன்மை யுணர்ந்தா னொருவன் அவற்றி லொன்றை யறிந்தானுக்கு மற்றதையு மவனறிந்த பொருட்டன்

* அலங்கார நூலுட் கூறப்படும் உவமானம் அறிந்த பொருளிரண்டினுள், ஒன்றினை யொன்றொடு ஒப்பிட்டுச் சிறப்பிப்பதாம். இந்நூலுவமானம் அறிந்த பொருளை அறியாப்பொருளை யதனோடொப்பிட்டு விளக்குவதாம்.



மையொடு சாத்திக் காட்டலாம். ஆமா என்னுஞ் சொற்குப் பொருளுணராதான் ஆவினை யொக்கும் ஆமா எனக்கேட்டுக் காட்டிற் சென்று ஒப்புமை நோக்கி ஆமா எனத்தீர்மானித்தல்.

இது அனுமானத்தி லடங்கும் என்னை? அது இதற்குச்சரி இதனுடைய ஒப்புண்மையால், எது எதினுடைய ஒப்புள்ளதோ அது அதற்கொப்பாகும் என்றதனால் என்க.

---

## அருத்தாபத்தி—பொருட்பேறு.

### Deduction.

ஒருவன் பகலை விளக்குவது சூரியனென்றுமட்டும் ஒரு பயன் குறித்துச் சொல்லி யொழிந்தால், அதை யறிபவன் இரவை விளக்குவது சந்திரனென்றறிதல். இது வியதிரேக அனுமானத்தி லடங்கும்.

## அபாவம் * இன்மை.

### Negation.

உண்மையென்பது இன்மையென வொன்றிருந்தால் மட்டும் அறியப்படுதலானும், பொய்யென்பதே யறியாத ஒருவனுக்கு மெய்யென்பது இன்னதெனப் புலப்படாதாதலானும் இன்மையும் உண்மையைச் சாதிக்கவே எழுந்ததாம். ஆகவே பொறிக் கிலக்காகா வுள்பொருளி னிலைமையேயாம். இது நான்குவகை. விவரம்:—

பிராகாபாவம்—முன்னின்மை—Anticedent negation. சங்காரமுடிந்த காலத்து இலதாய உலகம் படைப்புக் காலத்து உளதாதல்.

* அபாவம் என்றதற்குச் சூன்யம் அல்லது பாழ் எனப்பொருள் கொண்டு இடர்ப்படுவோர் ஒருபாலார். அபாவம் (பாவம்-உள்ளது. அ-எதிர்மறைப் பொருளுணர்த்தும் இடைச்சொல்) உள்ளதல்ல எனப்பொருள் படுதலின் அவ்வாறு கோடல் பெரிதுங் குற்றமாம். பொறிக்கு இலக்காகா உள்பொருளின் நிலைமையே ஈண்டபாவம். ஆதலினன்றே இதனைத் தருக்கநூலார் நான்கு வகையாய்ப் பகுப்பாராயினர். அபாவம் பாழென்பார்க்குப் பிராகாபாவம் முதலியவற்றிற் பிழைக்காண்டலின் (முன்பாழாயிருந்த பொருள் பின்தோன்றுதல் கூடாமையும், பின்னிருந்த பொருள் பாழாதல் யாண்டுமின்மையும் நன்கறியக் கிடத்தலின்) அது பொருந்தாமை யறிக.

பிரதித்துவம்சாபாவம்—பின்னின்மை-Destruction. படைப்பு முடிந்த காலத்துளதாய உலகம் சங்கார காலத்திலதாதல்,

அத்தியந்தாபாவம் * முழுதுமின்மை—Absolute negation. கோடென வொரு பொருள் ஆடு, மாடு, மான் முதலியவற்றிற் காணப்படினும் முயலினிடத்து இறப்பு, நிகழ்வு, எதிர்வு என முக்காலத்தும் நிகழக் காணாமையாம்.

அந்நியோந்நியாபாவம்:—ஒன்றிலொன்றின்மை Reciprocal Negation. இறைவனை வினைதொடுதலில்லை. வினையையிறைவன் ஜொடுதலில்லை. இப்பாவம் காட்சியிலடங்கும்

இப்பிரமாணங்கட்கு மேலும் பௌராணிகர் பாரிசேடம், சம்பவம், ஐதிகம், சுபாவ முண்டென்பர் விவரம்:—

## பாரிசேடம்—ஒழிவு.

## Inference by exception.

ஐந்து பூதங்களினும் ஓசைக்குப் பற்றுக் கோடாவது எது என வாராயுங்கால் நாற்றத்திற்குப் பிருதிவியும், சுவைக்கு அப்புவும், ஒளிக்குத் தேயவும், ஊற்றிற்கு வாயுவும் பற்றுக்கோடாதலினிதறியப்படுதலின், இவையொழிந்த ஆகாயமே ஓசைக்குப் பற்றுக்கோடென வறிதல், இது உரையனுமானத்திலடங்கும்.

---

## சம்பவம்—உண்மை.

## Coexistence.

முழுப்பொருளைச் சொன்னவிடத்து அதனுள் அதனுறுப்பு மடங்கிக் கிடத்தல். ஆயிரமென்று சொல்லுழி அதனுள் நூறு அடங்கிக்கிடத்தல். இது கேவல அனுமானத்திலடங்கும்

---

## ஐதீகம்—உலகவார்த்தை.

## Tradition.

காட்சியில் அறிய வாராதாயினும். பெரியோர் வாய்ச்சொல்லானும், அவரெழுதிய நூல்களானு மறியப்படுவது. இந்த ஆலிற் பேயுண்டு. இது உரையனுமானத்திலடங்கும்.

---

* இம்மூன்று அபாவங்களையும் சம்சர்க்காபாவ மென்பர்.



## சுபாவம்—இயல்பு.

## Natural Inference.

உலக வழக்கானும், செய்யுள்வழக்கானும் அவ்வவ்வமையத்திற்கியைந்தவாறு பலபொருட் பொதுச்சொல், ஒரு பொருளையே சிறப்புறத்தருவது. குதிரைமீதிருந்தவொருவன் கோல் தாவென்றால் தடிகொணர்ந்து கொடாது குதிரைச்சமட்டியைக் கொடுத்தல். இது காட்சி யனுமானத்திலடங்கும். இது இருவகைத்து விவரம்.

தற்சுபாவம்:—சிறப்பியல்பு. ஒரு பொருட்கு வேறு சாதிப் பொருளினுஞ் செல்லாது தனக்கு மாத்திரையே யுரித்தாய் நிலைபெறுந்தன்மை. மா என்பது ஒரு மரம் அதுதனக் கன்னியமான இருப்பையினுஞ் செல்லாமல் தனக்குத் தலைமை யுண்டாகிய தேமா என்று பெயர் பெறுதல்.

சாமானிய சுபாவம்:—பொதுவியல்பு வேற்றுச் சாதிப்பொருண்மாத்திரையிற் செல்லாது தன்சாதிப் பொருட்கெல்லாம் ஒப்ப நிலை பெறுந்தன்மை. மா என்பது ஒரு மரம் அது தனக் கன்னியமான இருப்பையிலுஞ் செல்லாமல், தலைமையும் பெறுமல் தன்னுடைய மா என்னும் பெயரைப் பெற்று நிற்றல்.

## பிரமாணமுடிந்தது.

ஈண்டு கிளந்தோதிய பத்துவகைப் பிரமாணங்களிலும் சிலவற்றையே பல சமயத்தார் ஒப்புக்கொள்வர். வருமாறு. உலோகாயதர் காட்சியளவை ஒன்றையுமே கொள்வர், பௌத்தரும் வைசேடிகரும் காட்சி, அனுமான மிரண்டையும் கொள்வர், சாங்கியர் இவற்றோடு ஆகமத்தையும் கொள்வர், நையாயிகர் இவற்றோடு உவமானத்தையுங் கொள்வர், சமணரும், பிரபாகரரும் இவற்றோடு அருத்தாபத்தியுங் கொள்வர், வேதாந்திகள் அவற்றோடு அபாவதத்தையுங் கொள்வர், பௌராணிகர் அவற்றோடு சம்பவத்தையும் ஐதிகத்தையுங் கொள்வர்.

(இன்னும் வரும்.)

மணவழகு.

---

# ஆணவமலம்.

(முன்தொடர்பு தொகுதி-2, பகுதி-7, பக்கம்-200:)

"இத்தை விளைத்தன் மலம்."

என்று கூறியருளினர் மனவாசங் கடந்தார். அதுமட்டோ?

"எண்ணரிதாய் நித்தமாயிருண் மலத்தினழுந்தி
யிருவினையின் றன்மைகளுக் கீடானயாக்கை
அண்ணலருளா னண்ணியவை யவரா
யதனாலலகினிகழ் போகங்களருந்து மாற்றாற்
புண்ணியபாவம் புரிந்துபோக்கு வரவுடைத்தாய்ப்
புணருமிருண் மலபாகம் பொருந்தியக்காலருளா
லுண்ணிலவுமொளியதனா லிருளகற்றிப் பாசமுற்றிடுநற்
பசுவர்க்கம் எனவுரைப்பருணர்ந்தே."

என்று அளவில்லாத ஆன்மாவர்க்கம் அனைத்தும் முத்தியடைந்திடும் என்று உமாபதி சிவம் கூறியருளியதும் இவ்வுண்மையைப் புலப்படுத்துமாம். இக்கருத்தை, இந்தத் திருவிருத்தத்தின் கருப்பொருளாகக் காவையம்பலத்தம்பிரான் அருளிச்செய்த

"எண்ணிலா வுயிர்கள் இறந்து பிறந்தொருகால்
நண்ணிடு மரனடி யருளா" லென்றது.

என்னும் குறும்பா ஐயந்திரிபறக் காட்டுமாம்.

இன்னமும் "பெத்தான்மாவை நணுகி நிற்குமாதலாணுசமு பின்றாமே" என்று கூறியருளிய அருணந்தி சிவத்தானே

"எல்லாமாய்த்தத்துவங் களியைந்தெண்ணுவுக்குன்னிற்
றெல்லாய்க்கன்மமெல்லாம் துய்ப்பித்துத்துடைத்தற்கும்பின்
னில்லாமைமுற்றுவித்து நீக்கவுங்கூடிநின்ற
பொல்லாதவாணவத்தைப் போக்கவும்புகுந்தவன்றே."

எனத் திருவாய் மலர்ந்தருளுமுகத்தால் ஆன்மாக்கள் எல்லாம் ஒருகாலத்து முத்திசேர்ந்தொழியும் என்பதே அருணந்தி



சிவத்தின் திருவுள்ளக்கருத்துமாமென்பது தெற்றெனத் துணியப்படும்.

ஆகவே மலம் கெடுமாறின்றி முத்தான்மாக்களை விட்டு நீங்கும் என்பதே சித்தாந்தம் என்பது கண்டு கொள்க.

## மாயை ஆணவம் அல்ல.

ஆணவம் என்பதோர் மலம் உண்டெனக் கொள்ளவேண்டிய தெற்றுக்கு? மாயையே எமது அறிவை மறைத்து நிற்கும் எனின், மாயை ஆன்மாக்களின் அறிவைச் சிறிது விளக்குதலாலும், அங்ஙனம் விளக்காவழி ஆன்மா மூடத்துவம் படைத்துக் கிடத்தலாலும், அந்த மூடத்துவத்துக்கு ஏதுமாயையின் வேறாகிய ஆணவமாம் என்பது செவ்விதிற் போதருமென்க. அன்றியும் நுணித்து நோக்குமிடத்து மாயை புறப்பந்தமும் ஆணவம் அகப்பந்தமும்போல ஆன்மாக்களைப்பந்தித்துநிற்றல் நன்கு புலப்படும். மாயை தன்னிடத்துத் தோன்றிய மாயேயங்களால் ஆன்மாவைப் பிணித்தவழி, அதன் அறிவைச் சிறிது விளக்கி, அங்ஙனம் விளங்கிய அறிவின் கண்ணே அவ்வான்மாவின் மோகாதி குணங்களுக்கு விடயமாய் நிற்றலும்; ஆணவம் ஆன்மாவின் அறிவை மறைத்து, அது மாயேயங்களால் விளங்குமிடத்து அதனை மாயாவிலாசங்களின் மயக்குதலும் உண்மையால், ஆணவம் சூக்குமபந்தமும் மாயை தூலபந்தமும்போல, ஒன்று உள்ளும் மற்றையது புறத்தும் ஆன்மாவைப் பந்தித்து நிற்கும் என்பது காண்க.

## ஆணவத்தை நீக்குவது அருள்.

ஆணவ மலமாகிய இருள், இறைவன் அருளாகிய ஒளி வீசத்தன் வலிகுன்றி அடங்கும். அவ்வருளுக்கு இவ்விருளை ஓரேமுறையிற்றானே நீக்கும் ஆற்றல் இன்றாங் கொல்லோ எனின் கடவுளுடைய வரம்பிலாற்றலாகிய திருவருட்குணத்தை உள்ளபடி விளங்கினால் இவ்வாசங்கை நிகழாது. கடவுள் வரம்பிலாற்றல் உடையர் என்பதனால் அவ்வாற்றல், நிகழ்ச்சியமைதல் கூடாத அசம்பாவிதங்களையும் செய்துமுடிக்கவல்லது என்பது போதாது. கடவுளுடைய வரம்பிலாற்றல் ஒன்றைச்

சூனியமாக்க மாட்டுமோ? இரண்டு சமரேகைகொண்டு ஒரு முக்கோணத்தை அமைக்க மாட்டுமோ? கடவுளது வரம்பிலாற்றல் நிகழுந்தகுதியுடைய செயல்களிலன்றி அத்தகுதி யில்லாத அசம்பாவிதங்களிற் சென்று தொழிற்படு மென்றல் அபத்தமாமென்க. இயலுந்தகுதியில்லாதன இல்பொருளாய் "எல்லாம்" என்னும் சொற்பொருளில் அடங்கிய உள்பொருள்களுள் ஒன்றாக மாட்டாது. ஆகவே கடவுள் "எல்லாம் வல்லார்" என்னுமிடத்து அவ்வன்மை இப்பொருள்களாகிய அசம்பாவிதங்களிலும் சென்று தொழிற்படுமென வாதித்தல் நியாயநெறிக்குச் சிறிதும் அடாதென்பது காண்க. மலநீக்கம் அருட்டரிசனத்தாலன்றி அமையாதாதலின் அவ்வருட்டரிசனம் சித்திக்கப் பெறாதார்க்கு மலத்தை போக்குதல் கடவுளும் செய்யத்தக்க தொன்றன்றாம். இவ்வருட்டரிசனம் அவ்வவர் பக்குவத்தளவாகவே சித்திக்கு மாதலால், அப்பக்குவத்தை ஒட்டிக் கடவுள் ஆன்மாக்கட்குத் திருவருளைத்தரிசிப்பித்து, அதுவாயிலாக அவர்களது ஞானதிருட்டியைப் படிமுறையாக விளக்கித், தமது திவ்விய பரம் சொரூபநிலையை உள்ளவாறு காட்டியருளுவர். இதனைக்காணவே ஆன்மாக்களது மலபந்தமும் விண்டொழியுமென்க.

இவ்வாணவ பந்தத்தைக் குறித்த உண்மைத்துணிவுகள் எல்லாம் குருமுகமாக அறியற்பாலனவன்றி எமது சிற்றறிவாற்றல் கொண்டு அளக்கத்தக்கன வல்ல. அங்ஙனம் அளக்கத்துணிவது பராயமாதன் முன் பழுத்த பழத்தை நிகர்க்குமென்க.

யாழ்ப்பாணம் - சபாரத்தினமுதலியார்.

# தமிழ்மொழியும் சிவநெறியும்.

(முன்தொடர்பு தொகுதி 2, பகுதி 7, பக்கம் 204).

பிள்ளைகள் நெடுங்கணக்குப் படித்துப் பின்னர் முதற்பாடம் இரண்டாம் பாடம் முதலிய ஏடுகள் படித்து மெட்ரிகுலேஷன் பரிட்சைக்குரிய பாடங்கள் படித்துத்தேறிப் பின்னர் பி.ஏ.எம்.ஏ. முதலிய பரீக்ஷைகளுக்குப் படித்துத்தேறி ஆசிரியராதல்போல வெவ்வேறு கீழ்ப்படி மதங்களைப்பற்றி அவ்வவற்றிற் பெறத்தக்க அறிவடைந்து, பல ஜன்மங்களில் சித்த சுத்தியடைந்து சிவஞான மெய்தி முத்தியடைவர்.

எம். ஏ. பரீட்சையிற் றேறுதற்கு ஒவ்வொரு வகுப்புப் பாடங்களும் எப்படித் தள்ளத்தகாத அத்தியாவசியமும் பயன் படத்தக்கனவுமாகுமோ அப்படியே ஒவ்வொரு மதங்களாகிய சோபான மார்க்கங்களும் தள்ளத்தகாத பயனுடையனவேயாம். ஆதலால் கன்மபரிபாகத்தால் பல திறப்பட்ட அனந்தகோடி ஜீவர்களுக் குபயோகமாம்படி உலகத்திற் பல்லாயிர மதங்களிருக்கப் பரமன் கற்பித்திருக்கின்றனன். ஆதலால் ஒருமதமும் எள்ளத்தக்கதன்றென்று கருதி அறிவதே அறிஞர் முடிவு. சைவசித்தாந்தத்தின் உண்மைத்துணிவு மஃதே.

திரு. நா. தேவாரம்.

விரிவிலா அறிவினோர்கள் வேறொருசமயஞ்செய்தே
எரிவினாற்சொன்னாரேனு மெம்பிராற்கேற்றதாகும்.

சிவஞான சித்தியார்.

யாதொருதெய்வங்கொண்டீ ரத்தெய்வமாகியாங்கே
மாதொருபாகனாரேவந்தருள்புரிவர்.

சாந்தோக்கியம்.

"யதாயதோ பாஸதே ததைவபவதி"
"எப்படி எப்படி உபாசிக்கின்றனன், அப்படியே ஆகின்றனன்".

திருவாய்மொழி.

தமருவந்ததெவ்வுருவவ்வுருவந்தானாய்த்
தமருவந்ததப்பேரப்பேர்-தமருவந்த

தெவ்வண்ணஞ்சிந்திப்பதியையா திருப்பரேல்
அவ்வண்ணமகிழ்வோ னும்.

என்ற சுருதிகளும் அவ்வுண்மையை வற்புறுத்துகின்றன. ஆதலால் மதத்துவேஷங்களை யொழித்தல் நமது கடமையேயாம்.

எக்காலத்தும் எவ்விடத்தும் எந்தத்தொழில் செய்யும்பொழுதும் பரமேசுவரனைத் தியானித்தலும் எல்லா உயிர்களையும் தன்னுயிர்போலெண்ணி அவைகட்கு நன்மைபுரிதலும் தீமை செய்யாமையும் சைவர்க்கு இன்றியமையாத செயல்களாம். படித்தவர்களும் பெரிய உத்தியோகமுஞ் செல்வமுடையவர்களுந் தாம் கடவுளை வணங்கலாம். எளியவர்களுக்குப் போதுமான அவகாசமின்மையால் அவர்கடவுளைத் தியானஞ்செய்ய முடியாதென்றெண்ணற்க. மன உழைப்புடையரைக் காட்டிலும் தேக உழைப்புடைய வேலைக்காரர்க்கு அவகாசமுண்டு, உதாரணமாக மூட்டை சுமப்பவன் எனது (பாவச்சுமை) அஞ்ஞானச்சுமைகளை ஒழித்தருள வேண்டுமென்று தியானித்துக்கொண்டு செல்லலாம். அதனால் தெய்வபக்தி யுண்டாவதோடு பாரந்தெரியாமையு முண்டாம்; மண் வெட்டுபவன் இவ்வாறு என் ஆணவம் தீயகன்மங்களை வெட்டியொழிக்க வேண்டுமென்று தியானித்துக்கொண்டு வெட்டலாம். குப்பை தூர்க்கிறவன் இவ்வாறு என் பாசக்குப்பைகளை விலக்க வேண்டுமென்றும், கரிச்சட்டி கழுவுபவன் இவ்வாறு என் அஞ்ஞானக்கரியைக் கழுவவேண்டுமென்றும் கடவுளைத் தியானிக்கலாம். மன உழைப்புடையவன் அவன் தொழிலை நிறுத்தி யொருதியானத்தில் மனஞ் செலுத்தவேண்டும். உடல்வேலை செய்பவன் வேலை செய்யும்பொழுதே மனதிற் கடவுளைத் தியானிக்கலாம்.

சிவன் எல்லா உயிர்களிலும் நிறைந்த அந்தரியாமியாதலால் உயிர்களனைத்தும் அவன் கோவில் அதுபற்றி அவன் வீற்றிருக்கும் கோவிலுக்கு எவ்வாற்றானும் இடுக்கண் விளைத்தல் கூடாது. இக்கருத்தானே பிறவுயிர்கொன்று ஊன் தின்னலைச் சைவநெறி மறுக்கின்றது.

## திருநீறு.

திருநீறு, கண்டி இரண்டும் சிவசின்னங்களெனப் படுகின்றன. சர்வப் பிரபஞ்சங்களையும் இறுதியில் சங்கரித்து எல்லாமொடுக்கிய காலத்தில் எஞ்சிநிற்பவன் சிவன் ஒருவனே.



ஆதலால் திருநீறு சர்வசங்காரக் கடவுளை நினைப்பூட்டுகின்றது. திரிபுண்டரமாகத் திருநீறிடும்பொழுது மும்மலங்களையும் நீற்றி யிவ்வாறு நீறுக்கவேண்டுமென்று நினைந்து ஐந்தெழுத்தை யோதி முறைப்படி திருநீறிடவேண்டும்.

திருநீறு மும்மலங்களையு மொழிந்து ஆயுளும் செல்வமும், அறிவும், கொடுக்குந் தன்மையுடையது. வைத்திய முறையாய் நோக்கில் விபூதி உத்தூளநம் அவகுண்டநம் (நீர் கலந்து உடலிற் பூசல்) திரிபுண்டரம என்ற தாரணங்கள், உடம்பிற்படும் நோய்ச் சிற்றுயிர் தொற்றுநோ யச்சிற்றுயிர்களையும் கொல்லும். உட்கொள்ளும்பூதி வாயினுட்சென்ற புழுக்களைக்கொல்லும் புழுக்களால் உண்டாகும் நோய்கள் வாராமற்காக்கும். உதாரணமாக வித்துகள் புழுக்காமல் அல்லது உளுக்காமல் இருப்பதற்கு சாம்பல்சேர்த்து வைத்தலும், புழு, அசுகுணி முதலியன வுண்டாகிய அவரை, புடல், பீர்க்கு முதலிய படர்கொடிகளுக்குச் சாம்பல் தெளித்தலும் அதனால் அவை நீங்கி நல்லபலன் தரலும் வாராமற் காத்தற்கும் வந்தபின் நீக்கற்கும் போதுமான சான்றுகளாம்.

## கண்டிகை.

ருத்திராக்ஷம் மகா உருத்திரனது கண்போன்றது. அவற்றையணிந்து கொள்வது நாம் அவனருட் கண்பெற வேண்டுவதைக் குறிக்கின்றது. கண்டியின் தாரணத்தால் தேகசுகமும் நல்லறிவும் செல்வமும் சிவனருளும் உண்டாம். வைத்திய முறையாய் நோக்கில் கண்டியில் உயிர்ச்சாரசக்தி (Human Magnetism) உளதால் அதை யணிவார்க்கு உயிர்ச்சாரசக்தி மிகுத்துத் தேகத்துக்கும் மூளைக்கும் பலமுண்டாகி ஆயுளும் நீளும். இரத்த சுத்தியும் நோய் நீக்கமும் உண்டாம். உதாரணமாக, பலவிடங்களில் மகம்மதியரும், கிறிஸ்தவரும்கூட சிலநோய்கள் வாராமற் காத்தற்கும் நீக்கற்கும் ருத்திராக்ஷத்தை இரக்ஷாபந்தனம் போலக் குழந்தைகளுக்குக் கட்டி வருகின்றனர். நல்ல பலனையு மடைகின்றனர். வைத்தியர், ஜன்னி நாவரட்சி மயக்கம் முதலியவைகட்கு அதனும் கண்டாவிழ்தஞ் செய்துகொடுத்து நல்லகுணங் காண்கின்றனர்.

இவ்விருதாரணங்க ளுடையாரைக் காணுந்தோறும் அவற்றைத் தரிக்குந்தோறும் தெய்வ நினைப்புண்டாவதும் பாராட்டத் தக்கதே.

ஐந்தெழுத்து.

இச்சைவ சமயம் ஒருஜாதியார் அல்லது தேசத்தாருக் குரியதன்று. மனித ஜாதியார் அனைவர்க்கும் பொது. அறுபத்துமூன்று நாயன்மார்களின் வகுப்புகளைக் கருதினால் அவ்வுண்மை விளங்கும். கடவுளை அடையும் நன்னெறிகள் சிலர்க்குரியனவென்றும், சிலர்க்குரியன வன்றென்றும் கூறல் எவ்வளவறியாமை. கடவுட்குரிய அளவில் பெயர்களில் சிவன் என்பது எங்கும் நிறைந்தவன் என்று குறிக்கின்றது.

அது நெடுநாட் பலரால் தழுவப்படலானும் தென்மொழி வடமொழி, மறையாகமங்களிலும், வழக்கிலும், சிறந்து வழங்கப்படுகின்றது. பிற்காலத்து நமச்சிவாயன் என்ற பெயரும் வழங்கியது. அப்பெயர்கள் ஐந்தெழுத்தென்றே கொள்ளப்படுகின்றன.

தேவாரம்.

"பாத்திரஞ்சிவமென்று பணிதியேல்"
"வேதம்நான்கினு மெய்ப்பொருளாவது
நாதனாம நமச்சிவாயவே."

என்ற சுருதிகள் அக்கருத்தை விளக்குகின்றன.

அடியார்வணக்கம்.

மக்கள் அனைவரும் சிவபிரான் பிள்ளைகள், ஆதலால் அவ்வனைவரையும், நான் உடன்பிறந்தாராய்க் கொள்ளல்வேண்டும். அவருள்ளும் சிவபக்தர் யாவராயினும் அவர்பால் நாம் மிக்க அன்பு செலுத்தல்வேண்டும்.

(இன்னும் வரும்)

மறைத்திருவன் விருதை சிவஞானயோகிகள்.

## சிவஞானபோத முதனூல் விளக்கம்.

அத்தியாயம். III

ஐயவினாக்களின் தெளிவு.

(முன் தொடர்பு தொகுதி 2, பகுதி 7, பக்கம் 208).

தமிழ்மொழியினின்றுமே உலகத்துள்ள எல்லா பாடைகளும் உண்டாயின வென மறுக்க வொண்ணாத முறையில் ஸ்ரீமான் கார்த்திகேய முதலியார் "மொழிநூல்" என்னும் தமது நூலின்கண் கூறியிருக்கின்றார். அம்மொழி நூலைப்பார்க்குமிடத்துச் சிவபெருமானுடைய திருவருளின்றி முடியாதகாரியம் என ஒவ்வொருவருக்கும் தோன்றாநிற்கும். சிவபெருமான் இவருக்கு நீண்ட ஆயுளைத்தந்து இன்னும் அநேக நூல்களைச்செய்விப்பாராக. மேற்சொன்ன மொழிநூலும் நம்கொள்கையை வலியுறுத்தும்.

ஆகையால், தமிழ்மொழியே ஆதியில் சிவபெருமானால் அளிக்கப்பட்டதென்றும், தமிழ் வேதாகமங்களே சிவபெருமானால் சொல்லப்பட்டவையென்றும், சனகாதிகளுக்குத்தென்முகக்கடவுள் கூறியதும் (ஆதியில் வேறுபாஷையின்மையால்) தமிழ்ச் சிவஞானபோதமே யென்றும், அச்சிவஞான போதம் வழி வழி முறையாக இப்போது நமக்குக்கிடைத் திருக்கின்றது என்றும், சனகாதிகளுக்கும் ஏனையோர்களுக்கும் தென்முகக் கடவுள் உரைத்தது வடமொழிச் சிவஞானபோதம் என்று சிலர் கொண்டகொள்கை வலியற்றது என்றும் காட்டினோம்.

அத்தியாயம். IV

இரண்டாவது வினாவுக்கு விடை.

இனி இரண்டாவது ஆசங்கையை விவகரிப்பாம்.

வடமொழிச் சிவஞானபோதம் இரௌரவாகமம் பாசவிமோசனப்படலத்தில் உள்ளது என்பது.

ஆதியில் சிவபெருமான் வேதாகமங்களைத் தமிழிலேயே சொன்னார் எனமுன்னமே காட்டினோம். ஆகையால், அப்படிச்

சிவபெருமான் இரௌரவாகமத்தில் சொல்லியிருந்த போதிலும் அது தமிழில் தான் சொல்லியிருக்க வேண்டும்.

ஆரியர்களுடைய வேதமாகிய இருக்கு வேதம் அவர்கள் சிந்து நதிதீரத்தில் குடியேறின பிற்பாடு எழுதப்பட்டது. மற்ற மூன்று வேதங்களும் ஆரியாவர்த்தம் ஏற்பட்டபிற்பாடு எழுதப்பட்டன. உபநிஷத்துக்கள் தென்னாட்டுத் தமிழருடன் கலந்த பிற்பாடு எழுதப்பட்டன. ஆகமங்கள் அந்த உபநிஷத்துக்களுக்குப்பின் (அதாவது தென்னாட்டிற்கு ஆரியர்கள் வந்து கிரந்தலிபி ஏற்படுத்திக் கொண்ட தன் பின்) எழுதப்பட்டன.

ஆரியர்கள் தமிழ் அரசர்களைக் கைவசப்படுத்திக்கொண்டு ஆண்டுவருங் காலத்தில் கோவில்களில் பூசைபுரியவும் வீடுகளில் புரோகிதம் முதலியன செய்யவும் ஆரம்பித்தார்கள். அக்கோவிற்கிரியைகளும் மனைகளில் நடக்கும் கிரியைகளும் தமிழர்களுடைய வழக்கப்பிரகாரம் நடத்திவைத்துப் பொருள் சம்பாதிக்க முயன்ற ஆரியர்கள் தமிழர்களுடைய ஆகமங்களைக்கேட்டு கிரந்தத்தில் எழுதிக்கொண்டு செய்ய ஆரம்பித்தார்கள். அப்படி எழுதின ஆகமங்களே இப்போது உள்ளன.

பிறகு, ஆரியர்காலத்தில் ஆரியம் கற்ற தமிழர்கள் அவர்களுடன் சேர்ந்து கிரந்தத்திலேயே ஆகமங்களுக்கு விருத்தியெழுதினார்கள். தமிழில் இந்த மூலாகமங்கள் எல்லாம் இறந்துபட்டன.

ஆகையால், இரௌரவாகமம் அப்படி ஆரியர்கள் தமிழாகமத்தினின்றும் மொழிபெயர்த்ததே.

ஆகையால், அவ்வாகமத்தில் அப்பன்னிரண்டு சூத்திர மொழிபெயர்ப்பு இருந்தாலும் முதனூல் ஆகமாட்டாது.

இரௌரவாகமம் பாசவிமோசனப்படலத்தில் அப்பன்னிரண்டு சூத்திரங்களும் இல்லையென்பது எமது துணிபு. ஏனென்றால், சிவபெருமான் வேதாகமங்களை வெளிப்படுத்தினார். அவ்வேதாகமங்களை யெல்லாம் சனகாதிகள் கற்றவர்களே; கல்லாதவர்கள் அல்ல; அப்படி அவ்வாகமங்களில் ஒன்றாகிய இரௌரவாகமத்தில் அப்பன்னிரண்டு சூத்திரங்களும் இருந்திருந்தால் அவர்கள்கற்றிருப்பார்கள். ஆகையால் இல்லையென்பதே துணிபு.



சனகாதி முனிவர்கள் வேதாகமங்களைக் குற்றமறக் கற்று அவற்றினின்றும் உண்மை தேறமாட்டாதபடியால் சிவபெருமானை நோக்கித் தவங்கிடக்க அவர்கள் எல்லாரும் எளிதில் உணரும் வண்ணம் சிவஞானபோதப் பன்னிரண்டு சூத்திரங்களையும் திருவாய்மலர்ந்தார்.

மேலும், பாருங்கள் தென்முகக் கடவுள்கையில் வைத்திருப்பது சிவஞானபோதம் புத்தகமே யொழிய இரௌரவாகமம் அன்று அப்படி இரௌரவாகமம் பாசவிமோசனப் படலத்திலிருந்தால் ஆகமமன்றோ கையில் வைத்திருக்க வேண்டும். சிவஞானபோதப் புத்தகத்தைத் தனியாக வைத்திருக்கக் காரணம் சிறிதும் இல்லையே.

ஆகையால் அப்பன்னிரண்டு சூத்திரங்களும் ஆகமத்தில் உள்ளனவல்ல என்பது தெளிவாம்.

அல்லது, சனகாதிகள் நாம் ஆகமங்களையெல்லாம் பார்த்தோம், இரௌரவாகப் பாசவிமோசனப் படலத்தையும் பார்த்தோம், அப்படலத்தின் கண்ணுள்ள 12 சூத்திரங்களையும் பார்த்தோம், அச்சூத்திரங்களின் பொருள் விளங்கவில்லை எனக் கூறினார் என்றும் கேட்கிறோம் இல்லை. உண்மையாகவே ஆகமங்களில் அச்சூத்திரங்கள் இருந்திருந்தால் அல்லவோ அத்தன்மையான கடாநிகழும். ஆகையால் இரௌரவாகமம் பாசவிமோசனப்படலத்தில் உள்ளனவென்று கூறுவது தவறு என்பது சித்தாந்தம்.

---

## அத்தியாயம். V

### மூன்றாவது வினாவுக்கு விடை.

தமிழ்ச் சிவஞானபோதம் வடமொழிச் சிவஞானபோதத்தின் மொழிபெயர்ப்பு என்பது.

மெய்கண்டாராவது, அவர் மாணாக்கர்களாவது, அல்லது அவர் பரம்பரையில் வந்தவர்களாவது சிவஞானபோதத்தை மொழிபெயர்ப்பு நூலென்றும் அல்லது பரஞ்சோதிமுனிவர் உபதேசித்தது வடமொழிச் சிவஞானபோதம் என்றும் ஓரிடத்தும் ஒருகாலத்தும் கூறவேயில்லை.

அப்படியிருக்கப் பிற்காலத்துப் பதிப்பாசிரியர்கள் தங்கள் மனம்போன போக்கெல்லாம் வடமொழியில் முதனூல் உண்டு என்று சொல்லாவிட்டால் அகௌரவம் என்று எண்ணிக் கற்பனையாகக் கூறியதே தவிரவேறன்று.

மேலும், மெய்கண்டார் சொன்ன தமிழ்ச்சிவஞானபோதம் வடமொழி இரௌரவாகமம் பாசவிமோசனப்படலத்தில் இருந்து மொழிபெயர்த்தது என்று கூறுபவர்கள், அவ்வடமொழிச் சிவஞானபோதத்தையேனும் பார்த்தது உண்டோ என்றால் அதுதானும் இல்லை.

ஏனென்றால் வடமொழிச் சிவஞானபோதத்தில் கடைசிச் சூத்திரத்தில்

"ஏவம்வித்யா சிவஞான போதே
சைவார்த்த நிர்ணயம்"

என்று கூறப்பட்டிருக்கிறது.

அதனுடைய தாற்பரியம் என்னவென்றால் "மேலே சொன்ன சங்கதிகள் சிவஞானபோதத்தில் சைவார்த்தமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன" என்பதே

ஸ்ரீமெய்கண்டசந்தான பரம்பரை ஞானப்பிரகாச தேசிக குரு சுவாமிகள் அவர்கள் திருமடத்தில் உள்ள ஸ்ரீ ஞானப்பிரகாசரால் செய்யப்பட்ட 'சிவஞானபோத விருத்தி'யில் 12ம் சூத்திரத்துக்கு அடியில் வருமாறு கூறப்பட்டிருக்கிறது. (இவ்விருத்தி இன்னும் அச்சாக வில்லை.):—

12-ம் சூத்திரம். (பொ—ரை.) முத்தியின் பொருட்டு சதாகுருவும் சாதகப்புத்திர சமயிகளாகிய சங்கமரும் என்கிற நல்லோர்களை அடைந்து வேடத்தையும் ஆதாரலக்ஷணையினாலே வேடமெனப்பட்ட வேடதாரிகளாகிய அவர்களையும், ஆதாரலக்ஷணையினாலே இலிங்கத்தையும் பிரதக்ஷிண நமஸ்காரமுதலியவற்றாலே சேவிப்பானுகை. இப்படியே சிவஞான போதத்திலே சைவப் பொருட்டுணிவை அறிக.

(இன்னும் வரும்.)

அடிசைகிழார் அ. சிதம்பரனார்.

---

# அறுவகைச்சமயம்.

(முன்தொடர்பு தொகுதி 2, பகுதி 7, பக்கம் 220.)

இம்மதத்தினரின் கொள்கை இத்தகையதென்பது,

பரமேதுவினைசெயும்பயனேதுபதியேதுபசுவேதுபாசமேது
பத்தியேதடைகின்றமுத்தியேதருளேதுபாவபுண்ணியங்களேது
வரமேதுதவமேதுவிரதமேதொன்றுமிலைமனம்விரும்புணவுண்டுநல்
வத்திரமணிந்துமடமாதர்தமைநாடிநறுமலர்சூடிவிளையாடிமேற்
கரமேவவிட்டுமுலைதொட்டுவாழ்ந்தவரொடுகலந்துமகிழ்கின்றசுகமே
கண்கண்டசுகமிதேகைகண்டபலனெனுங்கயவரைக்கூடாதருள்
தரமேவுசென்னையிற்கந்தகோட்டத்துள்வளர்தலமோங்குகந்தவேளே
தண்முகத்துய்யமணியுண்முகச்சைவமணிசண்முகத்தெய்வமணியே."

என்னும் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளின் அருமைத் திருவாக்கால் இனிது புலப்படுகிறதன்றோ? இத்திருவாக்கில் உலகாயத மதத்தினர்களின் கொள்கை கூறப்பட்டிருத்தலோடு, அவர்களுடைய கூட்டுறவு கூடாதென்று வற்புறுத்தப்பட் டிருப்பதையும் காண்க.

"உலோகாயதனெனுமொண்டிறற்பாம்பின்
கலாபேதத்தகடுவிடமெய்தி
யதிற்பெருமாயையெனைப்பலசூழவும்."

என்று ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியிருக்கும் பாசுரத்தில் உலகாயதமதத்தை பாம்பிற்கு ஒப்பிட்டிருப்பதானது அம்மதத்தின் தாழ்வையும், அம்மதக்கொள்கைகளால் விளையும் தீமையையும் சூசிப்பிக்கிறது.

இவ்வுலகாயத மதத்தினர்; தேகான்மவாதிகள், இந்திரியான்மவாதிகள், பிராணான்மவாதிகள், அந்தக்கரண ஆன்மவாதிகள் எனப் பலவகைப்படுவர்.

தேகத்தின் வேறாய் ஆன்மா வேறு உண்டென்று கொள்வதற்கு, உடம்பின் கண்ணன்றி அறிவு நிகழக்காணாமையானும், "நான் அறிந்தேன்" "நான் பருத்தேன்" "நான் இறுத்தேன்" என்னும் பிரயோகங்களில் "நான்" என்னும் பதம் உடம்பினையே

உணர்த்துதலானும், பிரத்தியக்ஷப் பிரமாணத்தைத் தவிர வேறு பிரமாணங்கள் கொள்ளற்பாலன வல்லவாதலானும் "தேகமே பிர்மம்" என்று தேகான்மவாதிகள் கூறுவார்கள்.

"தேகமே பிர்மம்" என்று கூறுவதை மறுத்து "இந்திரியங்களே பிர்மம்" என்று வாதிப்பது "இந்திரியான்ம வாதிகள்" கொள்கையாகும். மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் பஞ்சேந்திரியங்களின் வழியாயன்றி அறிவுநிகழக் காணாமையானும், இந்த ஐந்து இந்திரியங்களும் முறையே விஷயங்களைப் பரிசித்தும், ருசித்தும், கண்டும், முகர்ந்தும், கேட்டும் தனித்தனி அறியும் ஆற்றலுடையவைகளாய் இருக்கின்றமையானும் "இந்திரியங்களே பிர்மம்" என்று இவர்கள் காரணங்கூறுவார்கள். இந்திரியங்களிருந்தும், பிராணவாயு அடங்கி நடக்கும் உறக்கத்தில் இந்திரியங்களுக்கு அறியும் சக்தி இன்மையானும், பிராணவாயு விரிந்துசெல்லும் சாக்கிரத்திலேயே அவை அறிகின்றமையானும் "இந்திரியங்கள் பிரமமாகாது, பிராணனே பிரமம்" என்று கூறுவது "பிராணான்ம வாதிகள்" கொள்கையாகும்.

பிராணன் இயங்கிக்கொண்டிருந்தபோதிலும் அயர்ந்து நித்திரையில் அறிவு நிகழப்பெறாமைக்குக் காரணம், அதனோடு உடன்சேர்ந்தறிவதாகிய கருவிகள் இன்மையேயாதலால் பிராணனுக்கு வேறாயுள்ள மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் "அந்தக்கரணங்களே பிரமம்" என்று "அந்தக்கரண ஆன்மவாதிகள்" தங்கொள்கை சாதிப்பார்கள்.

"என் உடம்பு" "என்கை" என்று மக்கள் வழங்குகின்றார்களேயன்றி "நான் உடம்பு" "நான்கை" என்று வழங்குகின்றார்களில்லையாதலானும், நிலம் நீர் அனல் கால் என்னும் நான்கு பூதங்களும் சடப்பொருளாதலால் அவற்றின் கூட்டுறவாகிய தேகமும் சடப்பொருளேயாம் என்பது இனிது பெறப்படுதலானும், பாக்கும் வெற்றிலையும் சுண்ணமும் சேரும்போது பாக்கினிடத்தில் முன் மறைந்திருந்த செந்நிறம் வெளிப்பட்டுத் தோன்றுகிறதேயன்றிப் புதுவதாக வந்து சேரவில்லை என்னும் உண்மை, "இல்லாத ஓர் பொருளிலிருந்து உள்ளதோர் பொருள் திடீரென்று தோன்றாது; உள்ளதோர் பொருள் திடீரென்று சூன்யமாய்ப்



போகாது" என்னும் தருக்கநெறி அறிந்தார்க்கு ஒப்பமுடிந்தமையின் சடப்பொருள்களான நாற்பூதக் கூட்டுறவிலிருந்து சித்துப் பொருளான ஆன்மா தோன்றுமென்று கூறுதல் வழுவாமாதலானும் "தேகமே பிரமம்" என்று கூறுவது பொருந்தாது என்று சைவசித்தாந்தம் கூறி, "தேகான்மவாதி"களை மறுத்து "உடம்பின்வேறாய் உயிர் உண்டு" என்னும் உண்மையை நிலைநாட்டுகிறது. மேலும், தேகமே ஆன்மாவானால் இறந்துபோன சரீரத்திலும் நாற்பூதக் கூட்டுறவு கெடாதிருப்பதால், பிணத்திற்கும் அறிவு நிகழவேண்டுமன்றோ? ஆனால் அங்ஙனம் நிகழாமையால் தேகத்திற்கு வேறாய் உயிர் உண்டு என்பது துணியப்படும். இவ்வுண்மை,

"உடலின்வே றுயிரேன்? இந்தவுடலன்றோ வுணர்வதென்னில்
உடல்சவமானபோதும் உடலிலுக்குணர்வுண்டோதான்
உடலினில்வாயுப்போனால் உணர்ச்சியின் றுடலுக்கென்னில்
உடலினில்வாயுப்போகா துறங்கத்துமுணர்வதின்றே."

என்னும் சிவஞானசித்தித் திருவாக்கால் வலியுறுத்தப்படுகிறது.

இங்ஙனமே, இந்திரியான்ம வாதமும், பிராணான்ம வாதமும், அந்தக்கரணான்மவாத மும்முறையே,

"அறிவந்தம்பொறியேயென்னில் உறக்கத்தில்அறியாவாகும்
அறிவதுமொன்றொன்றாக ஒன்றொன்றறியவதென்னில்
அறிவுகள்ஒன்றையொன்றங்கு அறிந்திடா ஐந்தையுங்கொண்டு
அறிவதுஒன்றுண்டுஅதுஆன்மா, ஐம்பொறிஅறிந்திடாவே."

"அறிந்திடும்பிராணவாயு அடங்குதல்விடுதல்செய்தால்
அறிந்திடாதுடல், உறக்கத்தறிவின்மை காரணமின்மை
அறிந்திடுமுதலியாகினதுநிற்கக் காரணமேபோகாது
அறிந்திடும்பிராணன்றன்னை அடக்கியும்விட்டும்ஆன்மா."

"உணர்வனகரணமென்னில் ஒன்றையொன்றுணராவெவ்வேறு
அணைதருஞ்செயல்கள்நான்கும் அறிந்தவையடக்கியாக்கிப்
புணருமுட்கரணமாக்கிப் புறக்கருவியினும்போக்கி
இணைதருமிவற்றின்வேறா யானெனதென்பதான்மா."

என்னுந் திருவாக்குகளால் மறுக்கப்படுதல் காண்க.

இனி, இவ்வுலகாயத மதத்தினர்கூறும் "நாற்பூதக்கூட்டுறவினால் பிறப்பதே ஆன்மா" என்னும் கூற்றை மறுப்பதற்கு அவர்களுடைய உவமானமே சித்தாந்திகளுக்குப் போதிய கருவியாய் அமைவது விந்தையினும் விந்தையாம். சுண்ணாம்பும் வெற்றிலையும் பாக்கும் சேர்ந்தவழி செந்நிறம் பிறத்தல்போல், நிலநீரனல் காலாதிய நாற்பூதங்களும் சேர்ந்தவழி உண்டாவதே ஆன்மா என்பது இவர்கள் காட்டும் உவமானமாகும். பாக்கில் இயல்பாகவே மறைந்துள்ள செந்நிறம் சுண்ணமும் வெற்றிலையும் கூடிய வழி புலப்பட்டுத் தோன்றுகிறது. அதுபோலவே நாற்பூதங்கள் சேர்ந்தவழி அவற்றில் மறைந்துள்ள குணப்பொருள் புலப்பட்டுத் தோன்றுமென்றால் பொருந்துமே ஒழிய புதுவதான குணிப்பொருள் தோன்றுமென்றால் பொருந்தாது. மேலும், சடப்பொருளான நாற்பூதங்களிலிருந்து சித்துப்பொருளான ஆன்மா தோன்றுமென்றால் எவ்வாற்றானும் பொருந்தாது. ஆகவே, சடப்பொருள்களான நாற்பூதங்களின் வேறாய்ச் சித்துப்பொருளான ஆன்மா என்பது ஒன்றுண்டு. இவ்விதம் சித்தாந்தம் ஆன்மாவின் இருப்பை ஸ்தாபித்ததோடு, பாக்கையும் வெற்றிலையையும் சுண்ணத்தையும் ஒன்றுசேர்த்தற்கு ஒருவன் வேண்டப்படுதல்போல, சடப்பொருளான நாற்பூதங்களை ஒன்றுசேர்த்து உடம்பாக்குதற்கு ஒருகர்த்தா வேண்டும் என்று கூறி, ஆன்மாவின் வேறாய்ப் பதிப்பொருள் ஒன்றுண்டு என்னும் உண்மையையும் புலப்படுத்துகிறது. இவ்விஷயத்தை இன்னும் விரிப்பிற்பெருகும்.

(இன்னும் வரும்.)

நாகை—வி. கோபாலகிருஷ்ணன்.

# அன்பு.

"அன்புஞ் சிவமுமிரண்டென் பரறிவிலர்
அன்பே சிவமாவ தாரு மறிகிலர்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந் திருப்பாரே."

1. அன்பு என்பது நம் உள்ளத்திலெழும் ஓர்வகையுணர்ச்சி. இவ்வுணர்ச்சி நமக்கு விஷயமாகும் பொருள்களால் உண்டாவது. சிற்சில பொருள்களை நாம் விரும்புகிறோம். வேறு சில பொருள்களை நாம் வெறுக்கிறோம். எனவே நம் உள்ளத்திலெழும் உணர்ச்சி, இருவகையினதாய் முடியும். அவை விருப்பஉணர்ச்சி வெறுப்புணர்ச்சி யென்பன. இவ்விருப்ப உணர்ச்சியே 'அன்பு' என்னுஞ் சொல்லால் வழங்கப்படும். இவ்வுணர்ச்சி, சடப்பொருள்கள் மாட்டுஞ் செல்லும். உயிருடைப்பொருள்கள் மாட்டுஞ்செல்லும். மனித உயிர்கள் மாட்டுஞ்செல்லும். மற்ற உயிர்கள் மாட்டுஞ் செல்லும். இவ்வாறு நம்பிரியம் அல்லது அன்பு நிகழ்தற்குக்காரணம், அவ்வப்பொருள்களின் றன்மைகளே. அத்தன்மைகளென்னையென விசாரிப்பாம்.

2. ஓர் நல்ல உருவத்தைப்பார்க்கிறோம். அது நம் கண்ணுக்கு நல்ல காட்சியின்பத்தைத் தரும். அதன் பால் நம்பிரியம் நிகழும். ஓர் நல்ல புட்பத்தைப்பார்க்கிறோம். அது நல்ல வாசனையின்பத்தைத்தரும். அதன்பாலும் நம்பிரியம் நிகழும். அப்படியே நல்ல சுவையின்பத்தைத் தரும் பொருளின்பாலும், நல்ல குரலின்பத்தைத்தரும் பொருளின் பாலும், நம்பிரியம் நிகழும். எனவே சடப்பொருள்களி லொவ்வொன்றின் பாலும் நம்பிரியம நிகழ்தற்குக் காரணம், அவ்வவற்றுற்ற நின்ற இன்பமே. இதுவே உயிருடைப்பொருள்களையும் நாம்விரும்புதற்குக் காரணம். நல்ல பசு, நல்ல குதிரை, இவற்றின் பாலெல்லாம், நம்பிரியம் அல்லது அன்பு நிகழ்தற்குக் காரணம், அவ்வவற்றுற்றரப்படுமின்பமே. அப்படியே நல்மனைவியர், நற்புதல்வர், நற்சுற்றத்தார், நல்லுறவினர், இவர் பாலெல்லாம் நம்மன்பு நிகழ்தற்குக் காரணம், இவரால் நமக்குப்போதருமின்பமே.

3. எனில், இன்பமிருக்கும் பொருள்களிலெல்லாம், நம்மன்பும் நிகழுமா? இல்லை. அப்பொருள்கட்கும் நமக்கும் தொடர்பிருந்தால் மட்டும், அவற்றின் பால் நம்மன்பு நிகழும். யாதா

னுமோரிடத்தில் ஓர் நற்கனியிருப்பதாகக் கேட்டதும், நம்பிரியம் அதன்பால் நிகழ்வதில்லை. அப்படியே, யாதானுமோர்தேயத்தில், நல்லுறவுக்குரியானொருவன், இருப்பதாகக் கேட்டதும், நம்மன்பு அவன்பால் நிகழ்வதுமில்லை. அவனுக்கும் நமக்கும், ஓர் தொடர்புண்டாய பின்னரே; நம்மன்பு அவன்பால் நிகழும். நம்மனைவியர், நம்புதல்வர், நம்முறவினர் நஞ்சுற்றத்தார், நந்தேயத்தார், என நமக்கும் அவர்க்கும் ஓர் தொடர்புண்டாய பின்னரே, அவர் பாலெல்லாம் நம்மன்பு நிகழும்: வேறு அநேகர், நற்குண நற்சீலங்களுடையரேனும், நமக்கும் அவர்க்கும் யாதானுந் தொடர்புண்டாதற்குமுன், அவர்பால் நம்மன்பு நிகழ்வதில்லை. எனவே நம்மன்பு நிகழ்ச்சிக்குப் பொருள்கள்மாட்டுள்ள இன்பமாத்திரமன்றி, அவற்றிற்கும் நமக்குமுள்ள தொடர்புங்காரணமாம்.

4. மேற்கூறிய காரணங்களிலொன்று அதிகரித்தாலும், அதனோடு நம்மன்பும் அதிகரிப்பதாகும். பொருள்களாற்றரப்படுமின்பம், அதிகரித்தாலும், அவற்றிற்கும் நமக்குமுள்ள தொடர்பு அதிகரித்தாலும், அவற்றின்பாலுள்ள நம்மன்பும் அதிகரிப்பதாகும். எனவே நம்மாட்டு மிகுந்த இன்பமும், நம்மாட்டு மிகுந்த தொடர்புமுள்ள பொருள் எதுவோ, அதன்பாலே நம் மிகுந்த அன்பு நிகழ்வதாகும். அத்தன்மைத்தான பொருள் பரம்பொருள் ஒன்றேயாம். உலகப்பொருள்களில், எவ்வகைப் பொருள்களுந் தரப்படுமின்பமும், மிகக்குறுகியதே. அதுவுந் தனித்த இன்பமல்ல: துன்பம்விரவியதே நிலைபேறுடையதுமல்ல சிறிது காலத்தில் மாறுவதே. அப்பொருள்கட்கும் நிலைபேறில்லை. அவைகள் நிலைநிற்கும்வரை யின்பந்தருமென்பதுமில்லை. பரம்பொருள் இத்தன்மைத்தல்லவென்பதை, எல்லாச்சமயிகளும் ஒப்புவர் எல்லாச் சமயங்களின் கருத்தின்படியும், அப்பொருள் என்று மிருக்கும் பொருள். அளவிறந்த ஆனந்தத்தை விளைக்கும் பொருள்,

“அண்டங் கடந்த பொருள், அளவில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள், பண்டுமின்றுமென்று முள்ளபொருள்.”

என்று கூறுதற்குரிய பொருள் இப்பொருளொன்றே. இதுவேயன்றித்தாமே பன்முறை பிறந்திறந்துழலும் பொருள்களி



யாவும், அத்தன்மைத்தான பொருளன்று. அவற்றையடைந்தாரும், பிறப்பிறப்புமுதலிய துன்பத்தினையடைவரன்றிப் பேரின்பசுகத்தினையடையார். அதனை யடைதற்குரியார் சிவபரம்பொருளையடைபவரே. இக்கருத்தினையே நம்மணிவாசகப்பெருமான்,

“துன்பமே பிறப்பே யிறப்பொடு
மயக்காந்தொடர் பெலாமறுத்தநற்சோதி
யின்பமேயுன்னைச் சிக்கெனப்பிடித்தேன்”—என்னும்

“பாலினைந்தூட்டுந்தாயினுஞ்சாலப்பரிந்துநீபாவியேனுடைய
ஊனினையுருக்கியுள்ளொளிபெருக்கியுலப்பிலாவானந்தமாய
தேனினைச்சொரிந்துபுறம்புறந்திரிந்தசெல்வமேசிவபெருமானே
யானுனைத்தொடர்ந்துசிக்கெனப்பிடித்தேன்”

என்றுங் கூறியுள்ளார்.

5. இனியிச்சிவபரம்பொருட்கும் நமக்கும் யாதானுந்தொடர்புண்டாவென்பதே, நம்மால் அடுத்துவிசாரிக்கப்படுவது. அப்பொருட்கும் நமக்கும் யாதானுந்தொடர்பிருந்தாலன்றி, யப்பொருளின்பால் அளவற்ற ஆனந்த மிருந்தாலும், அதனால் நமக்குப்பயனில்லையென்பதை முன்னரே விளக்கினும். இப்பரம்பொருள் நம்மோடு தொடர்புடைய பொருளென்பதே, நஞ்சைவசன்மார்க்கவுண்மை. நாமே பரம்பொருள், நமக்கு அன்னியமாகப் பரம்பொருளேனும், வேறுபொருளேனுமில்லையென்னுங்கொள்கை, நஞ்சன்மார்க்கக்கொள்கையல்ல. இக்கொள்கையுண்மையாயின், நம்பாலின்ப மிருப்பினும், அதனை நாம் அனுபவித்தலுமில்லை. நம்மாட்டு அன்பு நிகழ்தலுமில்லை. இதுவன்றிப் பரம்பொருள், நம்பால் யாதோர் தொடர்புமின்றி நமக்கு முற்றிலு மன்னியமாயுள்ளபொருள் என்னுங்கொள்கையும், நஞ்சைவசன்மார்க்கக்கொள்கையல்ல. இக்கொள்கையுண்மையாயின் எத்துணையின்பம் பரம்பொருளின் கண்ணிருப்பினும், நமக்கும் அப்பொருட்கும் யாதொருதொடர்பமின்றாதலால், அதன்பால் நம்மன்பு நிகழுமாறுமில்லை. நமக்கும் பரமபொருட்கும், சாந்நித்தியத்தொடர்பேயுளதெனும் கொள்கையும், நஞ்சைவசன்மார்க்கக்கொள்கையல்ல. இத்தொடர்பும் ஏகதேசவியல்பினதேயாதலால், இதனால்விளையும் அன்பும் ஏகதேசவியல்பினதேயாம்.

(இன்னும் வரும்.)

V. P. சாந்திமதி நாதப்பிள்ளை.

# சிருட்டியில் மயக்க நிவாரணம்.

(முன்தொடர்பு தொகுதி 2, பகுதி 7, பக்கம் 212.)

"எயுமும்மலங்கடத்தந் தொழிலினையியற்றவேவும்
தூயவன்றனதோர் சத்தி"

என்னும் சித்தியார் அரிய பிரமாணம் மேற்கருத்தை வலியுறுத்துதல் காண்க. சிவசத்தி ஆங்காங்கிருந்து தத்துவசத்திகளை இயக்காதாயின், தத்துவங்கள் அசைவற்றிருந்துவிடும். அத்தகைய தத்துவங்களுடன் சேரும் ஆன்மாவும் தனது இச்சாஞானக்கிரியைகள் இயங்குதலின்றி யாதொருசெயலுஞ் செய்யவல்லதாகாது. ஆன்மாவின் இச்சாஞானக்கிரியைகளும் சிவசத்தியியக்கினால் தான் இயங்கித் தொழிற்பட்டுபோக்கிய வஸ்துக்களாகிய தத்துவதாத்துவிகங்களையுபயோகித்துப் பலனருந்தும். என்வே, சிவசத்தி உடனிருந்து இயக்காவிடில், சேதனாசேதனப் பிரபஞ்சங்கள் அசைவற்றிருந்து விடுமென்பது கருத்து. ஆதலால், ஆங்காங்கிருந்து தத்துவசத்திகளை இயக்கித் தொழிற்படுத்துங் காரணத்தினால் "அவனன்றியோரணுவு மசையாது" என்பது முதலிய ஆன்றோர் பிரமாணவுரைகளும், "அசேதனம் ஜகத்விப்ராஸ் சேதனப்ரோணம்விநா" என்பது முதலிய ஆகமப்பிரமாணவுரைகளுமெழுந்து உண்மையை விளக்குவனவாயின.

இவ்வாறன்றி அந்தப் பிரமாணவுரைகளுக்கு "கடவுளே நேரிடநின்று, நன்மை தீமைகளாகிய சகலசெயல்களையுஞ்செய்விக்கிறார்" என்று பொருள்கொள்ளில், மேலேவிவரித்து விளக்கிய தோஷங்களெல்லாம் கடவுண்மேலேறி, அவரது மகாபரிசுத்தத்தன்மையை யழிக்குமென்பதுந்தவிர, நியாயப்பொருத்தமின்றி, அத்தகைய கொள்கையை யவலம்பிக்குமதம் கேவல ஆபாச மதமாமென்றும் அறிவுடையோரால் தள்ளப்படுமென்பதுமுணரத்தக்கது. சிவசத்தி உடனிருந்து இயக்குமுண்மையைச் சுருதியும் மிகவழகுறப் பிரகாசப்படுத்தும். என்னை? தைத்திரீயோபநிஷத்தில்:

"இதம்ஸர்வமஸ்ருஜத:" :-இவையனைத்தையும் (அவர்) சிருட்டித்தனர். (தைத்: உ. சா.)



"தத்ஸ்ருட்வாத தேவாநுப்ராவிஶத்"—அதனைச் சிருட்டித்து அதனுட் பிரவேசித்தனர். (தைத். 2. சா.)

தத்துவங்களைச் சிருட்டித்து அவற்றினுள் பிரவேசித்ததாகச் சுருதிகூறுகின்றது. (இச்சுருதியினால், பிரபஞ்சம் மாயாகற்பிதம் (Delusion) என்பார்கோள் மறுக்கப்படுகின்றது. அநுப்பிரவேசித்தனர்? ஏன் அநுப்பிரவேசித்தனர்? தத்துவசத்திகளை யியக்கித்தொழிற்படுத்தவாம். அநுப்பிரவேசித்து இயக்குதற்குமுன் தத்துவங்கள் செயலற்றிருந்தன என்பது கருத்து. இவை போன்ற அரிய வேதாகமமாதி பிரமாணவுரைகளின் நுட்பக் கருத்துக்களை யுகித்து உண்மையுணர்தல் வேண்டும். நிற்க, "தத்துவதாத்துவிகங்கள் ஒன்றையொன்று ப்ரேரித்துங் காரியப்படுத்தியும் பிரபஞ்சத்தை நடைபெறச் செய்யும் என்றும், "நியதி" என்னுந் தத்துவமொன்று இடையிலிருந்து கன்ம பலன்களை ஏறுமற்குறையாமல் சரிவரப் பகுத்துச் செலுத்தும் என்றும் "ஏன் சொல்லல்வேண்டும்? பரம்பொருளாகிய கடவுள் தாமே நேரிடக்கலந்து நின்று பிரபஞ்சத்தை நடத்தி, நல்வினை தீவினைகளின் வழியாக, அவரவர்கன்மபலன்களைத்தாமே வருவிக்கின்றார் என்று கொள்ளுவதில் விரோதம் என்னை?" என்று வினவில் கூறுவாம்.

கன்மபலன்கள் (Cause and effect) ஏது - பயன்ரூபமாக ஆங்காங்கிருந்து இயல்பிலுண்டாகுமுறை மேலேவிளக்கினம். இனி, தத்துவங்கள் ஒன்றையொன்று பிரேரித்தற்கு நியாயம் வருமாறு: பரம்பொருளினியல்பு "ஸூக்ஷ்மாத் ஸூக்ஷ்மதரம்" "குஹ்யாத் குஹ்யதரம்" என்று சுருதிகளில் கேட்கப்படலால் பரமசூக்ஷ்மமாயுள்ள பரம்பொருள், மிகுத்துத்தூலமாயுள்ள பிரபஞ்சத்துடன் நேரிடக்கலந்து நின்று நடத்துதல், அவ்விருபொருள்களின் இயல்புக்கு இயலாதாம். சூக்ஷ்மாதி சூக்ஷ்மப்பொருள் தூலாதி தூலப்பொருளைக்காரியப் படுத்தவேண்டில், இடையில் சூக்ஷ்மகருவிகளை யேற்படுத்தி அவற்றுடனியைந்து நின்றே காரியப்படுத்தல் வேண்டும். திட்டாந்தம்: ஆன்மாவானது தூலதேகத்தைத் தானே நேரிடக்கலந்து நின்று ஏன் இயக்கலாகாது? அது, இந்திரிய அந்தக்கரணாதி சூக்குமகருவி கரணங்களின்

வழியாகவே யியக்கிநடத்துகின்றது. ஏனெனில், ஆன்மசூக்ஷ்மதரப்பொருள். அது தூலதரப்பொருளாயுள்ள தேகத்துடன் கலக்கவேண்டில், சூக்குமகருவி கரணங்களின் வழியாகத்தான் கலக்கக் கூடும். ஆதலினாலே தான் தூலவுடல் சூக்குமகரணேந்திரியங்களினால் நடத்தப்படக் காண்கின்றோம். வேறொருசாமானிய திட்டாந்தத்தினாலும் இவ்வியல்பின் உண்மைநிலையை எளிதில்விளக்கலாம். என்னை? நீர்கனத்தவஸ்து, எண்ணெய் மிகலேசானது. எண்ணெயை நீரில் விட்டால் மேலே மிதக்கின்றதன்றி கலப்பதில்லை. எண்ணெய் நீருடன் கலத்தற்கு, "ஆல்கொஹால்" என்னுஞ் சூக்கும திரவப்பொருளுடன் எண்ணெய் கலந்தால், அப்போது அது நீருடன் எளிதிற் கலக்கின்றது. இதுபோலும்—பர - அபரவஸ்துக்களிடத்தும் உண்மை யியல்புகாணல்வேண்டும். இந்நியமம் எற்றுக்கென்னில், அது பொருள்களுக்கு அநாதியே யேற்பட்டுள்ள தர்மமாதலால், சங்கை செல்லாமையுணர்க. சகசிருட்டியில் இயல்புமாறி எதுவும் நடவாது. அதுபோலவே பரம்பொருளிடத்தும் வைத்து உண்மைகாணல் வேண்டும். இந்த இயற்கைநியாயத்தினாலே தான் தூல - சூக்கும - பரரூபங்களாகத் தத்துவங்களையமைத்து, மகாமகிமை தங்கிய இயந்திரிகளாகுஞ் சிவசத்தியானது, அத்தத்துவங்களினுள் "அனுப்பிரவேசித்து" நின்று சேதனாசேதனப் பிரபஞ்சங்களை யியக்கி நடத்துமுண்மை, நமதரிய வேதாகமங்களில் (Revealed) விளக்கப்பட்டுள்ளது அன்றியும், பரம்பொருள் நிஷ்களமாகிய தமது சொரூப நிலையிலிருந்து சிருட்டியாதிகிருத்தியங்களைச் செய்யமுடியாது. ஏனெனில், நிஷ்களம் சத்திகளெல்லாம் அடங்கி நின்றநிலை. அடங்கிநிற்குஞ் சத்திகளால் என்ன இருத்தியநிகழும்? ஆகலால், சத்திகள் வெளிப்பட்டே பஞ்சகிருத்தியம் நிகழாநிற்கும். சத்திவெளிப்பட்டநிலையே சகலம் அல்லது, நடந்நிலையெனப்படும். சகலம்—கரசரணாதி அவயவங்களுடன் கூடிநின்ற அற்புதத்திருவுருவமாம். சிவசத்தியே பரமசிவத்திற்குக் கரசரணாதியவயவங்களாயமையும். சத்தியின்வடிவம் ஞானம்.

"சத்திதன்வடிவேதென்னில்தடையி
லாஞானமாகும்."—(சித்தியார்)



சித்கனன் என்றதும் இவ்வுண்மைபற்றியேயாம். சித்—ஞானம். கனம்—மேனி—உருவம். பரமசிவம் அங்ஙனஞ்சகளத்திருமேனி கொண்டருளினதினாலேதான் ஆன்மாக்கட்குக் கதிமோக்ஷமுண்டாகக்காரணமாயிற்று. தநுகரணபுவனபோகங்களும், வேதாகமசாத்திராதிகளும், தபசு—யோக—சித்திகளும் மோக்ஷசாம்பிராச்சிய சகலபாக்கியங்களும் ஆன்மாவுக்குண்டானது, மகாமகிமை தங்கிய தடத்ததிருக்கோலமாகிய அக்கருணையின் வடிவினாலேயாம். பிரமாணங்கள்:

"ஸ்ருஷ்ட்யர்த்தம்ஸர்வதத்வானாம்
லோகஸ்யோத்பத்திகாரணம் |
யோகினாமுபகாராய ஸ்வேச்சயாசிந்திதப்ஸிவ:||" =

சகல தத்துவங்களின் சிருட்டியின் பொருட்டும், சகல லோகங்களின் உத்பத்தியின் பொருட்டும், சகல லோகங்களின் உத்பத்தியின் பொருட்டும், யோகிகளுடைய தியானபூசைகளுக்கு உபகாரமாம் பொருட்டும் சிவம் சுவேச்சையாகச் சங்கற்பஞ் செய்தனர். (சங்கற்பஞ்செய்து, தமது சத்தியின் வழியாக சகலத்திருவுருவங் கொண்டருளினர் என்பது திவ்வியாகமப் பிரமாணம்.) முக்திக்கு ஞானமே காரணம். ஞானத்திற்கு உபாசனை காரணம். உபாசனை அதாவது, வழிபாடு இல்லாமல் ஞானம் வரமாட்டாது. வழிபாடு (உபாசனை) சகலத்திலேதான் நிகழ்த்தமுடியும். இவ்வுண்மையியல்பின் பொருட்டே நிஷ்களம் சகளமாய் வந்ததென்பது சாத்திரநிச்சயம்.

"யோகினாஞ்சயதீனாஞ்ச—த்யானினாம்
மந்த்ரிணாம்ததா | த்யானபூஜாநிமித்தாய
நிஷ்களம்ஸகளம்பவேத்||" =

யோகிகளுடையவும், தியானிகளுடையவும், மந்திரிகளுடையவும், தியானபூசைகளின் நிமித்தம் நிஷ்களம் சகளமாய் வரும். (வாதுளம்)

"சிவன்சகளத்துற்றான் நினைத்தருச்
சித்துய்யவேயர்கள்"—(சிவதருமோத்தரம்)

என்னும் பிரமாணங்களால் உண்மை மிகத்தெளிவாகும். ஞானத்திற்கு உபாசனை வேண்டப்படுமென்பது.

"ஜ்ஞாநோபாஸனகர்மாணி ஸாபேக்ஷாணி
பரஸ்பரம்" = கர்மம்—உபாசனை—ஞானம் ஆகிய மூன்றும் முறையே ஒன்றையொன்ற பேக்ஷித்து நிற்பனவாம்" (ராமகீதை.) என்னும் பிரமாணத்தாலும் நன்கு விளங்கும். உண்மை யிங்ஙனமிருத்தலால், "ஞானம் ஞானம்" என்று வீணே சொல்லிக்கொண்டு, அதற்கு வழியாயுள்ள கிரியோபாசனைகளைக் கைவிட்டு காலங்கழிப்பார்க்கு பரிதாபமாவது திக. இந்த நியாயங்களால் சகளோபாசனை யொன்றே ஆன்மாவுக்கு இன்றியமையாப் பெருந்துணையுந் தெப்பமுமாயிருந்து, சம்சாரசாகரத்தைக் கடத்துவித்துப் பரமானந்தப் பெருவாழ்விற் சேர்க்கவல்ல பரமோபகாரியாமென் முடிதலால், விவேகிகளானோர், உபாசனையி லுறுதியாய் நின்று, அதன் வழியுண்டாமனுக்கிரக விசேஷத்தால் மேலேறுதலும், ஞானநூற்றெளிவும், திருவருண்ஞானப் பேறுமடைந்துய்க வெனத் திருவருளைச் சிந்திப்பாம்.

"[illegible]ணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
யல்லாது வேறு நிலையுளதோ!"—(பட்டினத்தடிகள்.)

சிருட்டியில் மயக்கநீங்குங்கால், அதனுபகாரவியல்பு விளங்கவரும். வரவே, சிருட்டிப்பொருள்களை முறையுடனுபயோகித்துப் பயன்பெறும் கல்வியுதிக்கும். உதிக்கவே, அத்தனையும் முதன்மையுபகரித்துவரும் பரம்பொருளின் கருணையும் நோக்கமும் இனைத்தெனத் தோன்றும். தோன்றவே, பரம்பொருளின் அனுக்கிரக மின்றிக்கமைவாரா வுண்மை விளங்கும். விளங்கவே அனுக்கிரகம்பெற்றின் பொருட்டுப் பரம்பொருளுபாசனையில் இச்சையெழும். ஆதலால், ஆரம்பத்தில் விளக்கியமுறையில் சிருட்டியினுண்மையை விசாரித்து மயக்க நீக்கிக்கொள்ள வேண்டுவது நங்கடனாவதறிக. சுபம்.

முற்றிற்று.

C. M. அரங்கசாமி நாயகர்.

---

## பதிபசுபாசத்தொகை. *

பவளநிறத் தானைமுகன் பாத நினைப்பாம்
பவளமறுப் பானவனன் பர்க்கு. (௧)

சிவனை நிரஞ்சனனைச் சின்மயனைச் சீவன்
பவமுமறுப் பானைநினைப் பாம். (௨)

இரவிக் கொளிபோ லிறையொடுறை வானைப்
பரவிப் பணிவாம் பதம். (௩)

நந்திபத நந்திமா காளரெழு வர்யாவர்
தந்திருத்தா ளும்பணிவாஞ் சார்ந்து. (௪)

பதிபசு பாசந் தொகுத்துப் பகர்வா
மெதுகதியென் பார்க்கெளிதி லே. (௫)

பல்லுயிர்க்கு மேக னமலன் சிவன்பதியப்
பல்லுயிர்க்கு மீசன் பதி. (௬)

உடலொலியின் மூல வொலியுறைதல் போலக்
†கடவுளுயிர் தோறுமுறுங் காண். (௭)

ஆதாரம் வேர்மரத்துக் கீச னனைத்துயிர்க்கு
மாதாரம் வேர்க்குமர மன்று. (௮)

ஆகஞ் சடங்கா ணனுவறியா ‡ திவ்விரண்டின்
யோகஞ் § சிவனென் றோர். (௯)

கருமஞ் சடம்பலத்தைக் காட்டாது காட்டு
திருமல னென்றே நினை. (௧௦)

---

* குறிப்பு:—இவ்வரியநூல், ஸ்ரீமான் பால்வண்ணமுதலியார் அவர்களால் மதுரை தமிழ்ச்சங்கத்துக்கு அனுப்பப்பட்ட சாத்திரக்கொத்து என்னும் ஏட்டுப் பிரதியினின்றும் எடுத்து எழுதப்பட்டது. இந்நூலாசிரியர் இன்னாரென்று புலப்படவில்லை. ஆயினும் முப்பொருள் உண்மையை அதிகமாகச் சுருக்கியும் விளக்கியுமுள்ள பெருமையினை உடைத்து இந்நூல். J. M. N.

† 'கடவுளுறை' யென்றும் பாடம். ‡ 'திவ்விரண்டும்' என்றும் பாடம்.
§ 'சிவன் பாலன்' என்றும் பாடம்.

சடமாயை தானே சமையா தறிவுங்
கடவுடரு வான்வினையைக் கண்டு. (௧௧)

வருத்திப் நல்லன் மருத்துவனே * யார்க்கு
திருத்தனையிவ் வாறுநினை நீ. (௧௨)

உதவி யிரவி யுலகுக் கிரவிக்
குதவி செயுமோ வுலகு. (௧௩)

இவை பதிதெரிசனம்.

ஆகஞ் சடந்தா னியங்கா ததனையூர்
பாகன் பசுப்பலன் றுய்ப் பான். (௧௪)

பொறியுமுயி ரல்லப் பொறையுடலு மல்ல
வறிவே யுயிரொன் றறி. (௧௫)

உறக்கத் துணரா வுடலும் பொறியு
முறக்கமு மோரு முயிர். (௧௬)

புண்ணியத்தாற் பாவத்தாற் புண்ணியபா வத்தாலு
நண்ணுமுயிர் † கீழ்மேல் நடு. (௧௭)

இவை பசுதெரிசனம்.

யானென் செருக்கா லிருவினையா மச்செருக்கு
‡மூனமலத் தாலு முயிர்க்கு. (௧௮)

செம்பிற் களிம்பென்னச் சிவனொடு நேதிமிர
§நம்பனைக் காட்டாது நன். (௧௯)

இவை பாசதெரிசனம்.

பரிபாக மாகவிருட் பாசமுடை யூனை
யருவருக்கு மாவிருப் பற்று. (௨௦)

அப்பொழுது தேசிகனை யாவேசித் தேயமல
னப்பழுதை நீக்குமரு ளால். (௨௧)

‖ நீங்கவரு ணீங்காதே நின்றசிவங் கண்டாவி
யோங்கியபே ரின்பத் துறும். (௨௨)

இவை யனுக்கிரகம்.

¶ ஆக்கைசிறை யென்றமலத் தாதரவுற் றூர்க்கிந்த
வாக்கை யதைக மதித்து. (௨௩)

* 'யற்கு' என்னும் பாடம். † 'மேல்கீழ்' என்றும்பாடம். ‡ 'மூலமலத்' என்னும் பாடம். § '[illegible] காட்டாதுயிரினை' என்றும் பாடம். ‖ 'நீங்க விருணீங்காதே நின்ற சிவன் கண்டாவி' என்னும் பாடம். ¶ 'ஆக்கை சிறையென் றமலத்ததரவுற்றூற் றிந்த' என்னும் பாடம்.



விடயப்பாக் குறைத்தார் விழுவர்கிழ் மேலா
யடைந்தார்நல் லார்க்கறிவித் தார். (௨௪)

இது பக்குவாபக்குவம் பார்த்துணர்த்துக வென்றது.

இந்தவியல்த் திரிவு மின்றியுணர்ந் தார்க்கிருண்ட
பந்தமறும் வாய்த்துறுமின் பம். (௨௫)

இது நூலுணர்ந்தார் பலம்.

## பதிபசுபாசத்தொகை முற்றும்.

S. பால்வண்ண முதலியார்.

---

## சமாச்சாரங்கள்.

---

உத்திரமேரூர் சைவசித்தாந்தசபை:—பிரமாதீச ஸ்ரீ ஆடி மீ 24உ (8-8-13) சுக்கிரவாரம் இச்சபையாரால் காலை 9-மணிக்கு தமிழ்வேத பாராயணத்துடன் கிராம பிரதக்ஷணமும், 10-மணிக்கு மகேசுரபூசையுடன் மாதுஸ்ரீ ஆ. இரத்தினம்மாள் பொருளுதவியால் சுமார் 100-ஏழைகளுக்கு அன்னமளித்தலும், இரவு 7-மணிக்கு மேல் ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரப் பிரசங்கமும் இடையிடையே தமிழ்வேத பாராயணத்துடன் நடந்தேறின.

***

ஸ்ரீசுவர்ணாம்பிகை சைவசித்தாந்தசபை, சேலம்:—இச்சபையின் 14-வது வருடப்பூர்த்தி அறிக்கைப்பத்திரம் ஒன்று சபையின் காரியதரிசி பிரமஸ்ரீ. கிரிவாச குருக்கள் அவர்களால் அனுப்பப்பெற்றேன். சபையின் நோக்கங்கள் சைவசித்தாந்தத்தை நிலைபெறச் செய்வதேயாகும். இத்தகைய சபையினை நிர்வகிப்போர் யாவரும் ஆதிசைவராக இருப்பதைக்கான மிகுதியும் சந்தோஷத்தைத் தருகின்றது. இச்சபையை ஆதரிப்போர் விடாமுயற்சியும் வியக்கத்தக்கதாக உள்ளது. சைவசித்தாந்த மகாசமாஜ நிர்வாகசபையில் ஒருவராய சேலம் பிளீடர், ஸ்ரீமான். ஆர். ஷண்முக முதலியார் இச்சபையின் உபந்நியாசகர் எனின் இச்சபையின் மேன்மையைச் சைவ உலகத்திற்கு நான் கூறவேண்டுவது யாதுமில்லையென் றெண்ணுகிறேன்.

திரிபதார்த்த லட்சணம், சித்தாந்தம்:—இவ்விரண்டு நூல்களும் "சைவசூக்குமார்த்த போதினி" பத்திராதிபராகிய யாழ்ப்பாணம் வேலணை ஊர்காவற்றுறை, செ. கனகசபாபதி பிள்ளையவர்களால் வெளியிடப்பட்டன. முதற்புத்தகத்தில் பதிதரிசனம், அவஸ்தை தரிசனம், பசுதரிசனம் ஆகிய விஷயங்களைத் தர்க்கரீதியாக வினாவிடை முகத்தால் விளக்கிக் காட்டுகிறது. இரண்டாவது புத்தகத்தில், வேதாந்த சித்தாந்தமென்னும் இரண்டின் சம்பந்தத்தைத் தெளிவுபெறச் சுருக்கமாக விவகரிக்கிறது. ஈண்டு வேதாந்தமென்பது யோகப்பெயரா யெடுத்துக் கூறும் வேதத்தின் முடிவாகிய உபநிடதங்களையாம். உருடிப்பெயரா யெடுத்துக்கூறும் ஏகான்மவாதத்தைச் சாதிக்கும் வியாசசூத்திரமன்று.

***

1913ஆ ஜூலையீ 5௨ சனிக்கிழமை மாலை 5½ மணிக்கு மேல் சென்னைத் தங்கசாலை வீதி, அருணாசலேஸ்வரர் வசந்த மகா மண்டபத்தில் ஷை சமாஜத்தின் அக்கிராசனர் ஸ்ரீமான். S. சச்சிதானந்தப் பிள்ளை B.A., அவர்களால் "முத்திநெறி" என்னும் விடயம் உபந்நியசிக்கப்பட்டது.

***

1913ஆ ஆகஸ்டுமீ 10௨ ஞாயிற்றுக்கிழமை சைவசித்தாந்த மகாசமாஜத்தின் கௌரவ உபந்நியாசகர் ஸ்ரீமான். திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களால், சென்னைத் திருமயிலை வன்னிய சத்திரத்தில் "திருஞானசம்பந்தர் பிரபாவம்" என்னும் விஷயம் உபந்நியசிக்கப்பட்டது.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி உ. | 1913-ஆ செப்டம்பர்மீ | பகுதி ௬.

## சித்தாந்தபரிபாஷை

என்னும்

## தருக்கசோபானம்.

---

### பிரமேயம்.

பிரமேயம்—விளக்கப்படுபொருள்.

Objects of knowledge.

பிரமாணத்தைக் கொண்டு அளவிடப் படுவதாகிய பதார்த்தம் பிரமேயம் எனப்படும்.

பதார்த்தம்—பெயர்ப்பொருள்.

Category.

பதார்த்த மென்பது பதத்திற்குப் பொருளான விரிதலின் பதத்தாற் பெயரிட்டு வழங்கற் பாலதாந் தன்மையது. பதம்—ஆற்றலுடையது. ஆற்றலாவது இம்மொழி யானிப்பொருளை உணர்த்துக வென்னும் இறைவன் சங்கேதம்.

பதார்த்தவகை.—பாவபதார்த்தம்—அபாவபதார்த்தம்.

பாவம்—உண்மை.

Affirmation.

திரவியம், குணம், கருமம், சாமானியம், விசேடம், சமவாயமென ஆறு.

## அபாவம்—இன்மை.

## Non-existence.

அபாவமென வொன்றேயாம். ஆகப்பதார்த்தம் ஏழு.

## திரவியம்—பொருள்.

## Substance.

திரவியமாவது சிறப்பியல்பு என்று கூறப்படும். அது அவ்வியாத்தி * அதிவியாத்தி, அசம்பவமென்னு முக்குற்றங்களு நீங்கிய தன்மை அது பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், காலம், திசை, ஆன்மா, மனம், இருள், † எனப்பத்து வகையாம்.

### பிருதிவி—மண்.

### Earth.

இலக்கணம்—நாற்றமுடையது.

குணம்:—ரூபம், ரசம், கந்தம், பரிசம், சங்கை, பரிமாணம், பிரதக்துவம், சையோகம், விபாகம். பரத்துவம், அபரத்துவம், குருத்துவம், திரவத்துவம், சமஸ்காரம் ஆகப் பதினான்கு.

* அவ்வியாத்தி—இலக்கியத்தினேக தேசத்தில் இலக்கணமில்லாமை—ஆவிற்குக் கபிலநிறத்தன்மை. அதிவியாத்தி—இலக்கிய மல்லாதகண்ணு மிருப்பது—ஆவிற்குக் கோடுடைமை. அசம்பவம்—இலக்கிய முழுதினு மின்மை—ஆவிற்கு ஒற்றைக் குளம்புடைமை.

† தார்க்கிகர் இருள்வேறுபதார்த்தமன் றென்பர். இருள் வடிவுடைமையின் ஆகாய முதலிய ஐந்தினுள்ளும், உருவுடைமையானும் இடையறவியங்காமையானும் வாயுவினுள்ளும், ஒளிவடிவிற்றன்மையானும் வெம்மையின்மையானும் தேயுவினுள்ளும், குளிர்ச்சியின்மையானும் கருவடிவிற்றலினானும் நீரினுள்ளும், நாற்ற முடையதன்மையானும் பரிசமின்மையானும் நிலத்தினுள்ளும் அடங்குவதன்று வேறேயாம். இது கேவலம் வியதிரேக அனுமானத்தாலறியப்படும். ஆலோகத்தின் அபாவமே யெனின் சுகத்தின் அபாவமே துக்கமெனக்கொள்ளவரும். ஆண்டொளியில்லை இருள்உள்ளது எனவொளியின்மையின் வேறாய் இருளென்னும் உணர்வு நிகழ்தலானும், யாட்டின் கழுத்திற்றூங்கு முலையோடொக்கும் அபாவத்தாற் செய்யக்கடவ தொன்று யாண்டு மின்மையானும், கண்ணொளியைத் தடைசெய்து நிற்பதாகிய இருளை அபாவமென்றல் பொருந்தாது. இவ்விருளினது உண்மை வெள்ளிடையின் அலரவிழித்து நோக்கியவழியும் மறைத்தற்றொழில் நிகழ்தல் பற்றிப்பாரிசேட அளவையான் அறியப்படும். ஆங்கிலேயத் தருக்க சாஸ்திரங்களின் கருத்துமீதே.



வகை:—நித்தம், அநித்தம், சரீரம், இந்திரியம், விடயமென்னும் வேறுபாட்டால் ஐந்துவகை. அவற்றுள் நித்தம் பரமாணுரூபம், அநித்தம் காரியரூபம்.

சரீரம்—Organized body. பார்த்திபம், நம்மனோர்க்குரிய நாற்றமுடைய சரீரம்.

இந்திரியம்—Organ of sense. காரணம் நாற்றத்தைக் கவர்வது—நாசி நுனியிலிருப்பது.

விஷயம்—Inorganic matter—மண் கல் முதலியன.

### அப்பு—நீர்.

### Water.

இலக்கணம்—குளிர்ந்த பரிசமுடையது

குணம்:—ரூபம், ரசம், பரிசம், சங்கை, பரிமாணம், பிரதக்துவம், சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், குருத்துவம், திரவத்துவம், சிநேகம், சமஸ்காரம் எனப்பதினான்கு.

வகை:—நித்தம், அநித்தம், சரீரம், இந்திரியம், விஷயம், என்னும் வேறுபாட்டால் ஐந்துவகை. அவற்றுள் நித்தம் பரமாணுரூபம் * அநித்தம் காரிய ரூபம்.

சரீரம்—சலேயம் அதாவது சலசப்பந்தம், வருணலோகத்திலுள்ளது.

இந்திரியம்—சிங்ஙுவை, சுவையைக் கவர்வது, நாவினுனியிலிருப்பது.

விஷயம்—ஆறு, கடல், பனி, ஆலி முதலியன.

### தேயு—தீ.

### Light.

இலக்கணம்—சுடும்பரிச முடையது

குணம்:—ரூபம், பரிசம், சங்கை, பரிமாணம், பிரதக்துவம், சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், திரவத்துவம் சமஸ்காரம் என்னும் பதினொன்று.

* பரமாணுவென்றது தார்க்கிகர் கூறுமஃதன்று. அதனினும் சூக்குமமாயுள்ள அருவநிலைத்தாகுமஃதே. ஆகலின் பரமாணு என்று சொல்லப்படுவது அவலக்ஷணங்கள் இல்லாத அருவவஸ்துவேயாம்.

வகை:—நித்தம், அநித்தம், சரீரம், இந்திரியம், விஷயம் என்னும் வேறுபாட்டால் ஐந்துவகை. அவற்றுள் நித்தம் பரமாணுரூபம், அநித்தம் காரியரூபம்.

சரீரம்:—தைஜஸம், ஆதித்தலோகத்திலுள்ளது.

இந்திரியம்:—சட்சு, உருவத்தைக்கவர்வது, கண்களின்கண்ணுள்ள கருமணியினுனியிலிருப்பது.

விஷயம்:—பௌமம் பிருதிவியின் காரியமாகிய இந்தனத்திலுள்ள நெருப்புமுதலியன. திவ்வியம்—விண்ணிலுள்ள சூரியன், மின், வடவனல் முதலியன. ஔதாரியம்—வயிற்றிலுண்டவுணவு பரிணமித்தற்கேதுவான சாடராக்கினி. ஆகாஜம் சுரங்கத்திலுள்ள பொன் முதலியன *

வாயு—காற்று.

Air.

இலக்கணம்—உருவமின்றிப் பரிசமுடையது.

குணம்:—பரிசம், சங்கை, பரிமாணம், பிருதக்துவம், சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், சமஸ்காரம், என ஒன்பது.

வகை:—நித்தம், அநித்தம், சரீரம், இந்திரியம், விஷயம் என்னும் வேறுபாட்டால் ஐந்துவகை. நித்தம் பரமாணுரூபம். அநித்தம் காரியரூபம்.

சரீரம்—வாயவியம், வாயுலோகத்தின் கண்ணுள்ளது.

இந்திரியம்—துவக்கு, பரிசத்தைக்கவர்வது, சரீரமெங்கு நிற்பது.

விஷயம்—மரமுதலியவசைதற்கேதுவா யுள்ளது.

---

* பொன் பிருதிவிசம்பந்தமான நெய்முதலியவற்றின் நெகிழ்ச்சிபோலாது எரிதழல் கூடியவழியும் அழிவுபாடின்மையின் பிருதிவியின் கூறன்று. நீர்க்குரிய விட்டல் பாகிய நெகிழ்ச்சியின்றி நிமித்த நெகிழ்ச்சியுடைமையால் நீரின் கூறன்று. உருவமுடைமையால் வாயுமுதலியபொருள்களின் கூறுமன்று. ஆகவே எரிதழல் கூடியவழியும் அழிவுபடாத நெகிழ்ச்சியுடைமையின் தேயுவின் கூறும்.

(இன்னும் வரும்.)

மணவழகு.

---

# சிவஞானபோத முதனூல் விளக்கம்.

## V. அத்தியாயம்.

### மூன்றாவது வினாவுக்கு விடை.

---

(முன் தொடர்பு தொகுதி 2, பகுதி 8, பக்கம் 240.)

இந்தமாதிரி மேற்படி வடமொழிச்சூத்திரங்களின் இறுதியிலே கூறியிருப்பதால், எந்தச் சிவஞானபோதத்திலே அப்படிக் கூறப்பட்டிருக்கிறது என்று கவனித்தவர்கள் தானும் கிடையாது.

இவ்வடமொழிப்பன்னிரண்டு சூத்திரங்களைத் தவிர்த்து வடமொழியில் வேறே சூத்திரங்கள் இல்லை யென்பது தெளிவாம். அப்படி இருந்திருந்தால், வடமொழியை இவ்வளவுதானென்று கரைகண்ட சிவாக்ரயோகிகளாவது, சிவஞான முனிவராவது கூறாது இருக்கமாட்டார்கள். ஆகையால், மேலே சொன்ன 12 சூத்திரங்கள் கிடையா வென்பதே சித்தாந்தம். அப்படி இருக்கிறது என்று சொன்னால் அது கற்பனையே. தற்காலம் அநேக உபநிஷத்துக்கள் ஏற்படுவதைப் போன்றதே.

ஆகவே, அச்சூத்திரத்திலேயே சிவஞானபோதத்தில் இப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது என்று கூறியிருந்தால் அச்சிவஞானபோதம் தமிழ்ச் சிவஞானபோதம் தவிர வேறேயில்லை என்பது வெளிப்படை. வடமொழிச்சூத்திரங்களை மொழிபெயர்ப்புச் சூத்திரங்கள் என்று சொல்வதில் யாதொரு சந்தேகமும் இல்லை.

யாரோ ஒரு ஆரியக்கவிராயர் தமிழ்ச் சிவஞானபோதத்தைப் பார்த்துத் தம்முடைய உபயோகத்துக்காக மொழிபெயர்த்து வைத்துக் கொண்டவை அப்பன்னிரண்டு சூத்திரங்களும். பிற்காலத்துப் பதிப்பாசிரியர்கள் வடமொழியில் முதனூல் உண்டென்று சொல்லுவது அதிக கௌரவம் என்று எண்ணி வடமொழியில் ஆதாரம் தேட, தேடினவர்களுக்கு, அச்சூத்திரங்கள் அகப்பட அச்சிட்டு வெளிப்படுத்தினர். அச்சூத்திரங்கள் ஆகமங்களினின்றும் எடுக்கப்பட்டவை என்று கூறிவிட்டால் சைவர்கள் ஒப்பார்கள் எனக்கருதி, அந்நாது, இரௌரவாகமம் பாசவிமோ

சனப்படலத்திலிருந்து எடுக்கப்பட்டவை, அவைகளிறுடைய மொழிபெயர்ப்புத்தான் தமிழ்ச் சிவஞானபோதம் எனக்கதை எழுதுவராயினர்.

மற்றவர்களும் குரும்பையாட்டுக் கூட்டமாதலால் மறுத்தற்கு அஞ்சி அதனையே பின்பற்றினர்.

அல்லது, ஆரியர் தென்னாட்டிற்கு வந்து தமிழர்களுடைய வழக்க ஒழுக்கங்களைக் கைப்பற்றி ஒழுகிவருங்காலத்தில் (அதாவது கிரந்தலிபி ஏற்படுத்திக்கொண்ட பிற்பாடு,) தற்காலம் ஆங்கிலேயர்களும் தமிழ் சித்தாந்தநூல் தெரியவேணுமெனக்கருதி ஸ்ரீமான்-J. M. நல்லசாமிப்பிள்ளையவர்கள் சிவஞானபோதத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தது போல, தமிழன் ஒருவன் கிரந்தத்தில் மொழிபெயர்த்து ஆரியர்களுக்குப் புகட்டியிருந்தால் கூடாதோ? "ஏவம் வித்யா சிவஞானபோதே சைவார்த்த நிர்ணயம்" என்னும் கடைசி அடியில் இக்கருத்தும் தொனிக்கவில்லையா?

மேலும், பாருங்கள், மேற்சொன்ன மொழிபெயர்ப்பு வடமொழிச் சூத்திரங்கள் ஆகமத்தினின்றும் எடுக்கப்பட்டது என்று கூறவேண்டுமென்று பதிப்பாசிரியர், எந்த ஆகமத்தைச் சொல்லலாம் என்று யோசித்தபோது "இரௌரவாகமம் பாசவிமோசனப்படலம்" என்று வாய் கூசாது பதிப்பித்துவிட்டார். ஏனென்றால் உண்மையாயிருந்தால் அல்லவோ சிவபெருமான் உள்ளபடி கூட்டிவைப்பார்.

ஆகமங்களில் சிவப்புரோக்தம் உருத்ரப்புரோக்தம் எனப் பிரிவுகள் உண்டு. அதில் இரௌரவாகமம் உருத்ரப்புரோக்தம் என்னும் பிரிவில் சேர்ந்தது. சிவபெருமானால் அருளிச்செய்த சிவஞானபோதம் சிவப்புரோக்தத்தில் இருக்க நியாயம் சிறிதும் இன்று.

எப்படி பகவத்கீதையை இடையில் யாரோ மகாபாரதத்தில் நுழைத்தார்கள் என்று சொல்லுகிறார்களோ, அப்படியே இப்பன்னிரண்டு வடமொழிச் சூத்திரங்களையும் இரௌரவாகமத்தில் உள்நுழைத்து விட்டிருக்கலாம். அதற்கு அதனுடைய கடைசி அடியே சான்று பகரும். (Vide the words of Mr. Dutt: —Every *later poet* and *editor* has contributed his mite towards



*enlarging, altering* and *distorting* the ancient epics. Every *new sect* has been careful to incorporate its new fangled tenets in the national work ; and Krishna worship, which is of later origin, has been bodily transplanted in the ancient narrative of the Kuru—Panchala war) ஆகையால் பின்வந்த பண்டிதர்களும், பதிப்பாசிரியர்களும், மதாசாரியர்களும் தங்களுக்கு வேண்டியவாறு நூல்களைத்திருத்தியும், கூட்டியும், குறைத்தும் உண்மைகண்டறிவது கஷ்டமாகும்படி செய்துவிட்டார்கள்.

வடமொழி நூல்களில் பெரும்பான்மை தமிழினின்றும், தமிழின் பிரிவாகிய மராட்டிரம் முதலிய பாஷைகளினின்றும் ஆரியர்கள் இந்நாட்டிற்கு வந்தபிற்பாடு மொழிபெயர்த்த நூல்களே என்று வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் அவர்கள் கூறி இருக்கின்றார். அது வருமாறு:—

(தமிழ் மொழிவரலாறு பக்கம் 14, 15. 1903ம் வருஷத்திய பதிப்பு.)

"வடமொழியாளர் தமிழர்களது ஒழுக்க வழக்கங்களை உணர்ந்து அவற்றிற்கேற்ப வடமொழியில் நூல்கள் வகுப்பான் புகுந்தனர். அவர்களெல்லாம் (தமிழர்கள்) அன்புடைய பயிற்சிமிக்குடையராயும் கலையுணர்ச்சி சான்றவராயும் இருந்தமைபற்றித் தமிழரது திவ்யஸ்தலங்களுக்குப் புராணங்கள் வகுத்தனர். ........... ........... தமிழரிடத்திருந்த பல அரிய விஷயங்களையும் மொழிபெயர்த்துத் தமிழர் அறியுமுன்னரே அவற்றைத்தாம் அறிந்தனபோலவும் வடமொழியினின்றுமே தமிழிற்கு அவை வந்தனபோலவும் காட்டினர்.

தமிழநாட் சாமானிய ஜனங்கள் அவ்வாரியரது விருப்பத்திற்கேற்ப எவ்வளவிணங்கியபோதிலும்புலவராயினோர் அவர்களது திருத்தப்பாட்டிற்குப் பெரிது மிணங்கினாரல்லர். ஒழுக்கச்சீர்ப்பாடு ஏற்பட்டபோதிலும், பாஷைத்திருத்தம் ஏற்படவில்லை. தமிழின் முப்பத்தோரெழுத்துக்களும் அவ்வாறேயின்றளவும் இருக்கின்றன. சிறிதும் வேறுபடவில்லை. தாங்கள் செல்லுமிடங்களுக்குத் தக்கபடி புதிய புதிய லிபிகள் ஏற்படுத்திக்கொள்ளும் இயல்புடைய ஆரியர் தமிழ் நாட்டிற்கு ஏற்றபடி தமிழ்லிபியை யொட்டிக்

கிரந்தம் என்னும் பெயரிற் புதுவதோர் லிபிவகுத்தனர். தமிழரை வசீகரிக்குமாறு அவ்லிபியிற் பலநூல்கள் வகுத்தனர்.''

ஆனால், ஆரியர்கள் நூல்களைத் தங்கள் பாஷையில் மொழிபெயர்க்கும்போது இன்னபுத்தகத்தினின்றும் மொழிபெயர்த்தது என்று சொல்லாமலே அதிக ஜாக்கிரதையாய்த் தாங்கள் சுயமாகவே செய்ததுபோல எழுதிக்கொண்டு, அதற்குத்தக்கப்பேர்களையும் கதைகளையும் ஆரியாசாரப் பிரகாரம் மாற்றிக்கொண்டு எழுதிவிட்டார்கள். அதனாலேதான் இப்பொழுது கண்டுபிடிப்பது பெருங்கட்டமாயிருக்கிறது.

உத்திரமேரூர் என்னும் க்ஷேத்திரத்தில் நான்கு சிவாலயங்களும் ஒருகுகாலயமும், இரண்டு விண்டுவாலயங்களும் உள. சின்னாண்முன்னர் நான் அவ்விடம் இருக்கும்போது, ஒருவர் விண்டுவாலயங்களைப் பற்றிய புராணம் ஒன்று இருக்கிறது என்றும், அதில், ஸ்ரீராமரானவர் இராவணனைக்கொன்ற பாவத்தால் பிரமகத்தியால் பிடிக்கப்பட்டாரென்றும், அதற்காகச் சிவபெருமான் விண்டுவை அத்தலத்தில் பூசித்தாரென்றும் புராணத்தில் இருப்பதாகச் சொன்னார். இது தென்னமரத்தில் தேள் கொட்டப் பனைமரத்தில் நெறிகட்டினதுபோல் இருக்கிறது. இதையும் தான் தமிழர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். யாராவது ஒரு ஆரியன் கூறிவிட்டால் அது சரியோ இல்லையோ என்பதைக் கவனியாது தலைகுனிந்து போவதால் தான் தமிழர்களுடைய நிலைமை பரிதபிக்கவேண்டிய ஸ்திதியில் இருக்கிறது.

அதுபோல், வடமொழிச்சூத்திரத்திலேயே தமிழினின்றும் மொழிபெயர்த்ததென்று பட்டாங்கமாகக் கூறியிருக்க, தமிழ்ச்சூத்திரங்கள் வடமொழியினின்றும் மொழிபெயர்த்ததென்று யாரோ ஒரு ஆரியன் அபிமானத்தால் கூறியிருக்க அதைச்சற்றும் கவனியாது, வியாசர்கட்டுக்கஞ்சி, குரும்பையாடுகள் மாதிரி ஆம் ஆம் என அதைப் பின்பற்றினார்கள்,

(இன்னும் வரும்.)

அடிசைகிழார் அ. சிதம்பரனார்.

---

# தமிழ்மொழியும், சிவநெறியும்.

(முன்தொடர்பு தொகுதி 2, பகுதி 8, பக்கம் 236.)

இக்கருத்தை,

திரு. நா. தேவாரம்.

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந்தந்து தரணியொடு
வானாளத் தருவரேனும்
மங்குவாரவர் செல்வ மதிப்போ மல்லோ மாதேவர்க்
கேகாந்த ரல்லாராகில்
அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயரா
யாவுரித்துத்தின் றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராயி னவர்
கண்டீர் நாம் வணங்குங் கடவுளாரே.

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS REGISTERED 9 OCT 1913

முண்டகோபநிஷத்.

"அபிவாயச் சண்டாள சிவ இதிவாசம்வதேத், தேகஸஹ சம்வதேத், தேகஸஹ ஸம்வசேத்தேநஸஹபுஞ்ஜித"

(இதன்பொருள்) சண்டாளனாயினும் சிவனென்ற சொல்லைச் சொல்வானானால் அவனோடு பேசுக, அவனோடு இருப்பாயாக, அவனோடு உண்பாயாக.

என்றல் முதலியசுருதிகள் விளங்குகின்றன. இதுகாறுங் கூறியவாற்றால் சைவ சமயம், தமிழ் நாட்டில் 12000. ஆண்டுகட்கு முன்னரே தோன்றியுளதென்றும், அது எல்லவருக்கும் பொதுவாம் ஞானமதமென்றும் உலகு, உயிர், தெய்வம் என்று முப்பொருள்களுள. உயிர்கள், ஜாதி, மதவேற்றுமை யின்றி, அவர்கள் புரியும் நன்மை, தீமை உபாசனைகளுக்குரிய பலனை அடைவர். நாம் கடவுளைநம்பி நன்னெறியிலொழுகி அவனை வழிபடல்வேண்டும். தன்னுயிர்போலெவ்வுயிரினிடத்தும் அன்புசெலுத்தவேண்டும். விபூதி, ருத்திராக்ஷதாரணம், பஞ்சாக்ஷரஜெபம், ஜீவகாருண்யம் சைவத்துக்கு முக்கிய சாதனங்களென்றும் நன்கு விளங்குகின்றது.

இன்று சிவபிரான் பிரபாவங்களை யான் சொல்லவும் நீங்கள் கேட்கவும் அருளிய திருவருளைப்பன்முறை வணங்குகின்றேன்.

நம: பார்வதீபதயே.

மறைத்திருவன் விருதை சிவஞானயோகிகள்.

# அறுவகைச்சமயம்.

(முன்தொடர்பு தொகுதி 2, பகுதி 8, பக்கம் 244:)

## பௌத்தம் (Agnosticism)

பௌத்தமதத்தை ஸ்தாபித்தவர் கௌதமசாக்கிய முனிவர் இது புறப்புறச் சமயத்தின் பாற்படும். பௌத்தசமயத்தின் பிரிவுகளான மாத்தியமிகம், யோகாசாரம், சௌத்திராந்திகம், வைபாடிகம் என்னும் நான்கு சமயங்களையும், ஆருகத சமயத்தையும் ஒருங்குகூட்டி "பௌத்தமதம்" என்று இங்கு சௌகரியத்திற்காக வழங்குதல் இழுக்காகாது, "மூலகாரணத்தைக்கண்டு பிடிப்பது எவருக்கும் சாத்தியமாகாத விஷயம். வாழ்க்கை துன்பத்திற்கு ஏதுவாயுள்ளது" என்னும் கொள்கையே பௌத்தசமயத்தின் முக்கிய போதனையாகும்.

"பிறந்தோருறுவது பெருகியதுன்பம்
பிறவாருறுவது பெரும்பேரின்பம்
பற்றின்வருவது முன்னது பின்னது
அற்றோர் உறுவது அறிக"

என்னும் மணிமேகலை அடிகளாலும் இவ்வுண்மை தெளியப்படும், பௌத்தருள், மாத்தியமிகர் என்னும் பிரிவினர் "உலகத்துப்பொருள் உள்பொருளாயின் அழியாது; இல்பொருளாயின் தோன்றாது; உள்ளவுமில்லவுமாமெனின் முரணும்; இரண்டுமல்லவெனின் உணர்ச்சி கூடா. ஆதலால் எல்லாப்பொருளும் வெறும் சூனியமே, மயக்கத்தால் உள்பொருள்போலத் தோன்றுகிறது" என்று கூறி உலகமும் மற்றைப் பொருள்களும் சூனியம் எனவாதிப்பார்கள். ஆதலால் சூனியவாதிகள் என்றும் இவர்கள் அழைக்கப்படுவார்கள். ஆன்மவிசாரணை செய்யத் தொடங்கி உடற்கருவிகள் பலவற்றையும் "இது ஆன்மா அன்று இது ஆன்மாவன்று" என்று சோதனைசெய்துகொண்டே போகுங்கால், கடைசியில் சூன்யம் தலைப்படுகிறதாதலால் எல்லாம் சூனியமே என்பது இவர் கொள்கையாகும். ஆனால், "இது



அன்று" "இது வன்று" என்று சோதனைசெய்து கொண்டு போகும் வியாபாரத்தினைச் செய்யும் அறிவே ஆன்மாவாகும் என்று கூறிச் சைவ சித்தாந்தம் இவர்களை மறுக்கிறது.

இனி, யோகசாரர் என்பார் "யாவையும் சூனியம்" என்னும் சூனியவாதிகளை மறுத்து "ஞானமாத்திரம் உள்ளது; அதுவே ஆன்மா" என்று கூறுவார்கள். சௌத்திராந்திகர்கள் இவர்களை மறுத்து "ஞானம் மாத்திரம் உள்பொருள் என்றல் பொருந்தாது, புறப்பொருளும் உள்பொருளேயாகும், 'நான் இது கண்டேன்' 'நான் இது அறிந்தேன்' என்று சுட்டியறியப்படுதலே இதற்குச் சான்றாகும். ஆனால் புறப்பொருள்கள் உள் பொருளாயினும் அவை காட்சி பொருளல்ல, குடத்தைக் கண்டபிறகு குடவடிவாகிய ஞானம் என்றும் இருக்கிறது. ஆனால் குடம் அழிந்துவிடுகிறது. ஆதலால் புறத்துப்பொருள் காட்சியளவையால் உணரப்படமாட்டா; வழியளவையான் உணரப்படும்" என வாதிப்பார்கள், "புறப்பொருள் காட்சியளவையால் உணரப்படாமல் ஞானத்தால் அநுமித்தறியப்படும் என்று கூறுதல் பொருந்காது. ஞானமே காட்சிப்பொருளாதலால், அதனைத்தவிர வேறுகாட்சிப்பொருள் இன்றாயின் உடனிகழும் உணர்வு ஏற்படாது. அது ஏற்படாமல் வழியளவையால் அறியமுடியாது. ஆதலால்புறப்பொருள் பிரத்தியட்சப் பிரமாணத்தாலும் அறியப்படும்" என்று கூறிவைபாடிகர்கள் சௌத்திராந்திகரை மறுப்பார்கள்.

இனி, ஆருகதமதத்தினர்; உலகாயதர், நான்குபிரிவினரான பௌத்தர் இவர்களைப்போல் சித்துப்பொருளான ஜீவன் என்பது ஒன்று இல்லை என்று கூறாமல் 'ஜீவன் உண்டு' என்று சொல்லும் கொள்கையினர். இவர்களாற் கொள்ளப்படும் பதார்த்தங்கள் (1) சீவன் (2) அசீவன் (3) ஆச்சிரவம் (4) சமுவரம் (5) நிர்ச்சரம் (6) பந்தம் (7) வீடு என ஏழு. இவற்றுள் சீவன் அநாதிசித்தன், முத்தன், பெத்தன் என்று மூத்திறப்படும். அநாதிசித்தன், அருகக்கடவுளாவார். மோகம் முதலிய பந்தத்தினின்று நீங்கிய சீவன், முத்தன் எனப்படும். பந்தத்தில் கட்டுண்டு கிடக்கும் சீவன், பெத்தன் எனப்படும். நிலம்

முதலிய நான்கு பூதங்களும், புல்மரம்முதலிய நிலையியற்பொருளும் பிறவும் அசீவன் எனப்படும், இவற்றிற்குக் காரணம் பரமாணுக்கள். ஆச்சிரவமாவது பொறிவழிச்சேரலும் கன்மத்தொடர்ச்சியுமாம். சமுவரமாவது முத்திக்குக் காரணமாவது. ஜீவர்களை வதைசெய்யாதிருத்தல், இனியவை கூறல், நியமவுணவுமுதலியன சமுவரமாகும், நிர்ச்சரமாவது தவம்புரிதல், பந்தமாவது பிறப்பிறப்பிற்குக் காரணமான மோகம் முதலிய எண்குணங்கள். வீடாவது பந்தநீக்கம்பெற்று மேலே ஆகாயத்தை நோக்கி சீவன்செல்லல். இதுவேமுத்தி. இத்தகைய கொள்கைகள் ஆருகதமதத்தினரின் கொள்கைகளாகும்.

இனி, பௌத்தமதம் 'கடவுள் ஒருவர் உண்டு' என்னும் கொள்கையுடையதன்றாயினும், இக்காலத்தில் அது உலகத்தின் பலபாகங்களிலும் மிகுதியாய்ப் பரவியிருப்பதற்குக் காரணம் என்னவென்றுபார்ப்போம். பௌத்தமதத்தின் போதனைகள் மிகச் சிறந்தவைகளாம். அவற்றுள் முக்கியமானதும், அம்மதத்திற்கு உயிர் நிலைபோல் விளங்குவதுமான போதனை ஜீவகாருண்ணிய ஒழுக்கமேயாம். பௌத்தமதம் இன்றைக்குச் சுமார் 2500 வருடங்களுக்கு முன்னரே இந்தியாவில் தோன்றியிருக்கக்கூடுமாயினும், அது மிகப் பிரபலமாய்ப்பரவ ஆரம்பித்தது கி. மு. 242—ஆம் ஆண்டிற்குப் பிறகுதான்,—அதாவது அசோகமன்னன் காலத்திற்றான். இவன் பௌத்த சமயத்தை உலகமெங்கும் பரப்புவதற்காகப் பெரும் முயற்சிகள் செய்தான். அசோகமன்னன் தன் உற்றாரையும் உறவினரையும் வேறுபல பௌத்த உபந்நியாசகர்களையும் சிலோன், சைனா, திபெத்முதலிய அந்நிய நாடுகளுக்கும் இந்தியாவின்பலபாகங்களுக்கும் அனுப்பிப் பௌத்த சமயத்தைப் பரவச்செய்தான். கல்வெட்டுக்களில் பௌத்தமுனிவரின் உபதேசங்களைப் பதிப்பித்தான்.

இம்மன்னன் பிரஜைகளிடத்து அன்புடையவன். தயை தாட்சண்ணியம் நிரம்பவாய்ந்தவன். * "அசோகமன்னனுடைய பெருமை அவனுடைய தேசத்தின் விஸ்தீரணத்தைப்

* Vide Romesh chunder Dutt's Ancient India.



பொறுத்ததென்று சொல்வதைக் காட்டிலும், இராச்சியபரிபாலனத்தில் அவன் காட்டிய தாராள நோக்கத்தையும், உண்மையை நிலைநாட்டுவதில் அவனுக்கிருந்த விருப்பத்தையும் பொறுத்ததென்று சொல்லலாம்; விக்கிரமாதித்தன், அக்பர் இவர்கள் கூட அவனைப்போல் உலகப்பிரசித்தியான கீர்த்தியைப்பெற்றார்கள் இல்லை."

இம்மன்னனுடைய கல்வெட்டுக்களில் காணப்படும் பௌத்தமத உபதேசங்களில் முக்கியமானவை சில பின்வருமாறு:— யாகத்திற்காக எந்தவகையான மிருகங்களையும் கொல்லக்கூடாது (2) பெற்றோரிடத்து அன்பாயிருத்தல் வேண்டும் (3) உற்றார் உறவினரிடத்துத் தயாளமாயும் தாராளமாயும் இருத்தல்வேண்டும் (4) ஜீவப்பிராணிகளுக்கு எத்தகைய துன்பமும் இழைக்கலாகாது (5) இருதயசுத்தி. இன்னும் இவைபோன்ற பல உபதேசங்கள் அசோகன் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. "ஆனால் கடவுளைப்பற்றியாவது, ஆன்மாவைப் பற்றியாவது, புத்தரைப்பற்றியாவது, புத்தமதத்தைப்பற்றியாவது ஒருவார்த்தைகூட அசோகனுடைய கல்வெட்டுகளில் இல்லை" என்று புரொபஸர் ரிஸ்டேவிட்ஸ் (Rhys Davids) 'பௌத்த இந்தியா' (Buddhist India) என்னும் அரியநூலில் வற்புறுத்திக்கூறுவதால் "கடவுள் விசாரணை" "ஆன்மவிசாரணை" அசோகமன்னன் மனத்தை அவ்வளவாய்க்கவரவில்லை என்பது புலனாகிறது. பௌத்தமத சம்பந்தமாய் விரிவாய் அறிவதற்கு 'மணிமேகலை' "சிந்தாமணி" முதலிய சங்கத்தமிழ்நூல்கள் கருவியாய் இருக்கின்றன. இன்னும் விரிப்பிற்பெருகும்.

(இன்னும் வரும்.)

நாகை. வி. கோபாலகிருஷ்ணன்.

# தமிழ்மொழியும் சைவசமயமும்.

தமிழெனினும் சிவமெனினுமொக்கும்; தமிழ் இனிமையு மாம், செந்தமிழ் ஈண்டுச் செம்மைநடு. செங்கதிர், செஞ்ஞாயிறு என்பவற்றுட்போல செந்தமிழ்நாடு, கொடுந்தமிழ் நாடுகளுக்கு நடுவிலுள்ள தமிழ்நாடென்பது பொருள்.

"செந்தமிழ் நிலமாவது வைகையாற்றின் வடக்கும் மருத யாற்றின் தெற்கும் கருவூரின் கிழக்கும் மருவூரின் மேற்குமாம்."

கொடுந்தமிழ்நாடு, செந்தமிழ் நாட்டைச் சூழ்ந்த தமிழ் நாடென்று பொருள். கொடுமை - வளைவு; அதாவது சூழ்தல், செந்தமிழ் நிலம் நடுவிலும், அதனைச்சூழப் பன்னிரண்டு கொடுந் தமிழ் நிலமும், அக்கொடுந்தமிழ் நிலத்தைச் சூழச் சிங்களம் சோனகமுதலிய நாடுகளும் வைத்துக்கூறினதை யுணரிற் சூரியன் கோளரசு என்பதுபோலத் தமிழ்மொழியா மென்பது பெறப்படு கின்றது. மொழி - பாஷை. கோளரசு - கிரகபதி. ஏனைய கோள்களுக்கு நடுவிலிருத்தலின், அரசெனப்பட்டது, வலம்புரி யும் சலஞ்சலமும் பாஞ்சசன்னியமும் நடுவிலிருத்தலின் தகம்மை யாயின.

இங்ஙனமாயதகம்மை இயற்கை அமைதியாம். கல்லூரி முத லியவற்றில் தகம்மையாயினோர் நடுவில் வீற்றிருந்தே கண்காணஞ் செய்வர்.

கண்காணம் - மேல்விசாரணை.

கோள்களுக்கு நடுவிலுள்ளது சூரியன்; நவந்தருபேதத்துள் நடுவிலுள்ளது சதாசிவம்; சூரியன் நடுவிலுள்ளதும் சதாசிவமே.

உலகமூன்றில் நடுவிலுள்ளது இவ்வுலகம்; இவ்வுலகில் நடுவி லுள்ளது குமரிநாடு; குமரிநாட்டி னடுவிலுள்ளது குன்றநாடு; குன்றநாட்டி னடுவிலுள்ளது மணிமலை; இம்மலை சூரியன் மைய வரியுமாம்.

வேதமூன்றுள் நடுவிலுள்ளது எசுர்வேதம்; இவ்வேதமே நண்பகலில் ஓதற்பாலது; நண்பகல் - உச்சிப்பொழுது, எசுர்வே



தத்தினடுவிலுள்ளது சதருத்திரிய மந்திரம்; இதனடுவிலுள்ளது பஞ்சாட்சர மந்திரம்; இதனடுவிலுள்ளது சிவம்.

இனிச் சூரியனுக்கும் குன்றநாட்டிற்கும் எசுர்வேதத்திற் கும் இயைபுண்மையிற் சூரியனாலுண்டாகி மணிமலையில் வளர்ச்சி பெற்ற தமிழ்மொழிக்கும் சைவசமயத்துக்கும் பெரிதும் இயை புண்மை கண் கூடாகின்றது.

"அசலேசுரர் புத்திரனே குணதிக்
கருணோதய முத்தமிழோனே"—(திருப்புகழ் அசசு)
"செந்தமிழாகரனே சிவசிவசூரியனே"(சூரியதோத்திரம்)

என்பவற்றால் தமிழ் சூரியனாலுண்டாகிய தென்பது தெள்ளி தாகின்றது.

சமவாயம் என்பது சமயமாயிற்று. சமயவாயம் - ஒற்றுமை, இலங்கையைப் பூமியின் மத்தியாக வைத்துக் கணனவிதி எழுதத் தொடங்கிய நமது நாட்டுக்கோள சாஸ்திரிகள் "இலங்கை மத்தியி லும் யவகோடி கீழ்ப்புறத்திலும் உரோமகம் மேற்புறத்திலும் அடியில் சித்தபுரியும் இக்கோணத்தி லமைந்திருக்கின்றன" என்று வெளியிட்டனர். யவகோடி சாவகம்.

சித்தபுரி - அமரிக்கா.

முற்கூறிய குமரிநாடே இலங்கையாகும்.

அது கடல் கோட்பட்டது.

இதனால் குமரிநாடு பூமியின் மத்தியென்பது துணிபு.

"பேராற்றருகில் பிறங்குமணிமலையில்
சீராற்றுஞ்செங்கோற் றிறற்செங்கோ—னோராற்றும்
பேரவையிலேநூற் பெருமக்கள்சூழ்ந்தேத்தப்
பாராசுசெய்ததமிழ்ப் பைந்தேவி"

என்னும் தமிழ்விடுதூதினால் தமிழ் மணிமலையில் வளர்ச்சி பெற்றமை தெள்ளிதாகின்றது.

பாழை—பாழி பாழையாயிற்று; சித்தர்கள் பரிபாழை யென் பர், பாழி - முனிவர்வாசம்.

முனிவர் குழாத்தினின்று முண்டாயதென்பது பொருள், முனிவர் வாசமாவது. மணிமலையிலுள்ள குகை. பாழி - குகை, முனிவர் வாசம், தேவர்கோயில்,

"பித்தர்கோயிலரதைப் பெரும்பாழியே" (சு-தே)

பாழி—பாழை; இகரம் ஐகாரமாயிற்று.

முசலி முதலையாயினதுபோல.

மற்றெல்லாப் பாழைகளிலும் தமிழின் வியாபகமும், மற்றெல்லாச் சமயங்களிலும் சைவசமயத்தின் வியாபகமும் உண்மையின் ஒரு பாழையையும் இகழற்க; ஒரு சமயத்தையும் இகழற்க, மற்றும் மொழிநூலென்னும் பாஷாசாஸ்திரத்தால் நன்கு விளக்கமாகும்.

ஸ்ரீமான் மறைத்திருவன் சுவாமி விருதை சிவஞானயோகிகள் எழுதிய தமிழ்மொழியும் சிவநெறியும் என்னும் உரைச்செய்யுள் சாலவும் மதிக்கற்பாலது; யாவரும் கற்க.

இங்ஙனம்

மாகறல் - கார்த்திகேய முதலியார்,

கண்டி, சைதாப்பேட்டை.

---

## விருப்பு - வெறுப்பு.

விருப்பு என்பது ஒன்றை வேண்டிப் பந்தப்பட்டுப் பூரண இலட்சியத்தை யதிசயமாகப் பார்த்து நிற்றல், இவ்விருப்பால் தானுங்கெட்டு இதரவஸ்துவுங் கெட்டுச் சாதனமுந் தடைபட்டுவிடும். எவ்வகையிலும் விருப்பென்பது கூடாது.

வெறுப்பென்பது வேண்டாமை. இராகம் இதரவஸ்துவைப் பற்றுதிருத்தல். இராகந்தோன்றில் ஜீவோபகாரத்தைத் தடைசெய்யும். ஆகலின் வெறுப்புகூடாது மேற்குறித்த இரண்டுமற்றுச் சத்துவமாய் நிற்றல்வேண்டும்.

---

# அன்பு.

---

(முன்தொடர்பு தொகுதி 2, பகுதி 8, பக்கம் 247:)

6. நஞ்சைவசன்மார்க்கத்தின் படியோ, பரம்பொருள், மற்றெல்லாப்பொருள்களைப் பார்க்கிலும் நம்பால் விசேஷதொடர்புடைய பொருள். இஃதொன்றே, நம்மில் ஒவ்வொருவர்பாலும், எக்காலும் பிரிப்பின்றி யிரண்டறக்கலந்து கிடக்கும் பொருள். இக்கலப்பினையுண்மையிலறியாதாரே, ஜீவர்களாகிய நாமும் பரம்பொருளும், ஒன்றேயெனக்கூறிமயங்குவர். இவ்விருதிறத்துப் பொருள்களும், ஒன்றேல், இவற்றுள் தொடர்பென்பதே யின்றாமென்பதையறியார். இவரேயன்றி வேறு சிலர், நாமும் பரம்பொருளும் வேறென்ப துண்மையாயினும், இவைகள் ஒன்றோடொன்று கலத்தலில்லையென்பர். இவர் கொள்கைபின்படியும், பரம்பொருட்கும், நமக்கும் யாதுந்தொடர்பின்றாய் முடியும். அன்றி ஏதேனும் தொடர்பிருப்பினும் ஏகதேசமாய் முடியும், எனவே பரம்பொருட்கும் நமக்கும் என்றும் பிரிதலில்லாத அதிவிசேஷ அத்வைத தொடர்புள்ளதாகக் கூறும் மார்க்கம், நஞ்சைவ சன்மார்க்க மொன்றேயாம். இத்தகைய தொடர்பினாலேயே பரம்பொருள் நமக்கு ஓர் பெரிய உபகாரத்தினைச் செய்துவரும். இவ்வுபகாரம் சூரியனொளியின் கலப்பினால், கண்ணுக்குப் போதரும் உபகாரம்போலொத்ததொன்றாம். நங்கண்களில், இவ்வொளி கலத்தலின்றேல், அவைகள் சூரியனைக்காணலுங் கூடாதாகும், பிறபொருளைக் காணலுங் கூடாதாகும். அதுபோலப் பரம்பொருள், நம்மறிவினோடுகலக்க வில்லையேல், நம்மறிவு, அப்பரம் பொருளினையுமறியாது, வேறொன்றனையுமறியாது. எனவே அப்பரம்பொருளின்பால், எத்துணையின்ப மிருப்பினும், நமக்குப்பயனின்றாய் முடியும். அவ்வின்பத்தை நமக்குத் தருதற்கென்றே யப்பரம் பொருள் நம்மோடு அத்துவிதமாய்க் கலந்துநிற்கும்.

"தேனையின்னமுதமுமாய்த்தித்திக்குஞ் சிவபெருமானை
தானேவந்தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்"

என்றும்

"உருத்தெரியாக் காலத்தேயுள் புகுந்தென் னுளமன்னிக்
கருத்திருத்தியூன்புக்கு கருணையினாலாண்டுகொண்ட
திருத்துருத்திமேயானைத்தித்திக்குஞ்சி சிவபதத்தை
அருத்தியினைனையடியேனணி கொடில்லை கண்டேனே."

என்றும், நமது மணிவாசகசுவாமிகள் அருளிப்பாடியுள்ளார்கள். இவ்விதமாய் நம்மோடு பிரிவறக்கலந்து நின்று, தன்மாட்டுள்ள பேரானந்தவின்பத்தினை நமக்குத் தருதலினாலேயே யிப்பரம் பொருள் நமக்கு எவ்வாற்றானும் உரிமையாகும். இப்பரம்பொருள் மற்றெல்லாப் பொருள்களினு மிகுந்த இன்பத்தினையுடையதும், நம்மாட்டு மிகுந்த தொடர்பினையுடையது மாதலால், அவையெல்லாவற்றினும் இஃதொன்றே நம்விசேஷ அன்புக்கு எவ்வாற்றானும் உரியதாகும். இக்கருத்தினையே நம்மணிவாசகப் பெருமானும் "எதில்லாப்பதங்கள் யாவையுங்கடந்தவின்பமே யென்னுடையன்பே" என்றருளியதும். இது நிற்க, ஏனைப்பொருள்களும் நம்மன்பிற்கு எத்துணையேனும் உரியனவாவெனபதை ஆராய்வாம்.

7. யாரேனும், ஒருவர்பால் உண்மை யன்புடையான் அவர்பால் மட்டுமன்று, அவரது தொடர்புடையார் பாலெல்லாம், அன்புடையனாகின்றான். தம்மனைவிபால் மிகுந்த அன்புடையான், அவள் உறவினர்பாலெல்லாம் அன்புடையனாகின்றான். அதுபோல், உண்மையிற் சிவபரம்பொருளின்பா லன்புடையான் அப்பரம்பொருளின் தொடர்புடைய எல்லாப் பொருள்களின்பாலும் அன்புடையனாவான். அப்பரம்பொருளின் தொடர்போ, மனித உயிர்கள்பால் மட்டுமல்ல, மற்ற உயிர்கள் பாலும், உயிரில் பொருள்கள் பாலும் எங்கணுமுள. பிறபொருள்களின் பால் அத்தொடர் பிருத்தலினாலேயே, அப்பொருள்கள், நம்மறிவிற்கு விஷயமாகின்றது. சூரியனொளி நம் கண்களிற் கலந்திருந்தாலும் பொருள்களின்கண் கலக்கவில்லையேல், அப்பொருள்கள் நமக்கு விஷயமாதலில்லை. அதுபோலப் பரம்பொருள் நம்மறிவின்கண் கலந்திருந்தாலும், ஏனைப் பொருள்களின் கண்ணுங் கலக்கவில்லையேல், அப்பொருள்களொன்றும் நமக்கு ஒரு சிறிதும் விஷயமாகாது. எனவே நம்மறிவிற்கு விஷயமாகும் எவ்வகையுயிர்கள் பாலும், நம்பரம்பொருள் நம்பாற்போல அத்துவிதத் தொடர்பினையுடையது என்பது விளங்கும். இத்தகைய தொடர்புடைய எல்லாப்பொருள்களின் கண்ணும் நம்மன்பு நிகழ்வதாகும். என்பவே பரம்பொருளன்றியேனைப்பொருள்களின் பால், நம்மன்பு நிகழ்தற்குக்காரணம் இரண்டு விதமாய்முடியும். அவையாவன, அப்பொருள்கட்கும் நமக்கும் நேரிலுள்ள தொடர்பும், அவற்றிலுள்ள இன்பமும் ஒருவிதகாரணங்களாம். அன்றி நம்மோடு விசேஷதொடர்புடைய சிவபரம்பொருட்கும் அப்பொருட்குமுள்ள தொடர்பும், அச்சிவபரம் பொருளிலுள்ள இன்பமும் மற்றொருவிதகாரணங்களாம். இவ்விருதிறத்தனவாய அன்பில் எது மிகச்சிறந்த தென்பதை யடுத்து ஆராய்வாம்.



8. பரம்பொருளன்றி யேனைப் பொருள்கள்பாலுள்ள இன்பம் மிகக்குறுகியதே யென முன்னரே கூறினோம். அன்றியும் நமக்கும் அப்பொருள்கட்குமுள்ள தொடர்பும் மிக ஏகதேசமே. அத்தொடர்பும் எல்லா உயிர்கள்பாலுமில்லை. சிற்சில உயிர்கள்பாலேயுளது. நிலைபேறுடையதுமல்ல சிறிதுகாலத்தில் மாறுந்தகைமைத்து என்பவே யித்தகைய தொடர்பு காரணமாய் வருமன்பும் எல்லா உயிர்கள்பாலுஞ் செல்லாது எல்லாக் காலங்களினும் நிகழாது மிகக்குறுகியதுமாகும். இவ்வன்பிற்குஞ் சிவபரம்பொருட்கும் யாதொருசம்பந்தமுமில்லை. அப்பரம்பொருளை யுண்மையிலறியாதார் மாட்டு நிகழும் அன்பு இதுவே. இத்தகைய அன்பினையுண்மையாகக் கொள்பவரே,

"அன்புஞ் சிவமுமிரண்டென்பரறிவிலர்"

ஆவர். இது நிற்கச், சிவபரம்பொருளின் தொடர்புகாரணமாயுண்டாமன்போ யிதுபோலன்று. அத்தொடர்பு எல்லாத்தொடர்புகளிலும் அதிவிசேஷ தொடர்பு. அது எல்லாப் பொருள்களினுமுள்ள தொடர்பு. இவ்விததொடர்பாலுண்டா மன்பும், அத்தன்மைத்தேயாம். இவ்வன்பிற்குஞ் சிவத்திற்கும் வியாபகம் சமமாம். இவ்விரண்டிற் கொன்றோடொன்று விரவிப்பேதமறநிற்கும். இதனை

எல்லாருமுணரார். சிவபரம் பொருளையுண்மையி னுணர்வாரே யிதனையுணர்வார். இவரே அன்பே சிவமாவதெனை அறிவர்,

"அன்பேசிவமாவதாருமறிகிலர்
அன்பேசிவமாவதாருமறிந்தபின்"

என்றது இத்தகைய அன்பினையே. அன்றியும், இவ்வன்பே எல்லாவுயிர்கள் பாலும், ஒரே தன்மைத்தாய் நிகழுமன்பு. இதுவே பிறவுயிர்கள் யாவையுந் தன்னுயிர்போற் கருதுமன்பு. பரமஜீவகாருண்ணியமென்பது மிதுவே. இதுவன்றி யேனைச்சமயிகளாலும், ஏனையவராலும் கூறப்படும் ஜீவகாருண்ணியம், போலி ஜீவகாருண்ணியமாகும். எனவே நம்சைவ சன்மார்க்கத்திற்கூறப்படும் ஜீவகாருண்ணியமே உண்மை ஜீவகாருண்ணியமென்பது பெற்றது. இச்சன்மார்க்கம் வளர்ந்தோங்க நிலவும் இத்தென்னிந்தியாவில் மட்டும் புலாலுண்ணல், மிகக்குறைதற்குக் காரணமுமிம்மார்க்கமே. இதன்படி பொருள்கள் உள்பொருள்களே யாதலாலும், அவையாவும் நம் உண்மையன்பிற்குரியனவே யாதலாலும், நம்பரம்பொருள் எவ்வுயிர்களையேனும் வதைக்கலாமென யாதோர் இதையு மெக்காலத்திலுங் கூறினரில்லை.

9. இது நிற்கச் சிவபரம்பொருளொன்றே, நம்மன்பிற்கு மிக உரிமையாம் பொருளென்று கூறினோம். ஆனால், அப்பொருளின்பால், எக்காலத்திலும் நம்மன்பு செல்லாதிருக்கக் காரணந் தானென்னை, கூறுதும். யாதானுமோர் பொருளின்பால், இன்பமிருப்பினும், அப்பொருட்கும் நமக்குந் தொடர்பிருப்பினும் அப்பொருளினையுந் தொடர்பினையும், நாம் உணர்ந்தாலன்றி, நம்மன்பு அப்பொருளின்பா லுண்டாதலில்லை. சர்க்கரையில் இனிப்பிருந்தாலும், அது நம் நாவிற் சேர்ந்திருந்தாலும், நம் நாதிமிர் நோய் முதலியவற்றாற் றடைப்பட்டு, அச்சர்க்கரையின் பால் நிகழாது அதுபோல, ஓர் பொருளின்பால், நம்மன்பு நிகழ்தற்குக் காரணம், அப்பொருளையும் அதன்றொடர்பினையு முணர்தலாகும். அவ்வன்பின் பெருக்கிற்குக் காரணம் அவ்வுணர்விலழுந்தி நிற்றலாகும். சிவபரம்பொருளின்பால் நிகழவேண்டும் அன்பிற்குங் காரணம் இதுவே. அஃதாவது சிவபரம்பொருளினையும், அதன் தொடர்பினையுமுணர்ந்து அதன் கண்ணழுந்தி நிற்றலாகும். இத்



தகைய உணர்விலழுந்தி நிற்றலே சரியையாதி வழிபாடுகளாம். இவ்வழி பாடுகளாலேயே, சிவ பரம்பொருளின்பால், நம்மன்பு பெருகவேண்டுவதாகும். இவ்வழிபாட்டினையே, நம்மணிவாசக மூர்த்தியும்,

"ஆமாறுன்றிருவடிக்கே யகங்குழையேனன்புருகேன்
பூமாலைபுனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன்புத்தேளிர்
கோமானின்றிருக்கோயிறூகேன் மெழுகேன்கூத்தாடேன்
சாமாறேவிரைகின்றேன் சதுராலேசார்வானே."

என்று கூறியதும், இனியிவ்வழிபாட்டினை யியற்றும் விதமென்னையென யாராய்வாம்.

10. சிவபரம்பொருளோ, அதிவியாபகமும், அதிசூக்குமமுமான பொருள். இதனினும் வியாபகப்பொருளுமில்லை. இதனினும் சூக்குமப் பொருளுமில்லை. இத்தகைய பொருளை, யிதனை நோக்க மிகத்தூலமும், மிக ஏகதேசமுமான நம்மறிவாலுணர்தல், ஒருவாற்றானு மேலாதாம். இவ்வேலாமையை யுணர்ந்தே, நம்சிவபரம்பொருள், தன்னை நமக்குணர்த்தவேண்டி, தமது அருட்குணாதிசயங்கள் நம்சுட்டறிவிற்கிலக்காம் பொருள்களில் விளங்கும்வண்ணம், அருட்கோலங்கொண்டு நிற்கும். இவ்வருட்கோலங் கொள்ளவில்லையேல், எம்மால் அப்பரம்பொருளை யுணர்தல் ஒரு சிறிதும் முடியாது. இவ்வருட்கோலங்களே யப்பொருளின் தடத்த வடிவங்களாம். இவ்வடிவங்கள், நம் சுட்டறிவிற்படும் பொருள்களி னியற்கையமைப்பிலுங் காணப்படும். அத்தகைய பொருள்களின் சேர்க்கை யமைப்பிலுங் காணப்படும். இயற்கையமைப்பிற் காணும் வடிவங்களே குருசங்கம வடிவங்களாம். சேர்க்கை யமைப்பிற் காணும் வடிவங்கள் இலிங்க வடிவங்களாம். இம்மூவகை வடிவங்களிலும், பரம்பொருளின் குணாதிசயங்களை யுணர்ந்து, அவற்றின்பாலழுந்திநிற்றலே, அப்பொருளின்பால் நம்மன்பினை வளர்த்தற்குபாயமாம். இதுவே பத்திநெறி யெனப்படும். இந்நெறியிற் சென்றோரே, முத்திநெறியினை யடைவார். இக்கருத்தினையே நம்பரமாசாரிய சுவாமிகள்,

"முத்திநெறியறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்து"

என்று கூறியுள்ளார்கள். இனிபின்னெறி நின்றார் திறத்தினையும், ஒருசிறிது ஆராய்வாம்.

11. மேற்கூறிய மூவகைவடிவங்களினும், பரம்பொருளினைக் கண்டுவழிபடுவார்க்கு, அப்பொருளின் பாலன்பு, மென்மேலும் பெருகிவருவதாகும். இவ்வழிபாட்டில் முற்றிய இவர் பால் அன்பின் பெருக்கோடு பேரின்பப் பெருக்குமுண்டாம். "என் அன்பினில் விளைந்த ஆரமுதே" என்றதும் இப்பேரின்பத்தினையே, இவர் உடல் உயிர்முற்றும் இவ்வின்பமயமாயே நின்று உருகுவதாகும்.

"அன்பினாலென்றன் னாவியோடாக்கை
யானந்தமாய்க் கசிந்துருக"

என்ற திருவாசகம், இவர்மாட்டு மிகவுண்மையாய் முடியும். இவர் பரம்பொருளன்றி வேறெவ்வகைப் பொருளினும் எவ்வகையின்பத்தினையுங் காணார். இவர் கருவிகாணங்கள் யாவும், இப்பேரின்ப சுகத்தினையே காணும். இவரே,

"காணுங் கரணங்களெல்லாம் பேரின்பமெனப் பேணுமடியார்" இவரது குணங்கள் யாவும் சிவபரம்பொருளது அருட்குணங்களாய் மாறப்பெறும். இவரது அன்பின்றிறமே யருட்டிறமாக மாறும். இவரே யாவராலும் சிவபரம்பொருளென வழிபடுதற்குரியார். இவர்பாலே அன்புஞ்சிவமு மொருங்குகூடி யாதொரு பேதமுமின்றி விளங்கும். இவரது வடிவமே அன்பின் வடிவம். இதுவே, சிவத்தின் வடிவம். இவரே யன்பே சிவமா யமர்ந்திருப்பவர்.

"அன்புஞ்சிவமு மிரண்டென்ப ரறிவிலர்
அன்பே சிவமாவ தாருமறிகிலர்
அன்பே சிவமாவ தாருமறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருப்பாரே."

திருச்சிற்றம்பலம்.

V. P. காந்திமதி நாதப்பிள்ளை,
வக்கீல், அம்பாசமுத்திரம்.

---

# கடவுளினருள் விசிட்டம்.

கடவுளினருள் விசிட்டம்.—அஃதாவது கடவுளுடைய அருளின் விசேடத்தைப்பற்றிக் கூறுதல். கடவுள் ஒருவர் இருக்கின்றார். அவருடைய அருள் இருக்கின்றது என்பன முதலிய தெளிவுடை வசனவிளக்கம் யாவரிடத்தும் பதிந்து நன்னிலையை அன்னோர் அடையவேண்டும் என்ற பெருவிருப்பினாலே இவ்விடயம் எழுதி வெளிப்படுத்தப்பட்டது.

ஆரிருந்தென் னார்போயென னாரமுதா மின்னருளின்
சீரிருந்தா லுய்வேன் சிவமே பராபரமே.

கடவுள் எப்பொழுதும் உள்ளவர். அவர் எங்கும் நிறைந்தவர். அவர் எல்லாமறிந்தவர், ஜீவான்ம குணங்களுள்ளே ஒன்றையாவது அவரிடத்திலே காணமுடியாது. எனவே அக்கடவுள் அநாதியே பாசங்களினின்றும் நீங்கித் சுத்தவாதீதராய் விளங்குவார் என்பது வெளிப்படையாகும்.

இங்ஙனமே கடவுளுடைய இலட்சணங்கள் பலவுள. இத்தகைய இலட்சணங்களோடு கூடிய அப்பரஞ் சோதிஸ்வரூபராகிய பகவான், ஆன்மாக்களின்மீது வைத்த ஒப்பற்ற கிருபையினாலேதான் தமது அருட்சத்தியை அதிட்டித்து நின்று ஆன்மாக்களுக்குத் தநுகரண புவந போகங்களைக் கொடுத்துப் புசிப்பித்து அவ்வவ் வான்மாக்களின் பக்குவம் நோக்கி அவைகளை ஆனந்தமயமாக்கி யருளுவார். இப்படிக் கடவுள் செய்யாதிருந்தால் ஆன்மாக்கள் ஒருகாலத்தும் நற்கதியடையமாட்டா. அப்பெருமான் செய்வன யாவும் அருளின் மிகுதியேயாகும். அவைகள் யாவும் தம்பயன் குறியாது, ஆன்மாக்களாகிய பிறர் பயன் குறித்தனவே யாம். அஃது,

உருவருள் குணங்களோ டுணர்வருளுருவிற் றோன்றுங்
கருமமு மருளரன்ற கரசரணாதிசாங்கம்
தருமருளுபாங்க மெல்லாந் தானருடனக் கொன்றின்றி
யருளுரு வுயிருக் கென்றே யாக்கினன சிந்தனன்றே.

என்ற சித்தாந்தசாஸ்திரத் திருவிருத்தத்தானே நன்குபோதரும் இவ்வாறே ஆன்மாக்களுக்கு அருள் பாலிக்கும்படி கடவுளாற் கொள்ளப்பட்ட மூர்த்தங்களும் பல, அவைகளுள்ளே விநாயக சுப்பிரமணிய வைரவ வீரபத்திர மூர்த்தங்களே விசிட்டம்பெற்றன. இவைகளைக்கொண்டு துஷ்ட நிக்கிரக சிட்டபரிபாலனஞ் செய்த பரஞ்சோதியாகிய சிவமே பிரமா விஷ்ணு ருத்திரன இந்திரன் முதலிய யாவர்க்கும் மேலானவராவர். தற்காலத்திலே கடவுளென்று சிலராற் கொண்டாடப்படுவோர் இறப்பு பிறப்பு முதலிய குணங்களுடையார். ஆதலின், அவர்கள் கடவுளென்று அழைக்கப்படுந் தகுதியுடையரல்லர். முழுமுதற் கடவுளாகவுள்ளவர் சிவபெருமானேயாம், அப்பெருமான் கொண்டருளிய மூர்த்தங்கட்குச் செய்யும வழிபாடும் அவரையே சென்றடையும்.

இதுகாறுங் கூறப்பட்டவற்றானே சிவபிரானே முதற்கடவுள் என்பதும்; அவரிடத்திலே யன்றித் தற்காலத்திலே கொள்ளப்படும் நவீன கடவுளரிடத்திலே கடவுளிலட்சணமில்லை என்பதும் உணர்க. அன்றியும், கலியுகவரத காருண்ய ஸ்வரூபராகிய சுப்பிரமணியப் பெருமானை யாம் பேரன்புகொண்டு வழிபாடு செய்யுமிடத்து எமது வினைகளை யொழித்து வீடுபேறருள்வா ரென்பதையுந் தெற்றெனத்தெளிந்து; சிவதீட்சை பெற்றுச் சிவசன்னதாரணராய் வாழ்ந்து; நற்கதியடைய யாவரும முன்னிற்பேயாக.

வ. மு. இரத்திநேசுவர ஐயர்.

## சமாச்சாரங்கள்.

மொழிநூல்:—சுமார் இருபது வருஷங்களாகத் தமிழ் ஆரிய முதலிய பாஷா விசாரணை செய்ததனு மேலற்பட்ட விஷயங்களைப் பாயிரவியல், இலக்கணவியல், முதனிலையியல் என மூன்று இயல்களாகப் பாகுபடுத்து மொழிநூல் (PHILOLOGY) என்னும் பெயர்சூட்டி வசனநடையால் ஓர் நூல் இயற்றப்பட்டுள்ளது. அந்நூலால் தமிழே உலகத்து முதல் முதல் உண்டான இயற்கை மொழியென்பதும், பாளி தெலுங்கு முதலியனவெல்லாம் அத்தமிழினின்றுண்டான வழிமொழிக ளென்பதும், ஆரியத்துக்கு நெடுங்காலம் முற்பட்டதென்பதும் பிறவும், நன்கு விளக்கமாகும். தமிழ் ஆரியமென்னும் இரண்டு பாஷைகளும் ஓர் இயற்கைத் தாதுவிலிருந்து உண்டாகின்றன. பாயிரவியலில் தமிழ்க்கு வேண்டிய பலபல சரித்திரங்களும் மேற்கோள்களும் கூறப்பட்டுள்ளன. இலக்கணவியலில் எழுத்தோசை பொருளோசைகளின் தோற்றமும், எழுத்துகள் உண்டான வகையும், சந்திகள் உண்டான வகையும், மொழி முதல்வரும் எழுத்து வாரா எழுத்துகளுக்குக் காரணங்களும் எழுத்துகளின் திரிபும் சொற்களின் திரிபும், பிறவும் கூறப்பட்டுள்ளன. முதனிலையியலில் பொருளோசையினின்று சொற்களெல்லாம் பிரிகின்றவகையும், அவற்றுக்குப் பொருள் கொள்ளும் வகையும், கூறப்பட்டுள்ளன. இவ்வியலால்தான் எல்லாச் சொற்களும் காரணச் சொற்களென்பது விளங்கி நிற்கும். இப்போழ்து இம்மொழிநூல் அச்சிடப்பட்டிருக்கின்றது. சுமார் (850) பக்கம் கொண்டது. கல்விமான்களுக்கு ஆவசியகமானது. விலை ரூபாய் 2. சரியான விலாசத்தோடு கையொப்பஞ்செய்து அனுப்புகிறவர்களுக்குக் கோவிக் கட்டுசெய்து விலை 1—8—0 வீதம் வி. பி. யில் அனுப்பப்படும். தபாற்கூலி முதலியன வேறு.
மாகறல், கார்த்திகேய முதலியார், கண்டி, சைதாப்பேட்டை, சென்னை.

* * *

மாத்தளை விவேகானந்த சபை:—ஸ்ரீமாந். கா. இராசநாயக முதலியாரவர்கள் அக்கிராசனத்தின்கீழ் மாத்தளை விவேகானந்த சபையின் முதலாம் வருடோற்சவம் மிக்க விமரிசையாக நடைபெற்றது. அப்போது தமிழ்ப்பண்டிதர் பிரமஸ்ரீ. வ. மு. இரத்தினேசுவரையரவர்களால் சைவர்களுக்கு இன்றியமையாத சிவசற்கருமங்களைப்பற்றி ஒருபந்நியாசம் செய்யப்பட்டது. பின் சபையாருட் சிலர் குறிப்புரை கூறினர். தமிழ்வேத பாராயணத்தோடு சபை சமாப்தியாயிற்று. சபையார் பன்னீர், சந்தனம், தாம்பூல மாதியவற்றாலே உபசரிக்கப்பட்டுச் சென்றனர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS ... 1913 MADRAS

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ௨.] 1913-௵ அக்டோபர்௴ [பகுதி ௰.

## சித்தாந்தபரிபாஷை
என்னும்
## தருக்கசோபானம்.

### ஆகாசம்—விண்.
### Ether.

இலக்கணம்:—சத்தகுணமுடையது. அது பிருதிவி முதலியன போல பலவாகாமே யொன்றாய், வடிவுடைப்பொருள்களெல்லாவற்றினும் சையோகித்து ஆன்மாவைப்போல நிலையுடைப் பொருளென்க.

குணம்:—சங்கை, பரிமாணம், பிரதக்த்துவம், சையோகம், விபாகம், சத்தமென ஆறு.

இந்திரியம்:—சுரோத்திரம், சத்தத்தைக்கவர்வது, காதிலிருப்பது, இச்சத்தம் கூட்டத்தாற் பிறந்ததும், பிரிவாற்பிறந்ததும் ஓசையாற் பிறந்ததும் என மூவகை.

வியாபகம்:—விபு.

### காலம் * பொழுது.
### Time.

இலக்கணம்:—பூதபவிஷ்ய வர்த்தமான விவகாரங்களுக்கேதுவாக விருப்பது.

* தெய்வமிருக்கிறது, மலைநிற்கின்றது என்னும் வியவகாரம் பொதுவாக நிகழ்தலால், முக்கால மின்றிப்பொதுக்காலமும் பெறப்படுதலின் காலநால்வகைத் தென்பர் ஒருசாரார்.

குணம்:—சங்கை, பரிமாணம், பிரதக்துவம், சையோகம், விபாகமெனவைந்து.

வியாபகம்:—விபு.

## திசை—பக்கம்.
## Space.

இலக்கணம்:—கிழக்கு முதலிய வழக்கிற் கேது.

குணம்:—சங்கை, பரிமாணம், பிரதக்துவம், சையோகம், விபாகமெனவைந்து.

வியாபகம்:—விபு.

## ஆன்மா—உயிர்.
## Soul.

இலக்கணம்:—அறிவிற்கிடமாயுள்ளது. அது சீவான்மா பரமான்மாவென விருவகை.

குணம்:—சங்கை, பரிமாணம், பிரதக்துவம், சையோகம் விபாகம், புத்தி, சுகம், துக்கம், இச்சை, வெறுப்பு, பிரயத்தனம், அதர்மம், பாபம் எனும் பதினைந்து.

வியாபகம்:—அதுவதுவாய் வசிப்புண்ணும் விபுத்துவம்*

## பரமான்மா—இறையோன்.
## Supreme Being.

இலக்கணம்:—கட்டு வீடென்னும் பலங்களையுடைய பசுபாச பதார்த்தங்களது இயல்புடையனல்லனாகலானும், எழுவா யிறுவாயில்லனாகலானும், அருவம் உருவம் அருவுருவம் என்னு முக்கூற்றுள் இன்ன னவனென்று தான் அம்முக்கூறும் படும் விருத்தி பரிணாமம் விவர்த்தன மென்பன வற்றுள் ஒன்றிற் படுவன் படானென்று தான் கூறுதற் கோராசங்கையு மில்லான்.

குணம்:—அனந்தசத்தியாகிய அளவிலாற்றலுடைமையும், அநாதிபோத அனாதிமுத்தத்தன்மை யென்னப்படும் இயல்பாகவே பாசங்களினீங்குதலும், சுதந்திரமெனப்படும் தன்வயத்தனாதலும், சர்வஞ்ஞத்துவ மெனப்படும் முற்றுமுணர்தலும், அலுத்தசத்தியெனப்படும் பொருளுடைமையும், பூர்த்தியெனப்படும் வரம்பிலின்பமுடைமையுமாம்.

* சிவஞான சித்தியார் நாலாவது சூத்திரம் இருபதாவது செய்யுளைக் காண்க.



வியாபகம்:—உலகெலாமாகி வேறாயுடனாய் நிற்றல் *

## மனம்—நெஞ்சு.
## Mind.

இலக்கணம்:—சங்கற்ப விகற்பம் செய்துகொண்டு சம்சயரூபமாகி நிற்கும்.

குணம்:—சங்கை, பரிமாணம், பிரதக்துவம், சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம் என எட்டு.

வியாபகம்:—விபு †

## அந்தகாரம்—இருள்.
## Darkness.

இலக்கணம்:—கண்ணொளியைத்தடை செய்து நிற்பது.

குணம்:—நீலவடிவிற்றாய்த் தோன்றுதல்.

---

இதுகாறுங் கூறிய பத்துத்திரவியங்களுள் பிருதிவி, அப்பு, தேயு, அந்தகாரம் என்பன புறவிந்திரியங்களாற்றோன்றும் இலவுகிகப் பிரத்தியட்சங்கள், ஆன்மாமான தப்பிரத்தியட்சம், வாயு, ஆகாயம், காலம், திக்கு மனம் என்பன அப்பிரத்தியட்சம்.

திரவிய முடிந்தது.

---

## குணம்—பண்பு.
## Quality.

இலக்கணம்:—திரவியம், கன்மமென்னும் இரண்டற்கும் வேறாய்ப் பொது இயல்புடையது.

வகை:—ரூபம், ரசம், கந்தம், பரிசம் சங்கியை, பரிமாணம் பிரதக்துவம், சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம்,

* சிவஞான சித்தியார் இரண்டாவது சூத்திரம் முதலாவது செய்யுளைக் காண்க.

† ஒவ்வொன்றாகப் பதார்த்தங்களைக் கிரமத்திலே பற்றியறிகையினாலே மனது அணுவே யென்பர்தார்க்கிகர். சூரியப்பிரகாசம் மகத்தாகிய பதார்த்தங்களையும் அற்ப பதார்த்தங்களையும் கிரகிக்கு மாறுபோல, மனமானது பிரதிபுருஷ நியதமாயிருந்து கன்மத்திற்குத்தக்கபடி மகத்தினையும் ஏகதேசத்தினையும் கிரகித்தல் அனுபவமாகலின் விபுவேயாம்.

குருத்துவம், திரவத்துவம், சினேகம், சத்தம், புத்தி, சுகம், துக்கம், ராகம், துவேஷம், பிரயத்தனம், தருமம் அதர்மம், சமஸ்காரம், ஆக இருபத்துநான்கு *.

ரூபம்—நிறம்.

Color.

இலக்கணம்:—கண்களால் மட்டும் கிரகிக்கப் படுவது.

வகை:—வெண்மை, கருமை, பொன்மை, செம்மை, பசுமைபுகைமை, சித்திரம் என்னும் வேறுபாட்டால் எழுவகைத்து.

இருப்பு:—பிருதிவியில் எழுவகைகளுமிருப்பன.

அப்புவில் விளங்கா வெண்மை.

தேயுவில் விளக்கமான வெண்மை.

ரசம்—சுவை.

Taste.

இலக்கணம்:—நாவினால் கிரகிக்கப்படுவது.

வகை:—தித்திப்பு, புளிப்பு, கார்ப்பு, காழ்ப்பு, கைப்பு, துவர்ப்பு என்னும் வேறுபட்டால் அறுவகை.

இருப்பு:—பிருதிவியிலாறும், அப்புவில் தித்திப்பொன்றுமாம்.

கந்தம்—மணம்.

Odaur.

இலக்கணம்:—மூக்கினாற் கிரகிக்கப்படுவது.

வகை:—நறுநாற்றம், தீநாற்றம் என்னும் வேறுபாட்டால் இருவகை.

இருப்பு:—பிருதிவியில் மாத்திரம்.

(இன்னும் வரும்.)

மணவழகு.

---

* எண்மை, மென்மை, வன்மைமுதலியன விருப்பவும், இருபத்துநான்கென்ற தென்னையெனின் அவை திரவத்துவம், சையோகம் என்பவற்று ளடங்குமாகலினென்க,

# சிவஞானபோத முதனூல் விளக்கம்.

## V. அத்தியாயம்.

### மூன்றுவது வினாவுக்கு விடை.

---

(முன் தொடர்பு தொகுதி 2, பகுதி 9, பக்கம் 261.)

மேலும், வியாசர் காலத்துக்குப் பிற்பட்டும் கம்பர்காலத்துக்கு முற்பட்டும் (2000 **B C**——1200 **A D**) உள்ள வித்வான்களில் சிலர் எல்லாப் பாஷைகளும் சமஸ்கிருதத்தினின்றும் உண்டாயின, எல்லாநூல்களும் சமஸ்கிருதத்திலேயே உள்ளன, மற்றப்பாஷைகளில் உள்ள நூல்கள் மொழிபெயர்ப்பு நூல்களே என்று கருதியிருந்தார்கள். இந்த மாதிரி நினைக்கும் வித்துவான்கள் இக்காலத்திலும் அநேகர் உளர். மேற்படி காலத்துக்கு உள்பட்ட வித்வான்களிற் பெரும்பாலார் தாங்கள் சுயமாகப் பாடியிருந்தபோதிலும் வியாசர் சூதமுனிவருக்குச்சொல்ல, சூதமுனிவர் நைமிசாரணிய வாசிகளுக்குச் சொல்ல அப்படியே வழி வழியாக வந்த சங்கதிகளை யானும் கூறுகின்றேன் என்று கூறியிருக்கின்றார்கள். வடமொழியில் முதனூல் இல்லை யென்று சொன்னால் தமிழுக்கோர் இழுக்கு என எண்ணினர் போலும்.

கம்பர் காலத்துக்குப்பின்னிட்டும் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை காலத்துக்கு முன்னிட்டும் (1200 **A D**——1850 **A D**) உள்ள வித்துவான்களில் பெரும்பாலார், ஆரியம் வேறு, தமிழ் வேறு, இரண்டும் தனித்தனிப்பாஷைகள் என்று கருதினர்கள். அதற்குத் தகுந்தாப்போல்

"ஆரியமுந்தமிழும் உடனேசொலி" என்னும் பாசுரத்தையும்
"ஆரியன்கண்டாய் தமிழன்கண்டாய்" என்னும் பாசுரத்தையும்
"வடமொழியைப்பாணினுக்கு வகுத்தருளி" என்னும் பாசுரத்தையும்.

கண்ணுறலாயினர்.

ஆனாலும், வடமொழியில் முதனூல் இல்லாத நூல்களை அங்கீகரிப்பது கட்டமாக இருந்தது. எப்படியாவது வடமொழியில் முதனூல் உண்டென்று சொல்லவே அவர்கள் மனம் போயிற்று.

பெரியபுராணமும், சிவஞானபோதமும் முதனூற்களாயிருக்க அப்படிக்கூறுவது அவர்களுக்கு யாது காரணத்தினாலோ மனம் எழவில்லை.

ஆனால் ஆரியம் வேறு, தமிழ்வேறு என்று கூறத்தடை இல்லை. வேறு என்று கூறுவதோடு மாத்திரம் நின்றார்களே யொழிய நூல்களும் தனிமுதனூல்களாக இருக்கவேண்டும் என்பதை யோசியாமற் போனார்கள். எப்போது ஆரியம் வேறு தமிழ்வேறு, ஒன்றுக் கொன்று யாதொரு சம்பந்தமுங் கிடையாது என்று ஒப்புக்கொள்ளுகிறார்களோ அப்போதே மேற்படி இரண்டு பாஷைகளிலும் தனிமுதனூல்கள் உண்டு என்பது சித்தாந்தம் ஆகையால் அப்படித் தனிமுதனூல்களில் சேர்ந்தது நமது தமிழ்ச் சிவஞான போதம் என்று ஏற்படுகிறது.

மீனாக்ஷிசுந்தரம் பிள்ளைக்குப் பிற்பட்டு உள்ள வித்வான்களிற் பெரும் பாலார் எல்லாப்பாஷைகளும் தமிழ்ப் பாஷையினின்றும் உண்டாயின. தமிழ்தான் ஆதிபாஷை, தமிழ்நூல்களினின்றும் வேறுபாஷை நூல்கள்பெரும்பான்மை மொழிபெயர்க்கப்பட்டன என்று தங்கள் ஆராய்ச்சியால் கண்டிருக்கிறார்கள்.

ஆகையால், உண்மைகண்டறிய நாளாக வேண்டும் என்று தோற்றுகிறது.

(Vide the *Indian Review* June 1910). Professor Monier Williams, an eminent *Sanscrit Scholar* says, "Let me crave leave to remind the great Indian Pandits that the Romanized character will be found, if its history he investigated, to be neither modern nor European and may possibly turn out to *be more ancient than their Sacred Nagari* and even more suited to the expression of their sacred sanscrit.

As to the origin of the Indian Scripts, including the Nagari and the Poli,all these alphabets (or rather syllabaries) may be traced back to one single source, the edicts of Asoka. The inscriptions remain on the rocks as Girnar and other places to the present day. All the vernacular alphabets, the Nagari, the Poli are only local varieties of Asoka's letter.

Where the Asoka alhhabet came from is a question of not yet clearly settled. But it is most probable that some



more ancient alphabet was taken and the letters increased and modified to suit the needs of Indian speech and to represent the Indian classification of speech sounds. Such modifications are found in other alphabet. Asoka was only doing what a wise king would do when he modified letters to suit the needs of the speech of his people

என்பது மேனாட்டுக் கவிராயர்களுடைய கருத்து. அதாவது நாகரம், பாளிமுதலிய பாஷைகள் அசோகர் ஏற்படுத்திய பாஷையிலிருந்தும் எடுத்துச் சீர்திருத்தப்பட்டவைகள் என்பது. அசோகபாஷை தமிழ் என்பதற்கு யாதொரு தடையுமில்லை. அசோகா தனக்கு வேண்டியவாறு தமிழைச் சீர்திருத்திக் கொண்டான்.

இப்படியே காலாந்தரங்களில் தமிழ் திருத்தமுற்று வேறு வேறு பாஷைகளாகப் பிரிந்தது என்பது கற்றறிந்தோர் கொள்கை.

ஆகையால், தமிழினின்றும் எல்லாப் பாஷைகளும் உண்டாயின வென்பது சொல்லாமல அமையும்.

தமிழ் முதலில் உருவ எழுத்து பிறகு கோலெழுத்து, பிறகு வட்டெழுத்து, உடையதாக இருந்து, இப்பொழுது சதுர எழுத்து உடையதாக இருக்கிறது.

தமிழைத்

1. திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள் சீர்திருத்திய தொருமுறை,
2. குன்றமெரிந்த குமரவேள் சீர்திருத்திய தொருமுறை,
3. பொதிகையிலிருந்த அகத்தியன் சீர்திருத்திய தொருமுறை,
4. ஐந்திரம்செய்த இந்திரன் சீர்திருத்திய தொருமுறை,
5. இராவணீயம் செய்த இராவணன் சீர்திருத்திய தொருமுறை,
6. ஒல்காப்பெரும்புகழ் தொல்காப்பியனார் சீர்திருத்திய தொருமுறை,
7. கடைச்சங்கமிருந்த நக்கீரர்முதலியோர் சீர்திருத்தியதொருமுறை,

8. பொன்மதிற்சனகை நன்மதிப்பவணந்தி சீர்திருத்திய தொருமுறை,

9. அவஞானம் போக்கும் சிவஞானமுனிவர் சீர்திருத்திய தொருமுறை,

இப்படிக் காலங்கள் தோறும் சீர்திருத்தம் பெற்றவாறே, அசோகாவும் தன்னுடைய காலத்தில் தமிழைத் தனக்கு வேண்டியாங்கு சீர்திருத்திக் கொண்டான். ஆகையால் உலகம் தோன்றிய நாண்முதல் வழங்கும் பாஷை தமிழே; மற்றப்பாஷைகளெல்லாம் காலாந்தரங்களில் உண்டாயின என்பது போதருகின்றது.

ஆனல் அத்தமிழ் நூல்களெல்லாம் எங்கே எனக் கடாவுவார்க்கு இறுப்பதானது, அந்நூல்களெல்லாம் காலந்தோறும் குமரி நாட்டில் உண்டான பிரளயங்களினலும், வியாசர், வைதுல்லியர், சமணர், மகமதியர் வைத்த நெருப்பினலும், செல்லினலும் இறந்துபட்டன என்பதே.

இதுகாறும் கூறியவாற்றல் தமிழ்ச் சிவஞானபோதம் மொழிபெயர்ப்பு அன்று என நாட்டினும்.

ஆனல் சிலர்

"ஏவம் வித்யா சிவஞானபோதே சைவார்த்த நிர்ணயம்"

என்பதற்கு அடியில் வருமாறு அர்த்தம் செய்திருக்கிறர்கள் அதுவருமாறு:—

"முத்தியின் பொருட்டு சிவன் முத்தர்களை அடைந்து அவர்களுடைய திருவேடத்தையும் திருக்கோவிலையும் வழிபடுக; இவ்விதம் சிவஞானபோதம் என்னும் இந்நூலில் சைவாகமங்களின் பொருள் நிச்சயித்தை அறிக."

சப்தமாதிபத்தி நியாயத்தால் சிவஞான போதே என்பதற்கு சிவஞானபோதம் என்று அர்த்தம் செய்திருக்கிறர்கள்.

(இன்னும் வரும்.)

அடிசைகிழார் அ. சிதம்பரனர்.

---

# சிவஞான போதம்.

"மெய்கண்டாராவது, அவர் மாணாக்கர்களாவது, அல்லது அவர் பரம்பரையில் வந்தவர்களாவது சிவஞானபோதத்தை மொழிபெயர்ப்புநூல் என்றும், அல்லது பரஞ்சோதிமுனிவர் உபதேசித்தது வடமொழிச் சிவஞானபோதம் என்றும் ஓரிடத்தும் ஓர்காலத்தும் கூறவே இல்லை" என்று சித்தாந்தத் தமிழ்ப் பத்திரிகையின் 239-ம் பக்கத்திற் காணப்படுகின்றது.

க-வது, திருக்கைலாச பரம்பரைச சித்தாந்த பாநுவாகிய நமசிவாய மூர்த்திகள் மரபில் அநுக்கிரகம் பெற்ற திராவிட மகா பாஷ்யகர்த்தாவாகிய சிவஞானயோகிகள் வரலாற்றிலே, "பரஞ்சோதி முனிவர் திருக்கைலாசமலையினின்று நீங்கித் திருவெண்ணெய் நல்லூரை அடைந்து, அம்மெய்யுணர்வுடையோரைச் (சுவேதவனப் பெருமானைச்) சந்தித்து, சிவஞானபோதத்தை நல்கி, இதனை ஈண்டுள்ளார் உணர்ந்துய்தற் பொருட்டு மொழிபெயர்த்துப் பொழிப்பும் உரைக்க" என்று காணப்படலானும்,

உ-வது. சிவஞானயோகிகள் சிவஞானபோத மகாபாஷ்யத்துச் சிறப்புப்பாயிரத்தில் தமிழ்ச் சிவஞான போதத்தையுற்று, "இதன் முதனூல் யாது" என்று தொடங்கி, "இரௌரவாகமத்திற் பன்னிருசூத்திரத்தாற் செய்யப்பட்டது சிவஞானபோதம் என்பதோர்படலம்" என்றும், அதனை ஸ்ரீகண்ட ருத்திரர் நந்தி பெருமானுக்கு அருளிச்செய்தார் என்றும், "பரஞ்சோதி முனிவர் மெய்கண்ட தேவர்பால் வந்து, சிவஞானபோதத்தை நல்கி இதனை ஈண்டுள்ளார் உணர்ந்துய்தற்பொருட்டு மொழிபெயர்த்துச் செய்து பொழிப்புரைக்க" என்றும் அருளினாராகக் கூறப்படலானும்,

ந-வது. சிவஞானபோதச் சிற்றுரையில், "முதனூலிற் பதினொராஞ் சூத்திரத்துட் "காட்டுவான்" என்பது மாத்திரையேயன்றி, "காண்பான்" என்பது கூறிற்றில்லையாலெனின்

அறியாது விளைவினும்; ஆண்டுக் காட்டுவாறும் என்று உரைமை காண்பானுமாம் என எதிரது தழீஇ நிற்றலின்" என்று காணப்படலானும்,

ச-வது. பின்னும் 11-ம் சூத்திரசிற்றுரையில் "பத்தாஞ் சூத்திரத்தில் எடுத்துக்கொண்ட சுவாநுபூதிநிலை 11-ம் சூத்திரத்திற் சென்றியைந்து முற்றுப்பெறுதலால், அதன் கண் மலையாமைப்பொருட்டு ஆசிரியர் (மெய்கண்டார்) "சுவாநுபூதிமானவன்" என்பதனையும் "அரன்கழல் செலும்" என 11-ம் சூத்திரத்தானே ஒருங்கு வைத்தோதினாராகலின், அது மாறன்மையானும், அவ்வாறின்றி மொழி பெயர்த்தல் யாப்பால் நூல் செய்திருப்பான் புகுந்த ஆசிரியர் வேறுபடச் செய்துரையாராகலானும் என்பது; இதனானே முதனூலிற் "சுவாநுபூதிமான்" என வாளா கூறியதனை 11-ம் சூத்திரத்துப் "பக்தி செய்க" என்றதின் பின்னாகக்கொண்டு கூட்டிவைத்து உரைத்தமைத அதன் கருத்து என்பதூஉம் பெறப்பட்டது" என்று காணப்படலானும்,

ரு-வது. "திங்களொடு கங்கைபுனையங்கணனார் செப்பு திருவருளினோடு, தங்குருவாம் பரஞ்சோதிமுனிவனினி தறை குறிப்புந்தகவாக்கொண்டு, துங்கமுறு சிவஞானபோதமும் வாய்த்திகப் பொழிப்புஞ் சுழிப்புநீர்சூழ்ந், திங்கமருந்தமிழ் நாடு வீடுபெறப்புரிகுரவரிருதாள்போற்றி" என்னும் திருக்கைலாச சந்தான குரவர்களின் தோத்திரங்களுள்ளே காணப்படும், இம் மெய்கண்டார் தோத்திரத்திலே, "தமிழ்நாடு வீடுபெறச் சிவஞானபோதம் புரிகுரவர்" என்று காணப்படலால், வடமொழியிலிருந்து தென்மொழியிற் சிவஞானபோதம் மெய்கண்டாரால் இயற்றப்பட்டதெனப் பெறப்படலானும்,

சா-வது. "முந்துமாகமத்தை யருட்டுறை யண்ணன் மொழிபெயர்த்துரைத்த நான்முதலா முதல் வழிசார்பா முன்று நாற்கருத்தும்" என்று உலகுடைநாயனார் அருளிச்செய்தலானும்,

எ-வது. இரௌரவாகமமானது சீடனுக்குச் சிவஞானபோதத்தை உபதேசிக்கும் கிரமத்தைக் கூறியவிடத்தில்,



நதீதீரே மடேவாபிசுஸ்தானேகுருமந்திரே |
பர்வதாக்ரே சுசிஸ்தானே மண்டபம் தந்த்ரகாரயேத் ||

"ஆற்றங்கரையிலாவது, மடத்திலாவது, நல்ல ஸ்தானத்திலாவது, ஆசாரியர் கிரகத்திலாவது, மலையின் உச்சியிலாவது சுசியாகிய ஸ்தானத்திலாவது மண்டபத்தைப் புரிக" என்று தொடங்கி, மண்டப அலங்காரமுதலியவற்றைக் கூறி, நல்ல நக்ஷத்திரத்திலே என்று தொடங்கி, நள்ளிருட்காலமே ஞானதீக்ஷைக்கு வாய்ந்த காலம் என்றும், நள்ளிருள் என்றதின் பொருள் யாது என்றும் உரைத்து, அதன் பின்னர்,

பாவநாதீக்ஷயா சைநம் சுத்தம் க்ருத்வா யதாவிதி |
சிவஞானபோதசாஸ்திரஞ்ச தத்யாத்பத்யசிந்தகம் |
அநுக்ராஹ்யஸ்து ய:சிஷ்யோ வாங்மந: காயகர்மபி: |
ஆர்த்தபிராணைப்யர்நாதி சத்குருப்யோ நிவேதயேத் ||

"பாவனாதீக்ஷையினாலே இவனை (சீடனை) விதிப்பிரகாரம் சுத்தனாக்கி, பதியசிந்தனத்துக்குரிய சிவஞானபோத சாஸ்திரத்தை (அவனுக்கு) ஆசாரியர் கொடுக்க; வாக்கு மனக் காயங்களினாலே அநுக்கிரகிக்கற்பாலனாகிய எந்தச் சீடன் உளனோ அவன் ஆசாரியர்பொருட்டுப் பொருள் உயிர் அபிமானம் என்பவற்றை நிவேதிக்க" என்று கூறலானும் சிவஞானபோதம் இரௌரவாகமத்தில் உள்ளது என்றும், பரஞ்சோதிமுனிவர் மெய்கண்டாருக்களித்தது வடமொழிச் சிவஞானபோதம் என்றும், தென்மொழியிலுள்ள சிவஞானபோதம் வடமொழிச் சிவஞானபோத வழித்தாயது என்றும் மேலே கூறியவாற்றால் உணரப்படும்.

ஸ்ரீ காசிவாசி—செந்திநாதையர்.

## அறுவகைச்சமயம்.

---

(முன்தொடர்பு தொகுதி 2, பகுதி 9, பக்கம் 269.)

### சாங்கியம் (Rationalism)

சாங்கிய மதத்தை ஸ்தாபித்தவர் கபிலமுனிவர். "மூலப்பிரகிருதி நித்தமாயும் வியாபகமாயும் அருவமாயும் சடமாயும் இருப்பதாகும். நிலம் முதல் புத்தி ஈறான இருபத்துமூன்று தத்துவங்களும் இந்த மூலப்பிரகிருதியி லிருந்தே தோன்றுகின்றன. இந்த மூலப்பிரகிருதி இருபத்து நான்காம் தத்துவமாகும். இந்த இருபத்துநான்கு தத்துவங்களுக்கும் வேறாய் நித்தமாய், வியாபகமாய், அருவாய், அறிவாய் நிற்கும் ஆன்மா இருபத்தைந்தாம் தத்துவமாகும். தாமரையிலையில் நீர்பற்றற்று இருப்பதுபோல் ஆன்மா பெத்தநிலையிலும் முத்திநிலையிலும் ஒரே தன்மையாக இருக்கும். அவிச்சையினாலேயே ஆன்மாவுக்கு இன்பதுன்பங்கள் உண்டாகின்றன. தான் வேறு மூலப்பிரகிருதிவேறு என்று ஆன்மா பகுத்துணரும்போது அவிச்சை நீங்கும். அவிச்சை நீங்குவது தான் முத்தி எனப்படும். ஜீவான்மாக்களுக்கு வேறாய் இறைவன் ஒருவன் உண்டென்பது பொய்" என்னும் இவை போன்ற கொள்கைகள் சாங்கிய மதத்தினரின் கொள்கைகளாகும்.

மூலப்பிரகிருதி கட்புலனுக்குத் தோன்றும் பிரபஞ்சமாய்க் காரியப்பட்டிருக்கும் நிலையை வியக்தநிலை என்றும், கட்புலனுக்குத் தோன்றாமல் சூக்குமமான காரணநிலையை அது அடையும்போது அவியக்த நிலை என்றும் சாங்கிய மதத்தினர் கூறுப.

சாங்கிய மதத்தினால் கூறப்படும் சற்காரியவாதம் சைவசித்தாந்தத்திற்கு உடன்பாடானது, சாங்கிய மதத்தினர் புத்தியையும் அறிவையுமே ஆதாரமாகக்கொண்டு விஷயங்களை ஆராய்பவர்களாதலால் அவர்கள் (Rationalists) எனப்படுவார்கள். இங்கிலாந்திலுள்ள "ராஷனலிஷ்டிக் பிரஸ் அஸோஸியேஷன்"



160950

என்னும் சங்கத்தைச் சேர்ந்தவர்களைச் சாங்கிய மதத்தினர் என்று கூறுவது இழுக்காகாது. இனி விரிப்பிற் பெருகும்.

### தருக்கம் (Logic)

வைசேடிகம், நையாயிகம் இரண்டும் "தருக்கம்" என்னும் ஒரே தலைப்பினுள் அடங்கும். இவற்றுள் வைசேடிகநூல் செய்தோன் கணாதமுனிவர் என்பவர். நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம், காலம், திசை, ஆன்மா, மனம் என்னும் ஒன்பது திரவியங்களின் இயல்பையும், குணம், தொழில் சாதி, விசேடம், சமவாயம், இன்மை என்னும் ஏனைய ஆறுபதார்த்தங்களின் இயல்பையும், இவற்றின் பிரிவுகளின் இயல்பையும் விளக்குவது வைசேடிகம் எனப்படும். திரவியம் ஒன்பதுள் நிலமாதிய நான்கும் ஸ்தூலரூபத்தில் அநித்தியமென்றும் சூக்குமபரமாணுரூபத்தில் நித்தம் என்றும்; காலம், திசை, ஆகாயம் மூன்றும் தனித்தனி ஒவ்வொன்றாய் வியாபகமுடையன என்றும்; ஆன்மா பரமான்மா சீவான்மா என இருவகைப்படும் என்றும்; இவற்றுள் பரமான்மா ஒன்றாய், நித்தமாய், வியாபகமாய், முற்றுணர்வுடையதாய், எல்லாம் வல்லதாயிருப்பதாமென்றும்; சீவான்மா வியாபகமாய் எண்ணிறந்தனவாய் இருப்பதாமென்றும்; பரமான்மாவின் இச்சைவசத்தால் உலகந்தோன்றி ஒடுங்குமென்றும்; வேதம் பரமான்மாவால் செய்யப்பட்டதென்றும்; சீவான்மாவினைக்கிடாய்ப் பிறந்து இறந்து இன்பதுன்பங்களை அனுபவிக்குமென்றும்; மனத்தோடு கூடாதவழி ஆன்மாவுக்கு அறிவில்லை என்றும் "வைசேடிகம்" கூறாநிற்கும்.

குணங்கள் திரவியத்தைப்பற்றுக் கோடாகக்கொண்டு நிகழ்வன. சுவை, கந்தம், உருவம் முதலிய இருபத்து நான்கு பிரிவாகக் குணங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் புத்தி, இன்பம், துன்பம், விருப்பு, வெறுப்பு, முயற்சி அறம், மறம், என்னும் எட்டுக்குணங்களும் ஆன்மாவின் சிறப்புக்குணங்கள், இம்மூன்று குணங்களும் பரமான்மாவுக்கு நித்தியமாயும் சீவான்மாக்களிடம் அநித்தியமாயும் இருப்பன. தொழில் என்பது எழுதல், வீழ்தல், வளைதல், நிமிர்தல், நடத்தல் என ஐவகைப்படும். சாதி, பரசாதி என்றும் அபரசாதி என்றும் இரு

வகைப்படும். சாதி என்பது பலபொருள்களுக்குப் பொதுவாயிருக்கின்ற ஒரு தன்மையாகும். விசேடம் என்பது ஒவ்வொருபொருளுக்கும் உள்ள சிறப்புத்தன்மையாகும். பஞ்சபூதங்களின் வேறு பாடுணர இது அவசியமாகும். அவயவத்திற்கும் அவயவிக்கும் நீக்கமின்றி ஏற்பட்டுள்ள இயைபு சமவாயமெனப்படும். இன்மை என்பது முன்னபாவம், பின்னபாவம், என்றுமபாவம் ஒன்றினொன்றபாவம் என நான்குவகைப்படும். இவைதாம் வைசேடிகத்தின் முக்கியமான கொள்கைகளாகும். வினைப்பயனின் நுகர்ச்சிகழிந்து மனத்தோடு கூடாமல் ஆன்மா பாடாணம் போல் கிடப்பதே முத்தி என்பது வைசேடிகமதத்தாரின் போதனையாகும். நையாயிக மதம் என்பது பெரும்பாலும் வைசேடிகமதத்தை ஒத்ததேயாகும். ஆனால் இதற்கும் அதற்கும் வேறுபாடுகள் சில உண்டு. அவை விரிப்பிற்பெருகும். நையாயிகநூல் செய்தோர் அக்கபாத முனிவர் எனபவராவர்.

### மீமாஞ்சை.

இம்மதத்தை ஸ்தாபித்தவர் ஜைமினி முனிவராவர். மீமாஞ்சை மதம் வேதத்திற் கூறப்பட்டுள்ள கருமகாண்டப்பகுதிகளைமாத்திரம் பிரமாணமாகக் கொள்ளுவதாகும். வேதம் அநாதியே சுயம்புவாயுள்ளது. ஆன்மாக்கள் பலவாய் நித்தமாய் வியாபகமாய் பிறப்பிறப்புடையவைகளாய், வினைப்பயன்களை நுகர்வனவாய் இருப்பனவாகும். வினையே துறக்கம் நரகம் முதலிய பயன்களைக் கொடுக்கவல்லது, சீவான்மாக்களுக்கு வேறாய்ப் பரமான்மா என்பது ஒன்று உண்டென்பதும், உலகம் தோன்றி அழியும் என்பதும் பொய் உலகம் எப்போதும் இவ்வாறே நிலைபெறும். இவைதாம் மீமாஞ்சை மதத்தின் முக்கியமான கொள்கைகளாகும். மீமாஞ்சைநூல் பன்னிரண்டு அத்தியாயங்களை உடையது. இம்மதத்தின் ஏனையகொள்கைகளையும் இவ்வத்தியாயங்களில் கூறப்படும் விஷயங்களையும் எடுத்துக்கூறப்புகுந்தால் இவ்வுபந்நியாசம் வரம்பின்றி விரியுமாதலின் இடத்தையும் காலத்தையும் கருதி இவ்வளவோடு நிறுத்துகின்றோம். சான்றோர் குற்றங்களைந்து குணத்தைக் கொள்ளுவாராக! சுபம்!

நாகை—வி. கோபாலகிருஷ்ணன்.

# முயற்சி.

"முயற்சியுடையார், இகழ்ச்சியடையார்" என்றும்.

தெய்வப்புலமைவாய்ந்த திருவள்ளுவநாயனார் "முயற்சி திருவினை ஆக்கு; முயற்றின்மை இன்மைபுகுத்திவிடும்" என்றும் கூறியுள்ளார்.

விதிப்படி நடக்குமென்றெண்ணி யாதொரு காரியத்திலும் முயற்சி செய்யாமலிருத்தலே வறுமையை யடைதற்கு முக்யகாரணமாம்.

ஸாத்தியப்படாத பொருளையடைய முயல்கின்றவன் மேன்மையயுடையவருளினும் பெயர்களில் முந்தினவாகக் காணப்படுவான். யாதொருகாரியத்தினிடத்துஞ் சோம்பலின்றித்தக்க முயற்சிசெய்பவனை வறுமைநெருங்குதற்கு அஞ்சும்; ஆதலால் சோம்பலுக்கு இடங்கொடாது முயற்சிசெய்யவேண்டும். மேலாகிய விரதங்களை யிடையூறின்றி நடத்த முயல்கின்றவன் சிறியவனாக யிருக்கினுந் தபஸியெனப்பெயர் பெறுவான்.

பயிர் என்பது பயிற்சி—முயற்சி யெனவுங்கொள்ளப்படும் ஆதலால் பயிர்செய்வதிலியற்றப்படும் முயற்சியே செல்வப்பேற்றுக்கு முதற்குறியாம். உழவு முதலியவைகளில் வருத்தமுற்று இட்டபயிர் பலனைக் கொடுக்குங்காலத்தில் சோம்பலால் தக்கபடி நடத்தவறியாதவன் தரித்திரத்தையடைவான் எல்லாக்காரியங்களுக்கும் அவைகளாலடையும் பயனுக்கும் தெய்வகாரணத்தைப் பார்க்கிலும், புருஷகாரணமே மேலானதாகும்; எப்படியெனில், ஒற்றைத்தேருருளையால் ரதம் நடவாத தன்மைபோற் புருஷகாரமில்லாமல் தெய்வஸங்கல்பத்தினாலொன்று முடியாது.

எள்ளும் அதற்குள் எண்ணெயும் பகவானாலுண்டாக்கப்பட்டிருந்தாலும் புருஷகாரமென்கிற முயற்சியினாலல்லாமல் எண்ணெய் வெளிப்படுவதில்லையே. ஆதலால் முயற்சியின்றி ஒன்றும் நிறைவேறாது. அதில்லாமற் சோம்பலுற்றவன் பயன்

படான் முயற்சியில்லாவிடின் கல்வியில்லை; கல்வியில்லாவிடின் புத்தியுமில்லை; பராக்கிரமுமில்லை இவைகளில்லாவிடின் பொருளுமில்லை, பெருமையுமில்லை; சிலவேளை பொருள் மாத்திரமிருந்தாலும் பயன்படாது ஆதலால் முயற்சியில்லாவிடினொன்றுமில்லையென்பதற்கு அநுமானிக்கவேண்டுவதில்லை.

முயற்சியுள்ள புருஷஸிம்ஹத்தையே மஹாலக்ஷ்மியடைகிறாள் தெய்வத்தினால் பாக்கியங்கொடுபட வேண்டுமென்று ஆலஸ்யமாகிய சோம்பலும், அவிவேகமாகிய தெரியாமையுமுள்ள புருஷர் நினைக்கிறார்கள்; ஆகையால், தெய்வத்தினிடத்தில் நம்பிக்கையைவிட்டு ஸொந்த ஸத்தியினாலே முயற்சிசெய்தும் ஒருவேளை கார்யம் ஸாதிக்கப்படாமற்போனால் குற்றமென்னவென்று ஒருவித்துவானுரைத்திருக்கிறார் அதையோசித்தால் எளிதில் தெரிந்துகொள்ளலாகும். தெய்வத்தால் யாவும் நடக்குமென்று முயற்சியைக்கைவிட்டவன் கெட்டுப்போவான், புருஷகாரமில்லாமல் தெய்வம் ஸித்திக்கிறதில்லையென்பதையறிந்தவனே புத்திமான். பலவற்றினும் சென்றுழன்றலைகின்ற மனதை விவேகத்தால் தடுத்துநிலைக்கச் செய்வதே மோக்ஷத்திற்கு முக்யகாரணமான முயற்சியாம். கஷ்டதசையிலிருக்கும் ஒருவன் அக்கஷ்டத்தைப் பாராட்டாமல் ப்ரயோசனத்தைக் கொடுக்குந் தொழிலின்னதென்றும் அதனிடத்து மனதை செலுத்தி முயற்சிசெய்தால் பிரயோசனத்தையடையலாகுமென்றும் புத்தி கூர்மையால் பகுத்தறிந்து நடப்பானாகில் அவனுக்குச் செல்வமும் பெருமையும் ஏன் உண்டாகாமற் போகும்? உண்டாவது ஸித்தமே. செய்யத்தக்க கார்யமின்னதென்றும் அதனிடத்து புத்தியைச்செலுத்தி முயற்சிசெய்தால் பலனுண்டாகுமென்றும் தெரிந்திருந்தும் சோம்பலால் அதைக்குறித்து முயற்சிசெய்யாமல் தரித்திரத்தால் வருந்துவோன் கல்வியிற் சிறந்தவனாக விருந்தாலும் அப்பரயோசகனென்று உலகம்பழிக்கும். இவ்விதப்பழிப்புக்காளாவதைவிட இறத்தல் நலமாகயிருக்கும். பிறருக்குபகாரஞ் செய்தவனிடத்து புத்தியை சோரவிடாமலிருப்பவன் பல நன்மைக்கும் ஆகாரமாகிய முயற்சியினிடத்து சித்தையுடையவனாக யிருப்பான்.

OFFICE OF THE REGISTRAR
2 - DEC 1913
MADRAS.



முயற்சிசெய்வதில் சிரத்தையில்லாதவன் பரோபகாரஞ் செய்யவேண்டுமென்கிற எண்ணத்தை மாத்திரங் கொண்டிருந்தால் அவ்வெண்ணம் முடிவுபெறாது.

எளிதில் பெறத்தக்க பல நன்மைகள் தனக்கெதிராகவிருந்தும் முயற்சியின்மையால் சோம்பலுற்று அவைகளைப் பெறாமல் விட்டுவிடுகிறவன் யாதொரு பயனும் அடையமாட்டான் அஃதெவ்வாறெனின் எல்லா உயிரையும் வதைப்பதற்குக்காரணமாகிய கூர்மையுடைய வாளாயுதம் பேடிகையில் விளங்கிக்கொண்டிருந்தால் அதனால் யாதுபயன்.

உபகாரிகளாகவிருக்கின்ற நல்லோர்கள் தங்களுடைய ஸௌக்கியத்தை விரும்பாமலே ஒரு காரியத்தில் பிரவேசித்து அதனாலாகிய த்ரவிய சம்பாதனையைத் தன் சுற்றத்தார் நட்பினர் முதலாகியவர்களுக்கு உண்டாகிய துன்பங்களை மாற்ற உபயோகப்படுத்தி அவர்களுக்குஸௌக்யத்தை யுண்டாக்குவார்களென்று முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள். அஃதெவ்வாறெனின், மாளிகை முதலாகிய வீடுகளிலே தூண்களுக்கு யாதொரு நன்மையுமில்லாதிருந்தாலும் அத்தூண்கள் தங்கள் வருத்தத்தை நினையாமலே அம்மாளிகையைத் தாங்கிக் காப்பாற்றுவது போலவாம். ஆதலால் இவர்களைத் தாங்குவோரென்று நாயனாருஞ் சொல்லியிருக்கிறார். முயற்சியினிடத்து மனத்தளர்ச்சி யில்லாதவனுக்குச் செல்வம் வளர்ந்தேறுமென்றும், அம்முயற்சியில் மனவூக்கமில்லாதவனிடத்து வறுமை நிரந்தரங் குடிகொண்டிருக்குமென்றும் சொல்லப்படும். இந்த நீதியையறிந்து நடக்கின்றவனுக்கு எல்லா நன்மையும் எளிதில்வந்து கைகூடும்.

மூதேவி சோம்பலை யுடையவனிடத்து வாசஞ்செய்துகொண்டிருப்பாளென்றும், சோம்பலையகற்றி நன்முயற்சி செய்பவனிடத்து ஸ்ரீதேவி நர்த்தனஞ் செய்துகொண்டிருப்பாளென்றும் முன்னோர்கள் சொல்லிய நீதிவாக்யம் இப்போது அனுபவத்திற்கும் ஸரியாகவிருப்பதால் யாவரும் முயற்சிசெய்வதில் சிரத்தையுடையவர்களாக விருக்கவேண்டும்.

ஒரு தொழிலினிடத்து முயற்சிசெய்தும், ஊழினாலாகிலும் தெரியாத மற்ற காரணத்தினாலாகிலும் பலன் கிடையாமற்போ

னால் குற்றமொன்றுமில்லை இதற்காக உலகம் பழியாது. ஆனால் விதியில்லையென்று முயற்சியைக் கைவிட்டுச் சோம்பலுற்றவனை உலகம் பழிக்கும்.

ஊழினாலே ஒன்றுமடைவதற் கிடமில்லாதிருந்தாலும் மன வுறுதியுடையவன் தனது நன்முயற்சியால் அவ்வூழையுங் கடந்து நடப்பானென்று அறிவுடையோர் சொல்லியிருப்பதற்கு நிதர்சன மென்னவெனில், பதினாறுவயதிற் கதிகமில்லாத மார்க்கண்டே யர் தன்னுடைய மனவூக்கத்தின் முயற்சியால் என்றும் பதினாறு வயஸ்ஸை யுடையவராக விருந்தாரென்கிற பிரமாண மிருக்கவில் லையா?

ஒருகாரியத்தை முயன்று நடத்திவரும்போது அதற்குப் பல விவாதங்கள் மேன்மேலும் வருமாயினும், அவைகளுக்கு இடங் கொடாமலும் மனங்கலங்காமலும் தான் தொடங்கிய காரியத்திற்கு பங்கம் வாராமல் நிறைவேற்றுகிறவனுக்கு ஸமானம் உலகத்திலொ ருவனுமாகமாட்டான்.

கரைபுரண்ட வெள்ளம்போல் பலதுன்பம் வந்தாலும் அவ ற்றை உள்ளத்தில் உன்னிப்பார்த்து மனமகிழ்ச்சி கொண்டிருப்ப வனுக்கு அத்துன்பம் ஊழினாலே வந்ததானாலு முடனேகெடுமெ ன்று முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

உளையிலழுந்திய வண்டியை எருதன் வருத்தத்தைப் பாராட் டாமல் மாறாங் கொண்டிழுப்பதுபோல் நன்முயற்சியில் புத்தி யுடையவன்தான் நடத்துங்கார்யத்திற் கிடையூறு வருமாகில் தன் னுடல் வருத்தத்தைப் பாராட்டாமல் கூடிய முயற்சிசெய்து நிறை வேற்றுவான். இவ்வகையோருக்குப் பல துன்பமுண்டாயிருந்தா லும் அவையுடனே அவர்களைவிட்டு நீங்கிப்போய்விடும்.

ஆதலால், உயிர்க்குத் துணைக்காரணமாக விருக்கும் முயற்சி யினிடத்தில் மனத்தளர்ச்சி செய்யாமல் ஜாக்கிரதையா யிருக்க வேண்டும்.

நாகை வெளிப்பாளையம் சைவசித்தாந்த சபையின்
காரிய நிர்வாகசபை மெம்பர் S. மெய்கண்ட பிள்ளை.

---

## ஸ்ரீமத் மிருகேந்திரம்.

“கோவிசேஷஸ்ஸிவாகமே”?

சிவாகமத்தில் என்ன விசேஷம்?

இவ்வரியவினா ஸ்ரீமிருகேந்திராகமத்தில் வந்துளது. பாரத்துவாஜபகவான் இந்திரனைக் கேட்கின்றார். அவ்வினாவருஞ் சுலோகம் இது:

வினா—சுலோகம்.

,, வேதாந்தஸாங்க்யஸதஸத்
,, பதார்த்தகமதாதிஷு |
,, ஸாதநமுக்திரஸ்தி
,, கோவிசேஷஸ்ஸிவாகமே ||

இதன்பொருள்:—வேதாந்த சாத்திரங்களிலும், ஸாங்கிய ஆருகத-கணாத-பாதஞ்சல-காபிலாதி மதங்களிலும் சாதனத்தோடு முத்திகள் சொல்லப்பட்டிருக்கின்றன. சிவாகமத்தில் என்ன விஷேம், என்பதாம்.

விடை சு:

,, ப்ரணேதாருஸர்வாவேதித்வாத்
,, தஸ்புடோவஸ்துஸங்க்ரஹ: |
,, உபாயாஸ்ஸபவாஸ்தத்வத்
,, ஸைவேஸர்வமிதம்வரம் || ,,

இ-ள். வேதாந்தாதி சாத்திரங்களைச் சொன்ன இரணிய கர்ப்ப-கணாத-பதஞ்சல-கபிலாதி தேவரும் ருஷிகளும் (எல்லா முணர்ந்து சொல்லவல்ல) ஸர்வஞ்ஞரல்லாதபடியால், அவர்கள் சொன்ன வஸ்து நிச்சயமும் சாதனமும் பயனும் சுத்தமாயிருக்க (சரியாயிருக்க) நியாயமில்லை. சிவசாத்திரமோ, ஸர்வார்த்த விஷயஞானக்கிரியா சக்தியுடைய பரமேசுரனாற் சொல்லப்பட்டபடியால், இதிற் சொல்லியவஸ்து நிச்சயம் முதலியவை மேலானவையாயிருக்கும். என்பதாம். (சரியாயிருக்கும் என்றபடி.)

தேவர்களும் ருஷிகளும் மனிதரை நோக்க சர்வஞ்ஞரென்றும், ஈசுரனை நோக்க அஸர்வஞ்ஞரேயாவர். ஏனெனில், அவர்கள் ஆன்மாக்களாய் மலசம்பந்தமுற்றிருத்தலாலும், தேவர்கள் நிலைபிரகிருதியந்தமான ஆன்மதத்துவத்துள்ளடங்கி விட்டமையாலும், பிரகிருதிக்கு மேலுள்ள தத்துவவியல்பறியமாட்டாமையாலும், பிரமவிஷ்ணுவாதி தேவர்களும் அஸர்வஞ்ஞராவரென்க.

வேதாந்தம் எனப்படும் உபநிஷத்துக்கள் பூர்வபக்ஷ உபநிஷத்து-சித்தாந்த உபநிஷத்து என இருவிதமாகக்காணப்படுகின்றன. இங்கே வேதாந்தம் என்றது தேகாத்மவாதமுதல் ஏகாத்மவாதமீறாயுள்ள பூர்வபக்ஷக்கொள்கைகளைப் பிரதிபாதிக்கும் உபநிஷத்துக்களையாம. வேதத்தில் தேகமுதல் ஆன்மபரியந்தமான பொருள்களைப் பரம்-பரம் எனக்கூறிக் கழிக்கும் உபநிஷத்வாக்கியங்களே யிதற்குப் பிரமாணம். வேதம் பூர்வபக்ஷங்களையும் பிரதி பாதிக்கும் என்பது கைவல்லியநூலார் சம்மதமுமாம்.

"பூருவஞ்சித்தாந்தம், காவல்வேதங்க
ளுரைத்திடும்..................."

என்பது கைவல்லியநூல் வாக்கியம்.

இனி, சிவசாத்திரத்தில் வஸ்து நிச்சயமுதலியவை மேலானவையாயிருக்கும் என்பது எதனாற் பெறப்படும்? என்று வினவிய பார்த்துவாஜருக்கு உத்தரமளிக்கு முகத்தில், வேதாந்த-சாங்கியாதி மதங்களின் கொள்கைகளையும் முடிபுகளையும் முறையே ஆராய்ந்து (analise) சென்று, அவற்றிலுள்ள யுக்தி-நியாய-அநுபவப் பொருத்தமின்மைகளை விளக்கிப் பூர்வபக்ஷஞ் செய்து, முடிவில் சித்தாந்தவஸ்து நிச்சயமுதலியவற்றைத் தாபித்திருக்கின்றது. இங்கே கவனிக்கத்தக்க பகுதியொன்றுளது. சிவாகமங்களொவ்வொன்றிலும் இங்ஙனம் மதவாராய்ச்சி செய்து பூர்வபக்ஷம் பண்ணுமுறை முக்கிய பகுதியாய் வந்திருப்பதாகக் காண்கின்றது. இது, சிவாகமங்களின் ஞானபாதங்களில் காணக்கிடக்கும். அங்ஙனம் பூர்வபக்ஷம் பண்ணுமியல்பினாலே தான் சிவாகமங்கட்குச் சித்தாந்தம் என்னும் பெயர் வந்திருக்கலாம் போலும்.



சிவாகமங்கள் ஏன்? அங்ஙனம் பூர்வபக்ஷம் பண்ணுங் கடமையை வகிக்கவேண்டும், என்று விசாரிக்குமிடத்தில், அது, ஆன்மாக்களிடத்து வைத்த கருணையினாலென விளங்கும். என்னை? கன்மபேதங்களும் அவற்றிற்கேற்ப பரிபாகபேதங்களும் நீடுநிலைமைக்கு வருமுண்மையுணர்ந்து, அப்பரிபாக வியல்புக்கேற்பக் கொள்கைகளும் மதங்களுமெழுந்து உண்மைநிலை தெரியாவண்ணம் மயக்கம் (Confusion) செய்யக்கூடுமாதலால், அம்மயக்க நிவர்த்தியின் நிமித்தம் சிவாகமங்களொவ்வொன்றும் மதவாராய்ச்சிசெய்து பூர்வபக்ஷம் பண்ணுந்தொழிலைமுக்கிய கடமையாவகிக்க நேர்ந்ததெனக்காண்கின்றது. மதவாராய்ச்சிசெய்து பூர்வபக்ஷம் பண்ணும் வழியில், முத்திநெறியொன்றுளது என்னும் உணர்ச்சியேயில்லாதார்க்கு அவ்வுணர்ச்சியை யுதிப்பிக்கவும், முத்திநெறி தலைப்பட்டாரில், பரிபாகத்தளவாகக் கீழ்க்கீழ்த்தத்துவநிலை முத்திநெறிகளிற் பயில்வாரை, மேன்மேல் முத்திநிலைகளி லுயர்த்தவும், உத்தமபரிபாகிகளாயுள்ளார்க்குக் கீழ்நிலைத் தத்துவமுத்திநெறிகளிற் சாருமயக்கம்வாராதிருக்கவும், சத்திநிபாதத்தால் தீவிரதரபக்குவமுற்றோரை உண்மை முத்திநெறியில் நேரே செலுத்துதற் பொருட்டுமே, திவ்வியாகமங்கள் அங்ஙனம் ஓயாது மதவாராய்ச்சிசெய்து சித்தாந்த முடிபினை நிறுத்துந் தொழிலை, இன்றியமையாப்பெருங்கடனாக வகித்தனவாமெனத் தோன்றுகின்றது. சிவம் ஆன்மவநுக்கிரம் ஒன்றினையே சிந்தித்திருக்கும். அதன் பொருட்டே அது பஞ்சகிருத்தியமும் பண்ணும், அத்தகைய கருணையிருந்த பரமசிவம் ஆகமங்களில் மதவாராய்ச்சிசெய்து பூர்வபக்ஷம் பண்ணுமானால், அது சரியாயிருக்கக் கேட்கவும் வேண்டுமோ! அவ்வாராய்ச்சி, வைஷம்மியபுத்தியாற் செய்யப்படுவதொன்றெனக்கருதவும் படுங்கொல்லோ! அது, இரக்கமிகுதியாற்செய்யும் பேருபகார கிருத்தியமேயாமென்க. அப்பரோபகாரச் செயல்வகிக்கச் சிவாகமமொன்றே அருகமுடையதாகும். ஏனெனில், ஏனைமதநூல்களெல்லாம் கீழ்நிலைத் தத்துவங்களினெல்லையில் நின்றுவிட்டமையாலென்க.

இனி, பூர்வபக்ஷக்கொள்கைகளும் மதங்களும் எக்காலத்துண்டாயின? எனில், அவை, தத்துவவரிசைகளும், புவனவரி

சைகளும், புவனேசுரபதங்களும் என்று உண்டாயினவோ, அன்றேயுண்டாயின வென்று கொள்ளவேண்டும். முப்பத்தாறு தத்துவங்களும் புவனரூபங்களாயிருக்கு மென்று சிவாகமங்கள் தெரிவிக்கின்றன. புவனங்களுண்டெனில், அவற்றில் போகங்களுமிருக்கும். போக்தாவின்றிப் போகங்களிரா. ஆதலின், அப்புவனபோகங்களையடையும் ஆன்மாக்களுண்டென்னு முண்மை தானே விளங்கும். கன்மபரிபாக பேதத்தால் அந்தந்தத்தத்துவ புவன நிலைகளையடைந்து ஆன்மாக்கள் போகந்துய்க்கையில், அத்தத்துவபுவனங்களே அவ்வான்மாக்கட்கு முத்திகளாகும் என்று ஔபசாரிகமாகச்சாத்திரங்கள் கூறும். யதார்த்தத்தில் அம்முத்திகள் நிஜமுத்தியாகாவாம். அவற்றை "அபரம்" எனச் சித்தாந்த சாத்திரங்கழிக்கும், அவ்வபரமுத்திகளையடைவித்தற்கு மதங்களுந், சாத்திரங்களும், சாதனங்களும் இன்றியமையாது வேண்டப்படுதலால், தத்துவநிலைகள் ஏற்பட்டவன்றே, பூர்வபக்ஷக்கொள்கைகளும் மதங்களும் உண்டாயிருந்தன, என்னு முண்மை இனிது நாட்டப்படுகின்றது. பூர்வபக்ஷக்கொள்கைகளும் மதங்களும் சிருட்டியில் அடங்கியும் வெளிப்பட்டும் நிலவும். ஆன்மபரிபாக பேதங்கள் முனைக்கும்போது அதததற்குரிய கொள்கைகளும் மதங்களும் இயற்கையிலிருந்து வெளிப்படும். முனைக்காதபோது சிருட்டியில்டங்கியிருக்கும். இந்த நியாயத்தினுலேதான், பழமையாயிருப்பன விருக்க, ஓரோர் காலங்களில் புதியனவாகக் கொள்கைகளும் மதங்களும் தோன்றி விளங்கியும், அருகியும், மறைவதுமானவியல்பு உலகத்திற் காணவருகின்றது. தத்துவபுவனமுத்திகளுண்டென்பதற்கு, அவற்றையடையுமான்மாக்கள், "பூதஸம்ஸித்தர்" பிரகிருதிஸம்ஸித்தர்,, என்னும் பெயரால் சாத்திரங்களில், முக்கியமாக சிவாகமங்களிற் கேட்கப்படுதலே சான்றும். அங்ஙனந்தத்து முத்திநிலைகள் ஏற்படும் இயற்கையுண்மையை முன்னுணர்ந்து தாம் தோன்றிய காலந்தொட்டே, சிவாகமங்கள் தத்துவமுத்திநிலைகளை ஆராய்ச்சிசெய்யும் வழியை விளக்கி உண்மைமுத்தியை அதாவது, சித்தாந்த முத்திநிலையைவரையறுத்து வைக்குங்கடமை பூண்டதாகத்தெரிய வருகின்றது. இவ்வாறன்றி, மதவாராய்ச்சி முறையானது அவ்வம்மதங்கள் தோன்றிய பிற்காலங்களிலுண்டாயினவாம் என்று மறுக்கில், ஆதியிலேயே சிவாகமங்களில் அவ்வாராய்ச்சி முறைவந்திருத்தற்கு நியாயஞ்சொல்லல் வேண்டும். "சிவாகமங்கள் பிற்காலங்களிற்றேன்றியனவாகட்டும்" என்னில், அதற்குப்பிரமாணமில்லை ஆகமங்கள் சிருட்டிகாலத்திலேயே தோன்றின என்பதற்குப்பிரமாணம் மிருகேந்திரத்தில் வருமாறு.



சு:கதம்பஹேஶ்வராத்வதத்
ஆகதம்ஜ்ஞானமுத்தமம் |
கிஞ்சசேதஸிஸம்ஸ்தாப்ய
நிர்மமேபகவானிதம் ||

இ-ள். (நிஷ்கள) சிவனிடத்திருந்து உத்தமமான இந்த ஞானசாத்திரம் எவ்விதமாக வெளிப்பட்டது? அந்தப்பகவான் இதை என்ன நினைத்துச்செய்தருளினர்? என்பதாம். இவ்வினவிற்குவிடை:

சு:ஸ்ருஷ்டிகாலேமஹேஶான:
புருஷார்த்தப்ரஸித்தயே |
விதத்தேவிமலஞ்ஜ்ஞானம்
பஞ்சஸ்ரோதோபிலக்ஷிதம் ||

இ-ள். சிருஷ்டியாரம்ப காலத்திலே பரமேசுரன், போகமோக்ஷரூபபப் புருஷார்த்தசித்தியின் பொருட்டு, முன்னம் நாதரூபமாய் நின்மலமாகவும், பின்புசதாசிவரூபத்தால் பஞ்சமுகங்களின் வழியாகப் பிரகாசரூபமாகவும் அதனைச் செய்தருளினர் என்பதாம், இவ்வாறே பௌஷ்கரமுதலியவற்றுள்ளுங் கூறப்பட்டிருக்கின்றது,

"ஸர்வாகமமயஶ்ஶிவ:"
"ஸர்வஉபநிஷன்மயஶ்ஶிவ:" எனவரும் சுருதிவாக்கியங்களும், சிவாகமங்கள் ஆதிகாலத்திலேயே தோன்றின என்னுமுண்மையை வலியுறுத்தும். சிவாகமங்கள் சிருட்டிகாலத்திலேயே யுண்டாயின வென்றமையால், அவற்றுள்வரும் மதவாராய்ச்சி (Comparative study) முறையும் அக்காலந்தொட்டிருக்கின்றதெனக்கொள்ளுவதே நியாயமாகும். இதுவன்றியும், பரதகண்டத்தில் (உலகமுழுமையுங்கூட) வழங்குஞ் சக

லமான வித்தைகளுக்கும் மூலம் சிவாகமங்களிற் காணக்கிடக்குமென்பது ஆகமவித்துக்களின் கருத்து.

"ஈசான: ஸர்வவித்யாநாம்"

ஸர்வவித்தைகளுக்கும் வக்தா ஈசானர், என்ற சுருதிவாக்கியத்தின் பொருள் ஆகமத்திற்காணவரும். இத்தியாதி நியாயங்களால் மதவாராய்ச்சியானது வஸ்து நிச்சயம் பண்ணுவதற்கும், உண்மை முத்திநெறியறிந்து ஒழுகிப்பேறெய்துதற்கும் இன்றியமையாதவுத்தமசாதனமாயிருத்தல் விளங்குகிறபடியால் உலகில் மனிதராய்ப்பிறந்த ஒவ்வொருவரும், முன்னமே கொண்டிருக்கும் அபிமானக்கொள்கைகளை விடுத்து, உண்மையொன்றினையே விரும்பி, மதவாராய்ச்சியில் (Comparative study) பயிலவேண்டுவது அதிகாவசியமாவதறிக.

சிவாகமங்கள் ஆதிகாலத்திலேயே மதவாராய்ச்சி செய்யும் வழியைக்காட்டி அக்கடமையினைத்தாமும் வகித்ததனாலே தான் சித்தாந்தம் என்பதொன்று ஏற்பட்டு நிலைபெறலடைந்திருக்கின்றது. அச்சித்தாந்த வழிபிடித்து ஏனைமதநிலைகளை அளந்தறியும் வழியும் உலகத்திற்குண்டாகியது. இன்று இச்"சித்தாந்த மகா சமாஜம்" என்பதொன்று ஏற்பட்டுச் சித்தாந்த வுண்மைகளைப் பரவச்செய்ய வந்ததும், சிவாகமங்கள் தத்துவ முத்திநிலைகளை ஆராய்ச்சிசெய்து முடிவுகட்டிய பேருபகாரத்தினாலேயேயாம். ஆதலினால், இம்மகாசமாஜத்தின் கண் சித்தாந்தவுண்மைகள் பல முகங்களாற் பெரிதும் விளக்கப்படவேண்டுவதே அழகும் பொருத்தமுமாகும். அது லோகோபகாரமுமாகுமென்க.

இம்மகா சமாஜம் தடையுறுவண்ணம் நடைபெறச் செய்துவரும்மேதாவியரும், அதனை வாக்-சரீர-பொருட் சகாயங்களால் ஆதரித்து வருஞ்சிவ நேசச்செல்வர்களும் பிரபுக்களும் ஸ்ரீசிவானுக்கிரகத்தால் இருமையிலுஞ் சிறந்து வாழ்வாராக எனத்திருவருளைச் சிந்திக்கின்றோம்.

திருச்சிற்றம்பலம்.

C. M. அரங்கசுவாமி நாயகர்.

# காயத்ரீ மகாமந்திரம்.

வேதசம்பந்தமான நித்திய கர்மங்களாகத் துவிஜர்களுக்கு ஏற்பட்டிருப்பனவற்றுள் காலை மாலை சந்தியாவந்தனம் முக்கியமான கர்மமாம். சந்தியாவந்தனம் என்னப்படுவது ஈஸ்வர ஆராதனையேயல்லாமல் மற்றொன்றுமல்ல. பிற கர்மங்களைப் போலவே, சந்தியாவந்தனத்திலும் அங்கி அங்கம்; முக்கியம் கௌணம்; உயிர்ப்பாகம், உடற்பாகம் என்பன உண்டு. அர்க்கியம், அபித்தியாகம், ஜபம், உபஸ்தானம் என்பவை முக்கியமானவையென்றும், ஆசமநம், சங்கல்பம், மார்ஜநம், தர்ப்பண மாதியவை கௌணமானவையென்றுஞ் சொல்லப்படுகின்றன. கௌணம் என்பது உபயோகமற்றது என்று பொருள்படுவதாகக் கொள்வது பிசகு. மற்றதை நோக்கி இது அமுக்யமென்று கொள்வதே சரியாகும்.

காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மாச்சரியம் என்னும் அரிஷட்வர்க்கங்களாகிய மந்தேஹர்கள் என்னும் அசுரர்கள், ஆன்மாவாகிய ஞானசூரியனை யோட்டி யப்புறப்படுத்துவதற்காக காயத்ரீமந்திரத்தைத் தியானித்து உச்சரித்து அம்பு எய்வதின் அறிகுறியாக ஜலத்தைக் கையிலேந்தி எறிவது அர்க்கிய பிரதானமாகும். இது மார்ஜநம், ஆசமநம், பிராணாயாமம் முதலிய கிரியைகளினால் பிராணன்,வாக்கு,காயங்களைப் பரிசுத்தப்படுத்திப் பிறகு காயத்ரீமந்திரத்தால் மனத்தூய்மையெய்தச் செய்துகொள்வதாம்.

மனத்தூய்மையெய்தி, மன அலைகள் ஓய்ந்தபின் (சித்தவிர்த்திகள் ஒடுங்கியபிற்பாடு), ஆதித்தன் முதலான வெளிப்பிரபஞ்சத்தில் அந்தர்யாமியாயுள்ள பரமாத்மாவும், சந்தியா உபாசகருடைய அன்னமய, பிராணமய, விஞ்ஞானமய, ஆனந்தமய கோசங்களுக்குள்ளிருக்கும் ஆன்மாவும் ஒன்றே, இரண்டல்ல வென்னும் உள்ளுணர்வடைதல் அபித்தியாநமாம்.

ஜெபமாவது—மேலே தெரிவித்தபடி ஒன்றான உள்ளுணர்ச்சியுண்டாக, அவ்வுணர்வின் பொருளாகிய ஈசுவரனைத் தியானிப்பது. இதுவே காயத்ரீஜெபம். இம்மகாமந்திரத்தின் கருத்து-

சர்வஜீவர்களுக்கும் தேஜஸ் அளிப்பவரும், பிரபஞ்சமெல்லாஞ் சிருஷ்டிக்கின்றவரும், எவராலும் பூசனை செய்யப்படுபவரும், எமது புத்தியைப் பிரேரணை செய்கிறவரும், நன்னெறியில் நடத்துகின்றவரும் ஞானப்பிரகாசருமாகிய அந்த ஈசுவரனைத் தியானம் செய்கிறோம் என்பதே. பிரபஞ்சத்திலுள்ள சர்வவித்தைகளும் வேதங்களில் அடக்கமாயிருக்கின்றன. வேதங்களோ காயத்ரி மந்திரத்துளடக்கம். காயத்ரியோ பிரணவத்துளடக்கம். இதுவே உபநிஷத்துக்களின் துணிபாகும்.

காயத்ரீமந்திர உண்மையுணர்ந்த குருவானவர் உபநயன சம்ஸ்காரகாலத்தில் சிஷ்யனுக்கு உபதேசிப்பார். இதற்கு பிரம்ஹ வித்யை யென்றுபெயர். பூர்வகாலத்தில் இஃதுபதேசிக்கப்பட்ட ரகசிய முறையைக்காட்டும் வண்ணம், தற்காலத்திலும், உபதேசிக்குஞ் சமயத்தில் பட்டையேனும் அல்லது வேறு சுத்த வஸ்திரத்தையேனும் ஆசாரியனும் சிஷ்யனும் போர்த்துக்கொண்டு, ஆசாரியன் சிஷ்யனுடைய காதில் உபதேசிப்பதுண்டு. இப்பட்டுப் போர்வையானது, பிரம்ஹ வித்யையை உபதேசிக்கப் பெறுபவன் [illegible]கின்ற வாற்றால், அந்த கர்ப்பப்பையைச் சூசிப்பிக்கிறதென்றுங் கொள்ளலாம்.

காயத்ரி மந்திரமானது மந்திரங்களுக்குள் மிகச்சிரேஷ்டமானது. இதைக் கிரமப்படி உச்சரித்திடுவோர் தாம் நலம்பெறுவதோடு உலகமுழுவதும் நலம்பெறச் செய்கின்றவராவர்.

“எங்களுடைய புத்தியைப் பிரேரணைசெய்து நடத்துகின்ற பிரகாசமான அந்த ஞானசூரியனுடைய திவ்யஜோதியைத் தியானிக்கின்றோம்”—என்பதே காயத்ரீ மந்திரத்தின் சுருக்கமான அர்த்தம். இதைத் தியானிப்பவன் சர்வஜீவராசிகளுடைய நன்மையும் பிரார்த்திக்கின்றானென்பது பன்மைகளினால்வெளிப்படும்.

இம்மந்திரத்தை உச்சரிப்பதற்குமுன் மூன்று அல்லது ஏழு வியாகிருதிகளை உச்சரிக்கவேண்டும். இவை மந்திர உண்மைகளைக்காட்டுந் திறவுகோல்களாகும். பூ: புவ: ஸுவ—என்பனவே மூன்று வியாகிருதிகளாகும். இவை மனிதனுடைய ஸ்தூல, சூக்கும, காரணமாகிய வியஷ்டி சரீரங்களையும்; வைஸ்வாநரன், ஹிரண்யகர்ப்பன், ஈஸ்வரன் என்ற சமஷ்டி சரீரங்களையும்; ஜாக்ரத



ஸ்வப்ன, ஸுஷுப்தியாகிய மூன்றவஸ்தைகளையும் பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம் என்னும் மூன்று லோகங்களையுங் குறிக்கின்றன. பூ: புவ: ஸுவ: மஹ: ஜந: தப: ஸத்யம்—என்பவையே ஸப்தவியாகிருதிகளாகும். இவை மனிதனுடைய ஸப்த அம்சங்களையும், பிரகிருதியின் ஸப்த நிலைமைகளையும், ஸப்தலோகங்களையுங் குறிக்கின்றன.

ஜபஞ்செய்யுங்காலத்தில் உபாசகனானவன் விராட்புருஷனிடம் ஒருமைப்பட்டு மூன்று அல்லது ஏழு லோகங்களுடன் தன் மூன்று சரீரங்களை அல்லது ஏழு அம்சங்களை முறையே சாந்தமாகவும் நேர்மையாகவும் பொருந்தும்படி செய்துகொண்டு, தன் இருதயத்துள்ள ஆன்மாவாகிய ஞானசூரியனிடத்தி லிருந்து சர்வ லோகங்களிலு மிருக்கும் ஜீவராசிகளுக்கு ஸந்துஷ்டி, ஞானம், சாந்தமிவை யுண்டாகவேண்டுமென்று ஒரே மனோநிலையில்நின்று சிதறாது தியானஞ் செய்யவேண்டும். இங்ஙனம் பக்தியுடன் உண்மையுணர்ந்து சூரியனை யுபாஸிக்கின்றவனே பிராம்மணனாவான்.

பிருஹதாரண்ணிய, சாந்தோக்ய, ஸூர்யோபநிஷத்துகளில் காயத்ரீ உபாசனாமுறை நன்கு சொல்லப்பட்டிருக்கிறது. காயத்ரீசப்தம் ஸ்திரீலிங்கமாவதால் ஈஸ்வரப் பிரதிபாதகமான மந்திரமாயிருந்தாலும், தேவியாக உபாஸிக்கப்படுகிறது. இம்மந்திரத்தியானம்—காலையில் சிவப்புவஸ்திரமணிந்த காயத்ரீ தேவதையாக, மூலாதாரத்தின்கண் லக்ஷியம் வைத்தும்; மத்தியானத்தில் வெள்ளை வஸ்திரமணிந்த சாவித்ரி தேவதையாகப் புருவமத்தியிலும்; சாயங்காலத்தில் நீலவஸ்திரமணிந்த சரஸ்வதிதேவியாக இருதயத்திலும்—நிகழவேண்டும். (மாத்தியாந்நிகம் வேதத்தில் விதிக்கப்பட்டதல்ல, ஸ்மிருதிப்புரோக்தமாம்.)

சாதாரணமா யுபதேசிக்கப்படும் காயத்ரிக்கு மூன்று பாதங்களுள. இதை த்ரிபாதகாயத்ரி என்பதுண்டு: இது சகுணம் மூன்றும் முறையே பூலோக, புவர்லோக ஸுவர்லோகமென்று உபலக்ஷணமாகக் கூறப்பட்ட திரிபுடி சம்பந்தமுடையன. இந்தக் காயத்ரியுபாசனை செய்வோன் கர்மயோகி: என்றால், சகல கர்மங்களையும் தனக்கெனச் செய்யாமல் பிறருடைய நலத்தைக்கோரி

ஈஸ்வரார்ப்பணமாகச் செய்கின்றவன். பிரம்மச்சாரி, கிருகஸ்தன், வானப்பிரஸ்தன் என்னும் முதல் மூன்று ஆஸ்ரமிகளும் இந்த காயத்ரி உபாசனைக்கு அதிகாரிகளாவர். நான்காவது ஆஸ்ரமத்தனாகிய சந்நியாசி திரிபுடியையும் திரிலோகங்களையுந் தாண்டினவனாதலால் த்ரிபாத காயத்ரியுபாஸனை அவனுக்கு முக்கியமல்ல. அவன் சதுஷ்டிபாத காயத்ரிக்கு அதிகாரியாவான்.

காயத்ரியை ஸ்திரீரூபமாக உபாசிப்பதில் ஈஸ்வரனுடைய அபின்ன பராசக்தியா யுபாசிக்கவேண்டும். கேனோபநிஷத்தில் உமாதேவியே காயத்ரியெனப் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. திருமந்திரம்:—

காயத்திரியே கருது சாவித்திரி
யாய்தற் குவப்பர் மந்திரமாங்குன்னி
நேயத்தேரறி நினைவுற்று நேயந்தாய்
மாயத்துட்டோயா மறையோர்களாமே.

என்று கூறுகிறது. ஸ்வேதாஸ்வதரோப நிஷத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கும் தேவாத்மசக்தியும், கீதையில் ஏழாவது அத்தியாயம் ஐந்தாவது ஸ்லோகத்திற் கூறப்பட்டுள்ள பரப்பிரகிருதியும் காயத்ரியேயாம்:—விஸ்வகர்மன்.

---

1913 MADRAS.

## சமாச்சாரங்கள.

---

சென்னை வேதாகமோக்த சைவசித்தாந்தசபை—ஐம்பத்து மூன்றும் வருடமகோத்சவம் 1913ஹு செப்டெம்பர்மீ 21உ ஆதிவாரம் சென்னைப் புரசைவாக்கம் கங்காதரேச்சுரராலயத்தில் கொண்டாடப்பெற்றது. அன்று காலையில் உதயத்திற்குமுன் மகாபிஷேகமும், பற்பலசபையினர் தேவாரத்திருமுறை பாராயணஞ் செய்ய ஜெகதாச்சாரிய மூர்த்திகளாகிய சமயகுரவர்கள் நால்வர் மகோத்சவமும், பகலில் மாகேசுரபூஜையும், பிற்பகலில் சித்தாந்தசரபம் அஷ்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலியாரவர்களால் பகவத்கீதை விளக்கப் பிரசங்கமும், ஸ்ரீமத் கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் **B.A**, அவர்களால் திருமுறையுந் திருக்குறளும் எனும் விஷயப்பிரசங்கமும் நடந்தேறின. இச்சபை வைதிக சைவசித்தாந்த சண்டமாருதம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகரவர்களால் தாபிக்கப்பெற்று அரைநூற்றாண்டுக்கு மேலும் திருவருளின் பிரேரகத்தால் நடந்தேறிவருகிறது.

---

உத்திரமேரூர் சைவசித்தாந்தசபை:—இச்சபையின் மூன்றுவதாண்டு நிறைவு கொண்டாட்டமானது பிரமாதீசஹு புரட்டாசிமீ 30, 31, தேதிகளில் உத்திரமேரூர் ஐக்கியநாணய பாங்கி மண்டபத்தில், சித்தாந்தசரபம் அஷ்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலியாரவர்கள் அக்கிராசனத்தின்கீழ் நடைபெற்றது. முதனாள் காஞ்சிபுரம் சுப்பிரமணிய தேசிகரவர்கள் ஆலயத்தைப் பற்றியும், காஞ்சி வண்ணக்களஞ்சியம் நாகலிங்க முதலியாரவர்கள் மெய்கண்டார் சரித்திரத்தைப் பற்றியும், இச்சபைத்தாபகரும் காரியதரிசியுமாகிய பொன்னுசாமி முதலியாரவர்கள் தமிழைப்பற்றியும், இரண்டாநாள் ஷை தேசிகரவர்கள் உலகோற்பத்தி பற்றியும், வாசுதேவநாயடு அவர்கள் சமயத்தைப்பற்றியும், திருப்பாதிரிப்புலியூர் கிருஷ்ணசாமி செட்டியாரவர்கள் சன்மார்க்கத்தைப்பற்றியும், கட்டையாம்பந்தல் அரங்கநாத முதலியாரவர்

கள் பஞ்சாட்சரத்தைப் பற்றியும் உபந்நியாசம் செய்தார்கள். ஒவ்வொரு உபந்நியாசத்தின் சாரத்தையெடுத்து அக்கிராசனாதிபதியவர்கள் நன்கு விளக்கியதுடன் சித்தாந்தம் என்பது இத்தகையதென முடிவில் கூறிமுடித்தனர். அவ்வூர் பாரதப் பிரசங்கியாராகிய துரைசாமி நாய்க்கர் அக்கிராசனாதிபதிக்கு வந்தனோபசாரப் பத்திரிகை செய்யுள்ரூபமாகப் பாடியது மிக வியக்கத்தக்கதாகவிருந்தது. இச்சபை மிக்க விருத்திக்குக் கொண்டுவரப் பிரயாசைப்படும் காரியதரிசியவர்கள் முயற்சியானது இறைவன் திருவருளால் ஓங்கிவளர்க.

---

ஷை சபையில் 7-9-13 இரவு புரொபசர் வி. முத்துககுமாரசாமி முதலியார் **B.A.,** அவர்கள் ஈஸ்வரலட்சணத்தைப் பற்றியும், மற்றையநாள் மண்சுமந்த படலத்தைப்பற்றியும், 15-9-13-ல் சென்னை ஸ்ரீநிவாசம்பிள்ளையவர்கள் சிவனருள் பெறுவதற்குரிய உபாயத்தைப்பற்றியும் உபந்நியாசித்தார்கள்.

---

சைவசித்தாந்த மகாசமாஜம்:—இச்சமாஜத்தின் காரியதரிசியாகிய கி. குப்புச்சாமி முதலியார் அவர்கள் விருப்பத்தின்படி 1913௵ அக்டோபர் 19௳ ஞாயிற்றுக்கிழமை மாலை 5½-மணிக்குமேல் சென்னைத் திருவல்லிக்கேணி திருவேட்டீச்சுரநாதர் ஆலயத்தில் சித்தாந்தசரபம் அஷ்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலியாரவர்கள் அக்கிராசனராக விருக்க, திருவாவடுதுறையாதீன சைவப்பிரசாரகரும், ஷை சமாஜத்தின் அத்தியட்சருமாகிய தூத்துக்குடி பொ. முத்தைய பிள்ளையவர்கள் "தட்சணாமூர்த்த தத்துவார்த்தம்" என்னும் விஷயத்தை உபந்நியாசித்தார்கள். அவ்வமயம் அங்கு விஜயஞ்செய்திருந்த அன்பர்கள் யாவரும் அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை. இத்தகைய பிரசங்கம் அடிக்கடியவர்பால்கேட்க எதிர்பார்த்திருக்கின்றனர். திருவருள் கூட்டிமுடிக்க.

---

## புத்தக வரவு.

"Essentials of Hinduism in the Light of Śaiva Siddhanta" சுத்தாத்துவித சித்தாந்த வைதிக சைவவுண்மையினை உள்ளங்கைநெல்லிக்கனிபோல ஆங்கிலத்தில் தெரிந்துகொள்ளத்தக்க விரும்பு



வார்கட்கு இந்நூலொன்றே போதுமானது. சந்தேக விபரீதங்களின்றித் தருக்கரீதியாய்ச் சுருத்தியுத்திக்கிசைய எளிதில் விளங்கிக்கொள்ளத்தக்க நடையில் செவ்வனே யெழுதப்பட்டிருக்கிறது. இத்தகையவொருநூலிதுகாறும் வழங்காதகுறையினாலன்றோ ஆங்கிலமாத்திரம் கற்ற நம்மவரும் ஐரோப்பிய மேதாவியரும் நமது சமய உண்மையினையறியாதவராயிருக்கின்றனர். இனிய ஐரோப்பியரிதனையாராயப்புகுவரேல் அவர்கள் அனுபவிப்பதுடன் மேற்றிசையார் வாக்கையே குருவாக்கியமாகக் கொண்டுவாழும் நம்மவர்சிலருக்கும் அவரே போதிக்க முன்வருவர். ஆங்கிலம் படித்த ஒவ்வொருவரும் இந்நூலையாராய்ச்சி செய்யவேண்டுவது அவர்கட்கு இன்றியமையாத கடமையாம். இந்நூல் Feather Weight கடிதத்தி லச்சிட்டு நல்லகட்டடம் செய்யப்பட்டிருக்கிறது. இந்நூலியற்றினர் ஆங்கிலமும் தமிழும் மிகக்கற்ற வதிவிற்பனராகிய யாழ்ப்பாணம் ஸ்ரீமத் சபாரத்தின முதலியாரவர்கள். இதன் விலை ரூபா ௩.

---

ஒருதுறைக்கோவை (நாணிக்கண் புதைத்தல்) பலவாண்டுகட்கு முந்தி அமிர்தகவிராயரென்னும் வித்துவசிகாமணியொருவர், தம்மாற்றான் இத்துறையொன்றில் பத்துக்கவி பாடினேனென்ன, இவர் நான் நூறுபாடுவேனென்றார், மாற்றான் நீர் நானூறு பாடுவேனென்றீர் அவ்வாறே பாடுகவென்ன அவர் நானூறு பாடி முடித்தனர். இந்நூல் தமிழ்மக்களனைவராலும் மிகக்கொண்டாடத்தக்கவொரு கௌரவமுடைய தென்பதிற் றடையில்லை. இக்கவிராயருக்குப் பின்னர் புலவர்கள் பெரும்பாலும் இத்துறைமேல் ஒவ்வொரு செய்யுளே பாடிப்போயினர். இப்போது யாழ்ப்பாணம் வண்ணைநகர் க. வைத்தியலிங்க பிள்ளையவர்கள் என்னும் புலவர்மணி வண்ணை வைத்தீசர்மீது இத்துறையில் நூறுகவிசெய்து அச்சிட்டுள்ளார். இக்கவிகள் சொற்சுவை பொருட்சுவையோடு யாப்பணிதோன்ற அற்புதநவரச வலங்காரங்களமைந்துள்ளன. அகத்திணையியல் ஆராயும் கவிஞர்பலருக்கும் இந்நூல் மிகத்துணையாயிருக்குமென்பதிற் றடையில்லை. இதன் விலை அணா 5.

---

பகவத்கீதார்த்த பங்கம் விலை அணா 1.

இக்கோவைநூலி னருமையினைக்கண்டு நாமவருக்கொருகவி பாடியனுப்பினேம். அதாவது:—

துறையொன்றினினூறுகவியமைத்துக் காசினியோர்துதித் துநிற்பத், துறையின்றுதந்தனையேயமிழ்தனையதமிழ்மொழியிற்றல ங்குகல்வித், துறைநன்றுகடந்தநின்பெரும்புலமையென்னென்பே ன்சுத்தசைவத், துறைசென்றுதிளைக்கும்வைதியலிங்கநாவலனுந் தூய்மையோனே.

---

முக்கிய குறிப்பு:—சித்தாந்தசாஸ்திர நுட்பவாராய்ச்சிசெய் துவரும் சைவாபிமானிகளாகிய மேதாவியர் பலர், தங்கள் தங்கள் அறிவினுக் கெட்டியவகையில் விஷயங்களையெழுதி இப்பத்திரிகை யினை யலங்கரித்து வருகின்றனர். அவ்விஷயங்களைப் படிப்பவர் கள் அவ்விஷயங்களில் ஏதாகிலும் முரண்டோன்றுமாயின் அம் முரண்களை மாத்திர மெடுத்துக்காட்டித் தக்கசமாதானம் தீட்டிப் பதில்வரைந்தனுப்பில் மிகவுலகோபகாரமாக விருக்கும். அங்ஙன மின்றி விஷயவாராய்ச்சி செய்யப்புகுந்தார் குணமுதலியவற்றை யெடுத்தெழுதி வைவுசொற்களை நிரப்பி மனம் புண்படவரைவது நமது சன்மார்க்கசமய கொள்கைக்கும், தற்கால நாகரீகத்திற்கும தக்கதன்றென்பது நமது கொள்கை. இத்தகைய கடிதங்கள் சில நம்பத்திரிகைக்கு வந்துகொண்டிருக்கின்றன. அவற்றை நாம் பிர சுரியாது நிறுத்திவிடுகின்றமைக்கு மன்னிப்புக் கேட்டுக்கொள்ளு கின்றனம்.

---

இலௌகிக போஜனவிதி விலை பை 6.

OFFICE OF THE REGISTRAR REGISTERED 10 JAN 1914 MADRAS.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

தொகுதி ௨.] 1913-௵ நவம்பர், டிசம்பர்௴ [பகுதி ௧௧-௧௨.

## சித்தாந்தபரிபாஷை
என்னும்
## தருக்கசோபானம்.

---

### பரிசம்—ஊறு.
### Touch.

இலக்கணம்:—துவக்காற் கிரகிக்கப்படுவது.

வகை:—குளிர்ச்சி, குளிர்ச்சியும் சூடுமில்லது.

இருப்பு:—குளிர்ச்சி அப்புவிலிருப்பது.

சூடு—தேயுவிலிருப்பது, குளிர்ச்சியும் சூடுமில்லது பிரு திவி வாயுக்களிலிருப்பது.

இதுகாறுங் கூறிய ரூபமுதலிய நான்கும் உற்பூத*மாயுள் ளகாட்சிக்குப்புலனும்.

### சங்கியை—எண்.
### Number.

இலக்கணம்:—ஒருமை (ஒன்று) முதலிய வழக்கிற்கேதுவா யிருப்பது.

வகை:—நித்தியப் பொருளிலுள்ளது நித்தியம். அநித்தி யப்பொருளிலுள்ளது அநித்தியம். இருமைமுதலிய யாண்டும் அநித்தியமே.

---

* உற்பூதத்தன்மையாவது காட்சியைப் பயப்பதொரு தருமவிசேடம் அதனின்மை அநுற்பூதத்தன்மை.

இருப்பு:—பிருதிவி முதலிய பத்துத்திரவியங்களினுமாம்.

பரிமாணம்—அளவு.

Dimention.

இலக்கணம்:—அளத்தல் வழக்கிற்கு இன்றியமையாதது.

வகை:—நுண்மை, பெருமை, குறுமை, நெடுமை.

இருப்பு:—பிருதிவி முதலிய பத்துப் பொருள்களினுமிருப்பது, நித்தியப்பொருள்களிலிருப்பது நித்தியம், அநித்தியப் பொருள்களிலிருப்பது அநித்தியம்.

பிரதக்துவம்—வேற்றுமை.

Severality.

இலக்கணம்:—வேறு என்னும் வழக்கிற்கு இன்றியமையாதது.

வகை:—எல்லாவற்றினு மிருப்பது.

சையோகம்—புணர்ச்சி.

Conjunction.

இலக்கணம்:—கூடியது என்னும் விவகாரத்திற்கேது.

வகை:—(1) கர்மசம்-தொழிலாற் றோன்றியது. கைக்கும் புத்தகத்திற்கு முளதாய சம்பந்தம்.

(a) அந்நியதரகர்மசம்-இரண்டில் ஒன்றின்றொழிலாற்றோன்றுவது. பருந்திற்கு மலைக்கு முள்ள சையோகம் (b) உபயகர்மசம்-இரண்டின்றொழிலாற்றோன்றுவது. மல்லர்களிருவருக்கும் உண்டானசையோகம்.

(2) சையோகம்—கூட்டத்தாற்றோன்றியது. கரத்திற்கும் தருவிற்குமுள்ள சையோகத்தால் காயத்திற்குந்தருவிற்குமுள்ள சையோகம்.

இருப்பு:—பிருதிவி முதலியவற்றில்.

விபாகம்—பிரிவு.

Disjunction.

இலக்கணம்:—சையோகத்தை நாசம் பண்ணுவது.

வகை:—(1) கர்மசம் தொழிலாற்றோன்றியது. கைக்கும் புத்தகத்திற்கு முள்ளதாய பிரிவு.

(a) அந்நியதரகர்மசம்-இரண்டில் ஒன்றின் றொழிலாற்றோன்றுவது. பருந்திற்கும் மலைக்குமுள்ள பிரிவு. (b) உபயகர்மசம்-இரண்டின் றொழிலாற் றோன்றுவது. மல்லர்களிருவருக்கு முண்டான பிரிவு.

(2) விபாகசம்—கூட்டத்தாற் றோன்றியது. கரத்திற்கும் தருவிற்குமுள்ள பிரிவால் காயத்திற்குந் தருவிற்கு முள்ள பிரிவு

இருப்பு:—பிருதிவி முதலியவற்றில்.



பரத்துவம்—முன்மை.

Priority.

இலக்கணம்:-முன்னென்னும் விவகாரத்தனுக்கின்றியமையாதது

இருப்பு:—பிருதிவி, அப்பு, தேயு, வாயு, மனங்களில்.

வகை:—சேய்மைக்கண்ணுள்ள திக்கினாற்பண்ணப்படுவது. மூத்தோன்கண்ணுள்ள காலத்தாற் பண்ணப்படுவது.

அபரத்துவம்—பின்மை.

Posteriority.

இலக்கணம்:-பின்னென்னும் விவகாரத்திற் கின்றியமையாதது.

இருப்பு:—பிருதிவி, அப்பு, தேயு, வாயு, மனங்களில்.

வகை:-அண்மைக்கண்ணுள்ள திக்கினாற் பண்ணப்படுவது. இளையோன்கண்ணுள்ள காலத்தாற்பண்ணப்படுவது.

குருத்துவம்—திண்மை.

Gravity.

இலக்கணம்:—வீழ்ச்சிக்குக்காரணம்.

இருப்பு:—பிருதிவியினும், நீரினும்.

திரவத்துவம்—நெகிழ்ச்சி.

Fluidity.

காரணம்:—உருகிய அரக்கு, மெழுகு, நெய், வெள்ளி, பொன் முதலியவற்றுள் முதலில் ஒழுகுவதற்குக்காரணம்.

இருப்பு:—அக்கினிசம்பந்தம் அபேட்சியாமல் அப்புவிலியல்பாயுள்ளது அக்கினிசம்பந்தம் அபேட்சித்துப் பிருதிவியிலும், தேயுவிலு, நிமித்தமாயுள்ளது.

சிநேகம்—நட்பு.

Viscidity *

இலக்கணம்—தூள்முதலியவற்றைத் திரட்டுவதற்கு ஏதுவாயது.

* இது Attraction of cohesion பாற்பமென்பர் ஆங்கிலேயர்.

இருப்பு:—நீரில்

சத்தம்—ஓசை.

Sound.

இலக்கணம்:—செவியாற் கவரப்படுவது.

வகை:—ஒலிவடிவு * எழுத்துவடிவென இரண்டு

இருப்பு:—ஆகாயத்தில்

வடிவு: -சையோகசம்-கூட்டத்திற் பிறந்தது பேரிகையிற் குனிலாலுண்டாகு மோசை

விபாகசம்:—பிரிவாற்பிறந்தது பிளவுபடுமூங்கிலாலுண்டாகும் சடசடவோசை

சப்தசம்:—அண்ணமுதலிய வியாபாரத்தாலுண்டாகு மெழுத்தோசை.

சுகம்—இன்பம்.

Pleasure.

இலக்கணம்:—எல்லாருக்கு மனுகூலமாக வுணரப்படுவது.

இருப்பு:—ஆன்மாவில் மாத்திரம்.

துக்கம்—துன்பம்.

Pain.

இலக்கணம்:-எல்லாருக்கும் பிரதிகூலமாகவுணரப்படுவது

இருப்பு:—ஆன்மாவில் மாத்திரம்.

ராகம்—விருப்பு. †

Desire.

இலக்கணம்:—இஷ்டசாதன ஞானத்தாற் றோன்றுவது.

இருப்பு:—ஆன்மாவின் மாத்திரம்.

வகை:—பயனாகிய விஷயம் சுகமுந்துக்கமு மின்மையுமாகும் அதனிச்சையைக் குறித்துப் பயனுணர்ச்சிக்கு மாத்திரங் காரணம். சாதனவிடயம் பயனுக்கேதுவான தன்மையுணர்ச்சிக்குக் காரணம், இதுவன்றி நித்தம் அநித்தம் இருவகைத்தென்றலுமொன்று. இறைவனிச்சை நித்தம். ஆன்மவிச்சை அநித்தம்.

* ஒலிவடிவு - Inarbulate, எழுத்துவடிவு - Arbulate.

† விருப்பு, வெகுளி என்னு மிரண்டினையும் தோடமென்னு மொன்றனு ளடக்குவர் நியாயநூலார்.



துவேஷம்—வெகுளி.

Aversion.

இலக்கணம்:—அநிஷ்டசாதன ஞானத்தாற் றோன்றுவது.

இருப்பு:—ஆன்மாவின் மாத்திரம்.

துக்கவிஷயம்—துக்கஞானமாத்திரம் காரணம்.

சாதனவிஷயம்—துக்கசாதனத் தன்மையின் ஞானங்காரணம்.

பிரயத்தனம்—தொழில்.

Effort.

இலக்கணம்:—சீவனுடைய அதிஷ்டத்தாலாயினும், இச்சையாலாயினும், அநிச்சையாலாயினுந் தோற்றுவது.

வகை:—பிரவிருத்தி செய்யும் விருப்பத்தாற்றோன்றியது. நிவர்த்தி துவேஷசாதனத்தன்மையின் ஞானத்தாற்றோன்றியது. சீவனயோனி சுவாச நிசுவாசங்கட்கேதுவானது. இவையன்றி நித்தம் அநித்தமென விருவகைத்தென்றலுமாம். இறைவனது நித்தம், சீவனது அநித்தம்,

தர்மம்—அறம் *

Merit

இலக்கணம்:—விதிக்கப்படுங் கருமத்தாலுண்டாயது.

அதர்மம்—மறம்.

Demerit.

இலக்கணம்:—விதிக்கப்படுங் கருமத்தாலுண்டாயது.

சமஸ்காரம்—வாசனை.

Faculty.

வகை:—வேகம்-Velocity-பிருதிவிமுதலியநான்கினு மனத்தினுமிருக்கும்.

பாவனை:—Mental Impression - அநுபவத்தின் காரியமாய் நினைவிற்குக் காரணமாயுள்ளது. ஆன்மாவில் மாத்திரமிருக்கும்.

திதித்தாபகம்:—நிலைபெறுத்துகை - Elasticilty வேறுவிதமாகச் செய்யபட்டதை யறுபடி முன்னிருந்ததன்மை யுள்ளதாகச் செய்வது. பிருதிவியினிருப்பது. இம்மூவகையு நித்தியமே.

* அறத்தினையும், மறத்தினையும் விருத்தியிலடக்குவர் நியாயநூலார்.

## புத்தி—அறிவு.

## Cognition.

இலக்கணம்:—சகல விவகாரங்கட்கும் காரணமாயிருப்பது

இருப்பு:—ஆன்மாவின் மாத்திரம்.

வகை:—நினைவு Memory முன்னுணர்ந்த வாசனையாலுண்டாகும் ஞானம். அந்த விசுவேசுரன், அந்த மணிகர்ணிகை.

அனுபவம்:—Apprehension - நினைவிற்கு வேறாய ஞானம். இதன்வகை யதார்த்தம், அயதார்த்தம்.

யதார்த்தம்:—True apprehension—எதன்கண் எதன்சம்பந்தமுண்டு அதன்கண் அதன் சம்பந்தமுண்டு அதன்கண் அதன் சம்பந்தத்தினது அனுபவம். இது பிரமை (யதார்த்த அனுபவம்) எனப்படும்.

இதன்வகை:—பிரத்தியட்சம், அனுமதி, சாத்தம்,

இவற்றின்கரணம்:—பிரத்தியட்சம், அனுமானம், சத்தம், கரணம்-இன்றியமையாதகாரணம்-வெட்டுக்தொழிற்குக்கோடரி

காரணம்:—காரியத்திற்கு நியதமாய் முன்னிற்பது.

வகை:—சமவாயி, அசமவாயி, நிமித்தம்.

சமவாயி:—முதற்காரணம்—Intimate—எதனோடு கூடியதாகக்காரியமுண்டாகிறதோவது. படத்திற்கு நூல்,

அசமவாயி:— துணைக்காரணம்—Nonintimate—காரியத்தின்றன்மையினாலாவது காரணத்தின்றன்மையினாலாவது ஒரு பொருளிற் கூடியிருக்கும் காரணம். ஆடைக்கு நாடா.

நிமித்தம்:—Instrumental மேற்சொன்ன விரண்டின் வேறாயகாரணம். ஆடைக்குத்தந்துவாயன்.

இம்மூவகைக் காரணங்களும் பாவகாரியத்துக்கு மாத்திரமுள. இம்மூன்று காரணங்கட்குள் இன்றியமையாத காரணமெதுவோ அதுவே முன்சொன்ன கரணமெனப்படும். ஆதலால் பிரட்டியட்சஞானத்திற்கே கரணம் பிரத்தியட்சம். இது பிரமாணத்திலடங்கும்.

அயதார்த்தானுபவம்:—False apprehension நான்குவகை

சம்சயம்:—Doubt—ஐயம் - ஒருதன்மையில் விரோதமான பல தன்மையுளவாகக்கொளுமறிவு. மனிதனோ? கம்பமோ?



விபரியம்:—Mistake-திரிவு-மித்தையினாலாயவுணர்வு. இப்பியைவெள்ளியென்பது.

சொப்பனம்:—Dream-கனவு * முன்னரனுபவித்தபதார்த்தஸ்மரணத்தானும், அதிஷ்டானத்தானும், தாதுதோஷத்தானும் உண்டாகிறது.

அநத்தியவசாயம்:—Fault of requctio ad absurdom. தருக்கம் - வியாப்பியத்தை யாரோபித்தலினால் வியாபகத்தை யாரோபிப்பது. தீயில்லையாகில் புகையுமில்லாதல் வேண்டும்.

குணமுடிந்தது.

---

## கருமம் - தொழில்.

## Action.

இது அசைவின் வடிவு கொண்டது. இது ஐவகைத்து விவரம்,

உட்சேபனம்;—எழும்பல் - Flowing Upwards - மேலிடத்திற் கூடுதற்கேது.

அவக்ஷேபணம்:—வீழ்தல், Throwing downwards, கீழிடத்திற் கூடுதற்கேது.

ஆகுஞ்சனம்—வளையுதல் - Contraction - உடலில்-மிகவும் கோணலை யுண்டாக்குவது.

பிரசாரணம்:—நிமிர்த்தல் - Delation - உடலிற் செவித்தாக்கலையுண்டாக்குவது.

கமனம்:—நடத்தல் † Going-எனையனைத்து நடத்தற்கேது

## சமர்நியம் - பொதுமை.

## Genus.

இலக்கணம்:—நித்தமாய் ஒன்றாய்ப் பலவற்றி னொருங்கு சேறலை யுடைய சாதி. இது இருவகைத்து. விவரம்.

---

*அயதார்த்தானுபவம் ஐயம், திரிவு, தருக்கம் என்னும் வேறுபாட்டால் மூவகைத்தெனப்பிரித்து, கனவு மானதக்காட்சித்திரிபாகலின் மூவகையின் மாறுபாடின்மை யுணர்கவென்றனர்தருக்க சங்கிரகவுரையார், சொப்பனம், அநத்தியவசாயம் என்னு மிரண்டும் விபரியயத்தின் யத்தியிற் போதிக்கதக்கது என்பர் நையாயிகர்,

† சுழற்சி முதலிய நடத்தலினடங்கும்.

பரம்:—மேல் - Extension - அது சத்தை (உண்மைத்தன்மை) யென்பது திரவியாதி மூன்றி னிற்குந்தன்மையால் மற்றச் சாமானியத்தை யபேட்சித்து அதிகதேசத்தினிருப்பது.

அபரம்:—கீழ் - None extension - அது திரவியத்தன்மை. குணத்தன்மை, கன்மத்தன்மை முதலிய சத்தை யபேட்சித்து அற்பதேசத்தினிருப்பது.

## விசேஷம் - சிறப்பு.

## Particularity.

இலக்கணம்,—நித்திய திரவியங்களாகிய பிருதிவி முதலிய நான்கின் பரமாணுக்களினும் ஆகாய முதலிய ஐந்தினுமிருப்பனவாய் வெவ்வேறாய் நித்தியமாய் அதீந்திரியங்களாயுள்ளன.

## சமவாயம் - ஒற்றுமை.

## Intimate relation.

இலக்கணம்:—சினையும் முதலும், குணமும் குணியும், வினையும் வினைமுதலும், சாதியும் வடிவும், விசேஷமு நித்தியமுமாக விரண்டனு ளொன்று மற்றொன்றினைப்பற்றி நீக்கமின்றி நிற்பது

## அபாவம் - இன்மை.

## Negation.

இலக்கணம்:—முன்னர் பிரமாணத்திற்காண்க.

பிரமேய முடிந்தது.

---

சித்தாந்த பரிபாஷை என்னும் தருக்கசோபானம் முற்றியது.

மணவழகு.

---

# மலபரிபாகம்.

---

நற்குஞ்சரக்கன்று நண்ணிற்கலைஞானங்
கற்குஞ்சரக் கன்றுகாண்.
மனநிலையில்லார்க்கி லனைவருக்குமறிவரிய
வள்ளல் கள்ளத்திறன் மறுகுமறிவிலியேன்
றனதினைவினுட்கொண்டே யவனவனே யாட்டுவாக்
தன்மையியின் மலவடிவு தன்னைமன்னிற்
நினையனையவளவிலிரு வினைதுலையொப்பறிந்து
சீர்காழிமன்றுசிற்றம் பலகாடுறைவான்
முன்னவினையுமுடல்வினையும் வருவினையுமறுத்து
முத்தியளிப்பவன் மலர்த்தாள்கட்குமுறைவைப்பாம்.

உலகத்தையும் அதன்கண் நிகழும் பலவித தோற்றங்களையும் செயல்களையும் யாம் கருதும்பொழுது இவற்றை நிகழ்விக்கும் ஓர் அறிவுடைப் பொருளுண்டென்று கருதுகிறோம். அப்பொருள் பரமபதியாகிய சிவபெருமான், அவன் இயற்கையில் பாசங்களின்று நீங்கியவனாதலால் நின்மலன். அவன் பேரறிவும் பேராற்றலு முள்ளவன். அவனுக்கு அறிவு, இச்சைசெயல்களென்னும் மூன்று சத்திகளுள்ளன. இச்சத்திகளைக் கொண்டே அவன் கிருத்தியங்கள் பலசெய்வான். அக்கிருத்தியங்கள் தன்பொருட்டன்றிப் பிறர்பொருட்டேயாம். பிறராவார் ஆன்மாக்களேயாம். அவ்வான்மாக்களும் இறைவனைப்போல் என்று முள்ள நித்தியப்பொருள்களாம். அங்ஙனம் அவைகள் நித்தியப்பொருள்களாயினும் சிற்றறிவும் சிறுதொழிலு முடையன. அவை அவ்வான்மாக்களுக்கு ஆணவமலசம்பந்தத்தா லுண்டாயின. இவ்வான்மாக்களும் சேதனப்பொருள்களாதலால் அறிவு இச்சை செயல்களுள்ளன. இறைவனது அறிவு இச்சை செயல்களுக்கும் ஆன்மாவின் அறிவு இச்சை செயல்களுக்கும் வேறுபாடென்னையெனில், கண்போல் காணுமொளி உயிர்களறிவாகும்; கதிர்போலக் காட்டுமொளி கடவுள்ஞானம்; உண்போருண்டல் உயிர்கள்

இச்சை ஊட்டிடுவோமென்பது ஈசனிச்சை பலதொழில் பண்ணல் உயிரின் கிரியை பலதொழில் பண்ணுவித்தல் சிவன்கிரியை ஆணவம் இவ்வுயிர்களின் அறிவை செம்பிற்களிம்பென்ன, அரிசியிலுமியென்ன, கண்ணிலிருளென்ன கண்ணிற் படலமென்ன, அநாதியே வற்றக்குறைவாய் மறைத்து நிற்கும். அவ்வாறு மறைத்து நிற்றலால் ஆன்மா மலினனாகி அணுவெனும் பெயர் பெறுவன் அணுவென்னும் ஆன்மா காலம் நியதிகலை வித்தை ராகம் என்னும் ஐந்தினாற் பொதியப்பட்டவனாகிப் பஞ்சகஞ்சுகங்களென்றழைக்கப் பெறுவன. இப்பெயர்பெற்று விஷய உன்முகனாகி நிற்குங்கால் புருடனெனப்படுவன். கன்மத்திற் கேற்பஸ்தூல சரீரத்தைப்பெறுவன. சிறைச்சாலைபோன்ற அத்தேகத்துடபொருந்திப் பல அவஸ்தை யுறுவன (அவஸ்தை எனினும் நிலையெனினும் ஒக்கும்). அவை ஆன்ம அறிவை மறைப்பதே தனக்குத் தொழிலாகப் பூண்ட அவ்வாணவத்தால் வந்தனவாம். அது தீமையில் விருப்பையும் நன்மையில் வெறுப்பையுந் தருவதாம்.

இத்தன்மையுள்ள அவ்விருண்மலம் ஆன்மாவின் குணமோ அல்லது பிறிதொரு திரவியமோ என்பதைக் கொஞ்சம் ஆராய்வாம். திரவியமெனினும் பொருள் எனினும் ஒக்கும். அப்பொருள் இயற்கைப்பொருள் செயற்கைப்பொருளென்றும், ஸ்தூலப்பொருள் சூக்குமப்பொருளென்றும், பலவகைப்படும் இவற்றுள் காரணமும் ஆக்கமுமில்லாது வருவது இயற்கைப்பொருள் காரணமும் ஆக்கமும் கூடிவருவது செயற்கைப்பொருள் தடித்துவருவது ஸ்தூலப்பொருள். நுணுகி நிகழ்வது சூக்கமப்பொருள் அன்றியும் இயற்கைப்பொருள் இன்னகாலத்தி லுண்டாயினதென்று வரையறுத்துக் கூறப்படாதது. அது பற்றியது அநாதி நித்தியப்பொருளாம். செயற்கைப்பொருளோ அங்ஙனம் நிகழாது ஓர்கால எல்லையுட்பட்டே நிகழும் ஆவணம் இயற்கைப்பொருள் தேகம் செயற்கைப்பொருள். பிருதுவி ஸ்தூலப்பொருள் ஆகாயம் சூக்கமப்பொருள் ஆணவத்தைச் சூக்கமப்பொருளெனினும் இழுக்காது. ஆகையால் ஆணவம் இயற்கைச் சூக்கமப்பொருளாம். அருவப்பொருள்களாகிய சூக்குமப்பொருள்களுக்கும் உருவமுண்மையின் ஆணவத்திற்கும் உருவமுதலியன உண்டு.



திரவியமெனப் படுவதற்கெல்லாம் உருவம், சொரூபம் சுபாவம், குணம், விசேடம், வியாபகம், வியாத்தி, நிறம், தரிசனம் என்னுந் தன்மைகளுளவாதலினால் இவ்வாணவத்திற்கும் அத்தகைய தன்மைகள் வாய்ந்திருந்தாலன்றோ அஃது ஓர் திரவியமென்பது சாலும் அங்ஙனம் அஃதுடைய தென்பதைக் காட்டுவாம்.

ஆவணத்திற்கு உருவம்...இருட்டு இருள்
சொரூபம் ...வருத்துமஞ்ஞானம்
சுபாவம் ....மறைத்தல்
குணம் ....அறிந்தவற்றை மீளமறைப்பித்தல்
விசேடம் ....பக்குவத்திலதன் சத்திமாய்தல்
வியாபகம் ....பரனை உயிர் அறியாமல் உடனிற்றல்
வியாத்தி ....மூவகை உயிரினுமுறுதல்
நிறம் ...கருமை
தரிசனம் ....கருமையைக்கண்டறியுமாறுநிற்றல்

இவ்வகைத் தன்மைகளெல்லாம் ஆணவத்தின் பால்நிலவுதலால் அஃது ஓர் திரவியமென்பது கண்டாம் இவ்வாணவத்தை சைவநூல்களில் இருளுக்கு ஒப்பிட்டுக் கூறப்படுவது கண்கூடாம் இருள் ஓர் உள் பொருளாயிருந்தா லன்றோ அவ்வொப்புமை கூறப்பொருந்தும். தருக்கநூலார் அதற்கு மாறாக இருள் ஒரு பொருளல்லவென்றும் ஒளியின் அபாவமே இருள் என்றுங் கூறியிருக்க முக்காலத்திலுமில்லாத ஓர் பொருளை உள்ளதோர் பொருளுக்கு உவமை கூறல் அடாதெனின், அங்ஙனமன்று; இருள் ஓர் உள்பொருளே என்று நிரூபித்து மேற்செல்வாம்.

சைவநூல்களுள் புறவிருளை அகவிருளாகிய ஆணவத்திற்கும் கண்ணை ஆன்மாவிற்கும் ஞாயிற்றினைச் சிவத்திற்கும உவமைகூறி முப்பொருளுண்மை கூறினமை உண்மையே அங்ஙனம் கூறுமாற்றால் இருள் ஓர உள்பொருள் என்றற்கு ஐயமின்று ஆனால் தார்க்கிகா திரவியங்களின் எண்ணங்கூறுமிடத்து திரவியங்கள், பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், காலம், திக்கு, ஆன்மா, மனம் என ஒன்பது வகைத்தாகக் கூறினரேயன்றி, இருளையும் ஓர் திரவியமாய்க் கூறினாரல்லர் என்பதுமுண்மையே. அம்மட்டோ, வடிவுடைப்பொருளை விளியாற் கவருதற்கு ஒளியே

சாரணமாம். இருள் ஓர் வடிவுடைப்பொருளாயின ஒளியோடுங் கூடாத விழியாற் கவரப்படுவதன்று. அதற்கு மாறாக ஒளியோடு கூடாத கண்ணினால் இருள் கவரப்படுதலால் அஃது ஓர் வடிவுடைப் பொருளன்றென்றுங் கூறுவாராயினர். இதனால் ஒளியான சுபாவமே இருளெனப் பெறப்படும் இருள் இயங்குகின்றது கருவடிவிற்று என்பதெல்லாம் உணர்ச்சிமயக்கத்தாற் றோன்றியது எனவுங்கூறி இருள் ஓர் பொருளல்லவென மறுத்தமையும் உண்மையே.

அங்ஙனமாயின் அஞ்ஞானம் என்னும் ஆகவிருள் ஞானபாவமாகாதென்று மறுக்கப்படும். அதுபோல அந்தகாரமென்னும் புறவிருள் அலோகத்தின் அபாவமென்பது மறுக்கப்படும் அஃதாமாறு அலோகத்தின் அபாவமே அந்தக்காரமென்பார்க்கு அம்முறைபற்றிச் சுகத்தின் அபாவமே துக்கம், தன்மத்தின் அபாவமே அதன்மம், சையோகத்தின்பாவமே விபாகம் என்று இவ்வாறு கோடல்வேண்டும் அங்ஙனம் கொள்ளாமை சண்டாம். அன்றியும் ஆண்டொளியில்லை இருளுள்ளதென ஒளியின்மையின் வேறாய் இருள் என்னும் உணர்வு நிகழ்தலானும் அபாவத்தாற் செய்யக்கடவதொன்று யாண்டு மின்மையானும் கண்ணொளியைத் தடைசெய்து நிற்பதாகிய இருளை அபாவமென்பது கூடாமையறிக.

இவ்விருளின துண்மைவெள்ளிடையில் அலரவிழித்து நோக்கியவழியும் மறைத்தற்றொழில் நிகழ்தல் பற்றியறியப்படும். நீலவடிவிற்றாய்த் தோன்றுதலின் இருள் காக்ஷிப்பொருளென் றுற்படுமிழுக்கென்னையெனின் அற்றன்று துன்னியவிருளின் கண்விழித்துழிப்போல கண்ணிமையிறுக மூடியவழியும் ஒருதன்மைத்தாய்த் தோன்றுதலின் வேற்றுமையின்மையால் அதுமயக்க உணர்வேயாமென்பது போதருதலின் விழித்துழி அவ்வாறு தோன்றுவதும் அதுபோல மயக்க உணர்வாவதன்றி இருளின்றோற்றமன்றென்பது அனுபவத்தாற்கண்டுகொள்க.

அன்றியும் மனம் ஆன்மா முதலியவற்றைப்போலவே அஃதும் காக்ஷிப்பொருளாகாமையறிக.

அன்றியும் இவ்வாணவமலம் மாயாகாரியமெனின் மாயாகாரியம் பின்வந்து கூடியதாலும், மாயை இருளில் விழித்திருக்குங்



கண்ணுக்கு ஓர் ஒளிபோலுள்ளதாதலினாலும் அவ்வாணவம் மாயாகாரியமின்மையறிக. இதுகாறுங் கூறியவாற்றால் இவ்வாணவம் ஓர் திரவியமென்று கூறியதோடு அதற்கு ஒப்புக்கூடலும் இருளும் ஓர் உள்பொருளெனக் கண்டாம். மேலும் பலவித இச்சைகளை ஆன்ம அறிவிற்கொண்டுறுத்தும் இவ்வாணவத்திற்கு விகற்ப முதலிய எண்குணங்களுள்ளன: அவையாவன.

1. விகற்பம்—தன்னையொழிய மற்றொருவரும் ஒவ்வாதவரென்றல்.
2. கற்பம்—பிடித்ததையே பிடித்திருத்தல்
3. குரோதம்—கோபங்கொண்டு நினைத்தல்
4. மோகம்—யாதாயொன்றிற்கு ஆசைப்படல்
5. கொலை—உயிர்களைக் கொல்லுதல்
6. அஞர்—சந்ததமுந் துக்கப்படல்
7. மதம்—அகங்கார மேலிடுதல்
8. நகை—சிரித்தல் என்பனவாம்.

இவ்வெண்வகைக் குணங்கொண்டு ஆணவம் ஆன்ம அறிவிலோர் கறையெனப்பொருந்தி நின்று பலவித செயல்களை நிகழ்த்தும் அவ்வாறு நிகழ்ந்துங்கால் பலவித இச்சைகளுண்டாம். அவ்விச்சைகளை யநுபவிக்குமாறு இறைவன் மாயாதேகத்திற் பொருந்துவன் இவ்வெண் குணங்களாலுறும் இச்சைகளே தீயகன்மங்களுக்கு மூலகாரணமாம் ஞானத்தால் வந்த அறிவு விளக்கம் நல்வினை இயற்றுதற்குக்காரணமாம், இவ்விருவினைகளும் பாவபுண்ணியங்களைப் பயனைத் தரும். அவைதாம் நரகசுவர்க்கங்களையும் இவ்வுலகத்தினையும் ஆன்மா பொருந்தி அநுபவிக்குமாறு நிற்கும் இங்ஙனம் காற்றாடியும் ஊசலும்போல ஆன்மா சுழன்று திரிவன்.

இங்ஙனம் கூறப்பட்ட ஆணவம் கன்மம் மாயை என்னும் மூன்றும் மும்மலமெனப்படும் இவற்றுள் ஆணவம் மூலமலமெனவும் மற்றவை ஆகந்துகமலங்களென்றுங் கூறப்படும்.

அம்மூலமலமே சகசமலமாம் அரிசியை ஆன்மாவெனக் கருதில் உமி ஆணவமாம் அவ்வரிசியின் முளைத்தற் சத்தி கன்மமாம் அவ்வரிசியை மூடியிருக்கும் தவிடு மாயையாம். செம்பை ஆன்மாவென வைக்கில் அதன்களிம்பு ஆணவமாம் நாற்றங் கன்மமாம் அதன் கண்ணுள்ள சிவப்பு மாயையாம்.

இம்மும்மலங்களும் சடமாகையால் அவைகளை இறைவன் சத்தியை தொழிற்படுத்தும் சத்தி ஒன்றேயாயினும் கருமபேதத் தால் பலவகைப்படும், அச்சத்திகளுக்குப் பலவித பேராற்றல்க ளுண்டு அச்சத்திகளும் ஐவகைப்படும் (1) பராசத்தி (2) ஆதி சத்தி (3) இச்சாசத்தி (4) ஞானசத்தி (5) கிரியாசத்தி என்பன வாம் அச்சத்திகளின் தன்மைகளாவன;

1. முத்திபெற்றிடா வுயிர்களுக்குப் பேறு அளிப்போம் என்று நிற்பது—பராசத்தி.
2. மலத்தைச் செலுத்துவது—ஆதிசத்தி
3. சிருஷ்டியாதி செய்யவுன்னல்—இச்சாசத்தி
4. அத்தனையு நோக்கிடுதல்—ஞானசத்தி
5. பிரவிர்த்தி நிகழ்த்தல்—கிரியாசத்தி

இச்சத்திகளுள் ஆதிசத்தியெனும் திரோதான சத்திதான் ஆன்மாவைத் தேகத்தோடு கட்டுதல் செய்யும், அப்படிக் கட்டப் பட்டதால் ஆன்ம அறிவானது ஆணவத்தால் மறைக்கப்பட்டு உயிராய் நிற்குந் திருவடியை யறியாது. சரியையிற் சரியைமுதல் ஞானத்தில் ஞானம்வரை கூறப்பட்டபதினாறு பதிகளினின்று செ ய்யும் புண்ணியங்கள் யாவும் இறப்பில் தவங்களாகிய சிவபுண்ணி யங்களாம். பூமியின்கண் செனித்தகாலை இச்சிவபுண்ணியம் ஆர்ச் சித்த விசேடத்தால் இருவினை யொப்பு வந்துறும்.

இருவினையைப்பற்றி ஒருசிறிது பேசுவாம். வினையெனினும் செயலெனினும் ஒக்கும் இவ்வினையும் நல்வினை தீவினை என இரு திறனுற்றுச் சஞ்சிதம் பிரார்த்தம் ஆகாமியம் என மூன்றுவகைப் படும் இவற்றுள் சஞ்சிதம் முன்பலபிறவிகளுள் ஈட்டிய இருவினைத் தொகுதிகள் இவைகள் குருவின் திருவருளாற்போம் அதாவது கன்மபக்குவமறிந்து கிரியையால் தீக்ஷித்துக் கன்மமறுப்பன் மிகுந் தபக்குவமுடையார்க்குச் சட்சுதீக்கைசெய்துகன்மமறுப்பன. இத் தீக்ஷா விகற்பங்களைத் தீக்ஷை என்னுந் தலைப்பின் கீழ்க்காண்க.

பிரார்த்தம் எடுத்த தேகத்தில் ஆன்மாபுசிக்குமாறு இறைவன் எடுத்துக் கூட்டியதும் பக்குவப்பட்டதுமான வினை இஃது அத் தேகத்தோடு தொலையும் மற்றைய ஆகாமியமோ பிரார்த்தம் புசிக் கும்போதே மனம் வாக்குக் காயங்களால் வந்தேறும் வினை, இஃது



செபம், தவம், அர்ச்சனை, நல்லோர், இணக்கம், கற்றல், கேட் டல், சிந்தித்தல், தெளிதல் நிஷ்டைகூடல் என்பனவற்றாற்போம்.

இனிமேற்கூறிய இருவினையொப்பு யாதெனில், "புத்தி இரு வினையின்கண் விசாரித்தறியாது. நடுநிலையாகி ஒத்து நிற்றலே யாம்" இது வந்தகாலையில் மேல் ஆகாமியம் ஏற்றதாகும் ஈண்டு இருவினையொப்பின் விரிவுரை எல்லாம் வேண்டப் படாமையின் சிறிது கூறிவிடுத்தாம்.

இருவினை யொப்புக்குப்பின்றான்மலபரிபாகமுண்டாம். அப் படி இருவினை யொப்பு வந்தகாலை ஆணவமலம் பக்குவமெய்துவ தெப்படி? மலபரிபாக மென்பதென்னை? ஆதிசத்தி என்னும் திரோதான சத்தி மூலமலந்தனில் போசமாதி குணம் சத்தி அனை த்தினையும் பிரித்து உயிர்ப்பால் அநேகவிதமாக அணைத்துப்பாகத் தையாக்கும். இனிமலபரிபாகமாவது, "மலம் தனதுசத்திதேயத ற்குரிய துணைக்காரணங்களெல்லாவற்றோடுங் கூடுதலேயாம்" அத் துணைக்காரணங்கள் யாவை எனில் சிவபூசைதவம் செபம் அட் டாங்கயோகம் தானம் தீர்த்தமாடல் முதலியனவாம். இவற்றால் ஆணவ சத்தியானது பிறிந்து பிறிந்து செல்ல அருள்ஞானக்கண் ணுகிய சத்தியின்றொழில்கள் விளங்கி நிற்கும்.

மேற்கோள்.

செய்திடுநற் சிவபூசை யாதிதொழிலானுஞ்
செப்பரியதவத்தாலுஞ் செபத்தினாலு
மெய்திடு சீரட்டாங்க யோகத்தாலும்
எழிற்றீர்த்தமாடி யதினாலு மணியாலும்
பெய்துறு தானத்தாலு மவுடதத்தி னாலும்
பிறிந்திடுமாணவ சத்திபிறிந்து பிறிந்தடைவே
மெய்தரு சீர்ஞானக் கட்டொழில்கள் சத்தி
விளங்கியிடு மிவைசருவமல விசற்பமென்றே.

அன்றியும் செம்பினிடத்தே அநாதியாய்ப் பொருந்தி நின்ற களிம்பானது இரசகுளிகைபரிசித்தவாறே நீங்கிச் செம்புஏகப்பொ ன்னாய் நிற்பதுபோலவும் நிறைந்த இருளின் கண்ணே, பூனைமுத லிய பிராணிகளின் கண்மணிகள் எங்ஙனம் பார்க்குஞ் சத்தியடை

ந்தனமோ, அங்ஙனமே அருள் மன்னிறைப்பால் ஆணவம் தான் ஞானதுகெடும். இவ்வாணவம் மற்றோர் தம்மைத் தொடக்கி நிற்கு மாதலினால் சோர்வில்லதாகும். இவ்வாணவந்தான் அநாதிநித்தியப் பொருளாதலினால் கெடாது நிற்கும். ஆனால் தன் சத்தி மாத்திரம் மாய்ந்து நிற்கும். எங்ஙனமெனில்,

"தெரியவரிய மெய்ஞ்ஞானஞ் சேர்ந்தவாறே
சிவம்பிரகாசிக்கு மிங்கே சீவன்முத்தனுக்கு
முரியமல மௌடதந்தாற்றப் புண்டவிடமு
மொன்னொளிபினொளி முன்னாரிருளுந் தேற்றினை
வருபால்சேர் நீர்மருவு கலங்கனும் போலாகு
மாயாதேதன் சத்திமாய்ந்து காயத்
திரியுமளவு முளதாயப் பின்புகாயஞ்
சேராதவகைதானுந்தேயு மன்றே."
—மிக்க

"விடங்கெழு பெருவலி யுளங்கொள் மந்திரத்
தடங்கிய தன்மையு மற்றே குடங்கரிற்
கலங்கனீரி னலங்கிளர் விமுக்கா
லினந்தமா றெனவிளங்கிறந்த கன்ற
பாசப்பெருவலி தீர்த்தனன்
மாசிலஞானப் பெருந்தகையே."

மேலும் முற்கூறியாங்கு அம்மலத்தின் காரியமே, மேலாலவத்தை, கீழாலவத்தை, என இருவகைப்படும். இருளாகிய அதீதத்திலே கிடந்த ஆன்மா, அறிவிக்குங் கருவியுங்கூடி மேலே போகந்துய்த்தற் பொருட்டுச் செல்வது மேலாலவத்தை. புசிப்பு நீங்கி மலமேயாக விளங்குமவதாரம் கீழாலவத்தை. இவ்வவத்தையில் ஆணவமலத்தின் செய்தி எல்லாந்தெரிவது கேவல தெரிசனமாம் இப்படிக்கொத்தது கேவலமென்றறிவது கேவலமாம். கேவலமிது வென்று அறிந்து நீங்குவதே கேவலாநிதமாம். இத்தனையுமறியிக்க அறிந்தது ஆன்மா இவன் கேவலதரிசனத்தில் இருளினைக் காணலுறுவன் அவ்விருளாகிய ஆணவமலம் இதுகாறும ஆன்மாவின் நிலையையும், கருவிகள் நிலையையும், தன்னையுங் காட்டாமனின்றது இப்பொழுது ஆணவத்தை ஆன்மா இருளாகநிற்கக் கண்டனன். இவ்வாறு இருளினைத்தன்னினும் வேறாகக்கண்டு பின் தன்னைக் கண்டது ஆன்மதரிசனம்.



மேற்கோள்.

அந்தமலயா மறியாமை கண்டாயே
யந்தவறிவு சிலையமேன—தொந்தவிருள்
போனதே யுன்னைவிடப் போக்கித்திபோனதயரு
வானதே கண்டாயறி
வைத்தவ்வதாங்களெல்லா முடன்வந்து
மத்தகமை கண்டுமறியாயான—முத்தனுப்
பாசவறிவும் பதியறிவு மன்றியே
யாசறவே நின்றவனியாம்
இருட்டுமொளிக்கு மிடமாகும் வான்போ
லருட்குமருட்கு மகமாயச்—சுருக்கமிலா
நிசத்தசத்தன்று நேரேசதசத்த
னுப்சத்ததுவ சதந்நாம். என்பதனுலறிக.

ஆன்மாதரிசனத்துக்கு மேலுள்ள நிலைகள் ஈண்டு வேண்டற்பாலன வல்லவாதலால் கூறிற்றிலம்.

அன்றியும் முத்தியைப்பெற்ற ஆன்மாக்களின் ஆணவமலம் அழிந்துபோமென்று சொல்லில் "முத்தியினு மும்முதலுமுண்டு" என்னும் வாக்கியத்துக்கு விரோதமாம். மேலும் பதி பசு பாசம் என்று சொல்லப்பட்ட முப்பொருள்களும் அநாதி நித்தியப் பொருள்களென்று வேதாகமங்கள் கூறினவாதலால் அவை மெய்மொழிகளாம். முத்தியினுமழியாதென்னில் ஆணவமலம் அறியாமையைப் பண்ணி நிற்குமாகையால அது ஆன்மாவோடுங்கூடி மறைத்து நிற்குமட்டும் அறிவாயுள்ள சிவத்தோடுங்கூடி அது பவித்தலென்றது சற்று மில்லையாம்.

ஆதலால் ஆன்மபோதத்தை யநாதியே மறைக்கப்பட்ட அந்த மலத்தின் காரியமாயுள்ள சத்தி அழியும். அதனைகாரணயாகிய ஆணவத்தின் நித்தியத்துக்கழிவில்லை. அஃதென் போலெனில் ஆதித்தப்பிரகாச முதலாகவுள்ள வொளிகளின் முன்னர் நில்லாத இருளானது அழிந்ததுமில்லை மறைந்து நிறைந்துமில்லை. அதாவது ஒளியாயின் மேலீடுகொண்டு இருளடங்கித் தோற்றமுமற்றுக் காரியப்படாமல் நின்றதுபோல அருளின் மேலீடுகொண்டு மலம் கீழ்ப்பட்டு நின்றதெனவறிக.

மேற்கோள்.

சேணாரிருள்வடிவுஞ் செங்கதிரோன் பானிற்பக்
காணுதொழியுங் கணக்கேபோ—லாணவத்தி
னாதி குறையாமலென்பா லணுகாம
னீதி நிறுத்துகிலை போற்றி.

என்று அருளியவாற்றாற்காண்க.

மேலும் மதவாதிகளுள் பேதவாதி சமவாதி இவ்வாணவ மலக் கேட்டைப் பற்றிக் கூறும் கொள்கைகளைச் சிறிது ஆராய்வாம். பேதவாதியானவன் செம்பிற் காளிதமானது குளிகையினாலேகெட்டுப் பொன்னான தன்மைபோல ஆணவமலமும் அருளினாற் கெட்டு ஆன்மா சிவமயமாமென்பன், அது அடாது. ஏனெனில் செம்பு தன்னைச் சுத்தமாக்கிய குளிகையுமாகாமல் தன் தன்மையுங்கெட்டு நடுவே பொன்னாந் தன்மைபோல இவ்வான்மாவும் தன்னைச் சுத்தமாக்கிய சிவசொரூபமுமாகாமல், தன் தன்மையுங் கெட்டு வேறொரு சொரூபமாக வேண்டுகையால் குற்றமாம். அன்றியும் சமவாதியோ முத்தியைப்பெற்றவிடத்துஞ் சரீரமழியாதென்பன். சரீரமுள்ளமட்டும் மும்மலமும் போகாதென்கையினாலே அஃது அடாதெனமறுக்க.

இவை இங்ஙனமாக அக்கினியைச் சார்ந்தவித்தானது அதன் கண்ணுள்ள முளைத்தற் சத்தியை இழந்து முளைத்தற்குரிய காரணங்கள் சேர்ந்துழியும் முளைதர மாட்டாமைபோல சஞ்சித கருமங்கள் தீக்ஷையால் விரைவிற்கெட்டொழியும் பிராரத்தம் உடலோடுபோம்.

மேற்கூறியாங்கு ஆன்மதரிசனமுதலிய மேனிலைகள். கடந்த சீவன்முத்தர்க்கு முன்புண்டான ஜனங்கள்தோறும் பிராரத்த கன்மம் புசிக்கச்சே ஆகாமியங்கட்டுப்படாதோ வென்னில், அங்ஙனம் உண்டாகாது. ஆயினும் வாதனைமலத்தாலும் அபுத்தி பூர்வத்தாலும் புண்ணிய பாவங்கள் மேலைக்குவித்தாகக் கட்டுப்படுமாகில் விளக்கின்முன் இருள்போனாற்போல இவனிடத்துள்ள ஞானாக்கினியினாலே யழிந்துபோம் பிராரத்த கன்மமோ புசிப்புமாத்திரமாய்வந்து போகிறதொழிய அவர்கள் ஈடுபடத்தக்கதாக மேலிட்டுவருத்தாது அவர்கள் இப்படி ஈடுபட்டு வருந்தாதுகொண்டே



மற்றயகாமியகன்மமும் ஏறாது அப்படி ஏறிற்றாயினும் பேதமாக்கி வித்துஜநநந்தை யுண்டாக்காது.

"இனிச்செய்கன்ம மூலமலஞானத்தாலிடிப்பன்" அங்கித்தம்பனைவல்லார்க்கு அனல்சுடாதாடு மௌடத மந்திரமுடையார்க் கருவிடங்களேறா.

வெங்குற்ற கன்மமெலாஞ் செய்தாலு ஞானிக் கிருவினைகள் சென்றணையாமுற் செய்வினையிங்குத் தங்கிப்போம்

பாத்திரமுங் குலாலன்வினை தவிர்ந்த சக்கரமுஞ் சந்தித்துச் சுழலுமாபோன்.

மங்கிப்போய் வாதனையா லுழலவிக்குமெல்லா மலங்களும் பின்காயமொடு மாயுமன்றே.

அன்றியும் பஞ்சாக்ஷரஞ் செபிக்கில் கன்மங்கள் வருத்தா
பந்தனமானவை யறுத்துப்பவுதிக முழலுமெல்லைச்
சந்தியாதொழியாதிங்குத் தன்மைபோல் விளையுஞ்சாரு
மந்தமாதிகளிலாத வஞ்செழுத் தருளினாலே
வந்தவாறுரை செய்வாரை வாதியாபேதியாவே
விண்ணுறவடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை யொன்றுமில்லையாம்
பண்ணியவுலகினிற் பயனற் பாவத்தை
நண்ணி நின்றறுப்பது நமச்சிவாயவே.

அவ்வாறு பாவங்களையறுத்த பெரியோர் எத்தன்மையுடையரெனில்.

தீங்குறுமாயை சேராவகை வினைதிரிவிதத்தா
னீங்கிடநீங்காமூல நிறையிருளிரிய நேயத்
தோங்குணர்வகத் தடங்கியுளத் தவரின்பொடுங்க நேரே.
தூங்குவர்தாங்கி யேகத்தொன்மையிற்றுகளிலோரே.

அன்றியும் ஆணவமலம் ஆன்மாக்கள் தனித்தனியாய் வியாபித்திருக்கிற ஞானக்கிரியைகளை மயக்கும். இஃது சகலருக்குக் கருவிகூடின சகலாவஸ்தையில் ராகமுதலிய கருவிகளாலாவேசித்து நின்று மோகமுதலிய காரியங்களைச் செய்விக்கும். ஆத்மா சிவத்தைப் பெறுமிடத்து ஆத்மசத்திகெடாது. அப்படிக்கின்றி ஆணவசத்திவிட்டு நீங்குகையால் இம்மலம் ஆன்மாவின் குண

மன்று குணமாயிருக்குமெனில் குணமழியில் குணிமழியுமாகலான் அங்ஙனம்கூறல் தகாது: இது நிற்க.

இருவினை யொப்பில்லாதவர்களிடத்திலும் மலபரிபாகமுண்டாகிய பொழுது சத்திநிபாத முண்டாம். இருவினையொப்பில்லார் யாவரெனில் விஞ்ஞானகலர், பிரளயாகலர் என்பவர்களே. விஞ்ஞானயோக சந்நியாசங்களால் மாயை சன்மங்களைவிட்டுச் சுபாவசித்தமான மலசத்தியினாலே மறைக்கப்பட்ட சிவத்துவத்தைக்காட்டும் விஞ்ஞானம் என்று மாத்திரமுடைய விஞ்ஞானகலருக்குக் கன்ம ஒப்பு சத்திநிபாதத்துக்குக் காரணமன்று மலபரிபாகமே காரணமாம் எனவறிக.

மாயாபோகத்தால் கன்மசாமியமுண்டாகவேண்டும். பிரளயாகலருக்கு இஃதின்மையால் இருவினை யொப்பு உண்டாகாமல் மலபரிபாகம் நிகழ்தலே சத்திநிபாதத்துக்குக் காரணமாம்.

பிரளயாகலரில் அருங்கலாதி போகமுண்டாகையால் சகலராவார்கள். இச்சகலருக்கும் மற்றுள்ள சகலருக்கும் கன்ம ஒப்பு சத்திநி பாதத்துக்குக் காரணமே எனில் பிரளயாகலரிற் சகலராவர்க்குக் கன்ம ஒப்பு சத்திநிபாதத்துக்குக் காரணமன்று. ஆனால்மலபரிபாகமே காரணம் மாகையால் ஆதியிலிருக்கும் சகலர்க்கே கன்ம ஒப்புடன்கூடிய மலபரிபாகங் காரணமெனவறிக.

சகலருக்கு மலபரிபாக மில்லாவிடத்து சத்திநிபாத முண்டாகாது. இருவினையொப்புஎன்பதற்குப் புண்ணியத்துக்குச் சமமாகப்பாவமும் துலை யொத்து நிற்றலெனக் கூறுதலுமுண்டு. அக்காலத்து அந்த வினையொப்பை புசிக்கவொட்டாமல் சிவசத்தி கெடுத்துவிடும் என்பர். இக்கருத்தில் இருவினைப் பொருட்படுத்துவது அத்தனைபொருத்தமுடையதாய்த் தோன்றவில்லையாதலினால் விடுக்க. விஞ்ஞானகலர்களை ஈசுவரன்தாமே பிரேரிக்கிறார். பிரளயாகலாரதியரை அநந்தாதிகளின் வழியாகப்பிரேரிக்கிறார். சகலாகலை முதல் பிருதுவிவரையுள்ள தத்துவங்களிலுள் பட்டிருக்கிறார்கள். மலம் கர்மம். இரண்டோடுங்கூடி பிரளயாகலரிற் சிலர் மாயையிலிருக்கிறார்கள். இறைவன் மலபக்குவத்துக்குத்தக்கபடி இவர்களுக்குமோக்ஷ மருளுகிறார்.



மலபரிபாகத்துக்குத் தக்கபடி சகலர்க்குப் பிரலயாகலபதங் கிடைத்தபின்பு விஞ்ஞான கலபதம் கிடைக்கும். பின்பு உருத்திரர், மந்திரர், மந்திரேஸ்வரர் இவர்களுடைய பதங்கள் முறையேகிடைக்கும் மலமிகப்பக்குவமாகில் உடனே சிவபதங் கிடைக்கும். இது நிற்க.

மலபரிபாகம் வந்தவர்க் கடையாளம் யாதெனில், சம்சாரத்தில் த்வேஷம், முத்தியில விசுவாசம், சிவபக்தி குருசிச்ருஷை முதலானவைகளாம். பரிபக்குவமான பேருக்குப் பரமேஸ்வரர், குருமூர்த்தியாகவந்து மலபரிபாகத்துக்குத் தக்கபடிபதம் கொடுத்து மோக்ஷம் கொடுக்கிறார்.

ஆன்மா வியாபகன அவனை மறைப்பதால் மலமும் அவனை வியாபித்திருக்கும் அதாவது ஆன்மாவின் வியாபகம் மலத்தின் வியாபகத்துள்ளடங்கலால் வியாப்பியமாம். வியாபக வியாப்பியங்களாகிய மலான்மாக்களுக்கு அநாதியே மறைப்பதும் மறைக்கப்படுவதுமாகிய சம்பந்தமிருப்பதால் ஒரு காலமும் பிரிவில்லையாமாதலால் ஸ்பாவத்தில் மோக்ஷமே இல்லையாமென்றும் சங்கையுண்டாம். அதற்கு உத்தரமாக அதிகாரமுடிவில் அழிகின்ற அநேகசத்திகளை ஆணவம் உடைத்தாயிருக்கும். (அதிகாரம்—மறைப்பு) கண்ணிற்குப்படலம்போல மலம் திரவியமாதலால் அதற்குப் பாகமுண்டு அப்பொழுது அதன் சத்திகள் மாய்வனவாம்.

ஒரு ஆன்மாவிற்குச் சிவசத்தியால் மலம் நீங்குமாகில் எல்லா ஆன்மாக்களுக்கும் நீங்கவேண்டிவருமே என்னில் அப்படிக்கன்று புருஷன் தோறும் ஞானத்தை மறைக்கும் அநேக சத்தியுண்டு நித்தமாயும் வியாபகமாயுமுள்ள மலத்திற்கு மறைக்குஞ் சத்திகள் அநேகமுள்ளனவென்று ஒப்புக்கொள்ளவேண்டும். அக்கினியின் தாஹசக்தியானது ஸ்தபனாதி யந்திரத்தால் தடுக்கப்படும் அதுபோல ஈசுவரனுடைய அநுக்கிரக சத்தியினாலே மலசத்தி தடுக்கப்படும்.

அன்றியும் அரிசியை மூடிக்கொண்டிருக்கும் உமியானது எப்படி பரிபாகதசையில் நீக்கப்படுகிறதோ, அப்படியே மலசத்தியும் பரிபாகதசையில் சிவசக்தியால் நீக்கப்படும் அபக்குவமான தசையில் உலக்கையினாலே குத்தினால் அரிசியுமழிவது

போல அபக்குவதசையில் மலத்தை நீக்கினால் ஆன்மாவிற்கு
விகாரமுண்டாகும். செம்பான் களிம்புக்குப் பரிபாகதசை ரசசம
யோகத்தாலுண்டாகும் ஆதலால்பரிபாக காலத்திற்றான் மலசத்
தியழியும்.

பாகியாதிவிர்த்தி நீங்கினபோது மலம் நீங்குகிறதென்பது
சித்தம் எப்படி உலகத்தில் ஒரு புருஷனிடத்தில் திருட்டைக்
கண்டு இவன் திருடனென்று விலங்கு முதலானவற்றாற் கட்டப்
படுகிறானோ அப்படியே ஆன்மாவும் மலமுள்ளவனென்று ராக
முதலானவற்றாற் கட்டுபடுகிறான்.

இம்மலத்தினாலேயே ஆன்மாவிற்குப் பாதந்திரமுந் தன்மை
யுண்டாயிற்று. இத்தன்மைக்குக் காரணமாய் நின்ற மலத்தைத்
திரோதான்சத்தியே அநுக்கிரக சத்தியாய் நின்று விடுதலைசெ
ய்யும் மலத்திற்கு அதிகாரம் இருக்கும்வரை ஒருவனுக்கு முத்தி
யுண்டாகிறதில்லை. மலம் நீங்குதலே முத்தியாகையால் மலத்
தின் அதிகாரம் மலசத்தி பரிணமித்தபின்றான் நீங்கும். அம்
மலம் பரிணம யோகியமான போதிலும் தனக்குத்தானே யுண்
டாக்கிக்கொள்ளாது அசித்தெல்லாம் சித்தினாலசைவிக்கப்படக்
காண்கையால் என்க.

மலபரிணாமம் சிவசத்தியால் அநுக்கிரக நிமித்தம் செய்யப்
படும்பரிணாமம் என்பது யாதெனில் வேறுபடல் என்னும் பொ
ருட்டாம். அது படங்குடிலானாற்போல விருத்தியாய்க் காரிய
ப்படுவதின்றிப் பேதிக்கப்படலாற் காரியப்படுவதாம் அஃதுமுழு
வதும் பரிணமித்தல் ஏகதேசத்தில் பரிணமித்தல் என இருதிற
னுறும் பால்தயிராய்மாறுதல் முழுவதும் பரிணமித்தலாம்.
நெய்யின்கண் புழுவுண்டாதல் ஏகதேசத்திற் பரிணமித்தலாம்.

இதுபற்றி ஒரு ஆன்மாவிற்கு அநுக்கிரக நிமித்தம் செய்
யும் மலபரிணாமம் அவ்வான்மாவிற்கு மாத்திரம் உரியதாதலால்
இப்பரிணாமம் ஏகதேசபரிணாமமாம். ஞானக்கிரியைகளைத் தடுக்
கும் மலசத்தி நீங்கின பசுவினிடத்தில் இறைவன் சத்தி அநுக்
கிரகரூபமாய் வரும். அப்பொழுது பாசத்தினிடத்தில் அதன்
சத்திகளைப் பரிணமிக்கச் செய்வதே அநுக்கிரகமாம் அதிகாரத்
துடன் மலசத்தி நீங்கும்போது திரோதான சத்தியும் நீங்கு



மாதலால் சேதனனுடைய அறியுந் தன்மையையும் அசித்தினு
டைய பரிணமிக்குந் தன்மையையும் அநுசரிப்பதே யநுக்கிரகம்.
மாயை கன்மங்கட்கும் இவ்வாறே கண்டுகொள்க.

அன்றியும ஞானமெல்லாம் விஷயமாகவேயிருக்கும் நிர்
விஷயஞானமேயில்லை. கண்ணானது இருட்டால் மறைபட்டிருக்
தாலும் தன்னுடைய பிரகாசமுங்கெடாமல் விஷயாபிமுகமும்
ஆகாமல் தன்னிடத்திலிருக்கிறதோ அவ்வாறே மலசத்தியால்
மறைக்கப்பட்டிருக்கிறசிற்சத்தியும் விஷயத்தையுபற்யாமல் அறி
வுங்கெடாமல் தன்னிடத்தில் தானேயிருக்கும் எல்லாக் கர்மங்க
ளின் நாசம் வந்தபோது கர்மசககாரியாயிருக்கிற ஆணவமலத்தி
ற்குப் பரிபாகம் வருமளவில் மேற்கூறிய மலாநிக்கிரக ரூபியாய்
ஸ்வப்பிரகாசமாய் விளங்குகின்ற சத்தியானது பதியும் மலத்தி
னுடைய சத்தியானது நிவிர்த்தியாகும்.

அரிசியோடுஞ் சகசமாய் நின்ற முளைதவிடு உமிகள் அவ்வரி
சியை விட்டுக்கெட்டொழிய அரிசி கேடின்றி நிலைபெறுதல் கண்
டாம். அம்முளை முதலியன அடங்கி நிற்குமேனும் வேறொரு நெ
ல்லுந்தோன்றுதற்குக் காரணமாதல் செல்லாவாம் அங்ஙனஞ்செல்
லாமையால் குற்றமற்ற அவ்வரிசியின்கண் அடங்கிநிற்குமென்றற்
கோர் இழுக்கின்மையின் மெல்லமெல்ல நீங்கி அவை ஆண்டில்லை
என்பதே தேற்றம். அவைபோல அநாதியே உயிர்களோடு சகசமாய்
நின்ற மும்மலங்களும் நல்லசிவமுத்தி நிலைக்கண் விண்டொழியுமெ
ன்றேகொள்க. ஆண்டு விண்டொழியினும் ஏனைப்பெத்தரிடத்துக்
காணப்படுதலால் அவை நித்தப்பொருளாதற்கு மிழுக்கில்லை.
இறைவன் ஆன்மாக்களுய்யும் பொருட்டு வேதசிவாகமங்களை அரு
ளினர். வேதசிவாகமங்களிற் கூறியவண்ணம் நடக்க எண்ணுவது
ஆன்ம இச்சையாம். அவ்வாறு நடக்கவெண்ணிய ஆன்மாவை நடப்
பிப்பது இறைவனிச்சையாம். ஆகவே இச்சையால் இறைபணி
இயற்ற எண்ணாத ஆன்மாவிற்கு அவன் எங்ஙனம் உதவக்கூட்ட
இறைவன். ஆன்மாவும் எங்ஙனம் இருவினையொப்பு உறும். அக்கா
லமெல்லாம் ஆணவசத்தி மிண்டி நில்லாதோ? எண்பத்து நான்கு
யோனிபேதங்களுள் மனிதயோனியுள் மன்னியன்றோ பெருப்பா
னும் முத்திபெறவேண்டுவது. மனிதயோனியொழிந்த மற்றயோ

னிகளின் மன்னிய உயிர்கள் அம்மனிதயோனி எய்த எத்தனை காலம்செல்லும். மனிதயோனியுட் பொருந்திய உயிரும் எத்தனையோ ஊழிகாலம் இறைவனை அர்ச்சித்தன்றோ நல்லறிவு சுடர்கொள்ளும். ஆதலால் ஆன்மா மலபரிபாகம் வரும்வரை மலசத்தியால் மொத்துண்டு அலைவதன்றி இறைவன் சத்தியால் அருள்பெறுவது எங்ஙனம். காலவெல்லை கூறுவார்யார்? காலவெல்லை கருதுவார்யார்? ஒருவருமின்று சிற்றறிவும் சிறுதொழிலும் உள்ளபசுக்களோ இறைவன் திருவிளையாட்டின் எல்லையை அறியவல்லார்; அந்தோ அவர் அறியாமை இருந்தவண்ணம் என்னென்பேம். இருவினையொப்பின்றி மலபாகம் வாராமையால் அவ்வொப்புறுதற்கு இயையாத ஆன்மாக்கள் அநாதியே சுழன்று கொண்டிருக்கின்ற பிரபஞ்சசக்கரத்தில் நின்றுகொண்டு சுழன்றுதிரியுமேல் முத்தி எய்துதல் எங்ஙனம். மலபரிபாகம் நிகழ்ந்து இறைவன் சத்தி பதியும்வரை மலத்தின் சத்தி அதிக ஆற்றலுடன் நின்று தொழிற்செய்வதால் ஆன்மஞானம் அதன் வழிமிக்கோங்கி நின்று செல்லுதல் கூடும். இருவகை சத்திகளும் ஒரு நிலைக்களமாகிய ஆன்ம வியாபகத்தில் தொழிற்பட்டகாலத்திலன்றோ வலியதாகிய இறைவன் சத்தி மெலியதாகிய ஆணவசத்தியைக் கீழ்ப்படுத்தி நிற்கும். வலியதாகிய இறைவன் சத்திபதிதற்கு மலபரிபாகம் வேண்டற்பாலதாம். அதற்குரிய துணைக்காரணங்களைக் கைக்கொள்ள நினையாக்குற்றம் ஆன்மாவின் பாலதன்றோ. அப்படிக்கின்றேல் இறைவன் இதுவரை யாவரையும் முத்தியில் வையாதிரான் அக்குற்றம் ஆன்மாவின் பாலதாயிருத்தலினால் எல்லா ஆன்மாக்களும் முத்தி எய்திவிடுமென்பது இல்லையேயில்லை. ஆதலால் அன்பர்களே.

இருவினையொப்பு வருதற்குரிய இறைப்பணியியற்றினீராகில் மலபரிபாகமெய்தி சத்திநிபாதமுற்று இறைவன் திருவடியில் என்றுமாறாமுத்தியின்பம் அநுபவித்தல் கூடும். சுபம்

பித்தனென்றெனை யுலகவர்பகர்வதோர் காரணமிது கேளீ
ரொத்துச்சென்று தன் திருவருட்கூடிடு முபாயமதறியாமே
செத்துப்போயருநரகிடை வீழ்வதற்கொருப்படுகின்றேனை
யத்தனாண்டு தன்னடியரிற் கூட்டியவதிசயங் கண்டாமே.

பிணக்கிலாதபெருந்துறைப் பெருமானுன்னாமங்கள் பேசுவார்க்
கிணக்கிலாத தோரின்பமே வருந்துன்பமே துடைத்தெம்பிரா
னுணக்கிலாத தோர்வித்து மேல்விளையாம லென்வினை யொத்தபின்
கணக்கிலாத் திருக்கோல நீவந்து காட்டினாய்க் கழுக்குன்றிலே.

ஊசலாட்டுமிவ்வுடலுயிராயின விருவினையறுத்தென்னை
யோசையாலுணர்வார்க் குணர்வரியவனு ணர்வுதந்தொளியாக்கிப்
பாசமானவைபற்றுத் துயர்ந்ததன் பரம்பெருங்கருணையா
லாசைதீர்த்தடியாரடிக் கூட்டியவதிசயங்கண்டாமே.

மன்னுமிருளை மதிதுரந்த வாறன்பின்
மன்னுமானே மலந்துரந்து—தன்னின்
வலித்திரும்பைக் காந்தம்வசஞ் செய்வான்செய்தல்
சலிப்பில் விகாரி யவன்றான்.

S. பால்வண்ண முதலியார்.

திருநெல்வேலி.

# வேதமும் சிவாகமமும்.

நற்குஞ்சரக்கன்று நண்ணிற்கலைஞானங்
கற்குஞ்சரக்கன்று காண்.

உலகின் கட்டோன்றி நிகழும் பல்வகைச் சமயநூல்களுள் உண்மைப்பொருளையுள்ளவாறுணர்த்தும் நூல்யாதென்று ஆராயுங்கால், கண்ணிலார் பலர் குழீஇக் கொண்டு வேழமின்றுழித் தங்கரத்தாற்றடவி வந்துகூறும் இலக்கணமெல்லாம் கண்ணுள்ளானொருவன் கண்டுகூறும் இலக்கணமதனுள் ஒருபுடையமைந்து காணப்பட்டவாங்குமாறுபோல ஏனைச்சமயநூலாருந் தங்கடங்கள் சிற்றறிவிற்கு எட்டியயவாறே அவ்வந்நூல்களிற் கூறிய பொருள்கள் யாவும் முற்றுணர்வுடைய முதல்வனாற் செய்யப்பெற்ற அருமை புடையனவாய (வேதம் ஆகமம்) என்னும் இருநூல்களினும் கூறும் பொருளியல்புகளின் ஏகதேசமாகக் காணப்பெற்று அவற்றுள் அடங்கலின் இவ்விருவகை நூலே முழுமுதன்மை நூலெனப்பெறுமெனக.

ஆகவே, சமுத்திரகலச நியாயம்பற்றிச் சிற்றறிவுள்ள ஆன்மாக்கள் முற்றுணர்வின்மையாற் றம்புலம்போயவாறு எடுத்துச் செய்த வழிநூல்-சார்புநூல்-பூருவபக்கநூல் என்னும் இவையிற்றிற்கு முதனூல்களாகிய (வேதம் ஆகமம்) என்னும் இவ்விருநூல்களின் உண்மையும் அபேதமும், அறியாது உலோகாயதர், வைபாடிகர் மாத்தியமிகர், யோகசாரர், சௌத்திராந்திகர், ஆருகதர் என்னும் அறுவகைப் புறப்புறச்சமயிகளும் இவ்விரண்டனையும் நிந்திப்பர், தார்க்கிகர், மீமாஞ்சகர் மாயாவாதியர், சாங்கியர், பாதஞ்சலர், பாஞ்சராத்திரர் என்னும் புறச்சமயிகள் அறுவரும் இவ்விருநூல்களில் ஆகமத்தைப் பிரமாணமாகக்கொள்ளாது நிந்தித்து (வேதம்) ஒன்றனையே பிரமாணமெனக்கொள்வர். அங்ஙனங்கொள்வாராயினும் தார்க்கிகர் வேதப்பொருளோடு முரணிப் பொருட்டன்மை கொண்டும் மீமாஞ்சகர் வேதத்துட் கருமகாண்டத்தையே கொண்டு, ஞானகாண்டமாகிய உபநிடதங்களை நிந்



தித்தும் ஏகான்மவாதிகளாகிய மாயாவாதியர் ஞானகாண்டத்தையே ஒருவாறங்கீகரித்துக் கருமகாண்டத்தைக் கைவிட்டும் சிவாகமத்தை நிந்தித்தும் ஞானகாண்டத்திற்கும் பூர்வாபரவிரோதமாக மாறுபட்ட பொருள் விரித்தும் நிற்பர். ஏனையசாங்கியர், பாதஞ்சலர், பாஞ்சராத்திரர் என்பாரும் அங்ஙனே வேதத்துள் தத்தமக்கியைந்தவாறே சிலபாகங்களை மாத்திரங்கொண்டு ஏனையவற்றையொரீஇச் சிவாகமங்களையும் இகழ்ந்து ஒழிவார். எனவே இப்பன்னிருவருள் புறப்புறச்சமயிகளான முன்னைய அறுவரும். வேதாகம நிந்தகரும், புறச்சமயிகளான பின்னைய அறுவரும், வேதத்துள் ஒருபுடையையும் சிவாகமம் முழுவதையும் நிந்திப்பவரும் ஆயினர்.

அகப்புறச் சமயிகள் ஆகிய பாசுபதர், மாவிரதர், காபாலர், வாமர், வைரவர், அயிக்கவாதசைவர் என்னும் அறுவரும், வேதத்துடன் சிவாகமத்தையும் பொதுப்பிரமாணமாகக்கொள்வார். ஆயினும், சிறப்புப் பிரமாணமாக மாயாருத்திரர், வித்தியாருத்திரர், காலருத்திரர், சித்தபுருடர், ஆதிபைரவர், மந்திரேசுரர் என்பவராற் செய்யப்பெற்ற பாசுபதம், மாவிரதம்; காபாலம் முதலிய நூல்களைக் கோடலான், அவரும் அகப்புறமாயினர். இறுதியினின்ற அகச்சமயிகள் ஆகிய சங்கிராந்தவாதசைவர் பாடாணவாதசைவர், அவிகாரவாத சைவர் பரிணாமவாத சைவர், சுத்தசைவர், பேதவாத சைவர் என்னும் அறுவரும் வேதாகமமென்னும் இரண்டனையும், சிறப்புப் பிரமாணமாக அங்கீகரித்தாராயினும், தன்னியல்பு பொதுவியல்பு சிறிது வேறுபாடு உள்ளாராகலின், அவரும், சித்தாந்த உண்மை முற்றுங்காணாராயினர். இவ்வாறே மீண்டுரைக்கப் பெற்ற சமயிகள்யாவரும் வேதம் ஆகமம் என்னும் இருநூலையும், அவற்றுள் ஒன்றனையும், ஒன்றுட் பல பகுதியையும் வெறுத்தும் அவற்றுண்மை முற்றுங்காணாது வாளாமயங்கி இடர்ப்பட்டு நிற்பர். இவரெல்லாம் இவ்வாறே இடர்ப்பட்டு நிற்பச் சுத்தாத்துவித சைவ சித்தாந்தி யொருவனே வேதசிவாகமமிரண்டனையும், சிறந்த பிரமாணமாகக்கொண்டுண்மை யுணர்ந்து இன்புற்று வாழ்வனென்க.

இவ்விருநூல்களினு மடங்காதபொருளாக ஒன்றனை யெடுத்

துக்கொண்டு, தஞ்சுதந்தரமாக வேறொருவரான் இயற்றப்பெற்ற
நூல் என்றும் இன்று. ஆகையால் வேதம் ஆகமம் என்பவற்
றுள் எல்லாப் பொருள்களும் அடங்கியுள்ளனவாகும். இவை
யிரண்டும் ஏகோதனி முதல்வனால் அருளப்பெற்றன அதனால்
இரண்டும் வேறாகாவென்று ஆன்றோர் கூறுவாராயினர். அவ்வி
றைமுதற்பொருளானவன் இவ்வேதாகமம் இயற்றுதற் கேதுவென்
னையெனின் ஆன்மாக்களெல்லாந் தன்னையறிந்து வழிபா
டியற்றி உய்திகூடுதற் பொருட்டாகக்கொண்ட பெருங்கருணைத்
திறமே யதுவென்றுணர்க. அங்ஙனமருளாவேல் அவ்விறைமுதற்
பெற்றியும் பிறவுந் தேறமாட்டாராய் ஆன்மாக்கள் உண்மை
யுணர்ந்து உய்திகூடுமாறு யாண்டையதென்க. இதனை "ஆரண
மாகமங்களருளினு லுருவுகொண்டு. காரணனருளா னென்னிற்
கதிப்பவரில்லை" என்னுஞ் சிவஞான சித்தியார் திருவிருத்தந்
தானுணர்க.

இனி அவ்விறைவன், வேதாகமங்களை எக்காலத்து எவ்வாறு
தோற்றுவித்தருளினன் என்னிற் கூறுதும். மகாசங்கார முடி
வின்கண் உலகங்களை மீளப்படைத்தற்பொருட்டுப் பரமான்மா
வாகிய் பரமசிவத்தினுடைய பராசத்தி குடிலையை நோக்கிய வழி
வேதாகமங்கள் குடிலையினின்றும் நாதவடிவாயும் அதன்பின் விந்து
வடிவாயும், அதன் பின்னக்கரவடிவாயும் முறையே தோன்றின.
பின் அவற்றைச் சொற்றொடர்ப்படுத்துச் செய்யுளாக்கிப் பிற
ருக்கருளிச் செய்தற்பொருட்டுப் பரமசிவன் ஈசானமுதலிய பஞ்
சப் பிரமமூர்த்திகளாகிய சத்திகளே திருமுடி முதலிய வவயங்க
ளாகச் சகள நிட்களத்திருமேனி கொண்டருளிச் சதாசிவமூர்த்தி
யாய் நின்று தற்புருடம் அகோரம் வாமம் சத்தியோ ஜாதம் என்
னும் நான்கு திருமுகங்களாலும் இருக்கு, எசுரு, சாமம், அதர்
வணம் என்னும் நான்குவேதங்களைத் தோற்றுவித்து அவ்வேதங்
களை அனந்ததேவர் வழியானே பிரமனுக்கருளிச்செய்து உச்சி
முகமாகிய ஈசானத் திருமுகத்தினின்றும் காமிகாதி வாதுளாந்த
மாகவுள்ள இருபத்தெட்டாகமங்களையுந் தோற்றுவித்து, அச்சி
வாகமங்களைப் பிரதி சங்கிதை முறையானே, பிரணவர் முதலிய
பதின்மரும், மகாருத்திரர் முதலிய பதினெண்மருமாகிய விருபத்



தெண்மருக்குஞ் சிவபேதம் உருத்திரபேத மெனப்பகுத்து ஒரோ
வொன்று, ஒவ்வொருவருக்கு அருளிச்செய்து பின்பு மகவுக
முறையானே அவ்விருபத்தெட்டினையும் சித்தியேச ரெண்மரின்
முதல்வராகிய அனந்த தேவருக்கருளிச் செய்தார் என்க இதுவே
வேதசிவாகம வரலாறும்.

பிரதிசங்கிதைமுறை ஒருவிஷயத்தை வேறு வேறு வகுத்
துக் கூறதல் மகவுகமுறை வேறு வேறு வகுக்கப்பெற்ற பலவற்
றைத் திரட்டிக் கூறுதல்.

இனி இவ்வாறாய் வேதம் "சுயம்பு" என்றும் "அபௌரு
ஷேய" மென்றும் நூல்கள் கூறுநிற்க ஈண்டு சிவபெருமானாற்
கூறப்பெற்றதென்பதென்னை யெனிற்கூறுதும், சுயம்புவான பரம
சிவனாற் றோற்றுவிக்கப்பெற்ற காரியமாதல் பற்றியும் பசுக்களா
கிய புருடராற் செய்யப்பெற்ற தன்றென்னுங் கருத்துப்பற்றியு
மேயாமென்க. ஆகலின் அவ்வழக்குக்கொண்டு இறைவர் திரு
வாக்கன்றென்றல் பொருந்ாதென்க. இதனை "தொகுத்தவனரு
மறையங்கமாகமம்" என்னும் ஸ்ரீஞானசம்பந்தப் பெருமான் திரு
வாய் மலர்ந்தருளிய திருவொற்றியூர்த் திருப்பதிகத்தானும் "வேத
மோடாகம மெய்யாமிறைவனூல்" என்னும் திருமூல நாயனார்
திருவாய்மலர்ந்தருளிய திருமந்திரத் திருமுறையானும் பிறவற்
றானுமுணர்க.

இனி அட்டாத சவித்தையுள் சிவாகமம் அடங்காமை யென்
னையோவெனில் அறியாது கூறினாய் என்னை பதினெண்வித்தை
களில் முதற்கண்ணதாகிய வேதம் பிரமகாண்டமும், பிரமஞானத்
திற்கு நிமித்தமான கருமகாண்டமும் என்றிருபகுதித் தாத
லால் சிவாகமம் பிரமகாண்டமா யடங்குமாதலானும் வேதசத்தத்
தில் சிவாகமமும் அடங்கி நிற்குமாதலானுமென்க.

இனி வைதிகரிலொரு சாரார் இவ்வாறு பகுத்துரைக்கும் மது
கையின்றிப் பதினெண்வித்தைகளிற் சிவாகமம் படிக்கப்பட்டிலவா
மென்றுகூறிப் பிணங்காநிற்பர்.

இனிவேதம் ஆகமம் என்னும் இருசொற்பொருட் பெற்றி
சிறிதாராய்வாம்.

வேதம் என்னுஞ்சொல் அறிதற்கருவியெனப் பொருள்பட்

டுச் சதுர்வேதங்களுக்கும் காரணவிடுகுறியாயும், சைவாகமங்களுக்குக் காரணக்குறியாயும் பொருந்தும், 'எனவே பதிபசுபாசமென்னும் முப்பொருள்களை அறிதற்கு கருவியென்பது கருத்து.

ஆகமம் என்னுஞ்சொல் (பரமசிவன் பானின்று) வந்தது என்னும்பொருட்டாய்ச் சைவாகமங்களுக்குக் காரண விடுகுறியாயும் சதுர்வேதங்களுக்குக் காரணக்குறியாயும் பொருந்தும்.

அன்றி ஆகமமென்றசொல்லில், ஆ. என்பது, பாசம், எனவும், க. என்பது, பசுவெனவும், ம. என்பது, பதியெனவும் பொருள்படலால் திரிபதார்த்த விலக்கணத்தை யுணர்த்து நூலென்றும் பொருந்தும், அன்றி, ஆ என்பது சிவஞானமும், க என்பது மோக்ஷமும், ம என்பது மலநாசமும் ஆதலால், ஆன்மாக்களுக்கு மலத்தை நாசம்பண்ணிச் சிவஞானத்தை உதிப்பித்து, மோக்ஷத்தைக் கொடுத்தல் பற்றி ஆகமம் எனப்பெயராயிற்று என்று கூறுதலுமொன்று. முழுமுதற்பொருளாகிய சிவபரஞ்சுடராவார் உலகுய்யுமாறு தமதுபெருங்கருணையா லுபகரித் தருளியவேத சிவாகமமென்னும் இவ்விருநூல்களையுமே முழுமுதன்மை நூலாகக்கொண்டு சுத்தாத்துவிதச் சித்தாந்தச் செல்வர்கள் மகிழ்வர். இங்ஙனம் உணருந்திறமின்றி வேதமே பிரமாணமென்னும் வைதிகரிலொரு சாராரை மறுத்துச் சிவாத்துவித சைவாசாரியர்களான நீலகண்ட ஆசிரியர் அப்பயதீக்ஷிதர் முதலியோர் நீலகண்ட பாடியம் சிவாதித்தமணிதீபிகை சிவதத்துவ விவேகம் முதலியவற்றில் சிவாகமப் பிரமாணம் வலியுறுத்துரைத்திட்டார்.' சிவாகமம் ஒன்றுமே பிரமாணமென்னுஞ் சைவரிலொரு சாராரை மறுத்து வைதிக சைவசித்தாந்த ஆசிரியர்களான ஸ்ரீ அரதத்தாசாரியர் ஸ்ரீ உமாபதி சிவாச்சாரிய சுவாமிகள் முதலியோர் வேத சிவாகமமென்னும் இரண்டுமே பிரமாணமெனச் சதுர்வேத தாற்பரிய சங்கிரகம், பௌட்கரவிருத்தி முதலிய நூட்களினன்கு வெள்ளிடைமலைபோற்றெள்ளிதின்விளக்கி யிட்டனர், இவையிற்றை யெல்லாம் ஆங்காங்குக் கண்டுணர்க.

இனி அவ்விறைவன் இவ்வாறு இருவேறு வகையாகப் பிரித்துமுதனூலியற்றியவாறென்னையோ வெனிற் கூறுதும்.

மந்தம், மந்ததரம், தீவிரம், என்னும் மூவகைப்பட்ட பக்குவமுடைய உலகினரைக் குறித்துவேதமும், அதிதீவிரபக்குவமுடைய சத்திநிபாதத்துத்தமரைக்குறித்துச் சிவாகமங்களையும் அதிகாரிபேதம் பற்றிக் கூறியதாமென்க. இனி மந்தம், மந்ததரம் தீவிரம் என்னும் முத்திறப்பட்ட பக்குவமுடையாராகிய உலகினருக்குபகரித்தற்பொருட்டெழுந்தனவாகிய வேதம், பொதுநூலென்றும், அதிதீவிரபக்குவமுடைய சத்திநிபாதச் செல்வராம் சிவஞானிகளுக்குப் பயனளித்தற்பொருட்டாக வெழுந்தனவாகிய சிவாகமங்கள், சிறப்புநூலென்றும் பெயர்பெற்று விளங்குமென்க. இதனை "வேதமோடாகமம் மெய்யாமிறைவனூல், ஓதும்பொதுவுஞ்சிறப்புமென்றுள்ளுக." என்னுந் திருமந்திர வேதத்தானும் "உலகியல் வேதநூலொழுக்கமென்பது, நிலவுமெய்ந்நெறி சிவநெறியதென்பதும்" என்னும் பெரியபுராணத்தானும் "மறைகளாகமம் பொதுச்சிறப்பென விறைவகுத்த" என்னும் திருவிளையாடற்புராணத்தானும். "ஆரணநூல்பொதுச் சைவமருஞ் சிறப்புநூலாம்" நீதியினுலகர்க்குஞ் சத்திநிபாதர்க்கும் நிகழ்த்தியது என்னும், நம்சித்தாந்த குலதெய்வமாகிய, ஸ்ரீசகலாகமபண்டித சுவாமிகளின் திருவாக்கானும் உணர்க,

இனிபொதுவியல்பு உணர்த்தும் நூல்கள் பொதுநூலெனவும், சிறப்பு இயல்பு உணர்த்தும் நூல்கள் சிறப்புநூலெனவும் கூறப்பெறும். சிறப்பியல்புசகசமாய்உள்ளதாகலின் உண்மையெனவும்படும்,

பொதுவியல்பு அளவை முகத்தானும் இலக்கணமுகத்தானும் கூறப்பட்டுக்கேட்டல் சிந்தித்தல் என்னும் இருதிறத்தான் உணரப்படும், சிறப்பியல்பு சாதனமுகத்தானும் பயன்முகத்தானும் கூறப்பட்டுக்கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை என்னும் நான்குதிறத்தால் உணரப்படும். பலபொருட்குப் பொதுவாகிய இலக்கணம்பொதுவியல்பு என்றும் ஒருபொருட்கே உரிய இலக்கணஞ் சிறப்பியல்பென்றும் அளவை நூலாற்கூறப்படும் பொதுவியல்பு சிறப்பியல்பு வேறு. தடத்தலக்கணம் சொரூபலக்கணம் என்னும் வடசொற்குப் பரியாயப் பெயராய் ஈண்டுக்கூறப்படும். பொதுவியல்பு சிறப்பியல்பு வேறெனத் தேர்ந்து உணர்ந்துகொள்க இவ்விருவேறுவகைக்குஞ் சொல்லொருமை மாத்திரையே பற்றிமயங்கற்க.

அல்லதூஉம், அதர்வசிகைமுதலிய உபநிடதங்களும் சிவாகமங்களுங் கூறும்பொருளை நோக்கும் வழிச்சூத்திரமும் பாடியமும்போலத் தூலாருந்ததி முறையாம், ஆதலின் வேதம் பொதுநூலென்றும் சிவாகமம் சிறப்புநூலென்றும் கூறுதலொன்று.

இனி எவ்வாற்றானும் பொதுநூலெனப்பட்ட வேதத்திற் கூறுங் கருமகாண்டப்பொருட்கு இன்றியமையாது வேண்டப்பட்டெஞ்சி நின்றனவாகிய பொருள்களையும் வேதமுடியாகிய உபநிடதத்தின் சாரமாய் உள்ளபொருள்களையும் வேறு எடுத்துக்கொண்டு இனிது விளக்குதலின் சிறப்புநூலாகிய சிவாகமம், சித்தாந்தமென்று கொள்ளப்படும். படவே வேதம் பூருவபக்கமெனப்படுமென்க. இதனை "நீண்மறையினொழிபொருள் வேதாந்தத் தீதில்பொருள்கொண்டுரைக்குநூல் சைவம் பிறநூல் திகழ்பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்தமாகும்" என்னும் ஸ்ரீ அருணந்தி சிவத்தின்முதுவாக்கானுமுணர்க.

இனிப்பொதுச் சிறப்புநூல்கட்கு அதிகாரியாவார் யாவரெனிற்கூறுதும். பிராமணர் சத்திரியர் வைசியர் என்னும் மூவரில் முதல்வருணத்தார் வேதத்தை ஓதுதற்கும் ஓதுவித்தற்கும் இரண்டாம் வருணத்தாரவர் ஓதுதற்கும் மூன்றும் வருணத்தாரவர் கேட்டற்கும் அதிகாரியாவார்.

சிவாகமம், அங்ஙனமின்றி அம்மூவருணத்தவரோடு சூத்திரரென்னும் நான்குவருணத்தவருள்ளும் சைவசம்ஸ்காரம்பெற்ற அதிதீவிரபக்குவமுடையவர்களே அதிகாரியாவாரென்க.

ஆகவே வேதசிவாகமம் மூன்று வருணத்தாருக்கும் நான்கு வருணத்தாருக்கும் உரிமையாதல் பெற்றாம்.

இனி வேதாகமம் என்னுமிரண்டனுள் வேதம் பக்குவாபக்குவர்நோக்கிப் பலதெய்வங்களைக் கூறுவது. சிவாகமம் சிவபரஞ்சுடரொருவரையே எடுத்துக்கூறுவது.

வேதம் தருமார்த்தகாம மோக்ஷங்களைக்கூறுவது, சிவாகமம் மோக்ஷமொன்றினையே கூறுவது.

வேதம் யாகாதிகாரியங்களை எடுத்து விளக்குவது. ஆகமம் சரியையாதிசதுர் பாதங்களை எடுத்துக்கூறுவது. அவையாவன சரியாபாதம். கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம், என்பன



வாம் இவற்றுள், சரியாபாதத்துள் பிராயச்சித்த விதியும் பவித்திர விதியும் சிவலிங்கவிலக்கணமும் நந்திமுதலிய கணநாதரிலக்கணமும் செபமாலையோகபட்டந் தண்டங் கமண்டலமுதலியன எடுத்துக் கூறப்படும்.

கிரியாபாதத்துள் மந்திரங்களானது உத்தாரணம், சந்தியாவந்தனம் பூசைசெபம் ஓமம் சமயவிசேட நிருவாண அசாரியாபிடேகங்களும் புத்திமுத்திகளுக்குபாயமான தீக்கைகளும் கூறப்படும். யோகபாதத்துள் முப்பத்தாறு தத்துவங்களும் தத்துவேசுரரும் ஆன்மாவும் பரமசிவசத்தியும் சகத்திற்குக் காரணமான மாயைமாமாயைகளைக் காணும் வல்லமையும், அணிமாதி சித்திகளுண்டாமுறைமையும் இயம நியம ஆதன பிராணாயாம பிரத்தியாகார தாரணத்தியான சமாதிகளினுடைய முறைமையும் மூலாதாரமாகிய ஆதாரங்களின் முறைமையும் கூறப்படும்.

ஞானபாதத்துட் பரமசிவனுடைய சொரூபமும். விஞ்ஞானகலர், பிரளயாகலர் சகலர் என்னும் ஆன்மாக்களின் சொரூபமும், ஆணவம் கன்மம், மாயேயம் வைந்தவம் திரோதானசத்தி என்னும் பாசங்களின் சொரூபமும், சிவதத்துவமுதற் பிரகிருதி தத்துவம்வரை முப்பத்தாறு தத்துவங்களினது உற்பத்திமுறை இவையான்மாக்களுக்குப் போகம்புசிக்கைக்குக் கருவியாமுறை புவனங்கள் புவனேசுவரர் சொரூபங்களும் அதமமத்திம மகாப்பிரளயங்களின் சொரூபங்களும் அதமப்பிரளயங்களின் பின்னர்ச் சிருட்டியாதி முறைமையும் பிறவுங்கூறப்படும், வேதம் சுவர்க்காதிலோகங்களைக் கொடுதற்குரியது. ஆகமம் சாலோக சாரூப சாமீப சாயுச்சியமாதிகளைத் தரவல்லது.

இனி இதுகாறுங் கூறிப்போந்த இவ்வுபந்நியாசத்தாற் பெறப்பட்டன வெவையோவெனிற் கூறுதும்.

அநாதி மலமுத்த பரமபதியாகிய சிவபரஞ்சுடரே ஆன்மாக்கண்மீது வைத்த பெருங்கருணையால் வேதாகமங்களை அருளிச்செய்தாரென்பதூஉம், அங்ஙனமருளாமே யான்மாக்களுய்திகூறுமாறிஃதென்பதூஉம், ஆதலின் இவையே முழுமுதன்மை நூல் என்பதூஉம், மற்றவையெல்லாம் இவையிற்றினின்று மெடுத்து எனையவான்ம வர்த்தகத்தால் ஆக்கப்பட்டதென்பதூஉம் இவைக

ளுள் அடங்காதபொருளாக யாண்டுமென்னூல்களினு மின்றென்பதூஉம், ஓரே பரம்பொருளா லாக்கப்பெற்ற இவ்விருநூல்களும் பிரமாணமே யாமென்பதூஉம், அதிகாரிபேதம்பற்றி இவை இருவேறுவகையாக வியற்றப்பெற்ற தென்பதூஉம், அவ்வாறே முத்திறப்பட்ட உலகினருக்குறித்தாய் வேதம் பொது நூலென்பதூஉம், அதிதீவிரதரா பக்குவமுடையாருக்கே உரித்தாகியவாகமம் சிறப்புநூலென்பதூம், வேதம் மூன்றுவருணத்தார்க் குரித்தென்பதூஉம், ஆகமம் நான்குவருணத்தாருக்கு முரித்தென்பதூஉம், வேதம், கருமகாண்டம், ஞானகாண்ட மென்பவற்றுள் முந்தியதை விரிவாயெடுத்துக் கூறவந்ததென்பதூஉம் ஆகமம் பிந்தியதை மாத்திரமே விரிவாயெடுத்துரைத்த தென்பதூஉம், இவற்றுளும் பிறவாற்றுளும், வேதம் பூருவமென்பதூஉம், ஆகமம் சித்தாந்தமென்பதூம், வேதாநுட்டான முடையார்க்குபயன் சுவர்க்காதி போகமென்பதூஉம், ஆகமாநுட்டான முடையாருக்குப் பரமன்பரமுத்தியென்பதூஉம் பிறவுமாம். இவ்வுண்மையை நீலகண்ட பாடியம் சிவாதித்த மணிதீபிகை, சிவதத்துவவிவேகம் சதுர்வேத தாற்பரியசங்கிரகம், பவுட்கரவிருத்தி முதலியவடமொழிநூல்களினும், தேவாரம் திருமந்திரம் பெரியபுராணம் திருவிளையாடற்புராணம் சிவஞானசித்தியார், திராவிடமாபாடியம் முதலிய செந்தமிழ்த் தெய்வத்திருவநூல்களினும் சிவஞான சித்தியாருக்கு மறைஞான சம்பந்தர் முதலாகவுள்ள ஆசிரியர் உரைத்த உரைகளினும் நன்குகாண்க.

அவற்றுள் ஈண்டு எடுத்துக்கொள்ளப்பெற்றப் பிரமாணச் செய்யுட்களை எடுத்துக்கூறி இவ்வுபந்நியாசத்தை முடிப்பாம்.

“வகுத்தவனருமறை யங்கமாம், ஸ்ரீஞான சம்பந்தப் பெருமான் திருவாய்மலர்ந்தருளிய திருவொற்றியூர்த் தேவாரம்.

வேதமோடாகம மெய்யா மிறைவனூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுன்னுக
நாதனுரை யிவை நாடிலிரண்டந்தம்
பேதமதென்பர் பெரியோர்க் கபேதமே.



ஸ்ரீ திருமூலநாயனார் திருமந்திரம்

உலகியல்வேதநூ லொழுக்கமென்பதும்
நிலவுமெய்ந்நெறி சிவநெறிய தென்பதும்

ஸ்ரீ சேக்கிழார்பெருமான் பெரியபுராணம் திருஞானசம்பந்தமூர்த்தி புராணம்.

“மறைகளாகமம் பொதுச்சிறப்பென விறைவகுத்த

பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடற் புராணம்.

வேதநூல் சைவநூலென் றிரண்டேநூல்கள் வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்தநூல்கள், ஆதிநூலநாதிய மலன்றருநூலிரண்டு மாரணநூல் பொதுசைவமருஞ் சிறப்புநூலா நீதியினா லுலகர்க்குஞ் சத்திநிபாதர்க்கு நிகழ்த்தியது நீண்மறையினொழிந்த பொருள் வேதாந்தத் தீதில்பொருள்கொண் டுரைக்குநூல் சைவந்திகழ்பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்தமாகும், சிவஞானசித்தியார்.

தெ. பெரியசாமி பிள்ளை.

# சப்ததாதுக்களின் விபரம்.

ஆணில் ௩. பெண்ணில் ௪. ஆணில் மூன்றாவன ஆகாசம் பிரகிருதி ஆன்மவுணர்ச்சி இவைகளொருமித்துச் சுக்கிலமாகக் கோசத்தடியில் செம்பரத்த பூவிதழ் மூன்றுமொன்றாயடிப்பது போலிருக்கும். பெண்ணிடத்தில் நான்காவன பிருதிவி, அப்பு, தேயு, இயமாவென்னும் வாயு ஆகநான்கும் ஒருமித்துப் பல்லி முட்டைபோல் நான்காகப்பிரிந்து ஒரேவண்ணமாய் யோனிக்குளிருக்கும். ஆக-௭-வும்கூடி ஒருமித்துச் சுக்கிலசுரோணித சம்பந்தப்பட்டுப் பிண்டமாம். இது சப்ததாது, ஷை தாதுக்களின்பெயர். தோல், அஸ்தி, தசை, மூளை, சுக்கிலம், இரக்தம், இரசம் ஆக எழு.

ஷை சத்துக்கள் ஆணிடத்துள்ள இடங்கள் மூளை, தொப்புள் லிங்கத்தடி, பெண்ணுக்குள்ள இடங்கள் மூளை, தொப்புள், உபஸ்தத்தடி, ஸ்தன்னியத்தின்கீழ் புணர்ச்சிகாலத்தில் இந்த சத்துச்சேர்ந்துவெளிப்பட்டால் கற்பமுண்டாம்.

பிண்டலட்சணம்:—தலை அண்டம், மார்புமுதலானவை பிண்டம். அண்டத்திற் பிண்டம் புருவமத்தி. அண்டத்திலண்டம் பிரமரந்திரம் இதில் சோமசூரியாக்கினி பிரமவிஷ்ணுக்கள் இருக்குமிடம். நேத்திரம், புருவமத்தி, அண்ணு, பிரமரந்திரம். இதில் பிரகாசமாயும் அறிவாயும் பிராணவாயு இருக்கின்றது. பிண்டத்திற் பிண்டம். இடுப்புக்குக் கீழ்பாதபரியந்தம் பிண்டத்திலக்கணம். பீசம், பிண்டம், வயிறு, ஷை பிண்டஸ்தானத்தில் கர்த்தர்களிருக்குமிடம் கோசம், தொப்புள், மார், இவர்கள் வண்ணம் நாடி, உஷ்ணம், காற்றுகுறிமுதலிய பேதங்களாம். ஆதலால் பிரம,விஷ்ணு,ருத்திரதேவர்கள் அனந்தகோடியண்டத்தைப் பார்க்கிலும் பிண்டவிசாலமுள்ளது. இதுபோலவே பிரமாண்ட ஞாயம்.

இந்தத்தேகத்தில் ஜீவனிருக்கிற ஸ்தானம் ௫, அதில் முக்கியஸ்தானம் ௨. கணம், சிரம் சிரத்திலுள்ளது பரமாத்மா



வென்னுஞ் சாமான்யஜீவன். இஃதிறப்பதன்று, கண்டத்திலுள்ளது ஜீவாத்மாவென்னும் விசேஷ ஜீவன், இஃதிறக்கும். ஷை தேகத்தில் பிரம்மபேதம் கீழும்மேலும் இருப்பதால் நாமடையவேண்டிய பதஸ்பானங்கள் யாதெனின் கண்டமுதல் உச்சிவரையில் அடங்கியிருக்கின்றன. ஷை பதங்களாவன சுவர்க்க பூர்வமாக சதாசிவபதமீறாகவுள்ளன. இதற்குமேல் நாதாதி சுத்தமீறாகவுள்ளது கைலாசாதிப்தங்கள். உந்திக்குமேல் கண்டமீறாகவுள்ளது யிது சாதாரணபாகம், நரக இடமாவன, உந்திமுதல் குதபரியந்தம்கர்மஸ்தானம் குதமுதல் பாதமீறாகவுள்ளது, இவைகளில் பிரம்மாதிப் பிரகாசமுள்ளது. அநுபவிப்பது, கண்ணிடத்தி லிந்ததேகத்தில் எமனிருக்குமிடம் குதமாகிய நரகஸ்தானத்திற்கு இடதுபாகம் ஷை தேகத்தில் ஆன்மா தனித்திருக்கும். ஜீவன் மனம்முதலிய அந்தக்கரண கூட்டத்தின் மத்தியிலிருக்கும்.

பிண்டத்தில் பூர்வம் என்பது தலை உத்தரம் என்பது கால் (பூருவம்) என்பது பூர்வசம்பந்தத்தால் வந்தபெயர். பூர்வஞானமென்பது நெற்றிக்கண்ணால் பார்த்தல். பிண்டத்திற்குக் கிழக்கு முகம் மேற்குகால் வடக்கு வலதுகை தெற்கு இடதுகை தொப்புளடி கொடிமரம். ஷை மரத்தின் அளவு உள்ளுக்குக் கொடிபுருவம் சதிக்குள்ளிருக்கும்வரை தொப்புள் பலிபீடம், நந்தியென்பது பசு, ஆணவமலம் மூலாதாரத்தினது உள்ளங்கமே சிவலிங்கம். வாய் வாசல், புருவமத்திசமை, அறிவேபதி. ஆடுகால் அநாதி தலை, கீழ்தலை மேல்கால் ஆதலால் பூர்வம் பூர்வ பூர்வம் உத்தரம் உத்தரோத்திரம் எனநான்கு.

இதில் பூர்வமென்பது புறபுறமாகிய நட்சத்திரம்போன்ற இந்திரியக்காட்சி, பூர்வபூர்வம் புறமாகிய சசிபோன்ற கரணக்காட்சி உத்தரம் அகப்புறமாகிய பரிதிபோன்ற ஜீவகாட்சி. உத்தரோத்தரம் அகமாகிய அக்கினிபோன்ற ஆன்மகாட்சி, ஆதலால் அகம், அகப்புறம், புறம், புறப்புறம், என்னும் நான்குமே. மேற்குறித்த பூர்வாதி உத்தரோத்திர மெனவழங்குவது, ஆணுக்குள் பெண்ணும் பெண்ணுக்குள் ஆணுமிருக்கும் விதம் எவ்வாறெனின் பிருதவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், பிரகிருதி ஆன்மா

என்னும் இவ்வேழும் கூடி சுக்கில சுரோணித சம்பந்த சப்ததாதுவாய் சிருட்டிக்குக் காரணமாச்சுது. ஆதலால் ஆண்பாகஞ்சேராது பெண்ணுருவமாகாது பெண்பாகஞ்சேராது ஆணுருவமாகாது. மேலும்மேலும் ரூபபேதத்தைப் பெண்ணென்பது அறியாமை.

மேலும் அறிவின் உயர்வு தாழ்வினாலும் சிருட்டிக்குக் காரணமான வித்துத் தங்குவதற்கு க்ஷேத்திரமானதாலும் ஒருவாறு உருவத்தால் கொள்ளலாம். அநுபவத்தால் கொள்ளலாகாது. அறிவின் உயர்வு தாழ்வு என்பது ஜீவ அறிவாகிய மன அறிவு பெண்ணினும் ஆன்மவறிவாகிய அறிவு ஆணிடத்தும் உள்ளது. மேலும் மனவறிவு புத்தியறிவு யென்னுஞ் சொல்லக்கூடும் ஆதலால் உருவங்குறிப்பது அவசியமல்ல. மேலும் ஆகாசத்தில் பிருதுவி தோன்றுவதுபோல் ஸ்திரிபாகமாக்கிய பிருதுவியில் ஆகாசமும் தோன்றும். ஆனதால் அநுபவத்தில் தெரியும்

(வடலூரார் குறிப்பு)

காஞ்சி. நாகலிங்க முதலியார்.

---

# சிவஞானபோத முதனூல் விளக்கம்.

## V. அத்தியாயம்.

### மூன்றாவது வினாவுக்கு விடை.

---

(முன் தொடர்பு தொகுதி 2, பகுதி 11, 12, பக்கம் 296:)

இச்சூத்திரர் செய்தவர்கருத்து அப்படி யிருந்திருக்குமானால் ஏவம் வித்யா சிவஞானபோதே என்னுமட்டும் சொல்லிமுடித்திருப்பார். சைவார்த்த நிர்ணயம் என்று சேர்த்துச் சொல்லுவதற்கு நியாயம் இல்லை. இதை உற்று நோக்குவார்க்கு இக்கருத்து வெளிப்படும். மேலும், என்னும், இந்நூலில், அறிக என்னும் வார்த்தைகளுக்குச் சூத்திரத்தில் யாதொரு இடமும் இல்லை என்பதையும் கவனிக்கவேண்டியது.

மேலும், இந்தமாதிரி அர்த்தம் செய்தவர், அக்காலத்தில் கிரந்த எழுத்தாவது, நாகர எழுத்தாவது இல்லை என்பது தெரிந்திருந்தால் இந்நூலில், என்று அர்த்தம் செய்திருக்கமாட்டார். ஆகையால் சிவஞானபோதம் என்னும் இந்நூலில் சைவாகமங்களின்பொருள் நிச்சயத்தை அறிக என்று செய்தவுரை வெற்றுரையாயினமை அறிக.

இவையிற்றினைக் கவனிக்குமிடத்துச் சப்தமாதிபத்தியால் கூறும் அர்த்தம் அபிமானம் பற்றிக் கூறியதேயொழிய வேறன்று. Vide also Siddhanta Sikamani edited by S. Nagi Chettiar உபோத்காதம் page 5 (1910).

"இருபத்தெட்டு ஆகமங்களில் ஒன்றாகிய இரௌரவம் 73-படலங்களையுடையது. இவற்றுட் பாபவிமோசனப் படலமென்பதொன்று. இதிலுள்ள சூத்திரங்களில் பன்னிரண்டு சிவஞானபோதத்தைப் போதிப்பதாம். திருவெண்ணை நல்லூர் மெய்கண்டதேவர் சிறுவயதிலேயே அவ்வூர் பொல்லாப்பிள்ளையார் என்னும் விநாயகமூர்த்தியின் உபதேசத்தால் அதன்பொருளை யறிந்து தமிழில் சிவஞானபோதம் எனப்பெயரிட்டுத் தம் சிஷ்யர்களுக்கு உபதேசித்தனர் என்பர் ஒருசாரார்.

வடமொழிச் சிவஞானபோதத்தின் பன்னிரண்டு சூத்திரங்களின்பொருள் சிவஞானபோதமாமென்று பன்னிரண்டாம் சூத்திரத்திலேயே கூறப்பட்டிருத்தலான் சிவஞான போதமென்னும் கிரந்தமானது ரௌரவாகத்தில் இல்லை யென்பது பெறப்படும். எனவும்.

வடமொழிப் பன்னிரண்டு சூத்திரங்களையும் தமிழ்மொழிப் பன்னிரண்டு சூத்திரங்களையும் செவ்வனே ஒத்திட்டுப்பார்க்குமிடத்து மொழிபெயர்ப்பு முரணாகக்காணப்படுதலான் மெய்கண்டதேவர் சிவஞானபோதத்தை வடமொழியினின்று அவ்வாறு முரண்பட மொழிபெயர்த்தனர் என்பது இழுக்காகும் எனவும்,

அதனால் அந்தச் சிவஞானபோதமானது வடமொழியினைத் தழுவாததோர் சாஸ்திரமாமெனத் துணியற்பாலதெனவும்,

மெய்கண்டதேவர் அருளிய சிவஞான போதத்தினாலும் அருணந்தி தேவர் அருளிய சிவஞானசித்தியாரிலும் வடமொழியினின்றும் மொழி பெயர்த்ததாகக் காணக்படவில்லை எனவும், கூறுவார் மற்றொருசாரார்.

தென்மொழிச் சிவஞான போதத்தையே மொழிபெயர்த்து வடமொழியாகமத்துட் சேர்க்கப்பட்டுள்ளதெனவும் செப்புவர் இன்னொருசாரார். எவ்வாறாயினுமாகுக. உண்மையினைக் கண்டறிதல் அறிஞர் வழக்காம்.

ஈண்டு உதாரணமாக இரண்டு சூத்திரங்களைமட்டும் எடுத்துக்காட்டுவோம். அவை வருமாறு:—

அவ்வினை தானேயாகிய அந்நெறி
யேகனாகி யிறைவணி நிற்க
மலமாயை தன்னொடும் வல்வினையின்றே.
செம்மலர் நோன்றாள் சேரவொட்டா
அம்மலங்கழீஇ அன்பரொடுமரீஇ
மாலறநேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனத் தொழுமே.''

ஆகையால் இதுகாறும் கூறியவாற்றால் தமிழ்ச்சிவஞான போதம் வடமொழிச் சிவஞானபோதத்தின் மொழிபெயர்ப்பு அன்று என்பதை வெள்ளிடைமலைபோல் விளக்குறும்.

## VI. அத்தியாயம்.

### நான்காவது வினாவுக்கு விடை.

ஆதிமொழி (எல்லாமொழிகட்கும் முந்தினது) தமிழ்மொழியென்றும், சிவபெருமான் நந்தியம்பெருமானுக்கு உபதேசித்தும், நந்தியம்பெருமான் சனற்குமாரருக்கு உபதேசித்தும், சனற்குமாரர் சத்தியஞான தரிசிகட்கு உபதேசித்தும் சத்தியஞான தரிசிகள் பரஞ்சோதிமுனிவருக்கு உபதேசித்தும், தமிழ்ச்சிவஞானபோதமே எனமுன்னமே கழறினோம். ஆகையால் பரஞ்சோதிமுனிவர் தாம் கேட்டதைத் தவிர்த்து வேறே மொழிபெயர்த்த நூலைச் சொல்லக்காரணம் சிறிதும் இல்லை.

மேலும், பரம்பரைச் சைவராகிய ஓர் ஆதி சைவத் தமிழர் வீட்டில் பிறந்த மெய்கண்டாராம் தமிழ்க்குழந்தைக்கு (ஆரிய பாஷைக்குரிய குழந்தையல்ல) பரஞ்சோதிமுனிவர் அக்குழந்தைக்கு இயற்கையாக ஏற்பட்டிருக்கும்பாஷையை விட்டுவிட்டுச்சமஸ்கிருதத்தில் சொல்ல நியாயம் சிறிதும் இல்லையன்றோ? மேலும்,

"தொண்டர்நாதனைத் தூதிடைவிடுத்ததும் முதலை
யுண்டபாலனை யழைத்ததும் எலும்புபெண்ணுருவாக்
கண்டதும் மறைக்கதவினைத்திறந்ததும் கன்னித்
தண்டமிழ்ச் சொலோமறு புலச்சொற்களோ சாற்றீர்"

என்னும் திருப்பாட்டுப் பிரகாரம் தெய்வீகம் பொருந்திய இனிமையான தமிழிருக்க, அத்தன்மையான தெய்வீகம் இல்லாத புலச்சொற்களாகிய மற்றப்பாஷையில் கூறினரென்றல், கரும்பிருக்க இரும்புகடித்தெய்த்தவாறே யொக்கும்.

ஆனால், பரஞ்சோதிமுனிவர் தம்முடைய தபோபலத்தால் மெய்கண்டாருக்குச் சமஸ்கிருத பாஷையை அறியும்படியான சக்தியை உண்டுபண்ணினா எனக்கூறுவார் சிலர் அது சற்றும்பொருந்தாது. ஏனென்றால் பரஞ்சோதிமுனிவர் உபதேசிக்கும் காலத்து மெய்கண்டாருக்கு வயது இரண்டென்றும் சிலர் ஒன்று என்றும் கூறுகின்றார்கள். எப்படியிருந்தாலும் அவர் மூன்றுவயதிற்கு மேற்பட்டவர் அல்லரெனக் கூறலாம். அக்காலத்தில் அவருடைய நா முதலிய கருவிகள் சமஸ்கிருத சப்தங்களைப் பிழைபடச் சப்தங்குறையாமல் உச்சரிக்கப் போதுமான உரம் பெற்றில. குழ

ந்தைகள் "இராம" என்பதற்கு "ஆம்" என்பதை நாம் பார்க்கவில்லையா? ஆகையால் குழந்தைகளுக்கு ஏற்றபாஷை தமிழைத் தவிர வேறு இல்லை. ஆகையால், அத்தமிழ் பாஷையில் தான் கூறியிருக்கவேண்டும்.

இதரபாஷை பேசும் ஜனங்களைச் சிறிதும் கண்டறியாத ஓர் ஆங்கிலேயச் சிறுவனிடம் இந்நாட்டு ஆங்கிலங் கற்ற தமிழன் ஒருவன் சென்று அச்சிறுவனிடம் பேச ஆரம்பித்தால் எப்பாஷையில் பேசுவான் என்பதைக் கவனிக்கவேண்டுகின்றேன். ஆங்கில நாட்டில் வளர்ந்த மூன்றுவயதுள்ள ஆங்கிலேயக் குழந்தைக்குத் தமிழ் சாஸ்திரங்களைத் தமிழில் ஓதிவைத்தார் என்றால் எவ்வளவு உண்மையாயிருக்குமோ அவ்வளவு உண்மைதான் தமிழ்நாட்டில் வளர்ந்த மூன்றுவயதுள்ள மெய்கண்டார் என்னும் தமிழ்க்குழந்தைக்குச்சமஸ்கிருத சாஸ்திரம்போதித்தார்என்பது.

ஆனால், பரஞ்சோதிமுனிவருக்குத் தமிழே தெரியவராது என்றுகூற வருவாரோ என்றால் அவருக்கு இறுக்கும் தண்டம் ஒன்று உளது. அதாவது அவர்சிவஞானம் கைவந்தமுனிவராதலால் அவருக்கு எல்லா பாஷைகளும் வரும் என்பதே. குமரகுருபரசுவாமிகள் இந்துஸ்தானி பாஷையைக் கல்லாது தெரிந்துகொள்ளவில்லையா?

Rev. P. Percival in his 'The land of Veda" says, "Perhaps no language combines greater force with equal brevity; and it may be asserted that *no human speech is more close and philosophic* in its expression *as an exponent of the mind.* The language, thus specifie gives to the mind a *readiness* and *clearness* of conception whilst its terseness and philosophic idiom afford equal means of lucid utterence.

"தத்துவஞானங்களை மனதுக்குத் தெரியும்வண்ணம் மிகத் தெளிவாக எடுத்துப் போதிப்பதற்கு தமிழ்ப்பாஷையே சாலவும் பொருத்தமானது. உலகத்துள்ள மற்றபாஷைகள் அவ்வளவு தகுதியானதல்ல." என்று பெர்சிவல்துரை கூறுகின்றார். அதற்கு, திருக்குறளும், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய நூல்களே சான்றுபகரும்.



"கடுகைத்துளைத் தெழுகடலைப் புகட்டிக் குறுகத்தரித்த குறள்" என்றும் "அணுவைத் துளைத்தெழுகடலைப் புகட்டிக் குறுகத் தரித்தகுறள்" என்றும் போற்றக்கூடியநூல் எப்பாஷையில் உள்ளது? ஆகையால் சுருங்கச்சொல்லி விளங்க வைக்கக்கூடிய சக்தி இத்தமிழ்ப்பாஷைக்கே சிறப்புடைத்து.

ஆகையால், எல்லா தத்துவஞானங்களையும் 12 சூத்திரங்களில் அடக்கிப் பரஞ்சோதிமுனிவர் கூறினாரென்றால் அது தமிழில் தான் சாத்தியப்படும். ஆகையால் தமிழில் தான்கூறியிருக்கவேண்டும் என்று எண்ண யாதொருதடையும் இல்லை.

முற்றும்.

துடிசைகிழார் அ. சிதம்பரனார்.

---

## மந்திரம்

(முன்தொடர்பு. தொகுதி. 2. பகுதி 12, பக்கம் 172:)

முதலாவது: ஆறும், கிருத்தியத்தைப் புரியவல்ல ஈலானமாகிய நகாரத்தில்:

1. உச்சாடனத்தை யுதவவல்ல, அகோரபஞ்சாக்கரம்
2. சந்தானத்தை யருளவல்ல, சௌம்யபஞ்சாக்கரம்
3. வியாதி நீக்கம்புரியவல்ல, ரூபபஞ்சாக்கரம்
4. யோகசித்தியை யருளவல்ல, அம்லபஞ்சாக்கரம்
5. ஆயுள்விருத்தியை யாக்கலான, ஆன்மபஞ்சாக்கரம்
6. பூதங்களையோட்டவல்ல, ஆக்ஞாபஞ்சாக்கரம்
7. இராஜவசியம் தரவல்ல, மதனபஞ்சாக்கரம்
8. உலகசம்பத்துக்களை யுதவவல்ல, மாயாபஞ்சாக்கரம்
9. வித்யாபி விருத்தியாக்கவல்ல பாலாபஞ்சாக்கரம்
10. நினைத்ததை யாக்கவல்ல, அஸ்திரபஞ்சாக்கரம்
11. அட்டமாசித்தியை யருளவல்ல, சக்திபஞ்சாக்கரம்
12. சுவாநிவிருதியைச் செய்யவல்ல, சித்திபஞ்சாக்ஷரம்
13. விஷங்களைப் போக்கவல்ல, ருத்ரபஞ்சாக்ஷரம்

14. நிலங்களை யருள்வல்ல, ஜபதிபஞ்சாக்ஷரம்
15. கலைமகள் நோக்கை யுதவவல்ல, சரஸ்வதிபஞ்சாக்ஷரம்
16. கள்ளர்ச்சத்தை யகற்றவல்ல, ஸ்கந்தபஞ்சாக்ஷரம்
17. மோக்கத்தை யருளவல்ல, மூலபஞ்சாக்கரம்
18. இராஜியசித்தியை யுதவவல்ல, மகாவித்யாபஞ்சாக்கரம்
19. காலனை வெல்லவல்ல, மிருத்யுஞ்சயபஞ்சாக்ஷரம்
20. சௌபாகியங்களைத் தரவல்ல, லக்ஷ்மிபஞ்சாக்கரம்
21. வாணிபசித்தியைக் கொடுக்கவல்ல, க்ஷிப்ரபஞ்சாக்கரம்
22. பசியின்மையைப் பயக்கவல்ல, அனந்தபஞ்சாக்ஷரம்
23. ஸ்ரீவசியமாக்கவல்ல அனங்கபஞ்சாக்கரம்
24. சூலநோயைத் தவிர்க்கவல்ல, காம்பவபஞ்சாக்கரம்
25. பரகாயப் பிரவேசத்தைப் பயக்கவல்ல, சருவபஞ்சாக்கரமும்.

ஆ 25

இரண்டாவது: காக்குங் கிருத்தியமுடைய, தற்புருடமாகிய மகாரத்தில்.

1. வித்வேஷணத்தை யீயவல்ல, வித்வேஷண பஞ்சாக்கரம்.
2. கட்கசித்தியைக் கருணிக்கவல்ல, சர்ப்பபஞ்சாக்ஷரம்
3. அனந்தசித்தியை யருளவல்ல, சத்திபஞ்சாக்கரம்
4. அதிருசியத்தைக் காட்டவல்ல, பிரமபஞ்சாக்கரம்
5. ஜலம்சுரக்கச் செய்யவல்ல, வருணபஞ்சாக்கரம்
6. கடல்சுவரச்செய்யவல்ல, சமுத்ரஸோஷண பஞ்சாக்கரம்
7. மதயானைகளை வசமாக்கவல்ல, கஜவசியபஞ்சாக்கரம்
8. யானைகளைத் தம்பிக்கவல்ல, கஜதம்பன பஞ்சாக்கரம்
9. கடலைக் கட்டவல்ல, பிரமரிபஞ்சாக்கரம்
10. சிலந்தியிஞனிமுனையாதிகளை நீக்கவல்ல, சம்பிரமபஞ்சாக்ஷரம்.
11. தேவமாதர்களைக் கூடச்செய்யவல்ல, யோகினிபஞ்சாக்ஷரம்.
12. முக்குணங்களை யொழிக்கவல்ல குணபஞ்சாக்கரம்
13. பாதாளத்தைக் காணச்செய்யவல்ல, சரபபஞ்சாக்கரம்
14. பாடகனைச் செய்யவல்ல, ஸாரபஞ்சாக்ஷரம்
15. உம்பருலகை யடையச்செய்யவல்ல, வித்யாதரபஞ்சாக்ஷரம்
16. நினைத்தபடி யாக்கவல்ல, சிருட்டிபஞ்சாக்ஷரம்
17. பூமிகளைப் பிளக்கவல்ல, சம்மாரபஞ்சாக்ஷரம்



18. தெங்குலைவளையவும்நிமிரவும் புரியவல்லஸ்திதரபஞ்சாக்கரம்
19. பசியைப் போக்கவல்ல, வைஸ்வாரை பஞ்சாக்கரம்
20. மழையைப் பெய்விக்கவல்ல, பர்ஜனி பஞ்சாக்கரம்
21. மழையில், நனையாமல் வரச்செய்யவல்ல, புஷ்டிபஞ்சாக்கரம்.
22. ஆறுனது இருபுறமும் விலகச்செய்யவல்ல சரணிபஞ்சாக்கரம்
23. கடலில் உருவோடாமலிருக்கச்செய்யவல்ல,யானபஞ்சாக்கரம்
24. ஜலமேல் நடக்கச்செய்யவல்ல, சாமுத்ரிய பஞ்சாக்கரம்.
25. யக்ஷணிகளைப் புரியச்செய்யவல்ல, யக்ஷணிபஞ்சாக்ஷரம்

ஆக 25

3-வது: அழிக்குங்கிருத்தியமுடைய, அகோரமாகியசிகாரத்தில்;

1. தம்பிக்கச் செய்யவல்ல, தம்பனபஞ்சாக்கரம்
2. அமுருதத்தைத் தரிசிக்கச்செய்யவல்ல, வஜ்ரபஞ்சாக்ஷரம்
3. தேவதைகளைக் காட்டவல்ல, ஸ்தோகபஞ்சாக்கரம்
4. விமானங்களை வரவழைக்கவல்ல, விமானபஞ்சாக்கரம்
5. கற்பகத்தை வரவழைக்கவல்ல, மானஸபஞ்சாக்ஷரம்
6. காமதேனுவை வரவழைக்கவல்ல, தேனுபஞ்சாக்கரம்
7. இந்திரன்சபையைக்காணச்செய்யவல்ல, இந்திரபஞ்சாக்கரம்.
8. இச்சாசத்தியினைக் காட்டவல்ல, இச்சாபஞ்சாக்கரம்
9. விஷ்ணுமாய்கையினைக் கடக்கச்செய்யவல்ல, லகுபஞ்சாக்ஷரம்
10. ஆதித்தர்களைக் காண்பிக்கவல்ல, லௌரபஞ்சாக்கரம்
11. சிவனாரது போக்குவரவைக் காண்பிக்கவல்ல, வைந்தவபஞ்சாக்ஷரம்.
12. பூமிக்குளுள்ளனவற்றைக் காண்பிக்கவல்ல, கலியாணபஞ்சாக்கரம்.
13. சலத்திலுள்ள பாதைகளைக் காட்டவல்ல, சரஸ்பஞ்சாக்கரம்
14. சந்திரசூரிய நட்சத்திர மண்டலங்களைக் காட்டவல்ல ஆலோபஞ்சாக்கரம்.
15. ஆன்மாவைத் தரிசிப்பிக்கவல்ல, பிரமக்ஞான பஞ்சாக்ஷரம்
16. ஆகாயகமனம் புரிவிக்கவல்ல, கேஸரிபஞ்சாக்கரம்
17. பதினைந்துவித வித்தைகளை யூட்டவல்ல, பஞ்சதசாக்ய பஞ்சாக்ஷரம்.

18. நினைத்தவிடத்தில் ஏகச்செய்யவல்ல, மனோவேகபஞ்சாக்கரம்
19. சித்துகள் சித்திக்கும்படி செய்யவல்ல, கூபபஞ்சாக்ஷரம்
20. மந்திரசொரூபங்களைக் காண்பிக்கவல்ல, நிர்வாணபஞ்சாக்ஷரம்
21. சகலவித விஷங்களையும் போக்கவல்ல, நிர்விஷபஞ்சாக்ஷரம்
22. இளையோர்களை முதியோர்களாகவும், முதியோர்களை இளையோர்களாகவும் செய்யவல்ல, சுந்தரபஞ்சாக்கரம்.
23. வித்வான்களை ஊமைகளாகவும், ஊமைகளை வித்துவான்களாகவும் ஆக்கவல்ல, மர்ஜனி பஞ்சாக்கரம்.
24. பட்டமரத்தைத் துளிர்க்கச்செய்யவல்ல, சஞ்சீவிபஞ்சாக்ஷரம்
25. இந்திரனை யழைப்பிக்கவல்ல, அகண்டபஞ்சாக்கரம்

ஆக 25

நான்காவது, விளக்கும் கிருத்தியமுடைய வாமமாகிய வகாரத்தில்

1. வீக்கத்தை யுண்டாக்கவல்ல, பேதபஞ்சாக்ஷரம்
2. செத்தவர்களை எழுப்பவல்ல, பூர்ணதாயினி பஞ்சாக்ஷரம்
3. எங்குமுள்ள போக்குவரவுகளைக் காண்பிக்கவல்ல, சுவர்க்க பஞ்சாக்ஷரம்.
4. எல்லாவற்றையும், ஆகருஷணிக்கவல்ல, பிரஜாபத்திய பஞ்சாக்ஷரம்.
5. முறிந்த வுறுப்புக்களைக் கூட்டவல்ல மகாபலபஞ்சாக்கரம்
6. குருட்டை நீக்கவல்ல, நவநீத பஞ்சாக்ஷரம்.
7. மலைகளையடியோடப் பெயர்க்கவல்ல, கிரிபஞ்சாக்கரம்
8. விஷ்ணுவைத் தரிசிப்பிக்கவல்ல, வைஷ்ணவ பஞ்சாக்கரம்
9. இந்திரன் குதிரையை வரவழைக்கவல்ல, உச்சை ஸ்ரவ பஞ்சாக்ஷரம்.
10. ஆகாயகங்கையை அழைப்பிக்கவல்ல மந்தாகினி பஞ்சாக்ஷரம்
11. அக்கினியின் நாவையறுக்கவல்ல, அக்னிபஞ்சாக்கரம்
12. பாவபுண்ணியங்களைக் காண்பிக்கவல்ல, ஆகருஷண பஞ்சாக்கரம்.
13. அன்னத்தை வரவழைக்கவல்ல, ஆஞ்ஞாபஞ்சாக்கரம்
14. மேகத்தில்மறைந்துகொள்ளச்செய்யவல்ல, மேகபஞ்சாக்கரம்
15. வாயுவின் கதிகளைக்காட்டவல்ல, வாயுபஞ்சாக்கரம்



16. சித்தர்களது போக்குவரவுகளைக்காட்டவல்லவாயுபஞ்சாக்ஷரம்
17. பூசிப்போர் அடையும் பலன்களைக் காட்டவல்ல பூஜாபஞ்சாக்ஷரம்.
18. புட்பபரிமளங்களின் ஒடுக்கங்களைக் காட்டவல்ல, பரிமண்டல பஞ்சாக்கரம்.
19. தழைப்பதைக் காட்டவல்ல, சேவியபஞ்சாக்ஷரம்
20. திசைகளின் தோற்றங்களைக் காட்டவல்ல, திசாபஞ்சாக்கரம்
21. திக்கந்தங்களைக் காட்டவல்ல, திகந்தபஞ்சாக்ஷரம்
22. தன்விழியினிடத்தே, நிலம் நீராதியனவற்றைக் காண்பிக்கவல்ல, விலோபன பஞ்சாக்கரம்.
23. மகான்களினிருப்பைக் காட்டவல்ல, ஜிம்மபஞ்சாக்ஷரம்
24. எல்லாவற்றின் கூட்டுறவுகளைக் காட்டவல்ல, சம்போக பஞ்சாக்கரம்.
25. சகல பரிபாஷைகளையும், அறியச் செய்யவல்ல, சருவபரிபாஷா பஞ்சாக்ஷரம்

ஆக 25

ஐந்தாவது, தோற்றுவிக்கும் கிருத்தியமுடைய, சத்யோசாதமாய யகாரத்தில்,

1. மூலாதாரத்தைத் தரிசிப்பிக்கவல்ல, மூலாதார பஞ்சாக்ஷரம்
2. சுவாதிட்டானத்தைக்காட்டவல்ல, சுவாதிட்டானபஞ்சாக்கரம்
3. மணிபூரகத்தைக் காட்டவல்ல, மணிபூரக பஞ்சாக்கரம்
4. அநாகதத்தைக் காண்பிக்கவல்ல, அநாகத பஞ்சாக்கரம்
5. ஆக்கினையைக் காட்டவல்ல, ஆக்கினைபஞ்சாக்ஷரம்
6. விசுத்தியைத் தரிசிப்பிக்கவல்ல, விசுத்திபஞ்சாக்ஷரம்
7. அண்டவகுக்குகளைக் காட்டவல்ல, அண்டபஞ்சாக்கரம்
8. முனிகணங்களைத் தரிசிப்பிக்கவல்ல, முனிபஞ்சாக்கரம்
9. சிட்டித்தொழிலைப் பயக்கவல்ல, பிரம்மபஞ்சாக்கரம்
10. குருபாதத்தைக் காட்டவல்ல, குருபஞ்சாக்கரம்
11. காட்டினைக் கொளுத்தவல்ல, வஹ்னி பஞ்சாக்கரம்
12. முக்காலங்களையும் உணர்த்தவல்ல, காலஞ்ஞான பஞ்சாக்கரம்
13. மாய்கையினை யறுக்கவல்ல, மாயாநிவாரணபஞ்சாக்கரம

14. வரைகளைத் தகர்க்கவல்ல, பருவத பஞ்சாக்கரம்
15. சந்திரசூரியர் கூடுவலதக்காட்டவல்ல, அரிச்சந்திர பஞ்சாக்ஷரம்
16. இயமனை வெல்லவல்ல, யமபஞ்சாக்கரம்
17. மனோன்மணியின் காப்பைப்பெறவல்ல, மனோன்மணி பஞ்சாக்ஷரம்
18. 64-கலைஞானங்களை யுணர்த்தவல்ல, சதுஷ்சட்டிகலா பஞ்சாக்ஷரம்.
19. அரயர்களை ஏவல் செய்விக்கவல்ல, இராஜதேசிய பஞ்சாக்ஷரம்
20. அரயர்கள் வணங்கச்செய்யவல்ல, இராஜவசிய பஞ்சாக்கரம்.
21. உன்மனியைக் காட்டவல்ல, உன்மன பஞ்சாக்ஷரம்
22. பிந்துவைக்காட்டவல்ல, பிந்துபஞ்சாக்ஷரம்
23. நாதத்தைத் தரிசிப்பிக்கவல்ல, நாதபஞ்சாக்ஷரம்
24. திரிகோணத்தைத் தரிசிப்பிக்கவல்ல, திரிகோணபஞ்சாக்ஷரம்
25. சதுர்பீடத்தைத் தரிசிப்பிக்கவல்ல, சதுஷ்பீடபஞ்சாக்ஷரம்

ஆக 25

ஆக எழுத்தைந்து கின்றும் 125 பஞ்சாக்ஷரங்களுற்பத்தியாயின.

இன்னும் வரும்

வடபதி திருப்பருப்பத பாம்பரை.
தி. மா. அப்பாவுப் பிள்ளை, தமிழ்ப்பண்டிதர், கருவூர்.

## சமாச்சாரங்கள்.

ஜார்ஜ்சக்ரவர்த்தி சரித்திரம்:—இங்கிலாண்டின் அரசரும், இந்தியாவின் சக்ரவர்த்தியுமாகிய ஐந்தாவது ஜார்ஜசக்ரவர்த்தியின் சரித்திரத்தை யாவருக்கும் எளிதில் விளங்கக்கூடிய விதமாக வசன நடையில், சுதேச சம்ரட்சணி பத்திராசிரியரும், சுதேசமித்திரன் ஏஜண்டுமான பட்டுக்கோட்டை ஸ்ரீமத். சிவ-மா - நாராயணசாமி செட்டியார் அவர்களால் இயற்றப்பட்டது. இச்சக்ரவர்த்தியார் இந்தியாவை நல்ல நிலைமைக்குக்கொண்டு வரவேண்டுமென்ற பெருங்கருணைவள்ளலாகையால் யாவருக்கும் இராஜபக்தியும், அன்பும், விசுவாசமும் உண்டாக இது இயற்றியது அதியாவசியமேயாம். இதில் இராஜநீதிகளும், ஜனாபிமானமும், தர்மங்களும் ஆகிய பல அரிய விஷயங்களு படங்கியிருக்கின்றன. இதன் விலை அணா 6.

* *
*

சிவஞானசித்தியார் சுபட்சமும் பரபட்சமும் (ஆங்கிலேய மொழிபெயர்ப்பு) மெய்கண்டசாத்திரம் பதினான்கனுள் ஒன்றாய சித்தியார் சுத்தாத்துவித சித்தாந்தவைதிக சைவர் யாவராலும் கொண்டாடப்பெற்ற வொரு அரியபெரிய நூலென்பது உண்மை. இந்நூலினை நமது ஸ்ரீமத்-ஜெ-யம்-நல்லசாமி பிள்ளை B. A., B. L. அவர்கள் ஆங்கிலேயத்தில் மொழிபெயர்த்து அச்சிட்டுள்ளார். அவர் அந்நூலுக் கெழுதியுள்ள முகவுரையில் சித்தாந்தத்தின் இருதயத்தை யாவருக்கும் நன்கு புலப்பட பற்பல உபநிடதபிரமாணங்களுடன் எழுதியிருக்கின்றனர். இவர் இந்நூலுக்குமுந்திச் சிவஞானபோதம், திருவருட்பயன், இருபாவிருபஃது முதலியவற்றையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கின்றனர். சித்தாந்த சம்பந்தமான அருமையான நுட்ப விஷயங்களை விளக்கும் "The Light of Truth" (சித்தாந்ததீபிகை) என்னும் பத்திரிகையை 16-வருடகாலமாக வெளியிட்டுவருகின்றனர். இதுகாறும் வெளிவந்த இப்பத்திரிகையில் பிரசுரமாகிவந்த அரிய சித்தாந்த விஷயங்களைத் திரட்டி "The Studies in Saiva Siddhanta"

என வொருநூல் வெளியிட்டிருக்கின்றனர். இவர் நூல்களை மேற்றிசையார் கவனமாகப் படித்துச் சித்தாந்த வுணர்ச்சிபெற்று அச்சமய வுண்மையைப் பத்திரிகைகளில் தெரிவிக்கின்றனர். ஐரோப்பிய பாதிரிகள் பலர்கண்டு வியப்புறுகின்றனர். அமெரிக்காமுதலிய தேசங்களில் ஏகான்மவாத சார்பிலிருந்தார் பலர் மாறிவிட்டனர். மேற்றிசைக்கு இவர் செய்துவரும் ஞானதானம் அம்ம! அம்ம! மிகச் சிலாகிக்கத்தக்கது. நம் சமயவுண்மை ஆங்கிலேயத்தில் தக்கவாறு இதுகாறும் வெளிவராததினாலன்றோ அத்தேயத்து மேதாவியர் சிலர் சங்கரபாஷ்யமொன்றினையே சிலாகித்துப் பேசிவந்தனர். ஆங்கிலேய மாத்திரம் படித்துள்ள நம்மவரும் நமது உண்மைச் சமயத்தினை யறியாது புறச்சமயங்களைக் கொண்டாடினர். இனி யிவரனைவரும் இச்சித்தியாரின் மொழிபெயர்ப்பைப் படிப்பரேல் முக்கூற்றுப் புறச்சமயங்களின் கொள்கைகளையும் சித்தாந்த சமயத்தின் அருமையினையும் தேர்ந்து சைவராய் விளங்குவரென்பதிற் றடையில்லை. இத்தகைய பேருபகாரத்தை உலகத்தினர்க்குச் செய்துவரும் நமது ஸ்ரீமத் பிள்ளையவர்கள் தேகாரோக்கியத்துடன் நீடூழிவாழ எல்லாம்வல்ல நமது சிவபெருமான் திருவருள் புரிவாராக. இந்நூலின் விலை ரூபா. 3.

* * *

விக்கிரகாராதனம்:—இந்நூல் திருநெல்வேலிப்பேட்டை ஸ்ரீமத்-த-ஆறுமுகநயினார் பிள்ளையவர்களியற்ற ஷை பேட்டை ஸ்ரீமத்-கெ-மு-அம்மையப்ப பிள்ளையவர்களால் வெளியிடப் பட்டுள்ளது. இது தற்காலத்திற்கு இன்றியமையாமல் வேண்டுவதாகிய வொரு நூலேயாம். அனேகமான பிரபல வடமொழி தென்மொழிப் பிரமாணங்களுடன் விக்கிரகாராதனத்தைத் தாபித்துள்ளார். விக்கிரகவணக்கத்தை மறுத்தெழுதியுள்ள சிலபெரியோர் செய்யுள்களைக் குறையெழுதித் தம்கொள்கைக்கு ஏதுவாகவே காட்டியுள்ளார், விக்கிரகவணக்கம் அநாதிதொட்டுள்ளதென்பதை வேதவாக்கியங்களால் நிரூபித்துள்ளார், அவைதிகசமயத்தினர் கொள்கைகளையும் விளக்கித் தமதுபட்சத்தைத் தாபித்துள்ளார். இவர் எழுதியயாவும் சுருதியுக்தியனுபவத்திற்கு மிகப்பொருத்தமாகவுளது. இதன் விலை அணா-8.



மொழிநூல்:—இந்நூல் பாயிரவியல், இலக்கணவியல், முதனிலையியல் என மூன்றாய் பிரிக்கப்பட்டுள்ளது. பாயிரவியலுள், உலகத்தில் முதல்முதல் கைக்குறியும், ஒலிக்குறியும், இருந்தனவென்பதும், அவ்வொலிக் குறியினின்று இயற்கையாக வுண்டாயது இசைக்கல்வி யென்பதும், அவ்வியற்கையாய இசைக்கல்வியினுண்டாய இயற்கைமொழி தமிழ்மொழியே யென்பதும் பஞ்சதிராவிட முதலியனவும் தமிழின் வழிமொழிகளென்பதும் எகிப்து, பாரசீகம், எபிரேயம், அரபி, கிரீக்கு, இலத்தீன் முதலிய மொழிகள் தமிழர் நாகரீகத்தை யெடுத்துக் கூறுகின்றமையாலும், பலவகைச் சிறந்தகாரணங்களாலும் தமிழ் ஆரியத்திற்கு முன்னேயே யுள்ளதென்பதும் இந்நூலில் விளங்குகிறது. அன்றியும், ஆரியத்தினும் தமிழ் வியாபகமுடையதென்பதும், ஆரியம் வருவதற்குமுன் உலகமுழுவதும் தமிழிருந்ததென்பதும், ஆரியத்திற்கு முன்னேயே தமிழ் திருத்தப்பாடுள்ளதென்பதும், தமிழ்ச்சொற்கள் பற்பலமொழிகளிலும் கலந்துள்ளனவென்பதும், ஆரியவேதங்களுக்கு நெடுநாள் முன்னரே தமிழுள்ளதென்பதும், தமிழரிற் போர்வீரர் மிக்கிருந்தனரென்பதும், தமிழில் நீதிநூல்கள் நடுவுநிலை சிறப்புற்றுள்ளனவென்பதும், தமிழ்ச்சொல்லில் பொருட்பொதிவுள்ளதென்பதும், தமிழரசு நெடுநாளிருந்த தென்பதும், வடமொழி முதலியவற்றிலும் தமிழ் பாவினியதென்பதும், தமிழ் திணை பால் முதலியவற்றால் சிறந்ததென்பதும், தமிழ் ஒலியும் எழுத்தும் ஒன்றுபட்டுள்ளதென்பதும், வடமொழி முதலியவற்றினும் தமிழ்ச்சொற்றொடர் அழகுடையதென்பதும் தமிழ்ச்சொற்கள் யாவும் காரணம் பற்றியே வழங்குகிறதென்பதும், இடுகுறிசொற்களில்லை யென்பதும் பிறவும் விளங்குகிறது.

இலக்கணவியலுள் எழுத்தோசை பொருளோசைகளையும், சந்தியெழுத்தையும், சந்தியெழுத்தின்படியே யுண்டான பதசந்திகளையும், மொழிமுதல் வருமெழுத்துவாரா வெழுத்துக்களையும், வகாரமுதன்மொழி முதலியவற்றையும், பிறப்பிடத்தால் இயல்பாகவொத்துள்ள உடனிலை மெய்ம்மயக்க முதலியவற்றையும், முதனிலைப்பேறு ஒற்றினீக்கம் நிலைமாற்றம் இனந்தழுவல் முதலியவற்றையும், நெருப்பின் பெயர் முதலியவற்றையும், உலகவியற்கையும்,

பிறவும் நன்கு ஆழ்ந்து நுணுகி ஒருகி ஆராய்ந்துணரின் தமிழ் உலகில் முதலுண்டான இயற்கை முதன்மொழியென்பது விளங்குகிறது.

முதனிலையியலில் இயற்கைப் பொருளோசையாகிய-ஈ-என்னும் எழுத்தினின்றே பலமொழிக ளுண்டாயினவென விளங்குகிறது. இந்நூலிலெழுதிய விஷயங்களனைத்திற்கும் தக்க கௌரவமான பிரமாணங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. பொதுநோக்குடன் ஆராய்ச்சி செய்யும் புத்திமான்கட்கே இந்நூல் சிறந்ததாக விளங்கும். தமிழபிமானிகளியாவரும் மிகக்கவனித்து வாசிக்கத் தகுந்தது. இவ்வரிய நூ லியற்றினோர்—சைதாபேட்டைக் கண்டி வெஸ்லியன் மிஷன் தியலாஜிகல் காலேஜ் தமிழ்பண்டிதர் ஸ்ரீமத்-மாகறல். கார்த்திகேய முதலியார் இதன் விலை ரூபா 2.

உ

சிவமயம்.

# திருப்பாசுர விளக்கம்.

## ஸ்ரீமன் மாணிக்க வாசக சுவாமிகளின் ஹிருதயசுலோகம்.

திருச்சிற்றம்பலம்.

இன்றெனக்கருளி யிருள்கடிந்துள்ளத்
தெழுகின்ற ஞாயிறேபோன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தே
நீயலாற் பிறிது மற்றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாம்
திருப்பெருந்துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை யறியகிற்பாரே.

(திருக்கோயிற்பதிகம், 7..).

என்ற இத்திருப்பாசுரமே, இத்திருமறையின் திருவுள்ளக் கருத்தை விளக்காநின்றது என்பதை, ஸ்ரீமத் தாயுமான சுவாமிகளால் அருளப்பட்ட அறிஞர் உரை யென்பதில் காணக்கிடக்கும் பின்வரும் இருபாவினால் அறியலாகும்.

"நினைப்பறவே தானினைந்தே நின்றநிலை நாடி.
அனைத்துமா மப்பொருளிலழு நாளெந்நாளோ."
"சென்றுசென்றே யணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாகி
நின்றுவிடுமென்ற நெறிநிற்கு நாளெந் நாளோ."

மற்ற அறிஞர்களின் உரையினை எடுத்து வியந்து ஓதுங்கால், ஒரு முறைசொல்லியும், இப்பாசுரத்தை இரு முறையெடுத்தோதியனை நோக்குங்கால் இதன் பெருமை எம்மட்டெனவும் விளங்கும். ஆகவே இத்திருப்பாசுரத்தில் மற்றெதிலும் அமையாத வண்ணம், எல்லா உண்மைகளையும் ஒருங்கே தொகுத்துக் கூறிய தாகும். எவ்விதமெனில் விசாரிப்பாம்.

இதன் அந்வயமும் பிரிவும்:—

(1) ஒன்றும் திருப்பெருந்துறையுறை சிவனே
ஒன்று நீயல்லை அன்றி யொன்றில்லை
யாருன்னை யறியகிற்பாரே.

(2) இன்றெனக்கருளி இருள்கடிந்து உள்ளத்
தெழுகின்ற நின்ற நின்றன்மை.

(3) நினைப்பற நினைந்தே நீயலாற்
பிறிது மற்றின்மை.

(4) சென்றுசென்று அணுவாய் தேய்ந்து தேய்ந்து
ஒன்றும்.

(5) ஞாயிறே போன்று.

இதன் பொழிப்புரை.

ஒன்றே தெய்வமாகியும், திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! பதார்த்தங்களில் ஒன்றுகநீ நிற்கவில்லை. ஆயின் உன்னை யன்றி வேறு பதார்த்தங்களும் இன்றாகும். உன்னை யாவர்தாம் அறியும் வல்லவர்.

(2) எனினும் நாயேனுக்கு, இன்றே என்முன் வந்து என்னுள்ளத்துள்ள ஆணவமாயுள்ள இருளைப்போக்கடித்து ஞானப்பிரகாசத்தை எனக்கருளிநின்ற நின்தன்மையை யானென்னென்று சொல்லுவேன்.

(3) உன்னருட் பிரகாசத்தை அவ்வாறுணர்ந்து நிற்கும் வண்ணமெவ்வண்ண மெனில், உன்னையான் நினையாது நினைத்தும், உன்னையன்றி வேறு பொருளே இல்லையெனவும் யான் நிலைப்பதினால் தான்.

(4) அங்ஙனம் உன்னை அடுத்துக்கூடி நிலைக்குங்கால் என் பசுகாணங்களெல்லாம், புரை புரையாகக் கழன்று சாிந்து நசித்துப்போகவும், யானும் உன்னுடன் ஒன்றாக நின்றேன்.

(5) அது அப்படி அருளியதும் சூரியன் உதயம் செய்தது போன்றிருந்தது.

இதன் கருத்தை விளக்குங்கால், ஒப்புயர்வற்ற இறைவனுடைய தன்மையையும், அவனுடன் ஒன்றாகியும் வேறாகியுமுள்ள பதார்த்தங்களின் உண்மையும், அப்பொருள்களில் யான் எனது



என்றுமுனைத்து நிற்கும் ஆன்மாவின் கேவல சகல சுத்த நிலைகளின் இயல்பினையும், அந்நிலைகளில் இறைவன் நமக்கு அருளுமாறும், அவ்வருளைப் பெறுதற்கு உபாயமும், அவ்வருளில் அழுந்தி நிற்கும் நிலையினையும் இதனை யெல்லாம் துலக்கிக் காட்ட ஒரு உபமானத்தையும் இப்பாசுரம் கூறியதாமென்க.

இவை யெல்லாம் பெறுமாறு எங்ஙனமெனில் விரிக்குதும். மேல், இதனைத்திருமறை அல்லது வேதம் என மேலே குறிப்பித்தோமானபடியால் அதனையும் விளக்குவாம்.

1. இந்த அதிகாரணத்தில், முதலாயுள்ளசொல் ஒன்றும் என்பது. இது எல்லா ஆஸ்திகமதங்களுக்கும் பொதுவாயுள இன்றியமையாததாயுமாகிய ஒரு கொள்கையினை உணர்த்திநின்றது. தெய்வம் ஒன்றேயுள்ளவன். அவனை யொப்பாரும் மிக்காரும் இலர், ஒரே கடவுள் உண்டு. பல தெய்வங்கள் இல்லை. ஆயின் நம்முடைய வேதாகமங்களில் அநேக தெய்வங்கள் கேட்கப்படுகின்றதே யெனின் அவையெல்லாம் தெய்வமாகாது. அப்படிப் படிக்கப்படும் தெய்வங்களும் சீவர்களே யாவர். அவர்களே முப்பத்தாறு தத்துவங்களில் சிலவற்றைதேகமாகக்கொண்டு, முழுமுதற்பொருளாகிய இறைவனால் ஏவப்பட்ட சில அதிகாரங்களை வகித்துச் செலுத்தா நிற்பர்கள். அவர்களையும் ஆன்மாக்கள் பரிபக்குவத்துக்குத்தக்கபடி ஆராதிக்கும் பொழுதும், அவ்விறைவனே அவர்களுக்கு அக்கடவுளர் மூலமாக அருளைப்புரியா நிற்பர். ஆகவே ஒரு பட்சம் எந்த தெய்வத்தை நாம் வழிபடினும், அவ்வொருவனையே வழிபட்டவர்களாவோம். ஆயினும், கடைசியில் நமக்கு முத்தியை அளிப்பது ஒரே இறைவனாகலின் அவனடிக் கன்பு செய்கையே மாட்சிமை தங்கிய அறமாகும். * மற்றவன் பாதத்தை மறந்து செய்யுமற மெல்லாம் வீண்செயலாகும். இவ்வொருவனும், அயன் மால் ருத்திரனாகிய மூவரில் ஒருவனல்லன். அவர்களுக்குக் கீழிட்ட இந்திரன்முதலிய தேவர்களுமல்லன். அவர்களுக்கு மேலிட்ட மகேஸ்வரன், சதாசிவன் விந்துமூர்த்தி, நாதமூர்த்தியுமல்லன். இவர்களடங்கலும் பசுக்களாகவும், அவர்களுக்குமேலாய் அதீதமாய் நின்ற ஒருவனை பதியென்றும், பசுபதி மேதபதியென்றும், திரிமூர்த்திகளுக்கு அதீதப்பட்டதினால் சதுர்த்தம்

* சித்தியார் சுபக்ஷம் II. 24, 27, பார்க்க.

துரியமென்றும் கூறப்படும். இதனாலே வேதங்களில், அவனை பின் வருமாறு பேசப்படுகின்றன.

ஏகோஹிருத்ர:—சுவேதாஸ்வதரம், 3. 2.
ஏகமேவாத்விதீயம் பிரம்மா:—சாந்தோக்யம்.
ஏகோதேவ:—சுவேதாஸ், 6. 11.
யஏகோஜாலவான்:—3. 1.
ஏகம்சத்விப்ராபகுதாவதந்தி:—இருக்குவேதம், 1. 162. 46.
காதபதிம்மேதபதிம்:—1. 43. 4.
தஸ்மாத்ருத்ரபசுனாமதிபதி ,,
சிவஏவகேவல:—சுவேதாஸ், 4. 18.
சிவஏகோத்யேய
சிவம்கர ஸர்வமந்யத்பரித்யஜ்ய:—அதர்வசிகா.

மற்ற தமிழ்வேதத்திலும், இதனையே பின்வருமாறும் வற்புறுத்தியிருக்கிறார்கள்.

ஒருத்தனார்உலகங்கட் கொருசுடர்:—(5)
மூர்த்தியைமுத லாயஒருவனை:—(5)
"ஓருருவாயினை" "ஒருவனாகிநின்றனை"
ஒருவனையுலகேத்த நின்றநாளோ, (731)
ஒருவனாகி நின்றானிவ்வுலகெலாம்:—(1213)
ஒருவனையல்லா துணரா துள்ளம்:—(649)
"ஒருத்தனையுலகேழுந் தொழநின்று"—(380)
"ஒருத்தனைமூவுலகொடு தேவர்க்குமருந்தனை:--(770)
யாவருமறிதற் கரியான்றனை
மூவரின்முதலாகிய மூர்த்தியை:—(770)
ஒருவரைத்தஞ்சமென்றெண்ணா துன்பாதமிறைஞ்சுகின்றார்.
ஒருவரைத்தோலுரித்தார் யெம்மையாளும்பசுபதியே:-(1197)
மூவராகிய மொய்ம்பரல்லரே:—(929)
மூவராரியாச்சிந்துரச் சேவடியானை:—(திருவாசகம்)
தேவர்கோ அறியாத தேவதேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத்தழிக்குமற்றை

---

* இந்த எண்கள் ஸ்ரீமான். சுவாமிநாத பண்டிதரவர்கள் தேவாரப் பதிப்பின் பக்கம் குறிக்கும்.



மூவர்கோவறியாத மூர்த்தி:— ,,
கொள்ளேண்புரந்தரன் மாலயன்வாழ்வு:—,,
மற்றுப்பற்றெனக்கின்றிநின் றிருப்பாதமேமனம்பாவித்தேன்
(தேவாரம்)

அன்னேபுணக்காளாயினி யல்லேனெனலாமே ,,
'ஒன்றவன்றானே இரண்டவன்இன்னருள்:—திருமந்திரம்.
ஒன்றேகுலமும் ஒருவனேதெய்வமும்:— ,,
'ஒருவன்எனனும் ஒருவன்காண்க.'
"மூவருமுப்பத்து மூவருமற்றொழிந்த
தேவருங்காணாச் சிவபெருமான்"
'ஒப்புனக்கில்லா ஒருவனே'
"அருவமாம் ஒருவனே"
ஒருவனேபோற்றி ஒப்பில் அப்பனேபோற்றி
"தேவருமறியாச் சிவனேகாண்க."

இறைவன் ஒருவனாகவும், அவனுறையும் விடம், பேர்தான் என்னையெனில், அவைகளைப் பின்னில்லாநின்ற பதங்கள் விளக்குகின்றது.

அவன் உறைவிடம் திருப்பெருந்துறை. அவன்பேர் சிவன்.

அவன் உறைவிடத்தை விசாரிக்குங்கால், திருப்பெருந்துறையென்றது பாண்டிநாட்டில் உள்ள ஒரு க்ஷேத்திரமாகவும், அதிலுள்ள கோயிலாகவும் சாதாரண பார்வையில்படும். அப்படிச் சொல்லில் அவன் கண்டப்பொருளாகானேவென்னில், அவ்விதமாகாவண்ணமே, அவனுறை விடத்தை 'திருப்பெரும்' என்னும் அடைமொழிகளால் விசேடித்ததும் என்க. பெரும் என்றதால் பிரம்மாண்டங்களும், திரு என்றசொல்லால், லட்சுமியின் வர்க்கமாகிய சிவகோடிகளையும் குறித்து, அவனுக்கு உண்மையாகிய வாசஸ்தலம், சேதனம், அசேதனம் என்று சொல்லப்பட்ட இருகூற்றுப் பிரபஞ்சமே யாமென்க. அவனில்லாத இடமும்பொருள்களுமில்லை அவனெல்லாவற்றிலும் நீக்கமற நிற்கின்றான். எல்லா பூதங்களிலும், பொறிகளிலும், காணங்களிலும், எல்லா வுடல்களிலும், உணர்வுகளிலும், சூரியன் சந்திரன் தேஜஸ் முதலியவற்றிலும் எல்லா உயிர்களிலும் அவன் ஊடுருவி நிற்கின்றான். இவ்வித

முறைவதனால், இவ்வுலகுயிரை அவனுடைய சந்நிதி அல்லது கோயிலாகவும், அவைகளை அவன் சரீரமாகவும் கூறப்படுகின்றது. இவ்வுலகத்தில் திருக்கோயில் அமைத்திருப்பதும் இக்கருத்துப் பற்றியே யாம். ஒவ்வொரு ஆவரணங்களும், கோபுரங்களும், மண்டபங்களும், தீர்த்தங்களும், வாயில்களும், மூர்த்திகளும், இவ்வுலகுயிரின் பகுதிகளேயாகும். நம்முள்ளத்தையும், ஹிருதய த்தையும், மனத்தையுமே அவன் உறையும் கோயிலாகவும், குகையாகவும், கர்ப்பமாகவும், யோனி*யாகவும்; புண்டரீகமாகவும்

* யோனியென்பதின் ஆதிப்பொருள் மக்டன்னல் அகராதிப்படி இடம், வீடு, கூடு, நுழை, குழி என்பதுதான். முதலில், இச்சப்பதம், அக்னியை வளர்க்கும் குழிக்கே உபயோகிக்கப்பட்டிருக்கின்றது. இதனையே கர்ப்பமென்றும், கர்த்தாவென்றும் குகையென்றும், இருதயமென்றும் பேசப்பட்டிருக்கின்றது..

நீ (அக்னி) என்னுடைய யோனியாய் இருக்கிறாய் நான் உனது யோனியாயிருக்கின்றேன். (தைத்திரியபிராம்மணம் III. 7. 7. 8,)

'அக்நேஸ்வம் யோனின் ஆசீத' ஹே அக்நி, உன்னுடைய யோனியில் (இடத்தில்) வீற்றிருப்பாய்.

"யஞ்ஞரூபமாய், யஞ்ஞமாகிய என்னுடைய யோனியில் வீற்றிருப்பாய்" (தைத்திரிய பிரா. II. 5. 8. 8. தைத்திரியசம்மிதை III 4. 10. 5,)

யஞமானேவா அக்நேர்யோநி: (Do)

அதே மந்திரத்தில், இந்த யோநியானது யஜமானனுடைய ஹிருதயமென்றும் சொல்லியிருக்கின்றது. இந்த அக்நியே ருத்ரனாகவும், அக்நியின் பீடத்தையும், அக்நியையும், யோனியாகவும், லிங்கமாகவும் கூறியிருக்கின்றது. (சித்தாந்ததீபிகை Vol X. பக்கம் 186. 189 பார்க்க.) வில்ஸன் பண்டிதர் இச்சிவலிங்க மூர்த்தம் ஆட்சேபனைக்கிடமில்லாததென்கக்காட்டிப் பின்வருமாறு பேசுகின்றார்.

"இதில், பழையகாலத்து (எகிப்து முதலியதேசத்து) அஸந்தர்ப்பமான வழக்கங்கள் பொருந்தியதன்று. அது குஹ்யமானதும், ஞானமயமாயுள்ளது. லிங்கம் இரண்டுவிதம், அகம், புறமென. புறக்குறிவேண்டிய பாமரர், கல், கட்டையிலுண்டாகிய ஒரு லிங்கத்தை உபாசிக்கின்றார்கள். லிங்கம் என்றதற்கு குறி, அடையாளமென்பதே உண்மைப்பொருள். ஞானிகளோ இப்புறக்குறியைப் பொருட்படுத்தாது, தங்களகத்தினிடத்தே அருபியாயும் அவ்வியயமாயுமுள்ள சிவத்தைத் தியானிக்கின்றார்கள். (இதனை அலிங்கமென்று பேசுகின்றது வேதம்.) இவ்வுபாசனை எவ்விதமேற்பட்ட போதிலும், சில ஐரோப்பியர்களுடைய அசுத்தமான கருத்துப்போன்ற பிரகாரம், சிவபுராணங்களிலும் காணப்படவில்லை" இன்னுமொருவிடத்தில் "லிங்கமூர்த்தத்தினிடத்தேயே சிவபெருமான் வழிபடப்படுகிறார். பூதங்களையும், விசேஷமாக அக்நியையும் வழிபட்டு வந்த வேதவழக்கின் பிறகு, சிவலிங்க மூர்த்தமே மிகவும் புராதனமாக வழிபடப்பட்டது. வேத



வேதங்கள் முழங்குகின்றது. இதற்கு உபயவேதாந்த திருஷ்டாந்தம் வருமாறு:—

"பிரமபுரத்தில், புண்டரீக வீட்டில், தகர ஆகாச மிருக்கின்றது. அந்தகாராகாசத்தினையே, நாம் அறிய வேண்டும்."

சாந்தோக்கியம் vii. i. i.

"யஸ்யப் பிருதிவிசரீரம்."

........................................................

யஸ்ய விக்ஞானம் (ஆத்மா) சரீரம். (பிருகதாரண்ய உபநிஷத். III. 7. 3. to 11.)

இந்தப் பிரபஞ்சமெல்லாம் அந்தப் புருஷனால் ஆவரிக்கப்பட்டிருக்கின்றது. (சுவேதாஸ். III. 9.)

பகவான் எல்லாபூதங்களின் (ஹிருதய) குகையின் கண்ணே வசிக்கின்றான். எங்கும் வியாபி, ஆகையால் சர்வவியாபக சிவன் (Do. III. 11)

இந்தப் புருஷன், ஆத்மாவின் ஹிருதயத்தில் வசிக்கின்றான். (Do. III. 13.)

இந்தப் புருஷன், ஆயிரம் சிரங்களுடனும், ஆயிரம் கண்களுடனும், ஆயிரம் பாதங்களுடனும் உலகத்தை முழுதும் ஆவரித்து தசாங்குல அளவாக அதிகமாகின்றான். (Do. III. 14.)

த்தில் எந்தமட்டும் சிவலிங்க உபாஸனை பெறப்படுகின்றதோ சந்தேகம்.* ஆயின் அநேக புராணங்களில் சிவலிங்கத்தைப்பற்றியே பேசப்படுகிறது. மகமதியர் முதல் படையெடுத்த காலத்து, அது எங்கும் பரவியிருந்ததென்பதற்குச் சந்தேகமில்லை" கர்னல் வான்ஸ கென்னடி களவானும் அவ்விதமாகவே பேசுகின்றார்.

காயமே கோயிலாகக் கடிமன மடிமையாகக்
வாய்மையே தூய்மையாக மனமணியி லிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறையநீ ரமைய வாட்டிப்
பூசனையீசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே.—தேவாரம்.

உள்ளம் பெருங்கோயி லூனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசற்
றெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே. திருமந்திரம்.

* ஸ்ரீமத் அப்பயதீக்ஷிதர் தம் சிவார்க்கமணி தீபிகையில் (II. ii. 38-ன் கீழ்) பின்வரும் இருக்கு வேதமந்திரத்தைக் காட்டி, அதிற்

தைத்திரிய III. II. I. வாஜாசம். X. I. இருக்கு X. 901.
அதர்வணம் XIX B1.

அதன் கரங்களும் கால்களும் எங்குமுள. அதன் கண்களும் சிரங்களுமெங்குமுள. அதன் செவிகள் எங்குமுள. எல்லா உலகையும் சுற்றியிருக்கின்றது. (Do. III. 15.)

சிந்தையாய் நின்ற சிவனே போற்றி
புந்தியய் புண்டரிகத்துள்ளாய் போற்றி. (1968)
"பூதங்கள் தோறும் நின்றாய்." திருவாசகம்.
"சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்
என் உடலிங் கொண்டாய்." (Do.)
புன்புலால்யாக்கை புரை புரைகனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்.
என்பெலாம் உருக்கி எளியையாய் ஆண்ட
ஈசனே! மாசிலா மணியே. (Do)
"அறவை யேன்மனமே கோயிலாக்கொண்டான்."
நினைப்பவர் மனமே கோயிலாக் கொண்டவன் (அப்பர்தேவாரம்)
நீருள்ளான் தீயுளானந்த ரத்துள்ளான்
நினைப்பவர் மனத்துளான் நித்தமா வேத்தும்
ஊருளான் எனதுரை தனதுரையாக
வொற்றை வெள்ளேறுகந் தேறியவொருவன்.
மனத்தகத்தான் தலைமேலானுன் வாக்கினுள்ளான் (1079)
வாயாரத்தன்னடியே பாடுந்தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தம் சிரத்தின் மேலான்
ஏழண்டத்தப்பாலான் இப்பால் செம்பொன்

---

கண்ட ஜனிமா என்றபதம் லிங்கத்தைக் குறிப்பதாகக் கொள்கின்றார்.
தவஸ்ரீ [illegible] ராமர்ஜயர் ருத்ரயத்தேஜ ஸமசாருசித்ரம்
பதம்யதிஷ் [illegible] ருபமந்திராதிதேசபாவிருஷ்யக்ஷாமகாரம்.

இதற்கு உபப்மிருங்கணம், பராசர புராணத்தில் பின்வருமாறு காணப்படுகின்றது. V. 3. 3.
[illegible]
[illegible] கப்படுகிறது.

புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதினுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத்துச்சி யுள்ளான்
காளத்தியானவன் என் கண்ணுள்ளானே. (1098.)

அவன் பெயர் சிவன்.

ஒருருவம் ஓர்நாமம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம் என்றும் அவன் நாமங்கள் அளவிறந்தன வென்றும் பேசியிருப்பதால், இவ்வொரு நாமம் எவ்விதம் சிறப்பாகுமெனின் விளக்குதும்.

'சிவ' என்னும் பதம் இரண்டுவிதமாகப் பொருள் படுத்தப்படுகின்றது. ஹிம்ச என்ற பதம் சிம்ம என்றாயினதுபோல் 'வசி' என்றபதம் 'சிவ' என்று ஆயினதென்பார் ஆன்றோர், 'வசி'[1] என்பதின் பொருள் 'இச்சிப்பவர்' என்பதாகி, தேவர் மனுஷர் முதலாகிய எல்லா உயிர்களுக்கும் இன்பம் கொடுக்க விரும்பி, அவையனைத்திற்கும் ஆகப்பாலனவாகிய உபகரணங்களை எக்காலமும் விருத்திசெய்கின்றவர்[2] எனப்பொருள்படும். இன்னும் இம்மொழி, சுபம், கல்யாணம், மங்களம் என்றபொருளாகி, யாவர்க்கும் சுபத்தைச் செய்கின்றவரெனவும் போதரும். இவ்விருபொருளாலும், யாவர்க்கும் என்றும் அவரவர்கள் சுகத்தை விரும்பி அவர்களுக்கு முடிவில் பரமசுகமாகிய மோட்ச இன்பத்தைக் கொடுப்பவர் என்பதாகும். அதுவே, அவன் அருளுடையவன், அன்பே உருவாகவுள்ளவன்[3] என்றும் ஏற்படும். அவ்வருள் நிகழும் வழி என்றும் என்றதினால், ஆன்மா, ஒருவித உணர்வுமின்றிக் கேவலத்திற் கிடந்தழுந்தி நிற்குந்தோறும், சகலத்தில்வந்து தனுகரணங்களைப் பெற்றுக் கொஞ்சம் அறிவு நிகழ்ந்து

---

[1]. பிருகதா உபநிஷத் IV. 4. 22. "அதில் (இருதய ஆகாசத்தில்), வசியும், ஈசனும், இறைவனுமாகிய அவர் அமர்ந்திருக்கிறார்."

[2] ஸமேதயதியர்நித்யம் ஸர்வஸ்த்ராகஜமுபக்ரமம்.
சிவமச்சிந்மனுஷ்டானும் தஸ்மாத்தேவ: ஶிவ: ஸ்ம்ருத:.
ஸமாபவந்திமே ஸர்வ தாநவாஸ்சா மராச்சயே.
ஶிவோஸ்மிஸர்வபூதாநாம் ஶிவத்வமதேசமேஸ்வரா:.

[3]. "ஒன்றவன்றானே இரண்டவன் இன்னருள்."
"அன்பே சிவமாவதாருமறிந்திலர்."—திருமந்திரம்.

வினையைச்செய்து இன்பதுன்பங்களை யெய்திப், பின்னர் மெய்யுணர்ந்து இறைவன் அடித்தொண்டுசெய்து புத்திரமார்க்க மெய்தி, யோகத்தினமர்ந்து, ஞானசமாதிகைக் கூடிநிற்குந்தோறும், பின் அவனுடன் கலந்து சிவப்பேறு பெற்றுநிற்குந்தோறும், எல்லாம் அவன் உபகாரம் பெற்று நிற்குமேயன்றி இதற்கென ஒரு செயலுமில்லாமையும் பெற்றும். ஆகவே இவ்வான்மா ஆதிமுதல் அந்தம்வரை அவனருள் [4] வழி நிற்றலால் அச்சிவத்தொழிலை விளக்கவந்த பதம் எல்லாவற்றினும் மேலாயதென்க. அதாவது அவன் ஐந்தொழிற்கும் முதல்வன் என்பதனை விளக்கும். மற்றபதங்களெல்லாம் சடசம்பந்தமானப் பொருளைத்தந்தும், இறைவனின் அநந்தகல்யாண குணங்களில் ஒவ்வொன்றைக் காட்டியும், அவன் அளவற்ற வியாபகங்களிலும் தொழில்களிலும் ஒவ்வொன்றைக் குறித்தும் நிற்கும். இருக்குவேதத்திலே மிகவும் காணப்படும் உருத்திரபதம், 'துன்பத்தைப் போக்குகின்றவன்' அல்லது பாசக்ஷயம் செய்கிறவன் என்பதாகும். சிவ என்னும் பதம் அவன் 'இன்பம்செய்பவன்' அதாவது பதிஞானத்தை யூட்டுபவன் எனப்போதரும். பவன், சர்வன்முதல் பசுபதி இறுதியாகிய பதங்கள் அவன் அஷ்டமூர்த்தங்களில் அந்தரியாமியாயிருத்தலைக்காட்டும். 'ஹரன்' என்பது மாறுதலைச் செய்பவன் என்றும் பொருளாகி, பவத்தினை மாற்றுபவன், தேகத்தை மாற்றுபவன், அழிப்பினைச் செய்பவன் (சம்மாரகர்த்தா) என்பதாகும். [5] ஆத்மா, என்பது 'உயிர்' எனவும் 'பரமாத்மா' மேலான உயிர் எனவும் படும். பிரமம்' என்பது பெரியது என்று பொருள்படும். ஈசன், ஈசானன், ஈஸ்வரன் என்ற பதங்கள் இறைவன் என்ற பொருளைத்தரும். சம்பு என்பதும் சங்கரன் என்பதும் 'அழகிய' நன்மையைச் செய்பவன் என்ற பொருளாகிய 'சிவ' என்றபதத்துக்குக் கூடியவரை சமானமாய் நிற்கும். விஷ்ணு நாராயணன் என்ற பதங்கள் 'எங்கும் நிறைந்தது ' சலத்தில் உள்ளது என்றுபொருள்படும். மற்றமதங்களிற் காணப்படும் பதங்களும் சாமானிய அர்த்தங்களையே கொடுக்கும்.

[4]. அருளிற் பிறந்திட்டருளில் வளர்ந்திட்டு
அருளிலழிந்திளைப்பாறி, மறைந்திட்டு
அருளான வானந்தத்தாரமு தூட்டி
அருளாலென்னந்தி அகம்புகுந்தானே.—திருமந்திரம்.

[5]. ஹர: ஸர்வஸ்யஹரணு த்விபுத்வாத்விஷ்ணுருச்யதே.
பகவாந்ஸர்வவிக்ஞாணு தவ்ஞதோயிதிஸ்முருத:.



மேலும் 'சிவ' என்னும் பதம் யாவற்றையும்விட அதிகமாகச் சிறந்ததென்பதற்கு இன்னுமொன்றுளது. மேற்காட்டிய பதங்களினுலெல்லாம் போந்தது, அவன் அங்குளன், இங்குளன், பெரியவன், மேலானவன், உயிர்க்குயிராயுள்ளவன் இறைவன் முதலிய பொருளைத்தந்தும் அவன் உண்மை சொரூபத்தை நாம் உணரும்படி விளக்காது. இம்மொழிகளெல்லாம் நாம் அத்துவித அனுபவத்தை அடையும்வரை இறைவனைப்பற்றிப்பேசவும், பாவிக்கவும் ஏதுவாயுள்ள வைகளே யன்றிவேறில்லை. அவ்வனுபவம் சித்திக்கும்வரை அவனை உணரமாட்டோமாகையால், அவ்வனுபவம் கைகூடி அவனை யறியும்போது அவன் உண்மைச்சொரூபத்தை விளக்குவது இச் 'சிவ' பதமேயாம். [6] எங்ஙனமெனில், நாம் ஒருவரையொருவர் உணரும்போது, அவரவரின் புறக்கரணங்களையும் நற்குண நற்செயல்களையுமே காண்கின்றோம். அவரவரின் ஆத்மாவை யறிந்ததில்லை. ஆத்மா இச்சாஞானக்கிரியா சொரூபமென்று சொல்லுவார்கள். கிரியையினை புறத்தொழில்களின் மட்டும் காணலாம். ஞானம் அகத்தொழிலானதால் காணமுடியாது. 'இச்சை' ஒன்றினையே நாம் அறியக்கூடும். 'இச்சை' என்பது விருப்பம், ஆர்வம் ஆசை அன்பு அருள் என்னும்பொருளைத்தந்து பிறர்மாட்டு நிகழும் ஒரு நிகழ்ச்சியைக் குறிக்கும். ஒருவரை ஒருவர் கண்டறிந்த பிறகு கொஞ்சம்கொஞ்சமாய் இவ்விச்சை, அன்பு இவ்விருவர் பாலும் நிகழக்காண்கின்றோம். இது வர வர அதிகரித்து நிறைந்து ததும்புங்காலத்து, ஒருவரை ஒருவன் கண்டபொழுதும், அவர் உருவத்தையும் கண்டுங்காணுர்கள். அவர்கள் அழகும் அழகின்மையும் கண்ணுக்குப் புலப்படாது. அவர் என்ன உடை உடுத்திருப்பதும், என்ன ஆபரணங்கள் அணிந்திருப்பதும் கண்ணுக்குப் புலப்படாது. [7] ஆயின் என்ன தான் காணப்

[6]. "அன்பே சிவமாயமர்ந்திருந்தாரே"—திருமந்திரம்.
நான் கெட்டு சிவமாகி நின்றவாதோணேக்கமாடாமோ—திருவாசகம்.

[7]. பிருகு. உபநிஷத். IV. 3. 21. இதுவே அவன்ரூபம். ஆசை, தீமை பயமற்றது. ஒருவன் தன் அன்புடைகாதலியை அணைந்தபோது உள்ளும் புறமும் எவ்வாறு உணர்ந்திலனே, அவ்வாறு, பிரஞ்ஞனிய (பர

பட்டது. கண்டபொழுது, உள்ளத்தில் அன்புநிறம்பி அன்புமயமாகவே கண்டார்கள். [7] அவர்கள் பக்கல் நிற்கும்போது, அவ்வன்பு ஊடுருவிப்பாயும், பரவும். இந்நிகழ்ச்சி காண்டொறும் தானே? நினைக்குந்தொறும், பேசுந்தொறும், எப்போதும் அனைத்தெலும்புள் நெக ஆநந்தம் பொங்கும். [8] அந்நிலையில் யான் எனது என்னும் பகுப்பற்று, வேற்றுமையற்று இருவரும் ஒன்றுவார்கள். ஆக இந்நிலையில் ஒருவர் ஒருவருக்கு என்னவிதமாகக் காணப்பட்டார்கள், கண்டார்கள். இச்சை, அன்பு, ஆநந்தமாகக் கண்டார்கள். ஆகவும் ஆன்மாவின் தன்மையும் இச்சை அன்பு ஆநந்தம் என்பதே உண்மைச் சொரூபமாகி அவ்வான்மாவை உணரும் படியாகும். இதற்கொரு அநுபவம். ஆலயவழிபாட்டில், சிலர் தரிசனம் செய்து திரும்பும்போது, சிவலிங்கம், வெண்பளிங்கு, சிறிது பெரிது, இன்ன ஆபரணங்கள் அணியப்பட்டிருந்தது இன்ன பூவினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது எனப் பேசிக்கொள்வார்கள். இன்னும் வெகுசிலர், இதுவெல்லாம் இவர்கள் கண்ணுக்குப் புலப்படாதாகி, அச்சந்நிதானத்தை நெருங்கி நிற்கும்போதும், கண்மூடியாகி, இறைவன் புகழைப்பாடிக் கண்ணீர் சொரிந்து ஆநந்தபரவசராய் வீட்டுக்குத்திரும்புவார்கள். இவ்விருதிறத்தவர்களில் எவர் உண்மையில் சிவதரிசனம் செய்தாரென்பதில் ஐயமேற்படுமா?

இவ்விதமாகவே நாமும் இறைவனை உணருங்கால், அபார அன்பின் அவன் கழல்சார்ந்து, அன்புமயமாகி அவனை இன்பமாத்திரையாக அநுபவிப்பதே அவனை உண்மையில் உணர்ந்ததாகும். வேறுவிதமாக அவனை எக்காலத்தும் எவ்விதத்தும் உணரமுடியாது திரிநேத்திரம், காளகண்டம் சடை முதலியகுறிகள் ஒன்றும்

---

மாத்மா இவனுடன் ஒன்றியபோது உள்ளும் புறமும் தெரிந்திலன். இதுவே இவன்ரூபம். இதில் இவனுடைய எல்லா ஆசையும் முற்றுகிறது; பரமாத்மாவே இவன் எல்லாமாசையுமாகிறது. வேறு ஆசையில்லையாகிறது துன்பமும் மேல் மூளைக்காது.

[8]. சட்டோ நினைக்க மனத்தமுதாம் சங்கரனே
கெட்டேன் மறப்பேனோகேடு படாத்திருவடியை
ஒட்டாத பாவித்தொழும்பரை நாம் உருவறியோம்
சிட்டாய சிட்டற்கே சென்றூதாய் கோத்தும்பீ.—திருவாசகம்.



தோற்றாது. இவரிச்சை, அன்பு, இன்பத்தைக் குறிப்பதாயுள்ளது 'சிவ' என்னும்பதம். மற்றொன்றும் இல்லவேயில்லை. அந்நிலையில் நான்கெட்டுச் சிவமாயும், அன்பே சிவமாயும் அமர்ந்திருக்கின்றோம். இதனாற்றான், மும்மறையுள் நடுமறையுள், எழுகாண்டத்தினடுவுள், உள்ள சதருத்ரியத்தின் நடுவுள் நடுநாயகமாக அமைந்துகிடப்பது 'சிவ' என்னும் இப்பதம். [9] அச்சதருத்திரத்தில் கூறியதும் இறைவனுடைய விஸ்வஸொரூபம். முத்தனுக்கு எல்லாம் சிவமயமாகத் தோன்றும். உயிருள்ளன உயிரில்லாதன, கூன் குருடு, நல்லவன் கெட்டவன், நன்மை தீமை, இருள் ஒளி, கோரம் அகோரம் கல் மண் முதலியன எல்லாமாகிய சேதன அசேதன பிரபஞ்சம் எல்லாவற்றுமுள்ளும் புறம்புமாக நிகரில் இறை நீக்கமின்றி நிற்கின்றானென்று முன்னமே காட்டினோம். இப்படியிருக்க பிரம்ம நிர்வாணத்தையடைந்த சீவன் முக்தனுக்கு இப்பொருள்கள் கண் முன்தோன்றினும், அப்பொருள்கள் தோற்றாது அச்சிவமே தோன்றிநிற்கும். எனினும் அவனைப்பேசிப் புகழும்போது பூதங்கள் தோறும் நின்றாய், பூதங்கள் அனைத்தும் ஆனாய் பூதங்கள் அவனே யெனப்பேசப் பெறும். அவ்விதம் பேசியது தான் சதருத்ரியம். 'சிவ' என்பது நடுவில் நிற்றலால், முன்பின் உள்ளயாவற்றினும் அவனியங்குந்தன்மையும் பெற்றாம். சதருத்ரியம் முழுதும் 'சிவமயம்' என்பதில் அடங்கும்.'

அப்படி நடுவுள் நின்ற முழுமொழி 'சிவாயநம' என்பது. இதனையே பஞ்சாட்சரமாகிய மகா மந்திரமென்பது. எல்லாமந்திரங்களுக்கும் மந்திர ராஜமாகச் சொல்லப்பட்டது, பிரணவமாகிய ஓங்காரம். அந்த ஓங்காரமும் அட்சரம் என்று சொல்லப்பட்டு அழியாதது என்று பொருள்பட்டு இறைவனைக் குறிக்கும். [10] அவ்வோங்காரமும், இரண்டுவிதம். காதுக்குப் புலப்படுவது ஓம் என்னும் சப்தம். கண்ணுக்குப் புலப்படுவது சிவலிங்கம். சப்தமும் லிங்கமும், சுத்தமாயா முதலிய தத்வங்களினின்றும் பிறந்து ஜட

---

[9]. வித்யாஸு ஸ்ருதிருத்க்ருஷ்டா ருத்ரைகாதஸினீ ஸ்ருதெள.
தத்ரபஞ்சாக்ஷரீ தஸ்யாம் ஸிவஇத்யக்ஷரத்வயம்.

[10]. கடஉபநிஷத். I. 2. 16. அந்த அக்ஷரம் பிரமம். அந்த அக்ஷரம் உயர்ந்தது. எவன் அந்த அக்ஷரத்தை அறிகிறானோ, எதை விரும்புகிறானோ அதனை அடைகிறான்.

மாத்திரமாகும். எனவே இவ்விருதிற ஓங்காரமும் இறைவன் உண்மைச் சொரூபத்தை விளக்காது. அவனது அறிகுறியாக நிற்கும். [11] அவ்வோங்காரமும் இன்னும் விரிக்கில், அகார, உகார மகாரமாகி, [12] மும்மறையையும், மூன்றவஸ்தையையும் மூன்று லோகங்களையும், மும்மூர்த்திகளையும் விளக்கி, அப்பிரணவத்தில் தோன்றியும் தோன்றாமலும் நிற்கின்றது அர்த்தமாத்திரை. அதுவே துரியப்பொருளாகிய சிவமெனப்படும். [13] இதனாலும், மந்திர ராஜத்திலும் சிறந்தது சிவமந்திரம். அதனால் அதற்குப் பிரசாத மந்திரமென்றும் பேர். அம்மந்திரத்தில் 'சி' என்பது பதியையும், 'வ' என்பது அவன் அருளாகிய சக்தியையும் குறித்து, மற்றைய எழுத்துக்களில் 'ய' என்பது உயிரையும், 'ந' என்பது திரோதான சக்தியையும், 'ம' என்பது மலசக்தியையும் குறிக்கும். [14] இந்த ஐந்து எழுத்துக்களும் கூடிநின்றதே ஈசன் உலகுயிருடன் ஒற்றித்து நின்றது; இவ்வட்சரங்கள் மாறும் நிலையில், பந்த முத்திநிலைகளையும் குறிக்கும். இன்னும் இப்பஞ்சாட்சரத்தின் உண்மையும் மகிமையும் அளப்பரிதாய்க் கிடக்கின்றது. நாயினும் கடையான நான் அதனை அளக்கற்பாலனோ?

எல்லா தியாகங்களிலும், ஆத்மதியாகம் மேலானது. எல்லா ஞானங்களிலும் பிரம்மஞானம் மேலானது. எல்லா அநுபவங்களிலும் பராநுபவம் மேலானது. இதனையெல்லாம், சிவார்ப்பணம், சிவஞானம் சிவாநுபவம், சிவாநுபூதி என்ற சொற்கள் எவ்விதம் நன்கு விளக்குகின்றது.

---

[11] முண்டக உபநி. II. 2. 4. ஓங்காரம் வில், ஆத்மா, அம்பு; பிரமம் அதன் லட்சியம்.

[12]. பிரஸ்ன உபநி. V. 5. "அகாரவுகார மகாரமாய் மூன்று மாத்திரையாயுள்ள அக்ஷரத்தை எவன் தியானம் செய்கின்றானோ, எந்த உத்தம புருஷன்மீது தியானம் செய்கிறானோ, அவன் சோதியினிடத்தும் சூரியனிடத்தும் சேருகிறான்."

[13]. "சிவம் சாந்தம் அத்வைதம் சதுர்த்தம்மந்யந்தே, மாண்டூக்ய உபநிஷத்.

[14]. சிவனருளாவி திரோதமலமைந்து
மவனெழுத்தஞ்சினடைவாம்—இவனின்று
நம்முதலாயோதிலருளாடாதுநாடுமருள்
சிம்முதலாயோதுநீசென்று.



இச்சிவசப்தத்தை நாவினால் ஒருதரம் உச்சரித்தலால் அது விரைந்து பாபங்களையெல்லாம் நாசமாக்கும். [15] "சண்டாளனாயினும் 'சிவ' என்னும் சப்தத்தை உச்சரிப்பானாயின், அவனோடு கலந்துபேசுக அவனோடுறைக, அவனுடனிருந்து உண்ணுக" [16] எனமுண்டக உபநிடதம் விதந்துகூறி அச்சப்தத்தின் மகிமா பிரபாவத்தை வெளியாக்கிற்று.

உபயவேதாந்த திருஷ்டாந்தம்.

ஸ்தோமன்வா அத்யருத்ராய சிக்வஸே க்ஷயத்வீராய
நமஸாதிதிஸ்டானயேபி: சிவாயவான்:
ஏவயாவபிர் திவா: சிக்ஷதி ஸ்வாயஸ! நிகாமிபி:
(இருக்கும். X. 92. 9.)

'சிவநாமாசி' யஜுர். சம்ஹிதை. III. 63.
"நமசாம்பவே சமயோபவேச் சங்கராயச
மயஸ்காராயச நமசிவாயச, சிவதராயச"
(யஜுர்சம்ஹிதை IV 5. 1 14.)

"சிவனெனு நாமந்தனக்கேயுடைய செம்மேனியெம்மான்" 1200
சிவனென்று நானுன்னைச் சொல்ல செல்வம் தருவானே (298.)
சிவனெனுமோசை யல்லதறையோ
உலகிற்றிருநின்ற செம்மையுளதே. (1179)
'சிவ மல்லதில்லை யறையோ'—திருமந்திரம்.
வைத்தபொருணமக்காமென்று சொல்லி மனத்தடைத்து
சித்தமொருக்கி சிவாயநம வென்றிருக்கினல்லால்
மொய்த்தகதிர்மதிபோல் வாரவர் பாதிரிப்புலியூர்
அத்தனருள்பெறலாமோ வறிவிலாப் பேதைநெஞ்சே
கருவாய்க்கிடந்துன் கழலே நினையுங்கருத்துடையேன்
உருவாய்த்தெரிந்துன்றனாமம் பயின்றேனுனதருளால்
திருவாய்ப்பொலியச் சிவாயநம வென்றுநீறணிந்தே
தருவாய் சிவகதி நீபாதிரிப்புலியூரானே. (1012)

---

[15] யத்வ்யாக்ஷரம் நாமகிரேரிதம்ருணாம் ஸக்ருத்
ப்ரஸங்காதக மாஸுஹந்தி.

[16] யஸ்சண்டால: ஸிவஇதிவாசம் வதேத்தேந்ஸஹஸம்
வதேத்தேநஸஹஸம் வஸேத்தேந ஸஹபுஞ்சீத.

காதலாகிக்கசிந்து கண்ணீர்மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக்குய்ப்பதும்
வேதநான்கினும் மெய்ப்பொருளாவதும்
நாதநாம நமச்சிவாயவே. (1176)

சொற்றுணைவேதியன் சோதிவானவன்
பொற்றுணைத்திருந்தடி பொருந்தக்கைதொழக்
கற்றுணைப்பூட்டியோர் கடலிற்பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே. (1182)

மற்றுப்பற்றெனக்கின்றி நின்திருப்பாதமே மனம்பாவித்தேன்
பெற்றபின்பிறந்தேனினிப் பிறவாததன்மை வந்தெய்தினேன்
கற்றவர்தொழுதேத்துஞ்சீர்க்கறை யூரிற்பாண்டிக்கொடுமுடி
நற்றவாவுன்னைநான்மறக்கினுஞ் சொல்லுநாநமச்சிவாயவே.927

"நமச்சிவாய வாழ்க"
"போற்றியோ நமச்சிவாய" திருவாசகம்.
திகழொளியே சிவனே உன்னபயநானே. (392)

வாறேசிவாய நமச்சிவாயநம
வாறேசெபிக்கில் வரும்பேர்பிறப்பில்லை
வாறேயருளால் வளர்கூத்துக்காணலாம்
வாறேசெபிக்கில்வரும் செம்புபொன்னே. திருமந்திரம்.

"ஆலயமாகவமர்ந்த பஞ்சாக்கரம்."
"நாடும்பிரணவ நடுவிருபக்கமும்
ஆடுமவர்வாய அமர்ந்தங்குநின்றது
நாடுநடுவுள்முக நமசிவாய
வாடுஞ்சிவாயநம புறவட்டத்தாயதே."
"அஞ்செழுத்தாலே யமர்ந்தனன் நந்தியும்."
"வெளியில்விரேகையில் ரேகையிலத்தலை
சுழியிலுகாரமாம் சுற்றியவன்னி
தெளிதருகால்கொம்பு நேர்விந்துநாதம்
தெள்ளியும்பிரகாரம் சிவமந்திரமே."
"அகாரமுயிரே உகாரம்பரமே
யகாரமலமாய் வருமுப்பதாறிற்
சிகாரம் சிவமாய் வகாரம்வடிவமாய்
அகாரமுயிரென்றறையலு மாமே."

"சிவனருளாகிய சிவன் திருநாமம்"
"சிவசிவவாகும் திருவருளாமே"
"சிவசிவவென்னச் சிவகதிதாமே"
"சிவாயநமவெனச் சித்தமொருக்கி
அவாயமறவே அடிமையதாக்கி
சிவாயசிவசிவ வென்றென்றேசிந்தை
அவாயங்கெடநிற்க வானந்தமாமே."
"ஓங்காரத்துள்ளே யுதித்தவைம்பூதங்கள்
ஓங்காரத்துள்ளே உதித்தசராசரம்
ஓங்காராதீத்துயிர் மூன்றுமுற்றன
ஓங்காரம்சிவ பரசிவரூபமே"
அம்பலமாவது அகிலசராசரம்
அம்பலமாவது ஆதிப்பிரானடி
அம்பலமாவது அப்புத்தீமண்டலம்
அம்பலமாவது அஞ்செழுத்தாமே.

உண்மை விளக்கம்.

சிவனருளாவிதிரோத மலமைந்து
மவனெழுத்தஞ்சினடைவாம்—இவனின்று
நம்முதலாயோதிலருணுடாது நாடுமருள்
சிம்முதலாயோது நீசென்று.

ஒன்று நீயல்லே, யன்றி யொன்றில்லே.

இச்சொற்றொடர்கள் இறைவனது அத்துவித இலக்கணத்தை விளக்குகின்றது. அவன் உலகு உயிருடன் வேறாயும், ஒன்றாயும், உடனாயுமிருக்கின்றான். உலகானது நமது உடல் அந்தக்கரணங்கள் புறக்கரணங்கள், நாம் வாழும் புவனங்கள், நாம் அனுபவிக்கும் போகங்கள் எனவிரியும். இவையனைத்தும் நிலைப்பன போலத்தோன்றினும், க்ஷணத்துக்குச் க்ஷணமாறி மாறி யழிகின்றன. உயிருக்குமே புறம்பாக நின்று, சுட்டுப் பொருள்களாகி, உயிரில்லாத சடப்பொருளாகின்றன. சாதாரணமாக நம் உயிர், அல்லது அறிவை நோக்குழி, இவை எவ்வளவோ வித்தியாசமுள்ள பொருளாகின்றன. இவைகளின் முக்

கிய குணமானது இடம்கொண்டதாகின்றது. இதற்கு அகலம் குறுக்கம் கனமுதலியன சொல்லலாம். அறிவோவென்றால் அவ்விதமாக அளக்கப்படாதது. இடத்திலும் அடங்காதது. மேல், உலகானது நம்முடைய நற்குணம் தீயகுணம், நல்வினை தீவினை, இன்பம் துன்பம், புண்ணியம் பாவம் இவைகளுக்கு ஆதாரமாகி உயிரைச் சிக்குவிக்கின்றது. மேலும், இச்சடப்பொருள் அசைவித்தாலன்றி யசையாதனவாயுள்ளது. உடலில், உயிரில்லாத வழியும், அறிவு வேறுவிதமாய் நிலைத்திருக்கும்போதும், கண்ணிருந்தும் கண்காணாது. காதிருந்தும் அதுகேளாது, மணமிருந்தும் மற்றொன்றில் பற்றாது மற்ற காரணங்களும் அவ்வாறே, இன்னும் விசாரிக்கில், இவையெல்லாம் உலகியற்பொருள்களில் அதிசூக்குமமாய் நிற்கும்பொருளையும் கடந்த ஒரு சக்தியினால் சுழல்வதாகவும் தெரிகிறது. இம்மண்ணுலகமும, சந்திரனும், அதனைசசார்ந்த கிரகங்களும், சூரியனைப்பற்றிச் சுழல்கின்றன. இச்சூரியனைப்போல எண்ணிறந்த சூரியர்கள் உள. இவைகளெல்லாம், இவற்றின் அதீதப்பட்ட ஓர் சக்தியாற் சுழல்கின்றன. ஆகவே இம்மாயையும்,ஒன்றின் மிடைந்ததாகவும், தனக்கென ஓர் சுதந்தரமற்றதாகவும்; உயிரையன்றி பிறக்காததாகவும், நிலைக்காததாகவும் உள்ளது. இதனால் நாமறிந்தது உலகம் (பிரகிருதி, மாயை, மோகினி முதலியன பரியாய நாமங்கள்.) அடிக்கடிமாறும், சலனப்பொருள் மாறி மாறி அழியும் பொருள், அறிவற்றசடப் பொருள் (அசேதனப்பொருள்,) சுட்டுப்பொருள், எல்லாதீயவற்றிற்கும் ஆதாரமாய், உயிரைமயங்கச்செய்வது, அசைவித்தாலன்றி அசையாது, ஒன்றின்மிடைந்ததாய், சுதந்திரமற்றதாய், தனித்து நில்லாதபொருள். இப்பொருள்களின் மூலகாரணங்களை விசாரித்துழி, சுத்தமாயைஅல்லது குடிலை அல்லது குண்டலினி என்னும் மூலகாரணத்தினின்றும் நாதம் முதல் பிருதிவியீறாக முப்பத்தாறு தத்துவங்களாகவிரியும். பிருதிவி முதல் ஏறுநின்ற 24 தத்துவங்கள் அசுத்தமாயை அல்லது பிரகிருதி, அல்லது மூலப்பிரகிருதியில் அடங்கல். அதற்கு மேலிராநின்ற கலை கால முதலிய 5 தத்துவங்கள் சுத்தா சுத்தமாயையில் அடங்கும். அதற்குமேல் நின்ற சுத்தவித்தை முதலிய .ஏழு தத்துவங்கள் சுத்தமாயையில் ஒடுங்கும். பிரகிருதி தத்வங்களே நமக்கு சாதரணமாகப் புலப்படுகின்றன. யோகப்பயிற்சியில் மேல்நின்ற தத்துவங்கள் கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படும். மேல் ஏற ஏற அத்தத்துவங்கள் அதிநுட்பமாயும் அதன் சக்திகள் அளவற்றதாயும் காணப்படுமாதலால், அவற்றையே உயிரென்றும், கடவுளென்றும் மயக்கமுண்டாவதற்கு ஏதுவாகும். மின்சாரசக்தி தற்காலம் கண்டுபிடிக்கப்பட்டு அதன்வலியை எவ்வளவு அபாரமாகக் கொண்டாடுகிறார்கள். ஆயினும், இதுவும், சில நவீன தத்துவசாஸ்திரிகள் கொள்ளுவதுபோல உயிராகா, கடவுளாகா. இதுவும் மூலப்பிரகிருதியில் அடங்கியது. இதற்கு எவ்வளவோ அதிதூரமாயும் அதிநுட்பமாகியுமுள்ள சுத்த, சுத்தா சுத்தமாயா தத்துவங்களும் உயிராகா, கடவுளாகா.

மேல், சித்து, அறிவு, ஆத்மா என்னும் பெயர்களால் ஒருவாறு இறைவனோடு இணைத்துக்கூறும் உயிர்களுமே இறைவனாகுமோ வெனில், அவைகளும் ஆகா. அவைகளின் பேதங்கள் நம் கண்ணுக்குப் புலப்படாத அணுக்களாயும், புலப்படும் புழுப் பூடு முதல் மக்களீறாகவும், நமக்குப் புலப்படாத தேவர் நாகர்களாகவும் விரியும். இவைகளுக்கு அறிவு, இச்சை, தொழில்கள் உண்டு. இவைகளும் எவ்வளவோ குறைந்தும் எவ்வளவோ மேம்பட்டும் காணப்படும். அப்படி காணப்படினும், அவ்வறிவும் தொழிலும் இச்சையும், அறியாமையால் மூடப்பட்டு அதன் வலிகுன்றி, தனக்கு நன்மையைத் தருவது இது தீமையைத்தருவது இது, என உணராது நினைப்பு மறப்புமுடையதாய், விருப்பு வெறுப்புமேலிட்டுப் புண்ணியபாவங்களைச் செய்து, இன்பதுன்பங்களை நுகர்ந்து, இறப்பு பிறப்பு என்னும் பெரும்வலையில் சிக்குண்டு உழல்கின்றது. அவ்வறிவும், இவ்வுலக இயற்கையினையும், அத்தோற்றங்களையும், அதன் வலியினையும் நன்குணரவில்லை. உலகின் ஆகிருணசக்தியை (gravitation)க் கண்டு பிடித்தபோபோன ஸர்ஐனாக் நியூடன் பண்டிதரும், தாம்கண்டதெல்லாம், சிறுவர்களும் சிறுமியர்களும் கட

...ற்கரையிலோரம் அப்பப்போது கிடைக்கும் அழகிய சிப்பிகளைக் கண்டெடுத்துக் களிக்குமாறு போலென்றார். இயற்கை சக்திகளைக் கண்டுபிடிக்க வேண்டியது எவ்வளவோ வுண்டு. கண்டுபிடிக்கப்பட்டதாகக் கொண்டதிலும் கூட எவ்வளவு நுட்பமாய் விசாரிக்கின்றோமோ, அவ்வளவாக நமது அறிவுக்கு கடந்து செல்கின்றது. உலக இயற்கையினை நாம் சரியாக உணருவோமாயின், எவ்விதமான துன்பங்களினின்றும் நாம்தப்புவதற்கு இடமுண்டு நாம் உண்ணும் உணவு, நாம் குடிக்கும் நீர், நாம் உட்கொள்ளும் காற்று, நாம் இருக்கும் இடம், நம்மைச் சூழ்ந்திருக்கும், புல், பூச்சி, புழு, மரம் மட்டை பசு பட்சி முதலியவைகளால் எவ்விதமான இன்னல்கள் உண்டாகின்றன. சில வருஷங்களாக, காற்றைவலித்து, அதிற் பறக்கமுயலுகிறார்கள். இதற்குள் அதனைச் சரிவரசெய்து முடிக்காததனால் மாண்டவர்கள் எத்தனை பேர்! நேற்று ஒருவர் எழுதுகிறார். இதுவரையும் பட்சிகள் அமைப்பைப் பார்த்துக் காற்றுக் கப்பல்களைச் செய்கிறார்கள். அது சரியன்று. பூச்சிகளின் பறக்கும் அவயவங்களைச்செய்ய வேண்டுமென்கிறார். இன்றுண்டாகி நாளையழியும் ஒரு சிறு பூச்சியில், இறைவனால் அமைக்கப்பட்ட அமைப்பு என்ன அற்புதம்! அதை நாம் அறியவல்லேமா?

நாம் செய்யும் தொழில்களிலுங்கூட என்னபோதம், நாம் ஐயறிவுடைய மானிடராகியும், நாம் செய்யும ஒவ்வொரு தொழில்களிலும், அற்பமாகிய பூச்சிகளும்கூட நம்மை செயிக்கின்றன. ஓர் சிலந்தி எவ்வளவு எளிதாய் நூற்கும் நூலைவிட நுண்ணியதாய் நாம் நூற்கமுடியுமா? அச்சிலந்தியும், குழவியும் செய்யும் காகிதங்களைவிட நுட்பமாய் நாம் செய்யமுடியுமா. அச்சிலந்தியும் அக்குளவியும், தேனீக்களும் அமைக்கு வீடுகளையும், அரண்மனைகளையும், கூடகோபுரங்களையும் மாடமாளிகைகளையும் விட நாம் அலங்காரமாயும் வலியுளதாகியும் அமைக்க முடியுமோ? சிறு பூச்சிகள் செய்யும்பட்டுமே யன்றோ நமக்குச் சிறந்த ஆடையாகின்றது. நம்மால்செய்ய முடிவதெல்லாம் இமிடேஷன் (போலி) பட்டேயன்றோ? ஒரு எறும்பினிடத்துள்ள அறிவும், யுக்தியும், தற்காத்தற்றன்மையும் ஒற்



றுமையுமே நம்மிடத்தில்லையே! இவ்விதமாய் இவற்றின் அமைந்துள்ள அறிவும் தொழிலும், இறைவனால் அமைக்கப்பட்டதன்றோ?

இது நிற்க, இவ்வுயிரும் பொருள்களையறியுமிடத்துத் தானாக அறிந்ததுண்டோ? தன்புறக்கரணங்கள் அகக்கரணங்களைக்கொண்டு அறிந்ததேயன்றி வேறின்று. கண்ணில்லாவிடில் காணமுடியாது, செவியில்லாவிடில் கேட்கமுடியாது, மனதில்லாதபோது நினைக்கமுடியாது. அப்படிக்கண்ணிருந்தும், இது அறியாமை மேலிட்டதால், சரியாகப்பார்க்க முடியவில்லை, காதிருந்தும் கேட்கமுடியவில்லை. மனதிருந்தும் நினைக்கமுடியவில்லை,மருட்சி அடைகின்றது, அகக்கரணங்கள் குறைந்து ஒய்வுறும்போது இதுவும அயர்கின்றது. மேலிடும்போது, மேல்நோக்குகின்றது. இவ்விதமாய் நினைவு, கனவு, உறக்கம் முதலிய அவத்தைகளை யடைகின்றது. இதற்குமேல் கேவல சகலமென்னும் நிலைகளையும் அடைகின்றது. மேலிவ்விந்திரியம் கரணங்களுடன் செறிந்து நிகழும்பொழுது, இவைகளை யடக்கி ஆளுந்தரமும் உண்டோவெனில் இதுவும் இல்லையே! அவைகள் எல்லாம் இதனைப்பற்றியீர்ப்பதல்லால், தன் வசத்தின் அவையடங்கவில்லையே குரங்கைப்போல் மனம் என்றும் சலித்துத்தாவுகின்றதே. பிரகிருதியில் பிறந்த உடலையிது கொள்ளவும் அதன் கூறாகிய சத்துவம், இராஜஸம், தாமதமாகிய முக்குணவயப்பட்டு இது உழல்கின்றதன்றோ? இவைகளின் பகுதியும், அஞ்ஞானம், பொய், அயர்வு, மோகம், பைசாசம்,சூனியம், ஆச்சரியம், பயம் அன்றோ இதனைமூடும் ஆணவத்தின் பகுதியும், விகற்பம் சங்கற்பம், குரோதம், மோகம், கொலை, அஞர், மதம், நகை என்பனவன்றோ, இருத்தல், கிடத்தல், இருவினையியற்றல், விடுத்தல், பாவிக்கை மேவலாகிய கர்மமலத்தின் கூறுகளும் இதனை பந்திக்கின்றதன்றோ. இம்மும்மலங்களும் சடமாயிருந்தும், இது சித்தெனப் பேர்பெற்றும், அவற்றிற்பட்டுப் பங்கமுறுகின்றதன்றோ?

மேல், இவ்வுயிரும், தான் ஒன்றை யறியத்தொடங்குமுன் இன்னொருவுயிரால் அறிவுறுத்தப்பட்டாலன்றி தானாக அறியும்

தாமுடையதோ எழுத்தும், சொல்லும், பொருளும் அதற்கு மேல் நின்ற கலைகளும் பிறரால் உணர்த்த உணருமேதவிரத் தானாக உணருமோ? உணர்ந்த வழியும் அதனை மறந்து விடுகின்றதே? இம்மட்டன்றி, தன்னையும் தானிது அறிந்ததோ? தன்சொரூபமின்னதென்றே தனக்குத்தெரியாமல், தன்னையுமறந்து, யாதொன்று பற்றின் அதன் இயல்பாய்நிற்கின்றதே. தீயவினைத்திற் சேர்ந்துழி தீயதாகின்றது. நல்வினைத்தின் சேர்ந்துழி நல்லதாகின்றது. ஆணவத்தோடும், தேகத்தோடு கரணங்களோடும் சேர்ந்தபோது, தான் அவையல்லாதிருந்தும், அவையெல்லாம் தானேயென மதித்து, அக்குணங்களும் தானேயாய் அவைபிற்றின் ஏவலினின்று, அத்தொழில்களைப் புரிந்து, இன்பதுன்பங்களை நுகர்ந்து பிறவிப்பிணியிலாழ்கின்றதே. இவை தானல்லவென்று அறிவடைவதும் அதன் சிக்கினின்றும் விலகி உய்வுபெறுவதும், இதன் வலியானன்றே. இறைவன் தனதின்னருளால், தம்முதல் குருவாய்வந்து தனது கட்டுகளின் இன்மையும், தனதுண்மையும் காட்டாக்கால், இதுகாணுமோ? வேதத்தப்பானின்ற சொற்பதத்தார் சொற்பதமும் கடந்து நின்ற சொலற்கரிய சூழலாகிய கற்பகம், நிலையிலாதன் நெஞ்சினுள்ளே நிலவாத புலாலுடம்பே புகுந்து நிற்பினும் அவன் தன்னைக்காட்டுவித்தாலன்றிக் காணுந்தரமோ மேல், இவ்வுயிரின்பால் நிகழும் குற்றங்களெல்லாம், உண்மையல்லவென்றுவது, அத்தியாசமென்றுவது, இறைவனிடத்துள்ளதே இதன் பாலும் தோன்றிற்றென்றுவது கொள்ளவும் கூடாது. தானல்லாததைத்தானாகப்பாவித்தும், உண்மையல்லாததை உண்மையாக உணரும் குற்றம் குற்றமேயன்றோ! சுத்தமெய்ஞ்ஞானச் சோதியாகிய செம்பொருளிடம் அசுத்தஞானம் மொத்துறுமோ. சூரியன் கதிரொளியின் முன் இருளும் நிற்குமோ?

இவ்விரண்டும் ஒருவிதமாகச் சித்து, அறிவு என்று முன்கூறினேமாயினும், சிவன் அருட்சித்து, சிவன் அருளைச்சேரும் சித்து அவன் பவங்கெடுபுத்தி முத்திபண்ணும் சித்து, இவன் அவற்றில் படியுஞ் சித்து; ஆகையால் இவ்விரண்டு மொன்றாகா?



சித்தாந்தம்: உலகும் உயிரும் சிவமல்ல.

"ஒன்றும் திருப்பெருந்துறை சிவனே ஒன்று நீ யல்லை."

இதற்கு திருஷ்டாந்தம்

कस्मिन्नुत्वं चात्माच प्रतिष्ठितौस्थ इतिप्राण इतिकस्मिन्नुप्राणः प्रतिष्ठित इत्यपान इतिकस्मिन्नपान प्रतिष्ठित इतिव्यान इतिकस्मिन्नुव्यानः प्रतिष्ठित इत्युदान इतिकस्मिन्नुदानः प्रतिष्ठित इति समान इतिसएष नेतिनेति ॥ பிருகதாரண்யம். 5. 9. 26.

எதில் நீயும் ஆன்மாவும் பிரதிஷ்டிக்கப் பட்டிருக்கிறீர்களோ அது பிராணத்தில், பிராணன் எதிலெனில் அபானத்தில், அபானன் எதிலெனில் வியானனில், வியானன் எதிலெனில் சமானனில், சமானன் இவன் (ஆன்மா) அல்லை அல்லை.

यःपृथिव्यांतिष्ठन् पृथिव्यं अन्तरोयंपृथिवीन वेदयस्यपृथिवीशरीरं यः पृथिवीमन्तरोयमयत्येषत आत्मान्तर्याम्यामृतः ॥ பிருகதாரண்யம். 4. 5. 15.

எவன் பிருதிவியில் இருந்துகொண்டு பிருதிவியினின்றும் வேறானவனோ, எவனை அந்தப்பிருதிவியறியாதோ, எவனுக்குப் பிருதிவிசரீமோ, எவன் பிருதிவிக்கு நடுவனோ, இது எவனை அடைகிறதோ அவன் உன் ஆன்மா அவன் அந்தரியாமி அமிர்தன்.

योविज्ञानेतिष्ठन् विज्ञानादन्तरोयं विज्ञानं नवेदयस्यविज्ञानगृशरीरं यो विज्ञानमन्तरोयमयत्येषत आत्मान्तर्याम्यमृतः ॥ பிருகதாரண்யம். 5. 7. 3.

எவன் விஞ்ஞானத்தில் இருந்துகொண்டு விஞ்ஞானத்தினின்றும் வேறானவனோ, எவனை விஞ்ஞானமறியாதோ, எவனுக்கு விஞ்ஞானம் சரீரமோ, எவன் விஞ்ஞானத்திற்கு நடுவனோ இது எவனை அடைகிறதோ அவன் உன் ஆன்மா அவன் அந்தரியாமி அமிர்தன்.

कालस्वभावोनियतिर्यदृच्छभूतानियोनिः पुरुषइतिचिन्त्यं ।
संयोगएषान्नत्वात्मभावा दात्माप्यनीशस्सुखहेतोः ॥ சுவேதாசுவதரம். 1. 2.

கால சுபாவம், நியதி, எதிர்ச்சை, பூதங்கள் யோனி, புருஷன் இவைகட்கு ஆன்மபாவத்தால் சமயோகம் இல்லை, ஏனென்றால் சுகதுக்கவேதனைக்கொண்டு ஆன்மாதலைவனல்லன்.

तेध्यानयोगानुगतं अपश्यनदेवात्मशक्तिम् स्वगुणैर्निगूढां ।
यःकारणानिनिखिलानि तानि कालात्मयुक्तान्यधितिष्ठत्येकः ॥ சுவேத. 1. 3.

தியானயோகநெறி நின்றோர் பரமான்மாவின் கண்ணுள்ள இயற்கை குணங்களாலே மூடப்படுகிற திருவருட்சத்தியே கால முதலாக நிற்கும் காரணங்களையும் சீவான்மாவையும் தன்வழி நிறுத்தி நடாத்துகின்றதென்றறிந்தார்.

ज्ञाज्ञौद्वावजावीशनीशावजाह्येका भोक्तृभोग्यार्थयुक्ता ।
अनन्तश्चात्माविश्वरूपोह्य कर्तात्रयंयदाविन्दतेब्रह्ममेतत् ॥ சுவேத. 1. 9.

ஒன்று ஞானவுருவாயுள்ளது, மற்றையது அஞ்ஞானவுருவாயுள்ளது, ஈசன் அநீசன் இருவரும் பிறவாதவர் அங்ஙனமாயினும் ஒன்று எல்லாம் வல்லது, மற்றையது அவ்வாறகாதது. உலகவியற்கை நுகர்வோனும் நுகரப்படுவன வற்றேடுங் கூடிப்பிறப் பின்றியுள்ளது. ஆன்மாக்களனந் தம் விசுவசொருபமுடைமையினல் முதன்மையில்லாதன.

क्षरंप्रधानममृताक्षरंहरः क्षरात्मानावीशतेदेवएकः ।
तस्याभिध्यानाद्योजनात्तत्वभावाद् भूयश्चान्तेविश्वमायानिवृत्तिः ॥
ज्ञात्वादेवंसर्वपाशापहानिः क्षीणैःक्लेशैर्जन्ममृत्युप्रहाणिः । சுவேத. 10. 11.

பிரதானம் அழிதலுறுவது, அரன் அழிதலும் மரணமுமில்லாதவன். அழிதலுறுகின்ற இயற்கையினையும் ஆன்மாவினையும் ஒரே தேவனுன ஈசனே ஆளுகிருன் அவனையே தியானித்தலானும் அவனேடு யோஜித்து ஒருமையுறுதலானும் திரும்பத்திரும்பத் தன்னையுண்மையுருவாக நினைதலானும் விசுவத்தின் கண்ணுதவரும் மாயங்கள் அகலுகின்றன. தேவனையறிதலாலே சருவபாசங்களும் அழிதலுறுகின்றன. பிறப்பும் இறப்பும் எல்லாவித துன்பங்களும் குறைய ஒழிகின்றன.

यथैवबिंबंमृदयोपलिप्तं तेजोमयंभ्राजतेतत्सुधौतम् ।
तद्वात्मतत्वं प्रसमीक्ष्यदेही एकःकृतार्थोभवतेवीतशोकः ॥ சுவேத. 2. 14.

இவ்வியோக சமாதியின் கண்ணே அழுந்தப்பெறுகிற விடத்துத் தன்கட் சோதியாய் விளங்கப்பெறுந்தன் ஆன்மவுண்மைத் தன்மையோடு ஒட்டித் தத்துவாதீதநித்தியமான பிறப்பில் பிரமத்தின் உண்மைத் தன்மை கண்டு எவ்லாப்பாசங்களினின்றும் விடுபடுகிருன்.

यदात्मतत्वेनतुब्रह्मतत्वं दीपोपमेनेहयुक्तःप्रपश्येत् ।
अजंध्रुवंसर्वतत्वैर्विशुद्धं ज्ञात्वादेवंमुच्यतेसर्वपाशैः ॥ சுவேத. 2. 15.

தீபத்தைப்போன்ற ஆன்மதத்துவத்துடன்கூடிப் பிரமத்துவத்தைக்கண்டு அஜன் நித்தியனும் சர்வதத்துவங்களால் விசுத்தனும் ஆன தேவனை அறிந்து சர்வபாசங்களினின்றும் மோக்கம் பெறுகிருன்.

மண்ணல்லைவிண்ணல்லைவலயமல்லை
மலையல்லைகடலல்லைவாயுவல்லை
எண்ணல்லைஎழுத்தல்லைஎரியுமல்லை
இரவல்லைபகலல்லையாவுமல்லை

பெண்ணல்லை யாணல்லை பேடுமல்லை
பிறிதல்லை யானும் பெரியாய் நீயே
உண்ணல்லை நல்லார்க்குத் தீயையல்லை
புணர்வரிய வொற்றியூர் உடையகோவே.
(தேவாரம் 1109)

உரைசேருமெண்பத்துநான்கு நூறுயிரமாம்யோனிபேத
நிரைசேரப்படைத்தவற்றின் உயிர்க்குயிராய் யங்கங்கே
நின்றான். (575)

மோத்தையைக்கண்டகாக்கை போலவல்வினைகண்மொய்த்துன்
வார்த்தையைப்பேசவொட்டா மயக்கநான் மயங்குகின்றேன்
சித்தையைச்சிதம்புதன்னைச் செடிகொணோய் வடிவொன்றில்லா
(1190)

மருளவாமனத்தனாகி மயங்கினேன் மதியிலாதேன்
இருளவாவறுக்குமெந்தை யிருவினை யடிநிழலென்னும்
அருளவாப்பெறுதலின்றி யஞ்சிநானலமந்தேற்குப்
பொருளவாத்தந்தவாறே போதுபோய்ப் புலர்ந்ததன்றே. (1190)

ஆசைவன்பாசமெய்தி யங்குற்றேனிங்குற்றேனாய்
ஊசலாட்டுண்டுவாளாவுழந்து நானுழிதராமே (1191)

விரிகதிர் ஞாயிறல்லர் மதியல்லர் வேதவிதியல்லர் விண்ணுநிலனும்,
திரிதருவாயுவல்லர் செறிதீயுமல்லர் தெளிநீருமல்லர் தெளியில்
அரிதருகண்ணியானை ஒருபாகமாக அருள் காரணத்தில் வருவார்,
எரியரவாரமார் பரிமையாருமல்லர் இமைப்பாருமல்லவரே.
(1175)

தொண்டனேன் பிறந்து வாளாதொல் வினைக்குழியில்வீழ்ந்து
பிண்டமேசுமந்து காக்கும் பெரியதோரவாவிற் பட்டேன்.
(1192)

கற்றிலேன் கலைகள்ஞானம் கற்றவர் தங்களோடும்
உற்றிலேனுதனாலே உணர்வுக்குஞ் சேயனானேன்.
(1193)

முன்னையென்வினையினாலே மூர்த்தியை நினையமாட்டேன்
பின்னைநான் பித்தனாகிப்பிதற்றுவர் பேதையேனன். (1194)

வளைத்துநின்றைவர் கள்வர் வந்தெனை நடுக்கம்செய்யத்
தளத்துவைத்துலையை யேற்றித் தழலெரிமடுத்தநீரில்
திளைத்துநின்றாடுகின்ற வாமைபோற்றெளிவிலாதேன்
இளைத்து நின்றாடுகின்றேன் என்செய்வான் றோன்றினேனே.

(1195)

ஆட்டுவித்தா லாரொருவ ராடாதாரே
யடங்குவித்தா லாரொருவ ரடங்காதாரே
ஓட்டுவித்தா லாரொருவ ரோடாதாரே
உருகுவித்தா லாரொருவ ருருகாதாரே
பாட்டுவித்தா லாரொருவர் பாடாதாரே
பணிவித்தா லாரொருவர் பணியாதாரே
காட்டுவித்தா லாரொருவர் காணாதாரே
காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே.

யன்றியொன்றில்லை.

இச்சொற்றொடர்கள், இறைவன் உலகுயிருடன் நிற்கும் அத்துவித அபேதநிலையை விளக்குவதாகும். இறைவனையன்றி, மற்றொன்றும் இல. இறைவனே இவையெல்லாமாவன். அனைத்தும் இறைவனே, எல்லாம் ஒன்றே, இரண்டாவது இல்லை. முன்னர் இவையொன்றும் இறைவனல்லன் எனபேதங்கூறி, இப்பொழுது அபேதம் கூறுதல் முரணாகாதோவெனில், ஆகாது. அதனை விளக்குதும்.

இவ்விதம் அபேதம் கூறுவதெல்லாம், இவ்விரண்டினுக்கும் உள்ள பிரிக்கப்படாத அநந்நிய சம்பந்தத்தை நோக்கியே யன்றி, பொருள் ஒற்றுமையாலன்று. இவ்வநந்நிய சம்பந்தம் எவ்விதங்களால் ஏற்படுகிறதெனின் விரிக்குதும்.

1. உலகுயிரெல்லாம் இறைவனிடம் உதித்து, ஓங்கி, மறுபடியும் அவனிடம் ஒடுங்குகின்றது.

இவைகள், அவனன்றி, தனித்து உளவாமாதலாவது, தானாக, தோன்றி, வளர்ந்து, அழிதலென்பதாவது இல்லை. அவன் அசைவித்தாலன்றி, இவை யசையா, அறிவித்தாலன்றி உயிர் அறியா. அவன் சங்கற்பித்தால் தான், இவைகள் தோன்றிநின்று வெளிப்படும். இல்லையாயின் இதன் தோற்றமேயில்லாமல், சூன்யமாய்

நிற்கும். இறைவன், எல்லாவற்றிற்கும் முந்தியும், நடுவிலும் இறுதியாயுமுள்ளவன், ஆதிபுராதனன். முதல்முதலில் அவன் ஏகமாய் நின்றுள்ளான். அப்பொழுது வேறு ஒருபொருளும் இல்லை. இவையெல்லாம் தோன்றி நின்று அழிந்தபிற்பாடும், அரன் தனித்து நிற்பான். எல்லா உயிர்களும், பிறந்துழன்று, சன்மார்க்க நெறிநின்று குருவருளைப்பெற்று, வீட்டுப்பேற்றை யெய்துங்காலையும், அவை, சிவபெருமான் அடி நீழலையெய்துமே யன்றித் தனித்துநில்லாது. அக்காலையும் சிவமொன்றே வேறொன்றுமில்லையென உணர்ந்தார்கள் அநுபூதிச் செல்வர்கள்.

ஆகவே, இவைகளின் உண்மைக்கும், சிருஷ்டி, திதி, சம்மாரம்மாகிய பலவிதகாரியங்களுக்கும் சர்வகாரணனாயிருப்பவன் சங்கரன். இவ்வாணையன்றி, என்று நிலைக்காத, தோன்றாத, வளராத இயங்காத ஒருபொருளை உள்பொருள் என்றுவது, தனிப்பொருள் என்றுவது வேறு பொருள் என்றுவது எவ்விதம்கொள்வது? ஒன்றையன்றி இன்னொன்று நிலையாதபட்சம், இயங்காதபட்சம், அவைகளை ஒன்றெனக்கூறுவது மரபு.

2. இன்னமொரு விதத்தாலும் இவ்வொற்றுமை ஏற்படும். இறைவன் எல்லாவற்றிலும் அந்தர் யாமியாயும், சர்வ வியாபகமாயும் உள்ளான். கடவுள் ஒவ்வொருபொருளிலும் உயிரிலும் நிறைந்து நிற்கின்றார். நூலிற்பாவுபோல ஊடுருவி நிற்கின்றான். எல்லாவுடல்களிலும், எல்லா இந்திரியங்களிலும், எல்லா கரணங்களிலும், எல்லா உயிரிலும், உள்ளுக்குள்ளாய் நிற்கின்றான். அப்படி நில்லாவிடில் அவையொன்று மியங்காது. அப்படி நின்றும், அவையிற்றையெல்லாம் கடந்து நிற்கின்றான். அவன் சர்வவியாபி, பரிபூரணன் அவனில்லாவிடம் ஒன்றுமில்லை. அணுவுக்கு அணுவாய் மகத்துக்கு மகத்தாய் பாலில்நெய்போலும், விறகில் தீபோலும் கலந்துநின்று, எல்லாவற்றையும் தன்னுளடக்கி, எல்லாவற்றிற்கும் மேலாகி நிலவுகின்றான். அவன் அவ்விதமாய் ஒவ்வொரு அணுவிலும் அந்தர்யாமியாய் பரிபூரணனாய் நிற்பதும் அவன் சித்தாயும், மற்றவையெல்லாம் சடமாயுமுள்ளதால்முடிந்தது எனவேறுவிடங்களில் காட்டியுள்ளேம். இந்த நியாயத்தினாலும் இறைவனையன்றி வேறுபொருள்கள் இல்லையெனவும், உண்மைநிலை பெறும்.

3. மேலும், இவ்வுண்மை, எல்லாவற்றிற்கும் சூக்குமமாயும், அளவற்ற அகண்டமாயும்; எல்லாவற்றின் மூலமாயும், ரசமாயும், வித்தாயும், அணிக்கு அணியாயும், அழகுக்கு அழகாயும், அறிவுக்கறிவாயும் இறைவன் நிற்பதால் இவ்வுண்மைபோதரும். அவனுள் அடங்காததொன்றில்லை. எல்லா தத்துவங்களும் கரணங்களும்ஸ்தூலத்தினின்றும்சூக்குமமாகஒடுங்கிவருங்காலத்தில் இறைவன் இவைகளுக்கெல்லாம் சூக்குமமாகி இவைகளை அடக்கி நிற்பன். ஒவ்வொன்றின் மூலத்தை, வித்தை, விசாரித்துச் சென்றுழி, அது கண்ணுக்குப்புலப்படாது சூனியமாய் நிற்கும். அச்சூன்யத்தினாலும் சூன்யமாய் இறைவன் நிற்பன். ஒவ்வொன்றின் உள்ள ஒளியும், அழகும், பொலிவும் அறிவும், இறைவனுடையதே யாகும். இதை நீக்கின், அவைகள் தன் ஒளியும் அறிவுமின்றி ஒன்றுமில்லாமற்றோன்றும். எதற்கு எதனால் பொலிவுண்டாகின்றதோ, அதனைத்தான் பொருள் என்று கூறுதலும் மரபு.

4. மேலிந்த அபேத சம்பந்தம், உலகு உயிர்களும் இறைவனும், உடல் உயிர்போல் நிற்றலால் ஏற்படும். அறிவுள்ளதும், அறிவில்லாததுமாகிய சேதன அசேதனப் பிரபஞ்சம், இறைவனுக்கு உடல்போலாகும். அவன் உயிராவான். எவ்விதமாக உடலும் கரணங்களும், உயிர் இயக்கினவழி நிற்குமோ, அவ்விதம், இறைவன் இயக்கினவழியே உலகுயிர்களும் இயங்காநிற்கும். ஒருவன் கண்விழித்திருந்தும் அவன் அறிவு அதனோடு செல்லாவிடில், கண்காணாது. அதுபோலச் செவிகேளாது. மூக்குமுகராது. இறைவனும் ஒற்றித்து நிற்காவிடில், உலகின் பலவித இயக்கங்களும் நிகழா. உயிருக்கும் அறிவு இச்சை செயல்களும் நிகழா. இறைவனுக்கு இச்சை நிகழ்ந்துழியே, உலகம் தோற்றம் முதலிய நிலைகளை யடைந்தது. உயிர்கள் சகலத்திற்பட்டன. உயிரும் உடலும் வேறுபிரிக்கப்படாமல் ஒற்றித்து நிற்பினும், உயிர் உடலாகா உடல் உயிராகா, உயிரினின்றும் உடல்பிறவா, உடலினின்றும் உயிர்பிறவா. இவ்வுடலுயிருக்குள்ள சம்பந்தம், ஐக்கிய சம்பந்தமுமன்று, சமவாயசம்பந்தமுமன்று, சையோகம், குணகுணி, சொரூபம், அநிர்வசநிய சம்பந்தமுமன்று. * மற்றிதன் சம்பந்தம்

* திராவிடபாஷ்யம், மதுரைப்பதிப்பு 246, 247-ம் பக்கம் பார்க்க.



என்னையோவெனின், தாதான்மியம் (அது அதுவாதல்). தாதான்மியம் இருவகைப்படும். ஒருபொருளே அவயங்கள் அதனையுடைய அவயவி (தேகம்-தேகி-உடல் உயிர்) யாதல், அல்லது குணங்கள் அதனையுடைய குணியாதல் ஒருவகை தாதான்மியம். அதுபோல, இருபொருள் அதுவதுவாய் ஒற்றுமைப்பட்டு நிற்றல் இன்னொருவகையான தாதான்மியம் முன்னையதை தாதான்மியமென்றும், பின்னையதை அத்துவிதமென்றும் சொல்லப்படும். அத்துவிதம் என்ற சொல்லை அநந்நியம், (அந்யநாஸ்தி, வேறல்லாதது) என்று பொருள்படுத்தி, அது ஒன்றாகவும், இரண்டாகவும் ஒன்றிரண்டாகவும் (பேதம், அபேதம், பேதாபேதம்) ஒன்றல்லாதது, இரண்டல்லாதது, ஒன்றிரண்டல்லாதது என அதன் சூக்கும சம்பந்தத்தை விளக்கியுள்ளார்கள். இம்முறையில், தாதான்மிய சம்பந்தமாகிய உடல் உயிர் சம்பந்தம் அபேதத்துள் அடங்கும்.

மேல், இவ்வுடலுயிர் சம்பந்தம் உயிர் மெய் எழுத்து உதாரணத்தால் மிகவும் தெளிவுபெறும். பரமஞானிகளாகிய நம்முடைய ஆன்றோர் உடல் உயிருக்கும், உயிர்மெய்யெழுத்துகளுக்கு முள்ள ஒற்றுமையை நோக்கி அவ்வெழுத்துகளுக்கு அப்பெயரிட்டனர்.

"உடமேலுயிர்வந்து ஒன்றுவந்து இயல்பே" என்பது சூத்திரம். இவ்வுயிர் மெய் எழுத்து இயல்பு புணர்ச்சிக்கு ஒன்று என்ற பதத்தாலேயே அதன் சம்பந்தம் விளக்கியுள்ளார்கள். இதனை விரிக்குங்கால், உயிர் எழுத்தின் உதவியில்லாமல், எவ்விதமெய்யெழுத்தும் பிறக்கா, ஒலியா. 'க்' என்றதை ஒலிக்குங்கால், இக், என்றாவது 'க' என்றாவது ஒலிக்கவரும், இவ்விரண்டு விதத்திலும், இகரவுயிர் அல்லது அகரவுயிர் தொக்கி இயங்குகின்றது. அப்படி இயங்காவிடில், மெய் ஒலிபெறா "அகரவுயிரின்றேல் அக்கரங்கள் இன்றாம்" உயிரில்லாதகாலத்து மெய் இல்லை யெனவே சொல்லவரும். அப்பொழுது உயிர் ஒன்றே (இறைவன் ஒன்றே) என்று போதரும். ஆயினும், உயிர் மெய்யாகாது. உடலெழுத்து உயிராகாது. ஒன்றினின்றும் ஒன்று காரணகாரிய சம்பந்தத்தால் பிறவாது.*

* இதன்விரிவை "அத்வைதம், சைவசித்தாந்தத்தின்படி" என்ற எம் நூலின் காண்க.

இங்ஙனம், உயிர் எழுத்து ஒன்றே, இறைவன் ஒன்றே, வேறுபொருள் இல்லை யென்று சொல்லலாகும்.

இன்னொருவிதம், சீவனின் அது வது வாதற் றன்மையால், இறைவனுடன் ஒற்றித்து நிற்கும் காலை, தான் எனவேறாகக் காணப்படாமல், இறைவன் ஒருவனுகவே நிற்றலும் ஒன்று. அதாவது, ஆன்மா, சிவத்துடன் சார்ந்து நிற்கும்பொழுது தன்சொரூபம் கெட்டு, சிவத்தின்சொரூபமே மேலோங்கி நிற்கும்; சிவத்தோடு நிற்கும்போது, சீவன் அங்கு காணப்படாது.

"யான் எனல்காணேன் பூரணவொளியில்"

'அதுவதுவாதல்' என்பது, 'சார்ந்த தன்வண்ணமாதல்' என்றும், 'யாதொன்றுபற்றின் அதன் இயல்பாய் நிற்றல்' எனவும் விரியும்.* இதன் உள்பொருளைக்காட்ட பன்னிறம் கவரும் அல்லது ஒளிகவரும் பளிங்கின் உபமானம் எடுத்தோதப்படுகின்றது. பளிங்கு, கண்ணாடி இருளோடு சேர்ந்தகாலத்தில் இருளாகவும், ஒளியோடுசேர்ந்த காலத்து ஒளியாகக்காணப்படுமே யன்றி, கண்ணாடிகாணப்படாது. பன்னிறந்தீட்டிய ஒருபடத்தின் பின் கண்ணாடியை வைக்கும்போது படம் காணப்படுமே யன்றி, கண்ணாடி காணப்படாது. சூரியன் ஒளியின் முன் அக்கண்ணாடியை வைக்கினும், சூரியகிரணம் பிரதிபலித்து நம் கண்ணை மூடச்செய்யும், அப்பொழுதும் கண்ணாடியைப் பார்த்ததில்லை. இவ்விதமாயுள்ள பல நியாயங்களானன்றே, நம்மணிவாசகப் பிரானும் "அன்றியொன்றில்லை" என திருவாய்மலர்ந்தருளி யுள்ளார்.

**உபய வேதாந்த திருஷ்டாந்தம்.**

"உலகத்தின் காரணம் தான் என்னை? ஆகாசம், ஏனெனின் இவ்வெல்லா பூதங்களும், ஆகாசத்தினின்றும் தோன்றி அதில் ஒடுங்குகின்றது இவற்றினெல்லாம் ஆகாசம் முந்தியது, ஆகாசம் அதற்கு உறைவிடம்" (சாந்தோக்கியம் 1. 9-1)

(ஈண்டு 'ஆகாசம்' என்றது சின்மாத்திரமாயுள்ள கடவுளை)

"ஒவ்வொன்றினும் ஊடுருவி நிற்பது சாமமாகும் இதனை எவற்றினும் ஊடுருவி நிற்பதாக உணருவான் அவை எல்லாமாவன்."

* இதன் விரிவையும் 'அத்துவிதம்' என்னும் நூலில்பார்க்க.



"தான் எல்லாமென, எல்லாமென ஒருவன் (சாமத்தை) தியானம் செய்யவும்." (Do 2. 21. 1, 2, 84.

(ஈண்டு சாமவேதமாகிய சப்தபிரமம் ஹரசிவனுரைக்குறிக்கும். இந்த மந்திரம் அதுவதுவாதற் றன்மையையும் விளக்குவது).

"எல்லா இலைகளும் ஒரு தண்டில் ஒற்றிநிற்றல்போல், எல்லாவாக்கும், ஓங்காரத்தில் (சிவனில்) நிலைபெறும். ஓங்காரமே இவையெல்லாம்." ( )

4. "வானில்உள்ள ஆகாசம், நம்மை எங்கும் சுற்றியுள்ள து இதுவே, நம்முள்ளும், நம்முள்ளத்திலும் உள்ளது. நம்முள்ளத்தில் உள்ள ஆகாசம், எங்குமுள்ளதும், என்றும் மாறுததாயுமுள்ளது. இதையுணர்ந்தான் எங்குமுள்ள, என்றும் மாறுத ஆனந்தத்தையடைகிறான். (Do. 3. 12-9.)

(இந்த தகர ஆகாசம் தான் சிதம்பரநாதன்.)

5. "இது வெல்லாம் பிரமம். அதில் எல்லாம், உதித்து ஒடுங்கி உயிர்ப்பதாக ஒருவன் பிரம்மத்தைதியானிக்கக் கடவன். (Do 3. 14-1.)

6. ஹே, சௌமிய, ஆதியில், ஒன்றுயுள்ள ஒரு பிரமந்தானிருந்தது. இரண்டற்று இருந்தது. "ஏகமேவாத்விதீயம் பிரம்மா" (சாந்-4. 2. 1.)

7. "ஏகம் ஏவருத்ரோநத் விதீயாயதஸ்தே"

(யஜுர்வேதம்-சுவேதாசுவதரஉப)

8. எது அதிசூக்குமமாயுள்ளதோ, அதுவே யாவற்றிற்கும் மூலம், யாவற்றிற்கும் அதுவே ஆத்மா. அதுதான் சத்தியம் அதுதான் ஆத்மா. அது நீயாநின்றாய்." (சாந். 4. 8. 7.)

9. "அளவற்றதாயுள்ளது, கீழும், மேலும், முன்னிலும், பின்னிலும், இடத்திலும் வலத்திலும் உள்ளது. இவையெல்லாம் அதுவே." (Do. 5. 25. 1.)

10. 'எல்லாவுலகமுமானாய்நீயேயேகம்பமேவியிருந்தாய்நீயே'

(திருநாவுக்கரசு-திருவையாறு 7.)

11. "ஊராளையுலகேழாய் நின்றான்றன்னை
ஒற்றைவெண்பிறையான் றன்னையுமையோடென்றும்

பேரானைப்பிறர்க் கென்றுமரியான் றன்னை.

(Do-திருவால-5.)

12\. "நிறைந்தானை நீர்நிலந்தீவெளிகாற்றாகி
நிற்பனவும் நடப்பனவுமாயினானை."

(Do-திருநாகேச்சரம்-6.)

13\. "மாலாகிநான்முகனாய் மாபூதமாய்
மருக்கமாயருக்கமாய் மகிழ்வுமாகிப்
பாலாகி எண்டிசைக்குமெல்லையாகிப்
பரப்பாகிப் பரலோகந்தானேயாகிப்
பூலோக புவலோக சுவலோகமாய்ப்
பூதங்களாய்ப் புராணன்தானேயாகி
யேலாதனவெல்லாமேல்விப்பானா
யெழுஞ்சுடராய் நம்மடிகள் நின்றவாறே."

(Do. நின்ற திருத்தாண்டகம்)

14\. மண்ணாகிவிண்ணாகி மலையுமாகி
வயிரமுமா மாணிக்கந்தானேயாகிக்
கண்ணாகிக் கண்ணுக்கோர்மணியுமாகிக்
கலையாகிக் கலைஞானந்தானேயாகி
பெண்ணாகிப் பெண்ணுக்கோராணுமாகிப்
பிரளயத்துக் கப்பாலோரண்டமாகிப்
யெண்ணாகி யெண்ணுக்கோ ரெழுத்துமாகி
யெழுஞ்சுடராய் நம்மடிகள் நின்றவாறே. (Do)

15\. மனத்தகத்தான் வாக்கினுள்ளான்
வாயாரத்தன்னடியே பாடுந்தொண்டர்
இனத்தகத்தானிமையவர்தம் சிரத்தின்மேலா
னேழண்டத்தப்பாலானிப்பாற்செம்பொன்
புனத்தகத்தானறுங் கொன்றைப்போதினுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான்கயிலாயத்துச்சியுள்ளான்
காளத்தியானவன் என்கண்ணுள்ளானே.

(DO-திருக்காளத்தி 5.)

சிவமயம்.

# சைவசித்தாந்த மகாசமாஜத்தின்
## ஏழாவதுவருட
# அறிக்கைப்பத்திரம்-1912.

---

நிர்வாகசபையினர் :—

**போஷகர்.**

இராமநாதபுர மகாராஜா அவர்கள்.

**அக்கிராசனாதிபதி.**

ஸ்ரீமான், J. M. நல்லசுவாமி பிள்ளை அவர்கள் B., A. B.L.,

**உதவி அக்கிராசனாதிபதிகள்.**

ஸ்ரீமான், S. இரத்தினவேலு செட்டியார் அவர்கள், (சென்னை)
(Dubash, Messrs. Best & Co.)

,, நாதமுனி முதலியார் அவர்கள், (வேலூர்).

**காரியதரிசிகள்.**

,, S. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள் B.A., (சென்னை).

,, * P. இராஜவேலு முதலியாரவர்கள் B.A., (வேலூர்).

**பொக்கிஷதாரர்.**

,, I. ஆதிமூல முதலியார் அவர்கள், சென்னை.

**அத்தியட்சர்கள்.**

,, S. கணபதி பிள்ளை அவர்கள், திருவனந்தபுரம்.

,, S. பால்வண்ண முதலியார் அவர்கள், திருநெல்வேலி.

---

* ஏழாவதுவருட மகாஜனக்கூட்டம் வேலூரிற் கூடவேண்டுமென்று இவ்வருடத் தொடக்கமுதல் செப்டம்பர்மீ வரையில் எண்ணியிருந்தமை [illegible]

மறைத்திருவன் V. சிவஞான யோகிகள், விருதுபட்டி.

ஸ்ரீமான் ,, M. A. சந்திரசேகரம் பிள்ளை அவர்கள், திருச்சிராப்பள்ளி.

,, S. சிவகுருநாத செட்டியார் அவர்கள், கும்பகோணம்.

,, சித்தாந்தசரபம்-அஷ்டாவதானம், P. கலியாணசுந்தர முதலியார் அவர்கள், சென்னை.

,, C. ஏகாம்பர முதலியார் அவர்கள், சிகந்திராபாத்.

,, P. அப்பாவு செட்டியாரவர்கள், சென்னை.

,, T. V. கலியாணசுந்தர முதலியார் அவர்கள், சென்னை.

,, W. T. கோவிந்தராஜ முதலியார் அவர்கள், சென்னை.

,, ஹர. ஷண்முக முதலியார் அவர்கள், சேலம்.

,, T. முத்துசாமிக் கோனார் அவர்கள், திருச்செங்கோடு.

,, H. K. வீரபசவையா அவர்கள், B.A., B.L., பெங்களூர்.

பிரமஸ்ரீ, கலியாணசுந்தர பட்டர் அவர்கள், மதுரை.

ஸ்ரீமான், வேலுசுவாமி தேவர் அவர்கள், *இராமநாதபுரம்.

,, M. சுவாமிநாதம் பிள்ளை அவர்கள், நாகப்பட்டினம்.

,, M. R. N. இராமநாதம் செட்டியார் அவர்கள், தேவகோட்டை.

,, தியாகராஜ ஞானியார், அவர்கள், திருவாரூர்.

,, M. A. சோமசுந்தர முதலியார் அவர்கள், சென்னை.

,, ம. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள், சென்னை.

,, K. நாகலிங்க முதலியார் அவர்கள், சென்னை.

,, சுவாமி வேதாசலம் அவர்கள், பல்லாவரம்.

,, K. U. பொன்னுசாமி முதலியார் அவர்கள், உத்திரன்மேரூர்.

,, குருபசவப்ப குட்ளப்ப லய்பி சிமல்கி, ஷோலாபூர்.



சைவசித்தாந்த மஹாசமாஜத்தின் வரலாறு:—

சமயவளர்ச்சியின் பொருட்டுச் சைவசபைகள் இந்நாட்டில் வெவ்வேறிடங்களில் பலநாட்களாக இருந்தவரினும் இவைகளை ஒருங்குசேர்ந்து ஓரமைப்புக் குள்ளாக்கிப் பொதுநன்மைக்கான காரியங்களைச்செய்ய ஒரு பெருஞ்சபை வேண்டுமென்னும் எண்ணம் முதலில் சுவாமி வேதாசலம் அவர்களுக்கும் அவரது நண்பர்களிற் சிலர்க்கும் உதித்தது. இந்நோக்கத்தோடு இச்சமாஜம் தொடங்கப் பெற்று 1906-ம் வருடம் டிசம்பரீ ஸ்ரீசிதம்பரத்தில் கனம்பொருந்திய பொ. இராமநாதம் பிள்ளை K.C,C.M.G, (Retired Solicitor General of Ceylon) அவர்களது அக்கிராசனத்தின்கீழ் ஒரு மகாஜனக் கூட்டம் கூடிற்று. மூன்றுநாட்களாகச் சமயசம்பந்தமான பல உபந்நியாசங்கள் கலைப்புலமையும் சாத்திர உணர்ச்சியும வாய்ந்த விற்பனர்களாற் செய்யப்பட்டன. இரண்டாவது வருடாந்தக் கூட்டம் மதுரைத் தமிழ்ச் சங்கத்தாபகரும் பாலவநத்தம் ஜமீந்தாருமாகிய ஸ்ரீமான். P. பாண்டித்துரைசாமித்தேவரவர்கள் அக்கிராசனத்தின்கீழ் மீண்டும் சிதம்பரத்திலும், மூன்றாவது கூட்டம் ஸ்ரீமான். J. M. நல்லசுவாமி பிள்ளை, B.A., B.L., அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் நாகப்பட்டினத்திலும், நான்காவது கூட்டம் கனம்பொருந்திய ஸ்ரீமான். கொழும்பு. கனகசபைப் பிள்ளை B.A., அவர்கள் அக்கிராசனத்தின் கீழ்த் திருச்சிராப்பள்ளியிலும், ஐந்தாவது கூட்டம் இராமநாதபுர மஹாராஜா அவர்கள் ஆதரவினால் மைசூர் சீனியர் கவுன்சிலர் இராஜசபாபூஷணம்—திவான்பகதூர் K. P. புட்டண்ண செட்டியாரவர்கள் அக்கிராசனத்தின்கீழ் இராமநாதபுரத்திலும் நடைபெற்றன.

சமாஜத்தின் ஆயுசாமாகிகர்

இராமநாதபுர மகாராஜா அவர்கள்

கனம்பொருந்திய சென்னை உயர்தர நீதிஸ்தலநியாயாதிபதியாகிய திவான்பஹதூர் பிரமஸ்ரீ.சதாசிவ ஐயரவர்கள், சென்னை.

ஸ்ரீமந்-J. M. நல்லசுவாமி பிள்ளையவர்கள், B. A. B. L. சென்னை

,, P. விநாயக முதலியார் அவர்கள். (Retired Deputy Commissioner of Police) சென்னை.

,, C. S. சுந்தர முதலியார் அவர்கள் (Dy. Superintendent of Police, Penukonda.)

ஸ்ரீமத். T. சிங்காரமுதலியாரவர்கள், Asst. Revenue Officer, Corporation of Madras.

,, V. V. சண்முகமுதலியாரவர்கள், சென்னை.

,, A. V, பாஷியம்ரெட்டியார் அவர்கள், கூடலூர்.

,, P. கிருஷ்ணசுவாமி முதலியார் அவர்கள், சென்னை.

,, P. S. தெய்வசிகாமணிசெட்டியார் அவர்கள், சென்னை.

,, U. சண்முகம் அவர்கள், சென்னை.

,, M. T. K. முத்துசாமிசெட்டியார் அவர்கள், சீர்காழி.

,, V. வீரையநாயுடு அவர்கள், சென்னை.

அங்கத்தினர்.

இவ்வருடமுதலில் 454 அங்கத்தினர் இருந்தனர். இப்போதுள்ளோர் தொகை 966 ஆகவே 512 பேர் இவ்வருடம் புதிதாகச் சேர்ந்துள்ளார்கள். எனினும் இதனாலேயே திருப்தியடைந்து விடவேலாது. எத்தனையோ நூறுபிரஞ் சைவர்கள் வாழுமிந்நாட்டில், பல்வேறிடங்களிலுள்ளோர்க்குஞ் சமயவுணர்ச்சியை யூட்டவேண்டுமென்னும் பேரவாவுடன் முன்வந்து பாடுபடுமிவ்வொரே சபைக்கு ஒரு ஆயிரம் அங்கத்தினர் இருப்பதும் எவ்வாற்றானுஞ்சாலாது. இவர்களுள்ளும் பலர் அங்கத்தவராவதாகக் கையொப்பமிட்டுப்பத்திரிகையை வி. பி. மூலமாகவனுப்பிய காலத்துத் திருப்பியும், வேறெவ்விதத்தானும் தமது சந்தாவைச் செலுத்தாமலும் சமாஜத்தை நடத்துக்குட்படுத்தினர். ஒருசிலரோ வி.பி.யிலனுப்பப்பட்ட பத்திரிகைகள் தங்கைக்கெட்டாதிருப்பவும் அதைக் கவனியாது தமது சந்தாவைச்செலுத்தி விட்டனர். இவர்போன்ற வரன்றோ சிறிதாவது உண்மையாய்ச் சமயப்பற்றுடையோர்? இச்சமாஜம் கேட்பதும் பெருந்தொகை யல்ல. ஒவ்வொரு சைவசமயியும் ஒரு நாளைக்கு அரைக்காசு நமது சமயத்திற் கென்று கொடுத்து விடற்கு உள்ள மிசைந்து துணிந்து விடுவாராயின், அது போதுமே? "சித்தாந்தம்" வளர்பிறைச் சந்திரனென்ன வளரும்; இச்சமாஜம் தனது விழுமிய நோக்கங்களை மிக எளிதில் செய்துமுடிக்கும் சக்தியும் பெறும். இவ்வாற்றாற்சமய வளர்ச்சி செய்யும் சோதரர்களும் பதிபுண்ணியபலனைப் பெறுவர். இவ்வுண்மையை அன்பர்களியாவரு முய்த்துணர்ந் துதவி புரியத்திருவருள் சுரப்பதாக.



சைவசித்தாந்த மஹாசமாஜத்தின் ஆறுவதுவருட மகாஜனக் கூட்டம்;—

இச்சமாஜத்தின் ஆறுவதுவருட மகாஜனக்கூட்டம் 1912-ம் ஆண்டு டிசம்பர் மீ 27, 28, 29-ந் தேதிகளில் "விக்டோரியா பப்ளிக்ஹால்" என்னும் சென்னைப்பட்டின மகாமண்டபத்தில் கூடியது. அக்கிராசனராய் வீற்றிருக்க எதிர்பார்க்கப்பட்ட ஸ்ரீமத். T. பொன்னம்பலம் பிள்ளை M.R.A.S., (Retired Excise Commissioner, Travancore) அவர்கள், தமக்குத் திடீரென நேரிட்ட உடம்பின் நலிவால் சென்னைக்கு விஜயஞ்செய்ய முடியாதுபோயிற்று. ஆதலின் சபையார் விருப்பப்படி ஸ்ரீமத். J. M. நல்லசுவாமி பிள்ளை B.A., B.L., அவர்கள் அக்கிராசனம் வகித்தனர். பிறகு தமிழ்நாட்டின் பல பாகங்களினின்றும் விஜயஞ்செய்திருந்த அறிஞர்களால் முற்குறித்த மூன்று நாட்களிலும் இருபத்தாறு உபந்நியாஸங்கள் செய்யப்பட்டன. இவைகளுட் பல சைவ சித்தாந்த சாத்திரக் கொள்கைகளைச் செவ்வனே விரித்து விளக்கும் நோக்கமுடையனவா யிருந்தன. ஆயிரக்கணக்கான சனங்கள் கேட்டுக் களிப்படைந்தார்கள். இம்மகாஜனக் கூட்டத்தில் நடந்தவிடயங்களின் முழுவிவரத்தைச் "சித்தாந்தம்" என்னும்சமாஜ பத்திரிகையின் முதற்பகுதியிற் காணலாம்.

இவ்வருடத்தில் சமாஜத்தார்செய்த காரியங்கள் :—

நிர்வாகசபையின் கூட்டங்கள்—"சித்தாந்தம்" என்னும் பத்திரிகையை இவ்வருடம் நிர்வாகசபையார் தபால்வழியா யனுப்பியே அங்கத்தவரிடமிருந்து சந்தாக்கள் பெறவேண்டி யிருந்தமையாலும், அச் 'சித்தாந்தம்' அடியிற் காட்டப்பட்ட காரணங்களால் வெளியாதற்குக் காலமிகத் தாழ்த்தமையாலும், பொருளினிருப்பை நோக்கியே செய்யக்கூடியவை யிவையெனத் தீர்மானிக்கவேண்டி யிருந்ததாதலாலும் நிர்வாகசபையினர் வருடமுதலிற் பன்முறை கூட்டங்கூட அவசிய மேற்பட்டொழிந்தது. எனினும் இவ்வருடம் இவர்கள் 6 முறைகூடி சமாஜ சம்பந்தமான பல விடயங்களைக் கவனித்தார்கள். எல்லா அத்தியட்சர்களும் அக்கூட்டங்கட்கு வந்திருந்தார்களென்று சொல்ல வியலாது.

பிரசங்கங்கள்.

சமாஜத்தின் உபந்நியாஸகராயிருந்த ஸ்ரீமத். சுவாமி வேதாசலம் அவர்கள் தமிழகத்திலுள்ள பல விடங்கட்கும் சென்று 5- அரிய இனிய

பிரசங்கங்கள்செய்தனர் (விவரம் இப்புத்தகத்தின் இறுதியிலுள்ளது)
வேண்டியபொருளின்மையால் சுவாமிகளை மார்ச்சுமாதத்திற்குப்பிறகு
சமாஜ உபந்நியாஸராக வைத்துக்கொண்டிருக்க இயலாதுபோயிற்று.

கௌரவ உபந்நியாஸகர்கள்.

கடந்த டிசம்பர்மீ 29, 30-ந் தேதிகளில் மகாசபையார் கூட்டங்
கூடிச்செய்த தீர்மானங்களுள் சமாஜத்திற்குக் கௌரவ உபந்நியாஸ
கர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்பதொன்று. அதன்படி திருவாவ
டுதுறை யாதீன சைவப்பிரசாரகராகிய ஸ்ரீமந். பொ. முத்தையபிள்ளை
யவர்கள், மாதம் ஒன்றுக்கு இருபது ரூபாய்க்கு மேற்படாத பிரயா
ணச்செலவுபெற்று ஆங்காங்குச்சென்று உபந்நியாஸஞ்செய்ய வேண்
டப்பட்டனர். பிரயாணச் செலவு பெறுமலே கௌரவப் பிரசாரகர்
களாயிருந்து உதவுவதாக ஸ்ரீமந். T. S. தியாகராஜ ஞானியார் அவ
ர்களும் விருதை-மறைத்திருவன்-சிவஞானயோகி அவர்களும் ஒப்பு
க்கொண்டார்கள். இவர்களுள் ஸ்ரீமந். பொ. முத்தையபிள்ளை யவர்கள்
இதுவரையில் 52-உபந்நியாஸங்களும், ஸ்ரீமந். தியாகராஜ ஞானியா
ரவர்கள் 12-உபந்நியாஸங்களும் செய்திருக்கின்றனர். இவ்விருவரும்
முறையே, 60-பேரையும் 30-பேரையும் அங்கத்தினராகச் சேர்த்
தார்கள்.

சென்னையில் நடந்த பிரசங்கங்கள்.

சென்னையில் இதுகாறும் 5பெரிய உபந்நியாஸங்கள் செய்யப்பட்
டன; "சமரசம்", "நானும் கடவுளும்" என்னும் விஷயங்கள் ஸ்ரீமந்.
திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்களாலும் "சமயம் என்று
லென்ன" என்னும் விஷயம் ஸ்ரீமந். S. R. ஸ்ரீநிவாஸம்பிள்ளை யவர்களா
லும் "கடவுள் வழிபாடு" என்பது ஸ்ரீமந். இ. ஆதிமூல முதலியாரவர்
களாலும், "வீரசைவ சமயக்கொள்கைகள்" என்னும் விஷயம் பம்பாய்
இராஜதானியிலுள்ள கோலபுரியிலிருந்து சென்னைக்கு விஜயஞ்செ
ய்திருந்த ஸ்ரீமந். V. S. சிரேஷ்டி B.A., அவர்களாலும் உபந்நியஸிக்க
ப்பட்டன. முழுவிவரங்கள் பிற்சேர்ரீட்டத்தில் காட்டப்பட்டுள்ளன.

தெருப்பிரசங்கம்.

எல்லாப்பிறவிகளினும் மிக்கதாய மக்கட் பிறவியைப்பெற்ற மன்
னுயிர்கள் நுகரும் இன்பங்கள் பலவற்றுள்ளும் நிலைபேறுடையது



அன்புருவாய இறைவனுடன் இரண்டறக் கலந்து அநுபவிக்கும் பே
ரின்பமேயாம். அவ்வின்ப வாரிதியிற்றோய்ந்த ஆன்றோர் தாம்பெற்ற
இன்பத்தை இவ்வுலகமும் பெறுமாறு தம் அநுபவங்களையும் வழிகளை
யும் தோத்திரவாயிலாகவும் சாத்திரவாயிலாகவும் வெளிப்படுத்தினர்.
அந்நூற்களைப் பயின்று அழியா இன்பத்தை அடைய அவையிற்றிற்
கூறப்படும் நன்னெறிகளைக் கடைப்பிடித்து ஒழுகுவோரும், பிறரை
ஒழுகுவிக்க முயல்வோரும் பிறரையும்அந்நெறியில் நிறுத்துமாறு முய
ல்வதே அவரது இன்றியமையாத கடமையாம். அதை விடுத்துத் தற்
சிந்தை யுடையராய் வாழ்வோரும், தம்போன்றார்க்கே பன் முறையும்
தாங்கற்றதைச் சொல்லிக்களிப்போரும் கற்றதனாலாய பயனைப் பெற்
றும் பெறுதார் ஆவர்; நோயுடையாரை வருந்தவிடுத்து நோயில்லார்க்
குமருந்தளிக்கும் வயித்தியன் கதைக்கு இலக்கியமும் ஆவர்.

நெடுங்காலமாகப் புறச்சமயத்தவர்கள் தாங்கள்பெறும் ஓரின்
பத்தைப் பிறரும் நுகரவேண்டும் என்னும் பெருங்கருணையோடு
ஆயிரக்கணக்கான போதகாசிரியர்களை உலக முழுவதும் அனுப்பித்
தங்கள் சமய உண்மைகளை உபந்நியசிக்கச் செய்து வருகின்றார்கள்.
அதனாலன்றோ அச்சமயங்கள் நாளுக்கு நாள் அபிவிருத்தி யடையா
நிற்கின்றன. எல்லாச் சமயங்களையும் தன்னுளடக்கி அவைகளைச்
சோபானமாகக் கொண்டிலங்கும் சைவ சித்தாந்தமானது எத்துணை
அபிவிருத்தியடைந்துளது? சைவமென்றால் இன்னதென்று ஆயிரத்
தில் இருவருக்குந் தெரியாமல் அருகுவதேயாம். கிறிஸ்து நாதரின்
சீடர்களது நாமங்கள் நமது சிறுமியர்களுக்குந் தெரியும். மெய்கண்
டதேவர் இன்னாரெனக் கிழவர்கட்கே தெரியாது. இதுவே நமதுசம
யத்தின் அபிவிருத்தி. எத்தகைய அரிய பெரிய உண்மைகளெல்லாம்
அதில்செறியப்பெற்றிருந்தும் பயன் என்னை? அவைகள்யாவும் மைக்
குள்பதிந்தமணிகள் போன்றனவைகளா யிருக்கின்றன. "நான்பெற்ற
இன்பம் பெறுக இவ்வையகம்", "தனக்கெனவாழாப்பிறர்க்குரியா
ளன", 'கிழமைப்படவாழ்' என்னும் அருமை வாக்கியங்கள் நம்மவர்
கள் கண்களுக்குப் புலப்படாது ஒழிகின்றனவோ? எல்லாச்சாதியார்க
ளிடத்தும் சித்தாந்த உணர்ச்சி உலவுவதே நமதுசமயம் செழித்தோங்
குவதற்கு ஓர் நற்குறியாம். அது விரைவில் விளையுமாறு இறைவன்
திருவருள்புரிக. இச்சமாஜத்தார் சென்னையில் தெருக்கள் தோறுஞ்
சென்று ஆண்டாண்டுள்ள விநாயகர் ஆலயங்களினும், பிற இந்து ஆல

யங்களினும் நின்று ஏழைகளுக்கும், கீழ்ச்சாதியார்களுக்கும் நமது சமயத்தின் சமரச உண்மையை மிக எளிய நடையில் உபந்நியசித்து வந்தனர். அவ்வுபந்நியாசங்களைச் செவிமடுத்த ஏழை ஜனங்கள் அடைந்த ஆனந்தத்தை என்னென்று எழுதுகிறது, "அந்தோ நமது சமயத்தில் இத்தகைய உண்மைகள் இருக்கின்றனவோ? எல்லாச் சமயங்களுக்கும் இது இடங்கொடுத்திருக்கின்றதே. இதனையறியாது நம்மவர்களில் பலர் புறச்சமயம் புகுந்தனரே" எனப்பலவாறுபேசியும் உபந்நியாசகர்களை அன்போடுபசரித்தும் களிக்கடலாடினார்கள். உபந்நியாசகர்களும் "நாம் வித்துவ சபைகளில் உபந்நியசிக்குங் காலத்தும் நமக்கு இத்தகைய ஆனந்தம் விளைவதில்லையே" எனக் கழிபேருவகையுற்றனர்.

இவ்வுத்தம பதிபுண்ணியத் திருத்தொண்டை மிக ஊக்கத்தோடு செய்து வந்தவர்கள் இச்சமாஜத்தின் நிர்வாகசபையினருளொருவராகிய ஸ்ரீமத். திரு. வி. கலியாணசுந்தரமுதலியார் அவர்களும் காரியதரிசியாராகிய ஸ்ரீமத். ச. சச்சிதாநந்தப்பிள்ளை B. A. அவர்களுமாம். இவர்களுடன் சிற்சில சமயங்களிற் சென்று தமிழ் வேதபாராயணஞ் செய்து நற்பயன் விளைத்தவர் சென்னை முத்தியாலுபேட்டை ஸ்ரீ உமாமகேஸ்வரபக்த ஜனசபையின் உப அக்கிராசனராகிய ஸ்ரீமத், மா. தங்கவேலுபிள்ளையவர்கள். மற்றும் சில உதவிகள் புரிந்தோர் இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையினராவர். இவருடன் கலந்துழைப்பவர்ப் பெருமையா லித்தொண்டு சில மாதங்களாக நடைபெறுது நின்றுளது. (இப்பிரசங்கங்களின் விவரத்தைப்புத்தகத்தினிறுதியிற் காண்க). இத்தகைய பிரசங்கங்கள் நாடெங்கணும் நடைபெறுமாயின் உண்மைச் சைவசமயம் விரைவிற்பரவியொளிரும்.

சித்தாந்தம்.

1912௵ டிசம்பர்௴ 30௳ இச்சமாஜத்தின் நிருவாக சபையினரால் தீர்மானிக்கப் பட்டபடி "சித்தாந்தம்" என்னும் ஒரு மாதாந்த தமிழ்ப் பத்திரிகை வெளிவருகிறது. அதனை வெளிப்படுத்தற்கு அரசாங்கத்தார் ஆணைகழிந்த ஏப்ரல்௴ 30௳ பிறந்தது; மே ௴ 19௳ ஜெனரல் போஸ்டாபிஸில் சமாசாரபத்திரிகையைப்போல முத்திரிகரிக்கப்பட்டது. அதனால் ஜனவரி ௴ வெளிவர வேண்டியமுதல் பகுதி மே௴ வெளிவரலாயிற்று. பின்னர் கூடியவரையில் ஒழுங்காக நடை



பெற்று வருகின்றது. இப்பத்திரிகையைக் கைம்மாறு கருதாக்கருணையோடு பத்திராசிரியராக இருந்து நடாத்திவந்தவர் சித்தாந்த சரபம் அஷ்டாவதானம் பூவை கலியாணசுந்தரமுதலியார் அவர்கள். அங்கத்தவர்களின் பற்றும், ஊக்கமும், பொருள் வருவாயும் பெருகுமேல் "சித்தாந்தம்" இனிக் குறைபாடுகளின்றி எல்லாச் சிறப்புகளோடும் வெளிவந்துலவுமென்பதற் கெட்டுணையு மைய மின்று.

சமாஜபிரசுரங்கள்.

சென்றவருடம் 7துண்டுப்பத்திரிகைகள் பிரசுரிக்கப்பட்டு இலவசமாய் அளிக்கப்பட்டன. இவ்வாண்டு "கடவுளின் சொரூபம்" 'காரைக்காலம்மையார் சரித்திரம்,' 'உயிரின் தன்மை,' 'சதுர்த்தம்' "Nature of the Jiva" (English) என்னும் 5பத்திரிகைகள் வெளியிடப்பட்டன. கற்றோர்க்கு மாத்திரமன்றி மற்றோர்க்கும் நல்லொழுக்கத்திற்கு வேண்டிய சமய உண்மைகளைத் தெரிவிக்க வேண்டுமென்னும் பெரு நோக்கமுடைய விவேகிகள் துண்டுப்பத்திரிகைகட்காக இனிய எளிய செந்தமிழ் நடையில் விஷயதானஞ் செய்வரேல் அதை நன்றியறிதலோடேற்றுக் கூடியவரையில் எங்கும் பரப்பச் சமாஜத்தார் ஆவலுடையோராயுள்ளார்.

கிளைச்சபைகள்.

இம்மகா சமாஜத்தின் சார்வாக மூன்று கிளைச்சபைகள் இவ்வருடந்தோன்றி நின்றுலவுகின்றன. அவைகளிருக்கு மிடங்கள் வேலூர் செங்கற்பட்டு, திருக்கோவலூர். இன்னும் பல சபைகள் இச்சமாஜத்தோடு நெருக்கமான தொடர்பு பூண்டு ஒத்துழைக்க முன்வருமென் றெதிர்பார்க்கின்றோம்.

புத்தகசாலை.

இச்சமாஜத்தின் புத்தகசாலையானது சென்னை, சிவனடியார் திருக்கூட்ட மண்டபத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டுவருகின்றது மெய்யன்பினும் மெய்ப்புலமையினும் மேம்பட்ட ஸ்ரீமத். பாண்டித்துரைசாமித்தேவர்கள் சென்றவருடங் கருணையோடனுப்பிய மதுரைத்தமிழ்ச்சங்க பிரசுரங்களாகிய இருபத்தொன்பது புத்தகங்களும் மற்றிரண்டொரு அன்பர்கள் உதவிய சில நூல்களுந் தவிர, இவ்வாண்டில் நூல்களாற் புத்தகசாலை பெருகவில்லை. இக்குறையை நிறை

வுசெய்யுமாறு நூலாசிரியர்களும், அச்சில்வாராது பட்டொழியும் கிரந்தங்களையுடையோரும் வேண்டிக்கொள்ளப்படுகின்றனர்.

வரவுசெலவு கணக்கு. (15-12-1912 வரையில்)*

| | | | |
|---|---|---|---|
| வருடாரம்பத்தில் இருப்பு | 36 | 11 | 7 |
| சாமாஜிகர் வருடாந்த சந்தா | 554 | 4 | 0 |
| ஆயுள் சாமாஜிகர் சந்தா | 100 | 0 | 0 |
| ஆகமொத்தம் வரவு | 690 | 15 | 7 |

செலவு.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 'சித்தாந்தம்' வெளியிடும்விஷயமாக காகிதம் | 110 | 7 | 3 | | | |
| அச்சுக்கூலி | 141 | 10 | 6 | | | |
| தபால்செலவு | 139 | 1 | 6 | | | |
| இதரசெலவு | 33 | 8 | 0 | | | |
| மொத்தம் | | | | 424 | 11 | 3 |
| சிப்பந்தி | | | | 49 | 0 | 0 |
| வேதாசலசுவாமி அவர்கள் | | | | 65 | 0 | 0 |
| துண்டுபத்திரிகைகள் விளம்பரமுதலியனவை | | | | 18 | 14 | 0 |
| கடிதங்கள், தபால், தந்தி | | | | 18 | 2 | 9 |
| இதரசெலவு | | | | 29 | 1 | 6 |
| ஆகமொத்த செலவு | | | | 604 | 13 | 6 |
| இருப்பு | | | | 86 | 2 | 1 |

நன்றி கூறல்.

இச்சமாஜத்தின் வளர்ச்சியையே விழைந்து கைம்மாறு கருதாது பலவிடங்கட்குச் சென்று பிரசங்க மழை பொழிந்து வந்த இரண்டு கௌரவப் பிரசாரகர்கட்கும், சித்தாந்தப் பத்திரிகையின் குழந்தை

* இவ்வருடக் கணக்கு முற்றிலும் 'சித்தாந்தப்' பிரசுரத்தில் பின்னால் வெளிவரும்.



ப்பருவத்தில் நிகழ்ந்த பலமுட்டுப்பாடுகளால் மனத்தளர்வுறுதலின்றி இதுகாறும் அதனை நடாத்திவந்த பத்திராசிரியரவர்கட்கும், வீதிப்பிரசங்கஞ்செய்துவந்த ஆண்டில் இளைஞராய அன்பர்கட்கும், அவர்க்குதவிபுரிந்தோர்க்கும் இச்சமாஜத்தார் அகமிகமகிழ்ச்சியுடன் நன்றி செலுத்துகின்றார்கள்.

இம்மகா சமாஜத்தின் ஏழாவது வருடக்கூட்டத்தை இவ்வாண்டு காஞ்சியிற்கூட்டவேண்டுமென்றுவெகு சிலநாட்களுக்குமுன்பே கேட்டுக்கொள்ளவேண்டி நேர்ந்தும், யாதொரு தடையுங்கூறாது ஒத்துக்கொண்டு நம்மியாவரையு மிப்புண்ணியக்ஷேத்திரத்திலொருங்கு சேர்த்துபசரித்த அன்பர்களாகிய ஸ்ரீமத். க. சுப்பராயமுதலியார் அவர்கள், ஸ்ரீமத். கே. பொன்னுசாமி முதலியார் அவர்கள், ஸ்ரீமத். பி. செ. முருகேச முதலியார் அவர்கள், அவருடனிருந்துழைத்தோர் ஆகிய இவர்களது சமயப்பற்றை வியந்து இறைவன் றிருவருளவர்மாட்டுச் சிறந்து நிற்பதாகவெனப் பிரார்த்தித்து அன்னோர்க்கு நன்றி செலுத்துவதே இச்சமாஜத்தார் செய்யக்கூடியதாம். சுபம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# சேர்ப்புகள்

சமாஜ உபந்நியாஸகராயிருந்த ஸ்ரீமத். சுவாமி வேதாசலம் அவர்கள் செய்த உபந்நியாஸங்கள்.

| 1912-ம் வருஷம் மாதம் | தேதி | விஷயம். | இடம். |
|---|---|---|---|
| ஜனவரி | 21 | திருஞானசம்பந்த சுவாமிகளின் திருச்சரித வாராய்ச்சி | 'திருநாவுக்கரசுசுவாமிகள் மடம்' வேலூர். |
| ” | 25 | சமரசசன்மார்க்கம் | "வேலூர் சைவசித்தாந்த சபை" |
| ” | 28 | புலாலுண்ணாமை | ” |
| பிப்ரவரி | 2 | சமரசசன்மார்க்கம் | 'சமரசசன்மார்க்கசபை' வடலூர். |
| ” | 5 | உயிர்களிடத்தன்பு | மஞ்சகுப்பம். |

* சுவாமிகள் தஞ்சையில் செய்த உபந்யாஸ விவரம் கைக்கெட்டாமையால் அவ்விடயம் இங்கு விவரிக்கப்படாதொழிந்தது.

சைவசித்தாந்த மகாஸமாஜ கௌரவ உபந்யாஸகர்களுள் ஒருவரான திருவாரூர். ஸ்ரீமந். T. S. தியாகராஜ ஞானியார் அவர்கள்செய்த பிரஸங்கங்கள்.

| 1912 வருஷம் மாதம் | தேதி | விஷயம். | இடம். |
|---|---|---|---|
| பிப்ரவரி | 18 | இராஜபக்தியும், தெய்வபக்தியும் | நாகை மாணவர் சங்கம். |
| மார்ச்சு | 8 | கடவுள் | பூவாளூர். சைவசித்தாந்தசங்கம். |
| ” | 9 | திருமுறைப்பிரபாவம் | ” |
| மே | 29 | சமயக்கல்வி | தில்லைவிளாகம் சிவானுபூதி நிலையம். |
| ” | 31 | நம்மவர்களின்கடமை | அரித்துவாரமங்கலம் விவசாயசங்கம் |
| ஜூன் | 9 | பக்தி | திருநள்ளாறு. |
| ” | 15 | ஆலயவழிபாடு | திருச்செங்கோடு சைவசமாஜம், |
| ” | 19 | அன்பு | பூவாளூர் சைவசித்தாந்த சங்கம். |
| ஆகஸ்ட் | 4 | ஒழுக்கம் | நாகை கல்விச்சங்கம். |
| ” | 11 | தந்தைதாய்ப்பேண் | ” |
| ” | 18 | காரைக்காலம்மைசரித்திரம் | நாகை பத்திமார்க்கசபை. |
| செப்டம் | 16 | மெய்ப்பொருள் நாயனார் பிரபாவம் | திருத்துரைப்பூண்டி சைவ சித்தாந்த சபை. |



திருவாவடுதுறை ஆதீன சைவப்பிரசாரகரும், சைவசித்தாந்த மகாசமாஜத்தின் கௌரவ உபந்யாஸகருமான ஸ்ரீமந். பொ. முத்தையபிள்ளை அவர்கள் செய்த உபந்நியாஸ விவரம்.

| வருஷம் மாதம் | தேதி | விஷயம். | இடம். |
|---|---|---|---|
| ஜனவரி | 5 | முத்திநெறி | நாகைத் தமிழ்ச்சங்கம் நாகப்பட்டணம். |
| ” | 6 | அறம் | ” |
| ” | 7 | குருவழிபாடு | ” |
| ” | 15 | திருக்குறள் | தூத்துக்குடி. |
| ” | 25 | சைவம் | திருக்கோவலூர். |
| ” | 26 | ஆலயவழிபாடு | ” |
| ” | 30 | சைவசித்தாந்தம் | மன்னார்குடி. |
| பிப்ரவரி | 4 | சைவசித்தாந்தம் | திருத்துரைப்பூண்டி. |
| ” | 5 | சிவபுண்ணியம் | ” |
| ” | 16 | பக்தி | மதுரை. |
| ” | 18 | திருக்குறள் | ” |
| ” | 19 | சிவதீக்ஷை | ” |
| ” | 24 | ஆலயதத்வார்த்தம் | திருநெல்வேலி. |
| ” | 25 | தர்மம் | ” |
| மார்ச்சு | 4 | திருக்குறள் முதற்பாட்டின் உண்மை | சைவசித்தாந்த ரீடிங்ரூம், தூத்துக்குடி. |
| ” | 9 | வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை | சைவசித்தாந்தசங்கம், பூவாளூர். |
| ” | 10 | ஆன்ம இலக்கணம் | ” |
| ” | 14 | அன்பு | ஸ்ரீரங்கம் ஹைஸ்கூல். |
| ” | 16 | கல்வி | சிவஞானப்பிரகாச மடம் ஆலங்காடு. |
| ” | 17 | கடவுள் இலக்கணம் | சைவசித்தாந்த சபை, திருத்துரைப்பூண்டி. |
| ” | 18 | ஆலயவழிபாடு | ” |
| ” | 20 | சிவஞானபோதம் | திருவாரூர் ரீடிங்ரூம், திருவாரூர். |
| ” | 21 | சமயக்கல்வியின் அவசியம் | சிவஞானபோத முத்தமிழ் வித்தியாசாலை, திருவாரூர். |
| ” | 22 | சிவதரிசனம் | தேவாசிரிய மண்டபம்திருவாரூர். |
| ஏப்பிரல் | 3 | தெய்வ உபாசனை | சன்மார்க்கசபை, மேலைச்சிவப்பட்டி |
| ” | 29 | அறஞ்செய விரும்பு | ஸ்ரீ ஞானசித்திவிநாயகர் ஆலயம் மண்ணுக்குண்டான், திருத்துரைப்பூண்டி. |

ஸ்ரீமான். பொ. முத்தையபிள்ளை அவர்கள் உபந்நியாசம் முன்தொடர்பு.

| வருஷம் மாதம் | தேதி | விஷயம். | இடம். |
|---|---|---|---|
| மே | 5 | சமயக்கல்வியின் அவசியம் | மாணவர் ரீடிங்ரூம், தூத்துக்குடி |
| ,, | 23 | குருபக்தி | மதுரை, காலேஜ். |
| ,, | 25 | ஆன்மபோதம் | மதுரைத் தமிழ்ச்சங்கம் மதுரை. |
| மே | 27 | சைவசமயம் | பிரமஞானமந்திரம், மதுரை. |
| ,, | 30 | திருக்குறள் பெருமை | மாணவர், தமிழ்ச்சங்கம் அரித்து |
| ,, | 31 | சிவானுபூதியும் ஈசுவரஉபாசனையும் | ,, [வாரமங்கலம். |
| ஜுன் | 2 | மணிமந்திர ஔடதம் | சைவசித்தாந்தசபை, வேளாங்க |
| ,, | 3 | பஞ்சகிர்த்தியம் | ,, [ண்ணி. |
| ,, | 6 | சிவானுபூதி | சட்டையப்ப பிள்ளை பங்களா நாகப்பட்டணம். |
| ,, | 22 | சித்தாந்தம் | திருநெல்வேலி. |
| ஜுலை | 20 | மனிதர் கடமை | திருவலிவலம் பிரம்மஜன சபை திருநெல்வேலி. |
| ,, | 22 | கடவுள் | மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை |
| ,, | 28 | மோனமென்பது ஞானவரம்பு | [திருநெல்வேலி. |
| செப்டம் | 22 | வேதாந்தசித்தாந்த சமரசம் | பிரமஞானசபை, தூத்துக்குடி. |
| அக்டோ | 31 | கடவுள் | நெல்லையப்பர்கோயில் திருநெல் |
| நவம்பர் | 1 | ஆன்மா | ,, [வேலி. |
| ,, | 2 | ஆலயதத்துவார்த்தம் | அம்பாசமுத்திரம் ரீடிங்ரூம். |
| ,, | 3 | விக்ரஹாராதனம் | சைவசித்தாந்தசபைவீரவநல்லூர் |
| ,, | 4 | அன்பு | திருநெல்வேலி. |
| ,, | 8 | மெய்கண்டதேவர் சரித்திரம் | சிவநேசச்செல்வர்சபை தூத்துக்குடி. |
| ,, | 9 | பக்தி | சைவசித்தாந்த ரீடிங்ரூம் தூத்துக்குடி. |
| ,, | 14 | மூர்த்தி, தலம், தீர்த்தம் | மயூரம்பெரியகோயில் மண்டபம். |
| ,, | 15 | சற்குருமகிமை | மயூரம். |
| ,, | 16 | ஈசுவர உபாசனை | மயூரம். நாகைசோ. மா. சத்திரம். |
| ,, | 17 | தமிழ்க்கல்வி | புனுகீஸ்வரர் கோயில், மயூரம் கூறைநாடு. |
| ,, | 18 | தருமம் | முருகர்மடம் மயூரம். |



சமாஜசம்பந்தமாகப் பிறரால் செய்யப்பட்ட உபந்நியாஸங்களின் விவரம்.

| எண். | பிரசங்க தேதி. | பிரசங்கவிடம். | பிரசங்க விஷயம். | உபந்நியாஸகர். |
|---|---|---|---|---|
| 1. | 19-1-12 | மாஞம்பதி | சைவம் | ஸ்ரீமான். K. U. பொன்னுசுவாமி முதலியார் அவர்கள் |
| 2. | 3-2-12 | சைவசமயாபிவிருத்திசபை செங்கற்பட்டு | அத்வைதம் | ஸ்ரீமான் .ச. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள் B.A., ஸ்ரீமான். திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள். |
| 3. | 8-3.12 | சைவசித்தாந்தசபை உத்திரன்மேரூர் | ஆலயவழிபாடு | ஸ்ரீமான். K. U. பொன்னுசுவாமி முதலியார் அவர்கள். |
| 4. | 23-3-12 | திருத்தணி | சித்தாந்தம் | ,, |
| 5. | 13-4-12 | திருக்கோவலூர். ஸ்ரீமத். ஞானியார் மடாலயம். | சைவசித்தாந்த மகாசமாஜம் | ஸ்ரீமத். சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், திருக்கோவலூராதீனம். |
| 6. | 9-5-12 | வண்ணார்குளம் | மனிதப்பிறவியின்பயன் | ஸ்ரீமான். ச. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள் B.A., |
| 7. | 10-5-12 | தாங்கல் | அப்பர் சரித்திரம் | ஸ்ரீமான். ச. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள் B.A., |
| 8. | 11-5-12 | சந்தவாசல் | பக்தி | ,, |
| 9. | 19-5-12 | செங்கல்வராயநாயகர் தோட்டம் சூளை | சமரசம் | ஸ்ரீமான். திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள். ஸ்ரீமான். J. M. நல்லசுவாமிபிள்ளை அவர்கள் B.A., B.L., |
| 10. | 3-8-12 | A. G. M. ஸ்கூல். சூளை. | நானுங்கடவுளும் | ஸ்ரீமான். திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள். |
| 11. | 25-11-12 | ,, | வீரசைவ சமயக்கொள்கைகள் | ஸ்ரீமான். V. S. சிரேஷ்டி அவர்கள் B.A., (பம்பாய் இராஜதானியிலுள்ள கோலபுரியினின்றும் வந்தவர்). |

N. B.—ஜனவரிமாதத்தில் மாஞம்பதி என்னும் கிராமத்தில் ஸ்ரீமான். K. U. பொன்னுசுவாமி முதலியார் அவர்களால் வேறு இரண்டு உபந்நியாசங்களும் செய்யப்பட்டன.

வீதிப்பிரசங்கங்கள்.

பிப்ரவரி௴ 2௨ ஸ்ரீமான். S. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள் B. A. தேனும்பேட்டை

பிப்ரவரி௴ 3௨, ஸ்ரீமான் T. V. கலியாணசுந்தரமுதலியார் அவர்களும் ஸ்ரீமான் S. சச்சிதாநந்தம் பிள்ளை B. A. அவர்களும் நுங்கம்பாக்கம்.

பிப்ரவரி 24௨ ஸ்ரீமான் M. தங்கவேலுபிள்ளை அவர்கள், திருப்போரூர்.

மார்ச்சு௴ 2௨ ஸ்ரீமான். S. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள் B. A. திருவொற்றியூர் (மகிழடிசேர்வையில்).

மார்ச்சு௴ 3௨ ஸ்ரீமான் S. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள் B. A. சென்னை கடற்கரையோரம் (மாசிமகம் திருவிழாவில்)

மார்ச்சு௴ 9௨ ஸ்ரீமான் S. சச்சிதாநந்தம்பிள்ளை B. A. அவர்களும் ஸ்ரீமாந் J. N. இராமநாதம் பிள்ளை அவர்களும் கூலி. (பக்கிங்ஹாம், கர்னடிக் பஞ்சுயந்திர சாலைகளில் வேலை செய்யும் கூலியாட்களுக்கு.

மார்ச்சு௴ 23௨ ஸ்ரீமான். S. சச்சிதாநந்தம்பிள்ளை அவர்கள் B. A. திருவல்லிக்கேணி. (செங்குந்தர்கோட்டம்).

ஜுன்௴ 2தேதி ஸ்ரீமான், ஸ்ரீநிவாசப்பிள்ளை அவர்களும். ஸ்ரீமான். J. N. இராமநாதம் பிள்ளை அவர்களும். "சைவம்." தேனும்பேட்டை.

ஜுன்௴ 9தேதி ஸ்ரீமான். திரு. வி. கலியாணசுந்தரமுதலியார் அவர்கள். வரசித்தி விநாயகர்கோவில், மீர்சாய்ப்பேட்டை.

ஜுன்௴ 9தேதி ஸ்ரீமான். S. சச்சிதாநந்தம்பிள்ளை அவர்கள் B. A., "மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன்" வரசித்தி விநாயகர்கோவில், மீர்சாய்ப்பேட்டை.

ஜுன்௴ 29௨ ஸ்ரீமான். S. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள் B. A., அம்மன் கோயில், கிருஷ்ணாம்பேட்டை.

டிசம்பர் 16௨ ஸ்ரீமாந். திரு. வி. உலகநாதமுதலியார் அவர்கள் திருநீலகண்டபுரம், சென்னை

---

பக்கம் 3, வரி-9 பிழை, இராமநாதம்பிள்ளை, திருத்தம், இராமநாத முதலியார்.
" 7, " 6-7 " பிறரை ஒழுகுவிக்க " ஒழுக.

சிவமயம்.

# வேதாந்த சித்தாந்த சமரசம்.

"வேதாந்தஞ் சித்தாந்தம் வேறென்னார் கண்களிக்கும்
நாதாந்த மோன நலமே பராபரமே."

1. ஒரே சிவசின்னங்களைத் தரித்துக் கொண்டு ஒரேவித ஆலயத்தில் வழிபடும் சைவர்களும் இருவேறு வகுப்பினராய்க் காணப்படுகிறார்கள். அவ்வகுப்புக்களாவன, வேதாந்தவகுப்பு சித்தாந்தவகுப்பு என்பனவாம். இவருள், வேதாந்த வகுப்பினரிற் சிலர், சித்தாந்தம் அவைகாரிகளுக்கே உரியதென்றுங்கூறி, அதனைத் தாழ்த்துகிறார்கள். சித்தாந்தவகுப்பினரிற் சிலர், வசனமாத்திரமாயுள்ளவர்களுடைய வேதாந்தமெனப்படுமென்றும், அது கேவலம் பூர்வபக்ஷமென்றுங்கூறி, அதனைத் தாழ்த்துகிறார்கள். இவ்வாறு ஒருவரையொருவர் தாழ்த்திக்கூறுவதோடு மொழியாது, இவர்கள் வாதம், சில காலத்தில் இவர்களுக்குட் பெரும்போரை விளைப்பதாயும் நேர்கிறது. இவ்விருதிறத்தாரும், உண்மை வேதாந்த மின்னது, உண்மைச் சித்தாந்த மின்னது என்பதை யுணராமையே யிவர்கள் வாதத்திற்குக் காரணமாகின்றது. போலி வேதாந்தத்தை உண்மை வேதாந்தமென்றும், அது சித்தாந்தத்தோடு முரணுமென்றும் எண்ணுதலினாலேயும், அப்படியே போலிச் சித்தாந்தத்தை உண்மைச் சித்தாந்தமென்றும், அது வேதாந்தத்தோடு முரணுமென்றும், எண்ணுதலினாலேயும் இவ்வாதம் விளைகின்றது. இவ்விதம் வாதிக்கின்றவர்கள் உண்மைச் சித்தாந்தத்தையுந் தெரிந்துகொள்வரேல், இவ்வாதத்திற்கிடமில்லை. என்பவே உண்மை வேதாந்தம் எது, உண்மைச்சித்தாந்தம் யாதுள்ளதெனத் தெரியவேண்டுவது மிக அவசியமே. இவற்றுள் உண்மை வேதாந்தத்தினை முதற்கண் ஆராய்ச்சி செய்வாம்.

2. உபநிடதங்களை வேதாந்தமென்பதை எல்லா வகுப்பினரும் ஒப்புவார்கள். ஸ்மார்த்தர், சைவர், வைஷ்ணவர், மாத்வர் முதலிய எல்லாரும் ஒப்புவார். இவ்வுபநிடதங்களை வியாசபகவான் சூத்திரரூபமாகச் சுருக்கியெழுதினார், இது பிரம மீமா

ஞ்சை சூத்திரமெனவும்; வேதாந்த சூத்திரமெனவும் படும். இச்சூத்திரத்திற்கு ஸ்ரீகண்டர் சங்கரர், ராமானுஜர் முதலியோர் பாஷ்யங்களியற்றி யுள்ளார்கள். இவ்வொவ்வொரு பாஷ்யமும் வேதாந்த மென்னும் பெயரால் வழங்கப்படும். ஆனால் ஸ்ரீ சங்கர பாஷ்யத்துக் குரியார், அஃதொன்றே உண்மை வேதாந்தமென்கிறார். மற்றைப் பாஷ்யங்களுக்குரியாரும் தத்தம் பாஷ்யத்தையப்படியே கூறுகிறார்கள். அதனோடு நில்லாது, இவ்வொவ்வொரு பாஷ்யத்துக்குரியாரும் தத்தம் பாஷ்யத்தோடு சித்தாந்தம் முரணுவதுபற்றி வேதாந்தசித்தாந்தங்கள் ஒன்றோடொன்று முரணுவனவாக எண்ணி வாதிக்கிறார்கள். இவ்வெல்லாப் பாஷ்யங்களுமே உண்மை வேதாந்த மல்லாதிருக்கலாம். இவற்றிற்கெல்லா மூலமாகிய வியாச சூத்திரமுமே உண்மை வேதாந்த மல்லாதிருக்கலாம். உபநிடதங்கட்கு, இச்சூத்திரத்தைப்போல சிவசூத்திரமொன்றும் அதற்கு ஸ்ரீ சுப்பிரமணியர் வார்த்திகமுமிருப்பதாகத் தெரிகிறோம். இவ்வியாச சூத்திர பாஷ்யங்களியாவுமே, பசுக்களால் தத்தமறிவிற்பட்டவாறு இயற்றப்பட்டனவே யன்றிப் பிறிதல்ல. இவற்றை நோக்க பரம்பொருளினாலருளிச்செய்யப்பட்ட உபநிடதங்களே உண்மை வேதாந்தங்களாமென்பதில் யாதோர் தடையுமில்லை. அவற்றை யுண்மை வேதாந்த மென்பதில் எல்லார் சம்மதமுண்டு. அவற்றோடு சித்தாந்த முரணுமானால் மாத்திரம் வேதாந்த சித்தாந்தங்கள் பேதமெனலாமன்றிப் பிறிதில்லை.

3. இனி உண்மைச் சித்தாந்த மின்னதென்பதை யாராய்வாம். சித்தாந்த மென்றால் முடிந்தமுடிபு என்பது பொருள். வேதாந்தங்களில் அனேக பூர்வபக்ஷங்களிருக்கின்றன. அவைகள், தூலாருந்ததி முறையிற் கூறப்பட்டன. எளிதிற்பார்க்க வாராத அருந்ததி நட்சத்திரத்தைப் பார்க்கவிரும்பிய ஒருவனுக்கு, முதற்கண் அந்நட்சத்திரத்தின் பக்கலுள்ள ஒருதூல நட்சத்திரத்தை யதுவே யெனக்காட்டி அதையவன் தெரிந்த பின்னர், உண்மை அருந்ததி இத்தூல நட்சத்திரமல்லவென்றுகூறி இதனினு மிவ்வுண்மை யருந்ததிக்கு அதிகச் சமீபமாயுள்ள வேறுமோர் தூலநட்சத்திரத்தை உண்மை யருந்ததியெனக்



காட்டி, அதனையுமல்லவென்று கழித்து அப்படியே உண்மை யருந்ததியைக்காட்டுமுறைபோல, உபநிடதங்களும், உண்மைப்பரம்பொருளை விளக்குகின்றனவாம். அதாவது, அப்பரம்பொருளின ருட்குணங்களிலோர் ஏகதேசம் எளிதில் விளங்கப்பெற்ற பொருள் ஒன்றைப் பரம்பொருளென வேதாந்தங்கள் கூறும். உதாரணமாக பிருதிவியைக் கடவுளென ஓதும். அதனியல்பை யுணர்ந்தானுக்கு, உண்மைப் பரம்பொருள் அதுவல்லவென்று அதனைப் பூர்வபக்ஷமாக்கி, முன்னைய பொருளினும், பரம்பொருளின் குணாதிசயங்கள் அதிகம் விளக்கப்பெற்ற வேறுமோர் பொருளைப் பரம்பொருளெனக் கூறும். உதாரணமாக, அக்கினியே கடவுளென ஓதும். பின்னர் இதனையும் பூர்வபட்சமாக்கி வேறுமோர் பொருளைப் பரம் பொருளெனக் கூறும். இப்படியே ஒன்றை விட்டு ஒன்றாய் வருணன், இந்திரன், பிரமன், விண்டு முதலியோர்களி லொவ்வொருவனைப் பரம்பொருளென ஓதி அவற்றை யெல்லாம் பூர்வபக்ஷமாக்கி, முடிவிற் சிவபரம்பொருளே, உண்மைப் பரம்பொருளென முடித்துக் கூறும். இதுவரை பரம்பொருளினியல்புளாகக் கூறப்பட்டன வெல்லாம் அதற்கும் வேறு வேறு பொருள்கட்கும் பொதுவாயுள்ள வியல்புகளாதலால் அவையாவும் பரம் பொருளின் பொது வியல்புகளாம். இவ்வியல்புகளைக் கூறும் நூலும் பொது நூலெனப்படும். இதுவே வேத வேதாந்தநூல். இனிக் கூறப்படும் இயல்புகள் யாவும் சிவபரம்பொருட்கே உரித்தானவாதலால், சிறப்பியல் பெனப்படும். இவ்வியல்புகளைக் கூறும் நூல், சிறப்பு நூலெனப்படும். இந்நூலே சிவாகம நூலாம். பரம்பொருளின் பொது சிறப்பியல்புகள் ஒரே நூலிற் கூறப்படில் மயக்கத்திற் கேதுவா மென்பதுபற்றி இவ்வியல்புகள் வேறுநூலாற் கூறப்பட்டுள்ளது. இந்நூலே வேதாந்த நூலில், பரவித்தை யென்று படிக்கப்பட்டுள்ள நூல். வேதத்திலுள்ள முடிந்த முடிவுப்பொருளாகிய சிவபரம்பொருளினியல்புகளை யுணர்த்துவதால், இந்நூல் சித்தாந்த நூலெனப்பட்டது. இச்சிவாகம நூலிற்குரியார் யாரும் இந்நூல் சித்தாந்த மென்பதை யொப்புவர். இந்நூலாலுணர்த்தப்படுமியல்புகளையும் பலரும் தத்தக் தவவலிக்கேற்பப் பலவாறு

ணர்ந்தனர். அவ்வாறுணர்ந்தார் ஆறு வகையினுளடங்குவார்.
இவரே பாடாணவாதசைவர், சிவாத்துவித சைவர் முதலிய
அறுவகைச் சைவர். இவருள் ஒவ்வொருவரும், தாந்தா முண
ர்ந்துள்ளபடிக்கான சைவக் கொள்கைக்கு, வேதாந்தம் முரணு
வதாகவெண்ணி, வேதாந்த சித்தாந்தங்கள் முரணுமெனக் கூறு
வர். இவ்வறுவகைச் சைவர்களுமே சிவாகமங்களையுள்ளபடி
யுணராதாரா யிருக்கலாம். எனவே யிவருள் எவர் கொள்கை
யினோடும் வேதாந்த முரணுவதுபற்றி வேதாந்த சித்தாந்தங்கள்
பேதமென்பது தவறாம். இவரெல்லாராலும் ஏனையோராலும்
சித்தாந்தமென ஒப்புக்கொள்ளப்படும் சிவாகமங்களோடு, முன்
னர் உண்மை வேதாந்தமென விளக்கப்பட்ட உபநிடதங்கள்
முரணினாலன்றி வேதாந்த சித்தாந்தங்கள் பேதமல்ல அபேதமெ
ன்றே கொள்ளல் வேண்டும்.

4. இனி, மேற்கூறிய உபநிடதங்களும் சிவாகமங்களும் முர
ணுவனவா வென்பதை ஒரு சிறிது ஆராய்ச்சி செய்வாம். ஜக
த்துமித்தை யென்பது வேதவாக்கியம். இவ்வாக்கியத்திற்கு ஜக
த்து கேவலந்தோற்றம்; உண்மையில் இல்லாத பொருள் எனப்
போலி வேதாந்திகள் பொருள் கொண்டு, ஜகத்து உண்மைப்
பொருள் என்னும் சிவாகமவாக்கியமும் இவ்வேத வாக்கியமும்
முரணுமென்பர். ஆனால் உண்மை வேதாந்திகளும் உண்மைச்
சித்தாந்திகளும், மேற்கூறிய வேதவாக்கியத்திற்கு ஜகத்து அநி
த்தியம், நீண்டகால மிருப்பதுபோலத் தோன்றி, கணப்பொழு
தில் அழிந்துபோந் தகைமைத்து என்று பொருள் கொண்டு,
அவ்வாறாயினும் அழிந்து போகும் வரைஉள்ள பொருளாதலும்
தூலவடிவு சூக்குமவடிவாய் மாறுதலே அழிவாதலாலும், அழிந்
தபின்னும் அப்பொருள் சூக்குமத்திலுள்ள பொருளே யாதலா
லும், சூன்னியமாதல் என்னும் அர்த்தத்தில், எப்பொருட்கும்
அழிவு கிடையாதாதலாலும், ஜகத்தைச் சிவாகமத்தில், உள்ள
பொருள் என்றதும் இவ்வேதவாக்கியத்திற்குப் பொருத்தமே
யென யுணர்வர். "எல்லாம் நின்னிடைத்தோன்றி நின்னிடை
யொடுங்கும்" எனக்கூறியது போல வேதங்கள் ஜகத்தை முத
லவனிடத்துத் தோன்றுவதாகக் கூறும். சிவாகமங்கள் ஜகத்து



க்கு மாயையிலுற்பத்திகூடும். இவ்விரண்டும் ஒன்றோடொன்று
முரணுவதாக போலி வேதாந்திகளும் போலிச் சித்தாந்திகளுங்
கூறுவர். தாமரையையுணர்த்தும் "பங்கஜம்" என்னுஞ் சொ
ற்கு சேற்றிலுண்டாகியது என்பது பொருள். பங்கஜம்
கிழங்கிலுண்டாவதன்றி சேற்றிலுண்டாவதில்லை. சேற்றை
யாதாரமாகப்பெற்ற கிழங்கிலுண்டாகும் தாமரையைச் சேற்றி
லுண்டாவதாகக் கூறுவதுபோல் மாயையிலுண்டாகிய ஜகத்தை
அதனை யாதாரமாகப் பெற்ற முதல்வனிடத்துத் தோன்றியதாக
வேதங்களிற் சொல்லப்பட்டிருப்பதால், ஜகத்துற்பத்தி விஷயமாய்
வேத சிவாகமவாக்கியங்கள் முரணுதலில்லையென உண்மை வேதா
ந்திகளும் உண்மைச் சித்தாந்திகளும் உணர்வர். ஆன்மா ஏகம்
என்ற வேதவாக்கியத்திற்குப் பரமான்மா ஜீவான்மாக்கள் எல்லா
மொன்றேயென போலி வேதாந்திகள் பொருள் கொண்டு, பசுப்
பலகோடி யென்னும் சிவாகமவாக்கியத்தோடு முரணுவதாகக் கூ
றுவர். ஆனால் உண்மை வேதாந்திகளும் உண்மைச் சித்தாந்திக
ளும் மேற்கூறிய வேதவாக்கியத்திலுள்ள ஆன்மசப்தம் பரமான்
மாவினையே குறிக்கும் எனவுணர்ந்து அவ்வாக்கியம் சிவாகமவாக்
கியத்தினோடு முரணுதலில்லை யென்றுந் தெரிவர். இன்னும் பல
திருட்டாந்தங்களால், வேத சிவாகமங்கள் ஒன்றோடொன்று முர
ணுதலில்லையென விளக்கலாம் என்பவே உபநிடத சிவாகமங்களா
கிய வேதாந்த சித்தாந்தங்கள் ஒன்றினோடொன்று அபேதமென்
பது பெற்றது.

5. மேற்குறித்த இரண்டு நூல்களும் ஒன்றோடொன்று முர
ணுத லில்லையென்பதே சைவசித்தாந்திகளின் துணிபு. அதுபற்
றியே அவர்கள் சித்தாந்தத்தை வைதிகசைவம் என்றும், வேதாக
மோக்த சைவசித்தாந்த மென்றும் கூறுகிறார்கள்.

"வேதமோடாகம மெய்யாமிறைவனூல்
ஓதுவும்பொதுவுஞ் சிறப்புமென்றுன்னுக
நாதனுரையிவை நாடிலிரண்டந்தம்
பேதமதென்னிற்பெரியோர்க் கபேதமே."

என்னுஞ் சைவத் திருமுறையிலொன்றாகிய திருமந்திரத்
தின் கருத்துமிதுவே. அப்படியே சைவசித்தாந்த சாத்திரத்தி

லொன்றாகிய சித்தியாரிலும்,

"வேதநூல் சைவநூலென் றிரண்டே நூல்கள்
வேறுரைக்கு நூலவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூ லநாதியம லன்றருநூ லிரண்டு
மாரணநூல் பொதுச்சைவ மருஞ்சிறப்பு நூலாம்
நீதியினா லுலகர்க்குஞ் சத்திநிபா தர்க்கும்
நிகழ்த்தியது நீண்மறையி னொழிபொருள்வே தாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கு நூல்சைவம் பிறநூல்
திகழ்பூர்வஞ் சிவாகமங்களே சித்தாந்த மாகும்."

என விளக்கப்பட்டிருக்கின்றது. என்பவே வேதாந்தநூல் சித்தாந்த நூலிரண்டும், பரம்பொருளால் அருளிச் செய்யப்பட்டதென்றும், இரண்டும் அபேதமென்றும், அவற்றுள் ஒன்று பொது; மற்றொன்று சிறப்பென்றும் பெற்றது. ஒருநூலின் பொதுவியல் அதன் சிறப்பியலோடு முரணாதவாறுபோல, பொதுநூலாகிய வேதாந்தமும் சிறப்புநூலோடு முரணாதாகும். என்றாலும் வேதாந்தநூலில், பல பூர்வபட்சங்களும் சித்தாந்தமொன்று முளவாக, அவற்றிற் சித்தாந்தமொன்றைத் தெளிந்தும் பிரித்தெடுத்துக்கொண்டு, சித்தாந்த நூல்களாகிய சிவாகமங்கள் விளக்குவதால், சித்தாந்தம் வேதாந்தத்தின் தெளிவெனப்பட்டது. இக்கருத்தினையே சைவசந்தான குரவர்கள் "வேதாந்தத் தெளிவாஞ் சைவசித்தாந்தம்" என்றும், "வேதசிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவத்திறத்தடைவர்" என்றும் விளக்கியிருக்கின்றார்கள். இதுபற்றி யிவ்விரண்டும் பேதமெனல் கூடாதாகும். அன்றியும் மேற்குறித்த திருவிருத்தத்தில் வேதம் உலகர்க்கென்றும், சிவாகமங்கள் சத்திநிபாதர்க்கென்றுங் கூறியிருத்தலால், வேதம் சத்திநிபாதர்களால் தள்ளத்தக்கதென்பது மின்றாம். உலகர் என்பது சத்திநிபாதர்களையும் அடக்கிநிற்கும். என்பவே சிவாகமங்களை யுணர்ந்து அதன்வழி நிற்கும் பெரியோர்கள், வேதாந்த சித்தாந்த மிரண்டும் அபேதமென வுணர்வார்கள். இக்கருத்தினையே தாயுமானாரும் "வேதாந்தஞ் சித்தாந்தம் வேறென்னார் கண்களிக்கும் நாதாந்தமோன நலமே பராபரமே" என்றருளினார்கள்.

6. இனி "வேதாந்தசித்தாந்த சமரசம்" என்றதனை யாராய்



வாம். இச்சொற்றொடரை தாயுமானார் தமது பாசுரங்களின் பலவிடங்களிற் பிரயோகித்திருக்கின்றார்கள். இதனுண்மைக் கருத்தை யறியாது, பலரும் பலவாறு விளக்க முயலுகின்றார்கள். ஈண்டு கவனிக்கவேண்டியது 'சமரசம்' என்னுஞ்சொல். இச்சமரசம் அனுபவத்தி லறியற்பாலது. அதுவும் பெரியோர்களாலேயே அறியற்பாலது. அப்பெரியோர்களையே "வேதாந்த சித்தாந்த சமரசநன்னிலைபெற்ற வித்தகச்சித்தர்" எனத் தாயுமானார் கூறியுள்ளார்கள். இச்சமரச அனுபவம் வேதாந்தத்தின் சாரம் சைவசித்தாந்தம் என்பதனோடு மிகப்பொருத்தமே. எவ்வாறெனில் கூறுதும். வேதாந்தத்தைக் கனிக்கும், சித்தாந்தத்தை யதன் சாரத்திற்கும் உவமையாகக் குமரகுருபர சுவாமிகள் "ஒரும் வேதாந்தமென்றுச்சியிற் பழுத்த, ஆராவின்ப வருங்கனிபிழிந்த, சாரங்கொண்ட சைவசித்தாந்தத் தேனமுதருந்தினர் சிலரே" எனப் பாசுரமருளியிருக்கின்றார்கள். இவ்வுவமையே, ஈண்டு கவனிக்கற்பாலது. ஒரு சிறு குழந்தையிடம் ஒரு கனியைக் கொடுத்தால், அக்குழந்தை அதன்தோல், கொட்டை, சக்கை, சாரம் எல்லாவற்றையுஞ் சேர்த்துத் தின்னும். அக்குழந்தையின் நாவுக்கு, அத்தோலின் ரசம், கொட்டையின் ரசம், சக்கையின் ரசம், சாரத்தின் ரசம், எல்லா ரசங்களுந் தட்டுவதாகும். ஆனால் பெரியோர்களோ, அத்தோலை நீக்கி, அக்கொட்டையைக் கழித்து, சக்கையை யுமிழ்ந்துச் சாரமொன்றனை யுட்கொள்வர். அவர் நாவுக்குச் சாரத்தி னினிப்பொன்றே தட்டுவதாகும். அவர்க்குக் கனியின் ரசமும், அதனினின்றும் பிரித்தெடுத்துச் சர்ப்பத்தாக்கப்பட்டுள்ள சாரத்தின் ரசமும் ஒன்றே. அவ்விரண்டினையும் சமரசமாகவே காண்பர். அதுபோலவே பெரியோர்கள், வேதாந்தத்தையறிந்து அதன்பொருளை யனுபவிக்கும்போது, அதிலுள்ள பல பூர்வபட்சங்களையுங் களைந்து, அதன் கண்ணுள்ள சித்தாந்தமொன்றனையே யனுபவிப்பார். அதிலுள்ள பூர்வபட்சங்க ளொன்றும் அவரறிவிற் படியாது. அவரறிவிற்கு, வேதாந்தத்தினின்றும் சித்தாந்த அமிர்தமே படிவதாகும், அவரே வேதாந்த சித்தாந்த மிரண்டினையும் சமரசமாகக் காண்பார்கள். இவரையே தாயுமானார் "வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற வித்தகச்சித்தர்" என ஓதினார்கள். இவரது

அனுபவமே வேதாந்த சித்தாந்த சமரச அனுபவம். இதுவே இச் சமரசத்தின் உண்மைப்பொருள்.

7. வேதாந்த சித்தாந்தங்களை யிவ்வாறு சமரசமாகக் காணுதல் எவ்வாறு கூடும் என்பது நாம் அடுத்து ஆராயக்கிடப்பது. இவ்வாராய்ச்சி என்போலியர்களாற் செய்யக் கிடப்பதன்றாயினும் இயன்றவளவில் ஆராய்வாம். வேதாந்தத்தில் பரஜீவர்கள் வேறல்லர் என்னும் வாக்கியம் காணப்படும். சிவாகமங்களிலோ பரஜீவர்கள் வெவ்வேறு பொருள்களென்றும், ஆனால் அவைகள் பிரிப்பின்றிக் கலந்து கிடக்கின்றனவென்றும், பரம்பொருளறிவிக்கவே ஜீவப்பொரு ளறிகிறதென்றும், என்றாலு மறிவித்தா லறிதற்கும், அறிவு வேண்டுமாதலால், ஜீவனுக்குந் தனியறிவுண்டேயென்றும், இவ்விரண்டறிவுகளும் ஒன்றிலொன்று பிரிப்பின்றிக் கிடப்பதால், இவற்றின்றன்மைகளைத் தனித்துக் காணவாராதென்றும், பரஜீவர்களினறி விச்சைசெயல்களு மப்படியே யென்றும் எனவே ஜீவப்பொருளின் றன்மைகளியாவும் பரம்பொருளின்றன்மையில் அடங்கிக் கிடப்பனவாமென்றும், அவைகளின் றன்மைகளுக்குப் பரம்பொருளின் றன்மையே தாரகமாமென்றும், அத்தாரகமின்றேல் ஜீவர்களின் றன்மைகளே யின்றாமென்றும் கூறப்பட்டுள்ளன. இவற்றைச் சமரசமாகக் கொள்ளும் பெரியோர்கள் பரஜீவர்கள் கேவலம் வேறல்லர். ஆனால் எந்தக் காலத்திலும் பரம்பொருளின் றன்மையையின்றி ஜீவப்பொருளின் றன்மை யின்றாதலால், அவ்வா றிருக்குமளவில், பரஜீவர்கள் வேறல்லர் என்றும் உணர்வர். இவர் பரஜீவர்கள் ஒரேபொருள் என்னும் பூர்வபட்சத்தினைத் தன்னனுபவத்திற் காணமாட்டார். இவர்க்குச்சிவாகமங்களும் வேதாந்தங்களும் அனுபவத்தில் ஒரேயுண்மையையுணர்த்துவதாகும். இவ்வாறனுபவித்தலே வேதாந்த சித்தாந்த சமரச சுபாவம். இக்கருத்தினையே தாயுமானார்,

> "சந்ததமும் எனதுசெயல் நினதுசெயல்"
> "யானெனுந்தன்மை நின்னையின்றி யில்லாத தன்மையால்"
> "வேறலேன் வேதாந்த சித்தாந்த சமரச
> சுபாவம்" என்றருளிச் செய்துள்ளார்கள்.

திருச்சிற்றம்பலம்.

—— V. P. காந்திமதி நாதப்பிள்ளை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# தாயுமானாரும் அவரது அத்வைதமும்.

> "வேதமுடனாகம புராணமிதிகாசமுதல்
> வேறுமுளகலைகளெல்லா
> மிக்காகஅத்துவிததுவித மார்க்கத்தையே
> விரிவாயெடுத்துரைக்கும்
> ஓதரியதுவிதமேயத்துவித ஞானத்தை
> யுண்டுபணுஞானமாகும்
> ஊகமனுபவம் வசனமூன்றினுக் கொவ்வுமீ
> துபயவாதிகள் சம்மதம்
> ஆதலினெனக்கினிச் சரியையாதிகள்போது
> மியாதொன்றுபாவிக்கநான்
> அதுவாதலாலுன்னை நானென்றுபாவிக்கி
> னத்துவிதமார்க்க முறலாம்
> எதுபாவித்திடினுமதுவாகி வந்தருள்செய்
> யெந்தைநீகுறையுமுண்டோ
> யிகபரமிரண்டினுமுயிரினுக்குயிராகி
> யெங்குநிறைகின்றபொருளே."

இன்று நாம் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்டது தாயுமான சுவாமிகள் அருளிப்பாடிய பாசுரங்களி லொன்று. இதொன்றே, இச்சுவாமிகளது அத்வைதமார்க்க மின்னதென்பதை மிக நன்குவிளக்குவதாகும். இதனை விளக்குமுகத்தானே நமது சுவாமிகள், இம்மார்க்கத்திற்கு, அத்வைத துவைத மார்க்க மெனவும் பெயர் தந்தனர். எனவே யிச்சுவாமிகளது அத்வைதமார்க்கம், துவைதத்தன்மை விரவாத அத்வைதமார்க்கமுமன்று: அத்வைதத்தன்மை விரவாத துவைதமார்க்கமு

மன்று. அஃதாவது, கேவல அத்வைத மார்க்கமுமன்று; கேவல துவைதமார்க்கமுமன்று; இவ்விரண்டு மார்க்கங்களின் றன்மைகளுந் தன்பால் விரவப்பெற்றதோர் மார்க்கமென்பது விளங்கும். எனவே, கேவலதுவைத மார்க்கம், கேவல அத்வைத மார்க்கம், இவற்றின் றன்மைகளை யாராய்ச்சிசெய்து, பின்னர் இச்சுவாமிகளது அத்வைதமார்க்கத்தினை யாராய்ச்சி செய்ய வேண்டுவது முறையாம். இம்முறையினின்றே, கேவலதுவைதமார்க்கத்தின் றன்மையினையொருவாறு ஆராய்ச்சி செய்யப் புகுவாம்.

2. 'துவைதம்' என்னுஞ் சொல்லிற்கு, இரண்டு, என்பது பொருள். துவைதமார்க்கமென்பது, சித்துப்பொருள்களாகிய பரஜீவர்கள், ஒன்றோடொன்று விரவாத, இருவேறு பொருள்கள் எனக்கூறும் மார்க்கமாம். இம்மார்க்கத்தார், இவற்றிற்குத் திருஷ்டாந்தமாக, இருள், ஒளியென்பனவற்றைக் கூறுவர். இருள், ஒளி, யென்பன தம்முள் முற்றும் அந்நியமாதல்போல, பரஜீவர்களுந் தம்முள் முற்றும் அந்நியமா மென்பர். அவைகளிரண்டுந் தம்முளொன்றும் விரவாதவாறு போல, இவைகளும், பெத்தம் முத்தியாகிய இரண்டு நிலைகளிலும் விரவுதலில்லை யென்பர். முத்தியின்பத்தை யனுபவிக்கும் பொழுதும், ஜீவப்பொருள், பரம் பொருளோடு விரவாது, அதற் கன்னியமாக நின்றே, அதனாற் றரப்படுஞ் சுகத்தை யனுபவிக்குமே யன்றி, யதனோடொற்றித்து நின்றனுபவித்தலில்லை யென்பதே யிவரது கொள்கை. இவர் கொள்கையின்படி, பரம் பொருள், ஜீவப்பொருளின்கண் வியாபித்தலில்லை. அப்பொருள், ஏனைப் பொருள்களி லெவற்றினோடுங் கலவாது, தனித்து நிற்பதோர் பொருள். எனவே யிவரது பரம்பொருட்குச் சர்வவியாபகமென்பதின்றாம். இது பற்றியே யிவரதுமார்க்கம், கேவலதுவைதமெனவும், பேதமார்க்கமெனவும் பெயர் பெறும். இம்மார்க்கத்தார் பெரும் பாலும் மாத்வர் என வழங்கப்படுகின்றார்கள்.

3. இம்மார்க்கத்தார், தம்மார்க்கத்தினை அத்துவித மெனவுங் கூறுவர். இவர், அத்துவிதம் என்னுஞ் சொல்லிலுள்ள,



அகரத்திற்கு, மறுதலைப்பொருள் கொண்டும், அத்வைதம் துவைதம் இரண்டும், ஒன்றற்கொன்று மறுதலையென்பர். அஃதாவது: அத்வைதம் என்னுஞ் சொல்லிற்கு இரண்டின் மறுதலையாகிய ஒன்று என்பது இவர் கொள்ளும் பொருளாம். மறுதலைப்பொருள்களாகிய, இருள் ஒளி யென்பவற்றுள், இருள் உண்டெனவே ஒளியும், ஒளியுண்டெனவே யிருளுமுளதெனப்பெறுதல் போல, அத்வைதமென்னுஞ் சொல்லே மறுதலைமுகத்தால், துவைதம் என்பதை யுணர்த்து மென்பர் இம்மார்க்கத்தார். எனவே சுருதிகளிற் பிரயோகமாகி வரும் அத்வைதம் என்னுஞ்சொல், பரஜீவர்களின் துவைதத்தன்மையை யுணர்த்துவதென்பதே யிவரது கொள்கை. துவைதத்தன்மையை துவைதமென்னுஞ்சொல், நேரிலுணர்த்துவதாக, அதனை விடுத்து, அத்வைதமென்னுஞ் சொல்லால், சுருதிகள் உணர்த்துமென்றல் சிறிதும் பொருந்தாதென்று இவர் மறுக்கப்படுவர்.

4. அன்றியும், இவரது துவைதமார்க்கம், மற்றுஞ் சுருதிகட்கும் பொருந்துவதன்றாம். வேதங்களில் பேதவாக்கியங்களுமுள; அபேதவாக்கியங்களுமுள. இவரது மார்க்கம், பேதவாக்கியங்களோடு பொருந்துவதாயினும், அபேதவாக்கியங்களோடு பொருந்து மாறில்லை. "நானே எல்லாமாயினேன்" என்று பரம்பொருளின் சர்வவியாபகத்தை விளக்கும் வாக்கிய முதலியவற்றினோடும் மார்க்கம் பொருந்துவதன்றாம். இத்தன்மைத்தான வாக்கியங்களை யிவர் கௌணமென ஒதுக்குவர். எனவே இவ்விருதிறத்து வாக்கியங்கட்கும் பொருத்தங்கூறுஞ் சிவாகமவாக்கியங்கட்கும் இம்மார்க்கஞ் சிறிதும் பொருந்துவதன்றாம். இதனாலேயே சிவாகமங்களை யிவர் பிரமாணமெனக் கொள்ளார். அன்றியும் "மறிகடலுங் குலவரையும் மண்ணும் விண்ணுந் திருந்தொளியதாரகையுந் திரிசுடர்களோரிரண்டும் பிறவுமாய பெருந்தகையை" என்னுந் திராவிட சுருதியோடும் பொருந்தா தாகும். இது காறும், இம்மார்க்கம் சுருதி, யுக்தி, அநுபவம் மூன்றற்கும் பொருந்துவதன்றாம் எனக்காட்டினாம். கேவல அத்வைத மார்க்கத்தின் றன்மையினையாராய்ச்சி செய்வாம்.

5. இம்மார்க்கத்தார், 'அத்வைதம்' என்னுஞ் சொல்லினுள்ள அகாரத்திற்கு இன்மைப் பொருள்கொள்வர். என்றாலும், இவரும் மாத்துவரைப்போல இச்சொற்குப்பொருள் ஒன்று என்றேமுடிப்பர். ஆனால், இவரும் சுருதிகளிற் கூறும் அத்துவிதச் சொற்குப்பொருள் வேறு வேறாகக் கொள்வர். மாத்துவரோ, முன்னர் காட்டியபடி, இச்சொல் மறுதலையாய் துவித எண்ணையுணர்த்து மென்பர். இவர் இச்சொல் உய்த்துணர்வால் ஏக எண்ணையுணர்த்து மென்பர். இவர் இச்சொற்குக் கூறும் பொருளும் மாத்துவரதுபோல மறுக்கத்தக்கதேயாம். "ஏகம் ஏவ அத்துவிதீயம் பிரமம்" என்னுஞ் சாந்தோக்கிய உபநிடத வாக்கியத்திலுள்ள "அத்துவிதீயம்" 'ஏகம்' என்னுமிரண்டு சொற்களு மிவர் கருத்தின்படி ஒரே பொருளையுணர்த்தி நிற்பதாகும். 'ஏகம்' என்னுஞ்சொல்லாற் போந்த பொருளை அத்துவிதீயச்சொல் வற்புறுந்தலேனுஞ் தெளிவுறுத்தலேனுஞ் செய்கின்ற தென்பதுமில்லை. இச்சொற்கு அத்தன்மையில்லையென்பது தெளிவாம். எனவே யிவ்விரண்டு சொற்களும் ஒரே பொருளையுணர்த்தி நிற்றல் பொருந்துவதன்றாம்.

6. இனி யிவரது 'அத்வைதம்' என்னையென விசாரிப்பாம். பரஜீவர்கள் இருவேறு பொருள்களல்ல; ஒரே பொருள் என்பதே யிவரது 'அத்வைதம்.' அஃதாவது, இவர் கருத்தின்படி, சித்து அல்லது அறிவுப் பொருள் ஒன்றே; அதுவே பரம்பொருள்; அவ்வறிவொன்றே அவித்தையோடு கூடிய வழிப்பல வேறு அறிவுப்பொருள்களாகத் தோன்றுவதன்றிப் பிறிதில்லை. இவர் பொன்னையும் அதனாற் செய்யப்படும் ஆபரணங்களையு மிவற்றிற்குத் திருஷ்டாந்தமாகக் கூறுவர். எல்லா ஆபரணங்களிலும் விளங்கும் பொன் ஒன்றே யாதல்போல, எல்லா ஜீவர்களிடத்தும் விளங்கும் அறிவு ஒன்றேயாமென்பர். எனவே, பெத்தம் முத்தியாகிய விரண்டு நிலைகளிலும் பொருள் ஒன்றேயுளதெனப்பெறும். எனவே முத்தியின்பத்தைத் தருபவனும் அநுபவிப்பவனு மொருவனேயாய்முடிந்து முத்தியின்பமென்பதே பெயர் மாத்திரையாய் முடிகின்றது. இவர் பரஜீவர்கள் முற்றும் அபேதமெனக் கூறுவதால், இவரதுமார்க்கம்



கேவல அத்வைதமார்க்கமெனவும், அபேதமார்க்க மெனவும் வழங்கும். இவர் பெரும்பாலும் ஸ்மார்த்தர் எனப்படுவர்.

7. மாத்துவர் கொள்கை அபேதவாக்கியங்களோடு பொருந்தா தெனக்காட்டினாம். இவரது கொள்கையோ அவ்வபேதவாக்கியங்களோடு பொருந்துமாயினும், பேதவாக்கியங்களோடு பொருந்தாதாகின்றது. "எவர்க்கு ஆன்மாசரீரமோ" என்னும் பிருகுதாரணியவாக்கியமும் "அவித்தை வித்தையென்னுமிரண்டினையுமாளுபவர் அவற்றிற்கு வேறாயுள்ள ஈசர்" என்னுஞ் சுவதாச்சுவேதரவாக்கியமும், "பரஜீவர்களாகிய இரண்டு அழகிய பட்சிகள் கூடிநண்புற்றன" என்னும் முண்டக உபநிடதவாக்கியமும் இம்மார்க்கத்திற்குச் சிறிதும் பொருந்துமாறில்லை. எனவே சிவாகமாதி சுருதியும் இம்மார்க்கத்திற்குப் பொருந்துவதின்றாம். இச்சுருதியிவர்கட்கு ஒரு சிறிதும் பொருத்தமன்றாம் "ஏரொளியை, யிருநிலனும் விசும்பும் விண்ணும் ஏழுலகுங்கடந் தண்டத்தப்பானின்ற பேரொளியை" என்னுந் திராவிட சுருதிக்கும் பொருந்தாதாகும். எனவே யிவரது கேவல அத்வைத மார்க்கமும் மாத்துவரது கேவலதுவைதமார்க்கம்போல, சுருதியுக்தி யநுபவங்கட்கும் பொருந்துவதன்றாய் முடிந்தது.

8. மேற்கூறிய இரண்டுமார்க்கங்களு மிவ்வாறாக, நமது சுவாமிகள் விளக்கும் அத்வைதமார்க்கம் இத்தன்மைத் தென ஆராய்ச்சி செய்வாம். இம்மார்க்கத்தார் 'அத்வைதம்' என்னுஞ்சொல்லிலுள்ள அகாரத்திற்குச்சாதிருசியம் அதாவது அன்மைப்பொருள் கொள்வர். இவர்கருத்தின்படி யிச்சொல் துவித எண்ணையேனும் அன்றி யேக எண்ணையேனுமுணர்த்துவதல்ல. இரண்டு பொருள்கட்குள்ள சம்பந்த விசேஷத்தையே யுணர்த்துவதாகும். ஒரு பொருள் மற்றொரு பொருளின்கண் பிரிப்பின்றிக் கலந்து நிற்றலே யிச்சம்பந்த விசேஷமாம். "ஏகம் ஏவ அத்துவிதீயம் பிரமம்" என்னுஞ் சாந்தோக்கிய உபநிடதவாக்கியத்திலுள்ள 'ஏகம்' என்னுஞ்சொல் பரம்பொருள் ஒன்றேயென்பதையும், அவ்வாக்கியத்திலுள்ள 'அத்துவிதீயம்' என்னுஞ் சொல், அப்பொருள் ஜீவப்பொருள்களிலும் ஏனைப்பொ

ருள்களிலும் பிரிப்பின்றிக் கலந்துநிற்கு மென்பதையும் முறையேயுணர்த்து மென்பதே யிவரது கருத்தாம். பிரிந்து நிற்குமிரண்டுபொருள்கள், ஒன்றற்கொன்று அந்நியமாம். பிரிப்பின்றிக் கலந்துநிற்கும் பொருள்களோ ஒன்றற்கொன்று அநந்நியமாம். இவ்வநந்நியத்தன்மை அல்லது அந்நியநாத்தித்தன்மையையே, 'அத்வைதம்' என்னுஞ் சொல் உணர்த்துமென்பர் இம்மார்க்கத்தார். இப்பொருளையே நமது பிரதம சந்தானகுரவராகிய மெய்கண்ட சுவாமிகள் "அத்வைதம்" என்னுஞ் சொல் அந்நிய நாத்தியையுணர்த்துமாயிட்டு என்றும், நமது தாயுமான சுவாமிகள்,

"அத்துவிதமென்னு மநந்நியச்சொற் கண்டுணர்ந்து
சுத்தசிவத்தைத் தொடரு நாளெந்நாளோ" என்றுஞ்

செவ்வனே விளக்கியருளினார்கள்.

9. 'அத்வைதம்' என்னுஞ் சொற்கு இம்மார்க்கத்தார் கூறும் பொருள் இவ்வாறாக, இவரது அத்வைதத்தின் றன்மை யின்னதென விசாரிக்கப்புகுவாம். இம்மார்க்கத்தார், பரஜீவர்களிருவேறு பொருள்களேயாம், ஆனால் ஒன்றையொன்று பிரிந்துநிற்பவைகளல்ல; ஒன்றோடொன்று அத்வைதமாய்க் கலந்து நிற்பவைகளே யெனக்கூறுவர். உடல், உயிர் என்பனவற்றைத் திருஷ்டாந்தமாகவுங் கூறுவர். உடல் உயிர் இரண்டும் ஒன்றோடொன்று பிரிப்பின்றி நிற்கின்றன. இந்நிலையில் உடம்புக்கிட்ட பெயரால் பிறரை யழைப்புழி, உயிரே என்னையென வரும்; என்றாலும் உடம்பு உடம்பே; உயிர் உயிரே; உடம்பு உயிராவதுமில்லை; உயிர் உடம்பாவதுமில்லை. அதுபோல பரஜீவர்கள் ஒன்றோடொன்று பிரிப்பின்றி நின்றாலும், பரம் பரமே; ஜீவன் ஜீவனே; பரம் ஜீவனாவது மில்லை; ஜீவன் பரமாவது மில்லை. ஆனால் உயிர் உடம்பேயாயும் அதனின் வேறாயும் நிற்கும். அதுபோல பரம்பொருள் ஜீவர்களாயும் அவற்றின் வேறாயும் நிற்கும். ஜீவன் பரமாய் நிற்பதில்லை. என்னெனில், உயிர் உடம்பாய் நிற்பது உயிரின் குணவிசேஷமேயன்றி யுடம்பினதல்ல. அதுபோல், பரம் ஜீவர்களாய் நிற்பதும் பரத்தினருள் விசேஷமேயன்றிப் பிறிதில்லை. இவ்வருள் விசே



ஷமே, பரம்பொருளின் சர்வவியாபகத் தன்மையாம். இத்தன்மையையே யிம்மார்க்கத்தார் அத்வைதத்தன்மை யென்பர்.

10. பரம்பொருள் எல்லாப் பொருள்களிலும் அத்வைதமாய் வியாபித்து நிற்பதோர் பெரும்பொருள். எத்துணைச் சிறிய அணுப்பொருளேயாயினும், அதனுள்ளும், எத்துணைப் பெரிய மகத்துப்பொருளேயாயினும், அதற்கப்பாலும், வியாபித்து நிற்பதோர் பொருளாம். இதனால் வியாபிக்கப்படாத பொருள் ஒன்று மில்லை. இதுவே யெங்கும் நிறைந்த பொருள். "கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக் கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்றபெரியானை" யெனத் திராவிட சுருதியாற் கூறப்படும் பொருளுமிதுவே. இவ்வாறு எங்கும் நிறைந்து உயிர்க் குயிராய் நிற்குந்தன்மை ஜீவர்களின் பெத்த முத்தியிரண்டிலுமுளதாம். பெத்த உயிர்களின் பாலும் உயிர்க்குயிராய் நிறைந்து நிற்கும். முத்த உயிர்களின்பாலும் உயிர்க்குயிராய் நிறைந்துநிற்கும். இகத்திலும் பரம்பொருள் பிறபொருள்களின் பால் நிறைந்து நிற்கும். பரத்திலும் அவ்வாறே நிற்கும். இத்தன்மை யத்வைதத்தன்மை யென்பதை விளக்குதற்கே நமது சுவாமிகள் நாமெடுத்தாளும் பாசுரத்தின் முடிவில்,

"இகபரமிரண்டினிலு முயிரினுக்குயிராகி,
யெங்கும் நிறைகின்ற பொருளே" எனச்சிறப்பித்து

விளக்கியதும். இத்தன்மையே நமது சுவாமிகள் கருத்தின்படி உண்மை யத்வைதத் தன்மையாம். இத்தன்மை பரஜீவர்களின் துவைதத் தன்மையோடு ஒரு சிறிதும் முரணுமாறில்லை. இம்முரணாமையை யுணர்த்துதற் கென்றே நமது சுவாமிகள் இம்மார்க்கத்தினை "அத்வைத துவைதமார்க்கம்" என்று மழைத்தனர்.

11. கேவல துவைத மார்க்கத்தோடு பொருந்தமுறாத அபேதவாக்கியங்களும் இம்மார்க்கத்தோடு பொருந்துவதாகும். கேவல அத்வைதமார்க்கத்தோடு பொருந்தமுறாத பேதவாக்கியங்களும் இதனோடு பொருந்துவதாகும். சுருதிகளில் ஒவ்வொன்றனோடும் ஏனைமார்க்கங்கள் முரணும்போல் இம்மார்க்கம் அவற்றினொன்றனோடு முரணாதாம். சுருதிகளிலொவ்வொன்று கூறுவதையும், மற்றையவற்றினோடு பொருந்தவுணர்தலே

யுண்மை யுணர்வாம். இவ்வாறுணர்வார்க்கு, இச்சுருதிகளி
லொவ்வொன்றும் இவ்வத்வைத துவைதமார்க்கத்தினையே விள
க்குவதாகும். இக்கருத்தினையே நமது சுவாமிகள் நாமெடுத்தா
ளும் பாசுரத்தின் றலைப்பில்,

"வேதமுடனாகம புராணமிதிகாசமுதல்
வேறுமுளகலைக ளெல்லாம்
மிக்காகவத்துவித துவிதமார்க்கத்தையே
விரிவாயெடுத்துரைக்கும்" என்றருளிச் செய்தனர்.

12. கேவல அத்வைதமார்க்கத்தில், அநுபவிப்பதோர்
பொருளின்றெனக் காட்டினோம். பெத்தத்திலு மஃதில்லை.
முத்தியிலுமில்லை இவரது முத்தியின்பம் ஓர் நாயகி தன்னையே
யநுபவித்தாற் போலொத்தவின்பம். இஃதன்றிக் கேவல துவை
தமார்க்கத்திலோ அநுபவிப்பதோர் பொருளுண்டாயினும்,
இவரது முத்தியின்பம் ஏகதேசவியல் பினதாம். முத்தியிலும்
ஜீவப்பொருள் பரம்பொருளினின்றும் பிரிந்து நின்றே யப்பொ
ருளையநுபவிப்பதாகும். என்பவே யிவரது முத்தியின்பம் நா
யகன் நாயகிகள் தம்மிற்பிரிந்து நின்று ஒருவரை யொருவர்
அநுபவித்தாற் போலொத்த வின்பமாம். இம்மார்க்கத்திலே,
அநுபவிப்பதோர் பொருளிருப்பதோடு இவரது முத்தியின்ப
மும் வியாபகவியல்பினதாகும். பரம்பொருளோடு பிரிவற நிற்
கும் ஜீவர்கள் அப்பிரிவின்மையை யுணர்ந்து தன்பேதத்தன்மை
யை மறந்து பரபோகத்தை யநுபவிப்பர்களென யிம்மார்க்கங்
கூறுவதால், இவ்வநுபவம் சுட்டிறந்த முற்றநுபவமாய் விளங்
கும். இவரது முத்தியின்பம் ஓர் நாயகி தன்னாயகனோடு பிரி
வறக் கலந்து நின்று அவனை யநுபவித்தாற்போ லொத்த வின்ப
மாம். இவ்வின்பமே முற்கூறிய இருவகை யின்பங்களினும்
மிகவினிதாமென்பது சொல்லாமலே விளங்கும்.

13. அன்றியும் யாதானுமோர் சுகப்பொருளைப் பிரிந்துவிடுத்
தித் துன்பமும், கலந்துவிடத்து இன்பமுமுண்டாமென்பது எவ்
விதத்திலும் உண்மையே. இகத்திலு முண்மையே பரத்திலுமுண்
மையே. இகவின்பத்தி வின்றுண்மையைப் பரவின்பத்தி முனிவர்

"வடிவேறெருதுங்கித்துன் பவுவரியுட்குளித்தார், தம்மிற் கூடி
வேறற்றவின் பக்குளிர்கடல் வெள்ளத்தாழ்ந்தார்" என்று விளக்
கியுள்ளார்கள். பரவின்பத்திலு மிதுவே யுண்மை பரமசுகப்
பொருளாகிய பரம்பொருளையதனோடு கலந்து வேறற நின்றநு
பவிப்பாரேயதனை முற்றுமநுபவிப்பாராவர். இத்தகையவின்பத்
தை ஜீவர்கட்குத் தருதற் கென்றே பரம்பொருள் ஜீவர்களோடு
பிரிவறக்கலந்து நிற்கும். பரம்பொருள் அவ்வாறு கலக்கவில்லை
யேல், ஜீவர்களாற் கலக்கச்சிறிதும் முடியதாகும். இதனாலேயே
யிக்கலப்பினைப் பரம்பொருளின் அருள் விசேஷமென முன்னர்
விளக்கினோம், என்பவே யிம்மார்க்கம் சுருதியுக்தி யநுபவம்
மூன்றிற்கும் பொருந்துவதாதல் தெளிவாம். இதனையே நமது
சுவாமிகள் "ஏகமநுபவம் வசனமூன்றினுக் கொவ்வும்" என்
றனர். இம்மார்க்கத்தில் துவைதத்தன்மை அத்வைதத் தன்மை
யெனு மிருதன்மைகளுங் காணப்படுகின்றன. எனவே துவைத
வாதிகளென வருவாரும் அத்வைதவாதிகளென வருவாரும்,
எல்லா வாதிகளும் இம்மார்க்கத்திற் சம்மதமுடையராவர்.
இதனையே நாமெடுத்தாளும் பாசுரத்தில் நமது சுவாமிகள் "ஈது
பயவாதிகள் சம்மதம்" என்றும் அருளிச்செய்தனர்.

14. இதுகாறும் பரம்பொருள் ஜீவர்களோடு கொண்டுள்ள
அத்வைதக் கலப்பினைக் கூறினோம். இனி யிக்கலப்பினால் வருஞ்
சுகத்தை ஜீவர்களடையுமா றென்னையென யாராய்வாம். ஒரு
வன் நாவிற்சர்க்கரைக் கட்டியைச் சேர்ப்பினும் அந்நா அக்கட்
டியை யுணர்ந்தாலன்றி யதனினிப்பு அந்நாவிற் செய்துமாறில்லை.
ஈண்டு உணர்தலென்றது கேவலம் வாசாஞானமன்றி அநுபவத்
திலுணர்தலாம். யாதானுமொரு பொருளையுணர்ந்து அதன்
கண் ணழுந்திநிற்றலே யதனை யநுபவித்தலாகும். பெத்தத்தில்
ஜீவர்கள் பரம் பொருளின் கலப்பினை யிவ்வாறுணர்வாரல்லர்.
முத்தி நிலையிலேயே யிவ்வாறுணர்வாராவர். ஆண்டே பரம்
பொருளின் கலப்பினால் வரும் பரமசுகத்தை முற்றுமடைவாரா
வர். இதுவே அத்துவித சுகம். இதுவே அத்துவிதமுத்தி.

15. இது நிற்க, ஜீவர்கள், பெத்தத்தில், பரம் பொருளின்
கலப்பினையுணரா ரென்றனம். அதன் காரணம் யாதெனின் விசா

ரிப்பாம், பெத்தத்தில் ஜீவர்கள்பால் பரம் பொருளின் கலப்போடு ஆணவமலத்தின் கலப்புமுளதாம். நோய்கலந்துள்ள கண்ணில் ஒளிகலந்தாற்போல ஜீவர்கள் பால், ஆணவமலமும் பரம்பொருளும் அத்வைதமாய்க் கலந்துள்ளதாம். என்பவே நோய் கலந்துள்ள கண் ஒளியையுணராதுபோல, ஆணவங்கலந்துள்ள ஜீவனும் பரம்பொருளையுணரான். கண்ணில் நோயிருக்கும் வரை, அக்கண், அந்நோய்க் கடங்கிநின்று ஒளியினையறியாது வருந்துகின்றது. அதுபோல, ஜீவனும் ஆணவத்தின் கலப்புள்ளவரை யவ்வாணவத்திற் கடங்கி நானென்னும் முனைப்புடையனாய்ப்பரம் பொருளினையறியாது வருந்துவான் இக்கருத்தினையே நமது சுவாமிகள் ''அத்துவிதம் பெறும் பேறென்றறியாமல், யானெனும் பேயகந்தையோடு மத்தமதியினர் போலமணங்கிடப்பதின்ன மின்னம் வருந்துவேனோ'' என்றிரங்கியருளியதும்.

16. அன்றியும் இவ்வாணவமலமானது, ஜீவப்பொருள் பரம்பொருளினையறிய வொட்டாது தடுத்தல் மாத்திரமன்று. அப்பொருளினறிவை ஏனைப்பொருள்களின்பாற் செலுத்தியும் நிற்கும். ஜீவப்பொருளினறிவு ஏகதேசவறிவு. அஃதாவது ஒருகாலத்து ஒன்றனையே யறியுந்தன்மைத்து. ஒன்றனையறியும்போது மற்றொன்றனையறியாதாகும். என்பவே ஜீவப்பொருள் ஏனைப்பொருள்களையறியும்போது பரம்பொருளினையறியாதாகும். ஏனைப்பொருள்களை யுணர்தலினின்றும் நீங்கிய பின்னரே பரம்பொருளையுணர்வதாகும். எனவே, ஏனைப்பொருளையுணர்தலினின்று படிப்படியாய் நீங்கவேண்டியதே நம்மவர்களின் கடமையாம், அதுவுஞ் சோபானக்கிரமத்திலாதல் வேண்டும். ஒரு மிக்கவாதல் ஏலாதாகும். அதற்குபாயம், ஏனைப்பொருள்களைப்பரம் பொருளாகப்பாவித்தலாகும். இப்பாவனையில் இருவிதபிரயோஜனங்களெய்துவதாகும். அவையாவன, ஏனைப்பொருள்களை யவ்வப் பொருள்களாகக் காணுதல், அஃதாவது அவற்றையுணர்தலினின்று நீங்குதல், ஒன்று; பரம்பொருளின் பால் நம்மறிவைச் செலுத்துதல் ஒன்று இவ்வாறு பாவித்துக் காண்பவன், அவ்வேனைப் பொருள்களினுணர்ச்சியினின்று சிறிது சிறிதாய் நீங்குவான். முற்றும் நீங்கிய பின்னர் இவர்க்கும் எல்லா வடிவங்களும் பரம்பொருளின் வடிவங்களாகத்தோன்றும். இவரேபரம் பொருளின் உண்மைவடிவத்தையறிபவர். இவரையே நமது சுவாமிகள்



“வடிவெல்லாம் நின்வடிவென வாழ்த்திடாக்
கடியனேனும் நின்காரணங் காண்பேனோ”

இத்தகைய ஞானம் ஒருமிக்க அடைதற்பாலதன்று படிப்படியாயடைதல் வேண்டுமெனவுங் கூறினோம். பிரதமத்தில் குறித்த சிலபொருள்களின் கண் பரம்பொருள்களின் கலப்பினையறிந்து அதன் வடிவத்தையாண்டு கண்டழுந்தி நிற்றல் வேண்டும். இவ்வாறே படிப்படியாய் எல்லாப்பொருள்களின் கண்ணும் பரம் பொருளினிறைவையும், வடிவையும், கண்டழுந்தி நிற்றற்குரிய சாதகங்களையனுட்டித்து வரல்வேண்டும். யாண்டும் நிறைந்து நிற்கும் பரம்பொருளைக் குறித்த சிலபொருள்களின் கட்காணுதலே துவைதஞானமாம். என்பவே, துவைதஞானமே, அத்வைத ஞானத்தை யுண்டுபண்ணு ஞானமென்றது பெற்றது. இக்கருத்தினையே நாமெடுத்தாளும், பாசுரத்தில், “ஓதரியதுவிதமே யத்வைத ஞானத்தை யுண்டுபண்ணு ஞானமாகும்” என்றருளினார்.

17. எல்லாப்பொருள்களிலும் பரம்பொருளைக் கண்டறிதற்குரிய சாதகங்களையனுட்டித்தல் வேண்டுமெனக் கூறினோம். அச்சாதகங்கள், யாவையென ஆராய்ச்சி செய்வாம். பிரதமத்தின் பரம்பொருளைக், குறித்த பொருளின் கண்ணறிதல் துவைதஞானமென்றும், அதுவே யத்வைத ஞானத்தைத் தருவதாகுமென்றுங் கூறினோம். இனி, பரம்பொருள் நீங்கலாகப் பொருள்கள் ஒவ்வொரு ஜீவனையும் நோக்க, இருதிறத்தனவாக முடிகிறது. தானென்று தனக்குப்புறம் பாயுள்ள பொருட்டொகுதி யொன்று, இவ்விருதிறத்தனவாய் பொருள்களில், புறப்பொருளின் கண்ணே பரம்பொருளினிறைவையும், வடிவையுங் காணுதலே முதற்கட் செய்யற்பாலதாம். அவற்றினும் எவ்வெப்பொருளின்கண், பரம்பொருளின் வடிவம் இயற்கையி

னாலோ, சேர்க்கையினாலோ, அமையப்பெற்றுள்ளதோ, அவற்றின்
கண்ணே பரம்பொருளைக் காணுதலே மிகவெளிதாம், யாதானு
மோர் பொருளில் பரம்பொருளைக் கண்டு அக்காட்சியிலழுந்தி
நிற்றலே பரம்பொருளையதன் கண்வழிபடுதலாகும். என்பவே
இயற்கையினாலோ சேர்க்கையினாலோ, பரம்பொருளின் குணாதி
சயங்கள் விளங்கப்பெற்ற பொருளின் கண்ணே, முதற்கண் அப்
பரம்பொருளைக்கண்டு வழிபடல்வேண்டும். இவ்வழிபாடுகளே
ஆலயங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இவையே சரியை கிரியை
வழிபாடுகள். இவ்வழிபாடுகளினின்றுமே, பரம்பொருளைப்
புறப்பொருளின் கண்ணறிந்து, அழுந்தி நிற்றற்குரியார். இதில்
முற்றினவரே, அப்பொருளைத் தன்கட்கண்டு வழிபடுதற்குரி
யாராவர் இவ்வழிபாடே யோகவழிபாடாம். இம்மூவகை வழி
பாட்டினின்றுமே பரம்பொருளையெல்லாப் பொருள்களின் கட்
கண்டும் வழிபடுதற்குரியாராவர். இதுவே ஞானவழிபாடாம்.
இந்நால்வகை வழிபாடுகளுமே, மேற்குறித்த அத்வைத ஞான
த்தைப் பயப்பதாகும். இக்கருத்தினையே நாமெடுத்தாளும் பா
சுரத்தில்,

"ஆதலினெனக்கினிச் சரியையாதிகள் போதும்" என்
றருளினார்கள்.

18. பரம்பொருளைப்புறப் பொருளின் கண்வழிபட்டு முற்
றிய பின்னர், அப்பொருளைத் தன்கட்கண்டும் வழிபடல் வேண்
டுமெனக் கூறினோம் அஃதாவது புறப்பொருள்களி லொன்
றொன்றினைப் பரமாகப்பாவித்து வழிபடல் போலத் தன்னையும்
பரமாகப்பாவித்து வழிபடல்வேண்டும். அவ்வாறு வழிபடல்
புறப்பொருளிற் பரத்தைக் காணுமாபோல தன்னிலுங்காணு
வான். புறப்பொருளைப் பரமாகப்பாவித்து வழிபடுவார்க்கு,
அப்புறப் பொருள்களினியல்புகளெல்லாம் விளங்காதாயொழி
ந்து, பரம்பொருளி னியல்புகளே, அப்பொருள்களின் கட்கா
ணுமாபோல, தன்னைப்பரமாகப் பாவித்து வழிபடுவார்க்கும்,
தன்னியல்புகளெல்லாம் முனைப்பின்றியொடுங்கிப் பரம்பொரு
ளினியல்புகளே தன்மாட்டு விளக்குவதாகும். இதுவே பரோ
கம்பாவனை அல்லது சிவோகம்பாவனை யெனப்படும். இப்பாவ



னையினாலேயே தன்னியல்புகளியாவுஞ் சிவப்பொருளினியல்புக
ளாகமாறும். பரத்தினியல்புகளெல்லாம் சிவப்பொருளாகப்
பெறுதற்குக் காரணம் அச்சிவப்பொருளின் சுபாவமே. அஃ
தாவது ஜீவப்பொருள் எதெதைப்பற்றி நின்றதோ அதனியல்
பைத்தானடைதற்குரிய சுபாவத்தையுடையது. அஃதாவது
பளிங்கின்றன்மையை யுடையது. கருடோகம்பாவனை செய்
வான் அக்கருடனுடைய சக்தியையடைவதுபோலச் சிவோ
கம் பாவனைசெய்வானும், அச்சிவப்பொருளினது. சக்தியைய
டைவானாவான். ஆனால் கருடோகம்பாவனை செய்வானுக்குக் கரு
டன் சக்தி முற்றுமெய்தாதுபோலச் சிவோகம் பாவனையினா
லும் ஜீவன் சிவத்தினியல்புகளனைத்தையு மெய்தப்பெறான்.
என்றாலும் தன்னியல்பனைத்துஞ் சிவத்தினியல்பாக மாறப்பெறு
வான். இதுவே சிவமாதலெனப்படும். இந்நிலையிலே சிவமொன்
றே விளங்கி நிற்குமாதலாலே, யிதுவே அத்வைதஞானமாகும்.
இக்கருத்தினையே நமது சுவாமிகள்

"யாதொன்று பாவிக்கநானதுவாதலாலுன்னை நானென்று
பாவிக்க லத்துவிதமார்க்க முறலாம்" என்றருளிச்

செய்தனர். எனவே நமது சுவாமிகள் கூறும் அத்வைதமார்க்கத்
தில் தத்துவமசிமகா வாக்கியப்பொருளும் அமைந்து கிடக்கின்
றது என்பதும் பெறப்படுது. இவ்விசேஷம் சைவசித்தாந்திகள்
கூறும் அத்வைதம் ஒன்றற்கேயுள தென்பதை மாதவச்சிவஞா
னயோகிகளும் தமது பாஷ்யத்தில் நன்குவிளக்கியுள்ளார்கள்.
அதற்கேற்பவே, அத்வைத இயல்பு கூறவந்த நமது சுவாமிகள்
மகாவாக்கியப் பொருளையுமுடன் சேர்த்து ஒரேபாசுரத்திற்
கூறியுள்ளார்கள்.

19. இது காறுங்கூறியபடி ஜீவனியல்பு சிவத்தினியல்பாக
மாறுமென்றல் பொருந்துமாயினும், தன்னைச்சிவமாகப் பாவிக்
கும் ஜீவர்க்கும் சிவம் அருள் புரிந்து அத்வைத சுகத்தைத் தரு
மென்றல் எவ்வாறு பொருந்து மென்பதை யாராய்வாம். யார்
யார்தன்னை யெவ்வெவ்வாறு சிந்திக்கின்றார்களோ யவ்வவ்வாறு
நின்றருள்புரியும் அருட்குணம் சிவத்திற்கும் எந்நாளுமுளது.
"ஆரொருவருள் குவாருள்ளத்துள்ளே யவ்வுருவாய் நிற்கின்ற

வருளுந்தோன்றும்" என்றும் "கருதுவார் கருத்துமுருவமாங் கங்கை கொண்ட சோளேச்சரத்தானே" யென்றுந் திராவிட சுருதிகள் கூறியது மிக்கருத்தினையே. என்பவே தன்னைச்சிவமாகப்பாவிப்பார்க்கு மச்சிவம் அருள்புரியுமியல்பினதாம். இக்கருத்தினையே நமது சுவாமிகள் நாமெடுத்தாளும் பாசுரத்தில்

"ஏதுபாவித்திடினுமதுவாகி வந்தருள்செய்
யெந்தைநீ குறையுமுண்டோ" என்றருளினார்கள்.

20. எனவே ஜீவப்பொருளினியல்பு சிவப்பொருளினியல்பாக மாறுதற்குக்காரண மிரண்டு. அவையாவன ஜீவப்பொருளின் அதுவதுவாந் தன்மை யொன்று; சிவப்பொருளின் அத்வைதக்கலப்பொன்று. ஜீவப்பொருட்கு, அதுவது வாந்தன்மையின்றேல், சிவப்பொருள் அதனோடு அத்வைதமாய்க் கலந்து நின்றாலும், அப்பொருளினியல்பு சிவத்தினியல்பாக மாறுதலின்றாம். அதன் முன்னையியல்பே யெந்நாளுமுளதாய் முத்திப்பேறென்பது மின்றாம். அதுபோலவே, சிவப்பொருளின் அத்வைதக் கலப்பின்றேல், ஜீவப்பொருட்கு அதுவது வாந்தன்மை யிருந்தாலும், அதனியல்பு சிவத்தினியல்பாகமாறுத லென்றுமில்லை. அது முத்தியடைதலுமில்லை. என்னெனில், சிவப்பொருளைத்தானாகப்பற்றி நிற்குந்தன்மை ஜீவனுக்கின்றாம். சிவமாகத் தன்னைப்பற்றினால் அதனியல்பைப் பெற்றுக்கொள்ளுந் தன்மை ஜீவனுக்குண்டேயன்றிப் பிறிதில்லை. சிவம் தன்னருள் விசேஷத்தால், ஜீவனோடத்துவைதமாய்க் கலந்து நிற்கும் எனவே ஜீவனியல்பாகிய அதுவது வாந்தன்மையும் சிவத்தினருட்டிறமாகிய அத்வைதக் கலப்புமே, ஜீவர்க்கு முத்தியின்பத்தைத் தருவதாகும். இதுவே அத்வைத முத்தியாம்.

21. இவ்வருள் விசேஷத்தால் ஜீவர்கட்குக் கிடைக்குமனுபவமே யத்வைதவனுபவமாம். இவ்வனுபவநிலையே சுத்தநிலை. இந்நிலையே யாராலுஞ்சொல்லவராதநிலை. இக்கருத்தினை நமது சுவாமிகள் "அத்துவிதமான அயிக்கிய அனுபவமே சுத்தநிலை யந்நிலையார் சொல்வார் பராபரமே" யென்றருளியிருக்கிறார்கள். எனவே சைவசித்தாந்திகள் நமது அத்வைதம் 'சுத்தாத்



வைதம்' என்பதை யிச்சுவாமிகளும் ஒப்புவதாயிற்று. நமது சுவாமிகள் தமது அத்வைதம், சுத்தாத்வைதம் என்பதை.

"அத்துவிதமான அயிக்கியச்சொற் கண்டுணர்ந்து
சுத்தசிவத்தைத் தொடருநாளெந்நாளோ" என்ற பாசுரத்திலுங் காட்டியிருக்கிறார்கள். அன்றியும் நமது சுவாமிகள் தமது அத்வைதம் சுத்தாத்வைத மென்பதும், அவ்வத்வைதம் மெய்கண்ட சுவாமிகளால் விளக்கியருளப்பட்டுள்ள தென்பதும் அதுவே யுண்மை யத்வைத மென்பதும் சைவசித்தாந்திகள் கூறும் அத்வைதமே யதுவாமா மென்பதும் ஏனைச்சமயிகள் கூறுவது, போலியத்வைத மென்பது விளங்கவே

"பொய்கண்டார் காணப்புனித மெனுமத்வைத
மெய்கண்ட நாதனருள் மேவு நாளெந்நாளோ"

என்றும் நமது சைவசந்தானகுரவர் சுவாமிகட்கு நமது சுவாமிகளும் தோத்திரங் கூறியுள்ளார்கள்.

22. இது காறும், நமது சுவாமிகளது அத்வைதம் கேவல துவைதமுமல்ல கேவல அத்வைதமுமல்ல வென்றும், அவ்விரண்டின் றன்மைகளும் விரவப்பெற்ற அத்வைத துவைதமென்றும் அதுவே ஸ்ருதியுக்தி யனுபவமூன்றற்கும் பொருந்தியதென்றும். நமது சுவாமிகளின் கருத்தின்படி பரஜீவர்கள் பிரிப்பின்றி யிரண்டறக் கலந்துநிற்றலே அத்வைதமென்றும். இவ்வத்வைதம், ஜீவர்களின் பெத்தத்திலும் முத்தியிலுமே யுளதென்றும் என்றாலும் இவ்வத்வைதக் கலப்பினைப் பெத்தத்திலுணராரென்றும், அவ்வுணராமைக்குக் காரணம் ஜீவர்களைப் பந்தித்துள்ள ஆணவமலமே யென்றும், அவ்வாணவம் நீக்கப்பெற்ற முத்தியிலே, ஜீவர்கள் தம்மோடு பரம்பொருளின் அத்வைதக் கலப்பினையுணர்ந்து அதனால் வருஞ்சுகத்தைப் பெறுவாரென்றும், ஜீவர்கள் பரம்பொருளின் அத்வைதக் கலப்பினையுணர்தலே அத்வைத ஞானமென்றும் அவ்வத்வைதஞானம் துவைத வழிபாட்டினாலேயே கிடைக்குமென்றும், இத்துவைத வழிபாடுகள் சரியையாதி வழிபாடுகளென்றும், அவ்வழிபாடுகளிலொன்றே பரோகம் பாவனையென்றும், அப்பரோகம் பாவனையினால் ஜீவனினியல்பனைத்தும் பரத்தினியல்பாக மாறப்பெறுமெ

ன்றும் அதுவே சிவமாதலென்றும். அச்சிவமாந்தன்மை, ஜீ
னின் அதுவதுவாந் தன்மையினாலும் சிவத்தினத்வைதக் கல
பினாலுங் கிடைத்ததென்றும். ஜீவன் சிவமான பின்னர் சிவமெ
ன்றனையன்றி வேறொன்றனை யுணராதென்றும் அவ்வுணர்ச்சியே
அத்வைத அனுபவமென்றும் அதுவே பரமுத்தியென்று
கூறினோம். இதிலுள்ள பிழைபீடுகளை யெல்லாம் பொறுத்
ருள வேண்டி நமது மெய்கண்ட நாதனருளைப் பிரார்த்திப்பே
மாக.

"பொய்கண்டார் காணாப்புனித மென்னுமத்வைத
மெய்கண்ட நாதனருள் மேவுநாளெந்நாளோ."

தாயுமானார் துணை.

V. P. காந்திமதிநாதப்பிள்ளை, **B.A.**,
வக்கீல்,
அம்பாசமுத்திரம்.

160950

JL
R673m2l1,N12
N12.2